# திருமலைத் திருடன்

(சிறந்த சரித்திர நாவல்)

திவாகர்



நர்மதா வெளியீடு

# திருமலைத் திருடன்

திருமலை வேங்கடவனை
பின்புலமாகக் கொண்டு,
ராமானுஜரும், அகோரசிவாசாரியாரும்
சாளுக்கிய குருவான பில்வணனும்
வலம் வந்து உயிர்ப்பிக்கும்
சிறந்த சரித்திர நவீனம்!

'வம்சதாரா' வரலாற்று
நாவலாசிரியர்
**திவாகர்**

நர்மதா

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நாணா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார்,
தி. நகர், சென்னை - 600 017. தொலைபேசி : 24334397

## வாசகர்களுக்கு

நல்ல நூல்களுக்காகத் தரப்படும் தொகை செலவல்ல - மூலதனம்! நமது சிறப்பான எதிர்கால வாழ்வுக்காகத் தரப்படும் Investment! ஐம்பது ரூபாய் புத்தகத்தில் ஆயுட் கால வாழ்க்கைக்கான யோசனைகள் நிறைந்திருக்கும்.

■ பொழுதுபோக்கு, கேளிக்கைகளுக்காக செலவிடப்படும் தொகையில் சிறு பகுதியையாவது பயன் தரும் புத்தகங்களுக்காக செலவிடுங்கள் - மிகுந்த பயன் பெறுவீர்கள்!

■ எங்களது இலவச விலைப்பட்டியலைப் பெற 50 காசு அஞ்சலட்டை மட்டும் எழுதுங்கள். உடன் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கிறோம்.

■ தமிழகத்தின் எல்லா பிரபல புத்தகக் கடைகளிலும் நர்மதா நூல்கள் கிடைக்கின்றன. அவர்களிடமிருந்து (தபால் செலவின்றி) பெறலாம். தபாலில் அனுப்புவதற்கான கட்டணம் அதிகமாக உள்ள நிலையில் தங்கள் ஊர் புத்தகக் கடையிலேயே பெறலாம். அவர்கள் நல்ல நூல்கள் விற்க ஆதரவு தரலாம்!



40040
5726264

Pages : 352
**Price : Rs. 150.00**
ISBN No. : 81-8201-038-1
Paper Used : 11.6 Kg. SPB N.S.

❑ Thirumalai Thirudan – An historical novel based on Thirumalai deity Lord Venkateswara – in Tamil by Divakar © ❑ First Edition : December 2004 ❑ Published by T.S. Ramalingam, Narmadha Pathipagam, Chennai - 600 017 ❑ D.T.P. Execution at : M/s P.S. Muthu Graphics, Chennai -15 ❑ Printed at : M/s Malar Printers, Chennai - 600 034 ❑

## அணிந்துரை

## முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

கத்தியின் கூரிய பாகத்தின் மீது நடப்பது போன்றது வரலாற்றுப் புதினம் வரையும் கலை. வரலாற்றின் இழைகளை நழுவ விடாமலும், கதை புனை நுட்பத்தை நெகிழ விடாமலும் எச்சரிக்கையோடு சரித்திரக் கதாசிரியன் கவனம் கொள்ள வேண்டிய கட்டாயம் உண்டு.

இசகு பிசகான சாலையில் முரட்டுக் குதிரை மேல் ஏறி இருட்டுப்பொழுதில் பாதையும் தவறாமல், புரவியையும் கட்டுப்படுத்தி மேற்கொள்ள வேண்டிய பணி வரலாற்றுப் புதினம் எழுதும் பணி. அந்தப் பணியில் இரண்டாவது முறையும் வெற்றிக் கோட்டைத் தொட்டிருக்கிறார் திவாகர்.

'வம்சதாரா' – இவருடைய வரலாற்றுப் புனைகதைத் திறனுக்கு வைத்த முதல் திலகம்.

முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் படையெடுப்பை மையமிட்டது 'வம்சதாரா.' அவனுக்கு முந்தி சோழ நாட்டை ஆண்டதாகக் கருதப்படும் அதிராஜேந்திரனின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது 'திருமலைத் திருடன்' என்ற இந்தப் புதினம்.

சோழர் வரலாற்றில் சிக்கலும் சிடுக்கும் மிகுந்த ஒரு கால கட்டத்தைக் கதைக் களமாக்கி, குழப்பங்களினூடே லாகவமாகப் பயணித்து, சரித்திரத்தை மீளுருவாக்கம் செய்து மறக்க முடியாத அனுபவத்தைத் தருகிறார் நூலாசிரியர்.

■

தமிழில் வரலாற்றுக் காவியங்களைப் படைத்துத் தந்தவர்களில் கல்கி முதலிடம் பெறுகிறார். அவருடைய மாபெரும்

படைப்புகளான பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு ஆகிய கதைகள் தமிழரின் நெஞ்சில் வரலாற்றுப் பெருமிதத்தை விதைத்தன. வரலாற்றைத் தனக்குள் செறித்துக் கொண்டு நூற்றாண்டுகளை கடந்த நிகழ்வுகளும், நாயக நாயகியர்களும் வாசகர்களின் நெஞ்சுக்கு நெருக்கம் கொண்டவர்களாக மலரும் வண்ணம் வியப்புறு திறனைத் தம் கதைகளில் புலப்படுத்தியவர் கல்கி. அவரைத் தொடர்ந்து ஜெகசிற்பியன், சாண்டில்யன் எனப் பலர் இதே பாதையில் இயங்கிப் பல படைப்புகளைத் தந்தனர்.

அனைவருக்கும் ஆதர்சமாகத் திகழ்ந்தவர் கல்கி.

திவாகருக்கும் கல்கியே அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார் என்பதை இப்புதினம் செம்மையாகப் புலப்படுத்துகிறது. 'Archetype' என்று உளப் பகுப்பாய்வு நூல்கள் பேசுகின்ற மூல உருவான பாத்திரங்களைத் தம் படைப்புகளில் தந்து சென்றிருக்கிறார் கல்கி.

களங்கள் வேறுபட்டாலும் அந்த மூல உருக்களின் அச்சு கல்கிதான். அந்தப் பாரம்பரியத்தில் மற்றுமோர் அடிவைப்பாகத் திகழ்கிறது 'திருமலைத் திருடன்.'

■

இந்தப் புனை கதையில் திவாகர் நம் சமகாலச் சிக்கல் ஒன்றை வரலாற்றுக் சாளரம் மூலம் காட்டி, நல்ல முடிவு ஒன்றுக்கு இட்டுச் செல்லுகின்றார்.

இன்றைய இந்தியா சமயங்களின் சமர்க்களமாக இருக்கிறது. இந்த வேற்றுமைக்குள் ஒற்றுமையை நெசவு செய்ய முடியாதா என்ற ஆதங்கம் ஆசிரியர் தெரிவு செய்து கொண்ட கதைப்பொருள் மையினால் உணர்த்தப்படுகிறது.

சைவம், வைணவம், நாத்திகம் ஆகிய நம்பிக்கைகளின் மோதலும், தீர்வும் கதைக்கருவாக அமைகின்றன. முடிவில் பக்குவமான ஒரு சமரச எல்லையைத் தொட்டுக் காட்டுவதன் மூலம் திவாகர் பயனுள்ள ஓர் இலக்கை எட்டிப் பிடிக்கிறார்.

சைவ மரபில் வந்த சோழ வேந்தர் பரம்பரை ஒரு புறம், சாளுக்கிய மரபின் குருவாக வரும் பில்வணனின் கடவுள் மறுப்புக் கோட்பாடு இன்னொரு புறம், வைணவத்தின் புண்ணியப் பேரொளி இராமானுசரின் தத்துவ நெறி



மற்றொருபுறம் என மூன்று நம்பிக்கைகள் இழைந்தும், எதிர்த்தும் நிகழ்த்தும் செயல்பாடுகளை இப்புதினம் நிகழ்வுகளாகக் கொள்கிறது.

மகத்தான ஒரு முடிவை நெருங்குவதற்குள்தான் எத்தனை எத்தனை சுழல்கள், சூழ்ச்சிகள், சொக்கட்டான் விளையாட்டுக்கள்! திவாகரின் எழுதுகோல் யுத்த களத்து வீரவாள் போல் மின்னலிட்டுக் கொண்டு சூறாவளியாய்ச் சுழன்று வருவதை ஆச்சரியத்தோடு பார்க்க நேர்கிறது.

அருமையான கரு இந்தச் சரித்திரக் கதையின் தனிச் சிறப்பு.

■

உண்மையும் கற்பனையும் வேறுபிரித்து அறியமுடியாதபடி கை கோத்துச் சென்றால்தான் வரலாற்றுப் புதினம் வெற்றி காண முடியும்.

இந்தக் கதையில் வரலாற்றுப் பாத்திரங்களும் வலம் வருகிறார்கள். கற்பனைப் பாத்திரங்களும் பங்கு கொள்ளுகிறார்கள். அம்மங்கை, அபயன், வீரராஜேந்திரன், அதிரஜேந்திரன் அகோர சிவாசாரியார், பில்வணன், விக்கிலன் ஆகியவர்களைக் குறித்து வரலாறு தரும் குறிப்புகளோடு பொருத்தமான கற்பனை நிகழ்வுகளையும், பாத்திரங்களையும் ஆசிரியர் அற்புதமாக இணைத்துக் காட்டுகிறார்.

தமிழகத்தின் சமய தத்துவ வரலாற்றிலும், சீர்திருத்த வரலாற்றிலும் நிகரில்லாத பெருமை படைத்த உடையவர் இந்தக் கதையின் சில பகுதிகளில் – குறிப்பாக நிறைவுப் பகுதியில் இடம் பெறுவது ஒரு தனிச் சிறப்பையும் மேன்மையையும் புதினத்துக்கு நல்குகின்றது.

திருமலையில் கோயில் கொண்டிருக்கும் திருமால் சிவனார் திருச்சின்னங்களும் அணிந்திருந்ததாகப் பேயாழ்வாரும், வேங்கடவன் சிவன் அடையாளங்கள் பூண்டிருந்ததாகப் பொய்கையாழ்வாரும் பேசியுள்ளனர்.

அரன் நா ரணன் நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் – வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று

என்பது பொய்கையாழ்வார் வாக்கு. திருநாமம், ஊர்தி, திருச்செயல்கள், ஆயுதங்கள், உருவம் ஆகியவற்றில் இருவரான ஒருவரைக் குறித்துப் பொய்கையாழ்வார் இணைத்துரைக்கின்றார்.

'தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் சொன்னாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'

எனப் பேயாழ்வார் பேசுகின்றார்.

முதலாழ்வார் காலத்தில் இருந்த நெறி மாறியபின் சங்கு சக்கர தாரியாக வேங்கடவனை இராமானுசரே உறுதி செய்தார் என்பது கர்ண பரம்பரைச் செய்தி. ஆயினும் சிலப்பதிகாரத்தில் திருவேங்கடமுடையான்,

'பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி'

என்று பண்டைநாள் தொட்டே சங்கு சக்கர தாரியாக இருந்த தாகக் குறிக்கப் பெறுகிறான்.

எவ்வாறோ திருமலைத் தெய்வம் பிரச்சினைக்குரியதாக ஆக்கப்பட்ட நிலையில் உடையவர் வைணவத்தை நிலை நாட்டி இருக்கின்றார். இந்த நுணுக்கமான சமயச் சிக்கலை மிகத் திறமையாக எவர் மனமும் நோகாதபடி எடுத்துரைத்து அமைதி காண்கிறார் திவாகர்.

வடமொழியிலும் தமிழிலும் பாத்திரங்கள் வல்லவர்களாகப் பேசப்பட்டிருப்பதும் ஆசிரியர் காழ்ப்புணர் வின்றிச் சிக்கல்களை அணுகும் போக்கிற்கு அடை யாளமாகத் திகழ்கிறது.

■

வரலாற்றுப் புதினங்களுக்கே உரியதாக வால்டர் ஸ்காட் வகுத்தளித்த மர்மங்களும், திடுக்கிடும் சம்பவங்களும் ஏராளமாக, இந்தக் கதையிலும் இடம் பெறுகின்றன. வாசகனை நொடி பிசகாமல் ஈர்த்து இழுத்துச் செல்ல இந்த உத்தி மிக அருமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் அந்த மர்மங்களின் முடிச்சுகள் மெல்லக் கட்டவிழும்



போது கதாசிரியனின் கற்பனைப் பின்னலின் நேர்த்தி கண்டு வியப்புறுகிறோம்.

பாத்திரங்கள் கதை நெடுக வந்தாலும், வரா விட்டாலும் தங்கள் குணச்சித்திரத்தை அழியா வண்ணங்களோடு பதிய வைப்பதில் வெற்றி காண்கிறார்கள்.

கதை நெடுக வரும் காளிங்கனும், பில்வணனும், காத்தியாயினியும் போலவே அங்கங்கே வந்து போகும் அவந்திகாவும், சோழமாதேவியும், மிளகாழ்வானும் முத்திரை பதித்துப் போவது குறிப்பிடத் தக்கது.

இராசேந்திர சோழ தேவரின் மகள் அம்மங்கை வேங்கி நாட்டரசன் இராசராச நரேந்திரனை மணக்கிறாள் என்பது வரலாற்றுச் செய்தி. அவள் மகனே குலோத்துங்கன். இந்த நூலாசிரியர் அம்மங்கை கணவனைப் பிரிந்து தாய் வீட்டில் வசிப்பதாகச் சித்திரிக்கிறார். வரலாறு மௌனம் சாதிக்கும் இந்த விவரத்தைக் கூர்மையாகத் தேடி எடுத்துத் தருகிறார் திவாகர்.

'சித்ராங்கி என்ற தெலுங்கு நாட்டிய மங்கையைத் தன் ஆசைக்கு இணங்காத காரணத்தால் இராசராச நரேந்திரன் கொன்றுவிட்டதாக ஒரு நாடகம் இன்றும் கூட ராஜமகேந்திரபுரம் [ராஜமுந்திரி] ஊரில் பிரபலம்.
(The Hindu, 19-07-2003)

என்ற குறிப்பைத் தந்து தம் சித்திரிப்புக்கு நியாயம் கற்பிக்க ஆசிரியரால் முடிகிறது. இத்தகைய அரிய செய்திகள் புதினம் முழுக்க இடம் பெற்றிருக்கக் காணலாம்.

அரிய உழைப்பின் இத்தகு அடையாளங்களுக்காக நூலாசிரியரை எத்துணை பாராட்டினாலும் தகும்.

■

ஈவிரக்கம் இல்லாத சாளுக்கிய குரு பில்வணனின் சாகசங்கள் ஒருபக்கம். அதற்கு மறுதலையாக ஆசிரியர் என்று அழைக்கப்படுகிற அசகாய சூரரின் இராஜ தந்திரம் மறுபக்கம். இவற்றின் மோதல்கள் பல்வேறு களங்களில் நிகழ்வதாகத் திவாகரின் கதைப் போக்கு அமைகிறது.

காவியங்களிலும், நாடகங்களிலும் தீமையும் நன்மையும் போராட்டம் நிகழ்த்தி முடிவில் தருமமே வெல்லும் என்று

சித்திரிப்பது வழக்கம். இங்கும் அந்த இரு அணிகள் இருந்த போதிலும், இவற்றின் பின்புலத்து நியாயங்கள் விருப்பு வெறுப்பின்றி எடுத்துரை செய்யட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

சூழ்ச்சிக்காகவே சூழ்ச்சி என்றிராமல் பில்வணன் பக்கத்துக் கருத்தியலையும் திறமையாக ஆசிரியர் சட்டிக்காட்டிச் செல்கின்றனர். தமிழக வரலாற்றில் வட எல்லையில் நிகழ்ந்த மிகப் பல வரலாற்றுச் சம்பவங்கள் தெளிவுபடுத்தப்படாமல் உள்ளன. அந்த எல்லைக்குள் புகுந்து சில தெளிவுகளை திவாகர் நமக்குத் தந்திருக்கிறார்.

ஐயங்களுக்கு இடம் தரும் வரலாறுகளின் மீதும் ஒளி பாய்ச்சி இருக்கிறார் திவாகர்.

எடுத்துக்காட்டாக, இராமானுசருக்குத் தீங்கு செய்ய முயன்றவன், கி.பி 1068 – 1070 காலகட்டத்தில் ஆட்சி செய்த அதிராஜேந்திரன் என்பது ஆசிரியர் முடிவு. அதனாலேயே உடையவர் கருநாடக மாநிலம் சென்றார் என்ற கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றாசிரியர் சிலர் இரண்டாம் குலோத்துங்கனால் (கி.பி 1118 – 1135) தான் இராமானுசர் துன்புற நேர்ந்தது என்று கூறுகின்றனர்.

இராமானுசர் வரலாறு தந்த பி.ஸ்ரீ. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் தான் உடையவர் சோழநாட்டை விட்டுச் சென்றார் என்று கூறுகின்றார். ஏறத்தாழ அவர் சென்ற ஆண்டு 1096 என்பதால் அது முதலாம் குலோத்துங்கன் காலமே என்பது அவர் வாதம். ஏனெனில் கி.பி 1070 –இல் குலோத்துங்கன் முடி சூடி 48 ஆண்டுகள் ஆண்டதாகக் கூறப்படுகிறது.

ஆயினும் முதலாம் குலோத்துங்கனின் சமயப் பொறையையும், வைணவ ஆலயங்களுக்கு அவன் அளித்த கொடைகளையும் எண்ணிப் பார்த்தால் அவன் இராமானுசரை எதிர்த்துச் தீச்செயல்கள் செய்திருக்க வாய்ப்பில்லை என்பது புலனாகும்.

வீர ராஜேந்திரன் கி.பி 1068 –இல் காலமானதும் குறுகிய காலம் பதவியேற்ற அதிராஜேந்திரன் காலத்திலேயே உடையவருக்கு எதிரான செயல்கள் நடைபெற்றிருக்க வேண்டும் என்று ஆசிரியர் கருதுவது ஒரு வகையில்



பொருத்தமானதாகவே தோன்றுகிறது. சோழர் வரலாற்றை விரிவாக எழுதிய (The Cholas) கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியாரும் இவ்வாறே கருதுவது நூலாசிரியருக்கு வலுச் சேர்க்கிறது.

இது குறித்து மேலும் வல்லுநர்கள் ஆராய வேண்டும். அந்த ஆய்வின் முடிவு திவாகருக்கு அரண் செய்வதாகவே இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

■

தமிழகத்தில் பெருவாரியான வாசகர்களை வரலாற்றுப் புதினங்களின் பக்கம் ஈர்த்த கல்கியின் வழியில் திவாகர் படைத்துத் தந்திருக்கும் 'திருமலைத் திருடன்' பல்லாயிரம் சுவைஞர்களுக்கு விருந்தாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

'பாருக்குள்ளே தெய்வம் ஒன்று – இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்'

என்ற மகாகவியின் ஒருமைப்பாட்டுக் குரலுக்கு உரமும் வளமும் சேர்க்கிறது இந்தப் புதினம். வரலாற்றின் இருண்ட தாழ்வாரங்களிலிருந்து ஒளி துலங்கும் இந்தச் செய்தியைத் தருவதாலேயே வெறும் புனைகதையாகப் புதைந்து போகாமல் நந்தா விளக்காய் இந்த நாவல் மிளிர்கிறது.

நமது சரித்திரச் சுவடிகளுக்குள் மேலும் நெடுந் தொலைவு பயணித்து திவாகர் புதிய வெளிச்சங்களைத் தர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

'வம்சதாரா' வைப் போலவே 'திருமலைத் திருட'னையும் அழகும் வனப்பும் மிக்க படைப்பாக வெளியிடும் பதிப்பு வித்தகர் நர்மதா இராமலிங்கம் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

பொள்ளாச்சி — சிற்பி பாலசுப்பிரமணியம்
15.12.2004

■■■

## இந்நூலாசிரியர்
## திரு. திவாகர்
## அவர்களைப் பற்றி...

திரு. திவாகர் அவர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக எழுத்துலகில் அனுபவம் உள்ளவர். தற்சமயம் விசாகப்பட்டினத்தில் வசித்து வருகிறார்.

இவர் எழுதிய முதல் நாவல் 'வம்சதாரா.' வாசகர்கள் மற்றும் சக எழுத்தாளர்கள் மத்தியிலும் நல்ல பெயர் பெற்ற 'வம்சதாரா' நாவலுக்காக ஆசிரியர் வட ஆந்திரப் பகுதிகளில் சில ஆண்டுகள் ஆராய்ச்சிகள் மேற்கொண்டார். அங்கு கிடைத்த அரிய தொன்மையான தகவல்கள், கல்வெட்டுகள், கோயில் குறிப்புகள் 'வம்சதாரா' நாவலுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தன.

இவர் எழுதிய பல தமிழ் நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டுள்ளன. அயல்நாட்டு வணிகம் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை சம்பந்தப்பட்ட இவர் கட்டுரைகள் பாராட்டைப் பெற்றுள்ளன.

■■■

# முன்னுரை

"ஏது முழுமையாக மறைந்திருக்கின்றதோ [கடவுள்] அது ஒரு விசித்திரமானதும், புதுமையானதுமான ஒளியைப் பெறுகிறது. இதன் மூலம் அதனை மங்கலாகவே பார்க்க முடிந்தாலும் அதனை எதனோடும் ஒப்பிட முடியாது. இதனை நம் முன்னோர்கள் எப்படி பார்த்தனரோ அப்படியே நாமும் பார்க்கக்கூடும்"

- மூதறிஞர் இராஜாஜி

கடவுள் என்ற அற்புதமான தமிழ்ச் சொல்லுக்கு 'உள்ளிருந்து கடவுபவன்' என்று பொருள். அப்படி என் உள்ளத்திலிருந்து கொண்டு என்னையும் ஒரு பொருளாக்கி என் மூலம் இப்படி ஒரு நவீனத்தை எழுதச் செய்த கடவுளுக்கு நான் எப்படிப்பட்ட நன்றியை காண்பிக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

திருமலை வேங்கடவனை மையமாக வைத்து நான் எழுதுவதற்கு ஏகப்பட்ட காரணங்கள் இருந்தாலும், எல்லோராலும் விரும்பப்படுகிறவன் அவன். அப்படிப்பட்ட அவனைப் பற்றி நான் எழுதும்போதெல்லாம் எனக்குள் ஓர் இனம் புரியாத பரவசம், என்னுடன் நிழல் போல தொடர்ந்து யாரோ உற்ற தோழன் ஒருவன் வருவது போல ஓர் உணர்ச்சியை உணர்ந்ததுதான் மிகப்பெரிய காரணம்.

என்னுடைய முதல் நவீனமான 'வம்சதாரா' வெளியிடப்பட்டதும் அதைப் பாராட்டிய அத்தனை வாசகர்களும் ஒன்றை உணர்ந்து எழுதினர். ஆராய்ச்சியும் ஆழ்ந்த சுவையும் விறுவிறுப்பும் கலந்த நூல் வம்சதாரா என்று எழுதினர். அதே ஆராய்ச்சியை இந்த நூலுக்காகவும் செலவழித்துள்ளேன். ஆழ்ந்த சுவையும், விறுவிறுப்பும் இருப்பதைப் பற்றி வாசகர்கள்தான் சொல்ல வேண்டும்.

இந்த நவீனத்தில் இடம் பெற்றுள்ள ஏறத்தாழ அனைவருமே அன்று சரித்திரத்தில் வலம் வந்தவர்கள்தான். மகத்தான சாதனைகள் படைத்த ராமானுஜரும் சைவசித்தாந்த தத்துவத்துக்கு அடிக்கல் நாட்டிய ஆசிரியர் அகோரசிவாசாரியாரும் சாளுக்கிய குருவான பில்வணனும் முக்கிய சூத்ரதாரிகளாக இந்த நவீனத்தில் வலம் வந்துள்ளார்கள். கதாநாயகனும், கதாநாயகியும் கூட சரித்திர பாத்திரங்களாக இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. வடதேசத்து நாடான கன்னோசிக்கும் சோழர்களுக்கும் தொடர்பு இருந்ததாக சரித்திர பேராசிரியர் என். சுப்பிரமணியன் தனது 'தமிழ்நாட்டு வரலாறு' நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த கதைதான் என்றாலும் இப்போதுகூட ஏதோ நம் கண் முன் நடப்பதாக கருதுவதற்கு வாய்ப்புண்டு. காரணம் அவன் – அந்த அவன் 'திருவேங்கடமுடையான்.'

சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் வேங்கடவனுக்குக் கோயில் எழுப்பப்படவில்லை என்றுதான் தோன்றுகிறது. வானமே கூரையாக சந்திரனும் சூரியனும் இரு பக்கங்களில் தவழ சங்கு சக்கரதாரியாக மாலவன் குன்றத்தில் திருமால் நின்ற திருக்கோலத்தில் அருள் புரிவதாக இளங்கோ அடிகள் சிலம்பில் மாங்குடி மறையோன் பாத்திரம் மூலமாக கூறுவதை ஒரு சரித்திர ஆதாரமாகத்தான் கொள்ள வேண்டும். அதேபோல குலசேகர ஆழ்வாரின் திருமலைக் கோயில் குறித்துப் பாடிய பாடல்களையும், சரித்திர ஆதாரமாகக் கொள்ளலாம். திருமலை தேவஸ்தான அமைப்பினரும் வேங்கடமுடையான் கோயிலைப் பற்றி குறிப்பிடுகையில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதலாக பல்லவர் காலத்திலிருந்து திருக்கோயில் பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கிறார்கள். ஆனால், நின்ற திருக்கோலத்தில் அருளும் திருவேங்கடவனுக்கு ரங்கதாசன் என்ற பரம பக்தன் முதன் முதலில் தடுப்பு சுவர் கட்டியதாகவும், வினைப் பயனால் மறுபிறவி எடுத்து தொண்டைமான் என்ற பெயரில் அரசராகி விரிவாக மலைக்கோயில் ஒன்றினைக் கட்டியதாகவும் புராணக்கதை அல்லது செவிவழிக் கதையாகத் தெரிவிக்கிறார்கள். கி.பி. 966-ஆம் ஆண்டிலிருந்து 'சாலவை' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு கோயில் விழாக்கள் சிறப்பாக நடக்க ஆரம்பித்தன. முதலில் ஆடி மாத பிரம்மோத்சவம் நடத்த ஆரம்பித்தாலும் நாளடைவில் திருத்துவாதசி உற்சவம் மட்டும் ஏழு நாட்களாக மார்கழி வளர்பிறையில் கொண்டாடி வந்ததாக



டி.கே.டி. வீரராகவாசாரியார் தனது திருப்பதி சரித்திரத்தில் விரிவாகவே எழுதியுள்ளார்.

திருவேங்கடமுடையானுக்கும் சர்ச்சைகளுக்கும் எப்போதுமே ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு போலும். ராமானுஜர் காலத்தில் எழுந்த மிகப்பெரிய சர்ச்சை அவன் சிவனா அல்லது திருமாலா என்பதுதான். பேயாழ்வாரின் பெருமைமிகு பாடலான 'தாழ்சடையும் நீள்முடியும்' என்ற திவ்யபிரபந்த பாடல் ஹரிஹர தத்துவத்தை தந்திருப்பதால் சைவர்கள் வேங்கடவனை 'எங்கள் நாயனார் - எங்கள் தலைவர்' அப்படிப்பட்ட அவன் சிவச்சின்னங்களான மழுவையும், நாகாபரணத்தையும் தன் மீது கொண்டுள்ளான். ஆகையினால் அவன் சிவனே என உரிமையும் கொண்டாடினர். அதே சமயத்தில் வைணவ ஆறாயிரப்படி நூல் திருவேங்கடவன் திருத்தோளில் சங்கும், சக்கரமும் அந்த சமயத்தில் இல்லை என்பதாகவே தெரிவிக்கிறது. ஏனெனில் உடையவரான ராமானுஜர் இவ்விஷயத்தில் தலையிட்டு அவன் தோளில் சங்கும் சக்கரமும் ஏற்றப்பட்டதாக ஆறாயிரப்படியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, சைவர்கள் வாதத்தில் சங்கு, சக்கரம் தரிக்காமல் நாகாபரணத்தையும் மழுவையும் தரித்த வேங்கடமுடையான் சிவமாகத் தெரிந்ததில் ஆச்சரியமில்லை.

அதே சமயத்தில் அனைத்து சிவத்தலங்களையும் ஒன்று விடாமல் பாடிய சைவக்குரவர் மூவர் பெருமக்களின் பாடல்கள் திருமலையைப் பற்றி குறிப்பிட வில்லை என்பது கருத்தில் கொள்ளவேண்டும். ஆனால், தேவாரப் பாடல்களுக்கு முன்பே எழுதப்பெற்ற சிலப்பதிகாரம் மற்றும் தேவாரப் பாடல்களுக்கு சமகாலத்தில் பாடப்பட்ட ஆழ்வார் பெருமக்களின் பாடல்கள் சங்கு, சக்கரதாரியாக வேங்கடவனை பெருமானாகப் போற்றுகின்றது என்பதும் உண்மை. சங்கு, சக்கரத்தைப் பற்றி பலவிதமான கதைகள் உலவுகின்றன. தொண்டைமண்டல அரசன் ஒருவன் சங்கு, சக்கரத்தை களவாடிவிட்டு எதிர்ப்பு வந்ததினால் பிறகு வைத்து விட்டதாக ஒரு தகவல். அப்படியெல்லாம் இல்லை, ஒரு போரில் தோல்வியைத் தழுவ இருந்த தன் பக்தனான தொண்டை மண்டல அரசன் ஒருவனுக்கு திருவேங்கடத்தானே தன் சங்கையும் சக்கரத்தையும் கொடுத்து வெற்றிக்கு வழிகாட்டினான் என்று ஒரு தகவல் [திவ்வியகவி இயற்றிய திருவேங்கடத்தந்தாதி

53-ஆம் பாடல்]. ஆக, ஒரு காலகட்டத்தில் சங்கையும், சக்கரத்தையும் திருவேங்கடத்தான் தரித்திருக்கவில்லை என்றும் அந்த சங்கும் சக்கரமும் அவன் தோளில் ஏற ராமானுஜர் காரணமாக இருந்தார் என்றும் தெரிகின்றது. திருமலையை 'ஸ்ரீ வைஷ்ணவர்களின் ரட்சை' என்றும் சாஸ்வதமாக கருதுவதற்கு ராமானுஜர் வழி வகுத்தார் என்றும் தெரிகிறது.

சரித்திர ஆதாரமாக பார்க்கையில் ராமானுஜர் சோழ நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட விவரம் மட்டுமே காணப்படுகிறது. பலர் குலோத்துங்க சோழன் காலத்தில் உடையவர் நாடு கடத்தப்பட்டதாக எழுதியுள்ளனர். ஆனால், ராமானுஜரை நாடு கடத்தக் காரணமாக சொல்லப்பட்ட 'சிவாத் பாதரம் நாஸ்தி' என்ற அரச கட்டளை குலோத்துங்கனால் பிறப்பிக்கப்பட்டது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. மேலும், இப்படிப்பட்ட கட்டளை பிறப்பித்த சோழ அரசன் கழுத்தில் கிருமி ஏற்பட்டு அதனால் கிருமி கண்ட சோழனாகி புழுத்து மாண்டான் – இந்த சோழ அரசனோடு சோழ குலமும் முடிவுக்கு வந்தது என்ற 'திவ்ய சூரி சரிதம்' [ராமானுஜரின் சமகாலத்தவர்] தெரிவிக்கிறது. அப்படி பார்க்கையில் ராமானுஜரை நாடு கடத்தியது நேரடி சோழ வம்சத்தின் கடைசி அரசனான அதிராஜேந்திரன் என்பதும் புரியும். இவன் வெகு குறுகிய காலமே ஆண்டான் [கி.பி.1069/70–71] என்று சரித்திர ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். தொண்டை புற்று நோய் வந்து மாண்டு போனதாகவும் எழுதுகிறார்கள். ராஜராஜ சோழன் வரிசையில் இவன் கடைசி வாரிசு அதாவது வீரராஜேந்திரனின் மகன். இவனுடைய ஆட்சியில் சாளுக்கிய விக்கிரமாதித்தன் [சோழர்களின் பரம வைரி] திருமண உறவு வைத்துக் கொண்டு காஞ்சியிலிருந்து கொண்டு மறைமுக ஆளுமை புரிந்ததாக சரித்திர ஆசிரியர்கள் பலரும் எழுதியுள்ளார்கள்.

ஆனால், விக்கிரமாதித்தனுக்கும் [சாளுக்கிய விக்கிலன்] குலோத்துங்கனுக்கும் முதலிலிருந்தே ஒத்து வராமல் பரம எதிரிகளாகவே இருந்ததாக சாளுக்கிய குருவான பில்வணா எழுதிய 'விக்கிரமங்க சரிதம்' நூல் தெரிவிக்கிறது. இந்த நூலில் பில்வணா சாளுக்கியனைப் பற்றி வீராவேசமாகவும் குலோத்துங் கனைப் பற்றி கேவலமாகவும் எழுதியுள்ளதை பல சரித்திர ஆசிரியர்கள் ஆச்சரியமாகவே கருத்து தெரிவிக்கிறார்கள். ஆனால், அல்ப ஆயுளில் மாண்ட அதிராஜேந்திரனுக்குப் பிறகு குலோத்துங்கன் ஆட்சி பொறுப்பேற்றதாகவும் குலோத்துங்கன்



எந்த வகையில் ஆட்சியை கைப்பற்றினான் என்பது ஒரு புதிர் என்றும் பல ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். ஏனெனில், குலோத்துங்கன் என்ற அபயன் சோழர்களின் நேரடி வாரிசல்ல. மகள் வரிசை வாரிசு. அதாவது, புகழ்பெற்ற ராசேந்திர சோழனின் மகளான அம்மங்கைக்கும் வேங்கி அரசனான ராசராசநரேந்திரனுக்கும் [இவன் கூட சோழ மகள் வரிசையாக இருந்தாலும்] மகனாகப் பிறந்ததால் குலோத்துங்கன் சோழ நேரடி வாரிசு வரிசையிலிருந்து மாறுபடுகிறான்.

ஆகவே, ராமானுஜரை நாடு கடத்தியதால் கிருமி கண்ட சோழன் மாண்டு வம்சத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கிறான் என்ற வைணவர்களின் வாதம் சரியானதே. அத்துடன் மட்டுமல்லாமல் குலோத்துங்க சோழன் சோழ ஆட்சி பீடம் ஏறியவுடன் ராமானுஜரும் திருவரங்கத்திற்கு திரும்பி வந்ததாகவும், குலோத்துங்கனே நேரில் திருவரங்கம் சென்று உடையவரை தரிசித்து திருக்கோயில் பொறுப்புகளை அவருக்கே உரிமைப் பட்டயம் செய்ததாகவும் 'கோயில் ஒழுகு - உடையவர் வைபவம்' [ஆசார்ய வைபவ மஞ்சரி – பக்கம் 441] நமக்குத் தெரிவிக்கிறது. வைணவர்களின் இந்த ஒப்புதலை நாம் ஏற்றுக் கொண்டால் குலோத்துங்கனுக்கு முன் சோழ நாட்டை ஆண்ட அதிராசேந்திரன் ராமானுஜரை நாடு கடத்தி வைணவர்களின் சாபத்திற்கு ஆளானவன் என்பதும் புலனாகும்.

ராமானுஜரை நாடு கடத்தும் படலத்திற்கு சற்று காலம் முன்பே திருமலையில் சைவ-வைணவ வாதங்கள் நடைபெற்றிருக்கவும் வாய்ப்புகள் ஏராளமாக உண்டு. வைணவ ஏடுகளும் திருமலையில் நடந்ததைக் குறிப்பிடும் காலமும் கூட இந்தக் கருத்துக்கு ஒத்துப் போகின்றன.

பொதுவாகப் பார்த்தால், இந்த மதப் போராட்டங்களைத் தூண்டி அதன் மூலம் வன்முறையை கிளப்புகிறவர்கள் அனைவருக்குமே எந்தக் கடவுளின் மீதும் நம்பிக்கை இருக்காது. 'வேங்கடவனின் திருவடிவைக் கண்டவர்கள் தம்தம் கருத்துக்கு இயந்தபடி அரன் அன்றும் குமரன் என்றும் மாயவண்ணன் என்றும் பலவாறு சொல்லி சமயவாதங்களில் வேறுபடுவார்' என்று 'வட வேங்கடமும் திருவேங்கடமும்' நூலில் திரு. சுப்பு ரெட்டியார் எழுதியுள்ளார். உண்மைதான் என்றாலும் வாதம் புரியலாம். ஆனால், வாதத்தின் மூலம் வன்முறையைத் தூண்டுபவர்கள் சுயநலம் அதிகம் உள்ளவர்கள்

தான். அந்த அடிப்படையிலேதான் இந்த நவீனத்தின் போக்கும் அமைந்துள்ளது. இந்த முன்னுரையில் முதலில் குறிப்பிட்ட மூதறிஞர் ராஜாஜி அவர்களின் கடவுளைப் பற்றிய கருத்தையே ஆதாரமாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நவீனத்தை உருவாக்க எனக்கு பலர் உதவி புரிந்தார்கள். அத்தனை அன்பு நெஞ்சங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. யாரையும் புண்படுத்தக்கூடாது என்ற அடிப்படை எண்ணம் நவீனத்தில் எங்காவது மாறுபடலாம். ஆனால், அன்றைய சூழ்நிலையை நன்கு ஆராய்ந்தபிறகே அந்த காலகட்டத்திற்கேற்றவாறு எழுதப்பட்டுள்ளது என்பதால் அப்படிப்பட்ட எண்ணம் எப்போதாவது ஏற்பட்டால் என்னை மன்னிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பெருமதிப்புக்குரிய பேராசிரியர் திரு. சிற்பி பாலசுப்பிர மணியம் அவர்கள் எத்தனையோ அலுவல்கள் மத்தியிலும் சிரமம் பாராது இந்தப் புதினத்திற்கு அணிந்துரை வழங்கி யுள்ளார்கள். அறிமுகம் இல்லாத போதும் என் போன்ற எழுத்தாளர்களை பேராசிரியர் சிற்பி அவர்கள் ஊக்குவிப்பது தமிழ் எழுத்துலகில் ஒரு வரப்ரசாதம். என்னுடைய சிரந்தாழ்ந்த நன்றியை அந்தப் பேரறிஞருக்கு சமர்ப்பிக்கின்றேன்.

பல எழுத்தாளர்களை உருவாக்கிய திரு. நர்மதா ராமலிங்கம் அவர்கள்தான் என்னையும் உருவாக்கியவர் என்பதில் மிகப் பெருமை எனக்கு. 'வம்சதாரா' புத்தகம் அழகிய வடிவெடுத்து பதிப்பிக்கப்பட்டதாக வாசகர்கள் பலர் எழுதியுள்ளார்கள்.

அதே முறையில் 'திருமலைத் திருடன்' புத்தகத்தையும் பதிப்பிக்க முன் வந்தமைக்கு திரு. 'ராமலிங்கம்' அவர்களுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். வம்சதாராவுக்குக் கொடுத்த அதே ஆதரவை இந்த நவீனத்திற்கும் வாசகர்கள் நிச்சயம் தருவார்கள் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.

வணக்கம்

அன்புடன்
திவாகர்
vdhivakar@rediffmail.com

▪▪▪

# 1

# யாகம், நாடகம், கன்யாஸ்த்ரீ

''நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தானே
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக் கீழமர்ந்து
புகுந்தேனே''

நம்மாழ்வாரின் மிகச்சிறந்த சரணாகதி தத்துவத்தின் நாயகனாக நின்ற திருக்கோலத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் தன் அருளாட்சியையும், மாயலீலையையும் கலந்தே நடத்திக் கொண்டிருக்கும் திருவேங்கடமுடை யானுக்கு தன் மலையடிவாரத்திலேயே ஒரு மாயக்காட்சி அரங்கேறிக் கொண்டிருப்பது தெரியாமல் போகுமோ?

இயற்கையை தன் மடியில் சுமந்ததால் தான் பெறும் சுகமான இன்பத்தை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் சேஷாசல மலை அடிவாரத்தில் உள்ள திருவேங்கடகூட நகரத்தின் கடைப்பகுதி அன்று இன்னமும் விடியாத அந்த அதிகாலைப் பொழுதில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. கார்த்திகை மாதமாதலால் காலைக் குளிர் சற்று அதிகமாகவே வருத்தினாலும் அந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல் வெற்று மார்புடன் வைதீகப் பெருமக்கள் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த அந்த வேத மண்டபத்தில் யாககுண்டம் அமைத்து அதைச் சுற்றிலும் வட்டமாக அமர்ந்திருந்தனர்.

தொண்டை வளநாட்டிலே காஞ்சிக்கு அடுத்தபடியாக புகழ் பெற்றிருந்த நகரமான திருவேங்கட கூடத்துக்கு எல்லைப்புறப் பகுதியில்தான் அந்த வேதமண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அவசர கதியில் பந்தல் மேற்கூரை அமைக்கப்பட்டிருந்ததால் கார்த்திகை மாதத்து ஈரப்பதமான காற்று மண்டபத்துள்ளும் சர்வ சாதாரணமாக புகுந்து

ஆங்காங்கே நடப்பட்டிருந்த தீப்பந்தங்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. மண்டபத்தின் ஒரு பக்கப் பகுதியில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் அரசகுல பெருமக்களும் சாளுக்கிய குருதேவனான பில்வணனும் அமர்ந்திருந்தனர். பில்வண குருதேவின் கண்கள் மூடியது போல இருந்ததையும், அந்தக் கண்கள் திறக்கப்பட்டு சைகை செய்ததும் யாகம் ஆரம்பித்தாக வேண்டும் என்பதால் அதற்காக அமர்ந்திருந்த வைதீகர்கள் பில்வணனை ஒரு கண் பார்த்துக் கொண்டும் யாகத்துக்கு தேவையான அவிப் பொருள்களையும் நெய்க் குடத்தையும் யாக குண்டத்துக்கு சமீபமாக நகர்த்திக் கொண்டும் இருந்தனர்.

யாக குண்டத்தின் அருகே வைக்கப்பட்டிருந்த சாளுக்கிய முத்திரை பதித்த தங்கக்குடத்தின் மீது பலர் கவனம் சென்றதில் வியப்பில்லைதான். ஒரு சிறு நாட்டையே வாங்கக்கூடிய அளவுக்கு சாளுக்கிய பொற்காசுகள் நிரம்பி வழிந்த அந்தத் தங்கக்குடம் யாகத்தில் தாரை வார்க்கப்படப் போகிறது என்பதில் அந்த வைதீகர்களுக்கு பெருமிதமும் ஒருவித ஆவலும் இருந்தன. பெருமிதத்துக்குக் காரணம் இத்தனை ஆடம்பரமாக நடத்தப்படும் யாகத்தில் பங்கு பெறப்போகிறோம் என்றாலும் இந்த யாகம் நடத்தப்பட்டபின் யாக குண்டத்தில் தாரை வார்க்கப்பட்ட தங்கக்காசுகளின் உருகலில் இருந்து தமக்கும் பங்கு கிடைக்கும் என்ற ஆவல் அவர்கள் கண்களில் பெரிதாகவே காணப்பட்டது. அதனாலோ என்னவோ அந்த வேதமண்டபத்து வெளி வாயிலில் ஏற்பட்டிருந்த சிறு சலசலப்பு அவர்களை ஏதும் பாதிக்கவில்லை.

வேத மண்டபத்தின் வெளிவாயிலில் இருண்டு கிடந்த அந்தக் காலைவேளையில் உள்ளே செல்ல அனுமதி கேட்டு நின்றிருந்த இருவரை காவல் தலைவன் ஒருவன் காரசாரமாக வைது கொண்டிருந்தான். காலதாமதம் செய்பவரை சாளுக்கிய மன்னர் மன்னிப்பதில்லை என்றும், அப்படி காலத்தை மதிக்காதவர்களை தாமும் மன்னிக்கமாட்டோம் என்றும் தனக்கும் மன்னருக்கும் உள்ள ஒற்றுமையைச் சொல்லி உள்ளே நுழைய முயன்ற அந்த இருவரையும் வெளியே தள்ள அருகில் வந்தான். அதிகாலை வேளையாதலாலும் இருள் இன்னமும் விலகாத வேளையானதாலும் உருவம் தெரியாத இந்த இருவர்



வரவால் மன்னரின் கோபத்துக்குத் தாம் ஏன் ஆளாக வேண்டும் என்று அவன் நினைத்ததால் அவன் கெடுபிடி சற்று அதிகமாகவே இருந்தது.

வந்தவர்களில் ஒருவன் வைதீகன் என்பதனை அவன் உடையில் இருந்து கண்டுகொண்டாலும் அந்த இன்னொருவன் உடை தமிழ் வீரன் பாணியில் இருந்தது அந்த சாளுக்கிய காவல் தலைவனுக்குச் சந்தேகத்தை வேறு அதிகமாகவே தந்தது. ஆனால் அவன் கேள்விகளை அலட்சியப்படுத்திய அந்த இருவரும் உள்ளே சென்றே ஆக வேண்டும் என்று சப்தம் போட்டுப் பேச, அதனால் கோபப்பட்ட காவலர் தலைவன் அந்த வைதீகனை ஒன்றும் செய்யாமல் தமிழ் வீரனை மட்டும் கையால் பிடித்து முறுக்கப் போனான். ஆனால், அடுத்த கணம் முறுக்கிய தன் கையில் 'படக்'கென ஓசை கேட்டு ஓவென அலறப்போன தலைவனின் வாய் பொத்தப்பட்டதுடன் மேலும் சில குத்துகள் அவன்மீது விழுந்ததால் காவலர் தலைவன் பூரண மயக்கத்தில் விழுந்து விட்டான். அடுத்தவர் அறியாதபடி ஒரு சில கணங்களில் நடந்துவிட்ட இந்நிகழ்ச்சிக்குப் பிறகு மளமளவென காரியங்கள் நிறைவேறின.

மயக்கமாய் விழுந்த காவலர் தலைவனின் உடை உருவப்பட்டு, புதிதாய் வந்த தமிழ் வீரனின் உடையாய் மாறியது. காவல் தலைவனை அப்புறப்படுத்தி ஒரு மரத்துக்குப் பின்னால் கடத்திய அந்தத் தமிழ்வீரன் கூட வந்த அந்த வைதீகப் பிராம்மணனையும் அழைத்துக் கொண்டு உள் கட்டுவாயில் வீரர்கள் தலைவணங்கி வழிவிட ஏதும் அறியாதவர் போல் வேதமண்டபத்தை அடைந்தனர். கடைவட்ட வரிசையில் பிராம்மணன் அமர, தமிழ் வீரனோ அங்கு சுற்றியிருப்பவர்களை ஒரு நோட்டம் விட்டான்.

'மேடையிலே கண்மூடி தவநிலையில் இருப்பதுபோல நாடகமாடுகிறானோ பில்வணன்' என்று தனக்குள் நினைத்த தமிழ்வீரன், பில்வணன் அருகிலேயே இரட்டையர் போல அமர்ந்திருந்த சாளுக்கிய மன்னன் விக்கிலனையும், சோழமன்னன் அதிராசேந்திரனையும் பார்த்தான். 'இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை பரம வைரிகள். திருமண உறவால் மாப்பிள்ளை-மைத்துனர் ஆகிவிட்ட இருவரும் இப்போதோ உயிர்காக்கும் தோழர்கள்...' வீரனின் பார்வை அவர்கள் அருகில் அடக்கத்தோடு அமர்ந்திருந்த ராணியர் பக்கம் சென்றது. 'வீரராஜேந்திரரின் மகள் லதாங்கி இன்று

சாளுக்கிய நாட்டு மகாராணி. மகன் அதிராசேந்திரனோ சோழ தேசத்துக்கே மாமன்னன். காலம் செய்த கோலம்...'

'இதோ விழித்துக் கொண்டுவிட்டான். என்னவெல்லாம் நாடகம் ஆடப்போகிறானோ, பார்ப்போம்' என்று தனக்குள் கூறிக் கொண்டவன் தீப ஒளி தன்மீது படாதவாறு மறைவிடம் பார்த்து நின்று கொண்டான்.

காஷாய வஸ்திரம் அணிந்து தவநிலையில் இருந்து மீண்டவன்போல பில்வணன் கண் திறந்ததும் அமர்ந்தவர்களையும், வைதீகர்களையும் ஒருமுறை பார்த்தான். பிறகு, பின்பக்கம் மேடையைப் பார்த்து கையசைக்க, பின் வரிசையில் ராணிகளுடன் அமர்ந்திருந்த ஒரு பெண் எழுந்தாள். அவள் எழுந்து முன்வரிசைக்கு வருவதைப் பார்த்த தமிழ் வீரன் சற்று அசந்துதான் போனான்.

விடிந்தும் விடியாத அந்த இளங்காலைப் பொழுதில் தீப்பந்தங்களின் மந்தமான ஒளியிலும் அற்புதமாய் தெரிந்தாள் அந்தப்பெண். ஆனால், ஏனோ காஷாய உடையை அணிந்துகொண்டு ஏதோ வேதகால முனிவரின் மகள் போல இருந்தது சற்று சுவாரசியத்தையும் கொடுத்தது அந்தத் தமிழ் வீரனுக்கு.

பில்வணனின் கூடாரத்தில் இப்படி ஒரு அழகுப்பெண்ணா? துறவறம் பூண்டதனால் என்று காஷாய வஸ்திரம் அணிந்தாளா அல்லது அவள் சிவந்தமேனிக்கு ஏற்றமாக இருக்கும் என செவ்வாடையை தேர்ந்தெடுத்தாளா என்று புரியாமல் விழித்தான் அவன். வட்டநிலா போன்ற முகத்தில் எத்தனை பெரிய கண்கள். யார் இவள்? தமிழ்ப்பெண்ணாகத் தெரியவில்லை. சாளுக்கிய நாடோ? இத்தனை சிறிய வயதில் எத்தனையோ அழகு துள்ளி விளையாடும் பருவத்தில் துறவறமா? ஒருவேளை வேடம் பூணுகிறாளோ?

தமிழ்வீரனின் மனதில் தோன்றும் எண்ணங்கள் அந்த அழகிக்குத் தெரிய வாய்ப்பில்லைதான். மேடையின் முன்னே வந்தவள் மண்டியிட்டு பில்வணனுக்குத் தலைவணங்கி, ஒரு பட்டோலையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள்.

"பிராம்மணோத்தமர்களே! சோழ தேசத்து மாமன்னராக அதிராசேந்திரத் தேவர் முடிசூடி, இந்த தேசத்தின் மாபெரும் சுமையை தன் தலையில் தாங்கியுள்ளார் என்பது உங்களனைவருக்கும் நன்றாகவே தெரியும். அதிராசேந்திர தேவருக்கு அரசாளுவதில் விருப்பமில்லை என்றாலும் தந்தையின் வற்புறுத்தலாலும் நமது மாமன்னர் விக்கில மஹாராஜாவின் வேண்டுகோளுக்காகவும் நமது குலகுரு பில்வண குருதேவ் விருப்பத்தினாலும் சோழ தேசத்து அரசராக முடிசூட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால், உண்மையை சற்றும் உணராத சில தீயவர்கள் சோழ தேசமெங்கும் சதி செய்து கொண்டும், அதிராசேந்திரத்தேவர் மீது மக்களுக்கு வெறுப்புணர்ச்சியைத் தூண்டிக் கொண்டும் இருக்கின்றனர். இதனால் சோழ நாட்டில் தர்மம் சற்று சீர்குலைந்துள்ளது. இதையும் விட துயரம், நம் சோழ தேசத்து மூத்த மாமன்னரும், நம் விக்கிலதேவரின் மாமனுமான வீரராசேந்திரத்தேவர் தீராத நோய்க்குழியில் விழுந்ததுதான். கலகம் செய்து நாட்டின் தர்மத்தை சீர்குலைக்கும் சதிகாரர்களை கவனிப்பதா அல்லது நோயில் துயரப்படும் மூத்த மாமன்னரை பாதுகாப்பதா? என்கிற மனக்கவலையில் ஆழ்ந்துள்ளார் அதிராசேந்திரத் தேவர். துயரப்படும் சோழ தேசத்தையும், சோழ மக்களையும் எக்காரணம் கொண்டும் கைவிடலாகாது என்ற நல்ல கொள்கை கொண்ட சாளுக்கிய மாமன்னர் விக்கிலத்தேவர் இதோ இந்த திருவேங்கடகூடத்தில் இத்தகைய மாபெரும் யாகம் நடத்த உள்ளார். இந்த யாகத்துக்குக் காணிக்கையாக சாளுக்கிய நாட்டுக் கருவூலத்திலிருந்து சொர்ணக் காசுகளை ஒரு தங்கக்குடம் முழுவதும் நிரப்பித் தருவித்துள்ளார். யாகத்தீயில் சொர்ணக்காசுகள் பஸ்பமாக்கப்படும்போது ஏற்படும் புனிதப் புகை திருவேங்கட கூடத்திலிருந்து எழுந்து சோழ நாடெங்கும் வியாபித்து காஞ்சியில் துயரப்படும் மூத்த மாமன்னரின் நோய்களை விரட்டி அடிக்கட்டும்! இந்த மகாயாகம் சாளுக்கியரின் அன்புக் காணிக்கையாக தர்மதேவதையின் தலை உயர வழி செய்யட்டும்! இது எங்கள் பில்வண குருதேவ் அவர்களின் விண்ணப்பம்..."

கிளி கொஞ்சும் மொழியாக வடமொழி சுலோகமாய்ச் சொன்ன அப்பெண்ணின் குரலினிமையில் சொக்கிப் போனான் தமிழ்வீரன். 'இவள் பேசிக்கொண்டே போகலாம். இப்படி ஓர் இனிமையான குரலைக் கொண்டவள் ஏன்தான் துறவியாகப் போனாளோ? நகையோ, அணிகலனோ ஏதும் அணியாமல் அத்தனைபேர்

மத்தியிலும் ஒற்றைப்பூ போல நிற்கிறாளே, கூந்தல் கூட சரியாக முடியப்படவில்லை. ஒரு பக்கக் கூந்தல் முன்தோளில் விழுந்து மார்பகத்தில் படர்வதுகூட எத்தனை அழகாக இருக்கிறது?'

துறவிப்பெண் பட்டோலையை மறுபடியும் பேழையில் பொருத்தி அந்தப் பேழையை மூடி பில்வணனிடம் சமர்ப்பித்தாள். மறுபடியும் பில்வணனுக்கு மண்டியிட்டு வணங்கினாள். பழையபடி பின் வரிசையில் சென்று அமர்ந்து விட்டாள். சுகமான தென்றல் ஒன்று மிதமாக வீசி கானமழை பொழிய தாலாட்டுப்பாடி மறைந்து விட்டதைப்போல உணர்ந்தான் தமிழ்வீரன். ஆனால், வடமொழியில் புலமைகொண்ட அந்த வேதப்பெருமக்கள் அந்தப் பெண்ணின் பேச்சில் உள்ள பொருளில் ஈடுபட்டு 'அஹோ..அஹோ' என வாழ்த்தியதைக் கையசைத்து ஏற்றுக் கொண்டான் பில்வண குருதேவ்.

''வைதீகப் பெருமக்களே! என் பெண் காத்யாயினி வாசித்ததைக் கேட்டு அதனை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. இனி யாகம் ஆரம்பிக்கட்டும்!''

பில்வணனின் பெருங்குரல் யாகம் தொடங்கப்பட ஆணையிட்டபோதுதான் அந்தத் தடங்கல் ஏற்பட்டது. அதிரடியாக தமிழ்வீரனுடன் உள்ளே நுழைந்து கடைவட்டத்தில் அமர்ந்த பிராம்மணர் எழுந்தார். ஆனால் அவர் பேசியதுதான் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

''இந்த யாகம் நடத்தப்படக்கூடாது. இது யாகம் அல்ல. அதிகாரத் துர்ப்பிரயோகம். அநியாயம்!''

நாராசமாய்க் காதில் விழுந்த இந்த வார்த்தைகள் பில்வணனை மட்டுமல்லாது அதுவரை அமைதியாய் இருந்த விக்கிலனையும் கோபப்படுத்தியது. சப்தம் போட்டுப் பேசினான்.

''யார் அங்கே இருளில் நின்று யாகத்தை நிறுத்தச் சொன்னது? முன்னால் வந்து நில். இல்லையேல் இந்த யாகம் ஆரம்பிப்பதற்கு முன் முதல்பலியாய் நீ இருப்பாய்!''

அந்தப் பிராம்மணர் பயப்படவில்லை. அமைதியாய் முன்னே வந்தார். அவர் முன்னே வர வர அவர் முகம் மீது



தீப்பந்த வெளிச்சம் படர்ந்தது. முகத்தைப் பார்த்து முதலில் பயந்தவன் சோழமாமன்னன் அதிராசேந்திரன்தான்.

''தாங்களா? தாங்கள் எப்படி..''

''ஏன் அதிசயமாய் உள்ளதா அதிராசேந்திரா? எங்கோ வடதேசத்தில் சுற்றிக் கொண்டிருந்தவன் எப்படி வந்தான் என்று பார்க்கிறாயா?''

விக்கிலன் கேள்விக்குறியாக மைத்துனனைப் பார்த்தான். சற்றுப் பணிந்த குரலில் அதிராசேந்திரன் பதில் சொன்னான்,

''இவர் அகோரநாதர். தந்தையின் அன்புக்குப் பாத்திரமானவர். ஆசிரியர்...''

''இருக்கட்டுமே! சோழ மாமன்னரின் ஆசிரியர் என்றால் இதோ மேடையில் நம்முடன் அமரட்டும். நாமும் மரியாதை செய்வோம். ஆனால், யாகத்தை ஏன் நிறுத்த வேண்டும்?''

கோபம் ஏராளமாக வெளிப்பட கத்திப் பேசினான் விக்கிலன். ஆனால், அதிராசேந்திரனின் பணிவு குறையவில்லை.

''ஆசிரியர் ஏதாவது சொன்னால் அதில் ஆயிரம் அர்த்தம் இருக்கும் என்று தந்தை அடிக்கடி சொல்வார்!'

அதிராசேந்திரன் சற்று பயத்தோடு பேசினாலும் பில்வணன் மட்டும் வந்தவரையே கவனித்துக் கொண்டுதான் இருந்தான். 'நெடிய உருவம், நிமிர்ந்த மார்பு, முப்புரி நூலை கையில் சுழற்றிக் கொண்டே பேசும் நிதானம், அந்த நிதானம் கண்களிலும் இருக்கின்றது. நாமும் சற்று எச்சரிக்கையாகப் பேசவேண்டும்.''

''ஆசிரியரே! யாகம் வளர்க்கப்படவேண்டும். வேதம் ஓதப்படவேண்டும் என்றுதான் பிராம்மணர்கள் விரும்பு வார்கள். ஆனால், யாகம் நடத்தப்படக்கூடாது எனச் சொல்லும் பிராம்மணனை இப்போதுதான் பார்க்கிறேன். நீர்...''

''பிராம்மணன்தானா என்று கேட்கிறாயா பில்வணா? அதைப்பற்றிய கவலை உனக்கோ உன் அரசனுக்கோ தேவையில்லாத ஒன்று!''

விக்கிலன் கோபம் எல்லைக் கடந்தது.

''பின் எதற்காக யாகத்தை நிறுத்தச் சொல்கிறாய்?''

''நீ எதற்காக இந்த யாகத்தை நடத்துகிறாய்?''

இடி இடியென சிரித்தான் விக்கிலன். அதிராசேந்திரனைப் பார்த்தான். ''மைத்துனரே! உங்கள் ஆசிரியருக்கு வடமொழி புரியவில்லை. இத்தனை நேரம் கிளிப்பிள்ளை போல சொன்ன காத்யாயினியின் வார்த்தைகள் உங்கள் ஆசிரியரின் அழகான மூளைக்கு விளங்கவில்லை. சற்று தமிழில் மொழிபெயர்த்து சொல்லுங்களேன்.''

சாளுக்கிய விக்கிலனின் இகழ்ச்சி ஆசிரியரை பாதிக்கவில்லை. நிதானமாகவே பேசினார்.

''வடமொழியும், தென்மொழியும் என் இரண்டு கண்கள். அந்தப் பெண் சொன்னது எனக்கு விளங்கியது. ஆனால், நான் கேட்பதன் பொருள் உனக்கு விளங்காததுபோல் நடிக்கிறாய்! சாளுக்கியா! விளக்கமாய் சொல்லட்டுமா? இந்த யாகம் எதற்காக செய்யப்படுகிறதோ அதன் பலன் கிட்டவே கிட்டாது என்று எனக்குத் தெரியும். அது உனக்கும் தெரியும், பில்வணனுக்கும் மிக நன்றாகத் தெரியும்''

பில்வணன் ஆத்திரப்பட்டான்.

''ஏய் பிராம்மணா! என்ன பேசுகிறாய் நீ? இந்த யாகத்தினால் பலன் இல்லையா?''

''சப்தம் போட்டு கத்தினாலும் எந்தப் பலனும் இல்லை பில்வணா! உயிரோடு இருப்பவர்களுக்காகத்தான் இத்தகைய யாகம் செய்யவேண்டும். இறந்தவர்களுக்காக அல்ல.''

அதிரடியாக வந்த ஆசிரியரின் சொல் மேடையில் இருந்த அரச குலத்தவர்களையும் யாக குண்டத்தை சுற்றி அமர்ந்திருந்த வேதியர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. விக்கிலன் முகம் வெளிறிப்போய் எழுந்து நின்றான். அவன் மனைவியும் வீரராஜேந்திரன் மகளுமான லதாங்கி மயக்கமாய் விழ, மற்றவர்கள் அவளைத் தாங்கினர். பில்வணன் கோபம் தலைக்கேற அவனும் எழுந்தான். அவன் கண்களில் எழுந்த கோபத்தீ மற்ற வேதபண்டிதர்களை வாட்டினாலும் ஆசிரியரை கலவரப்படுத்தவில்லை.

''ஏன்! உண்மை கசக்கின்றதா பில்வணா! உங்கள் பிரத்யேக கண்காணிப்பில் காஞ்சியில் ஆறு மாதங்களாக சிறை வாழ்க்கைபோல அனுபவித்த சோழதேச



சக்கரவர்த்திகள் இறைவன் அடிசேர்ந்து இன்றைக்கு மூன்று நாட்கள் ஆகிவிட்டன என்ற விவரத்தை மூடிமறைத்து விட்டு அவர் தீராத நோய் நீங்க யாகம் என்ற பெயரில் திருவேங்கடபுரத்தில் நாடகம் நடத்துகின்றாயா பில்வணா? இன்னும் எத்தனை நாட்களுக்கு சவத்துக்கு பச்சிலைக்கட்டுப்போட்டு மூடி வைப்பீர்கள். இன்னும் எத்தனை நாட்களுக்கு இதுபோன்ற போலி யாகம் நடத்தி மக்களை ஏமாற்றுவீர்கள்.''

நிதானமாகவே கேட்ட ஆசிரியர் வைதீகரிடம் திரும்பினார்.

''மறையோர்களே! நல்லவைக்காகவும், தருமம் செழிக்கவும் யாகங்கள் நடத்தப்படவேண்டும். ஆனால், ஒரு மாபெரும் பொய்யை வாழவைக்க நடத்தப்படும் யாகங்கள் பாவங்களை விளைவித்து உங்களையே தாக்கும். நீங்களும் கேட்டுக் கொள்ளுங்கள். இந்த நாட்டு சக்கரவர்த்தியார் இறந்துவிட்டார். அவர் ஆன்மா சாந்தி அடையும்விதமாக மந்திரங்களை ஓதுங்கள். பாவச் செயல்களுக்கு அறியாமல்கூட துணை போகாதீர்கள்.''

ஆணையாக வந்தது ஆசிரியரின் குரல். பில்வணன் அதிர்ச்சியிலிருந்து மீண்டு நனவுலகுக்கு வந்தான். ஆனால், அதற்குள் வேத மண்டபமெங்கும் அமர்ந்திருந்த வேதியர் அனைவரும் எழுந்து நின்று தமக்குள் பேசிக்கொண்டும், ஏசிக்கொண்டும் குழப்பமாக அடுத்து என்ன செய்வது என்று அறியாமலும் இருந்தனர். பில்வணனுக்கு நிலவரம் புரிந்தது.

''வேத மண்டபத்துள் புகுந்து குழப்பம் விளைவிக்கும் இந்தப் பிராம்மணனை உடனே கொல்லுங்கள்... ம்! வீரர்களே! எங்கே போய் விட்டீர்கள்! காத்யாயினி! என்ன செய்கிறாய் நீ? உடனே அவனை கொல்!''

நாராசமான அந்த வார்த்தைகளைக் கேட்டு வைதீகர் அலறினர். இத்தனை விசேஷங்களையும் கண் அகலாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்தத் தமிழ்வீரன் தான் செயல்படும் நேரம் வந்து விட்டதென்பதை உணர்ந்ததால் தான் நின்ற இடத்தில் நடப்பட்டிருந்த பந்தற்கால் ஒன்றினை பலங்கொண்ட மட்டும் மேலிழுத்து சடக்கென பிடுங்கி கீழே போட்டான். இதனால் ஒருபக்க மேற்கூரை சடாரென சரிந்ததால் ஏதோ பெருத்த அபாயமே நேரப்போகிறது என்ற

அச்சத்தில் வைதீகப் பெருமக்கள் அங்குமிங்கும் அரக்க பரக்க ஓடி வெளியேற முயற்சித்தார்கள். உட்கட்டு வாயில் சிறிய அளவில் அமைக்கப்பட்டிருந்ததால் அங்கு கூட்டம் அதிகமாகி நெரிசலும் ஏற்பட எங்கும் குழப்பமும் அலறலும் நிறைந்து காணப்பட்டது.

ஒருபக்கம் ஓடும் அனைவரையும் ஒரு கண் பார்த்தான் அந்த வீரன். ஓடும் கூட்டத்தில் ஆசிரியரும் இல்லை; அதிர்ச்சியில் அதிர்ந்த அந்த மேடையில் தன்னை கவர்ந்திழுத்த அந்தக் கன்னியாஸ்திரீயும் காணப்பட வில்லை.

## 2

# பலமுள்ள மனிதனே தெய்வம்

''எத்தனை அட்டகாசமாக ஆரம்பித்து அலங்காரமாக முடிய வேண்டிய ஒரு வேள்வி. தேசம் நாலா மூலையில் இருந்தும் வரவழைக்கப்பட்ட வேதம் கற்றறிந்த மறையோர்கள், சோழ தேசத்திற்காகவும், நாட்டின் நலத்திற்காகவும், மன்னாதி மன்னனான வீரராஜேந்திரனுக் காகவும், அவன் உடல்நிலை சீரடைவுக்காகவும் நடத்தப்படும் யாகம் என்று எத்தனையோ நாட்களாக திட்டமிட்டு நடக்கவேண்டிய யாகம். மருமகன் சாளுக்கிய மன்னனாக இருந்தாலும் மாமனுக்காக எவ்வாறெல்லாம் கஷ்டப்படுகிறான், நாட்டின் செல்வத்தையே மாமனுக்காக தாரை வார்க்கவும் தயங்காதவன் என்றெல்லாம் ஊர் பேசவேண்டிய யாகம். திராவிட தேசத்தின் மக்கள் மத்தியில் வீரராஜேந்திரனுக்கு அடுத்தபடியாக சாளுக்கிய விக்கிலனை கொண்டு செல்ல வேண்டிய யாகம். நாளை வீரராஜேந்திரன் இறந்துவிட்டான் என்ற செய்தியைப் பரப்பும்போது 'ஆஹா... மாமன் உயிரைக் கடைசிவரைக் காப்பாற்றியவன் விக்கிலன் என்ற பெயர் தரும் யாகம்' எந்தவித சண்டையுமின்றி, கத்தியின்றி, ரத்தமின்றி சோழநாட்டையே தன் வசமாக்கிக் கொள்ள வகை செய்யும் யாகம். எல்லாம் போயிற்று. ஒரு கணத்தில் தன் கனவுகளை பொடிப் பொடியாக்கி மறைந்துவிட்டான் அந்த ஆசிரியன்.''



பில்வணன் எரிமலையாய் விக்கிலனிடம் வெடித்துக் கொண்டிருந்தான். வீரராசேந்திரர் மறைந்துவிட்டார் என்ற செய்தி தெரிந்ததுமே அதிராசேந்திரனும் மற்ற அரசகுலப் பெருமக்களும் அவசரம் அவசரமாக காஞ்சி விரைந்து விட்டனர். யாகம் செய்ய வந்த பிராம்மணர்களும் உள்ள நிலைமையின் கோரமான விசித்திரத்தை வியந்து கொண்டும், வேதம் செழிக்க வேண்டிய தேசத்தில் இப்படியும் ஒரு இழுக்கு நேருமோ என்று ஒருவருக்கொருவர் வருந்திக் கொண்டும், அந்த இடத்தை விட்டு அகன்றனர். கொஞ்ச நஞ்சமிருந்த தாதியரும் சோழவீரர்களும் கூட அரசகுலத்தவரோடு அரக்க பரக்க ஓடினர்தாம். அந்த யாக மண்டபத்தில் விக்கிலனும் பில்வணனும் சாளுக்கிய வீரர்கள் மட்டுமே காணப்பட்டனர்.

யாகத்துக்காக யாககுண்டம் அருகே வைக்கப்பட்டிருந்த புனிதமான அவிப்பொருள்களும் பழங்களும் அங்குள்ளோர் அலறிக் கொண்டு ஓடியதில் யாகமண்டபம் முழுவதும் சிதறிக் கிடந்தன. ஒரு கால் பிடுங்கப்பட்ட பந்தல் ஒரு பக்கம் சாய்ந்த அந்த நிலைகூட சூழ்நிலைக்கு கோரமாக காட்சியளித்தது. சாளுக்கிய தங்கக் காசுகளாய் நிரம்பி வழிந்த பொற்குடத்தின் மீது காலைச் சூரியனின் கிரணங்கள் பட்டதால் தகதகவென அந்தத் தங்கக்குடம் மினுமினுத்து தம்மைப் பார்த்து இளக்காரம் செய்வது போலப்பட்டது பில்வணனுக்கு. சாளுக்கிய வீரன் ஒருவனை விளித்து அந்தத் தங்கக்குடத்தை எச்சரிக்கை யோடு பத்திரப்படுத்த ஆணையிட்டான். விக்கிலன் முகம் வெளிறிக் கிடந்தான். 'தன் குருதேவின் திட்டங்கள் என்றும் வீணாகிப் போனதில்லை. ஆனால் இன்று...'

''குருதேவ்! இந்த நேரத்துக்கு அலங்காரமாய் ஆர்ப்பாட்டமாக இருக்கவேண்டிய இந்த இடம் இப்படி அலங்கோலமாகி நிற்பதை என்னால் நம்பமுடியவில்லை. இதோ இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நமக்கு முன்னெச்சரிக்கை தானோ என்னவோ, என் மைத்துனன் பேர் சொல்லி பேர் சொல்லி சோழநாட்டில் காலூன்ற முடியாதோ, நேரம் பார்த்து மாமனின் மரணச் செய்தியை சொல்லி இருக்கும் ஆசிரியன், அவன் மாயம் மந்திரம் தெரிந்தவனோ? எப்படி மாமன் இறந்த செய்தி இவனுக்குக் கிடைத்தது? மைத்துனன் கூட அறியமுடியாமல் ரகசியம் காக்கப்பட்ட

செய்தி எங்கிருந்தோ வடநாட்டில் இருந்து நுழைந்த அந்த பிராம்மணனுக்கு எப்படி கிடைத்தது. இந்த பிராம்மணன் இப்படி பட்டென்று போட்டு உடைத்த செய்தியை இங்கு வந்த பிராம்மணர்கள் எல்லா ஊர்களிலும் போய் சொல்வார்களே... அந்த சம்புவரையன் என்ன சொல்வானோ, அதிகைமான் அரசனும் சாமான்யப் பட்டவன் இல்லை குருதேவ். இத்தனை நாள் வீரராசேந்திரர் உடல்நிலையை வைத்து நம்மைப் பொறுத்துக் கொண்டார்கள். இனி...''

பில்வணன் விக்கிலன் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

''விக்கிலா! உன் கவலை எனக்குப் புரிகிறது. நீ சொல்லும் சம்புவரையனையோ அதிகைமானையோ உன்னால் போரில் எளிதாக வெல்லமுடியும். ஆனால், இப்போது பார்த்தாயே, ஆசிரியன், அந்த சண்டாள பிராம்மணன் போன்றவர்கள்தான் நம் உண்மையான எதிரிகள்.''

விக்கிலன் சற்று ஆச்சரியப்பட்டான். பில்வணன் மேலும் விளக்கினான்.

''விக்கிலா! நன்றாக யோசித்துப்பார்! சோழ தேசத்தோடு விளையாடுவது மிகவும் அபாயகரமான விளையாட்டு என்று தெரிந்தும் உன்னைக் களம் இறக்கினேன். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய சமயம் இது. ஏற்கனவே இந்த விளையாட்டில் உன் தந்தை அவமானப்பட்டு தற்கொலை செய்து கொண்டார்.* உன் அண்ணன் சோழர்களின் ஆப்த நண்பனாகி உன்னையும் நம் சாளுக்கிய குல கௌரவத்தையும் நாசம் செய்ய ஆரம்பித்தான். ஆனால், நம்மிடம் உள்ள புத்தியும், ஞானமும் உன் அண்ணனிடத்தே இல்லை. சோழர்களை படைபலம் கொண்டு வெல்வது அறிவீனம் என்று உனக்கு அறிவுரை செய்தவன் நான். உனக்காக வீரராசேந்திரனிடம் தூது சென்று உன் பலத்தை சரியான விகிதத்தில் எடுத்துச் சொல்லி அவன் மகளை உனக்கு மனைவியாக்கி நீ காலூன்ற வழிசெய்தேன். உன் அண்ணனை வடக்கே ஓட ஓட விரட்டியாகிவிட்டது. இனி தெற்கே உன் கவனம் நிலைக்க வேண்டும். அதற்கான முதல் கட்டாமாகத்தான் இந்த யாகத்தை முடிவு செய்தேன்.''

* துங்கபத்திரை நதியில் முழுகி தற்கொலை செய்து கொண்டான். (Ref. N. Subramanian's Tamilnadu History)



விக்கிலன் குருதேவை மரியாதையாகப் பார்த்தான். அவர் சொன்னது அனைத்தும் உண்மைதானே. குருதேவ் மட்டும் இல்லாவிட்டால் சாளுக்கிய சிறையில் தன்னைப்போட்டு எள்ளி நகையாடி இருப்பான் அண்ணன் சோமதேவன். 'குருதேவ் மட்டும் தனக்குக் கிடைத்திராவிட்டால்...'

விக்கிலனின் எண்ணங்களை மறுபடியும் கலைத்தான் பில்வணன்.

''விக்கிலா! கடந்த ஆறு மாதங்களாக நாம் காஞ்சியில் ராஜயோகம் அனுபவித்துக் கொண்டிருந்தோம். இனி அது நிலைக்காது. உன் மைத்துனன் உன் மாமனைப் போல புத்திசாலி இல்லை என்பது ஒரு வகையில் நமக்கு தீமையைத்தான் விளைவிக்கும்.''

''எப்படி குருதேவ்?''

''முடிகொண்ட சோழபுரத்தில் ஒரு வயதான பெண் இருக்கிறாள். வீரராசேந்திரனின் தங்கை அம்மங்கா. அவள் அதிகாரம்தான் சோழநாட்டில் செல்லும். வீரராஜேந்திரன் உயிரோடு இருந்தவரை அவள் சற்று கட்டுக்குள் இருந்தாள். ஆனால், அவளுக்கு அதிராசேந்திரன் அரசாள்வது பிடிக்கவில்லை. தன் மகன் ரஜிகன்*தான் அரசாளும் உரிமை படைத்தவனாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு சோழ சிறிய அரசர்கள் பலம் பூரணமாக உள்ளது!''

''ரஜிகனைப் பற்றி எனக்குத் தெரியாதா குருதேவ்! ஆனால், நம்முடைய பலம் முன்பு அவன் எம்மாத்திரம். அதிராசேந்திரனை நம் பக்கம் வைத்துக் கொள்வோம். ரஜிகன் வேண்டுமானாலும் சில சிற்றரசர்களின் படையை வைத்துக் கொண்டு போரிடட்டுமே... பார்த்துவிடுவோம் ஒரு கை.''

பில்வணன் தலையை அசைத்து ஒப்புக் கொள்ள மறுத்தான்.

''படைபலம் கொண்டு ரஜிகனின் கூட்டத்தை வெற்றி கொள்ள முடியாது. அப்படியே வென்றாலும் அது

* குலோத்துங்க சோழனின் பெயரை 'ரஜிகன்' என்று பில்வணனின் 'விக்ரமங்க சரிதம்' சமஸ்கிருதத்தில் குறிக்கிறது.

நிலைக்காது. என்னைப் பொறுத்தவரை மூளையின் பலம் கொண்டு சோழ வம்சத்தையே குலைப்பதுதான் மிகச்சிறந்த வழி. சோழநாடு என்ற நாடு ஒன்றே இருக்கக்கூடாது. இந்த நாட்டில் வீரர்கள் இருக்கக்கூடாது. வீரம் அழிய வேண்டும். பயம் இந்த நாட்டு மக்களை எப்போதும் அலைக்கழிக்க வேண்டும். இதுதான் நமக்குத் தாரக மந்திரம். நம் உறுதியான கொள்கை கூட இதுதான்.''

பில்வணன் பேச்சில் கடுமை அளவுக்கு அதிகமாக இருந்ததால் அது சாளுக்கியனையும் தாக்கியது.

''குருதேவ்! இது சாத்தியமா? இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்தால், ஆஹா! வடக்கே நர்மதையாறு நமது எல்லை. தெற்கே குமரிக்கடல். மேலும் முயன்றால் சிங்களமும் நம் வசமாகும். பிறகு நான்தான் உண்மையான சக்கரவர்த்தி. பெயருக்கேற்ற பேரரசன். முடியுமா குருதேவ்?''

விக்கிலன் கண்களில் வெறியைப் பார்த்தான் பில்வணன். அந்த வெறியை வளர்த்தான்.

''இந்தத் திருவேங்கடகூட நகரத்தில் இருந்து சொல்கிறேன் விக்கிலா! உன்னால் நிச்சயமாக முடியும்! என்மேல் நம்பிக்கை வை. நாம் சரியான காலகட்டத்தில் இருக்கிறோம். இன்று இந்த யாகம் சிதைக்கப்பட்டதைப் போல சோழநாடு சிதைக்கப்படும் காலம் விரைவில் வரும். இந்த யாகம் சிதைப்பதற்காக அந்த அயோக்கியர்கள் கத்தியை வைத்துப் போராடவில்லை. அதே வழியில் நம் புத்தியை வைத்துப் போராடி நாம் சோழநாட்டை சிதைப்போம். உன் மாமனும் இறந்துவிட்டான். உன் மைத்துனனை பூரணமாக நம் வலையில் சிக்க வைப்போம். அவனை வைத்து நாம் இங்கே விளையாடுவோம். என்னுடைய திட்டங்களை ஒவ்வொன்றாக செயல்படுத்து. என்னைப் பொறுத்தவரை நீ இன்று முதலே சக்கரவர்த்திதான். அன்று உனக்கு கல்யாணி நகரை சொந்தமாக்கினேன். இன்று உனக்கு காஞ்சி சொந்தமாகும் வேளை வந்துவிட்டது. நாளை கங்கை கொண்ட சோழபுரத்தையும் உன் காலடியில் விழ வைக்கிறேன்.

அவன் தோளைப் பிடித்துப் பேசியதும் விக்கிலனின் முகம் பூரணமாக மலர்ந்தது. குருதேவ் காலடியில் விழுந்து எழுந்தான்.



''குருதேவ்! நீங்கள் சொல்படி ஆடும் பொம்மை நான். எனக்காக எதை வேண்டுமானாலும் என்னை கேட்காமலே செய்ய பூரண அதிகாரம் உங்களுக்கு உள்ளது!''

குருதேவ் நகைத்தான்.

''அவ்வளவு எளிதாக சொல்லி விடாதே விக்கிலா! நீ எனக்கு குருதட்சிணை தரவேண்டும்!''

இடியாக வந்தது குரல். தயங்காமல் பேசினான் விக்கிலன்.

''ஆணையிடுங்கள் குருதேவ்!''

''விக்கிலா! இந்த திராவிட நாடு நான் நினைக்கும் நிலைக்கு வரவேண்டும். உனக்குத் தெரியுமா? இங்கு சோழர்களோ, பல்லவர்களோ, அல்லது பாண்டியர்களோ யாரோ ஒருவர் மிகப்பலமாக இருப்பார்கள். அவர்களால் இந்த திராவிட நாடு காக்கப்படுகின்றது. ஏன் தெரியுமா? இங்குள்ள மக்கள் மத்தியில் மாயை ஆட்சி செய்கிறது. தெய்வீகச் சூழ்நிலை என்ற பெயர் அந்த மாயைக்கு. கோயில்களும், தெய்வங்களும் இங்கே வெகுவாக ஆராதிக்கப்படுகின்றன. ஆன்மீகவாதி என்ற பெயர் கொண்டு மூலைக்கு ஒருவராக மக்களிடம் சென்று இந்த மாயையை வளர்த்து வருகின்றனர்.''

''புரிகிறது குருதேவ்!''

''ஆம் விக்கிலா! இந்த சோழதேசத்தில் கோயில்களும், சிலைகளும் நிலையாக இருக்கும்வரை இந்த மக்கள் தெய்வ நம்பிக்கையில் மோசம் போய்க் கொண்டே இருப்பார்கள். முதலில் இந்த நம்பிக்கை தகர்க்கப்படவேண்டும். தெளிவாகச் சொல்கிறேன் விக்கிலா! கடவுள் என்ற மாயையை இவர்களின் மனதில் இருந்து ஒழிக்க வேண்டும். பலமுள்ள மனிதனே தெய்வம் என்ற யதார்த்தத்தை உன் மூலம் சாதித்துக் காட்டுவேன்.''

விக்கிலன் மறுபடியும் மண்டியிட்டான். அவன் தலை நிமிர்ந்து குருதேவைப் பார்த்தான்.

''குருதேவ்! தங்களைப் பற்றி எனக்குத் தெரியும். வீரராசேந்திரன் இறந்து விட்டாலும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட இந்த யாகத்தை நடத்துமாறு ஆணையிட்ட போதே உங்கள் உள்ளம் புரிந்தது. முள்ளை முள்ளால்

எடுக்கத்தான் நீங்கள் யாகத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்றும் புரிந்து கொண்டேன். என்னைப் பொறுத்தவரை எனக்கு நீங்கள்தான் கடவுள்.''

சிரித்தான் பில்வணன்.

''எழுந்திரு விக்கிலா! அந்தக் கடவுள் என்ற பெயரைச் சொல்லி என்னையும் மாயையில் சிக்கவிடாதே. இனி மிகமிக எச்சரிக்கையாக செயல்படவேண்டும். நீயும் உடனே காஞ்சிக்குப் போ. கண்ணீருடன் போ. வீரராசேந்திரன் செத்த உடல்மீது விழுந்து புரண்டு அழுதாலும் உனக்கு நல்லதுதான். அங்கு சிலர் உன்னை வைதாலும் கவலைப்படாதே. உணர்ச்சிகளுக்கு அடிமை ஆகாதே. உன்னை வைதவர்களை மெல்ல மெல்ல தீர்த்துக் கட்டலாம். நான் இன்று முழுவதும் இங்கு இருப்பேன். அந்த சண்டாளப் பிராம்மணனை தீர்த்துக் கட்டும்படி காத்யாயினிக்கு உத்தரவிட்டுள்ளேன். இன்று இரவில் கபிலதீர்த்தம் செல்கிறேன். அங்கு காகடி துர்காவும், சாமுண்டர்யனும் எப்பாடுபட்டாவது மடிராஜனை அழைத்து வருவதாக வாக்களித்துள்ளார்கள்.''

''குருதேவ்! மடிராஜன் எந்த வகையில் உதவமுடியும்.''

''மடிராஜன் பற்றிய விஷயங்கள் அனைத்தும் அறிந்த பிறகுதான் அவனை சந்திக்க முடிவு செய்துள்ளேன் விக்கிலா! என் போன்று கடவுள் நம்பிக்கை அற்றவர்களை அவன் வெறுப்பவன். என் போன்றவர்களை வெட்டி சுடுகாடுகளில் பலியிடவும் தயங்காதவனாம். அப்படிப் பட்டவனை நாம் நம் வலையில் சிக்க வைக்க வேண்டாமா...''

''ஒருவேளை தங்களுக்கு ஆபத்தாக முடிந்தால்?''

''முடியாது விக்கிலா. அவனைப்பற்றி கவலைப்படாதே. எந்த ஒரு விஷத்துக்கும் முறிவு மருந்து உண்டு. அவனுக்குள்ள மருந்து என்னிடம் உண்டு. ஏனெனில் மடிராஜனின் உதவி நமக்கு இப்போது மிகமிகத் தேவை. நான் எல்லாவற்றையும் தீர ஆலோசித்து விட்டேன் விக்கிலா... மடிராஜனை எப்படியும் அழைத்து வரவும் காகடிக்கு உத்தரவிட்டது கூட தீர ஆலோசித்துதான்.''

''குருதேவ்! ஒரு விஷயம் மறந்துவிட்டேன். இன்று அதிகாலையில் பிராம்மணன் கூட வந்த எதிரி ஒருவன் நம்



சர்வ தேவாவை அடித்து வீழ்த்தி இருக்கிறான். அவன்தான் இந்தப் பந்தற்காலையும் பிடுங்கியவன் என்று நம் வீரர்கள் ஊகிக்கிறார்கள். முகம் தெரியாத அந்த எதிரியை கண்டு பிடித்து அழிக்கவேண்டும்!''

''நாம் பயணம் செல்லும் பாதை கரடுமுரடான பாதை. அந்தப் பாதையில் இவர்களைப் போன்றவர்கள் நம் காலைப் பதம் பார்க்கத்தான் செய்வார்கள். இதற்கெல்லாம் முக்கியத்துவம் தராதே. அந்தப் பிராம்மணன் தகுந்த முன்னேற்பாடு செய்து கொண்டு வந்திருப்பான் என்பது நான் ஊகித்ததே.. அந்தப் பிராம்மணனோடு அவன் கையாளையும் காத்யாயினி கவனித்துக் கொள்வாள். காத்யாயினி என் பெண். எரியும் நெருப்பு. அணையாத நெருப்பு. அப்படி வளர்த்திருக்கிறேன் அவளை. அந்த நெருப்பில் எதிரிகள் வெகு சீக்கிரமாக பொசுங்கி அழிந்து விடுவார்கள் விக்கிலா!''

இவர்கள் யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களோ, யார் நெருப்பாய் வர்ணிக்கப்பட்டாளோ, அந்த காத்யாயினி அந்த சமயத்தில் பெரும் சிக்கலில் இருந்தாள் என்பதை இவர்கள் உணரவில்லைதான்.

## 3

# பிராம்மண வதை

''காத்யாயினி! உடனே இவனைக் கொன்றுவிடு!'' என்ற ஆணை பில்வண குருதேவ் வாயிலிருந்து வருமுன்பே அங்கு நடந்த சம்பாஷணைகளை காத்யாயினி கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். எப்போது குருதேவிடமிருந்து ஆணை வந்துவிட்டதோ அப்போதே தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த சின்னஞ்சிறிய குறுவாளை எறிந்து அந்தப் பிராம்மணனைக் கொன்றுவிடவே நினைத்தாள். ஆனால், பிராம்மணனின் நல்ல காலமோ என்னவோ சமயம் பார்த்து பந்தல் திடீரென சாய்ந்ததால் நாலாபக்கமும் குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டு வைதீகர்கள் அனைவரும் அலறிக்கொண்டே ஓட அந்த அலங்கோலத்தில் அந்த பிராம்மணனும் பின்பக்க வழியே தப்பிச் செல்வதையும் பார்த்தவள்தான். அவன் எங்கு சென்றாலும் விடப்போவ தில்லை என மனதுக்குள் நினைத்துக் கொண்டவள் தப்பிச்

சென்ற பிராம்மணன் மீது கண் வைத்துக்கொண்டே பின்புற வாயிலைக் கடந்தாள்.

சூரியன் வருவதற்கு முன்பே தன் தூதர்களை முன்னே அனுப்பி அனைவருக்கும் அறிவிப்பது போல திருவேங்கடகூடத்து பறவைகள் கிறீச்சிட்டு சப்தம் போட்டன. மெலிதான பனிமூட்டம் காணப்பட்டதால் சட்டென முன்னே செல்லும் பாதையின் வழி சரியாக கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் அது காட்டுக்குள் செல்லும் ஒருவழிப்பாதையாதலால் சற்று எச்சரிக்கையாகவே நடந்து சென்றாள். சிறிது தூரம் சென்றவள் சற்று நிதானித்தாள். 'இது பெரு வழிப்பாதை. அப்படியே போனால் திருமலைக் காடும், மலைப்பகுதியும்தான் வரும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள் பிறகு ஏதோ முடிவெடுத்தவள் போல தன் கையில் கத்தியை தற்காப்புக்காக பிடித்துக் கொண்டு காட்டுப் பாதையில் அடியெடுத்து வைத்தாள்.

அந்தப்புரத்தில் அலங்காரம் செய்துகொண்டும், ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், தோழியருடன் உல்லாசமாக இருக்கவேண்டிய பருவத்தில் இப்படி எங்கோ தென்னகக் காடுகளில் விட்டேத்தியாய், தன்னந்தனியாளாய் செல்ல வேண்டிய நிலையில் தான் உள்ளது அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. வடக்கே இமயமலை உச்சியில் இருந்து அங்குள்ள செல்வங்களையெல்லாம் அள்ளிக்கொண்டு வந்து கன்னோசி நாட்டுக்கே தாரை வார்க்கும் கங்கை நதி தீரத்து செல்வமகளாக வளர வேண்டியவள் இப்படி ஒரு வறண்ட வாழ்க்கை வாழ்வதில் அவளுக்கு பிடிப்பில்லைதான். ஆனாலும், தன் இன்றைய நிலை அதுதானே.

இப்படி ஒவ்வொரு சமயம் தன் மனதில் கன்னோசி நாடும் நகரமும் கங்கை நதியும் வந்து அலைக்கழிப்பது இப்போதெல்லாம் காத்யாயினிக்கு வழக்கமாகிவிட்டது. ஆனாலும், இந்த வறண்ட வாழ்க்கை தன்மேல் திணிக்கப் பட்டதல்ல. தானே முன்வந்து ஏற்றுக் கொண்டதுதான் என்பதையும் நினைத்துக் கொண்டு அவள் சமாதானம் அடைந்தவள்தான்.

சிறு வயதிலிருந்தே வாள் வித்தையில் பயிற்சி பெற்று வாள் வித்தையில் பிரசித்தி பெற்ற பெண்ணாக தான் பெயர்



எடுத்ததுதான் தன்னை தற்சமயம் ஏதோ ஒரு விதத்தில் காப்பதுபோல அடிக்கடி உணர்ந்து கொள்வாள் அவள். 'இந்த வாள் வித்தை மட்டும் கற்றிராவிட்டால் பில்வண குருதேவ் தன்னைத் தேடி வந்திருப்பாரா, தன்னைக் காப்பாற்றி இத்தனை பெரிய பொறுப்பை ஒப்படைத்திருப்பாரா' என்றெல்லாம் மனதுள் கேட்டுக் கொள்வாள் அவள்.

'கன்னோசியின் காவல் தெய்வம். அழகுக்கே அழகு செய்ய வந்த வானத்து தேவதை. மண்ணுலகில் மணாளன் கிடைப்பது அபூர்வம்' என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டவள் அவள். வாள்சண்டையில் அவளை வெல்வோருக்கே அந்தப் பருவமங்கை பரிசாக கிடைப்பாள் என்று கன்னோசி அரசர் அறிவித்ததும் எத்தனை அரசகுமாரர்கள் முன்வந்தனர். ஆனால், அத்தனை பேரையும் சடசடவென சடுதியில் தோற்கடித்து அவமானப்படுத்தியவள் அவள். அரசரும் சபையோரும் எத்தனை ஆனந்தமாக அவள் வாள் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தனர். கன்னோசி அரசருக்குத்தான் தன் மகள்மீது எவ்வளவு பாசம்.

அவளுக்கு நன்றாக நினைவு இருந்தது அந்த நாள். மறக்க முடியாத நாளாயிற்றே. இரண்டு வருடங்கள் ஆகி விட்டாலும் ஏதோ நேற்று நடைபெற்றது போலல்லவா இருக்கிறது.

இப்படித்தான் தங்களிடம் தோற்றோடிய சிலர் பாரசீக பரதேசிகளை அழைத்துக்கொண்டு நள்ளிரவில் கன்னோசி நகரத்தையே பாழ் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியே அவள் காதுக்கு நாராசமாக விழுந்தது என்றால் அந்தப் பாரசீகப் பேய்கள் அரண்மனையையும் தாக்கி தன் தாய் தந்தையரை புழுவை நசுக்குவது போல கொன்றதைப் பார்த்தால் எப்படி இருக்கும். அந்த நிலையில் பெண்ணான அவளால் வாள் எடுத்துப் போரிட முடியவில்லைதான். போரிட்டிருந்தாலும் பயன் ஒன்றும் இருந்திருக்காதுதான். தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள போராடவேண்டிய நிலையில் தான் கொண்டுவந்து விடப்பட்டபோதுதானே அந்த இரவிலும் பில்வணகுருதேவ் வந்தார். தன்னை அந்த கொடிய பிசாசுகளிடமிருந்து மறைத்து வைத்து காப்பாற்றி நகரம் அழைத்து வந்தார். அவர் மட்டும் அன்று வரவில்லையென்றால் ஒன்று தாம் இறந்திருப்போம். இல்லையேல் பாரசீக சந்தையில் விலை பேசப்பட்டிருப் போம். நினைக்கவே நடுக்கமாக இருந்தது அவளுக்கு.

குருதேவ் தன்னைப் பார்க்கவென்றே அன்று மாலையில் கன்னோசி வந்தாராம். வந்த நேரத்தில் இப்படிப்பட்ட அநியாயமா என்று ஆதங்கப்பட்டுத்தான் இரவோடு இரவாக அரண்மனை வந்து தன்னைக் காப்பாற்றினாராம். தாய் தந்தையை பறிகொடுத்த இந்தப் பேதைக்கு இனி தந்தை தாமாக இருப்பதாக ஆறுதல் கொடுத்த பில்வண குருதேவ் உடனடியாக அல்லவா தன்னை மகளாக உலகுக்கு அறிமுகப்படுத்தினார். சக்தி வாய்ந்த சாளுக்கியரின் குரு பில்வணரின் மகள் என்று அறிவிக்கப்பட்டதும்தான் அவளுக்கு எப்படிப்பட்ட புகழும் மரியாதையும் இன்றளவில் கிடைக்கின்றது. எத்தனை பெரிய உத்தமர் பில்வண குருதேவ். அவருக்காக நாம் எதையும் செய்யவேண்டும். 'காத்யாயினி! உன் தலையை உன் கையாலே அறுத்து முன்னால் வை' என்றாலும் வைக்க வேண்டும்.

காத்யாயினி நினைத்து நினைத்து உருகிப்போனாள். கன்னோசி நகரில் இருந்து கல்யாணி நகரம் வந்து அங்கிருந்து காஞ்சிக்கு அழைத்து தங்க வைத்து தான் அறிந்த வாட்பயிற்சியை மேலும் மெருகூட்டி அரசியல் தந்திர வித்தைகளையும் கற்பித்த வளர்ப்புத் தந்தைக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்.

எத்தனை நல்ல இதயம் படைத்தவர் குருதேவ். ஆனால், உலகம் இன்னமும் குருதேவை சரியாக புரிந்து கொள்ள வில்லை. குருதேவைப் போன்றோர் ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறைதான் பிறப்பார்கள் என்று தன்னிடம் எத்தனை முறை சொல்லியிருக்கிறார். உண்மைதான். குருதேவிடம் உள்ள புத்தி வித்தியாசமாக வேலை செய்யும். இல்லையென்றால் சொந்த தந்தையாலும் அண்ணனாலும் விரட்டப்பட்ட விக்கிலனைக் காப்பாற்றி ஒரு மாபெரும் அரசுக்கு உரிமையுள்ளவனாக ஆக்கியிருப்பாரா? வளரவே முடியாத சாளுக்கிய அரசை இத்தனை பெரிய நாடாக உருவாக்கியிருப்பாரா? இதோ இன்று இந்த சோழதேசமே சாளுக்கியர் கையில் அல்லவா? அப்படியென்றால் நாளை அவரால் எத்தனை பெரிய அரசை உருவாக்க முடியுமோ, அவர் சொன்னது சரிதான். குருதேவ் போன்றோர் ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் புஷ்பம்தான்.



தன்னைப் பற்றியும் குருதேவ் அவளிடம் சொன்னது நினைவுக்கு வந்தது. 'காத்யாயினி! நீ சாதாரண மானிடப் பெண் இல்லை. உன்னால் எதையும் செய்ய முடியும். நீ ஆண்களின் உடல் பசிக்காக படைக்கப்படவில்லை என்பதை அடிக்கடி நினைத்து செயல்படு. உனக்காக மிகப்பெரிய கடமை காத்திருக்கிறது. அரசுக்கட்டில் ஏறாமல், மகுடம் சூடாமல், செங்கோல் ஏந்தாமல், ஏன் நாடுகளுக்கிடையே எல்லையையே எடுத்துவிட்டு இந்த உலகத்தையே ஆளப்பிறந்தவன் நான். எனக்குப் பிறந்த நீ ஆளப்போகிறாய். உன் கடமைகள் பெருகி வருகின்றன.'

'ஆமாம். குருதேவ் சொல்வது சரிதான். அவர் தெரிந்தே எதையும் சொல்வார். தெரிந்தே செய்வார். தெரிந்தேதான் இன்று யாகத்தைக் கூட நடத்த விரும்பினார். ஒருவேளை இந்த யாகம் நடக்காது என்பதும் அவருக்குத் தெரியுமோ என்னவோ, அவர் கடவுள். அவருக்கு எல்லாம் தெரியும்.'

காத்யாயினிக்கு இன்னொன்றும் நினைவுக்கு வந்தது. கடவுளை வெறுப்பவர் குருதேவ். 'கடவுள் என்று ஒருவன் இல்லை. மனிதருள் சக்தியும், செல்வமும் அதிகமுள்ளவனுக்கு மற்றவர்கள் அடிபணிவதுதான் இயற்கை' என்றெல்லாம் அடிக்கடி சொல்வாரே, அவர் சொல்வது சரிதானே. கடவுள் என்று ஒருவர் இருந்தால் அன்று பரதேசிக் கயவர்களிடம் கன்னோசி நகரம் நாசமாகி இருக்குமா... நல்லதே நினைத்த பெற்றோர் நசுக்கப்பட்டு கொல்லப்பட்டார்களே, என்ன பாவம் அவர்கள் செய்தார்கள். கடவுள் வந்து அந்த நல்லவர்களையும், அப்பாவி மக்களையும் காப்பாற்றவில்லையே. கடவுள் இருந்தால்தானே வருவார். தன்னைக் கூட காப்பாற்றியது குருதேவ்தானே. கடவுள் இல்லையே. குருதேவ் அல்லவா கடவுள் என்ற பட்டம் பெறுவதற்கு தகுதி ஆனவர்.'

'நம் தந்தைகூட எத்தனை வித யாகங்கள் செய்தார். இதோ இன்று வந்தார்களே, இவர்களைவிட புகழ் பெற்ற எத்தனையோ பிராம்மண பண்டிதர்கள் வேதம் ஓதி, ஓதிய வாயால் தந்தையையும், நாட்டையும் வாய்நிறைய வாழ்த்தினார்களே, கடைசியில் எப்படிப்பட்ட சாவு அவருக்குக் கிடைத்தது. அவர் செய்த யாகங்கள் அவரையும் மக்களையும் காக்கவில்லையே. யாகங்களாம்; தியாகங்களாம்; எல்லாமே பொய். இப்போதெல்லாம் இந்தத் தென்னாட்டில் யாகங்கள் மலிவாகிவிட்டன. மழை

வேண்டுமென்றால் யாகம். வந்த மழை நிற்க வேண்டுமென்றால் இன்னொரு யாகம். சோழர்கள் இத்தனை யாகங்கள் செய்தார்களே, அவர்களது மன்னனின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததா? முட்டாள்கள்.'

'இப்படிப்பட்ட யாகங்கள் நின்று போனதிலோ, தடைப்பட்டதிலோ எங்களுக்கு வருத்தமில்லை. ஆனால், எங்கள் குருதேவ் வார்த்தையை மீறி அந்த பிராம்மணன் செயல்பட்டது தவறு. வீரராஜேந்திரன் நாளையோ மறுநாளோ இறந்துவிட்டதாக எப்படியும் குருதேவ் அறிவிக்கவே செய்வார். இல்லாவிட்டால் இறந்துபோய்விட்ட உடலை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்யப் போகிறோம். ஆனால், இந்தப் பிராம்மணன் யார் முந்திரிக் கொட்டை போல முன்னே வந்து அறிவிக்க. அவன் சதிகாரன் போலத்தான் தெரிகிறது. அதனால்தான் அவனைக் கொன்றுவிட குருதேவ் உத்தரவிட்டுள்ளார். ஆனால், பிராம்மணவதம் படுபாதகம் என நம் நாடுகளில் சொல்வார்களே, இங்கெல்லாம் எப்படியோ?'

காத்யாயினிக்கு ஏனோ சிரிப்பு வந்தது. அந்தப் படுபாதகச் செயலை தான் செய்யப் போகிறோம் என்பதில் அவளுக்கு சற்று சுவாரசியம் கூட ஏற்பட்டுவிட்டது என்பது என்னவோ உண்மைதான்.

சேஷகிரிக் காடுகள் என்றழைக்கப்பட்ட வடவேங்கடக் காடுகள் அடர்ந்த வனப்பகுதியாக இல்லாதது கூட சற்று சௌகரியமாக இருந்தது. காலை நேரம் என்றாலும் குளிர்ந்த காலையாக விடிந்திருந்ததால் உதயம் செய்த சூரியன் சற்று உஷ்ணத்தைத் தந்ததுகூட அவளுக்கு சுகமாக இருந்தது. எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் சூழ்நிலை கூட சுகமாக இருந்தால் நல்லதுதானே என்று நினைத்த காத்யாயினி, கண்களுக்கு தெளிவாகத் தெரிந்த வனப்பகுதியை நன்றாக பார்த்துக் கொண்டே முன்னே நடந்தாள். மரங்கள் கூட நீண்டவையாகவும், விட்டு விட்டு வளர்ந்ததால் பிராம்மணன் தன் கண்களுக்கு தப்பமுடியாது என்றும் சொல்லிக் கொண்டாள்.

இரண்டு நாழிகை நேரம் நடந்தவள் பார்வைக்கு அந்த வனத்தின் பக்கப் பகுதியில் இன்னொரு சிறுவழி பிரிந்து செல்வதைப் பார்த்தாள். எதற்கும் அந்த வழியிலும் பார்த்து வருவது என்று முடிவு செய்தவள் சற்று தூரத்தில் முள்செடி கற்றைகளும், அங்கே மணல் மேடுகளும் இருப்பதைக்



கண்டாள். அந்த மணல் பாதைகளில் பாதப்படிவுகள் புதிதாக பதிந்ததுபோல காணப்பட்டதால் அவள் சந்தேகம் அதிகமாகி எச்சரிக்கையாய் குறுவாளைப் பிடித்தபடியே ஆள் உயரமுள்ள முள்செடிக் கற்றைகளுக்குள் நுழைந்தாள். அதன் மத்தியில் அவள் ஊகித்தபடி மறைவிடம் இருந்தது. அது யானைப் பள்ளமாக இருக்கவே அந்த பிராம்மணன் ஒளிந்திருக்க வாய்ப்புள்ளது என்பதனால் மெல்ல அடியெடுத்து நடந்தாள். சட்டென எட்டிப்பார்த்தால் 'ஒருவேளை பிராம்மணன் அங்கே இருந்து தன்னையும் பார்த்துவிட்டு தன்மேல் பாய்ந்து விட்டால்' 'ஹங்.....பிராம்மணனாவது பாய்வதாவது... இவர்கள் மந்திரம் ஓதமட்டுமே செய்வார்கள். கத்தியைக் காண்பித்தாலே போதும். காலில் விழுந்து விடுவார்கள். இருந்தாலும் எதற்கும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.'

காத்யாயினி அந்த பள்ளம் வருவதற்கு முன்பாகவே நின்றவள் சுற்றுமுற்றும் நோட்டம் விட்டாள். அந்த வட்டப்பகுதியின் ஒரு பக்கத்தில் மணல்கள் அள்ளித் தெறித்து மேடாக்கி இருந்தன. சட்டென ஒரு காரியம் செய்தாள். நடந்து போய் பார்த்து அவனைக் கொல்வதைவிட படுத்துக் கொண்டே முன்னே செல்வது. பிறகு எட்டிப் பார்த்து அவன் இருந்தால் கத்தியை வீசிவிடுவது என்று முடிவு செய்து படுத்துக் கொண்டே மண்மேடு அருகில் ஊர்ந்து சென்றாள். அவள் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. அந்தப் பாழாய்ப்போன பிராம்மணன் அந்த யானைப் பள்ளத்தில் தன் பார்வைக்குக் கீழே சரியாக உட்கார்ந்து பழம் ஒன்றை தின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

இப்போது மட்டும் தன் கத்தியை வீசினால், மட்டம் போட்டு உட்கார்ந்தவன் மண்டையில்தான் பட்டு காயம் விளைவிக்குமே தவிர வேறு எந்த விளைவும் இல்லை என்பதையும் தான் நினைத்த பிராம்மணவதம் அரைகுறையாக முடியும் என்பதை உணர்ந்தவள் அவன் மார்புக்கோ, முதுகுக்கோ குறி கிடைக்கும் வரை காத்திருப்பதுதான் உத்தமம் என்பதையும் உணர்ந்ததால் அவள் காத்திருந்தாள்.

பிராம்மணன் அவளை அதிகம் சோதிக்க விரும்ப வில்லை போலும். பழத்தை தின்று முடித்து சற்றுநேரம் ஆசனத்தில் அமர்ந்து பிறகு இரு கைகளையும் ஆகாயத்தில்

உயர்த்தி சோம்பல் முறித்தான். பிறகு தன்தோள் மீது இருந்த வஸ்திரத்தை உதறி அந்தத் தரையில் விரித்தான். அப்படியே மல்லாக்கப் படுத்து கண்களையும் மூடிக் கொண்டு உறங்கப் போனான்.

அவகாசம் அருமையாக அமைய, முப்புரி நூல் அணிந்த மார்பு அவள் கூரிய குறுவாளுக்கு குறியாக இருக்க, காத்யாயினி தான் செய்யப்போகும் பிராம்மண வதையில் மிகுந்த உற்சாகமாகி பலங்கொண்ட மட்டும் கையை மேலே உயர்த்தினாள்.

மூச்சை இழுத்துப் பிடித்து மிகப் பலமாக மேலே இழுக்கப்பட்ட அந்தக் குறுவாள் மட்டும் பாய்ந்திருந்தால் காத்யாயினியால் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட பிராம்மணவதை சிறப்பாகவே நடந்திருக்கும். கொடுத்த உத்தரவினை சிறப்பாக நிறைவேற்றியதற்கு குருதேவ் கையினால் பாராட்டும் கிடைத்திருக்கும். ஆனால், மேலே தூக்கப்பட்ட காத்யாயினியின் மணிக்கட்டினை மற்றொரு கையொன்று வலுக்கட்டாயமாக திருப்பியது. திருப்பியதோடு மட்டுமல்லாமல் படுத்துக் கிடந்த அந்தக் கன்னியையும் ஒரு திருப்பு திருப்பி தன் மேல் போட்டுக் கொண்டது.

எரியும் நெருப்பில் விழுந்து துடிப்பவளைப் போலானாள் காத்யாயினி. துளியும் எதிர்பாராமல் தன் கையை மடக்கி தன்னையும் அள்ளித் தன் மேல்போட்டுக் கொண்ட உருவத்தைப் பார்த்ததும் சற்று திகைத்துத்தான் போனாள். ஆனால், அதைவிட திகைப்பு அவளுக்கு அடுத்து நடந்த நிகழ்ச்சியில் கிடைத்தது. அந்த திகைப்பில் தான் எதற்காக, எந்தக் காரியத்தை உத்தேசித்து இந்தக் காட்டுக்குள் நுழைந்தோம் என்பதையும் மறந்தே போனாள் அந்த அழகான சன்னியாஸினிப் பெண்.

## 4

## கொள்ளை கொள்ளும் கண்கள்

"ஒரு நாள் முழுவதும் முடிவதற்குள் எத்தனையெத்தனை விசித்திரங்கள். எத்தனை மாற்றங்கள்" என்று நினைத்துப் பார்த்ததில் காளிங்கனுக்கு வியப்புதான் மிஞ்சியது.



முதல் நாள் அதிகாலை முடிகொண்ட சோழபுரத்திலிருந்து உத்தரவு ஓலையுடன் புறப்பட்டபோது தன்னுடைய வேலை ஒரு தூதுவன் வேலை போன்றதுதான். ஓலையை உரியவரிடம் சேர்ப்பிப்பது. உள்ள நிலையை உணர்த்துவது. உதவி கேட்டால் தயங்காமல் உதவுவது - ஒரு தூதுவன் செயலைப் போன்றதுதானே என்றும் நினைத்துக் கொண்டுதான் புறப்பட்டான்.

ஆனால், இதுவரை நடந்தது விசித்திரமாக பட்டது காளிங்கனுக்கு. இன்னும் என்னென்ன விசித்திரங்கள் காத்திருக்கின்றதோ என்ற வியப்பும் ஏற்பட்டது. முதல்நாள் அதிகாலையிலேயே புறப்பட்டவன் சற்று வேகமாகவே குதிரையை ஓடவிட்டு மாலை மறையுமுன்னேயே காஞ்சி நகர் எல்லையை அடைந்துவிட்டான். காஞ்சியை நெருங்கும்போது அவன் கண்களுக்கு முதல் விசித்திரமாக அந்த நிகழ்ச்சி தென்பட்டது. காஞ்சியின் வெளிப்புறத்தே மக்கள் வட்டவடிவில் அமர்ந்து கொள்ள நடுவே வீதி நாடகம் ஒன்றினை வெகு அருமையாக யாரோ நடத்திக் கொண்டிருந்தனர். குதிரையில் அமர்ந்து கொண்டே ஒரு மரநிழலில் இருக்கச் செய்து அங்கிருந்து அந்த நாடகத்தை ஆவலுடன் பார்த்தான். நாடகம் சாளுக்கிய விக்கிலனை விமர்சித்தும், சோழ அரசனான அதிராசேந்திரனை கேலி செய்வது போலவும் இருந்ததால் சற்று விருப்பப்பட்டே அந்த நாடகத்தை ரசித்தான். விக்கிலன் வேஷம் போட்டவன் சாட்டையால் விளாசுவது போலவும், அதிராசேந்திரன் வேஷம் போட்டவன் கைகட்டி வாய் பொத்தி தலையை ஆட்டி ஆட்டி ஆடுவதும் பாடுவதும் சூழ்ந்திருந்த மக்களையும் 'ஆஹா, ஓஹோ' போடச் செய்தது.

நாடகம் விறுவிறுப்பாகவே போய்க் கொண்டிருந்த சமயத்தில்தான் யாரோ வீரர்கள் கூட்டம் படுவேகமாக கூட்டத்தைக் கலைத்து கழிகொண்டு சுற்றியிருந்தோரை தாக்கவே நாடகம் தடைபட்டு நின்று போனது. நாடகம் போட்டவர்களும் மக்களும் கலையவே முற்பட்டனர். காவலர் கண்களில் தென்படாமல் தன் வழியே போவதுதான் உத்தமம் என்று நினைத்த காளிங்கன் குதிரையைத் தட்டி அந்த முன்னிரவு வேளையில் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

சற்று தூரம் நிதானமாக சென்றவனை பின்னால் ஒரு குரல் நிறுத்தச் சொல்வதையும், அது பழகிய குரலாகவே இருந்ததால் குதிரையை நிறுத்தினான். அருகே வந்ததும்

பார்த்தால்... ஆசிரியர். காளிங்கனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. உடனே கீழே குதிக்க முன்வந்தான். அவனைத் தடுத்த அந்த ஆசிரியர் அந்தக் குதிரையின் பின்னால் அவரும் ஏறி குதிரையையும் திருப்பி திருவேங்கடகூடப் பாதையில் செல்லவிட்டார்.

''ஆசிரியரே, தாங்கள்..'' என்று ஏதோ சொல்ல வந்தவனை பேசவும் விடவில்லை அவர். திருவேங்கடபுர ராஜபாதை வந்ததும்தான் பேச அனுமதித்தார்.

''காளிங்கா ஏதும் ஆச்சரியப்படாதே.. நான் நானேதான்''

''ஆசிரியரே, தாங்கள் வேங்கியில் அபயனுடன் இருப்பதாக அல்லவா அத்தையார் சொன்னார்கள். காஞ்சிக்கு எப்போது வந்தீர்கள். சரி, ஏன் பாதையை திருப்பி விட்டீர்கள்? திருவேங்கடபுரம் எதற்காக செல்ல வேண்டும்?''

ஆசிரியர் என்றழைக்கப்பட்ட அந்தப் புதியவர் முதலில் பதில் ஏதும் பேசவில்லை. பிறகு நிதானமாக வந்தது, அவர் குரல்.

''காளிங்கா! அம்மங்கை தேவியார் ஓலை கொடுத்து அனுப்பி உள்ளார்களா?''

''ஆமாம். அபயனை இன்னும் இரு திங்களுக்கு காஞ்சிப் பக்கமே வரவேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். மேலும், உங்களுக்கும் செய்தி உள்ளது. வேங்கிக்கு அபயனை முடிசூட்டியதில் பலன் ஏதும் இல்லை. இரண்டு திங்களுக்குப் பிறகு அபயனையும் அழைத்துக் கொண்டு நிரந்தரமாகவே பழையாறு வந்துவிடுமாறு சொல்லச் சொன்னார்கள். என் உதவி தேவைப்பட்டால் என்னையும் உங்களுடனே இருக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.''

''காளிங்கா! மனிதன் நினைக்கலாம். திட்டமிடலாம். ஆனால், செயல்படுத்துவதை மட்டும் ஆண்டவன் தனக்கென வைத்துக் கொண்டான்''

காளிங்கனுக்கு வியப்பு அதிகம் ஏற்பட்டது.

''என்ன சொல்கிறீர்கள் ஆசிரியரே?''

''காளிங்கா! உன் அத்தையார் நினைப்பதை விட வெகு வேகமாக செயல்கள் நடைபெறுகின்றன. உன் ஓலைக்கோ, உன் செய்திக்கோ தற்சமயம் வேலையில்லை. ஏனெனில்



நாளையே அபயன் காஞ்சிக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அபயன் மட்டுமல்ல, சோழ மகாராணியான அம்மங்கையும் நாளை காஞ்சி வரவேண்டியவரே..''

சொன்ன ஆசிரியரை விந்தை மேலும் எழ திரும்பிப் பார்த்தான். ஆசிரியர் தான் கண்ட கேட்ட விவரங்களை குதிரையில் போய்க் கொண்டேதான் சொன்னார். ஆனால், சில ஆண்டுகளே ஆண்டாலும் வெகு சிறப்பாக ஆண்ட சிறிய தந்தை வீரராஜேந்திரர் இறந்து இரண்டு நாட்களாகி விட்டது என்ற செய்தியை சொன்னதும் சட்டென குதிரையை நிறுத்தியவன் தான் வந்த பாதையின் ஓரத்திலேயே அதிர்ச்சி தாளாமல் அமர்ந்து விட்டான். சக்கரவர்த்தியார் நோய்வாய்ப்பட்டுத் துன்பத்தில் இருக்கிறார் என்றாலும் அவர் இறந்துபோன செய்தி இப்படி வரவேண்டுமா?

ஆசிரியரும் குதிரையில் இருந்து இறங்கி துயரமாய் உட்கார்ந்தவன் அருகில் அமர்ந்தார். இதுதான் சமயம் என்று குதிரையும் நினைத்ததோ என்னவோ ராஜபாதையினை விட்டு இறங்கி வயல்வெளியில் உட்கார்ந்து ஓய்வு எடுத்தது.

''ஆசிரியரே! எவ்வளவு பெரிய துயரச் செய்தி? அத்தையார் தாங்க மாட்டாரே. முன்னமே தெரிந்தால் நானே அவர்களை அழைத்து வந்திருப்பேனே, யாருக்குமே ஏன் தெரிவிக்கவில்லை?'

''இது சாளுக்கியரின் நாடகம் காளிங்கா! எல்லாம் அந்த பில்வணன் ஏற்பாடுதான். உனக்கு ஒரு செய்தி தெரியுமா? நாளை காலை திருவேங்கடகூடத்தில் பில்வணனும் சாளுக்கியனும் சக்கரவர்த்தியார் நலம் பெற்று எழுவதற் காக மாபெரும் யாகம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.''

''ஆமாம்! வரும் வழியில் தண்டோரா ஆங்காங்கே நானும் கேட்டேன். ஆனால், சக்கரவர்த்தி அவர்களின் சவத்தின் மீது எதற்காக இப்படி ஒரு நாடகம் நடத்த வேண்டும்?''

''காளிங்கா! இதுவரை யாருக்கும் சக்கரவர்த்தியார் மறைந்த செய்தி தெரியாது. நாளைக் காலை திருவேங்கட கூடத்தில் அரசகுலப் பெருமக்களும், வேதபண்டிதர்களும் கலந்து கொள்ளும் மாபெரும் யாகம். மதியம் ஊரெங்கும் மக்களுக்கு மன்னர் நலம் வேண்டி அன்னதானங்கள். அடுத்தநாள் காலை காஞ்சியில் ஏதோ அப்போதுதான்

தவறிவிட்டார் என்பதுபோல பெருங்குரல் கொடுத்து மாப்பிள்ளை அழுவான். மைத்துனன் மயக்கத்தால் விழுவான். மக்களும் நம்புவர். ஆஹா! இவ்வளவு நல்ல மாப்பிள்ளையும், மகனும் இருந்தும் போய்விட்டானே மகராசன்... அவர்கள் திட்டம் எப்படி?

"ஆசிரியரே! இந்தச் செய்தி தங்களுக்கு எப்போது கிடைத்தது? தாங்கள் எப்போது காஞ்சி வந்தீர்கள்?"

"இன்று காலைதான் வந்தேன். இப்போது பார்த்தாயே ஒரு நாடகக்குழு. இதைப் போன்ற வீதி நாடகக் குழுக்களை நாடெங்கும் அனுப்பி மக்களை நேரடியாக சந்தித்து சாளுக்கியன் திட்டங்களை அம்பலப்படுத்த வேண்டும் என்று நானும் அபயனும் தீர்மானித்தோம். அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்யும்போதுதான் கூத்தைப் பார்க்க அரண்மனை வைத்தியன் அங்கு இருந்ததைப் பார்த்தேன். அதேசமயம் நீயும் குதிரையில் அமர்ந்தே கூத்தை பார்த்ததையும் கவனித்தேன். நீ வந்ததும்கூட சிவன் செயல்தான் என்று நினைத்து முதலில் அரண்மனை வைத்தியனை தனியே அழைத்து அரசர் உடல்நலம் விசாரித்தேன். அவனால் என்னிடம் பொய் கூற முடியவில்லை. அரசரின் நாடி அடங்கி இரண்டு நாட்கள் முடிந்து விட்டதாகவும், அவர் உடலுக்கு பச்சிலைப் பத்தியம் போடப்பட்டுள்ளது என்பதையும் இதை வெளியே தெரிவித்தால் தலை போய்விடும் என்பதாக விக்கிலன் எச்சரித்ததாகவும் அவன் ஒப்புக் கொண்டான். நாங்கள் அங்கே பேசிக்கொண்டு இருந்தோம். சில காவலர்கள் அங்கு நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். நீயும் நகர்ந்துவிட்டாய். உன்னைப் பிடிக்க வேக வேகமாய் ஓடி வந்தேன்.

துயரமாய் பார்த்தான் காளிங்கன். சக்கரவர்த்தியார் மரணம் சோழநாட்டை பாதிப்பதை விட சாளுக்கியர்களின் நாடகம் அதிகமாகவே பாதிக்கிறது.

"இனி என்ன செய்யவேண்டும் ஆசிரியரே?"

"எல்லாம் முடிந்து விட்டதுதான். ஆனாலும், நாம் விடக்கூடாது. முடிந்தவரையில் முட்டுக்கட்டை போட வேண்டும். வீரராஜேந்திரன் மரணத்தை முறைப்படி அறிவிக்கவேண்டும். ஆனால், சாதாரணமாக அறிவித்தால் மன்னனின் மரணமும் சாதாரணமாக மாறிவிடும். நான்கு



நாட்கள் அழுவார்கள். பிறகு பில்வணன் வழக்கப்படி தன் லீலைகளைத் தொடர்வான். நாம் அனுமதிக்கக்கூடாது காளிங்கா. சாளுக்கியருக்கு தக்க பாடத்தைக் கற்பிக்கவேண்டும். தமிழர் எல்லோரும் அதிராஜேந்திரனைப்போல தலையாட்டிப் பொம்மைகள் இல்லை என்பதை பில்வணன் உணரவேண்டும். எந்த விஷயத்தை வைத்து இவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்களோ அந்த விஷயத்தை வைத்தே அவர்கள் முகத்திரையினை கிழிக்க வேண்டும். அதுவும் யாகத்துக்கு வந்துள்ள வைதீகர்களின் முன்பே உண்மைகளை உரைக்கும்போது அது ஊரெங்கும் வெகுவேகமாகப் பரவும். அதற்காகத்தான் திருவேங்கடகூடம் செல்கிறோம்."

முதல்நாள் இரவு நடந்த நிகழ்ச்சிகளை மனதில் அசைபோட்ட காளிங்கன் ஆசிரியர் தான் நினைத்தபடி செய்வதில் வல்லவர் என்பதால் அவரை மனத்துள் போற்றிக் கொண்டிருந்தான். இப்போது இந்த யாக மண்டபத்தில் இருந்து ஓடிய வைதீகப் பெருமக்களின் வாய் ஓயாமல் பில்வணனை திட்டிக் கொண்டு இருக்கும். ஊரெங்கும் இவர்களே இந்தச் செய்திகளை பரப்புவார்கள். ஆனால், இதற்கெல்லாம் பில்வணன் கலங்கமாட்டான். மேலும் என்னென்ன கொடுமைகள் தொடரப்போகிறதோ..

மனதில் பல்வேறு எண்ணங்கள் அலைக்கழிக்க ஆசிரியர் ஏற்கனவே சந்திக்கச் சொல்லியிருந்த யானைப் பள்ளத்திற்கு நடந்து போனான். தான் அணிந்திருந்த உடை சாளுக்கிய வீரன் உடையாதலால் அவனை யாரும் அதிகம் கண்டு கொள்ளவில்லை என்பது என்னவோ உண்மைதான்.

குறுக்கு வழியாக யானைப்பள்ளம் அருகே சென்றவன் அங்கே தனக்கு முன்னர் அந்த சன்னியாஸினிப் பெண்ணைக் கண்டதும் சற்று துணுக்குற்று அசையாமல் நின்றுவிட்டான். அழகையெல்லாம் ஒருங்கே சுமந்து இனிக்கப் பேசி தன் உள்ளத்தை அலைக்கழித்த அந்த சாதுப்பெண் கையில் குறுவாளை கெட்டியாகப் பிடித்து பதுங்கி முன்னே செல்வதையும் பார்த்தவன் அந்தப் பெண்ணுக்கு ஒரு ஆண்மகனைக் கொலை செய்யும் துணிச்சலோ என்பதால் வியப்பும் ஏற்பட்டது காளிங்கனுக்கு. ஆனால், அவள் துணிச்சலைப் பாராட்டிக் கொண்டு நின்றிருந்தால் தன் ஆசிரியரின் பிராணன் போவதற்குத் தானும் ஒரு காரணம் ஆவோம் என்ற எண்ணத்தின் அதிர்ச்சியினால் அவளைப்

போலவே மணலில் படுத்து மெதுவாக முன்னேறி சரியான சமயத்தில் அவள் கையைப் பற்றியவன் அவள் திமிறியதால் வேறு வழியில்லாது அவளையும் புரட்டி தன்மேல் போட்டுக் கொண்டான். ஆனால், அவள் கையில் கூர்கத்தியும், கண்களில் ரத்த சிவப்பையும் கொண்டு கொலை வெறியாய் பார்த்தவள் அவனை விடுவித்துக் கொள்ள முரட்டுத்தனமாக வளைந்து திமிறினாள். அவள் ஒரு பெண் அதுவும் அழகிய இளம்பெண் என்ற ஒரே காரணத்துக்காக அவன் கை அவள் உடல்மீது படாமல் கைகளை மட்டும் பிடித்து தன்னோடு எழுப்பி நிற்க வைத்தது.

ஆனாலும், அவள் திமிறிக் கொண்டுதான் இருந்தாள். இவள் பெண்ணாயிற்றே என்று பார்த்துக் கொண்டு இப்படியே விட்டு வைத்தால் முரட்டுத்தனமாக திமிறும் இவள் கத்தியால் தன்னைக் கீறிவிட வாய்ப்பு உண்டு என்பதால் சட்டென அவளை அப்படியே பின்னே தள்ளி தன் கைகளையும் விடுவித்துக் கொண்டான். விடுவித்த அடுத்த கணம் விபரீதமாகப் போயிற்று.

பின்னால் தள்ளினால் விழவேண்டியவள் அப்படி விழாமல் தேர்ந்த வாள்வீரன் போல ஒரு குதி குதித்துவிட்டு தன் கையில் இருந்த கத்தியால் காளிங்கன் நெஞ்சுக்கு நேராக பாய்ச்ச முற்பட்டாள். ஆனால், இதை எதிர்பார்த் தானோ என்னவோ சட்டென அவள் கைவீச்சுக்குத் தப்பி சற்று குனிந்தவன் அவள் ஊகிக்குமுன்யே மறுபடியும் அவள் மணிக்கட்டினைப் பிடித்து ஏதோ மாயம் செய்ய, அவளறியாமல் அவள் பிடித்திருந்த கத்தி கீழே விழ, அந்தக் கத்தியை அநாயசமாக எடுத்து தூர எறிந்தான். அவளோ ஆச்சரியத்தின் உச்சகட்டத்திற்கே போய்விட்டாள்.

கையில் வலி ஏதும் தெரியாமல், ஏன் உணர்ச்சியே தெரியாமல் தன் உள்ளங்கையை விரிக்கச் செய்து அங்கிருந்து தானாகவே கத்தியை நழுவச் செய்வது எப்படி அவனுக்குச் சாத்தியமானது. வாள் வித்தையில் வல்லவளான அவளுக்கு இந்த மாயவித்தை வெகு விந்தையாகத் தெரிந்ததில் ஆச்சரியமில்லைதான். அவள் எதற்காக அங்கு வந்தாளோ அந்த வேலையையும் மறந்து வடமொழியில் கேட்டாள்,

''எப்படி உணர்ச்சியே தெரியாமல் என் கையில் இருந்து எளிதாக கத்தியை விழச் செய்தாய்? மந்திரமா? மர்மமா?



அதை மட்டும் சொல்லிவிடு. உன்னை உயிரோடு விட்டு விடுகிறேன்!''

அவன் அதற்கு பதில் சொல்வதற்குள் ஆசிரியர் பள்ளத்தில் இருந்து மேலே ஏறிவந்தார். அதே வடமொழியில் பதிலும் தந்தார்.

''அந்த வித்தையை கற்றுக் கொடுத்தவன் அடியேன்தான். உனக்கும் தெரியவேண்டுமா? நல்லதுதான். தற்காப்பு வித்தைகளை பெண்கள்தான் முதலில் அறியவேண்டும்!''

பதில் தந்த உருவத்தை வெடுக்கென திரும்பிப் பார்த்தாள். தன்னால் கொல்லப்பட வேண்டிய பிராம்மணன் சிரித்துக் கொண்டே பதில் சொல்லியதில் அந்தப் பெண்ணின் வெண்ணிலவு முகத்தில் விந்தை மறைந்து கோபம் குடிகொண்டது.

''நான் உன்னிடம் ஏதும் கேட்கவில்லை. இவனிடம்தான் கேட்டேன்.'' கோபமுகம் ஆசிரியரை நோக்க அவள் மெல்லிய விரல் காளிங்கனைச் சுட்டிக்காட்டியது. காளிங்கன் வடமொழியைப் புரிந்தவன்தான். அவள் மரியாதைக் குறைவாக ஆசிரியரைப் பேசியதை நிதானமாகவே கண்டித்தான்.

''என் ஆசிரியரை மரியாதைக் குறைவாகப் பேசியவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. பெண்ணே.. உன் பெயர் காத்யாயினிதானே... உன் பெயர் அழகாக இருக்கும் அளவுக்கு உன் உள்ளமும் அழகாக இருக்கவேண்டும்... நீ பில்வணனின் புத்திரிதானே, அவன் புத்திதான் உனக்கும் இருக்கும்.''

தமிழில் பேசிய காளிங்கனுக்கு தமிழிலேயே பதில் அளித்தாள். ஆனால் அவள் கோபம் சற்றும் குறையவில்லை.

''ஏய்! என் தந்தையைப் பற்றிப் பேச நீ யார்? உங்கள் இருவருக்கும் ஏதோ குருட்டுத் தைரியமும் கொஞ்சம் மர்மக் கலையும் தெரிந்திருக்கிறது. மரியாதையாக என்னிடம் நீங்கள் சரணடைந்து விடுங்கள். இல்லையேல் என்னைத் தேடிவரும் எங்கள் வீரர்கள் உங்கள் இருவரையும் வெட்டி இந்த யானைப் பள்ளத்தில் போட்டு விடுவார்கள். என்னுடன் வந்து விட்டீர்களானால் உங்களுக்குத் தண்டனை

கிடைக்காமல் வழிசெய்வேன். ஆனால் அதற்கும் ஒரு நிபந்தனை உண்டு!''

குயிலையும் பழிக்கும் குரல் தமிழ்த் தேனாய் இனித்தது. இவள் எந்த மொழி பேசினாலும் இனிக்கிறது. துறவி உடை அணிந்து சித்திரங்களில் கண்ட சாகுந்தலை போல இளமை துடிக்க நின்ற இந்தக் கன்னிகை, கத்தியை இழந்து நிராதரவாய் தங்களிடம் சிக்கிய இந்த இனிய மான் எத்தனை தைரியமாக மிரட்டுகிறாள்!

காளிங்கன் வியப்பினை அடக்கிக் கொண்டு நிதானமாகவே கேட்டான், ''என்ன நிபந்தனை?''

''என் கத்தி என் கையில் இருந்து எப்படிப் பறிக்கப்பட்டது? அந்தக் கண்கட்டு வித்தையை எனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். கற்றுக் கொண்டதற்கு பிரதிபலனாக உங்கள் இருவரையும் மன்னித்துவிட குருதேவுக்கு நானே சொல்கிறேன். என் பேச்சை என் தந்தை ஒருபோதும் தட்டியதில்லை!''

ஆசிரியரிடம் புன்னகை பதிலாகப் பிறந்தது. காளிங்கனும் ஏளனமாகவே அவளைப் பார்த்துக் கொண்டே ஆசிரியரிடம் பேசினான்,

''ஆசிரியரே! நம்மீது எவ்வளவு கருணை இந்தப் பெண்ணுக்கு! இவள் கேட்டதைக் கொடுத்தால்தான் நாம் தப்பிக்க முடியும். என்ன செய்யலாம்?''

ஏளனமாகப் பேசியவனை நன்றாக ஏறிட்டுப் பார்த்தாள் காத்யாயினி. அந்த அகலக் கண்களில் இருந்து கவர்ச்சி எனும் சக்தி நேரடியாக பாய்ந்து தன்னைத் தாக்குவதை உணர்ந்தவன் சற்று தடுமாறினான். பழங்கால இலக்கியங்கள் பெண்களின் கண்களை வேல் என்கின்றன. நம் திருவாசகமோ 'அந்தக் கண்கள் கொள்ளையடிக்கும் கண்கள். எச்சரிக்கையாக இரு' என்கிறது. தலையை சற்று அசைத்துக் கொண்டான் காளிங்கன். துறவி உடை பூண்டு வந்த மாயமோகினிதான் இவள்.

அதே சமயம் திடீரென தன் பின்னே பார்த்தாள் அவள். தூரத்தே குதிரைகள் காலடி ஓசை அவர்கள் செவிகளுக்கு துல்லியமாகக் கேட்டது. அடுத்து இவளை என்ன செய்யலாம் என நினைப்பதற்குள் சடசடவென கூட்டமாக குதிரையில் வந்த சாளுக்கிய வீரர்கள் மூவரையும் வளைத்துக் கொண்டனர். ஒரு குதிரையிலிருந்து கட்டுப்போட்ட கையுடனும் இன்னொரு கையில் வாளுடனும் ஒரு சாளுக்கிய வீரன் கோபமாக இவர்களை நெருங்கினான்.



## 5

## வெட்கமில்லாதவன்

அன்று அதிகாலையில் படக்கென சப்தத்துடன் தன் கையை ஒடித்துக் கொண்டவன்தான் அவன் என்பதை கண்டதும் காளிங்கன் முகத்தில் புன்னகை படர்ந்தது. ஆனால் வந்த வீரனோ கோபாவேசத்தில் இருந்தான்.

''இதோ இவனேதான். என்னை காயப்படுத்தி தப்பி ஓடிவிடலாம் என்று பார்த்தாயோ, முடியாது தம்பி! இப்போது வசமாக சிக்கிக் கொண்டாய்.''

காத்யாயினிக்கும் ஏதோ புரிந்தது போலும்.

''அப்படியானால் யாகசாலை பந்தலையும் சாய்த்தது இவன்தான் இல்லையா சர்வ தேவா!''

''ஆம் தேவி! தாங்கள் இந்தப் பக்கம் வந்துவிடுங்கள். இவர்கள் இருவரையும் இனி நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!''

சாளுக்கிய சர்வதேவாவை கை அசைத்து நிறுத்தினாள்.

''சர்வ தேவா! இவன் செய்த குற்றங்கள் மிகப் பெரியது. பந்தற்காலை பிடுங்கி யாகசாலைக்குள் குழப்பம் செய்து இருக்கிறான். அதற்கு முன்னால் உன்னையும் காயப்படுத்தி இருக்கிறான்!''

சொன்னவள் காளிங்கனை வேண்டுமென்றே சுற்றி வந்தாள். பிறகு சட்டெனெ நகர்ந்து கொண்டாள்.

''சரி சர்வதேவா! உன்னைக் காயப்படுத்தியவனைக் கொல்வதற்கு உனக்கு பூரண உரிமை உள்ளது. உன் வலது கை நன்றாகத்தானே உள்ளது. உன் வாளால் இவனைக் கொன்றுவிடு. இந்தப் பிராம்மணன் விஷயத்தைப் பிறகு கவனிப்போம்!''

கொடூரமான ஆணைதான் என்றாலும் அவள் கண்களில் ஏதோ குறும்பு ஒளிந்திருந்தது போல இருந்தது காளிங்கனுக்கு. உத்தரவு கிடைத்ததும் சர்வதேவா என்னவோ ஒரு கை கட்டுப் போட்டிருந்தாலும் வலது கையால் வாள் கொண்டு காளிங்கன்மீது பாயத்தான் செய்தான். ஆனால் அடுத்து நடப்பதை காத்யாயினி எதிர்பார்த்தாள் போலும்.

தன்மீது பாய்ந்த வாளின் குறிக்கு குனிந்தவன் சட்டென வாள்பிடித்த மணிக்கட்டைப் பற்றினான். சர்வதேவாவின் கையிலிருந்து வாள் அவன் அறியாமலேயே அவன் உள்ளங்கை விரித்துக் கொண்டு கீழே விழுந்தது. கீழே விழுந்த வாளை காத்யாயினி தன் கையில் எடுத்துக் கொண்டு தன் அழகிய அகல விழிகளை மேலும் அகலமாக்கிப் பேசினாள்.

''ஆங். இந்த வித்தைதான் வீரனே! இதை மட்டும் எனக்கு சொல்லிக் கொடுத்துவிடு. உன்னையும் பிராம்மணனையும் விடுவிப்பது என் பொறுப்பு.''

ஆச்சரியமாய் நின்ற சர்வதேவாவை விலகி நிற்கச் சொன்னவள் கையில் வாளை அநாயசமாய் சுழற்றியபடி காளிங்கனைப் பார்த்தாள்.

''வீரனே! எனக்கு வாள்வித்தையில் சகலமும் தெரியும் என்று கர்வம் உண்டு. ஆனால், எதிரியின் வாளினை சண்டை போடாமலே, உணர்ச்சி தெரியாமலே கீழே விழச் செய்கிறாய். இது பெரிய வித்தைதான். ஆனால் வீரனே! உன்னால் ஒரு வாளையோ இரு வாளையோ சமாளிக்க முடியும். ஆனால் இந்தக் கூட்டத்தை நிராயுதபாணியாக சமாளிக்க முடியாது. உனக்கு ஒரே ஒரு அவகாசம் தருகிறேன். எனக்கு உன் வித்தையைக் கற்றுக் கொடுத்து விடு. உங்களை விடுதலை செய்வது என் பொறுப்பு.''

இதுவரை ஏதும் பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர் காளிங்கனைப் பார்த்து ஏதோ கண்ணசைத்தார். அத்துடன் மட்டுமல்லாமல் காத்யாயினி எதிர்பாராத சமயத்தில் அவள் வாளைப் பிடுங்கிக் கொண்டார். அதே சமயத்தில் காளிங்கனும் தன் எதிரில் இருந்தவளை பெண் என்றும் பாராமல் அவள் வாள் பறிபோகும் சமயத்திலேயே அவள் தோள்களைப் பற்றினான். பிறகு ஆசிரியர் கையில் இருந்து வாளையும் வாங்கிக் கொண்டு காத்யாயினியைத் திருப்பிப் பிடித்து



அவள் கழுத்தை அறுப்பது போல வாளை வைத்துக் கொண்டான்.

ஒரு சில கணங்களில் நடந்து விட்டாலும் சுதாரித்துக் கொண்டு இவர்களை நோக்கி வந்த சாளுக்கிய வீரர்களை சர்வதேவா தடுத்து நிறுத்தினான். நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் காளிங்கனைப் பார்த்து கத்தினான்.

''சண்டாளர்களா! என்ன காரியம் செய்து விட்டீர்கள்? எங்கள் குரு புத்ரியைத் தொட்டது தெரிந்தால் உங்கள் தலைகள் வாங்கப்படும். எங்கள் தேவியைத் தொட்டு அபசாரம் செய்து விட்டீர்கள். மரியாதையாக அவர்களை விட்டு விடு. இல்லையேல்...''

''உன்னால் ஏதும் செய்ய முடியாது சர்வதேவா! உன் குருதேவின் செல்லமகளை தொட்டதற்கே இப்படிக் கத்துகிறாயே, இப்போது நாங்கள் அவளை கத்தி முனையில் கடத்தப் போகிறோம். மீறி முன்னே வந்தால் உங்கள் குரு புத்ரியை பெண்ணென்றும் பார்க்காமல் கொன்று விடுவோம். பிறகு காளிங்கனின் வாள் உங்களனைவரையும் பதம் பார்க்கும். என்ன பார்க்கிறாய். ம்! உன் வீரர்களின் வாட்களை கீழே போட சொல்லப்பா..''

ஏளனமாகப் பேசிய ஆசிரியரை எரிக்கும் கோபத்தோடு பார்த்தாள். பிறகு சர்வதேவாவைப் பார்த்து கத்தினாள்.

''முட்டாள்! என்னை ஏன் பார்க்கிறாய்? என் உயிர் போனாலும் போகட்டும். முதலில் இவர்களை சிறை செய்து குருதேவிடம் ஒப்படைத்து விடு!''

காத்யாயினி திமிறிக் கொண்டே பேசியது காளிங்கனை சற்று சங்கடத்தில் ஆழ்த்தியதுதான். ஏற்கனவே அவளை ஏறத்தாழ கட்டி அணைத்து கூந்தல் வாசமும் அவள் நெருக்கமும் அந்த இளைஞனை எங்கோ அழைத்துச் செல்ல விரும்பின. ஆனால், சூழ்நிலையின் இறுக்கமும் ஆசிரியரின் அருகாமையும் அவனை கட்டுக்குள் வைத்தன. இருந்தாலும் திமிறிக் கொண்டிருந்த அந்த அழகியின் செவிகளில் மெல்லமாகப் பேசினான்.

''காத்யாயினி! நீ திமிறும்போது மிக அழகாக இருக்கிறாய்!''

சட்டென கோபமாகத் திரும்பி அவனைப் பார்த்தவள் அவன் கண்களில் தென்பட்ட குறும்பு அவள் திமிறலை

நிற்கத்தான் செய்தது. காளிங்கன் சர்வதேவாவைப் பார்த்து நிதானமாகவே பேசினான்.

''சர்வதேவா! பிராம்மண வதம் செய்பவர்கள் ஆணாய் இருந்தாலும், பெண்ணாய் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே! அதனால் உனக்கு இனியும் அவகாசம் இல்லை. இந்தப் பெண்ணைக் கொன்றுவிட்டு அதே கத்தியால் உன்னையும் கொல்லப் போகிறேன்!''

நகைத்தவன் தன் வாளையும் அவள் கழுத்தருகே கொண்டு போனான். ''நில்'' என்று கத்திய சர்வதேவா தன் வீரர்களை வாட்களை கீழே போடச் சொன்னான். அத்தனை வீரர்களும் வாட்களை கீழே போட ஆசிரியர் அவற்றை எடுத்து தன் மேல் துணியால் ஒரு சேரக் கட்டினார். கட்டியவர் ஒரு குதிரையின் கடிவாளத்தில் பொறுத்திவிட்டு அதன் செவியில் ஏதோ ஓத அந்த வாயில்லா ஜீவன் எல்லாம் புரிந்ததுபோல அந்த சாளுக்கிய வீரர்களைப் பார்த்துக் கேலியாக கனைப்பது போல கனைத்து விட்டு காட்டை விட்டு ஓடியது.

சமயம் சிறிதே எடுத்துக் கொண்டு ஒரு பயிற்சி பெற்ற தளபதி போல செயல்பட்ட அந்த பிராம்மணன் சாதாரணப்பட்டவன் அல்ல என்று காத்யாயினிக்குப் புரிந்தது. பிராம்மணன்தானே என்று அலட்சியப்படுத்தியது தவறு என்றும் புரிந்தது. இவனைப் போன்றவர்கள்தான் நம் குருதேவுக்கு உண்மையான எதிரி என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டாள். தன்னைப் பிடித்திருந்த காளிங்கனை ஒரு பக்கமாய்ப் பார்த்துப் பேசினாள்,

''சரி! உங்கள் சாகஸம் போதும்! என்னை முதலில் விடு! நாம் சமாதானமாகப் போவோம்.''

ஆசிரியர் அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''இல்லை பெண்ணே! முதலில் இவர்களுக்கு ஒரு வழி காண்பிக்க வேண்டாமா?'' என்றவர் காளிங்கனின் வாளை வாங்கி சர்வதேவாவின் மார்பைத் தொட்டார். காத்யாயினி சற்று பயந்துதான் போனாள்.

''பிராம்மணரே! காயம்பட்டு கிடக்கும் வீரனைக் கொல்வது தர்மம் இல்லை. நிராயுதபாணிகளைக் கொல்வது பிராம்மணர்க்கு அழகா?''



''தர்மத்தைப் பற்றி நீ தாராளமாகப் பேசலாம் பெண்ணே! ஏனெனில் நிராயுதபாணியாக இருந்த எங்கள் இருவரையும் கொல்ல வந்தவள். உனக்கு உரிமை உண்டு!'' ஏளனமாக அவளிடம் பேசினாலும் சர்வதேவாவை பார்த்ததும் குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டான்.

''சர்வதேவா! தர்ம நியாயங்களை யாரிடம் பார்க்க வேண்டும் என்ற நியதியை அறிந்தவன் நான். உன்னைக் கொல்ல வேண்டாமென்றால் இதோ உன் வீரர்கள் அனைவரையும் அந்த யானைப் பள்ளத்தில் குதிக்கச் சொல்.''

என்ன பேசுவது என்று புரியாமல் சர்வதேவா தன் வீரர்களைப் பார்த்து முழிக்க அவர்களும் தன் தலைவனின் அதோ கதியைப் பார்க்க சகியாமல் ஒவ்வொருவராக முன்வந்து தாமாகவே அந்த யானைப் பள்ளத்தில் குதித்தார்கள்.

ஆசிரியர் காளிங்கனைப் பார்த்து குறும்போடு சிரித்தார். ஏன் அந்தக் குறும்பு என்று புரியாமல் விழித்தான் அந்த இளைஞன்.

''காளிங்கா! ஒரு குதிரையில் இந்தப் பெண்ணுடன் நீ வா! உன் கைகள் இவளைப் பற்றியே இருக்கட்டும். இன்னொரு குதிரையில் நான் வருகிறேன். மற்ற குதிரைகளை வனத்துக்குள் அனுப்பிவிடு! எனக்கு சர்வதேவாவிடம் ஒரு செய்தி தெரிய வேண்டும்.''

காளிங்கன் அவளை இந்நேரம் வரை கெட்டியாக பிடித்திருந்தாலும் நிலைமை நிதானமாகி விட்டதால் எங்கிருந்தோ வந்த கூச்சம் அவனை வாட்டியது.

''ஆசிரியரே நான் எப்படி இவளை, இப்படியே தனியே என்னுடன் குதிரையில்''

இழுத்துப் பேசியவனைப் பார்த்து சிரித்தார் ஆசிரியர்.

''இத்தனை நேரம் எப்படி கட்டிப் பிடித்திருந்தாயோ அப்படியே பிடித்துக் கொள்'' கூச்சமில்லாமல் பேசிய ஆசிரியர் வாளுடன் சர்வதேவாவை அந்தப் பக்கம் தள்ளிக் கொண்டு போனார்.

வலிமையான கைகள்தான். ஆனால், திடீரென ஏதோ வலு இழந்து விட்டதைப் போல உணர்ந்தான். அவள் வெற்றுத் தோளை இத்தனை நேரம் பிடித்திருந்தபோது

இல்லாத இன்ப உணர்ச்சி தற்போது தோன்றுவதையும் உணர்ந்தான். அந்த இன்ப நிலையிலேயே அவளை அழைத்துச் சென்றான். ஆனால், அவள் அறவே விரும்பவில்லை என்பது அவள் குரலில் தெரிந்தது.

''இதோ பார்! நீ வெட்கமில்லாமல் என்னைப் பிடிக்கிறாய். என்னை விடு! நான் ஏதும் செய்யாமல் வருகிறேன்.''

அவள் பேச்சுக்கு அதிகம் மதிப்பு கொடுக்காமல் குதிரைகள் அருகே வந்தவன் அவளை ஒரு கையால் இறுக்கியபடியே குதிரைகளின் கடிவாளங்களை எளிதாக்கி அவற்றில் இரண்டை தவிர ஏனைய குதிரைகளை காட்டுக்குள் ஒட்டினான். ஒரு குதிரையில் அவளை உட்காரவைத்துத் தானும் அவள் பின்னால் அமர்ந்து ஆசிரியர் வரும் வரை காத்திருந்தான். அதே சமயத்தில் யானைப் பள்ளத்தில் 'தொப்பென' சப்தம் கேட்டது. சர்வதேவாவை தனியே அழைத்துச் சென்றவர் அவனைத்தான் யானைப்பள்ளத்தே தள்ளியிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டான்.

அதையேதான் காத்யாயினியும் கவனித்தாள். அந்தப் பிராம்மணன் சர்வதேவாவை யானைப்பள்ளத்தில் தள்ளியதோடு மட்டுமல்லாமல் இன்னொரு வேலையும் செய்ததைக் கவனித்தாள். பிராம்மணன் தன் அடிவயிற்றை தன் இரு கைகளாலும் பற்றி குனிந்து வாயால் யானை ஒன்று அலறி பிளிறுவது போல கத்தினார். ஏதோ யானை ஒன்று ஆபத்தில் சிக்கினால் எப்படி பிளிறுமோ அப்படியே பட்டது அவளுக்கு. இந்தப் பிராம்மணனிடம்தான் எத்தனை கலை இருக்கிறது.

அவளின் ஆச்சரியமான முகத்தைத் திரும்பி பார்த்தான் காளிங்கன். அவள் ஆச்சரியம் அவனுக்குப் புரிந்தது.

''என்ன பார்க்கிறாய் பெண்ணே! எங்கள் ஆசிரியரை, எளிதாக நினைத்து கொல்ல வந்தோமே என்று நினைக்கிறாயா? வாஸ்தவம்தான். எங்கள் ஆசிரியர் வெறும் குருதேவ் மட்டுமல்ல. எத்தனையோ கலைகள் அறிந்தவர். அத்தனை கலைகளையும் நல்லவைக்காக பயன்படுத்தியவர்.''



''ஓஹோ! இப்படி யானை போல பிளிறி யானைக் கூட்டம் வரவழைத்து இந்த அப்பாவிகளை அவையிடம் பலியிடுவது கூட நல்லவைதானோ?''

இகழ்ச்சியாக கேட்டாலும் அதைக் கேட்டுக்கொண்டே வந்த ஆசிரியர் அவளைப் பார்த்து சிரித்தார்.

''கவலைப்படாதே பெண்ணே! யானைகள் உங்கள் வீரர்களை ஒன்றும் செய்யாது. ஆனால், வந்த யானைகள் திரும்பி செல்ல மதிய நேரம் ஆகிவிடும். அதுவரை உன் வீரர்களுக்குப் புகலிடம் அந்த யானைப் பள்ளம்தான்'' என்று சொன்னவர் காளிங்கனைப் பார்த்தார். ''காளிங்கா! நாம் வேறு வழியில் திருவேங்கடகூடத்தில் நுழைவோம். பார்த்தசாரதி கோவில் வைணவக் குடியிருப்புக்கு உன் குதிரையை செலுத்து'' சொல்லிவிட்டு இன்னொரு குதிரையில் ஏறி அவர்கள் முன்பாக சென்றார். ஆசிரியரை காளிங்கனும் காத்யாயினியும் பின் தொடர்ந்தனர். காத்யாயினிக்கு புரிந்து விட்டது. வைணவர்கள் குடியிருப்பு அரசியல் கலக்காத பாதுகாப்பான பகுதி. சரியாகத்தான் திட்டமிடுகிறான் அந்த ஆசிரியன் என் மனதுள் பாராட்டிக் கொண்டாலும் பின்னால் அமர்ந்த வீரன் தன் தோளை இன்னமும் பற்றி இருக்கிறான் என்றாலும் முன்னம் இருந்த எரிச்சல் தன்னிடத்தே இல்லையே, ஏன்! ஒருவேளை பெண் என்பதால் இந்த உணர்ச்சி தோன்றுமா? ஊஹூம்! அந்த உணர்ச்சியே நம்மிடையே வரக்கூடாது. நான் பில்வண குருதேவின் வாரிசு. நமக்கெல்லாம் சாதாரண மனிதரின் ஆசாபாசங்கள் இருக்கலாமா? கூடாது.

காத்யாயினி தன் உள்ளத்தில் கடுமையை வரவழைத்து முகத்தில் எரிச்சலை காண்பித்து குரலையும் கடுமையாக்கிக் கொண்டாள்.

''ச்சே! உனக்கு ஒரு பெண்ணிடம் எப்படிப் பழக வேண்டுமென்று கூட தோன்றவில்லையே. வெட்க மில்லாதவனே! நான்தான் உன்னோடு ஒத்துழைக்கிறேன் என்று சொல்லிவிட்டேனே. தயவுசெய்து உன் கைகளை என்மேல் வைக்காதே.''

அவனைத் திரும்பிப் பாராமலேயே பக்கவாட்டில் இரு கைகளையும் சேர்த்து கைகூப்பினாள்.

''காத்யாயினி! உனக்கு உன் குருதேவ் ஆணை எப்படியோ, அப்படியே எனக்கு என் ஆசிரியரின் ஆணை. அவர் ஆணையின் பேரில்தான் உன்னைப் பிடித்துள்ளேன்.''

அவன் குறும்பாகப் பேசுகிறான் என்று மட்டும் புரிந்தது.

''சரியப்பா! காட்டின் எல்லைவரை வேண்டுமானால் சரி. ஆனால், நகரத்துள் பட்டப்பகலில் ஒரு பெண்ணைப் பிடித்துச் செல்வேன் என்கிறாயே. நான்கு பேர் முன்னிலையில் ஒரு நல்ல ஆண்மகனாக இருக்கக் கற்றுக்கொள்.''

காளிங்கனுக்கு அவள் பேச்சு சற்று இரக்கத்தை உண்டாக்கி இருக்கவேண்டும்.

''சரி காத்யா! உன் இஷ்டப்படி உன்னை நான் தொடவில்லை. ஆனால், மனதில் கள்ளமில்லாமல் எங்களோடு ஒத்துழைப்பு தருவதாக உன் தந்தைமேல் ஆணை வை. உன்னை நம்புகிறேன்!''

தன் பெயரை சுருக்கி தனக்கு மிகவும் சொந்தம் போல 'காத்யா' என அழைத்ததை அவள் கண்டுகொண்டாள். ஆனால் அவன் உறுதி அவளை சற்று யோசிக்க வைத்தது.

''சரி.. அப்படியே!'' என்று பின்னால் பார்க்காமலேயே முன்னே தெரிந்த அவன் கையில் 'டப்' பென தட்டி சத்தியம் செய்தாள். அவள் அடித்த வேகம் அதிகமாய் இருந்தாலும் காளிங்கன் வாக்குத் தவறவில்லை. அவள் அழகிய தோளை பற்றியிருந்த கைகள் விருப்பமில்லாமலே விலகின. ஏன், அவளை இடித்துக் கொண்டே உட்கார்ந்தவன் கூட அவள் அருகாமையில் இருந்து விலகி பின்பக்கமாய் தள்ளி அமர்ந்தான்.

அவனுடைய அந்தப் பண்பு அவளுக்குப் பிடித்திருந்தது போலும். ஆரம்பத்திலிருந்தே எரிச்சலைக் காண்பித் திருந்த முகம் விரிந்த செந்தாமரையாய் முதன் முதலில் மலர்ந்து காணப்பட்டது.

மூவரும் பார்த்தசாரதி கோயிலின் சிறு கோபுரவாயிலைத் தாண்டி, கண்ணன் கோயிலையும் கடந்து, பின்பக்கம் காணப்பட்ட வைணவக் குடியிருப்பில் நுழைந்தார்கள். எப்போதும் அமைதி தழுவ காணப்படும் அந்த இடம் பரபரப்பாக இருந்தது. பல வைணவர்கள் முன் குடுமி சகிதம் அங்குமிங்கும் சென்று சூழ்நிலையை பரபரப்பாக்கியதை



மூவருமே கவனித்தனர். ஆசிரியர் அப்படி பரபரப்பாக பறந்து கொண்டிருந்த வைணவரை நிறுத்திக் கேட்டதற்கு திருவரங்கம் செல்லும் வழியில் உடையவர் ராமானுசர் கண்ணன் கோயில் விஜயம் செய்திருப்பதாகச் சொல்லிவிட்டு அங்குள்ள பரபரப்பில் காணாமல் போனார்.

## 6

## முன்னழகைக் காணில் முனிவர்தாம் தவம் செய்வாரோ?

**வா**க்கு கொடுத்துவிட்டதால் அந்த அழகியின் மிருதுவான தோளினை இத்தனை நேரமாக விரும்பிப் பற்றியிருந்த கைகளை விலக்கிக் கொண்ட காளிங்கன் தன் முன்னே அமர்ந்து வந்த இளம்பெண்ணால் மிகவும் அலைக்கழிக்கப்பட்டான். அவள் முதுகுப்புறம் அவன் கண்களுக்கு விருந்தாய் காட்சி அளித்தது. அழகை யெல்லாம் சுமந்து அற்புதமாய் தென்மொழியும் வடமொழியும் பேசும் இந்தப் பெண் ஏன்தான் இப்படி வேண்டாத வேலைகளில் ஈடுபடுகிறாளோ, 'இருந்தும் இதற்கு எப்படி இந்தப் பெண் பொறுப்பாவாள், எல்லாம் அந்த பில்வணப் பிசாசு செய்யும் வேலை. தன் மகளையே மாபாதகச் செயலுக்குப் பழக்கி இருக்கிறான். பாவம், இவள் என்ன செய்வாள்' காளிங்கன் தன் முன்னால் அமர்ந்தவளை மனதார மன்னித்தான்.

காலை வேளை முடிந்துவிடவில்லை யென்றாலும் காலைச் சூரியன் மட்டும் தன் வெப்பத்தினை பெருக்கிக் கொண்டேதான் இருந்தான். இருந்தாலும், கண்களுக்கு விருந்தாக இருபுறமும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் சூரியன் தரும் வெப்பத்தைத் தாங்களே தாங்கிக் கொண்டு தங்கள் நிழலில் செல்லும் அந்த மூவருக்கும் குளிர்ச்சியைத் தந்து உபசரித்தன. அந்த சுகத்தில் குதிரைகளும் கலந்து கொண்டு நிம்மதியாகவே நடைபோட்டன.

முதலில் சென்ற ஆசிரியர் கடமையே கண்ணாக செல்வதைக் கண்ட காளிங்கன் சற்று தைரியமாகவே தன் முன்னால் அமர்ந்தவளின் மீது பார்வையை ஓட்டினான். அகலமான தோளின் மேற்பரப்பு கீழே செல்ல செல்ல

மேலும் குறுகி பின்னர் பெருத்து நின்ற படைப்பினை பிரம்மன் எங்கிருந்துதான் கற்றானோ, ஏன்தான் இப்படி படைத்துவிட்டு ஆண்மக்களை அலைக்கழிக்கிறானோ என்றெல்லாம் ஆலோசித்தவன் கண்களுக்கு அவள் முதுகின் மேற்பகுதியில் சில மணல்துகள்கள் படிந்திருந்ததைக் கவனித்தான். அவள் அந்த மணல்மேட்டில் தன்னுடன் மணலில் திமிறியபோது ஒட்டியிருக்க வேண்டும். அதை துடைக்க வேண்டி மெல்ல அவள்மீது மணல்பட்ட இடத்தில் கையை வைத்தான். உடனே கோபத்துடன் காத்யாயினி திரும்பினாள்.

''ஏய், என்ன இது? இப்போதுதானே வாக்கு கொடுத்தாய். உடனே அத்து மீறுகிறாய்?''

கோபமாய் பேசியவளை ஆறுதல்படுத்தினான்,

''இல்லை. வேண்டுமென்றே செய்யவில்லை...''

''ஓஹோ! தொட்டுவிட்டு 'வேண்டுமென்றே செய்யவில்லை' என்றால் அது நியாயமாகிவிடுமா?''

''காத்யா! அந்த யானைப்பள்ளம் அருகே மணல்மேட்டில் படுத்துக் கொண்டே என்னிடம் சண்டை போட்டாய் இல்லையா?''

''நான் ஒன்றும் உன்னுடன் சண்டைக்கு வரவில்லை. நீதான் குறுக்கே வந்தாய். என் கையைப் பிடித்து இழுத்தாய்.''

''சரி! அப்படியே இருக்கட்டுமே! அப்படி பிடித்து இழுக்கும்போது முரண்டு பிடித்து என்மேல் விழுந்தாய்...''

அவளுக்கும் அந்தக் காட்சி நினைவில் வந்தது. சங்கடத்தால் சற்று அசைந்தாள். சங்கடம் அவளை மௌனத்திலும் ஆழ்த்தியது. அவனே பேசினான்.

''அப்படி முரண்டு பிடித்து விழுந்ததில் அந்த மணல் துகள்கள் உன் முதுகின் மேல்...''

இழுத்த அவன் மெல்லிய குரல் அவளை என்னவோ செய்தது போலும். அவளும் மிக மெல்லமாகவே பதில் சொன்னாள்.

''மணல் கரைதானே, துடைத்துவிட்டால் போய் விடுகிறது.''



''அதைத்தான் நானும் செய்ய முயன்றேன். மேலும்...''

''மேலும்?''

காத்யாயினிக்கு ஏன் அந்தப் பொல்லாத தமிழ்வீரனின் பேச்சு இப்படி இனிக்கிறது என்று புரியவில்லை. ஆனால், காளிங்கன் பேசிக்கொண்டே போனான்.

''என்னால் ஏற்பட்ட கறையை நான்தானே போக்க வேண்டும்.''

அந்தக் குறும்புக்காரன் பதில் அவளுக்குப் பிடித்திருந்தது. ஆனால், இப்படியே பேசிக்கொண்டு போனால் தானும் அவன் வலையில் விழுந்து விடுவோமோ என்றும் பயந்தாள். அதனால் பேச்சை மாற்றினாள்.

''ஆமாம். நீ சைவனா? வைணவனா?''

''நான் சைவன்தான். ஏன் கேட்கிறாய்?''

''சைவனாய் இருந்தால் ஏன் வைணவர் குடியிருப்புக்கு செல்கிறீர்கள்?''

''நீ ஆசிரியரைத்தான் கேட்க வேண்டும்.''

அவள் ஆசிரியரைக் கேட்கவில்லை. ஆனால், கையைக் கஷ்டப்பட்டு பின்பக்கம் கொண்டு சென்று தன் முதுகில் உறுத்திக் கொண்டிருந்த மணல் கறையைப் போக்கிக் கொண்டாள். ''தங்கப்பாளத்தில் ஒரு மச்சக்கறையை நீக்கினால் எப்படி மினுமினுக்குமோ அந்த முதுகுப் பகுதியும் காளிங்கனை மயக்கியது. இளமை ததும்பும் உடல். சரியாக வாராது போனாலும் கலைநயத்தோடு அள்ளி முடிந்த கூந்தல். அந்தக் கூந்தலிலிருந்து ஓரிரண்டு முடிகள் பிரிந்து அவள் பின்னே அவள் அழகுக்குத் தாலாட்டு பாடுவதுபோல ஆடி ஆடி அசைந்த அழகு. செவ்வாடை உடையில் தேவலோகத்து கன்னி ஒருத்தி வழிதவறி தன்னோடு குதிரையில் முன் வந்து அமர்ந்து விட்டாளோ என்னவோ, அப்படியே தொட்டு தொட்டுப் பார்க்க மனமும் கைகளும் விரும்பினாலும், ஊஹூம்.. பெருமூச்சு விட்டான் காளிங்கன்.

பின்னால் உட்கார்ந்த வீரன் தன் பின்னழகுகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவளும் உணர்ந்தாளோ என்னவோ, அவ்வப்போது அசைந்தது கூட அழகாகத் தென்பட்டது அவன் கண்களுக்கு.

''காத்யா! நான் சைவனா என்று கேட்டாய் இல்லையா?''

''ஆமாம்.''

''சைவப்பாடல் ஒன்று பாடட்டுமா?''

''தமிழ்ப்பாடலா? பாடு... பாடு...''

**''முன்னழகைக் காணில் முனிவர்தாம் தவம் செய்வாரோ**
**பின்னழகைக் காணில் பிரமன்தான் தவம் செய்வானோ''**

அவன் பாடிய பாடல் திருச்சிற்றம்பலமுடையான் திருக்கோலத்தைப் புகழ்ந்து பாடும் பாடல் என்றாலும் தற்சமயம் தன் முன் அமர்ந்தவளுக்கும் பொருத்தமான பாடல்தான் என்று காளிங்கன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

ஆனால், காத்யாயினியின் நிலையோ வேறு விதத்தில் இருந்தது. அந்தப் பாடலின் வரிகளும் அந்தப் பாடலைப் பாடியவனும் அவளைக் குழப்பமான நிலைக்குக் கொண்டு செல்வதை அவள் உணரவே செய்தாள். நான் என்ன நினைக்கிறேன், எதற்காக இவனுடன் பேச்சு கொடுக்கிறேன். என் அழகை இவன் புகழ்வதால் ஏன் எனக்கு மயக்கம் வருகிறது. இவன் ஏன் இப்படி பாடவேண்டும். மேலும் பாடட்டும் என்று ஏன் தோன்றுகிறது. இல்லையில்லை. நான் யார்? பில்வண குருதேவின் மகள். கத்தியில்லாமல் மகுடமில்லாமல் நாளை உலகை ஆள வேண்டியவள். போயும் போயும் ஓர் ஆண் மகனிடம் அதுவும் நம் எதிரியிடம் நம் மனதை பறி கொடுப்பதா, சே! வெட்கம் கெட்டவளாகப் போய்விட்டேன்.'

காத்யாயினி இதுவரை தன்னிடம் இயற்கையாய் குடி பெயர்ந்த மலர்ச்சியை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாள். தனக்கு அந்தச் சமயத்தில் வரவேகூடாத எரிச்சலைத் தேடி அழைத்துக் கொண்டாள். அந்த எரிச்சல் அவள் முகத்தில் மட்டுமல்லாமல் அவள் குரலிலும் தாராளமாகவே தென்பட்டது. அவனைப் பார்க்காமலே அவள் விரல் நீட்டிப் பேசினாள்.

''இதோ பார்! நீ அத்து மீறிப் பேசுகிறாய்! நான் யார் என்பதையும் மறந்து விடுகிறாய்! நான் பில்வண குருதேவ் மகள். அவர் உனக்கு வேண்டுமானால் எதிரியாக



இருக்கலாம். ஆனால், உங்கள் நாட்டை ஆளும் உங்கள் அரசர் அவரை குருவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள். உங்கள் நாட்டு ராஜகுருவின் மகளிடம் மரியாதையாக நடக்கப் பழகிக் கொள்.''

இதுவரை பன்னீரைத் தெளித்து தன் நெஞ்சத்தை தாலாட்டிய இந்த அழகுத் தேவதை திடீரென ஏன் இப்படி தீப்பந்தத்தை தன் மேல் எறிகிறது என்று புரியாமல் விழித்தான். ஒருவேளை தன் மனத்தைக் கட்டிப்போட விரும்பி இப்படி எரிச்சலை வரவழைத்துக் கொள்கிறாளோ.

இப்படி குளிர்ச்சியையும், வெப்பத்தையும் ஒருங்கே கலந்து பரிசளித்துக் கொண்டிருந்த காத்யாயினியுடன் திருவேங்கடகூடம் கண்ணன் கோயில் அருகே உள்ளே வைணவக் குடியிருப்பில் நுழைந்தார்கள். நாட்டின் சக்கரவர்த்தியார் இறந்த துயரச் செய்தி சற்று சோகத்தை அப்பியிருந்தாலும் வேறு பரபரப்புகள் காணப்பட்டன. காவிக்கொடிகள் ஆங்காங்கே கட்டப்பட்டு வைணவர் கூட்டம் பரபரப்பாக இருப்பதைப் பார்த்து விசாரித்தபோதுதான் ராமானுசர் விஜயத்தை அவர்கள் அறிந்து கொண்டனர்.

குதிரைகளை விட்டு இறங்கிய மூவரும் மாருதியாண்டான் இல்லத்திற்கு விரைந்தனர். முதலில் இவர்களுடன் செல்வதா, முரண்டு பிடித்து சப்தம் போட்டு தப்பித்து ஓடுவதா என்று ஆலோசித்தாள் காத்யாயினி. தற்சமயத்திற்கு இவர்களுடன் செல்வதே மேல். யார் கண்டது, இன்னும் என்னென்ன திட்டங்கள் போட்டு நம்மை ஏமாற்றப் பார்க்கிறார்களோ, இவர்களோடு இருந்தால் நமக்கும் சில விஷயங்கள் கிடைக்கலாம்; பார்ப்போம். காலையிலிருந்து நமக்குத் தோல்வி மேல் தோல்வியாகவே வருகிறது. காலையில் யாகம் தடைப்பட்டது; பிராம்மணனை தவறவிட்டது; அவர்களிடம் சிக்கிக் கொண்டது; வேண்டாம். இனி பிரயத்தனம் ஏதும் செய்யவேண்டாம். எந்தப் பிரயத்தனம் செய்தாலும் பலன் இருக்கப் போவதில்லை. காலையில் இந்தப் பிராம்மணனைத் தொடர்ந்ததில் இருந்து நடுக்கடலில் உள்ள ஆகாயத்தில் எங்கெங்கோ திசைமாறிச் செல்லும் பறவைபோல தானும் இருக்கிறோம் என்பதை உணர்ந்தாள். அப்படி திசை தெரியாமல் இருக்கும் பறவைக்கு ஏதாவது மரக்கலம் தென்பட்டு பலன் பெறுவது

போல தானும் சந்தர்ப்பத்திற்காக காத்துக் கிடக்க வேண்டியதுதான். ஆனாலும், இவர்களை எப்படியும் விடுவதில்லை என்று மனதுள் கருவிக் கொண்டுதான் அந்த ஆண்மக்களின் வேகமான நடையோடு ஈடு கொடுத்து அந்த வைணவப் பெரியாரின் இல்லத்து வாயிலை வந்தடைந்தாள்.

மாருதியாண்டான் என்றழைக்கப்பட்ட அந்த வைணவப் பெரியவர் முகத்தில் ஏராளமான சாந்தம் குடிகொண்டிருந்ததைக் கவனித்த காத்யாயினி, அந்த கனிவு முகத்தில் ஆசிரியரைக் கண்டதும் மகிழ்ச்சி பரவலாக படர்ந்ததையும் கவனிக்கவே செய்தாள். ஆசிரியருக்கு நெருங்கிய நண்பர் போலும்.

''ஆஹா! இன்று அடியேன் எத்தனை அதிர்ஷ்டம் செய்தேனோ, வரவேண்டும் ஆசிரியரே! உடையவர் விஜயம் செய்யும் நாளில் தாங்களும் வந்தது அந்த திருவேங்கடமுடையான் அருள்தான்...''

என்று சொன்ன வைணவர் ஆசிரியரைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். ஆசிரியரும் மலர்ந்த முகத்துடன் காத்யாயினியையும் காளிங்கனையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''இவர் யார் தெரியுமோ, அபயனின் மாமன் மகன். சோழ மகாதேவி அம்மங்கையின் தத்துப்பிள்ளை. என்னைப் பொறுத்தவரை திராவிட நாட்டின் மிகச்சிறந்த வாள் வீரர். தற்சமயம் என் மாணாக்கர்'' என்று காத்யாயினியையும், மாருதியாண்டானையும் வியப்பில் ஆழ்த்திய ஆசிரியர் அவளையும் அறிமுகம் செய்தார்.

''இவர்கள் மிகவும் மரியாதைக்குகந்த இளவரசியார். கங்கைக்கரை கன்னோசியின் இளவரசியார். சாளுக்கியரின் குருபுத்ரியாக தற்சமயம் வளர்ந்தாலும் வைணவத்தில் சொல்வதுபோல குருவாக்கே வேதவாக்காக நினைத்து செயல்படும் வீராங்கனை.''

காளிங்கன் இப்போது வியப்பில் ஆழ்ந்தான். ஆசிரியர் ஏன் முன்பே காத்யாயினியைப் பற்றி சொல்லவில்லை என்று அவரை மனதுள் கேட்டுக் கெண்டாலும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இதுவரை சரியாக அமையவில்லை. அதனால் அவர் சொல்லாமல் போய் இருக்கலாம் என்று



சமாதானப்படுத்திக் கொண்டான். இருந்தாலும் புகழ்பெற்ற கன்னோசி நாட்டு இளவரசிக்கு உகந்த மரியாதையைத் தராமல் அவளைத் தொட்டுப் பிடித்தது தவறுதான் என்பதையும் உணர்ந்ததால் அந்த இளவரசி தன்னைப் பற்றி தாழ்வாக நினைக்கிறாளோ என்னவோ என்ற சிறிய வருத்தமும் வாட்டியது.

ஆனால் காத்யாயினி வேறுவிதமாக நினைத்தாள். தன்னைப் பற்றிய செய்திகள் அறிந்த ஆசிரியரும் அந்தத் தமிழ்வீரனும் எல்லாம் தெரிந்தும் தன்னை உயர்வாக மதிக்கிறார்களா அல்லது இகழ்ச்சியாக நடத்துகிறார்களா என்று புரியாமல் விழித்தாள். தானும் அவர்களின் புத்திகூர்மைக்கு இணையாக செயல்படவேண்டும் என்றும் நினைத்துக் கொண்டாள். இதையெல்லாம் அறியாத மாருதியாண்டானோ மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றார்.

''ஆஹா! கங்கா நதி தீரத்து இளவரசி என் இல்லத்துக்கு வருகை தந்துள்ளார்களா? ஆஹா! அடியேன் என்ன பாக்கியம் செய்தேனோ'' என்று காத்யாயினியை பவ்யமாக உபசரித்தவர் வீட்டினுள்ளே இருந்த இல்லப் பெண்டிரையும் அழைத்து தன் இல்லத்திற்கு விஜயம் செய்த விருந்தாளியை அறிமுகப்படுத்த அந்த இல்லத்து வாயிலில் பெரும் பரபரப்பே ஏற்பட்டுவிட்டது. அதற்குள் அடுத்தடுத்து உள்ள இல்லங்களில் இருந்த இளம்பெண் களும் ஓடிவந்து இளவரசியின் கைகளையும் முகத்தையும் தொட்டுப் பார்த்து மகிழ்ந்து பெருமிதப்பட்டனர். மாருதியாண்டான் மனைவியார் இளவரசியை குங்குமம் இட்டு உள்ளே அழைத்துப்போக, காவி உடையணிந் திருந்தாலும் ஒரு இளவரசியின் மிடுக்கோடு உள்ளே நுழைந்த காத்யாயினி, வேண்டுமென்றே காளிங்கனைப் பார்த்து புன்னகையும் கூடவே குறும்புப் பார்வையையும் வீசிவிட்டுத்தான் சென்றாள். காளிங்கனுக்கு அவள் பார்வையின் பொருள் புரிந்தாலும் 'அவள் பெண் - அதுவும் வடதேசத்து இளவரசி, அழகானவள் வேறு. கேட்கவா வேண்டும். எங்கும் எதிலும் இவர்களுக்குத்தான் முதலிடம்' என்று மனதுள் சமாதானப்படுத்திக் கொண்டான்.

''மாருதியாண்டான் மன்னிக்க வேண்டும். இளவரசியார் உள்ளே செல்லலாம். ஆனால், நாங்கள் உள்ளே வரஇயலாது. நம் சக்கரவர்த்தியார் இறந்த செய்தி இந்நேரம் உங்களுக்குக் கிடைத்திருக்கும். நம் காளிங்கனுக்கு சிறிய

தந்தையான அவர் காரியங்களுக்காக உடனடியாக காஞ்சி செல்ல வேண்டும். ஆனால் தாங்கள் உதவி இப்போது அவசியம் தேவை.''

''ஐய்யோ பெருமாளே! பெரிய வார்த்தையெல்லாம் எதற்கு? ஆசிரியரே உதவி என்று சொல்ல வேண்டாம். உத்தரவு போடுங்கள்...''

''தங்கள் பெரிய மனது எனக்குத் தெரியும். இதோ உள்ளே சென்றாளே, அந்த இளவரசி அவர் ஓர் இக்கட்டில் சிக்கியுள்ளார். ஒரு பத்து நாட்கள் தங்கள் இல்லத்தில் வைத்துக் கொண்டு சமாளிக்க வேண்டும். அவர் ஏறுமாறாகப் பேசினாலும் மனதில் வைக்க வேண்டாம்.''

புரிந்ததாக தலையாட்டினார் மாருதியாண்டான்.

''ஆசிரியர் எந்தக் கவலையும் கொள்ளாமல் காஞ்சி செல்லலாம். கங்கைக்கரை இளவரசியாரைக் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வது அடியேன் பொறுப்பு!'' என்றவர் மேலும் பேசினார், ''ஆசிரியரே! உடையவரை தாங்கள் இப்போது சந்திக்கப் போவதில்லையா. உடையவர் தாங்கள் இங்கு வந்திருப்பதை அறிந்தால் ஏன் சந்திக்கவில்லை என்று கேட்டால் அடியேன் என்ன சொல்வது?''

ஆசிரியர் பெருமூச்செறிந்தார்.

''நண்பரே! உடையவர் போன்றோர் இந்த உலகத்தில் அவதரிப்பதால்தான் தர்மம் இன்னமும் தலைநிமிர்ந்து நடை போடுகிறது. நானும் அவரை சந்தித்து பல நாட்களாகி விட்டன. வீரராஜேந்திரனுடைய மரணம் நாட்டில் பல குழப்பங்களை உருவாக்கி வருகின்றன. அரசரின் இறுதிச் சடங்குகள் முடிவடைந்ததும் நானே வந்து சந்திக்கிறேன். அவர் புரிந்து கொள்வார். அது சரி. உடையவர் திருமலைக்கு ஏறிச் செல்வது பற்றி ஏதேனும் முடிவெடுத்தாரா?''

ஆசிரியர் கேட்ட கேள்வியின் பொருள் புரிந்தது வைணவருக்கு. திருவேங்கடகூடத்துக்கு எத்தனையோ முறை விஜயம் செய்த உடையவர் ஏனோ திருமலைக்கு ஏறிச் செல்வதைத் தவிர்த்து வந்தார். திருமலை முழுவதும் புனிதப்பகுதி என்றும் அப்படிப்பட்ட புனிதப்பகுதியில் தன் பாதம் படுவதா என்றுகூட ஒரு முறை அவர் சொன்னதுண்டு.



''இல்லை ஆசிரியரே! இன்று காலைகூட உடையவரின் மாமா திருமலை நம்பி தன்னுடன் மலையேறி வரும்படி கட்டாயப்படுத்தினார். உடையவர் ஏதும் பதில் சொல்லவில்லை. எனக்குக் கூட அந்த ஆசை உண்டு. இப்போதெல்லாம் அந்த ஆசை பெரிதாகிக் கொண்டே வருகிறது. எப்படியாவது ஒரு முறையாவது திருவேங்கடமுடையான் சந்நிதிக்கு உடையவரை அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் இருவரும் சந்தித்து மகிழ்வதை அடியேன் பார்த்து மகிழவேண்டும். ஆனால், ஆசிரியரே! உடையவர் எல்லாம் அறிந்தவர். திருவேங்கடத் தானும் உடையவரும் என்னைப் பொறுத்தவரை ஒன்றுதான். திருவேங்கடத்தான் விரும்பினால் உடையவர் தாமாகவே மலை ஏறுவார். அந்த நம்பிக்கை எனக்குண்டு!''

நம்பிக்கையோடு பேசிய மாருதியாண்டானிடம் இருவரும் விடைபெற்று தங்கள் குதிரைகளில் ஏறினர். காளிங்கன் கூட ராமானுசர் திருமலை ஏறிச் செல்லாதது குறித்து ஆச்சரியப்பட்டான். தான்கூட இன்னமும் அந்த மலை ஏறி அங்கு 'நின்ற திருக்கோலத்தில்' இருக்கும் பெருமாளை கண்டதில்லை. ஏன், அப்படி செல்ல வேண்டும் என்றுகூட அவனுக்குத் தோன்றவில்லை.

உடலும் உள்ளமும் சைவத்துக்கே அர்ப்பணிக்கப் பட்டதாக காளிங்கன் நினைத்தாலும் வைணவமும் அவனுக்கு உடன்பாடே என்று சொல்லிக் கொண்டான். தில்லையில் எத்தனை முறை சிற்றம்பலமுடையானையும், அச்சுதனை யும் ஒருசேர தரிசித்து ஆனந்தப்பட்டிருக்கிறான். ஆயினும் எத்தனையோ முறை இந்தப்பக்கம் வந்தாலும் இங்குள்ள மலைமீது திருவேங்கடமுடையான் கோயில் கொண்டுள்ளான் என்கிற நினைவே ஏன் வரவில்லை. சரி... சரி... இன்னொரு முறை இந்தப்பக்கம் வரும்போது இந்த மலையையும் ஏறி விடுவோமே..

காளிங்கன் மனத்தில் எழுந்த அந்த சாதாரண ஆவலை அன்றிரவே பெரிதாக்கிக் காட்டினான் பில்வணன்.

# 7

# பில்வண மந்திரம்

சலசலவென இரைச்சலுடன் மேலேயிருந்து கீழே விழும் அந்த அழகான அருவியின் சப்தம் தவிர வேறெந்த சப்தமும் கேட்கமுடியாத அந்த வனாந்தரப் பகுதி அன்று அந்தப் பின்மாலைப் பொழுதிலேயே இருளில் மூழ்கிக் கிடந்தது. விழும் நீர்வீழ்ச்சி சிறியதுதான் என்றாலும் விழும் நீரின் வேகம் அதிகமாய் காணப்பட்டது. ஒருவேளை அந்த நீர்வீழ்ச்சியின் அருகேயே கோயில் கொண்ட கபிலேஸ்வரனை தரிசிக்கும் ஆவலில் மேலேயிருந்து வேகமாக வருகின்றது என்ற காரணமும் இருக்கலாமோ என்னவோ. சிறிய கோவிலானாலும் அழகான சிறு கோபுரத்தையும் சந்நிதிக்கு வெளியே சற்றே பெரிய தாழ்வரையும் கொண்டிருந்ததால்அந்த வனப்பகுதியில் பகல் நேரத்தில்பக்தர்களுக்கும் இரவு நேரத்தில் பிராணிகளுக்கும் சரணாலயமாக விளங்கி ஆண்டவன் முன்பு சகல ஜீவராசிகளும் ஒன்றுதான் என்று நிரூபிப்பது போல அமைந்தது.

புகழ்ச்சி பெற்ற சேஷகிரித் தொடரின் அடிவாரத்தில் கட்டப்பட்டிருந்தாலும், அந்த சேஷத்தையே மாலையாகக் கொண்ட சர்வேஸ்வரனான கபிலேஸ்வரன் கோயில் கொண்டதால் சற்று பிரசித்தி அதிகமாகவே அந்தக் கோயிலுக்கு இருந்தது. கோயில் பிரசித்தி பெற்றதுதான். இருந்தாலும், அடர்ந்த காடுகள் கோயிலைச் சுற்றி இருந்ததனால் பக்தர்கள் பலர் அச்சப்பட்டுக் கொண்டே கோயிலுக்குப் பகல் நேரத்தில் மட்டும் வந்து தரிசித்து சென்று விடுவர். பகலிலேயே பக்தர்கள் அச்சப்பட்டு வருகின்றனர் என்றால் இரவில் கேட்க வேண்டியதே இல்லை. நாள் தவறாமல் வரும் அர்ச்சகர் கூட உச்சிகால பூஜையுடனேயே இராக்கால பூஜையையும் முடித்துக் கொண்டு மாலை வேளை வருமுன்னேயே காட்டை விட்டு திருவேங்கட கூடத்தில் நுழைந்து விடுவது நாளும் தவறாமல் நடப்பதுதான்.

ஆனால், கபிலேஸ்வரரோ இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுபவராகத் தெரியவில்லை. தன்னைத் தேடி



வரும் பக்தருக்கெல்லாம் எந்தக் குறையும் வைப்பதில்லை. தன்னை தரிசித்து வரம் கேட்போருக்கெல்லாம் அருள் பாலித்ததால் வரும் பக்த ஜனக்கூட்டத்துக்கும் எள்ளளவும் குறைவில்லை.

சோழ அரசரின் முன்னோர் ஒருவர் லிங்க சொரூபத்தில் கோயில் கொண்ட கபிலேஸ்வரரின் மேல் பேரன்பு கொண்டு அவருக்கு ஒரு கோபுரமும் கட்டிக் கொடுத்ததால் வருவோர்க்கெல்லாம் அந்தக் காட்டில்கூட சற்று சௌகரியமாகவே இருந்தது. மேலும் அருவி நீர் தெளிவாய் மேலேயிருந்து விழுந்ததோடு மட்டுமல்லாமல் தேனாய் தித்திக்கும் தீர்த்தமாகவும் அமைந்ததால் அருவி நீராடவும் கூட தொலை தூரத்திலிருந்து மக்கள் வருவது சகஜமாகவேதான் இருந்தது. ஆனால், மிருகங்களுக்கு பயந்தோ அல்லது மாலையிலேயே தொடங்கும் இருளுக்குப் பயந்தோ யாரும் மாலை நேரம் வரைகூட அக்கோயிலில் காத்திருப்பது கிடையாது. அப்படியும் யாராவது தைரியசாலி ஓரிருவர் இருந்தாலும், அர்ச்சகர்கள் மறக்காமல் தேடி அவர்களையும் தங்களுடனேயே அழைத்துச் செல்வதுகூட வழக்கம்தான்.

அப்படிப்பட்ட கபிலேஸ்வரர் கோயிலில்தான் இயற்கைக்கு மாறாக நான்கு பேர் குதிரையில் வந்து அந்த இருட்டு வேளையில் இறங்கினார்கள். வந்த நால்வரும் வெளியே கொட்டிக் கொண்டிருந்த அருவியின் சப்தத்திலிருந்து விடுபட்டு கோயிலுக்குள் நுழைந்தனர். அவர்களில் ஒருவன் கபிலேஸ்வரர் அருகில் சன்னமாக எரிந்து கொண்டிருந்த திரியினைப் பெரிதாக்கினான். பிறகு சந்நிதியின் பக்கப் பகுதியில் இருந்த தீவட்டியினை எடுத்து அங்கேயிருந்த எண்ணெயில் அமுக்கினான். தீவட்டியை தீபத்தில் காட்டி ஏற்றியவன் அப்படியே எடுத்துக் கொண்டு மண்டபம் மையப்பகுதிக்கு வந்து அதை ஒரு பொருத்தியில் வைத்தான். பிறகு அங்கிருந்த மற்ற மூவரையும் அதைச் சுற்றி அமரச் சொன்னான்.

''காகடியா! நிச்சயமாக மடிராஜன் வருவானா? அல்லது கடந்த முறை போல ஏமாற்றி விடுவானா...?''

''குருதேவ்! மடிராஜன் போன்றவர்கள் சொன்ன சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள். சென்ற முறை நாம் அழைத்தபோது அவன் மறுத்துவிட்டான். காரணம், நாம்

அவனை காஞ்சி அரண்மனைக்கு வரவழைத்தோம். மடிராஜன் இந்த முறை ஒப்புக் கொண்டதுக்குக் காரணமே இந்தக் கோயில்தான்.''

அங்கேயிருந்த சாமுண்டர்யன் குறுக்கிட்டான்.

''தெரியும். தெரியும். நகரங்களுக்குச் சென்றால் மடிராஜனை அரசர்கள் பலிவாங்கி விடுவார்கள். காடுகளுக்குச் சென்றால் அரசர்களை மடிராஜன் பலி வாங்குவான். காகடியா... தவறு செய்து விட்டாய். இந்தக் காட்டுக் கோயிலும் இல்லாமல் காஞ்சி அரண்மனையும் இல்லாமல் வேறெங்காவது அவனை சந்திக்க வேண்டும். நாம்தான் அவன் வலையில் விழுந்து விட்டோம். ஒருவேளை அவன் கூட்டத்தோடு வந்துவிட்டால் என்ன செய்வாய் காகடியா?''

சாமுண்டர்யன் அப்படிப் பேசிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தான். பயங்கர மிருகங்கள் சரண்புகும் ஆலயம் என்று வேறு கேள்விப்பட்டதால் மடிராஜன் மீதுள்ள பயத்தோடு அதுவும் சேர்ந்து கொண்டது. அவன் கை அடிக்கடி தன் உடைவாளைத் தடவிக் கொண்டே இருந்ததைக் கவனித்த பில்வணன் சிரித்தான்.

''சாமுண்டர்யா! அச்சப்படாதே. முதலில் அந்த அச்சத்தைத் தவிர்த்து விடு. சில விஷயங்கள் சில்ரால்தான் நிறைவேற்ற முடியும். மடிராஜனால் நமக்கு ஆகவேண்டிய வேலைகள் உள்ளன. அவனை சந்திப்பது நாம் விருப்பப்படும் செயல். ஆகவே அவனைச் சந்திக்க அவன் விரும்பிய இடத்துக்கே வருவதுதான் முறை. வெளியே குதிரைகளைப் பார். ஐந்தறிவுப் பிராணிகள்கூட அச்சப்படாமல் இருக்கின்றன. நீ அச்சப்படலாமா?''

குருதேவின் வார்த்தைகள் சாமுண்டர்யனை சற்று தைரியப்படுத்தியது போலும். அவன் கை அவன் உடைவாள் பிடியை சற்று தளர்த்தியது. அதே சமயத்தில் வெளியே ஏதோ சப்தம் கேட்கவே மறுபடியும் அவன் கை தன் வாளை கெட்டியாக பற்றிக் கொண்டது. வந்தது மடிராஜன்தான்.

அறையின் சொற்ப வெளிச்சத்திலும் மடிராஜன் பார்ப்பதற்கு அச்சத்தைக் கொடுத்தான். சரியாக வாரப்படாத முடி. முகம் முழுவதும் சாம்பல் பூசினானோ என்னவோ அவனோடு ஒரு தீசல் வாசனையும் சேர்ந்தே வந்தது. கையில்



சூலமும், கழுத்தில் ருத்திராட்ச மாலையும், அந்த மாலையின் கீழே ஒரு மண்டை ஓடும், பார்ப்பதற்கே கோரமாக இருந்தது.

உள்ளே நுழைந்தவன் இவர்களை சீண்டவே இல்லை. நேரே கருவறை வந்தான். கபிலேஸ்வரன் முன்பு தன் ருத்திராட்சத்தையும், மண்டையோட்டையும் கழட்டி அவர் அருவுருவாய் வீற்றிருந்த பீடத்தருகே வைத்தான். தன் சூலத்தை மட்டும் கையில் எடுத்துக் கொண்டவன் வெளி மண்டபம் வந்தான். அவன் கழுத்தில் அந்த மண்டையோடு மாலை இல்லாதது சாமுண்டர்யனுக்கு சற்று ஆறுதலைத் தந்தது.

''எதற்காக அழைத்தீர்கள்?''

முகமன் ஏதும் கூறிக் கொள்ளாமல் வந்தவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் உடனடியாக விஷயத்தினை கேட்டவனை நிதானமாகப் பார்த்தான் பில்வண குருதேவ். பில்வணன் பார்வை காகடி துர்காவுக்கு புரிந்ததோ என்னவோ

''மடிராஜா! இவர்தான் பில்வண குருதேவ். பெருமதிப்புக்குரியவர். சென்ற முறை நீ காஞ்சிக்கு வர மறுத்ததில் குருதேவுக்கு வருத்தம் அதிகம். இவர் சாமுண்டர்ய தேவா. என் நண்பர். அவர் ரேவி நாயகன். குருநாதரின் மெய்க்காவலர்!

காகடியனின் வார்த்தைகளை அலட்சியம் செய்தான் மடிராஜன்.

''காகடி! நான் அரசர்கள் வாழும் பகுதிக்கெல்லாம் வருவதில்லை. எனக்கும் அவர்களுக்கும் எப்போதும் ஆகாது. எனக்கு அரசர்களும் வேண்டாம்; அரசியலும் வேண்டாம். இவர்களைப் பார்த்தால் அரசர்களைப் போல இருக்கிறது. உனக்காக இவர்களை விட்டு விடுகிறேன். ஓடி விடுங்கள்.''

கர்ண கொடூரமாக வந்த சொல் சாமுண்டர்யனை மேலும் அச்சப்பட வைத்தது. ஆனால் பில்வணன் அசரவில்லை.

''அரசரும் அரசியலும் தாங்கள் விரும்பாதது ப்ற்றி எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை மடிராஜரே! அது உங்கள் இஷ்டம். ஆனால், உதவி என்று கேட்டு வருவோரை தாங்கள் மதிக்கத்தான் வேண்டும்.''

"குருதேவ் உன்னைப்பற்றி நான் கேள்விப்பட்டுள்ளேன். அரசர்களை விட நீயும் உன்னைப் போன்றவர்களும்தான் என் முதல் எதிரி. எதிரிக்கு நான் உதவுவது கிடையாது!"

குருதேவ் ஆச்சரியப்பட்டான்.

"எதிரியா? நானா... எந்த வகையில்?"

"நீ நாத்திகன். உனக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. நாத்திகத்தை நாங்கள் வெறுக்கிறோம். சில சமயங்களில் அவர்களை கொன்றுவிட்டு சுடுகாட்டு வாயிலில் அவர்கள் பிணங்களை நட்டுவிடுவதும் உண்டு. உங்களைப் போன்றவர்களை பலி கொடுத்தால் சுடுகாட்டில் உள்ள தீய சக்திகளும்கூட எங்களை சரணடையும்."

பயங்கரமாக வந்த மடிராஜன் சொல்லைக் கேட்டு சாமுண்டர்யன் நடுநடுங்கினான். அவனை எப்படியாவது இங்கிருந்து வெளியேற்றி அடுத்த கணமே குதிரையில் ஏறி காட்டைவிட்டு தப்பிப்பதே உத்தமம் என்றுகூட அவனுக்குப் பட்டது. ஆனால், அந்த மடிராஜனை பில்வண குருதேவ் மேலும் வெறுப்பேற்றும் அளவுக்குத் தூண்டினான்.

"மடிராஜா! அப்படியானால் என்னைக் கொன்றுவிடும் உத்தேசம் ஏதும் உண்டா?" சிரித்துக் கொண்டே கேட்டான்.

"இந்தக் காகடிதுர்கா எனக்கு நண்பன். அதனால் அவன் நண்பனான நீ பிழைத்துப் போகிறாய். இருந்தாலும், என் உதவி உனக்குக் கிடைக்கவே கிடைக்காது!"

உறுதியாக வந்த மடிராஜன் சொல் பில்வணனை சற்று யோசிக்க வைத்தது. பில்வணன் எழுந்தான். மடிராஜனிடம் தைரியமாக சென்றான். அவனை நெருங்கினான். அவனுக்கு மட்டுமே கேட்கும் குரலில் நிதானமாகப் பேசினான்,

"என் உதவியின் அளவு தெரியாமல் பேசுகிறாய் மடிராஜா! நீ எதற்காக வாழ்நாளெல்லாம் அலைகின்றாயோ, உன் லட்சியத்தேவை எதுவோ, அந்தத் தேவையை என் ஒருவனால் மட்டுமே இந்த உலகத்தில் பூர்த்தி செய்ய முடியும்!"

நிறுத்தி நிதானமாக சொல்லப்பட்ட வார்த்தைகள் முதல் முதலாக மடிராஜனை மயக்கியது. அவன் அலட்சியத்தை



யும் அறவே நீக்கியது. அங்கு உட்கார்ந்த மூவரையும் பார்த்து சற்று நேரம் வெளியே காத்திருக்கும்படி சொல்லிவிட்டு பில்வணனின் கையைப் பற்றி தரதரவென இழுத்துக் கொண்டு கர்ப்பக் கிருகத்துள் சென்றான். அங்கு ஏற்கனவே வைக்கப் பட்டிருந்த ருத்திராட்ச மாலையையும் மண்டை யோட்டையும் கையில் எடுத்தான்.

"பில்வணா! இவற்றை எப்போது கையில் எடுத்தேனோ, அப்போது என் வாயிலிருந்து சத்தியம் மட்டுமே வெளிவரும். சொல். என் தேவை என்னவென்று நீ அறிவாயா?"

"அறிவேன் மடிராஜா! இந்த மண்டையோடு உன் குருநாதரின் மண்டையோடு. அவன் வாழ்நாளெல்லாம் கெட்ட தேவதைகளோடு போராடி போராடி உன்னாலும் உதவமுடியாமல் உயிரையும் இழந்தான். அந்த நிலை உனக்கு வரக்கூடாதென்றால் நீ செய்ய வேண்டியது..."

சட்டென அவன் வாயை மூடினான் மடிராஜன்.

"வேண்டாம். அதைச் சொல்லாதே. உனக்கு என்னைப் பற்றி அதிகமாகவே தெரிந்திருக்கிறது. இந்த விஷயம் வெளியே உள்ளவர்களுக்கும் தெரியுமா?"

"தெரியாது! நான் சொல்லவும் மாட்டேன். இப்போது சொல். என்னைப் போன்றவர்கள்தான் உனக்கு நண்பராக உரிமைப்பட்டவர்கள். என்னைப் போன்ற நண்பர்களைக் கொன்று சவத்தை சுடுகாட்டு வாயிலில் நட்டுவிட்டு நன்றாக காய்ந்தவுடன் கிடைக்கும் மண்டை ஓட்டை கையில் எடுத்துச் செல்லப் போகிறாயா? இல்லை, என் பேச்சைக் கேட்டு எனக்கு உதவி செய்து பதில் உதவியாக உன் வாழ்நாள் தேவையை பூர்த்தி செய்து கொள்ளப் போகிறாயா? நான் எதற்கும் சித்தம். நன்றாக யோசித்துச் சொல்..."

ஒரு கணம் கூட யோசிக்கவில்லை மடிராஜன்.

"உனக்கு உதவப் போகிறேன். நீ எந்த உதவியையும் கேட்கலாம். இதோ பார். என்னை தலைவனாக ஏற்கும் ஆயிரத்தெட்டோர் காபாலிகள் ஊரெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் நீ சொல்லியபடி ஆடுவர். ஆனால், என் தேவையை நீ பூர்த்தி செய்ய வேண்டும்."

''அப்படியே சரி சரி வா! நண்பர்கள் நீண்ட நேரம் காத்திருக்க நேரிட்டால் எதிரியாக மாறிவிடும் சூழ்நிலை உருவாகலாம். அதிலும் அந்த சாமுண்டர்யன் சரியான பயந்தாங்கொள்ளி. நாம் மண்டபத்துள்ளேயே பேசுவோம்.''

மறுபடியும் மண்டையோட்டை அங்கேயே வைத்துவிட்டு பில்வணனுடன் வெளிமண்டபத்துக்கு வந்தான். காகடிதுர்கா ஆச்சரியத்தோடு குருதேவைப் பார்த்தான்.

''எங்கள் குருதேவ் கடவுள் நம்பிக்கை அற்றவரே தவிர அவருக்கு எல்லா மாய மந்திரங்களும் தெரியும். இல்லாவிட்டால் மடிராஜனையும் மசிய வைத்திருப்பாரா என்ன?''

''காகடி! நான் மடிராஜனிடம் சிநேகிதம் கேட்டேன். அவரும் உள்ள நிலைமையை முழுவதுமாக உணர்ந்துதான் ஒப்புக் கொண்டுள்ளார். மடிராஜரே! இங்கே நான் ஒருவன்தான் நாத்திகம் பேசுவேனே தவிர, இவர்கள் இருவரும் அப்படி இல்லை. ஆனால், இவர்கள் தமிழ் தேசத்தில் இருப்பவர்கள் இல்லை. தமிழ் தேசத்தில் தற்சமயம் எங்கள் அதிராசேந்திரனின் ஆட்சி நடக்கிறது. அந்த ஆட்சி அமையப் பெற்றதே எங்கள் சாளுக்கியர் தயவில்தான். எங்களுக்கு இந்த ஆட்சி பிடித்துள்ளது. ஆனால் மக்களுக்கு, தமிழர்களுக்கு எங்களைப் பிடிக்கவில்லை. நாடெங்கும் மக்கள் எங்களைப் பார்த்து கொதிப்படைகிறார்கள். எங்களால் காஞ்சியை விட்டு தெற்கே போகமுடியாத நிலை உள்ளது. இந்த மக்கள் மனதில் மாற்றம் வேண்டும். மக்கள் மாறவேண்டும்.''

''மக்கள் உங்களைப் போற்றும்படி செய்ய வேண்டுமா? அது எங்களால் எப்படி முடியும் குருதேவ்?''

''வேண்டாம்! மக்கள் எங்களைப் போற்றவும் வேண்டாம். புழுதி வீசி தூற்றவும் வேண்டாம். ஆனால், அவர்கள் கவனம் எங்களை விட்டு வேறு திசையில் திரும்ப வேண்டும். கவனம் திசை மாறுவதால் பலன்கள் பரிபூர்ணமாக எங்களுக்குக் கிடைக்கும் வழியை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''சரி... அதற்கும் என் உதவிக்கும் என்ன சம்பந்தம்?''

''உங்கள் காபாலிகக் கும்பல் மொத்தம் ஆயிரத்தெட்டோர் இல்லையா? அவர்கள் உதவி செய்தால் அதுவே போதும். இன்னமும் சொல்லப்போனால் நான் கேட்பது உதவியே இல்லை. நீங்கள் இதுவரை செய்யாமல் போன ஒரு கடமையை செய்யுங்கள் என்றுதான் கேட்கிறேன்.''



''புரியவில்லை குருதேவ்! நான் காடுகளில் அதுவும் சுடுகாடுகளில் வசிப்பவன். எனக்கு உன்னைப் போன்ற நகரத்தார் சுற்றி வளைத்துப் பேசுவதெல்லாம் புரியாது. நேரடியாக விஷயத்துக்கு வா...''

பில்வணன் அந்த அவசரக்காரனிடம் நிதானமாகவே பேசினான். மற்ற நால்வரும் கூட நிதானமாகவே கேட்டனர். ஏன், உள்ளே சாதுபோல வீற்றிருந்த கபிலேஸ்வரரும் கூட நிதானமாகவே கேட்டு கொண்டிருப்பார். ஆனால் அந்த நிதானம் வெளியே சாளரத்தின் விளிம்பில் இருந்து கேட்ட உருவத்திற்கு மட்டும் இல்லை போலும். பில்வணன் வார்த்தைகளில் உள்ள சக்தி அந்த உருவத்தை தாக்கியதோ என்னவோ, அந்த சக்தி தாளாமல் வெளியே 'ஹோ' வென்ற அருவியின் சப்தத்தை மீறி டமால் என்ற ஓசையுடன் கீழே விழுந்தது.

அருவியின் ஓசையையும் மீறி விசித்திரமாக சப்தம் கேட்டதால் மண்டபத்தில் இருந்த ஐந்து பேரும் அதிர்ந்தனர். சாமுண்டர்யன் மண்டபத்துள் சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் எதிர்பார்த்தபடியே பயங்கர மிருகங்கள் ஆலயத்தை முற்றுகையிட்டு விட்டதோ என்னவோ? தன் உடைவாளை வெளியே உருவிக்கொண்டு மற்ற நால்வர் முன் செல்ல மண்டபக் கதவை திறந்து வெளி வந்தனர்.

ரேவிநாயகன் ஒரு கையில் தீப்பந்தத்துடன், மறுகையில் வாளை படுவேகமாக முன்னே நீட்டி சுழற்றிக் கொண்டே வெளியே சென்றான்.

## 8

## 'சிவாத்பரதரம் நாஸ்தி'

**கா**லையில் சர்வதேவாவை யானைப்பள்ளத்தில் தள்ளுமுன் பில்வண குருதேவ் காபாலிக மடிராஜனை சந்திக்கும் செய்தியை அறிந்து கொண்ட ஆசிரியர் பின்னர் காளிங்கனுடன் பகிர்ந்து கொண்டார். இத்தனை தீவிரமாக

பில்வணன் இறங்குவான் என்று காளிங்கன் எதிர்பார்க்கவில்லைதான். 'சிறிய தந்தை உயிருடன் இருக்கும் வரை மரியாதைக்காக மக்கள் இவர்களைப் பொறுத்துக் கொண்டார்கள். நாமும் இவர்கள் விஷயத்தில் அதிகம் தலையிடவில்லைதான். இனியும் இப்படியே இருந்தால் நம்மை பில்வணன் விழுங்கி விடுவான்' என்றெல்லாம் ஆசிரியரிடம் சொன்னவன் சக்கரவர்த்தியாரின் இறுதிச் சடங்குகளுக்காக முதலில் ஆசிரியரை அனுப்பிவிட்டு பில்வணனின் திட்டம் என்ன என்பதை கண்டுபிடிக்கத்தான் அவனும் அன்று மாலையே கபிலஸ்தலம் வந்து ஒளிந்து கொண்டான்.

மடிராஜன் பூர்வாசிரமத்தில் கர்மநாட்டிலிருந்தபோது வீர சைவனாகத்தான் இருந்தான் என்பதாக காளிங்கன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால், அப்படிப்பட்டவன் ஏன் காபாலிகன் ஆனான் என்பது அவனுக்குப் புரியவில்லை. காபாலிகம் காபாலிகரால் சுடுகாட்டில் வளர்க்கப்படும் மதமாக இருந்தாலும் சமீப காலங்களில் நரபலி அதுவும் இளம்பிஞ்சுகளை பலிகொடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தது அரசர்களுக்கெல்லாம் பெருந்தலை வலியாக மாறிக் கொண்டிருந்தது. ஏறக்குறைய எல்லா நாட்டு அரசர்களுமே காபாலிகர்களை தங்கள் நகரங்களிலோ, ஊர்களிலோ தென்படக்கூடாது என்று ஆணையிட்டு அவர்கள் போக்குவரத்துக்குத் தடை போட்டிருந்தனர். சில சமயம் காபாலிகர் எங்காவது இரவில் ஏதாவது ஊர்ப்பகுதியில் தென்பட்டால் பொதுமக்களே அவர்களைப் பிடித்து ராஜாவின் அனுமதியோடு சிறையில் அடைத்து விடுவதும் உண்டு. அப்படிப்பட்ட காபாலிக மடிராஜனுடன் நாத்திகனான பில்வணனுக்கு என்ன வேலை இருக்க முடியும் என்று முதலில் அவனுக்கு விளங்கவில்லைதான்.

கபிலேஸ்வரர் கோயில் கொண்டுள்ள கபிஸ்தலத்தைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தாலும் இப்போதுதான் முதன் முறையாக இங்கு வருகை தந்துள்ளான் காளிங்கன். மாலையே கடும் இருட்டு சூழ்ந்து கொண்ட அந்தக் காட்டுப் பகுதியை தெரிந்தே தேர்ந்தெடுக்கிறான் பில்வணன் என்று மனத்துள் சொல்லிக் கொண்டான். சிறிய தந்தை இறுதிச் சடங்குகள் முடியாத நிலையில் கோயில் உள்ளே செல்வது தர்மமல்ல என்பதால் வெளிப்பிரகாரம் இருந்த இடத்திலிருந்தே கபிலேஸ்வரரை தரிசனம் செய்தவன்



அருவி விழும் இடம் அருகே இருந்த சாளரம்தான் ஒளிந்து கொள்ள ஏதுவாகவே அகலமாக கட்டப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு சாளரத்தின் மீதேறி அதன் விளிம்பில் அப்படியே குனிந்து உட்கார்ந்து கொண்டான். அந்தச் சாளரம் வழியே உள்ளே மண்டபமும் கபிலேசுவரன் சந்நிதியும் கூட நன்றாக தெரிந்ததால் அப்படி அமர்ந்த இடத்திலிருந்தே கபிலேசுவரருக்குக் கூட இப்படி ஒரு மறைவான இடத்தைக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டான்.

ஒரு நாழிகை நேரம் கடந்தது. காடு மேலும் இருளடைந்து அருவி விழும் ஓசை கூட சற்று பெரிதானது போல இருந்தது. அந்த அருவி ஓசையிலும் தூரத்தே கேட்ட குதிரைகளின் குளம்படி ஓசையால் தான் எதிர்பார்த்தவர்கள் வந்துவிட்டார்கள் என்பதை புரிந்து கொண்டான்.

வந்தவர்களில் பில்வணனைத் தவிர வேறு யாரும் காளிங்கனுக்கு பரிச்சயமில்லைதான். ஆனால் அவர்கள் பேச்சிலிருந்து வந்தவர்களின் பூர்வோத்தமங்களை புரிந்து கொண்டான். மடிராஜன் வந்ததும் பில்வணன் அவன் கபிலேஸ்வரர் சன்னிதியில் ஏதோ பேசியுள்ளான் என்பதும், அதனால் மடிராஜன் மகழ்ச்சியாகி உதவ முற்பட்டுள்ளான் என்பதையும் புரிந்து கொண்டான். ஆனால் பில்வணன் என்ன விதமான மாயப்பொடி போட்டு மயக்கினான் என்பது அவனுக்குத் தெரியவில்லைதான். ஆனால் பில்வணன் பேசப் பேச அவன் திட்டம் புரிய ஆரம்பித்தது காளிங்கனுக்கு. சாளரத்துக்கு நேர் கீழே இவர்கள் பேசியதால் வெகு தெளிவாகவே கேட்டது. மேலும் அருவி விழும் ஓசை எங்கும் கேட்டதால் அவர்களும் சற்று சப்தம் போட்டே பேசுகிறார்கள் என்பதும் அவனுக்கு சௌகரியமாகவே இருந்தது. பில்வாணனின் வார்த்தையில் தேன் கலந்து பேசினான்.

''மடிராஜரே! உங்களைப் பற்றியும் உங்கள் குழுமத்தைப் பற்றியும் மிக விவரமாக அறிந்து கொண்டவன் நான். நீங்கள் ஒரு செயலில் இறங்கினால் மிகத் தீவிரமாக இறங்கி சாதித்து காட்டுவீர்கள் என்றும் எனக்குத் தெரியும். எங்கோ வேங்கி தேசத்தில் வீரசைவனாக இருந்த நீங்கள் இன்று மிகப்பெரிய காபாலிக மதத்துக்கே தலைவனாகி அனைத்து அரசர்களும் நடுநடுங்க சாகஸம் செய்து வந்துள்ளீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்!''

ஏன் இப்படி ஒரேயடியாகத் தூக்கி வைக்கிறான் பில்வணன் என்று முதலில் புரியாவிட்டாலும் காளிங்கனுக்குப் போகப் போகப் புரிந்தது.

''ஆனால் மடிராஜரே! உங்கள் தீவிரம் போதாதுதான். எத்தனையோ கோடி மக்களில் உங்கள் காபாலிகக் குழுமம் கடுகைப் போன்றதுதான். அந்த எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். அவர்கள் அனைவருக்கும் என் நண்பராக ஆகிவிட்ட நீங்கள் ஒருவரே தலைவனாக இருக்க வேண்டும்.''

மடிராஜன் சிரித்தான்.

''பில்வணா! நானும் அதற்காகத்தான் இத்தனை நாளும் போராடி வருகிறேன். ஆனால் என் வளர்ச்சியில் நீ என்ன சாதிக்கப் போகிறாய். நாத்திகனான உனக்கு என்ன பலன் கிடைக்கும்?''

''தோழரே! என் பலனைப் பற்றிப் பிறகு பேசுவோம். முதலில் என் தோழர்கள் அனைவரும் என்னால் பலன் பெற வேண்டும். என் இப்போதைய தோழர்கள் அனைவருமே என் சொல்படி கேட்பதால் அவர்களுக்கு வேண்டியதை சாதித்து வருகிறார்கள். என் சீடன் விக்கிலனின் பூர்வீகம் உமக்குத் தெரியும். சாதாரண சாளுக்கிய இளவரசன் அவன். ஆனால், நாளை இந்த பூ மண்டலத்துக்கே சக்கரவர்த்தியாக்கப்படுகிறான். இதோ நம் சாமுண்டர்யன். ஒரு காலகட்டத்தில் அவனுக்கு சிறு வீடு கூட சொந்தம் கிடையாது. இன்று அவன் விக்கிலனின் வலது கரமாகி தரணிக் கோட்டைக்கு அதிபதியாகி உள்ளான். இதோ உன் நண்பன் காகடிதுர்கா இன்று கோதாவரி பாயும் தட்சிண பீடபூமியின் நாயகன். என் மெய்க்காவலன் ரேவி நாயகனுக்குக்கூட உன் பூர்வீகமான கர்மதேசத்தைத் தருவதாக வாக்களித்துள்ளேன். இவர்கள் அனைவருமே என் நண்பர்கள். என்னால் பலனடைந்தவர்கள்.''

மடிராஜன் மசியவில்லைதான்.

''பில்வணா! எனக்கு இவர்களைப் போல நாடு பிடிக்கும் ஆசையில்லை. என் தேவையே வேறு. என்னால் என்ன உதவியை எதிர்பார்க்கிறாய் என்று மட்டும் சொல்!''

''மடிராஜா! இவற்றை ஏன் சொல்கிறேன் என்றால் என் எண்ணங்களை மற்றவர்களைப் போலவே நீயும் புரிந்து



கொள்ளவேண்டும். என்னைச் சேர்ந்தோர் தாழ்ந்து போனதில்லை என்பதை நீ அறியவேண்டும். சரி உன் உதவி என்ன என்று கேட்டாய் அல்லவா? நீ உன்னுடைய மதத்தை சற்று விரிவுபடுத்த வேண்டும்.''

மடிராஜன் சிரித்தான். ''மதங்களை மறுப்பவன் ஒரு மதத்தை விரிவாக்கச் சொல்லலாமா?''

''இதோ பார் மடிராஜா! என்னை எதிர்த்து எந்தக் கேள்வியும் இனி கேட்காதே. அது உன் நன்மைக்காகவே சொல்கிறேன். நான் என்ன சொல்கிறேனோ அதன்படி செய்துவிடு...போதும்.''

கண்டிப்பும் உறுதியும் கலந்த சொல் மடிராஜனையே சற்று கலக்கப்படுத்தியதோ என்னவோ.

''சரி சொல்.''

''இனி நீயும் உன் பரிவாரங்களும் சிவ நாமத்தையே ஓத வேண்டும்.''

''நாங்கள் நாளும் அதைத்தானே செய்து வருகிறோம்.''

''அது உங்களுக்குள்... இனி நீங்கள் சோழ தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு கோவில் வாசலிலும் ஓத வேண்டும்...''

என்று சத்தம் போட்டுச் சொன்னவன் மடிராஜனைக் கூர்ந்து பார்த்தான்.

''என்ன மடிராஜா! சிவநாமத்தை சாதாரணமாக ஓதக்கூடாது. * 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்று நீங்கள் சிறு சிறு குழுக்களாக மாறி ஊரெங்கும் சென்று ஒவ்வொரு இல்லத்து வாசலிலும் முழங்க வேண்டும். உங்கள் கண்களில் கூர்மை, உங்கள் வாக்கினிலே கடுமை, உங்கள் செய்கையிலே ஆவேசம், கையிலே சூலத்தோடு ஓங்காரமாய் கூவும் சிவன் நாமம் ஆதி மனிதனையும் உங்கள் பக்கம் இழுக்க வேண்டும். உங்கள் ஒரே குறிக்கோள் பயங்கரத்தை மக்கள் மனதில் பரப்புவது. பயம் ஒரு மாபெரும் ஆயுதம். உங்களையும் உங்கள் கூவலையும் கண்டு மக்கள் மயங்கவேண்டும். அச்சப்படவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் வைதீகர்கள் உங்களுக்கு

* **'சிவாத் பரதரம் நாஸ்தி' : சிவத்தைக் காட்டிலும் மேலானது இல்லை.**

தடைக்கல்லாகத்தான் இருப்பார்கள். பிராம்மணர்கள் நியாயம் பேசுவார்கள். ஆனால், அச்சம் அவர்களையும் ஆட்டுவிக்க வேண்டும். அந்த அச்சத்தை அரசியல் ரீதியாக நானே செய்வேன். ஏனெனில், சோழநாட்டு அரசன் என் சொல்படி கேட்பவன். அவனை வைத்து அரசியல் ரீதியாக என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் நாங்கள் செய்து கொள்வோம். உனக்கும் அந்த வசதிகளில் பங்கு உண்டு.''

உற்சாகமாகிப் போனான் மடிராஜன்.

''அட்டகாசம் பில்வணா! எனக்குப் பிடித்தமான வேலையைப் போய் உதவி என்கிறாய். ஆனால் பில்வணா... எங்களுக்கும் பொறுமைக்கும் வெகுதூரம். இந்தப் பிராம்மணர்களைப் போல எதற்கும் வாதம் செய்து பொழுதை வீணாக்குபவர்களும் நாங்கள் இல்லை. எங்களுக்கு எதிலும் தீவிரம்தான். எங்களை எதிர்த்து யாரேனும் கேள்வி கேட்டால் அவர்கள் உயிர் உடலில் தங்காது.''

பில்வணன் சிரித்தான்.

''எனக்கும் அதுதான் தேவை மடிராஜா! நீங்கள் அனைவரும் உங்கள் வழக்கப்படி செயல்படவேண்டும் என்று நானே சொல்கிறேனே. உங்களுக்கு நம் சோழ அரசாங்கம் உரிய பாதுகாப்பைக் கொடுக்கும். முதல் வேலையாக நாளையே ஆங்காங்கே சிறைகளில் உள்ள உங்கள் கூட்டத்தார் விடுவிக்கப்படுவார்கள்!''

''ஓ! மிக நல்லது பில்வணா! நாங்கள் எப்போது எங்கே தொடங்கவேண்டும் என்று சொல்... வேண்டாம்... எங்களுக்கு உத்தரவிடு!''

மறுபடியும் சிரித்தான் பில்வணன்.

''எதையும் கோயிலில் வைத்துத் தொடங்குவதுதான் திராவிட நாட்டு ஆசாரம். நீயும் அப்படியே செய். உன்னை எதிர்ப்போர் யாரேனும் இருந்தால் உன் சூலத்தாலேயே கொன்றுவிட்டு சவத்தைக் கோயில் வாசலில் போட்டு விடு. அல்லது கம்பம் கட்டி நட்டு விடு. அதுதான் அச்சத்தின் ஆரம்பம்.''

''நாங்கள் பொதுவாக சுடுகாடு முன்பு செய்வதைக் கோயிலிலேயே செய்யச் சொல்கிறாய்...''



மடிராஜனும் சிரித்தான். அங்கிருந்த நால்வரும் கூட சேர்ந்து நகைத்தனர். ஆனால், சாளரத்திலிருந்து கேட்ட காளிங்கனுக்கோ உடலே பற்றி எரிந்தது. அந்த எரிச்சலை மேலும் கூட்டினான் பில்வணன்.

''மடிராஜா! இன்னொரு உதவியையும் செய்ய வேண்டும்.''

மடிராஜனுக்கு இருந்த உற்சாகத்தில் பில்வணன் எதைக் கேட்டாலும் செய்யத் தயங்கமாட்டான் என்பது புரிந்தது.

''கேள் பில்வணா! ஆட்சியாளர்கள் எங்கள் பக்கம் ஆதரவளிக்கப் பெரும் உதவி செய்கிறாய். கேள். எத்தனை உதவிகள் வேண்டுமானாலும் கேள்.''

''இதோ இந்த மலைகளின் உச்சியில் கோயில் கொண்டுள்ளானே திருவேங்கடமுடையான். அப்படிப் பட்டவன் ஒருவன் இருந்தால் நீ அவனையும் மாற்ற வேண்டும். உன் கூட்டத்தாரோடு அவனையும் சேர்க்க வேண்டும்.''

''நீ சொல்வது புரியவில்லை பில்வணா!''

''அதாவது திருவேங்கடத்தான் சிவரூபம் என்று முதலில் ஊரெங்கும் பரப்ப வேண்டும்.''

''அதெப்படி? நாங்கள் உருவச் சிலைகளை வழிபடுவது கிடையாது. திருவேங்கடமுடையான் சங்கும் சக்கரமும் கொண்டு நெட்ட நெடுக நிற்கும் திருமால் சிலையாகவே எல்லோரும் நினைக்கிறார்கள். நான் திடீரென அவனை சிவரூபம் என்றால் சிரிப்பார்கள் பில்வணா!''

பில்வணன் எழுந்தான். அவன் எழுந்ததால் அவன் நண்பர்களும் எழுந்தார்கள்.

''மடிராஜா! நீ சொல்வது பாதி உண்மை. உன்னை யாருமே நம்பமாட்டார்கள். ஆனால் சொல்வதை பலமுறை சொல்லிவை. யாராவது காரணம் கேட்பார்கள். அந்தச் சிலையின் கையில் மழுவும் உடலில் நாகாபரணமும் உள்ளதால் அது சிவம்தான் என்று சொல்லி வை. உன் சொல் மெல்ல மெல்ல அம்பலமேறும் வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன். இது நம் இருவருக்கும் பூரண பலன் கிடைப்பதில்தான் முடியும். உன்னாலும் உன் கூட்டத்தாராலும் முடிந்தவரை இந்த வேலைகள்

நிறைவேற்றப்பட வேண்டும். அதுவும் வேகமாக நிறைவேற்றப்பட வேண்டும். எத்தனை விரைவாக நீ உன் வேலையை முடிக்கிறாயோ அத்தனை விரைவில் உன் தேவையே உன்னை வந்து சேரும்.''

பில்வணன் சொல்லால் சற்று உடல் தளர்ந்தான் காளிங்கன். சோழநாடு நாசமாக அத்தனைத் திட்டங்களையும் கைவசம் வைத்திருக்கிறானே, இவன் திட்டங்கள் மட்டும் பலித்து விட்டால்... சற்றே தலையைச் சுற்றியது காளிங்கனுக்கு. அதனால் நிலை தவறி தடாலென பூமியில் விழுந்தான். விழுந்தவன் உடனடியாக பின்பக்கம் சென்று மறைந்து கொண்டான்.

ஆனாலும், உள்ளே இருப்பவர்களுக்கு ஏதோ அபாயம் இருப்பதாக பட்டிருப்பதால் அவர்கள் தீப்பந்தத்தோடு சாளரத்தின் வெளிப்பக்கம் வந்தார்கள். ரேவி நாயகன் தீப்பந்தத்தோடு வாளைச் சுழற்றி வந்ததைப் பார்த்த காளிங்கன் அவன் விழுந்த இடத்தின் அருகே வந்து நின்றதையும் கவனித்தான்.

ரேவி நாயகன் சுற்றுமுற்றும் தீப்பந்தத்தைக் காட்டிப் பார்த்தான். பிறகு காளிங்கன் விழுந்த இடத்தை ஆராய்ந்தான். சருகுகளும் சொத சொதவென தண்ணீர்பட்ட மணலும் ஏராளமாக இருந்தது அங்கே. மறுபடியும் பின்சென்று மேலும் சருகுகள் அருகே ஆராய்ந்தவன் அங்கே பதுங்கிக் கிடந்த முயல் குட்டி ஒன்றினைக் காதைப் பிடித்துத் தூக்கினான். முதலில் சாமுண்டர்யன்தான் நிம்மதிப் பெருமூச்சு விடுத்தான்.

மடிராஜன்தான் பேசினான்,

''பில்வணா! இந்தக் காட்டில் இந்த நேரத்தில் நம்மைத் தவிர வேறு யாருமே வரமுடியாது. சரி... நீங்கள் எச்சரிக்கையாக செல்லுங்கள். உங்கள் குதிரைகளை இங்குள்ள மற்ற மிருகங்கள் சாப்பிட்டுவிடப் போகிறது.''

சிரித்தான் அவன். மடிராஜன் சொல்லியபடியே மற்ற நால்வரும் குதிரையேறி வந்த வழியே புறப்பட்டு விட்டார்கள். மடிராஜன் அவர்கள் சற்றுதூரம் போகும்வரை அங்கேயே நின்றான். பிறகு கோயிலுள் சென்றான். ருத்திராட்ச மாலையுடன் கூடிய மண்டையோட்டினை கழுத்தில் அணிந்து கொண்டவன் சூலத்தோடு வெளியே வந்தான். மற்ற நால்வர் சென்ற பாதையில் செல்லாமல்



வேறு பாதைக்காகத் திரும்பினான். அப்போதுதான் அந்த அதிர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

வெளியே வந்து பாதை மாறிச் சென்றவனை சட்டென தன்மேல் துணியால் அவன் தலையை மூடிக் கட்டினான் காளிங்கன். அடுத்த கணம் அவன் கையில் உள்ள சூலமும் பறிக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டது. திடீரென முகம் மூடப்பட்டதால் மடிராஜனுக்கு மூச்சுத் திணறியது. சற்று மயக்கம் கூட ஏற்பட்டிருக்க வேண்டும். சற்றே அங்கேயே உட்கார்ந்து விட்டான். பிடித்த பிடியை விடாமல் அவன் அருகே உட்கார்ந்த காளிங்கன் முகத்தில் போட்ட துணியை சற்று இறுக்கினான்.

''மடிராஜா! உன் தேவை நிறைவேறாமலே இன்று உன் உயிர் பிரியப் போகிறது. ஐயோ பாவம்...''

''யார் நீ? என் தேவை அறிவாயா?''

என்று மடிராஜன் ஹீனமான குரலில் பேசியது காளிங்கனுக்குக் கேட்டது.

''தெரியாது. ஆனால் உன்னைப் போல காடுகளில் திரிபவன்தான் நானும். நீ சொன்னால் நானும் உதவி செய்யலாம்.''

''முட்டாள்... உன்னால் முடியாது. நானும் சொல்ல மாட்டேன்...''

''மடிராஜா! உன் கழுத்தில் மண்டையோட்டு மாலையை போட்டுக் கொண்டு இப்படிப் பேசினால் உன்னுடைய மகிமை எல்லாம் போய்விடும் என்று உனக்குத் தெரியாதா? உன் குருநாதர் முடிவு உனக்கும் வேண்டுமா... அப்படியானால் சரி. உன் குருவிடமே உன்னையும் அனுப்புகிறேன். பிறகு உன் மண்டையோட்டினை வைத்துக் கொண்டு நான் காடு மேடெல்லாம் சுற்றுவேன். என் தேவை கிடைக்கும் வரை சுற்றினால் போயிற்று.''

சிரித்தான் காளிங்கன்.

''முட்டாளே! என்னை விடு. உண்மையைச் சொல்கிறேன். என் தேவை அறிவாயா நீ? எனக்குத் தேவை உயிருள்ள பெண்; அரசகுலத்துப் பெண்; கன்னி கழியாதப் பருவப் பெண்; கறையில்லாத கன்னிப் பெண்; அதுவும் முழுமனதாக அவளாகவே முன் வந்து என் பலிபீடத்தில்

பலியாக வேண்டும். முடியுமா உன்னால்? அப்படி யாராவது முன் வந்தால் நீதானடா அண்ட சராசரங்களுக்கு அரசன். என் குரு அதற்காகவே கடைசி வரை அலைந்து அலைந்து மடிந்தான். உன்னால் அப்படி ஒருத்தியை பிடித்துக் கொண்டு வரமுடியுமா? இல்லையேல் நீ உன் வழி போ! என்னை என் வழியில் போக விடு...''

திமிறினான் மடிராஜன். ஆனால் அவன் வார்த்தை கொடுத்த அதிர்ச்சியும் அதன்படி நடந்தால், அப்படியானால் பில்வணன் இவனுக்குப் பதிலுதவியாக இவன் தேவையை பூர்த்தி செய்யப் போகிறானா... 'ஐயோ... கபிலேஸ்வரா... உன் மூன்றாவது கண்ணை உடனே திறந்து இவர்களை எரித்து விடு!' காளிங்கன் பதறினான்.

ஆனால் காளிங்கன் பிடி எளிதாவதை உணர்ந்த மடிராஜன் கிடைத்த அவகாசத்தை பயன்படுத்திக் கொண்டான்.

## 9

## தூண்டில் மீனும் அத்தை ஆட்டுவிக்கும் பொம்மையும்

அரசகுலத்துப் பெண் அதுவும் கன்னிப் பெண் அவளாகவே முன்வந்து தங்கள் பலிபீடத்தில் வந்து பலியானால் அண்ட சராசரங்களையும் ஆளமுடியும் என்பதுதான் அவன் தேவை என்றறிந்த காளிங்கன் சற்று நிதானம் இழந்தது வாஸ்தவம்தான். அதனால் மடிராஜனைப் பிடித்திருந்த அவன் பிடிகூட சற்று தளர்ந்தது. ஆனால் அதுதான் சமயமாக அமைய, தன்மீது சுற்றப்பட்ட துணியை சடாரென உருவி காளிங்கன் முகம் மீது வீசி தடதடவென அந்த இருட்டுப் பாதையில் ஓடினான். காளிங்கனும் அவனை விடவில்லை.

காட்டுப் பாதையானாலும் அதிகமான மக்கள் போக்குவரத்தால் சீரடைந்திருந்த பாதையாக இருந்ததினால் அவர்கள் துரிதமாக ஓடுவதும் எளிதாகவே இருந்தது. சற்றுத் தொலைவு ஓடியவன் அந்தப் பாதை ஓரத்தில் மரத்தில் கட்டப்பட்டிருந்த தன் குதிரையின் முடிக்கயிற்றை கபகபவென அவிழ்க்கத் தொடங்கினான். அவன் செயலில் படு அவசரம் இருந்தாலும் அந்த முடிச்சு அவிழ்க்கப் படாமல் முரண்டு பிடிக்கவே சட்டென அதை விட்டுவிட்டு அப்படியே குறுக்காக காட்டுக்குள் புகுந்துவிட்டான் மடிராஜன்.



காளிங்கனும் வேகமாக வந்து குதிரையை நெருங்கியவன் அவன் குதிரையை அப்படியே விட்டுவிட்டுக் காட்டினுள் புகுவதைக் கண்டான். அந்த இரவில் காட்டுக்குள் செல்வது உசிதமா என்று நினைத்துப் பார்த்தான். அதே சமயத்தில் அந்தக் குதிரையில் கட்டப்பட்டிருந்த ஓர் உருவம் தன் உடலை அசைத்து குதிரையையும் அசைத்து சற்று ஹீனமாக முனகவும் செய்தது. இருளில் குதிரை இருப்பதுகூட சரியாக தெரியாதலால் குதிரை ஏன் விசித்திரமாக சப்தம்போட வேண்டும் என குதிரை அருகே சென்றவன் கண்களுக்கு அந்தக் குதிரையின் மேல் ஒரு பெண் கிடத்தப்பட்டு வாய் கட்டப்பட்டு உடலையும் துணியால் குதிரையுடன் கட்டப்பட்டு இருந்தது தெரிந்தது.

காளிங்கன் அந்தப் பெண்ணை ஆச்சரியமாகப் பார்த்தான். இருள் அந்தப் பகுதியில் மேலும் கருமையடைந்து கிடந்ததால் அந்த உருவம் சரியாகத் தெரியாவிட்டாலும் அந்தப் பெண்ணின் கண்கள் மட்டும் பளிச்சென இருந்தன. அருகில் வந்தவனை உம்... உம்... என் துணி வைக்கப்பட்டிருந்த வாயால் ஏதோ சொல்ல முயன்றாள்.

''நீ அரசகுமாரியா?'' காளிங்கன் அவசரமாக கேட்டான். தலையை மேலும் கீழும் ஆட்டினாள்.

''சற்று அப்படியே இரு'' என்று சொன்னவன் மடிராஜன் ஓடிய காட்டுப்பகுதியின் உள்ளே புகுந்தான். சற்று தூரம் கண்களையும் செவிகளையும் கூராக்கிக் கொண்டு எங்காவது ஏதாவது வித்தியாசமான ஓசை கேட்கிறதா என்று பார்த்தான. அவனுக்குத் தெரிந்து விட்டது. மடிராஜன் காட்டுவழிகளை அதிகம் அறிந்தவன். அவனைப் பிடிப்பது தற்சமயம் முடியாத செயல். மறுபடி அந்தப் பெண்ணருகே வந்தான்.

''ச்சே! தப்பிவிட்டான். இவர்களைப் போன்றவரைக் கண்டவுடனே குத்திக் கொன்றுவிட வேண்டும். இன்று அவன் நல்ல வேளை... அவன் தப்பிவிட்டான். ஆனால் உன்னைப் போன்றோர்க்குப் போதாத வேளை ஆரம்பித்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெண்ணின் கட்டுகளை விடுவித்து வாயிலிருந்து துணியையும் தூர எறிந்தான்.

''என்ன மனிதன் நீ? குதிரையில் கட்டப்பட்ட என்னை முதலில் விடுவிப்பாயா? அதை விட்டு விட்டுக் காட்டில் ஓடப்பார்த்தாயே... பயந்தே போய்விட்டேன். எங்கே நடுக்காட்டில் இப்படியே விட்டுவிட்டு ஓடிப்போய் விடுவாயோ என்று... அந்தத் தில்லைக் கூத்தன் என்னைக் கைவிடவில்லை. மறுபடியும் உன்னை அனுப்பிக் காப்பாற்றி விட்டார் பார்த்தாயா?'' என்று படபடவென பேசிய அந்தப் பெண் இருகரங்களையும் மேலே தூக்கி கைகூப்பி

''இடரைக் களையும் எந்தாய் போற்றி! ஈச போற்றி!
இறைவா போற்றி! தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி! ''

என்று கண்களை மூடி துதிக்க ஆரம்பித்து விட்டாள்.

காளிங்கன் தன்னை மறந்தான். மடிராஜனையும், பில்வணனையும் மறந்தான். நள்ளிரவில் நட்ட நடுக்காட்டில் கையை மேலே கூப்பி சிவநாமம் போற்றும் அந்த அரசகுமாரி உடனடியாக அவனைக் கவர்ந்திழுத்தது என்னவோ உண்மைதான்.

''பெண்ணே! என்ன இது? உன் சிவபூசைக்கு நேரம் காலம் கிடையாதா?''

''நள்ளிரவில் நடனம் ஆடிய கூத்தனைப் போற்றுவதற்கு நேரம் காலம் தேவையில்லை. வீரனே... சரி... சரி... நாம் எங்கு இருக்கிறோம். இங்கிருந்து காஞ்சி எவ்வளவு தூரம்?''

விந்தையாய்ப் பார்த்தான் காளிங்கன்.

''அரசகுமாரி! நீ எந்த ஊர் அரசரின் குமாரி. அதை முதலில் சொல்!''

''நான் அரசகுமாரிதான் என்பது உனக்கெப்படித் தெரியும். அதை சொல் முதலில்...''

''அந்தப் பாழாய்போன காபாலிகனுக்கு அரசகுமாரிகள் மீதுதான் கண். போகட்டும். நீ எந்த ஊரைச் சேர்ந்தவள் என்பதை சொல்லாவிட்டாலும் இந்தக் காபாலிகனிடம் எப்படி சிக்கிக் கொண்டாய்? அதையாவது முதலில் சொல்வாயா?''

''சொல்கிறேன்! ஆனால் இந்தக் காட்டில் நின்று கொண்டே சொல்வதை விட குதிரையில் சென்று கொண்டே பேசுவது நல்லது. இந்த இரவு முடிவதற்குள் நான் காஞ்சியில் இல்லையானால் சக்கரவர்த்தியாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வந்திருக்கும் அதிகைமான் அரசர் தன் மகளைக் காணாமல் ஊரெங்கும் தேடுவார்.''

அழகாக சிரித்தாள் அவள்.

''அதிகமான் புத்திரியா நீ?''

''ஏய்... என்ன... அதிகைமான் அரசரின் மகள் என்று சொல்லியும் மரியாதைக் குறைவாய் கேள்வி கேட்கிறாய். போகட்டும். நான் குதிரையில் ஏறிக்கொள்கிறேன். வழித்துணையாய் காஞ்சி வரை வருவாயா?''

''ஒரே குதிரையில் இருவரா?''

''ஆபத்துக்குப் பாவமில்லை. நடுக்காட்டில் என்னைக் காப்பாற்றி இருக்கிறாய். சிவனாரின் சிவகணம் போல உன்னை நினைத்துக் கொள்கிறேன். என்ன வருகிறாயா?''

'காலையில் கன்னோசி நாட்டு அரசகுமாரி. இரவில் தகடூர் அதிகைமான் குமாரியா' காளிங்கன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அடக்கமுடியவில்லை. அந்த சிரிப்பு வெளியிலும் வந்தது.

''ஏன் சிரிக்கிறாய்?''

''இல்லை... இனி சிரிக்கமாட்டேன் இளவரசியாரே! தாங்கள் குதிரையில் முன்னால் அமர்கிறீர்களா? இல்லை பின்பக்கம் உட்கார்ந்து வருகிறீர்களா?''

சற்று யோசித்தாள் அவள்.

''பின்பக்கமே உட்கார்ந்து வருகிறேன். அதுதான் நல்லது கூட''

''ஏனோ?''

''இதோ பார். அடிக்கடி கேள்வி கேட்காதே. சொன்னதைச் செய். நீ முதலில் ஏறு. பிறகு நான் ஏறுகிறேன்.''

ஏதும் பதில் பேசாமல் அவன் முன்னால் ஏற, அந்தப் பெண்ணும் பின்னால் ஏறிக் கொண்டாள். பயணம் தொடர்ந்தது. காலையில் காத்யாயினி முன்னே வர பின்னே இவன் வந்தான். இப்போது இந்தப் பெண்.

''பெண்ணே! உன் பெயர் என்ன?''

''அவந்திகா'' சட்டென சொன்னவள். ''என்ன மரியாதை குறைகிறது?'' என்று அவனை கேட்கவும் செய்தாள்.

''மன்னிக்க வேண்டும் இளவரசி அவர்களே! தாங்கள் சொல்லுங்கள். இந்தக் காபாலிகனிடம் எப்படி சிக்கினீர்கள்?''

வேண்டுமென்றே மரியாதையை சற்றுக் கூட்டியே கேள்வி கேட்டாலும் அவந்திகா சாதாரணமாகவே எடுத்துக் கொண்டாள்.

''நாங்கள் – அதுதான், நானும் என் தந்தையும் வீரர்களும் இன்று காலை சாதாரணமாகத்தான் தகடூரில் இருந்து சக்கரவர்த்தியைக் காண்பதற்காக காஞ்சிக்கு கிளம்பினோம். வரும் வழியில்தான் சக்கரவர்த்தியாரின் மரணச் செய்தி கிடைத்தது. தந்தை பாவம். பூரண அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டார். அவர் எதற்காக இன்று காலையில் காஞ்சிக்குப் புறப்பட்டாரோ அந்தக் காரியம் நிறைவேறாமல் போய்விட்டதே என்றுகூட புலம்பிக் கொண்டிருந்தார்.''

''எதற்காக புறப்பட்டாராம்?''

சாதாரணமாகத்தான் கேட்டான் காளிங்கன். ஆனால் பெருமூச்சு ஒன்றுதான் முதலில் பதிலாக வந்தது.

''சொல்ல இஷ்டமில்லாவிட்டால் அவசியம் இல்லை..''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை வீரனே. என்னை மரணத்திலிருந்து காப்பாற்றி இருக்கிறாய். நீ மட்டும் வரவில்லையென்றால் இந்நேரத்திற்கு அந்தக் காபாலிகன் எங்காவது சுடுகாடு பிடித்து பலிபீடத்தில் பலிவாங்கி இருப்பான். சொல்கிறேன். அதாவது என் தந்தைக்கு தற்போதுள்ள சோழ சாளுக்கிய உறவுமுறை அறவே பிடிக்கவில்லை. அதனால் பெண் பேரம் பேசுவது என்று பெண்ணையும் அழைத்துக் கொண்டு தகடூரில் இருந்து புறப்பட்டார்.''

''பெண் பேரமா?'' காளிங்கன் குரல் சற்று விசித்திரமாக கேட்டது அவளுக்கு. சற்று ஆவேசமானாள் அவள்.

''இல்லையா பின்னே? அரசகுமாரியாக பெண்கள் எதற்கு பிறக்கிறார்களாம்? எந்த ராஜகுமாரனுக்குக் கட்டி



வைத்தால் எந்த நாடு நிலைக்கும் அல்லது எந்த நாடு புதிதாக கிடைக்கும் என்பதற்காகத்தானே நாங்கள் பிறந்து தொலைத்திருக்கிறோம். இப்படி நாட்டுக்கு நாடு விரிவடைவதற்காக விலை பேச அரசகுமாரிகளைப் பயன்படுத்தாவிட்டால் ஒரு நாட்டின் வளர்ச்சி நின்று போய்விடாதோ...''

ஆவேசம் குரலில் இருந்தாலும் வார்த்தையில் அழுத்தம் கொடுத்துப் பேசிய அவந்திகாவை சற்று திரும்பிப் பார்த்தான் காளிங்கன். அவள் நீண்ட விழிகளிலும் இகழ்ச்சி ஏராளமாகவே காணப்பட்டது.

''அரசகுமாரி! ஏன் இப்படி உங்களைப் பற்றி ஏளனமாக சொல்லிக் கொள்கிறீர்கள். உங்களுக்கு அரசகுல வாழ்க்கை பிடிக்கவில்லையா? அல்லது பிடிக்காத ஒரு ராஜாவுக்கு உங்களைக் கட்டி வைக்கப் பார்க்கிறார்களோ?''

அவன் கேள்வியால் அவந்திகா கலகலவென சிரித்தாள். அவன் திரும்பாமலேயே அந்தச் சிரிப்பை செவியில் வாங்கிக் கொண்டு ரசித்தான்.

''வீரனே! நீ இரண்டாவதாகச் சொன்னாயே. அதுதான் எல்லா அரசகுமாரிகளுக்கும் இப்போது நடக்கிறது. இந்த அரசகுமாரிகள் ஒரு வகையில் தூண்டில்மீன் போன்றவர்கள். தந்தையார் வலைவிரித்து இந்தத் தூண்டில் மீனைப்போட்டு ஏதாவது பெரிய மீன் ஒன்று கிடைக்கிறதா என்று பார்ப்பார். பெரிய மீன் கிடைத்தால் அவருக்குப் பலன்... ஆனால், அந்தத் தூண்டில் மீனோ பெரிய மீனின் வாயில் பரிதாபமாக சிக்கி உயிர் விடும். நானும் ஒரு வகையில் தூண்டில் மீன். என் தந்தையும் வலை எடுத்துக் கொண்டுதான் பெரிய மீனுக்காக காஞ்சி புறப்பட்டார்!''

''நன்றாக இருக்கிறது. பெண்களுக்கென ஒரு உணர்ச்சி உண்டு என்பதையே மறந்துவிட்டால் எப்படி... சரி... சரி... அந்தப் பெரிய மீன் யாரோ?''

''வேறு யார்? உங்கள் புதிய மாமன்னர் வீராதி வீரர் அதிராஜேந்திரர்தான். அவர்தானே இப்போது புதிய சக்கரவர்த்தி. அவரைப் பிடிக்க வலை வீசப்படும். அதற்காக அதிகைமான் அரசர் அதிகாரபூர்வமாக பெரிய சக்கரவர்த்தியான வீரராஜேந்திரத் தேவரை சந்தித்து ''ஐயா! உங்கள் குடும்பத்துடன் நாங்கள் சம்பந்தம் செய்து கொள்ள ஏழு பிறவிகளாகவே முயற்சி செய்து வருகிறோம். இதோ இந்தப் பிறவியில் அந்தக் கொடுப்பினையை தாங்கள்

தந்தருள வேண்டும்'' என்று கோருவார். சக்கரவர்த்தியார் சுயநிலையில் இருந்தால் கண்டிப்பாக தந்தையாரின் கோரிக்கைக்கும் சம்மதம் சொல்வார். பிறகென்ன? நான் பாடவேண்டும், ஆடவேண்டும். அவர்கள் அந்தப்புரத்தில் மற்ற தூண்டில் மீன்களோடு சேர்ந்து பெரிய மீனுக்கு இரையாகி...'' அவந்திகா நிறுத்தியவள் காளிங்கனின் தோள் தொட்டுக் கேட்டாள்,

''ஏன் வீரனே! இதைவிட இந்தக் காபாலிகனின் பலிபீடத்தில் உயிர் விடுவது சிறந்ததுதானே...''

உணர்ச்சிகளைப் பலவகைகளில் காட்டிப் பேசிய அவந்திகா அவன் உள்ளத்தைப் பிசைந்தாள். அவள் கண்களில் கண்ணீர் சிறிய கேவல் ஒலியாக மாறியதால் ஓடும் குதிரையை சட்டென நிறுத்தினான். காட்டிலிருந்து வெளிவந்து ராஜபாட்டையாதலால் ஓரத்தில் நிறுத்தி வைத்து குதித்தான். அவள் அழுவதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

''ஏன் நிறுத்தி விட்டாய்?''

''நீங்கள் ஏன் கலங்க வேண்டும். இதோ பாருங்கள். பெண்கள் எப்போதுமே மென்மையாக இருக்கவேண்டும் என்பது தவறு. தேவைப்படும்போது நெஞ்சத்தைக் கடுமையாக்கிக் கொள்ள வேண்டும். எதிர்நீச்சல் போட்டுப் பழக வேண்டும். நியாயத்திற்காக போராடும்போது ஆண் பெண் பேதம் இல்லை. இதை அவ்வப்போது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.''

அவளும் குதிரையில் இருந்து இறங்கினாள். வானத்தில் அரைவட்ட நிலா ஒன்று அவள்மீது இரக்கத்தைக் காட்டும் வகையிலோ என்னவோ சற்று மந்தமாக வீசிக் கொண்டிருந்தது. குதிரையில் உட்கார்ந்து செல்வதை விட சற்று நடந்தால் மனதுக்கு நல்லது என்று தோன்றியதால் இருவருமே அருகருகே அந்த இரவில் நடந்து கொண்டே செல்ல குதிரையும் அவர்களுடனேயே ஒட்டிக் கொண்டது.

அவன் ஆறுதல் பேச்சு அவள் புண்பட்ட நெஞ்சுக்கு குளிரும் மருந்தாய் இருந்தது. என்னவோ தெரியவில்லை. அந்த வீரனிடம் அவள் எண்ணங்கள் அனைத்தையும் கொட்டிவிட வேண்டும் என்று அவள் மனம் விரும்பியது. ஆணும் பெண்ணும் பேசிக் கொள்ளவே சந்தர்ப்பம்



கிடைக்காத நிலையில் இருந்த அவளுக்கு அந்த ஆண் மகன்கூட நடப்பது ஏதோ ஒருவிதமான ஆனந்தத்தை ஏன் தருகிறது என்றுதான் புரியவில்லை. ஒருவேளை தன்னைக் காப்பாற்றினானே என்ற கருணையினாலா?

''வீரரே! இன்று மாலையில் காஞ்சி செல்லும் வழியில் அந்தச் செய்தி கிடைத்தபோது சக்கரவர்த்தியார் இறந்து விட்டதற்காக தந்தையார் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால், ஒரு அரசகுமாரியாக எனக்கு இந்தச் செய்தி ஒரு தற்காலிக விடுதலை உணர்ச்சியையே தந்தது. என் உணர்வுகள் தந்தைக்குப் புரியவில்லை. தன் திட்டம் நிறைவேறும் சந்தர்ப்பம் போய்விட்டது என்று ஆத்திரப்பட்டார். அவர் ஏறி வந்த குதிரையும் வேகமாகப் பறந்தது. நாங்களோ வேறு வழியில்லாமல் பின் தொடர்ந்தோம். வழியே ஒரு சிவன் கோயில். பாழடைந்த சிவாலயம். அந்த ஆலயத்தைத் தரிசித்து என் ஆண்டவனுக்கு ஏனோ நன்றி சொல்லத் தோன்றியது. என் ஆவலைத் தந்தையிடம் சொன்னேன். 'சாவு பார்க்கப் போகையில் சாமியைப் பார்க்க ஆசையோ' என்று ஏசிவிட்டு பின்னாடியே விரைவாக வரும்படி கட்டளையிட்டு சென்றார். நானும் கோபப்படுவது போல சற்று நிதானப்பட்டு பின்னால் நின்று அந்தக் கோயிலுள் சென்று இறைவனை, தென்னாடுடைய சிவனைப் போற்றி எனக்கொரு வழி காண்பிக்குமாறு கோரினேன்.''

அவள் நிறுத்திவிட்டு சிரித்தாள்.

''அவன் எனக்கு இந்த வழியைக் காண்பித்து விட்டான் போலும். திடீரென்று ஒரு காபாலிகன் முன்வந்து மயக்கப்பொடியை முகம் மீது வீசினான். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மயக்கம் தெளிந்து பார்க்கையில் வாய் மூடப்பட்டு குதிரையில் கட்டப்பட்டு அந்தக் காட்டில் விடப்பட்டதை உணர்ந்தேன். அதன் பிறகு நடந்தது நீங்கள் அறிந்ததுதானே...''

பெருமூச்சு விட்டாள் அவந்திகா. துயரத்திலும் இந்தப் பெண் மிக அழகாகத்தான் இருக்கிறாள். அதிகைமானுக்கு இத்தனை அறிவுள்ள அழகான பெண்ணா? தான் காலையில் பார்த்த காத்யாயினிக்கும் இவளுக்கும்தான் எத்தனை வித்தியாசம். அவள் மயக்கும் மோகினி. அவளுக்கு இவள் நேர்மாறானவள். மனதைத் திறந்து பேசுபவள். அவள்

கள்ளம் நிறைந்தவள். இவளிடம் கள்ளமும் இல்லை; கபடமும் இல்லை. ஆனால் ஒன்று. காத்யாயினி தான் எதற்காக செயல்படுகிறோம் என்பதை உணராமலே மற்றவர்கள் நன்மைக்காக பலியிடப்படுபவள்தான். ஆனால் இவளுக்குத் தன் நிலை புரிந்துள்ளது. புரிந்தும் இவளைப் பலியிடவே இவள் தந்தை விரும்புகிறார். ச்சே! பாவப் பிறவிகள் இந்தப் பெண்கள்.

திடீரென்று தன் நிலை அவன் நினைவுக்கு வந்தது. ஒரு முழுநாளில் எத்தனை வித அனுபவங்கள். சிவ... சிவா... இதுநாள் வரை பெண் சகவாசமே இல்லாத எனக்கு இந்த இரண்டு பெண்கள் மூலம் அதுவும் ஒரே நாளில் எத்தனை விஷயங்களைக் கற்றுத் தருகிறாய்.

காளிங்கன் சற்று நின்றான்.

''அரசகுமாரி! இனி தாங்கள் கவலைப்படவேண்டாம். தங்கள் தந்தையிடம் உங்களை சேர்ப்பித்து விடுகிறேன். ஆனால், உங்களுக்கு ஒரு யோசனை சொல்கிறேன். முடிந்தவரை நியாயத்திற்காகப் போராடுங்கள். அல்லது நியாயம் கிடைக்கும் சந்தர்ப்பம் வந்தால் அதை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்!''

அவந்திகா விந்தையாகப் பார்த்தாள். சர்வ சாதாரணமாக பேசுகிறான் இவன். நல்ல ஆண்மகன். விஷயம் தெரிந்தவன். சிவபெருமானால் அனுப்பப்பட்டவன் அல்லவா.. அப்படித்தான் இருக்கவேண்டும்.

''நன்றி வீரனே! ஆனால் நான் தந்தையிடம் போக விரும்பவில்லை. சோழ மகாதேவியார் நிச்சயம் அங்கு வருவார். அவர் மாளிகையில் என்னை விட்டு விடு!''

''சோழ மகாதேவி என்றால் அம்மங்கை தேவியா?''

''நீ அதிகமாக நெஞ்சு தைரியமுள்ளவன். அரசகுமாரிகளையும் பெரிய இடத்து மக்களையும் சர்வ சாதாரணமாகப் பேசுகிறாய். என்னிடம் அப்படிப் பேசுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், காஞ்சியிலோ வேறு எங்கோ அப்படிப் பேசாதே... உன் தலை போய்விடும்'' என்று சொல்லி சிரித்தவள் ''ஆமாம்... அம்மங்கை தேவியாரின் இல்லத்தில் விட்டு விடு...''

''சரி... சமீபத்தில் அவர்களை எப்போது சந்தித்தீர்கள்?''



''இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. பழையாறையில் ஒரு விழாவில் சந்தித்தேன். என் சிறிய வயதில் அவரிடம் வளர்ந்தேன். என் மனது குழப்பத்தில் சிக்கும் போதெல்லாம் அவரை நினைத்துக் கொள்வேன். குழப்பம் குறைந்தது போலத் தெரியும்.''

காளிங்கன் ஆச்சரியப்பட்டான். தான் எப்படி இப்படிப்பட்ட அழகியைக் காணத் தவறிவிட்டோம் என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். அவந்திகா திருப்பிக் கேட்டாள்.

''ஏன் கேட்கிறாய் வீரனே?''

''இல்லை. ஒருவேளை அவர்கள் பிள்ளைகள்கூட தங்களுக்குப் பழக்கமோ என்ற விதத்தில் கேட்டேன்...''

''நான் சிறு குழந்தையாய் அவர்களிடம் வளர்ந்தபோது அபயன் மட்டும்தான் இருந்தார். பிறகு நான் தகடூர் அழைத்துச் செல்லப்பட்டேன். ஆனால், அவர்களுக்கு ஒரு தத்துப்பிள்ளை, அவர்களின் அண்ணன் மகன்மீது பாசம் மிக அதிகமாம். அந்தத் தத்துப் பிள்ளைக்குக் கூட என்னைக் கட்டி வைக்க தந்தையார் முயன்று சோழமகாதேவியார் உத்தரவின் பேரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என்னை அழைத்துச் சென்றார். அப்போது நான் சிறு பெண். உலகமே புரியாதவள்தான். ஆனால் ஏனோ தந்தையார் அந்த மீனைப் பிடிப்பதில் அவ்வளவாக இஷ்டப்படவில்லை போலும்.''

சிரித்தாள் அந்த அழகி. அதிர்ந்து போனான் காளிங்கன். தான் இரண்டாண்டுகள் முன்பு ஈழத்துப் போரில் ஈடுபட்டபோது இவள் வந்திருக்க வேண்டும்.

''நீங்கள் அந்த மீனைப் பார்த்ததுண்டா?''

''எந்த மீன்?''

''அதுதான் சொன்னீர்களே.. பழையாறை மீன்... சோழமகாதேவியாரின் தத்துப்பிள்ளை...''

தலையாட்டினாள் அவள்.

''இல்லை. ஆனால் அவரைப்பற்றி பல விஷயங்கள் கேள்விப்பட்டதுண்டு.''

''என்னென்ன விஷயங்களோ?''

"அவர் சிறந்த வாள் வீரராம். ஆனால், எதிலும் விருப்பமில்லாமல் அத்தையார் சொல்லே சொர்க்கம் என்று அவர்கள் சொல்வதற்கெல்லாம் ஆடுவாராம். இந்த முறை சென்றால் அந்த அத்தையார் ஆட்டுவிக்கும் பொம்மையை சந்தர்ப்பம் கிடைத்தால் ஒருமுறை பார்க்க வேண்டும்."

அவள் சிரித்தாள். மெய்யாகவே அந்தக் கள்ளமில்லாச் சிரிப்பில் மயங்கிப்போனான்.

"என்ன பார்க்கிறாய். ஓர் ஆண்பிள்ளை இப்படி ஒரு பெண்ணைப் பார்த்தால் தவறாக நினைக்க மாட்டார்களா? ஓஹோ! இங்கு யாருமில்லையே என்று பார்க்கிறாயா?"

மறுபடியும் சிரித்தாள். அவனும் சிரித்தான். குதிரையில் அவன் ஏற அவளும் பின்னால் ஏறினாள். கார்த்திகையின் குளிர் காற்று சற்று அதிகமாகவே வீசியது. தன் மனதில் உள்ள பாரங்களை அவனிடம் இறக்கியதில் அவள் கவலையெல்லாம் தீர்ந்ததுபோல உணர்ந்தாள். கவலை தீர்ந்த நிலையும் காற்று குளிராய் வீசும் சூழ்நிலையும் அவளுக்கு உறக்கத்தைத் தந்ததோ என்னவோ, ஓடும் குதிரை ஒலி தாலாட்டுப்பாட அவன் முதுகில் சாய்ந்து அமைதியாய் உறங்கிப் போனாள்.

காஞ்சி நகரம் உள்ளே வந்ததும்தான் அவளை எழுப்பினான். இரவு அப்படியே இருந்தது. முதலில் குதித்தான் அவன்.

"இறங்குங்கள் அரசகுமாரி! இந்த மாளிகையில்தான் சோழமகாதேவியார் தங்குவது வழக்கம்."

சட்டென தூக்கக்கலக்கம் விலக அவனைக் கேட்டாள்.

"உனக்கெப்படித் தெரியும்?"

"நான் அடிக்கடி அவர்களை அழைத்துக்கொண்டு காஞ்சி வருவதுண்டு!"

"நானே கேட்கவேண்டுமென்று நினைத்தேன். நீ எந்த நாட்டு வீரன்? என் கவலையில் உன்னைப்பற்றி கேளாததைத் தவறாக எண்ணிவிடாதே."

"நான்தான் சொன்னேனே, சோழமகாதேவியாரோடு அடிக்கடி காஞ்சி வருவதாக..."

"அப்படியானால்..." திடீரென அச்சம் தொண்டையில் அடைக்கக் கேட்டாள்.



"ஆமாம்! அந்த அத்தையார் ஆட்டுவிக்கும் பொம்மை நான்தான்..."

சிரித்தான் காளிங்கன். சிலையானாள் அவந்திகா.

# 10

## பெரிய ராஜாவின் ஓலை

**வீ**ரராஜேந்திர சோழ சக்கரவர்த்திகள் மறைந்து ஏழு நாட்களாகியும் அவர் மறைந்ததால் ஏற்பட்ட சோகம் சோழ தேசத்தை விட்டு அகலவில்லை. பெரிய ராஜா என்று இன்றளவிலும் போற்றப்படும் ராஜேந்திர சோழச் சக்கரவர்த்திகளின் கடைசி மகனான வீரராஜேந்திரர் மறைவு சோழநாட்டு மக்களிடையே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்றாலும் குற்றம் குறைகளில்லாமல் ஆட்சி புரிந்தவர் தம்மிடையே இல்லையே என்ற ஏக்கம் மட்டும் மக்கள் மனதினை ஆக்கிரமித்திருந்ததுதான்.

ஆனால், அவர் மறைந்த பிறகு சோழ நாட்டை துயரம் விடாப்பிடியாக பிடித்திருக்குமோ என்றும் மக்கள் அச்சப்பட்டனர்தாம். வீரனுக்குப் பிறந்த மகன் மிகப்பெரிய வீரனாக வேண்டும் என்ற இயற்கைக்கு மாறாக அதிராஜேந்திரன் இருப்பது சோழமக்கள் மத்தியிலும் சோழ வீரர்களிடத்தும் சில காலமாக பரவலாகப் பேசப்பட்டு வருவதுதான். எப்போது சோழ வைரிகளாக இருந்துவந்த சாளுக்கிய விக்கிலனுக்கு தன் பெண்ணை தாரைவார்த்துக் கொடுத்து மாப்பிள்ளை ஆக்கிக் கொண்டாரோ அப்போதே போதாத காலம் சோழ தேசத்திற்கு ஆரம்பித்திருப்பதாக பலரும் நினைத்தார்கள். 'சாளுக்கிய பரம பாதகன்... தன் சொந்தத் தந்தையையே தற்கொலை செய்ய வைத்தவன், தன் சொந்த அண்ணனை ஓட ஓட விரட்டியவன், ஆனால் சோழநாடு தர்மம் நிறைந்த நாடு, அண்ணன்-தம்பி பாசம் அதிகம் கொண்ட நாடு, தந்தைக்குப் பிறகு வரிசையாக மூன்று சகோதரர்களும் சண்டையில்லாமல் ஆண்டுவந்த நாடு, அப்படிப்பட்ட இடத்தில் ஆமை போல விக்கிலன் புகுந்ததும் பலருக்குப் பிடிக்கவில்லைதான்.' போதாக் குறைக்கு நாள் நட்சத்திரம் பார்க்காமல், சொந்த பந்தத்துக்கு தெரிவிக்காமல், படுக்கையில் இடந்த வீரராஜேந்திரரை

எழுப்பி உட்காரவைத்து அவன் கையால் தன் மைத்துன னுக்கு பட்டம் சூட்டியதும் தன் சொல்படி அவனை ஆட வைப்பதும் யாருக்குமே பிடிக்கவில்லைதான். இது வெறுப்பாக மாறி அந்த வெறுப்பையும் அவ்வப்போது சமயம் கிடைத்தபோதெல்லாம் காண்பிக்கவேச் செய்தனர்.

'இதோ அந்தக் கடைசி மகனும் சிவலோகம் போய்ச் சேர்ந்து விட்டார். இனி என்னென்ன அநர்த்தங்கள் நிகழுமோ' சோழ மக்களிடம் கவலை அதிகமாகவே தென்பட ஆரம்பித்தது.

மக்களிடம் ஏற்பட்ட இந்தக் கவலை அரசகுலத்தில் இன்னமும் அதிகமாகவே காணப்பட்டது. அதுவும் இறந்துபோன வீரராஜேந்திரனின் தங்கையும், பெரிய ராஜாவின் கடைக்குட்டி மகளும், இருக்கும் ஒரே வாரிசுமான அம்மங்கைதேவியாரை அந்தக் கவலை அதிகம் பாதித்ததில் வியப்பில்லைதான்.

சோழமகாதேவி என்று அனைவராலும் மரியாதையாக அழைக்கப்பட்ட அந்தக் கடைக்குட்டி வாரிசு அன்று காஞ்சியின் விருந்தினர் மாளிகையில் கண்ணீர் விட்டபடி கலங்கி நின்ற கோலத்தை யார் பார்த்திருந்தாலும் நெஞ்சம் பதறித்தான் போயிருப்பார். வயது ஐம்பதைக் கடந்தாலும் அழகு அவளை விட்டுப் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்த நிலையில் இருந்த அவள் முகத்தில் சோகம் பரிபூரணமாக பொங்கி இருந்தது. மகன் பிறந்ததிலிருந்தே இந்தச் சோகம் தன்னை நிழல் போலத் தொடருவதாக தன்னுள் கூறிக் கொண்டவள் ஏன் தன்னை மட்டும் இப்படி தவிக்கச் செய்கிறது இந்தத் துயரம் என்ற உணர்ச்சி என்றும் கேட்டுக் கொண்டாள்.

பெரிய ராஜாவின் கடைக்குட்டிப் பெண்ணாய் படு செல்லமாய் அரண்மனையில் வளர்க்கப்பட்ட நாட்கள் இனிமையாய் இருந்தது. கடவுளுக்குப் பொறுக்க வில்லையோ என்னவோ? அவளைத் திருமணம் என்னும் வலையில் சிக்கச் செய்தார் போலும். அத்தை மகனாக இருந்தாலும் புகழ் பெற்ற வேங்கி அரசனான ராசராச நரேந்திரனை கணவனாய் பெற்றவள் அவள். ஆனால், அந்தக் கணவன் முறை தவறிய செயலால் வருத்தமுற்று சோழநாடு திரும்பி வந்ததும், வந்தவள் கருவில் மகனைச் சுமந்து வந்தாலும் பெற்றெடுத்த அம்மகனை வளர்ப்பதில் தான் எத்தனையெத்தனை துயரங்கள்...



அம்மங்கையின் வாழ்க்கை மிகவும் விசித்திரமானதுதான். சோழ தேசத்தின் மிகப்பெரிய புகழ்பெற்ற சக்கரவர்த்தியார் ராஜேந்திரரின் செல்லமகள் என்ற பெயர் இருந்தும் அந்தப் பெயரும் புகழும் அவள் மனதில் எந்தவிதமான திமிரையும் கர்வத்தையும் வளர்க்காமல் அதற்கு மாறான அன்புணர்ச்சி ஒன்றையே வளர்த்தது ஒரு விதத்தில் பலவீனமாகக்கூட ஆனதுண்டு. அன்புக்கும், பெண்மைக்கும் மறு அவதார மாகக் காணப்பட்ட அம்மங்காவை அவள் கணவன் பகடைக் காயாக்க முயன்றபோதுதான் அவள் உண்மை யாகவே விழித்துக் கொண்டாள். வேங்கியில் உத்தமமான ஒரு பெண்ணை நயவஞ்சகமாக ஏமாற்றி அவளைக் கொன்றுவிட்டான் தன் கணவன்* என்ற விவரம் அவளுக்குக் கிடைத்தபோது அவள் வயிற்றிலும் ஒரு கரு உருவாகிக் கொண்டுதான் இருந்தது. ஆனாலும், அவள் தார்மீகம் கணவனின் அநியாயத்தை அங்கீகரிக்க மறுத்து அவனை விட்டே வெளியேறச் செய்தது. அவள் அன்பு மனமோ கோப்பட்ட தந்தையைக்கூட சமாதானப்படுத்தி சாந்தம் செய்தது. அவள் சுபாவம் அது. அவளுக்குப் பிடிக்கவில்லையென்றால் தூர விலகுவது உத்தமம் என நினைப்பவள். அப்படியே செய்தாள்.

ஆனாலும், ராஜேந்திரத்தேவர் அம்மங்கை மீதும் அவள் குழந்தை மீதும் பாசமழை பொழிந்தார். ஒரு வயது பேரப்பிள்ளை அவர் மார்பில் தவழ்ந்து அவர் புலி ஆபரணத்தைப் பிடுங்கும். தாத்தா புளகாங்கிதம் ஆகிவிடுவார். குழந்தையும் அடிக்கடி அந்த ஆபரணத்தைப் பிடுங்கி இழுப்பதைக் கண்டு 'இந்த ராஜ்ஜியமே உனக்குத்தானடா! இந்த ஆபரணம் எதற்கடா' என்று பாட்டுப் பாடி சீண்டி விளையாடுவதை அவர் மூன்று பிள்ளைகளுமே ரசிப்பது உண்டு. இந்தப் பாட்டு நாளடைவில் அரண்மனையில் புகழ் பெற்றதும்கூட.

எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டாலும் அம்மங்காவுக்கு மட்டும் இந்த நினைவுகள் பசுமையான நினைவுகள். இப்படித்தான் குழந்தை ராஜேந்திரனுக்கு

---

* சித்ராங்கி என்ற தெலுங்கு நாட்டிய மங்கையை தனக்கு இணங்காததால் கொன்றுவிட்டான் ராசராச நரேந்திரன். (நாடகக் கதையாக இன்னமும் ராஜ மஹேந்திரபுரத்தில் நடைபெறுகிறது. ஆதாரம் : தி ஹிண்டு- 19-7-2003 Pushkaram Spl)

நான்காவது பிறந்த நாள். பாட்டனார் பெயரையே வைத்தாலும் அபயன் என்று எல்லோரும் கூப்பிடும் அந்தப் பேராண்டிக்கு நான்கு வயது அன்று முடியப்போகிறது. அந்தக் கிள்ளை மொழிப்பிள்ளை பெரிய ராஜாவை கதை சொல்லச் சொல்லிக் கேட்டது. பெரிய ராஜாவோ, உடல்நிலை சரியில்லாமல் படுக்கையில் இருந்தார். ஆனாலும், செல்லப்பேரன் கதை கேட்டுவிட்டானே என்பதால் ஏகப்பட்ட மகிழ்ச்சியான பெரிய ராஜா ஆளுடையநம்பியான சுந்தரப் பெருமானை சிவபெருமான் ஆட்கொண்ட சம்பவத்தை சுவையாக சொல்லிக் கொண்டு வந்தார்.

திருமண மேடையிலே மாப்பிள்ளை முறுக்குடன் சுந்தரர் வீற்றிருக்க, மணமகள் வெட்கத்தோடு மணமாலைக்காக காத்திருக்கும் அந்தக் கல்யாணத்தை நிறுத்துக என்ற குரல் கேட்கிறது. பார்த்தால் அங்கே பெரிய ராஜாவைப் போல கிழவர் ஒருவர் நின்று கொண்டு சுந்தரரைப் பார்த்து, 'நீ என் அடிமை' 'நீ எனக்குத்தான் தொண்டு செய்ய வேண்டுமென' சப்தம் போடுகிறார். என்ன ஆதாரம் என்று கேட்டால் 'இதோ உன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலை இருக்கிறது பார்' என்று காண்பிக்க, சுந்தரர் சிவபெருமானிடம் சரணடைவதாக கதை முடிகிறது. ஓலை என்றால் என்ன என்று கேட்ட குழந்தைக்குப் பெரிய ராஜா ஓலையையும் எழுத்தாணியும் கொண்டுவரச் சொல்லிக் காண்பித்தார்.

கேட்டுக் கொண்டு இருந்த அபயன் தன் வழக்கப்படியோ அல்லது எதேச்சையாகவோ சக்கரவர்த்தியாரின் மார்பில் கிடந்த புலிநக ஆபரணத்தை பிடித்து இழுத்து விளையாட பெரியவரும் வழக்கம் போலவே ''இந்த ராஜ்ஜியமே உனக்குத்தானடா - இந்த ஆபரணம் எதற்கடா'' என்று பாட ஆரம்பித்து விட்டார். ஆனால் குழந்தை விடவில்லை. ''நீதான் சிவபெருமான் ஆயிற்றே... ஓலை கொடு...'' என்று அடம்பிடிக்க ஆரம்பித்தது.

சாதாரண விஷயமாகத்தான் அம்மங்காவும் அண்ணன்மார்களும் எடுத்துக் கொண்டு குழந்தையை அதட்டினர். அண்ணன்மார்களில் ஒருவரான இளைய ராஜேந்திரன் சிரித்து விட்டு, ''குழந்தை சிவபெருமானிடம் அத்தாட்சி கேட்கிறது!'' என்று சொல்லி வைத்தான்.

ஆனால் பெரிய ராஜா சிரிக்கவில்லை. பக்கத்தில் இருந்த ஓலைச்சுவடியையும் எழுதுகோலையும் எடுத்தார். ''குட்டி



ராஜேந்திரனான என் பேரன் பெரியவனானதும் சோழப் பேரரசுப் பட்டம் அவனுக்கேச் சூட்டப்படவேண்டும். இது சோழச்சக்கரவர்த்தி ராஜேந்திரத்தேவர் ஆணை'' என்று கையொப்பமிட்டு குழந்தை கையில் கொடுத்து ஆசிர்வதித்தார். கூடி இருந்தோர் சற்று ஆச்சரியப்பட்டார்கள் என்றாலும் அந்தச் சம்பவம் அவர்களை அதிகம் பாதிக்கவில்லை - அம்மங்காவைத் தவிர.

அம்மங்கைக்கு இந்த நிகழ்ச்சி பசுமரத்தாணி போல நெஞ்சிலே தங்கிவிட்டது. தந்தையார் ஓலை மட்டும் எழுதிக் கொடுத்துவிட்டுப் போகவில்லை. அரண்மனை சோதிடர்கள் இந்தக் குழந்தையை வெகுவாக சிலாகித்ததையும், இந்தக் குழந்தையினால் சோழநாடு எப்போதும் இல்லாத அளவுக்கு மகோன்னத நிலை அடையப் போவதாகவும் சொல்லி சொல்லி மகிழ்ந்து கொண்டதாக சம்புவரையரும் மலையமானும் எத்தனையோ முறை அம்மங்கையிடம் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், தந்தையார் அப்போதே மறைந்துவிட்டார். அண்ணன்களும் ஒவ்வொருவராக மகுடாபிஷேகம் சூடி இதோ கடைசி அண்ணனும் காலமாகிப் போய்விட்டான். ஆனால், பெரிய ராஜா ஆசைப்பட்டது கனவாகிப் போய் விடுமோ என்ற கலக்கம் தற்சமயம் அதிகமாகவே அம்மங்காவை ஆட்டிவைத்தது என்பது என்னவோ உண்மைதான்.

இயல்பாகவே பெண்களுக்கு அமையும் கணவன், கணவனைச் சார்ந்தோர் போன்ற அனுபவங்கள் - அது இனிப்போ, கசப்போ அம்மங்காவுக்கு அதிகம் கிடைக்கவில்லை. கட்டிய கணவன் தன் சீரான வாழ்க்கையை பாழாக்கியதோடு மட்டுமில்லாமல் இந்த உலகில் அவன் நீண்டநாள் வாழாமல் மடிந்துபோனது கூட அவள் வாழ்க்கையில் துரதிருஷ்டமே. அபயன் பத்து வயதாகும் போதே அவன் தந்தைக்கு இறுதிச் சடங்குக்காக சென்றது அவள் துயரத்தை அதிகப்படுத்தியது. அவள் பொறுப்புகள் மேலும் அதிகமாகிவிட்டதாக உணர்ந்தாள்.

அந்தச் சமயத்தில் அவள் பெரிய அண்ணன் மரணமும் சேர்ந்து கொண்டதால் அண்ணனின் ஒரே மகனும் தாயில்லாப் பிள்ளையுமான காளிங்கனையும் அவளே வளர்க்கத் தொடங்கியதை மட்டும் அவள் துயரமாக

நினைக்கவில்லைதான். காளிங்கன் அபயனைவிட இரண்டு வயது சிறியவன் என்பதைத் தவிர இருவரிடமும் தன் அன்பினை தாராளமாகவே பொழிந்து வளர்த்தாள். அபயன் அப்படியே தன் தந்தையான பெரிய ராஜாவின் சாயலில் வளர்ந்ததால் அவளுக்குப் பெருமிதமும் சற்று சேர்ந்து கொண்டது.

அம்மங்கைக்கு கண்ணன் கதை மிகவும் பிடிக்கும். அவ்வப்போது தன்னை யசோதையாகவும், தேவகியாகவும் உருவகம் செய்து கொள்வாள். அபயனைக் கண்ணனாகவும், காளிங்கனைப் பலராமனாகவும் நினைத்துப் பார்த்து மகிழ்வதிலும் அவள் விருப்பம் அதிகம் கொண்டாள். தேவகிக்கு அமைந்த கம்சனைப் போல அண்ணன்மார்கள் கொடியவர்கள் இல்லைதான் என்றாலும் இவர்கள் யாருமே பெரிய ராஜாவின் ஓலை பற்றி எப்போதுமே பேசாதது அம்மங்கைக்கு வருத்தம். நாளடைவில் தனக்கும் அவர்களுக்கும் ஒரு மௌனப் போராட்டம் நடப்பதை உணர்ந்தவள் ஒரு காரியம் செய்தாள். அவள் எப்படி முன்னம் கணவனைப் பிரிந்து சோழநாடு வந்தாளோ அதைப்போலவே கங்கைகொண்ட புரத்திலிருந்து முடிகொண்ட சோழபுரமாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட பழையாறைக்கு தன் மகன்களோடு குடிபெயர்ந்தாள். அங்கே தனக்கென தனியாட்சி நடத்திக் கொண்டும் வந்தாள். அனுபவம் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தது அவளுக்கு. அன்பு, பண்பு மற்றும் பொறுமையோடு இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணம் வலுப்பட்டாலும் அது எப்போது சாதிக்கப்படும் என்ற கவலை மட்டும் அவள் உள்ளத்தில் இருந்து வந்தது என்னவோ உண்மைதான்.

அந்த அன்பரசியின் மக்களுக்கு தெய்வம் தந்த பரிசாக ஆசிரியர் குருவாக அமைந்ததாக அம்மங்கை அவ்வப்போது நினைத்துக் கொள்வதுண்டு. அண்ணன்மார்கள் இருந்தாலும் தம்பி என ஒருவன் இல்லையே என்ற குறை தீர்க்க வந்ததுபோல ஆசிரியர் வந்தது பெரிய ராஜாவின் ஆசிகளோ என்றுகூட அவள் நினைத்ததுண்டு. திருவெண்காட்டில் கல்விச்சாலை அமைத்து அந்த வெண்காட்டீசன் துணையோடு பலராமனுக்கும் கண்ணனுக்கும் அரசியலும் போர்ப்பயிற்சியும் மட்டுமல்லாமல் இறையுணர்வையும் ஆழமாகப் போதித்து வருவதில் பரம திருப்தி



அம்மங்காவுக்கு. ஆசிரியரின் கூர்மையான அறிவு அவளுக்குக்கூட உதவி செய்து வந்ததால் காலம் கனிந்து வரக் காத்திருந்தாள்.

அந்த ஆசிரியர் சொல்படியே அண்ணன் இளைய ராஜேந்திரன் மகளான மதுராந்தகியை தன் அபயனுக்குத் திருமணம் செய்து வைத்தாள். மதுராந்தகி இனிமையானவள். அத்தையை சிறு வயதிலிருந்தே அறிந்தவள். ஆனாலும், அத்தானின்மீது சிறுவயது முதலே தீராத தாகம் அவளுக்கு. இருந்தும், அந்தப் பெண்ணையும் அன்போடு தான் அம்மங்கா பார்த்துக் கொண்டாள்.

ஆசிரியர் வந்ததிலிருந்து அவள் பொறுப்புகளின் சுமை குறைந்தது போலத்தான் தோன்றியது. ஆனாலும் கஷ்டம் என்னவென்றால் ஆசிரியர் அபயனை அடிக்கடி வெளிதேசங்கள் அழைத்துக் கொண்டு நாட்கணக்கில், மாதக்கணக்கில் வராதது அவளுக்குக் கவலையைத் தரும். அந்தக் கண்ணனைப் பிரிந்த தேவகி போல வேதனைப்படுவாள். ஆனாலும், கண்ணனைப் போல புகழ்பெற வேண்டுமென்றால் அபயனும் தன்னைப் பிரியத்தானே வேண்டும். பொறுப்புகளை அபயன் உணர உணர பிற்காலத்தில் பெரிய ராஜா எதிர்பார்த்தபடி மிகச் சிறந்த சக்கரவர்த்தியாக ஒளிவிட முடியும். ஆனால், அப்படி நடக்குமா? அல்லது கனவாகி விடுமா? இல்லை... கனவல்ல... அன்று சிவபெருமானே தன் தந்தை மீது வந்து எழுதிய ஓலை... அந்த ஓலை வாசகங்களுக்கு நிச்சயம் மதிப்பு உண்டு. ஆனால், எப்போது அந்த வாசகம் மெய்யாகும்.

வேங்கி ராஜமகுடத்தைத் தன் மகன் மீது சமீபத்தில் ஆசிரியர் சூட்டியது என்னவோ அம்மங்காவுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் ஆசிரியரின் முயற்சிகளை அவள் மனம் பாராட்டவே செய்தது. ஏணிப்படியில் ஒவ்வொரு படியாக ஏறவேண்டும். அம்மங்காவின் கவலை அறிந்தவர்தான் ஆசிரியர். அவருக்குத் தெரியும். அபயனுக்கு எதை எப்படிப் பெற்றுத் தரவேண்டுமென்று. அதற்காகவே அயராது உழைப்பவர் அவர். ஆனால், வேங்கி நாடு சிறிய நாடு. சுற்றியிருப்போர்க்கு வேங்கியின் வளமை மீதுதான் கண். அங்கே யாரையுமே நிலையாக ஆளவிட மாட்டார்கள். ஸ்திரமற்ற அரசுகள், விசித்திரமான நாடு. அப்படிப்பட்ட இடத்தில் அபயன் இருப்பது நல்லதல்ல...

அம்மங்காவின் நினைவலைகள் கலைந்தன. கலைத்தவர்கள் ஆசிரியரும் அபயனும்தான். அண்ணன் இறந்த மூன்றாம் நாள் செய்தி வந்ததுமே புறப்பட்டு வந்தவள் இன்றுவரை மகனிடம் சரியாகக்கூட பேச முடியவில்லை. இப்போதுதான் சமயம் கிடைத்துள்ளது. ஆசிரியரே பணிவுடன் ஆரம்பித்தார்.

''என்ன... சோழமகா தேவியாருக்கு மகனைக் காண விருப்பம் இல்லையா? அல்லது மகன் சொல்லாமல் கொள்ளாமல் தந்தையின் சொத்தை அபகரித்து விட்டானே என்ற கவலையா?''

வேங்கியில் மகுடம் சூட்டப்பட்டதைத்தான் ஆசிரியர் மறைமுகமாய் சொல்கிறார் என்று புரிந்தது அவளுக்கு.

''என் கவலை முழுவதும் அறிந்த ஆசிரியர் அப்படிப் பேசலாமா?''

கோபம் வெளிப்படையாகவே தெரியக் கேட்டாள் அவள். ஆனால், ஆசிரியருக்குப் பதில் அபயன்தான் பேசினான்.

''அம்மா! நீ அடிக்கடி கவலையால் வாடக்கூடாது. உன் உடல் நிலையைக் கூட சரியாகப் பார்த்துக் கொள்வதில்லை. எப்படி இளைத்துவிட்டாய் தெரியுமா?''

மெய்யான கவலையுடன் தன்னருகே வந்த அபயனைப் பெருமையாகப் பார்த்தாள். அப்படியே பெரிய ராஜாவின் மறு உருவம். அவனைப் பார்த்ததும் தான் சின்னஞ் சிறுமியாய் இருந்தபோது தன் தந்தையின் கைகளைப் பிடித்து அடிக்கடி சொடுக்கி விளையாடுவது நினைவுக்கு வந்தது. அதைப் போலவே இப்போதும் அபயனின் கைவிரல்களை நீவிவிட்டவள் சற்று பெருமையாகவே பேசினாள்.

''அப்படியே உன் பாட்டன் போலவே பார்வையும் பேச்சும்... எனக்கென்னப்பா கவலை. உன்னைப் பார்த்துக் கொண்டே இருந்தால்கூடப் போதும்.''

''வேண்டாம் அம்மா! நீ பழைய கால நினைவுகளுக்குப் போய்விடாதே. உன்னை மறுபடி அந்த நினைவிலிருந்து மீட்டு வருவது அவ்வளவு எளிதல்ல.. ''

சிரித்தான் அபயன். அந்தச் சிரிப்புகூட தந்தையுடைய சிரிப்புதான். ஆசிரியர் குறுக்கிட்டார்.



''சகோதரி! நீங்கள் அபயனைப் பற்றிய கவலைகளை சற்றுக் குறைத்துக் கொள்ள வேண்டும். அவன் உங்கள் மகன் மட்டுமல்ல; தற்போது வேங்கி அரசன். அது மட்டுமல்ல. நாளை ஈழம் செல்வதாக திட்டம் வைத்திருக்கிறான். அவன் பிரிகின்றானே என்ற கவலை உங்களிடத்தில் இருக்கவே கூடாது.''

''ஈழம் செல்கிறானா?''

''ஆம் தேவி! வடக்கே சற்று காலூன்றியுள்ளோம். தெற்கே ஈழத்திலுள்ள வீரர்களுக்கு சற்று புத்துணர்ச்சியை ஊட்ட வேண்டிய அவசியத்தில் உள்ளோம். அதிராஜேந்திரன்தான் எதற்கும் கவலைப்படுவதில்லை. ஆனால் நாட்டு நலனில் அக்கறையுள்ள நாம் அப்படி இருக்கமுடியாது. ஆனாலும், அபயனுக்கும் சற்று புத்துணர்ச்சி தேவை. செல்லும் வழியில் பழையாறு சென்று அங்கிருந்து ஈழம் செல்லுமாறு சொல்லியுள்ளேன்.''

ஆசிரியரின் குறும்புப் பேச்சு இருவருக்குமே புரிந்தது. அன்னைக்கு முதலிடம் தந்தாலும் கட்டிய மனைவியையும் மறந்துவிடாமல் இருக்கத்தான் பழையாறு அனுப்பி வைக்கிறார் என்பது புரிந்தது.

''ஆசிரியரே! எங்கள் வாழ்வில் ஒளி ஊட்ட வந்துள்ள இறைவனாகவே உங்களைக் கருதுகிறோம். நீங்கள் இத்தனை சிரமம் எடுத்துக் கொள்ளும்போது நான் ஏன் கவலைப்பட வேண்டும்.''

சற்று மகிழ்ச்சியாகத்தான் சொன்னாள். ஆனால், ஆசிரியர் அவள் மகிழ்ச்சியை நீட்டிக்கவில்லை.

''கவலைப்பட்டுத்தான் ஆகவேண்டும். நீங்கள் மட்டுமல்ல தேவி! நானும் அபயனும் கூட கவலைப்பட வேண்டும் காளிங்கனைப் பற்றி...''

சட்டென காளிங்கனின் நினைவு வந்தது அவளுக்கு.

'ஐயையோ என்ன ஆயிற்று என் பலராமனுக்கு. நம் கவலைகளில் அவனை மறந்து விட்டோமே! என் குழந்தைக்கு என்ன ஆயிற்று... தாய் தந்தையற்ற என் பலராமன் எங்கே...' பதறினாள் மனதுக்குள்.

கவலைகளுடன் கவலையாய் இன்னொரு கவலையையும் சேர்த்துக் கொண்டாள்.

# 11

# இருளும் பார்வையும்

திருவேங்கடபுரத்தில் இருந்து அன்று மாலையே ஆசிரியர் வந்துவிட்டாலும் காஞ்சியில் ஏகப்பட்ட வேலைகள் அவருக்காகக் காத்திருந்தன. வீரராஜேந்திரர் அதிகம் நேசிக்கும் நண்பராதலால் ஆசிரியருக்கு அந்த மாமன்னனின் இழப்பு சற்று பாதிப்பைக் கொடுத்ததுதான். பிறந்தோர் அனைவரும் இறப்பது திண்ணம் என்று நன்றாகவே அறிந்தாலும் வீரராஜேந்திரன் இறந்தவிதமும், அவன் இறப்பு அறிவிக்கப்பட்ட விதமும் ஆசிரியருக்குப் பிடிக்கவில்லைதான். ஆனாலும் சோழ தேசத்து நிலைமை சரியில்லை. அநர்த்தங்கள் தற்போது அதிகமாகிவிட்டன. அதர்மங்களும் மலிந்து விட்டன. முடிந்தவரை நாம் போராடியே ஆகவேண்டும். அதுதான் நம்மிடம் இறைவனும் எதிர்பார்க்கிறான் போலும் என்று தன்னுள் அடிக்கடி நினைத்துக் கொண்டார்.

ஆனாலும், காளிங்கன் போக்கு அவருக்கு ஆச்சரியத்தைத் தான் கொடுத்தது. தன் சீடர்களிலேயே செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டவன் அவன் என்பதில் ஆசிரியருக்கு மகிழ்ச்சி உண்டு. போதாக்குறைக்கு சோழ மகாதேவியின் அன்புக் கரங்களில் வளர்ந்தவன். தாய் தந்தை இல்லாதவன். ஒருவேளை தந்தை உயிருடன் இருந்தால் அவரே மாமன்னராகவும் தொடர்ந்திருப்பார். அவருக்குப் பிறகு காளிங்கனுக்கும் பட்டம் கட்டியிருக்கவும் வாய்ப்பு இருந்திருக்கும். இத்தனை தகுதிகளை உடையவன் ஏனோ எதிலும் விருப்பமற்று இருந்தான். அந்த விருப்பமில்லாத நிலைகூட அவன் நல்ல குணங்களுள் ஒன்றாகவே ஆசிரியர் உணர்ந்தார். ஆனால் அவன் சிந்தனைகளை ஆசிரியர் அறிவார். அதிகம் பேசாமல் சொன்ன செயலை கச்சிதமாக செய்து முடிக்கும் திறமையும் அவனுக்குண்டு என்பதிலும் ஆசிரியருக்கு மகிழ்ச்சியே. அப்படிப்பட்டவன் திருவேங்கடகூடம் சென்று வந்ததிலிருந்து ஒரேயடியாக மாறிவிட்டது அவருக்கு விந்தையைக் கொடுத்தது.

காளிங்கனை அதிகம் வெளியே அனுப்ப அம்மங்கை ஒப்புக் கொள்வதில்லை என்பதில் ஆசிரியருக்கு வருத்தம்



உண்டு. அபயனை எவ்வளவுக்கெவ்வளவு பிரிந்திருந்தாளோ அவ்வளவுக்கவ்வளவு காளிங்கனைத் தன் பக்கமே வைத்திருந்து அன்பு மழை பொழிந்தவள் அவள். ஒரே ஒரு முறை அத்தையைப் பிரிந்து ஈழப்போருக்குச் சென்றவனை அங்கு அதிக காலம் இருக்கவிடாமல் ஆசிரியரை நச்சரித்து எப்படியாவது திருப்பி அனுப்பும்படி செய்தவள், காளிங்கன் திரும்பி வந்ததும் அவனைப் பழையாறை யிலேயே தான் வைத்துக் கொணடதும் ஆசிரியருக்குத் தெரியும். அப்படிப் பட்ட செல்லப்பிள்ளையை தெரிந்து தெரிந்து வேங்கிக்கு எப்படித்தான் அனுப்பினாளோ அல்லது அவள் அனுப்பிய சமயம் எப்படிப்பட்டதோ அந்தச் செல்லப்பிள்ளையை ஒரேயடியாக மாற்றிவிட்டதுதான்.

அவன் காத்யாயினியைப் பார்த்து சற்று மதியிழந்து போனது அவருக்குப் புரிந்தது. அந்தப் பெண் சற்று வித்தியாசமானவள்தான். பில்வணன் வேண்டுமென்றே அப்படி ஒரு பெண்ணை வளர்க்கிறான் என்று ஏற்கனவே அறிந்தவர்தான் அவர். எப்போது அபயனுக்கும் விக்கிலனுக்கும் போராட்டம் ஆரம்பித்ததோ அப்போதே விக்கிலன் வட்டாரத்து செய்திகளை அதிகம் சேகரிக்க ஆரம்பித்தவர்தான் அவர். ஆனாலும் அந்தப் பெண், கன்னோசி நாட்டு இளவரசியாக இருந்தவள் எப்படி பில்வணனுக்குத் தத்துப் பெண்ணானாள் என்று ஆராய்ந்து பார்த்ததில்தான் அவள் பூர்வ கதை தெரிந்தது. தெரிந்ததும் அவள்மீது பரிதாபம்தான் வந்தது. இப்படிப் பரிதாபப்பட்டவர்களின் கதை காளிங்கனுக்குத் தெரிந்தால் அவன் உருகிவிடுவான். இப்படிப்பட்ட வீரர்களுக்கு இரக்க குணமே பலவீனமாக ஆகிவிடும் என்பதால்தான் அவளைப் பற்றி காளிங்கனிடம் அதிகம் பேசவில்லை. ஆனாலும் பெண்களை அதிகம் நம்பக்கூடாது. அதுவும் பில்வணன் வளர்ப்பில் உள்ள காத்யாயினி ஒருவேளை காளிங்கனின் இரக்க குணத்தை வைத்து எதுவும் செய்வாள்.

மறுநாள் காலைதான் காளிங்கன் ஆசிரியரை சந்தித்தான். தனியே அழைத்துச் சென்று நடந்ததையெல்லாம் சொன்னவன் உணர்ச்சிவசப்பட்டு நின்றதைக் கவனித்தார். பில்வணன் திட்டங்களை சொல்லச் சொல்ல சாதாரண மாகவே நிதானத்தில் காணப்படும் காளிங்கன் ஏனோ ஆவேசம் அதிகம் தெரிய இருந்ததையும் கண்டார் அவர். அந்த ஆவேசம் 'மதுராஜனைக் கொல்லாமல் விட்டு

விட்டேனே' என்றபோது அவன் கைகள் துடிப்பதிலும் கண்களின் சிவப்பிலும் கலந்திருந்ததையும் உணர்ந்து சற்று கலவரப்பட்டார் ஆசிரியர்.

''ஆசிரியரே! தாங்கள் அனுமதி தரவேண்டும். தாங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த வாள்வித்தைகளை இவர்கள் மீது முழுவதும் பிரயோகிக்கிறேன். என் தந்தையார் போர்க் களத்தில் வீரமரணம் அடைந்தது போல நானும் சோழநாட்டு எதிர்காலத்துக்காக இவர்களுடன் நேரடியாகப் போரிடப் போகிறேன். இதில் சொந்த பந்தங்கள் குறுக்கிட்டாலும் நான் கேட்கப் போவதில்லை. உங்கள் அனுமதி ஒன்று போதும். இந்தப் புனிதப்போரில் என் தந்தையைப் போலவே நானும் உயிர்த்தியாகம் செய்வேன். அத்தையாரிடம் கூட சொல்லிவிடுங்கள். தந்தை இறந்தபிறகு அவர் மகனை வளர்க்கும் பொறுப்பு அவருக்கு இருந்தது. ஆனால், என்னால் எவ்விதப் பிரச்சினையும் இருக்காது என்று தயைகூறி விளக்கி விடுங்கள்!''

ஆசிரியர் அந்த இளைஞனைப் பார்த்தார். அவன் விழிகளில் தோன்றிய அந்த ஒளி அவரை அலைக்கழித்தது.

''காளிங்கா! என்னை குருவாக மதிக்கும் எண்ணம் ஏதேனும் உன்னிடம் உண்டா... அதை முதலில் சொல்...''

காளிங்கன் கலங்கினான். ''ஆசிரியரே! என்ன இது?''

''அப்படி ஒரு எண்ணம் இருந்தால் முதலில் உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்கப்பார். உன்னை மிகச்சிறந்த வாள்வீரனாகப் பார்ப்பதை விட மிகச் சிறந்த மனிதனாகவே பார்க்கப் பிரியப்படுகிறேன்.''

''ஆசிரியரே''

''நீ எதுவும் பேசாதே... நான் சொல்வதைச் செய். என்னால் தர்மத்தை மீறி ஏதும் செய்ய முடியாது. தர்மத்தின் வழி நடப்பவனுக்கு முதலில் தோல்வி வருவது போல தோன்றினாலும் இறுதியில் வெற்றி அவனை வந்தே சேரவேண்டும். இது நான் நம்பிக்கையாய் இருப்பதற்காகச் சொன்னதல்ல. இது இறைவன் மனிதகுலத்துக்கு வைத்த நியதி. முதலில் உன்னை நிதானப்படுத்திக் கொள். நிதானம் உன் புத்தியை சீராக்கும். பதற்றம் உன்னை தடுமாற்றத்தில் கொண்டு வைக்கும். என் சீடன் காளிங்கன் எப்படிப்



பட்டவனாக இருக்கவேண்டும் என்பதை என் சீடனிடமே விட்டு விடுகிறேன்.''

அன்று நடந்ததை அப்படியே அம்மங்காவிடம் சொன்னபோது அம்மங்காவும் காளிங்கனைப் போலவே முதலில் பதறித்தான் போனாள். சோழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாய் இருக்கும் நிலையில் காளிங்கன் உணர்ச்சிவசப்படுவது நல்லதல்ல என்று அவளும் உணர்ந்தாள். அவன் பிராணத்தியாகம் செய்தாவது நாட்டைக் காப்பாற்றுவதாக ஆசிரியரிடம் சொன்னதைக் கேட்டதும் அந்த அன்பரசியின் கண்களில் கண்ணீரே வந்துவிட்டது.

''அவன் அப்படியே அவன் தந்தைக் குணம் கொண்டவன். அந்தத் தியாக குணம் அவன் ரத்தத்தில் ஊறியது. அவனை நாம்தான் கண்போல இருந்து காப்பாற்ற வேண்டும். அதுவும் நம் நாட்டு எதிர்காலமே இப்படி இருளடைந்து கிடக்கும்போது காளிங்கனைப் போன்ற ஒளிவிளக்குகளை அணைய விடலாமா?''

''அம்மா சொல்வது சரிதான். நான் ஈழம் செல்லுமுன் காளிங்கனைப் பார்த்து தனிமையாகப் பேசிவிட்டுச் செல்கிறேன். நான் பேசினால் கேட்பான் அவன்''

அபயன் சொன்னதையும் மறுத்தாள் அம்மங்கா.

''அதெல்லாம் சரிப்படாது. நான் காளிங்கனை உடனடியாகப் பார்க்க வேண்டும். என் ஒருத்தியால்தான் அவன் வருத்தங்களைப் புரிந்து கொள்ள முடியும். போதும். ஒரு முறை அவனைத் தனியே அனுப்பியதற்கே இவ்வளவு கஷ்டமா? இனி எங்கேயும் அவனை நான் அனுப்புவதாக இல்லை.''

ஆசிரியருக்கு சற்று கோபம் வந்தது.

''அத்தையும் பிள்ளையும் இப்படி உணர்ச்சிவசப்பட்டுக் கிடந்தால் எப்படி தேவி! நான் காளிங்கனைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்று சொன்னதற்குக் காரணம் நாம் அவனை மேலும் பலப்படுத்த முயலவேண்டும் என்பதற்காகத்தான். இப்படி வீட்டுக்குள்ளேயே ஒரு ஒளிவிளக்கை பூட்டி வைத்தால் அந்த விளக்கு எப்படி தேசமெங்கும் ஒளி கொடுக்கும். தேவி! தயவு செய்து உள்ள நிலையை நினைத்துப் பாருங்கள். பில்வணன் என்பவன் சாதாரண மனிதன் இல்லை. மூளையைக் கூராகத் தீட்டி

விட்டேனே' என்றபோது அவன் கைகள் துடிப்பதிலும் கண்களின் சிவப்பிலும் கலந்திருந்ததையும் உணர்ந்து சற்று கலவரப்பட்டார் ஆசிரியர்.

''ஆசிரியரே! தாங்கள் அனுமதி தரவேண்டும். தாங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த வாள்வித்தைகளை இவர்கள் மீது முழுவதும் பிரயோகிக்கிறேன். என் தந்தையார் போர்க் களத்தில் வீரமரணம் அடைந்தது போல நானும் சோழநாட்டு எதிர்காலத்துக்காக இவர்களுடன் நேரடியாகப் போரிடப் போகிறேன். இதில் சொந்த பந்தங்கள் குறுக்கிட்டாலும் நான் கேட்கப் போவதில்லை. உங்கள் அனுமதி ஒன்று போதும். இந்தப் புனிதப்போரில் என் தந்தையைப் போலவே நானும் உயிர்த்தியாகம் செய்வேன். அத்தையாரிடம் கூட சொல்லிவிடுங்கள். தந்தை இறந்தபிறகு அவர் மகனை வளர்க்கும் பொறுப்பு அவருக்கு இருந்தது. ஆனால், என்னால் எவ்விதப் பிரச்சினையும் இருக்காது என்று தயைகூறி விளக்கி விடுங்கள்!''

ஆசிரியர் அந்த இளைஞனைப் பார்த்தார். அவன் விழிகளில் தோன்றிய அந்த ஒளி அவரை அலைக்கழித்தது.

''காளிங்கா! என்னை குருவாக மதிக்கும் எண்ணம் ஏதேனும் உன்னிடம் உண்டா... அதை முதலில் சொல்...''

காளிங்கன் கலங்கினான். ''ஆசிரியரே! என்ன இது?''

''அப்படி ஒரு எண்ணம் இருந்தால் முதலில் உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்கப்பார். உன்னை மிகச்சிறந்த வாள்வீரனாகப் பார்ப்பதை விட மிகச் சிறந்த மனிதனாகவே பார்க்கப் பிரியப்படுகிறேன்.''

''ஆசிரியரே''

''நீ எதுவும் பேசாதே... நான் சொல்வதைச் செய். என்னால் தர்மத்தை மீறி ஏதும் செய்ய முடியாது. தர்மத்தின் வழி நடப்பவனுக்கு முதலில் தோல்வி வருவது போல தோன்றினாலும் இறுதியில் வெற்றி அவனை வந்தே சேரவேண்டும். இது நான் நம்பிக்கையாய் இருப்பதற்காகச் சொன்னதல்ல. இது இறைவன் மனிதகுலத்துக்கு வைத்த நியதி. முதலில் உன்னை நிதானப்படுத்திக் கொள். நிதானம் உன் புத்தியை சீராக்கும். பதற்றம் உன்னை தடுமாற்றத்தில் கொண்டு வைக்கும். என் சீடன் காளிங்கன் எப்படிப்



பட்டவனாக இருக்கவேண்டும் என்பதை என் சீடனிடமே விட்டு விடுகிறேன்.''

அன்று நடந்ததை அப்படியே அம்மங்காவிடம் சொன்னபோது அம்மங்காவும் காளிங்கனைப் போலவே முதலில் பதறித்தான் போனாள். சோழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாய் இருக்கும் நிலையில் காளிங்கன் உணர்ச்சிவசப்படுவது நல்லதல்ல என்று அவளும் உணர்ந்தாள். அவன் பிராணத்தியாகம் செய்தாவது நாட்டைக் காப்பாற்றுவதாக ஆசிரியரிடம் சொன்னதைக் கேட்டதும் அந்த அன்பரசியின் கண்களில் கண்ணீரே வந்துவிட்டது.

''அவன் அப்படியே அவன் தந்தைக் குணம் கொண்டவன். அந்தத் தியாக குணம் அவன் ரத்தத்தில் ஊறியது. அவனை நாம்தான் கண்போல இருந்து காப்பாற்ற வேண்டும். அதுவும் நம் நாட்டு எதிர்காலமே இப்படி இருளடைந்து கிடக்கும்போது காளிங்கனைப் போன்ற ஒளிவிளக்குகளை அணைய விடலாமா?''

''அம்மா சொல்வது சரிதான். நான் ஈழம் செல்லுமுன் காளிங்கனைப் பார்த்து தனிமையாகப் பேசிவிட்டுச் செல்கிறேன். நான் பேசினால் கேட்பான் அவன்''

அபயன் சொன்னதையும் மறுத்தாள் அம்மங்கா.

''அதெல்லாம் சரிப்படாது. நான் காளிங்கனை உடனடியாகப் பார்க்க வேண்டும். என் ஒருத்தியால்தான் அவன் வருத்தங்களைப் புரிந்து கொள்ள முடியும். போதும். ஒரு முறை அவனைத் தனியே அனுப்பியதற்கே இவ்வளவு கஷ்டமா? இனி எங்கேயும் அவனை நான் அனுப்புவதாக இல்லை.''

ஆசிரியருக்கு சற்று கோபம் வந்தது.

''அத்தையும் பிள்ளையும் இப்படி உணர்ச்சிவசப்பட்டுக் கிடந்தால் எப்படி தேவி! நான் காளிங்கனைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்று சொன்னதற்குக் காரணம் நாம் அவனை மேலும் பலப்படுத்த முயலவேண்டும் என்பதற்காகத்தான். இப்படி வீட்டுக்குள்ளேயே ஒரு ஒளிவிளக்கை பூட்டி வைத்தால் அந்த விளக்கு எப்படி தேசமெங்கும் ஒளி கொடுக்கும். தேவி! தயவு செய்து உள்ள நிலையை நினைத்துப் பாருங்கள். பில்வணன் என்பவன் சாதாரண மனிதன் இல்லை. மூளையைக் கூராகத் தீட்டி

திட்டங்களை மிகச் சரியாக செயல்படுத்தும் திறமை மிக்கவன். அவன் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் முதலில் அதர்மம் தலை விரித்தாடும். கோயில்கள் இடிக்கப்படும். வேதங்களின் குரல்வளை நசுக்கப்படும். ஏன்? தமிழ்க் கலாசாரமே அழிந்துபோகும் நிலைக்குத் தள்ளப்படுவோம். ஆனால், தேவி! அந்த நிலை வரவிடக்கூடாது. இப்போது சொல்கிறேன் கேளுங்கள். ஒரு விதத்தில் காளிங்கன் போன்ற திறமையான வீரர்கள் பொங்கி எழுவது நம் நாட்டுக்கு மிக மிக நல்லது. காளிங்கன் சாதுதான். அந்த சாது மிரண்டால் காடு கொள்ளாது. காளிங்கன் போன்ற பெரும் வீரர்கள் சாகஸம் செய்து சோழ நாட்டை காப்பாற்ற வேண்டிய நிலையில் நாடு உள்ளது. பில்வணனின் புத்தி பலத்தையும் வெல்ல வேண்டும்; விக்கிலனின் வாளையும் வீழ்த்த வேண்டும். தேவி! காளிங்கனை உங்கள் தூய்மையான அன்பு கட்டுக்குள் வைக்க வேண்டும். ஆனால், அவன் சேவை முழுமையாக சோழ நாட்டுக்கு பயன்படுத்தப்பட்டே ஆக வேண்டும்.''

புரிந்தது அம்மங்காவுக்கு. காளிங்கனை பழையபடி பழையாறிலேயே கட்டிப்போட்டுவிடாதே! வெளியே புலி போல பவனி வரவேண்டும் என்கிறார் இவர். ஆனாலும், அவனை எச்சரிக்கையாய் இருக்கச் செய்யவேண்டும்.

''ஆசிரியரே! தவறாக நினைக்காவிட்டால் ஒன்றை மட்டும் செய்யுங்கள். நீங்கள் உங்களுடனே இருத்திக் கொள்ளுங்கள். முதலிலேயே தனிமையாய் விட்டுவிட வேண்டாம். கொஞ்சம் கொஞ்சமாக அவன் வெளியே வரட்டுமே.''

அவள் ஆதங்கம் புரிந்தது. ஆசிரியருக்கு சிரிப்பு வந்தது. காளிங்கனை இன்னமும் சிறு குழந்தையாகவே நினைக்கிறாள்.

''அப்படியே ஆகட்டும் தேவி! உங்கள் விருப்பப்படியே செய்துவிட்டால் போயிற்று.''

''அது சரி. காளிங்கனைப் பற்றிப் பேச்சு வந்ததில் இன்று சித்திரசபை கூடும் விஷயத்தைப் பற்றி கேட்க மறந்து விட்டேன்.''

அபயன் குறுக்கிட்டான்.



''அம்மா! நீ அந்தக் கூட்டத்திற்குப் போகத்தான் வேண்டுமா? தவிர்த்து விடேன்...''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் ஆசிரியர் ஏதும் சொல்லவில்லையே...''

குற்றம் சாட்டப்பட்டது போல அம்மங்கா பேசினாலும் தாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஆசிரியர் சொல்படிதான் என்பதாக இருந்தது அவள் பேச்சு.

''தேவி! நீங்கள்தான் தற்போது பெரிய ராஜாவின் ஒரே வாரிசு. உங்களை முன் வைத்துதான் அதிராஜேந்திரனின் ஒவ்வொரு செய்கையும் இருக்கவேண்டிய கட்டாயத்தில் அவர்கள் உள்ளார்கள். அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். சில பாரம்பரிய வழக்கங்களில் இருந்து மாறுபட வேண்டாம்.''

அபயன் மறுபடியும் குறுக்கிட்டான்.

''ஆசிரியரே! தாங்கள் சொல்வது சரிதான். ஆனால் அம்மாவுக்கு உள்ள மரியாதையை அவர்கள் தராவிட்டால் என்னால் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?''

''அபயா! சபைக்கு சோழ மகாதேவியாரை மட்டும்தான் போகச் சொன்னேன். நீயோ காளிங்கனோ அங்கே தற்சமயம் செல்லவேண்டாம்.''

''அப்படியானால்...''

''நான் செல்கிறேன் அபயா... உன் அன்னைக்கு எவ்வித இழிவும் வராமல் முடிந்தவரை முயற்சிக்கிறேன்.''

ஆசிரியர் முறுவலித்தார். அபயன் மறுதலித்தான்.

''ஆசிரியரே! எங்கள் இருவரை விட உங்களுக்குத்தான் அங்கு அவமானம் ஏற்பட வாய்ப்புண்டு. அந்த பில்வணன் குறியில் இருந்து தப்பித்து வந்துள்ளீர்கள். மறுபடியும் அந்தப் பேய் தங்கள்மீது பாயாது என்பது என்ன நிச்சயம்?''

''அபயா! உன் அன்னையை விட உனக்கு அதிக கவலைகள் வந்து விடுகிறது. இருள் கவிகின்றபோது அந்த இருட்டு நம் கண்களை சற்று குருடாக்கும். ஆனால், இருள் பழகப் பழக கண்கள் தெளிவாகப் பார்க்கத் துவங்கும். நாம் இத்தகைய இருளில் முதலில் குருடாகிப் பிறகு தெளிவாக பார்க்கத் துவங்க வேண்டும். ஆதிசிவன் நமக்குத் துணையிருக்கும்போது நமக்கேன் கலக்கம்?''

நம்பிக்கையுடன் சோழ மகாதேவியை சித்திரசபைக் கூட்டத்துக்கு அழைத்துச் சென்றார். ஆனால், சபை நடவடிக்கைகள் தான் நினைத்த இருளை விடக் கருமையாக இருப்பதைக் கண்டார்.

வீரராஜேந்திர சோழத்தேவருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் என்பதால் சபை சோகையோடு காணப்பட்டது என்பது என்னவோ வாஸ்தவம்தான். மாலை மயங்கிய பிறகே ஒளி வெள்ளம் பாய்ச்சிய தீபங்கள் சூழக் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர் யார் முகத்திலும் ஒளியில்லைதான். ஒரு காலத்தில் இதே சபையில் வீரராஜேந்திரன் கர்ஜனையை கேட்டுக் கேட்டு குதூகலித்த வீரர்களின் தலைவர்கள் தங்கள் பேரரசன் மறைவு இத்தனை விரைவில் நிகழவேண்டுமா என்ற வேதனையில் வீற்றிருந்தனர். மேடையிலே அம்மங்காதேவியை பெரிய சிம்மாசனத்தில் அமர்த்திவிட்டு அருகே அதிராஜேந்திரனும், வீரராஜேந்திரனின் மாப்பிள்ளை என்ற முறையில் விக்கிலனும் அமர்ந்தார்கள். சற்று தள்ளி அமர்ந்த பில்வணன் முகத்திலோ வேதனை அளவுக்கதிகமாக காணப்பட்டிருந்ததை ஆசிரியர் கவனித்துக் கொண்டார். சபையில் அமர்ந்த மூத்தவரான சம்புவரையர் முதலில் எழுந்து சம்பிரதாயங்களை சொல்லிவிட்டு சோழதேசத்து பெரிய ராஜா இறந்தபோது தன் வயது நாற்பது என்றும் அவர் மறைந்த இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பெரிய ராஜாவின் மகன்கள் ஒவ்வொருவராக மறைந்து கொண்டிருக்க தான் மட்டும் இவையெல்லாம் பார்த்தும் காலதேவன் தன்னையும் கொண்டு போகாமல் ஏன் இப்படி தண்டிக்கவேண்டும் என்று உருகிப் பேசி சபையையும் உருகச் செய்தார். சபையில் மற்ற அனைவருமே வீரராஜேந்திரனுக்குப் புகழ் அஞ்சலி இரங்கற்பா பாடினர். முடிவில் பில்வணன் எழுந்தான். அஞ்சலியில் அரசியல் ஆரம்பமாகப் போவதை ஆசிரியர் உணர்ந்தார்.

ஆனால், முதலில் பில்வணன் அரசியல் பேசவில்லை. தன் அருமை நண்பராகி உயிருக்குயிராய் பழகிய பேரரசருக்குத் தானும் மருமகன் விக்கிலனும் செய்த சேவைகளை விலாவாரியாக பட்டியலிட்டு அப்படிப் பட்டவர் தங்களைப் பிரிந்து விட்டாரே என்று வருத்தப்பட்டான். அப்போதுதான் அந்தக் குறுக்கீடு வந்தது. குறுக்கிட்டவர் சோழ தேசத்து மேற்கு எல்லைத் தளபதியும் தகடூர் அரசனுமான அதிகைமான் தேவர்தான்.



''பில்வணன் கூற்றினை எப்படி நம்பமுடியும்? சக்கரவர்த்திகளின் சவத்தினை இங்கு அரண்மனையில் வைத்துவிட்டு சாளுக்கியனோடு திருவேங்கடகூடம் போய் யாகம் செய்யச் சென்றவர்கள் இப்படி உண்மையைப் பொய்யாக்கிப் பேசலாமா?''

குறுக்கிட்டவரைப் பில்வணன் பொறுமையாகப் பார்த்தான். அவன் எதிர்பார்த்ததுதானே நடக்கிறது என்பது போலவும் இருந்தது அவன் பார்வை.

''அதிகைமான் தேவர் ஆத்திரப்படுவது நியாயம்தான். ஆனால், மன்னர் முன்னமேயே இறந்தது எங்களுக்குத் தெரியவே தெரியாது. அப்படித் தெரிந்தால் இப்படிப்பட்ட செயலை நாங்கள் செய்வோமா?''

''இதை நாங்கள் நம்ப வேண்டுமா? இறந்து போன மன்னரை மூன்று நாட்களாக அரண்மனையில் வைத்துக் கொண்டதை சோழ தேசமே பேசுகிறது. ஆனால், சாளுக்கிய குரு ஏதும் அறியாதது போல் வேடம் போடுகிறார். பில்வணரே! இறந்துபோன வீரராஜேந்திர சக்கரவர்த்தியார் உங்களோடு உறவு கொண்ட ஒரே பாவத்திற்காக உங்களை விட்டு விடுகிறோம். இல்லையேல் கொதித்துக் கொண்டிருக்கும் எங்கள் நெஞ்சம் - அந்த நெஞ்சத்தில் தேக்கி வைத்துள்ள வஞ்சம் உங்களை குதறிப் பிடுங்கிவிடும்.''

அதிகைமான் ஆவேசம் திடீரென சபையெங்கும் குழுமி இருந்த சோழ வீரர்களை உணர்ச்சி பொங்க வைத்தது. ''வீரவேல்! வெற்றிவேல்!'' என்று எங்கும் முழக்கம் கேட்டன. அஞ்சலிக்காக வந்தவர்கள் ஆவேசமாகி விட்டதை பில்வணன் பார்த்தாலும் அசரவில்லை. சம்புவரையர் மறுபடியும் எழுந்தார்.

''அதிகைமான் ஆவேசப்பட்டது உண்மைதான். மகாவீரரான வீரராஜேந்திரர் மரணம் அவர் நெருங்கிய நண்பனான எனக்குக் கூட தெரிவிக்கப்படவில்லை. ஏன், அவர் தன் மகனான அதிராஜேந்திரத்தேவருக்கு மகுடாபிஷேகம் செய்தபோது கூட என்னிடம் கலந்தோசிக்காமலில்லை. சாதாரணமாக பேரரசர் என்னிடம் சொல்லாமல தன் வாழ்க்கையில் எந்த முடிவும் எடுத்ததில்லை. சாளுக்கியர் வந்தபிறகுதான் பல விசித்திரங்கள் இங்கு நிகழுகின்றன. ஆனாலும் நாம் அதிராஜேந்திர தேவரை சோழ மன்னராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஆகையினால் அவர்தான் அதிகைமான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். பேரரசே! தங்கள் தகப்பனாரை பெயர் சொல்லி அழைத்துப் பேசும் அளவுக்கு நான் உரிமையுள்ளவன். இதோ அதிகமானோர் சக்கரவர்த்தியோடு தோளோடு தோள் நின்று பல போர்க்களங்களை வெற்றிக் களங்களாக்கியவர். எங்களை எப்படி நீங்கள் ஒதுக்கித் தள்ளி தங்கள் தந்தையாரின் மரணத்தை மறைக்கலாம்.''

சம்புவரையரின் நியாயமான கோபம் அதிராஜேந்திரனை பாதிக்கவேச் செய்தது. இவர்கள் சொல்வது நியாயம்தான். ஆனால், இவர்களுக்கு ஒரு உண்மை தெரியாது. தந்தையார் மறைந்த செய்தி தனக்குக் கூட தெரிவிக்கப்படவில்லை என்று சொன்னால் இவர்கள் நம்புவார்களா? இந்த சமயத்தில்தான் மைத்துனன் எழுந்தான். சாளுக்கியனைப் பார்த்து சோழவீரர்கள் எதிர்ப்புக்குரல் எழுப்பினார்கள்.

''எதுவும் பேசாதே... எங்கள் எதிரி சாளுக்கியனே... நீ உங்கள் நாட்டுக்குத் திரும்பிப்போ. வீரவேல்! வெற்றிவேல்!'' என்ற குரல்கள் எங்கும் எழுந்தன. சபை சற்று அடங்கும் வரை காத்திருந்தான். பிறகு அவர்களை நோக்கி கத்தினான்.

''நான் உங்கள் எதிரியல்ல. மாமன்னர் வீரராஜேந்திரரின் மருமகன். உங்கள் அரசர் அதிராஜேந்திரரின் மைத்துனன். என் பேச்சையும் நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும்.''

சம்புவரையர் சபையை சற்று அடங்குமாறு சைகை எழுப்பவே விக்கிலன் சம்புவரையருக்கு நன்றி கூறினான்.

''நன்றி! தேவரே. நானும் உங்களில் ஒருவன்தான். உங்களைப் போலவே எனக்கும் என் குருதேவ் பில்வணருக்கும் திருவேங்கடகூடத்தில் யாகம் ஆரம்பிக்கும் முன்னர்தான் என் மாமன் மறைந்த விஷயம் தெரியும். அந்தச் செய்தியை எமக்கு முதலில் சொன்னவர் உங்கள் முன்னர்தாம் இருக்கிறார். அவரையே கேளுங்கள்.''

என்று சொன்னவன் ஆசிரியரை கைகாட்டிப் பேசினான்,

''சபையோர்களே! அரண்மனை வைத்தியரை முதல்நாள் மாலை ஆசிரியர் பார்த்தாராம். வைத்தியன் ஆசிரியரிடம் பேரரசரின் மரணச் செய்தியை எங்களுக்குத் தெரிவிக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டானாம். இது அரண்மனை வைத்தியனே சொன்னதுதான். வேண்டுமானால் யாரும் அவனை அழைத்து விசாரிக்கலாம். உண்மை புரியும். ஆனால், ஆசிரியர் ஏன் அப்படி திடுதிப்பென வாயில் காவலனையும் அடித்துப்போட்டு யாகசாலையில் நுழைந்து பிராம்மணர்களை பயமுறுத்தி, பில்வண குருதேவிடம் வேண்டாத வாதங்களை நிகழ்த்தி பிறகு அந்தத் துயரச் செய்தியை எங்களுக்குத் தெரிவிக்கிறார். அவர் எதற்காக இப்படி ஒரு நாடகம் ஆடவேண்டும்? ஏன் என் மாமன் சவத்தில் அரசியல் செய்ய வேண்டும்? யாரை திருப்திப்படுத்த இப்படிப்பட்ட அவமானத்தை எங்கள்மீது திணிக்க வேண்டும்?''



விக்கிலன் சொல்லிவிட்டு குறிப்பாக அம்மங்கா தேவியையும் பார்த்து வைத்தான். சபை ஏனோ சட்டென அடங்கிப் போனதை ஆசிரியர் கவனித்தார். இனியும் பேசாமல் இருப்பதில் பயன் இல்லை என்று தெரிந்தது.

''விக்கிலா! சாமர்த்தியமாகப் பேசி உன் மீதுள்ள சந்தேகத்தைத் திசைதிருப்ப முடியாது. உன் முன்னால் இரண்டு கேள்விகள் கேட்கிறேன். சக்கரவர்த்தியார் இறந்து இரண்டு நாட்களாகிவிட்டன என்று தெரிந்தும் யாகம் செய்ய திருவேங்கடகூடம் சென்றாய். முதல் நாள் வைத்தியர் என்னிடம் சொன்னதை நாடகமாக்கி விட்டேன் என்று குற்றம் சாட்டுகிறாயே. இறந்து இரண்டு நாட்களாகியும் ஏன் தெரிவிக்கவில்லை என்றுதானே உன்னைக் கேட்டேன். இறந்தவருக்கு ஏன் யாகம் நடத்துகிறாய் என்றுதானே உன்னைக் கேட்டேன். சரி போகட்டும். அப்படி சக்கரவர்த்தியார் இறந்த செய்தியை சொன்னதும் செய்தி சொன்ன என்னைக் கொல்ல ஏன் உத்தரவிடவேண்டும்?''

பில்வணன் எழுந்தான். அவன் நிதானம் அவனிடமிருந்து எப்போதோ பறிபோய்விட்டது.

''நீ சொன்ன விதம் அப்படி. அப்பாவியான பேரரசர் அதிராசேந்திரரை அவமதித்தாய். பேரரசரை அவமதித்த குற்றத்திற்காக உன்னைக் கொல்ல உத்தரவிட்டது நான். நீ யாரென எனக்கென்ன தெரியும்? ஊர் பேர் தெரியாதவன் வரம்பு மீறிப்பேசி பேரரசரை அவமதித்தால் எல்லா ஊர்களிலும் மரணதண்டனைதான் உண்டு.''

சிரித்தான் அவன். ஆனால் அதிராஜேந்திரனுக்கு இதற்கு முடிவு தேவைப்பட்டது போல தோன்றியது. இருவருமே

தன் பெயரை இழுத்து அவமதிக்கிறார்களோ என்றும் தோன்றியது.

''குருதேவ்! இந்த விஷயத்தை இப்படியே விடுங்கள். அத்தையாரைச் சேர்ந்தவர்களுக்கு என்னை அவமதிப்பது ஆனந்தம். அத்தையாருக்கும் ஆனந்தம் என்றால் அப்படியே இருக்கட்டும். எப்போதோ கொடுத்த பாட்டனார் ஓலைப்படி நடக்கவேண்டுமானால் நான் இப்படி அவமானப்பட்டு அழிவதும் அவர்களுக்கு நல்லதல்லவா?''

ஹீனமான குரலில்தான் அவன் பேசினான். ஆனால் மிகமிகப் பலமாக நெஞ்சில் விழுந்தது அம்மங்காவுக்கு, அவளால் தாங்க முடியவில்லை.

''அப்படியெல்லாம் சொல்லாதே மகனே! நான் உன்மீது எந்தத் தவறான எண்ணமும் கொண்டவளில்லை. உன் நலத்தை விரும்புபவள்தானா இல்லையா என்பதை உன் உள்ளத்தைக் கேட்டுப் பாரப்பா... புரியும்''

அவள் கண்களில் கண்ணீர் தளும்பியது. அதிராஜேந்திரன் கூட சற்று கலங்கிப் போய்விட்டான். சம்புவரையர் மட்டும் சற்று சமாதானமாகப் பேசினார்.

''பேரரசே! சோழமகாதேவியார் அனைவர்மீதும் அன்பு மழை பொழிபவர். வேண்டாம். திசை மாறிப்போகும் விவாதங்களை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள் பெருமக்களே! தயை செய்து சக்கரவர்த்தியார் மரணம் பற்றி இனியும் பேசவேண்டாம். அவர் ஆத்மா சாந்தி அடைய சோழ தேசமெங்கும் அனைத்துக் கோயில்களிலும் அகண்ட தீபாராதனைக்கு கட்டளை பிறப்பித்து பேரரசர் ஆணையிட வேண்டும்.!''

பில்வணன் மறுபடி எழுந்து முன் வந்தான்.

''எனக்கும் சில சந்தேகங்கள் தீர்ந்தபாடில்லை என்றாலும் சம்புவரையத் தேவர் கேட்டுக் கொண்டபடி விவாதம் செய்ய வேண்டாம். அவர் கேட்டபடியே சோழ தேசமென்ன, திராவிட தேசமெங்கும் சாளுக்கிய நாட்டிலும் உள்ள சிவாலயங்களுக்கு நாளை முதல் மூன்று தினங்கள் அகண்ட தீபம் ஏற்ற சோழப் பேரரசர் அதற்கான படிகளை அறிவிக்கவேண்டும்.''

ஆசிரியர் திகைத்தார். புகை ஆரம்பமாகி விட்டது. அவர் எதிர்பார்த்தபடியே சபையிலே உள்ள வைணவர்களும் அரசர் சிலரும் எதிர்த்தனர். சிவன் கோயிலுக்கு மட்டுமல்லாமல் பெருமாள் கோயிலுக்கும் படி அளக்க ஆணையிட வேண்டினர்.



பில்வணன் உறுதியாகப் பேசினான்.

''இல்லை! பேரரசர் அதிராஜேந்திரர் சிவபக்தர். பெருமாள் கோயில் பற்றி அவருக்கு இஷ்டமில்லை. கட்டளைப்படிகள் சிவாலயங்களுக்கு மட்டுமே அளக்கப்படும்.''

''இது அநியாயம்! நீ யார் அதைச் சொல்ல...?''

''நான் உங்கள் பேரரசரின் குருதேவ்! அவர் விரும்புவதை அறிந்துதான் சொல்கிறேன். கட்டளைப்படிகளும் அரசர் ஆதரவும் இனி சிவாலயங்களுக்கு மட்டுமே. மீறிப்போனால் பெருமாள் கோயில் சொத்துக்களை முடக்கி விடுவோம்...''

பேரரசன் எழுந்தான். ஏதாவது சொல்லப் போகிறானோ என்று சபையோர் பார்த்தார்கள். அவனுக்கும் ஏதாவது பேச ஆசைதான். ஆனால் பில்வணன் பார்வை அவன் நாவை உள்ளடக்கியது. எழுந்தவன் பேசாமல் உள்ளே சென்று விட்டான்.

பில்வணன் கட்டளை சபையோரை மட்டுமல்ல. சோழ நாடெங்கும் அதிர்ச்சி அலையாக எதிரொலித்தது. வைணவர்களின் நெஞ்சங்களிலும் அந்த அதிர்ச்சி அலை பாய்ந்தது.

அந்த எதிரொலியின் விளைவாக தில்லைவாழ் மிளகாழ்வான் அவசரம் அவசரமாக திருவேங்கடம் விரைந்தான் உடையவரைக் காண.

## 12

# மாமன் மகனே! மறந்தீரோ?

**மி**ளகாழ்வானுக்கும் நாலூரானுக்கும் ஆயிரத்தெட்டு வேற்றுமைகள் இருந்தாலும் நல்ல நண்பகர்களாகவே பழகி வந்தனர்தாம். முக்கியமான வேற்றுமை நாலூரான் எதையுமே ஆலோசித்துத்தான் செய்வான். மிளகாழ்

வானுக்குப் பொறுமை கிடையாது. பொறுமைக்கு அர்த்தமும் அவன் அகராதியில் கிடையாது. நாலூரான் நான்கு பேரை அரவணைத்துப் போவதில் சமர்த்தன் என்றால் அதே நான்கு பேரை சடுதியில் எதிரியாக்கிக் கொள்வதில் மிளகாழ்வான் வல்லவன். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத்தெரியாத மிளகாழ்வானுக்குக் கோபமும் அதிகம். தில்லை திருச்சித்திரக் கூடத்திலே பள்ளி கொண்ட பெருமாளுக்கு சேவைக்காக பொறுப்பேற்ற அன்றுதான் நாலூரானை சந்தித்தாலும் அவர்கள் இருவரும் ஏதோ சிறுவயது நண்பர்கள் போல பழகி வந்தார்கள். நாலூரானின் சிநேகிதமும் வெள்ளை மனம் கொண்ட மிளகாழ் வானுக்குப் பிடித்துத்தான் இருந்தது - நேற்று வரை.

காரணம், திடீரென நெற்றியிலும் மேனியிலும் சாம்பலைப் பூசிக் கொண்டு வந்து தன் முன்னம் நாலூரான் வந்து நின்றதுதான். அத்தோடு இல்லாமல் தன்னையும் வைணவத்தையும் குறை கூறிப் பேசிக்கொண்டே இருந்த நாலூரானைப் பார்த்து 'கொபுக்' கென மிளகாழ்வானுக்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்தாலும் நண்பன்தானே என்ற வகையில் முதன்முதலாக பொறுமை காத்தான். நன்றாக இருந்தவன் நேற்று வரை அன்பு பாராட்டிப் பேசிய நாலூரான் ஏன் இப்படிப் பேசவேண்டும். ஏன் திசைமாறிப் போகவேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால், அந்த நண்பன் அத்துமீறியபோது அவனிடம் புதிதாக வந்து குடிகொண்ட பொறுமை அவனிடமிருந்து அகன்றது.

''நாலூரா! நாக்கை அடக்கிப் பேசு! என்னை யார் என்று நினைத்துக் கொள்கிறாய். நான் உடையவரின் சீடன். உடையவர் ஒருவருக்குத்தான் நான் அடிமை. உடையவர் எவ்வழியோ நானும் அவ்வழி.''

''அதெல்லாம் காலம் மாறிப்போச்சு தோழா! மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி. நான் சொல்வதைக் கேள். உன் நெற்றியில் உள்ள பாழும் திருமண்ணை அழித்துவிட்டு இந்தப் புனித விபூதியை பூசிக்கொள். வேறு வழியே இல்லை. அரசர் ஆணையப்பா. நேற்று வரை நாராயணா என்று சொன்னோம். இப்போது நமச்சிவாய என்று சொல்கிறோம். கஷ்டம்தான். ஆனால் பழகிவிடும்!''

யிளகாழ்வானுக்கு கோபம் அதிகம் வர ஆரம்பித்தது. கோபம் வந்தால் மிளகாழ்வானை அடக்குவது கஷ்டம்.



''யாரைப் பார்த்துச் சொல்கிறாய் பதரே! உனக்குப் பயம். அச்சம். அச்சப்பட்டுப் அச்சப்பட்டு உன் உயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறாய்... ஆனால் நான் அப்படி அல்ல... உடையவரின் உண்மையான சீடனை எந்த அற்பப் பதராலும் மாற்றமுடியாது. நீ வேண்டுமானால் உன் உடல் முழுவதும் சாம்பலை பூசிக்கொள். பூச்சிக்கடி பட்டால் அரிப்பு அகலும். அல்லது உடல் முழுவதும் அழுக்கு இருந்தால் அந்த சாம்பலை பூசி தேய்த்துக் குளி. உடல் சுத்தமாகும்.''

நாலூரான் பதற்றப்படவில்லை. பதிலாக சிரித்தான்.

''மிளகான்! நீ எத்தனைதான் கோபப்பட்டாலும் உண்மையை இனி யாரும் மாற்றமுடியாது. இன்று தேசம் முழுவதும் இருக்கும் ஒரே பிரச்சினை. ஒரே கேள்வி. 'சிவத்தைக் காட்டிலும் மேலானதொன்று இருக்கிறதா' என்பதுதான். நீ கோபப்பட்டாலும் என் நண்பன். கோபத்தை விட்டு விட்டு புத்தியை ஆராய்ச்சியில் செலுத்து. இனி உடையவர் எல்லாம் என்ன சொல்லியும் பலன் அளிக்கப் போவதில்லை. ஏன் உடையவரே மாறினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.''

''டேய்! அநாவசியமாக உடையவரை ஏன் வம்புக்கு இழுக்கிறாய். நான் பொல்லாதவனாகி விடுவேன்...''

''போப்பா... உடையவராம் உடையவர். அரசரே சொல்லிவிட்டார். சிவன் ஆலயங்களுக்குத்தான் இனி கட்டளைப்படி அளப்பார்களாம். அதோ உன் பள்ளி கொண்ட பெருமாளுக்குக் கூட பக்கத்திலே திருச்சிற்றம் பலத்தான் கருணை காட்டினால்தான் உதவி கிடைக்கும். நீயும் 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்று சொன்னால்தான் இங்கே இருக்கவே முடியும்.''

அவ்வளவுதான். சாதாரணமாகவே வெப்பப்புகை விட்டுக் கொண்டிருந்த எரிமலை வெடிக்கத் துவங்கிவிட்டது. இது வரை வாய்ச்சண்டை போட்ட மிளகாழ்வான் நாலூரானின் குடுமியைப் பிடித்து தரதரவென இழுத்தான். முகத்திலும் மார்பிலும் சரமாரியாக அடிகள் நாலூரான் மேல் விழுந்தன. எப்படியோ தப்பித்து வெளியே ஓடிய நாலூரான் சடுதியில் ஒரு காபாலிகர் கூட்டத்துடன் மிளகாழ்வானை நெருங்கினான். முதலில் அவர்கள் அனைவரையும் தனியாளாக எதிர்த்தான். அவர்கள் பலம் அதிகம் இருந்தது.

இந்தக் காபாலிகர்களிடம் திருப்பி சண்டையிட முடியாது எனத் தெரிந்து கொண்ட மிளகாழ்வான் சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தான். வேறென்ன, அங்கிருந்து வெகு வேகமாக திரும்பிக் கூட பார்க்காமல் ஓட ஆரம்பித்தான்.

தில்லை நகர எல்லை வரை மூச்சிறைக்க ஓடியவன் நண்பன் ஒருவன் வீட்டுக்கதவை தட்டி அவன் குதிரையைக் கேட்டுப் பெற்று உடையவரைப் பார்க்கப் புறப்பட்டான். உடையவர் இந்நேரம் திருவேங்கடகூடத்தில்தான் எழுந்தருளியிருப்பார்.

அவன் உள்ளம் எரிமலையாய் கொதித்துக் கொண்டிருந்ததால் பசி தாகம் எதுவும் தெரியவில்லை அவனுக்கு. அந்தப் பாழாய் போன காபாலிகர்களிடம் அடி வாங்கியது கூட வலிக்கவில்லை. ஆனால், நேற்று வரை தன்னோடு உயிருக்குயிராய் சிநேகிதமாய் பழகிய நாலூரான் இப்படிப் பேசுவானா? தன்னைப் பற்றிப் பேசினாலும் பழுதில்லை. ஆனால், உடையவரைப் பற்றிப் பேசுவதா? வைணவத்தை இழிவாகப் பேசுவதா? பெருமாள் கோயிலுக்குக் கட்டளைப்படி இனி கிடைக்காதாமே, போகட்டும். நாங்கள் ஆயிரமாயிரம் அடியார்கள் இருக்கிறோம். எங்களுக்குப் படி அளக்கும் பகவானுக்கு நாங்கள் அளப்போம். எங்கள் உடையவரை என்ன நினைத்து விட்டார்கள் இவர்கள். பாவிகள். இருக்கட்டும். உடையவரைக் கலந்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் பிறகு மற்ற அடியார்களைக் கொண்டு இவர்களுக்கெல்லாம் பெரிய பாடம் புகட்டுவோம்.''

மிளகாழ்வான் நினைக்க நினைக்க வெறி அதிகம் பிடித்ததுபோல் உணர்ந்தான். காலையிலிருந்து கிளம்பியவன் மாலை மயங்கும் வரை அவன் அந்த வெறியையும் கோபத்தையும் தக்கபடி பாதுகாத்தே வைத்திருந்தான். திருவேங்கடகூடத்து எல்லை வருவுதற்கு முன்னால்தான் ராஜபாட்டையில் அந்த இளைஞன் சேர்ந்து கொண்டான். குதிரையில் சற்று வேகமாக வந்த இளைஞன் பார்ப்பதற்கு சிறு வயது போல தெரிந்தது. ஆனால் வைணவன் முகமாகத் தெரியவில்லை. ஆனாலும் இருள ஆரம்பித்து விட்டது. இரவு நேரம் துணையிருந்தால் நல்லது.

''தம்பி! திருவேங்கடகூடம்தான் செல்கிறாயா அல்லது வேறு எங்காவது வடக்கே செல்கிறாயோ...''



இளைஞனின் குதிரை மிளகாழ்வானின் குதிரையோடு சற்று நிதானித்து சமமாக சேர்ந்து ஓடியது. குதிரைகளின் குளம்பொலிகளின் மத்தியில் சத்தமாகப் பேசிய மிளகாழ்வானை அந்த இளைஞன் பார்த்தான், புன்னகைத்தான். இருட்டிலும் அவன் பற்கள் வெண்மையாக மினுமினுத்ததை ஆழ்வானும் பார்த்தான்.

''புன்னகைதான் பதிலா? எனக்குப் புன்னகை பாஷையெல்லாம் புரியாது. தமிழ் பேசுவாயா அல்லது அந்த சண்டாள சாளுக்கிய வீரர்களில் ஒருவனா... முதலிலேயே சொல்லிவிடு. தெரிந்து விட்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை பார். நீ ஒரு பக்கம், நான் ஒரு பக்கம் சென்று விடலாம். எதற்கு வீண் தொல்லை... என்ன நான் சொல்வது சரிதானே...''

படபடவெனப் பேசிய வைணவனைப் பார்த்து மறுபடியும் சிரித்தான் அவன்.

''வைணவரே! நான் தமிழன்தான். அது சரி. உம்மைப் பார்த்தால் படபடப்பு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. சற்று நிதானமாகச் செல்லுங்கள். இரவு நேரம். காட்டுப் பகுதி. பதற்றப்பட்டு வேகமாகச் சென்றால் உமக்கு மட்டுமல்ல, உம்முடைய குதிரைக்கும் கஷ்டம். இந்தப் பகுதியில் காட்டு மிருகங்கள் மிகுதி!''

அறிவுரையாக வந்த பதில்தான் என்றாலும் மிளகாழ்வானுக்கு சற்று நிம்மதியைக் கொடுத்தது. ஏனோ அவன் அறியாமல் பதற்றம் கூட சற்று தணிந்ததைப் போல உணர்ந்தான்.

''நீ சொல்வது உண்மைதான் தம்பி! ஆனால் காட்டு மிருகங்களை விட நாட்டிலே உள்ள சில மிருகங்களால் தொல்லை அதிகமாகிவிட்டது. நேற்று வரை நண்பனாக இருந்தவன் இன்று மிருகமாகி வதை செய்கிறான். அப்படிப்பட்டவர்களை விட இந்தக் காட்டு மிருகங்கள் மேல்!''

''நீர் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. நீர் எந்த ஊர், உம்மை வதைத்த அந்த மிருகம் இப்போது எங்கே இருக்கிறது சொல்லும். நான் அதை அடக்கிக் காட்டுகிறேன்.''

''முடியவே முடியாது தம்பி! இப்படிப்பட்ட மிருகங்கள் பகலிலே பசுத்தோல் போர்த்திக் கொண்டு பால் தருவதுபோல நாடகம் செய்யும். இரவில் நரியாக மாறி தன் கூட்டத்துப் பசுக்களையே கடித்துக் குதறும். நாலூரான் கூட அப்படித்தான்...''

''நாலூரான் என்றால் தில்லை வைணவக் குலபதியா?''

''நாராயணா! அந்த வார்த்தையையே சொல்லாதே! ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் பாவம் கழியாது. அந்த சண்டாளன் வைணவக் குலபதியாக நேற்று வரை இருந்தான். இன்று அவன் வைணவக் குலத் துரோகி. 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்று தானும் கூறி மற்றவர் களையும் ஆசைகாட்டி பயமுறுத்தி கூற வைக்கிறான். என்னையும் அப்படி சொல்லச் சொன்னான். நான் யார்? உடையவரின் உண்மைச் சீடன். என்னிடம் அவன் வாதம் பலிக்குமா? அவனுக்குப் பதிலடி கொடுத்தேன். அவ்வளவுதான். எங்கிருந்தோ அந்தக் காபாலிகக் கூட்டத்தைக் கொண்டு வந்த அந்த சண்டாளன் என்னை ஒரு கை பார்த்து விட்டான். அவர்களிடமிருந்து தப்பித்து ஓடி வருகிறேன்.''

''அங்கிருந்து தப்பித்து இங்கு ஏன் வருகிறீர்?''

''வேறு எங்கு போவது? உடையவர் தற்சமயம் திருவேங்கடகூடம் கண்ணன் கோயிலில் இருக்கிறார். எங்களுக்கெல்லாம் அவரை விட்டால் நாதி ஏது? அவர்தானே எங்கள் நாராயணன்.''

''ஓஹோ! நீரும் உடையவரைப் பார்க்கத்தானா போகிறீர்?''

''அப்படியென்றால் நீயும் அங்குதான் வருகிறாயா? நீ யார்? வைணவனா? அல்லது வைணவக் குடும்பத்தைச் சேர்ந்தவனா? என்ன விஷயமாக உடையவரைப் பார்க்கப் போகிறாய்? உடையவரை உன்னால் சந்திக்க முடியுமா? என்னிடம் உன் விஷயங்களைச் சொல். உன் விஷயங்களைப் பொறுத்து நானே உடையவரை சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்.''

படபடப்பும் வேகமும் கலந்து பேசிய வைணவனைப் பார்த்து சிரித்தான். பிறகு நிதானமாகவே கேட்டான்.

''நீர்... உடையவரின் பிரதான சிஷ்யரோ?''



''அப்படி ஒரு மஹாபாக்கியம் இன்னும் அந்த ஆண்டவன் எனக்கு அருளவில்லை. உன் வாக்கு மட்டும் பலித்தால், ஆஹா! என் வாழ்க்கையே தன்யம் ஆகிவிடும்.''

மிளகாழ்வான் முதன் முதலாக ஆனந்தமாகப் பேசினான். தன்னை அப்படி ஆனந்தப்படுத்திய அந்த இளைஞனை அவனுக்குப் பிடித்து விட்டது. இவனுக்குத் தாமும் ஏதாவது உதவி செய்தே ஆகவேண்டும் என்றும் முடிவு செய்தான்.

''தம்பி! உன்னை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. நீ என்னுடனே கண்ணன் கோயிலில் தங்கலாம். நானே உன்னை உடையவரிடம் அழைத்துச் செல்கிறேன். உடையவரின் பிரதான சிஷ்யரா என்று கேட்டாய் அல்லவா? அப்படி என்றில்லாவிட்டாலும் என்னை உடையவரால் ஒதுக்கவே முடியாது...''

''ஏனாம்?''

''நான் கோபக்காரனாம்; அடங்காதவனாம்; இவன் நம்மிடம் மட்டுமே அடங்குவான்... என்று பலமுறை உடையவர் சொல்லி சாந்தப்படுத்துவார். சீரங்கத்தில் நான் வந்துவிட்டால் பார்க்க வேண்டுமே. அத்தனை சிஷ்யர்களும் என்னைப் பார்த்து பயந்து உள்ளே விட்டு விடுவார்கள். எனக்கு இன்னோர் பெயரையும் வைத்து மறைவாக கூப்பிடுவார்களாம். அதுதான் துர்வாசர் என்று.''

சிரித்தான் மிளகாழ்வான்.

''நீர் படபடவெனப் பேசுவதைப் பார்த்தாலே வெளிப்படையாக எதையும் பேசுபவர் எனப் புரிந்து கொண்டேன். ஆனால், துர்வாசராக உம்மை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை.''

இளைஞன் வார்த்தைகள் மிளகாழ்வானை மேலும் ஆனந்தப்படுத்தியது. வாழ்க்கையில் இவன் ஒருவன்தான் தன்னை கோபக்காரன் என்று சொல்ல மறுக்கிறான். நல்லவன். நாராயணன் இவனுக்கு எல்லா நலன்களையும் அருளட்டும்.

ஊர் எல்லை வந்ததற்கான அடாவடிகள் கால்நடைகளின் சப்தத்தால் உணர்ந்ததால் குதிரைகளின் ஓட்டத்தை மட்டுப்படுத்தின. கண்ணன் கோயில் வந்ததும் இளைஞன் எதுவும் பேசாமல் விடைபெற்றான். மிளகாழ்வானும் நல்ல நண்பன் ஒருவன் கிடைத்த மகிழ்ச்சியில் விடை கொடுத்தான்.

'நேற்று வரை நாலூரானும் நண்பனாகத்தான் இருந்தான். இன்று எதிரியாகப் போய்விட்டான். அவன் போனால் என்ன. இதோ ஒரு நல்ல நண்பன் கிடைத்துள்ளான். ஆனால், அவன் விவரம் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டானே... இருக்கட்டும். அவனும் இங்குதானே வந்துள்ளான். நாளைக் காலை பார்த்துக் கொள்வோம். முதலில் உடையவரை ஒரு முறை தரிசனம் செய்து கொள்ள வேணும்!'

ஆனால், மிளகாழ்வான் நினைத்தபடி அன்றிரவே உடையவரை தரிசனம் செய்ய முடியவில்லை. பள்ளி கொள்ள சென்றுவிட்டார் என்று சிலரும் பாராயணம் செய்து கொண்டிருக்கிறார் என்று வேறு சிலரும் சொன்னதால் திரும்ப வந்துவிட்டான்.

அடுத்தநாள் காலையும் அவனால் அவரிடம் பேசமுடியவில்லை. காரணம், அவரைச் சுற்றிலும் ஏராளமானவர் கூடியிருந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்படியும் உடையவர் பார்வையிலாவது படலாமே என்று கூட்டத்தில் முண்டியடித்து முன்னே செல்லப் பார்த்தும் முடியவில்லை. பாழாய்ப்போன அவன் கோபம்தான் முன்னே வரப் பார்த்ததே தவிர அவனால் முன்னால் செல்ல முடியவில்லைதான்.

இதே சீரங்கமாய் இருந்தால் இப்படி நடக்குமா? ஏதாவது கர்ஜனை செய்தாவது உள்ளே போயிருப்போம். ஆனால், இது கண்ணன் கோயில். முற்றிலும் புதியவர்கள் உடையவரை சூழ்ந்து இருக்கிறார்கள். அப்போதுதான் அவன் கண்ணில் தெரிந்தமுகம் பட்டது. மாருதி யாண்டான்தான் அவர்.

''ஆண்டான் சுவாமிகளே! அவசரம்... அவசரம்... நான் உடனடியாக உடையவரை சந்திக்க வேண்டும். ஏதாவது உபாயம் சொல்லுங்களேன்...''

''மாலை வரை பொறும்!'' ஒரே வார்த்தையை பதிலாய்ச் சொல்லிவிட்டு அகன்று விட்டார். வேறு வழியில்லாமல் அந்தக் கூட்டத்தோடு பின்பக்கமே பழியாய் உட்கார்ந்து காத்திருந்ததுதான் மிச்சம். உடையவரையும் சந்திக்க முடியவில்லை. அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதும் அந்த சந்தடியில் அவன் செவியில் விழவில்லை.



மாலை வந்ததும் தான் வழக்கமாய் செய்யும் குளியலையும் சந்தியையும் முடித்துக் கொண்டு ஆவலாய் உடையவரிடம் வந்தான். ஆனால், அவன் வருவதற்குள் அந்த இடமே சற்று மாறி இருந்தது. காலையில் அரக்க பரக்க கும்பலாய் கூடி உடையவரை தன்னிடமிருந்து மறைத்த அத்தனை பக்த ஜனக்கூட்டம் வரிசையாக சப்பணமிட்டு அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். முன் வரிசையில் திரிதண்டம் திருமார்பில் சாய உடையவர் ஒரு பலகையில் அமர்ந்திருந்தார். அவர் எதிரே பெரிய தரைவிரிப்பு விரிக்கப்பட்டு யார் வரவுக்காகவோ அனைவரும் காத்திருந்தது போலவே அந்த சூழ்நிலைபட்டது மிளகாழ்வானுக்கு. ஆச்சரியமாக பின் வரிசையில் சிலர் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தவன் அவர்களில் நேற்று அறிமுகமான அந்தப் புதிய நண்பன் தென்பட்டான். மறுபடியும் அந்த நண்பனைப் பார்த்ததில் மகிழ்ச்சி முகத்தில் பரவ அவனருகே வந்தான் மிளகாழ்வான்.

அதே சமயம் பின்பக்கமிருந்து சல் சல் என்ற சலங்கை ஒலி காற்றில் மிதக்க ஒரு இளம்பெண் சக பெண்களுடன் வந்து கொண்டிருந்தாள். ஒரு வேளை ஆண்டாளோ என்று ஒரு கணம் மயங்கியவன், அந்த ஆண்டாள்போல கோலம் கொண்டு மெதுவாக நடந்த அந்த கோதை தன் குழுவினரை முன்னே செல்லவிட்டு அவள் மட்டும் தன் பக்கம் நடந்து வருவதைப் பார்த்ததும் அவன் நெஞ்சு அதிகமாகவே அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

அவன் முன்னே வந்தவள் மிளகாழ்வானை சற்றும் லட்சியம் செய்யாமல் அவன் அருகே நின்ற புதிய நண்பனைப் பார்த்து தன் அகலக் கண்களால் காதல் விரியப் பார்த்ததையும் மிளகாழ்வான் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

''என்ன மாமன் மகனே! என்னை மறந்தீரோ? மறந்து என்னை விட்டு விலகிப் போனால் விட்டு விடுவேன் என்று பார்த்தீரோ... இரும்! உம்மை வேளை வரும்போது கவனித்துக் கொள்கிறேன்...''

என்று நண்பனிடம் சொன்னவள் சுற்றியிருந்தோர் பார்வை தன் மீதுதான் இருக்கிறது என்ற லட்சியமே இல்லாமல் வேண்டுமென்றே அந்த இளைஞனின் கையைப் பிடித்து அழுத்தி விட்டு அகன்றதும் தான் எதற்காக வந்தோம் என்ற நினைவுகூட மறந்து போனான் மிளகாழ்வான்.

## 13

# "வைணவன் என்பவன் யார்?"

"பதினாயிராமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மது வாயிற்கொண்டாற்போல மாதவன்தன் வாயமுதம்
பொதுவாக உண்பதனை புக்கு நீயும் உண்டக்கால்
சிதையாரோ உன்னோடு செல்வப் பெருஞ்சங்கே!"

"ஆஹா! எத்தனை அருமையான பாடல். ஆண்டாள் பாடலென்றாலே அதன் சுவையே தனிதான். ஆண்டாளின் அற்புதத் தமிழை காத்யாயினி பாடும்போது மேலும்மேலும் கேட்கவேண்டும். ஆஹா! அந்தக் கோதையின் வேடத்தில்தான் இவள் எத்தனை அழகாக இருக்கிறாள். இவள் காத்யாயினிதானா... கங்கைக் கரைநாட்டு இளவரசிதானா... பில்வணனின் மகளா... எப்படி இவள் ஒரேயடியாய் மாறிவிட்டாள். இந்த வைணவர்களின் அன்பும் ஆதரவும் இவளை மாற்றிவிட்டதோ... அதுதான் சரி. இவள் மாறித்தான் போய்விட்டாள். இல்லையென்றால் வேண்டுமென்றே தன்னிடம் வருவாளா... மாமன் மகனே என்று மயக்கமாய் கூப்பிடுவாளா? இவள் மயக்கும் மாயமோகினியோ... அவள் தன்மீது மாயவலை விசுகிறாளோ... இவள் மெய்யாகவே காத்யாயினிதானா... இல்லை கோதை நாச்சியாரா... இல்லை மாயமோகினியா?"

குழம்பிப் போயிருந்தான் காளிங்கன். தன்னையும் ஒரேயடியாக தலைகீழாய் மாற்றும் சக்தி காத்யாயினியிடம் உள்ளதாக உணர ஆரம்பித்தான். சற்று தலையை ஆட்டிக் கொண்டவன் தனக்குள் தன்னையே கடிந்து கொண்டான். 'மாயை வேறு - உண்மை வேறு.' இவள் சாளுக்கியரின் கைப்பாவை. மாயை... ஆனால் என்னமாய் தமிழ் இவள் நாவில் நடனமாடுகிறது. எங்கிருந்துதான் கோதைப் பாடல்களை இவ்வளவு இசைநயமாய் கற்றாளோ, ஆஹா! உடையவர் கூட அதைக் கேட்டு ஆனந்தமாய் கைகூப்பி வணங்குகிறாரே...

"அந்தக் கண்ணனின் அங்கமெல்லாம் ஏறி அவன் கைத்தலத்தில் குடிகொண்டு அங்கேயே காலமெல்லாம் வாசஞ்செய்யும் பாஞ்சசன்யமே! சங்கரையா... நீ சொல்வது சரியா? உனக்கு எப்படிப்பட்ட பாக்கியம். நீ உண்பதோ



மூவுலகமும் அளந்த முதல்வனின் வாய் அமுதம். எப்போதெல்லாம் வாசுதேவன் திருவாயால் ஊதப்படுகிறாயோ, அப்போதெல்லாம் அவன் வாயமுதம் கிடைக்கப்பெறுவாய். அந்த வாயமுதம் உனக்கே சொந்தமென நினைப்போ. அவன் பெண்படைக்கு அல்லவா அது சொந்தம். அவர்கள் அத்தனை பேரும் அந்த வாயமுதத்தில் ஒரு துளி கிடைக்காதா, பங்கு கொள்வோமே என்று காத்திருக்கிறார்களே; வெண் சங்கே, என் செல்வப் பெருஞ்சங்கே, கண்ணனின் செல்லப் பெண்களுக்கான இனிய சொத்தை அபகரித்துக் கொள்ளலாமா... இது நியாயமா? புரிந்து விட்டது. கருப்பூர வாசனையும், கமலப்பூவின் வாசனையும் மிஞ்சி நிற்கும் வாயமுதத்தை நீ மது உண்பது போல உண்டு சுவைத்திருக்கிறாயே. ஆகையால்தான் கண்ணனின் அடிமைகளான எங்களை அலைக்கழிக்கிறாயோ... வெண்சங்கே... எங்களை மறந்துவிடாதே..."

காத்யாயினி வாயிலிருந்து வந்த செந்தமிழ் இனிய சிற்றோடையாய் மனதில் தெளிவாக ஓடிக் கொண்டிருக்க அவள் 'எங்களை மறந்துவிடாதே' என்று சொல்லும்போது சற்று அழுத்திச் சொல்லி தன்னை வேண்டுமென்றே அகலக் கண்ணை வீசி பார்வையால் அடித்ததையும் காளிங்கன் மயக்கமாய் உணர்ந்தான். அவளையே பார்த்துக் கொண்டிருந்தால் போதும்... அந்த வெண்மையான முகம்... செவ்விதழ் திறந்ததால் அடிக்கடி எட்டிப் பார்க்கும் வெண்மையான பற்கள்... அந்த வாயிலிருந்து குழந்தைபோல் மழலையாக வரும் தீந்தமிழ்... 'வேண்டாம் பெண்ணே... என்னை மயக்கியது போதும்... என்னால் இனியும் தாங்க முடியாது...'

ஆனால், காளிங்கனைப போலல்லாமல் சபையினர் கண்மூடி தேவகானத்தை ஆனந்தமாக கேட்டுக் கொண்டிருந்தனர். கோதை நாச்சியே நேரில் வந்து கண்ணன் கோயிலில் பெயருக்கேற்ப கண்ணன் புகழைப் பாடுவதாக நினைத்துக் கொண்டனர்.

கண்ணன் கோயில் தாழ்வரை சற்றுப் பெரியதாகவும் அகலமானதாகவும் கட்டப்பட்டிருந்தது. பின்மாலை நேரமாதலால் ஆங்காங்கே தீபங்கள் ஏற்றப்பட்டு காற்று வீச்சில் தாலாட்டும் பாடி ஆடிக் கொண்டிருந்தது. சூழ்நிலை கூட கோதையின் தமிழில் தம்மை மறந்து ஆடுவது போல இருந்தது.

பக்கவாட்டுக் கொண்டை சற்று தூக்கிக் கட்டப்பட்டு அதன் நடுவில் ஒரு வெண்முத்து மாலையையும் செருகி அகலக் கண்களில் மைதீட்டப்பட்டு இரண்டு பட்டுக்கைகளையும் பாட்டுக்கேற்றவாறு தாளம் போட்டு தன் மடியையே துன்புறுத்தினாலும் அற்புதமாக இசை பாடிய காத்யாயினி பாடல் முடிந்ததும் உடையவர்க்கு மண்டியிட்டு தலைதாழ்த்தி வணக்கத்தையும் சொல்லிவிட்டு வரம் கொடுக்க வந்த தேவதை வரத்தை வாரித்தந்துவிட்ட மகிழ்ச்சியில் மறைவது போல் அந்த இடத்தை விட்டு மற்ற பெண்களுடன் அகன்று போனாள்.

கூட்டமும் மெல்ல எழுந்து நின்று சற்று தாறுமாறாக சிதறியதால் காளிங்கனால் அவளை மறுபடியும் அங்கு பார்க்கமுடியவில்லைதான். அந்த சமயத்தில்தான் அவனுடைய கையை இன்னொரு கை இறுகப்பற்றியது. மிளகாழ்வான்தான்.

''என்ன மாமன் மகனே! இந்த மிளகாழ்வானையும் மறந்தாயோ? என்ன செய்வது... அழகிய பெண்ணின் கண் வலையில் சிக்கியவர்கள் அந்தப் பெண்ணைத்தான் நினைவு கொள்வார்கள்... இந்த வைணவன் எப்படி ஞாபகத்தில் வரமுடியும்?''

சற்று ஏளனமாகப் பேசினாலும் மிளகாழ்வானின் குரலில் ஏதோ உரிமை இருந்ததைப் புரிந்து கொண்டவன் தன் நினைவை காத்யாயினிடமிருந்து அகற்றினான்.

''அதுசரி வைணவரே! உடையவரைப் பார்த்து உம்முடைய குறைகளை எல்லாம் கொட்டிவிட்டீரா?''

''இன்னம் இல்லையப்பா'' பெருமூச்சுடன் பதில் சொன்னான் மிளகாழ்வான்.

''உடையவரை உம்மால் பார்ப்பது எளிது என்றும் எனக்குக் கூட உதவி செய்வதாகவும் நேற்று சொல்லிக் கொண்டே வந்திரே... அப்படியானால் இன்னமும் அவரைப் பார்க்கவே இல்லையா?''

முதன்முதலாக தோல்வியை ஒப்புக் கொண்டான் மிளகாழ்வான்.

''நானும் வந்ததிலிருந்து முயன்று பார்த்து விட்டேன். முடியவில்லையப்பா...''



''...அப்படியானால் நான் உமக்கு உதவி செய்யட்டுமா?''

''என்ன உதவி?''

''நான் அழைத்துச் செல்லட்டுமா?''

''எங்கே?''

''வேறெங்கே? உடையவரிடந்தான்...''

மிளகாழ்வானுக்கு சுரீரென்று ஏதோ குத்தியது போல இருந்தது... 'ஆஹா! எப்படிப்பட்ட கௌரவக் குறைச்சல்... தான் சீரங்கத்தில் இருந்தால் தன்னை யாராவது இப்படிக் கேட்டு இருப்பார்களா?... இங்கே மட்டும் தான் ஏன் தயங்க வேண்டும்..' கோபம் வர ஆரம்பித்து விட்டது. சற்று சப்தம்போட்டே பேசினான்.

''என்ன அப்படி சொல்லிவிட்டாய்? என்னாலும் உடனடியாக உடையவரை தரிசனம் செய்யமுடியும்!'' என்று சொன்னவன் ''ஜெய் ஸ்ரீமன் நாராயணா!'' என்று கோஷம் போட்டுக் கொண்டே முன்னே சென்றவன் நடுவில் தன்னை வழிமறித்தவர்களை விலக்கிக் கொண்டே நேரே ஆச்சாரியார் அருகே சென்றான். சென்றவன் சட்டென கண்களை மூடி குனிந்த தலை நிமிராமல் சாஷ்டாங்கமாய் உடையவர் பாதம் முன் நமஸ்காரம் செய்து அப்படியே எழுந்திருக்காமல் ''ஆச்சாரியார் ஸ்ரீபாதமே ஆஸ்ரயம்'' என்று வாய் மட்டும் பேச படுத்துக் கிடந்தான்.

''யார்... மிளகனா... எழுந்திரு... எழுந்திரு...''

மிருதுவான குரல் அவனை எழுப்பி உட்காரவைத்தது. உடையவர் அருகே தண்டனிட்டு தன் காதுகள் இரண்டிலும் விரல் வைத்து தலை வணங்கினான்.

உடையவர் மென்னகை புரிந்தார்.

''சரி... புரிந்துவிட்டது... உன்னை யாரோ ஆத்திரப் படுத்தி விளையாடி இருக்கிறார்கள். அதனால் வழக்கப்படி சித்திரக்கூடத்திலிருந்து ஓடி வர வேணுமா? சற்று இந்தப் பக்கம் உட்கார்ந்து கொள்... உன்னிடம் பிறகு பேசிக் கொள்கிறேன்...''

என்றவர் மாருதியாண்டானை அருகில் அழைத்தார்.

''மாருதி! ஆசிரியரிடமிருந்து செய்தி வந்திருப்பதாக சொன்னாயே... அவர் இங்கு விஜயம் செய்துள்ளாரா?''

''ஆசிரியர் வரவில்லை சுவாமி! ஆசிரியரின் சீடர் வந்துள்ளார்'' என்றவர் பின்னால் இருந்த காளிங்கனை முன்னே வரவழைத்தார். காளிங்கன் முன்னே வந்தவன் அவர் பாதம் பணிந்து எழுந்தான்.

''இவர் பெயர் காளிங்கராயர். பெரிய ராஜாவின் முதல் வரிசைப் பேரர். ஆசிரியரின் சீடர் அல்லவா... வைணவம் பற்றி ஈடுபாடு உண்டு. ஆனால், நம் சம்பிராதயத்தைச் சேர்ந்தவர் இல்லை!''

''புரிகிறது'' என்றவர், தாள் பணிந்து எழுந்து கைகூப்பி நின்றவனை ஒருமுறை உற்றுப் பார்த்தார். உடையவர் அதரத்தில் மென்னகை மலர்ந்தது. நின்று கொண்டிருந்த இருவரையும் அருகே அமர வைத்தவர் மற்றவர்களை ஆசிர்வதித்து அனைவரையும் அனுப்பியவுடன் மாருதியைப் பார்த்தார்.

''மாருதி! வைணவன் என்பவன் யார் தெரியுமோ?''

மாருதியாண்டான் பதில் சொல்லவில்லை. சொல்வதும் அவர் வழக்கம் இல்லை. ஏனெனில், ஆண்டானுக்குத் தெரியும். உடையவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் முத்தாக மதிப்பவர்... உடையவரே பேசினார்.

''மற்றவர் துயரத்தை உணர்ந்து வருந்துபவன்... அவருக்கு உதவி செய்பவன்... அப்படிப்பட்ட எந்த ஒருவனுமே வைணவன்தான். என்னைப் பொறுத்தவரை ஆசிரியர் வைணவர்... இதோ அவர் சீடரின் முகத்தைப் பார்த்தாலும் ஒரு வைணவன் முகமாகவேப் பார்க்கிறேன்!''

திரிதண்டம் தோளில் சாய்ந்து முப்புரி நூலோடு தவழ பன்னிரு திருமண்களோடு மேனி மினுமினுக்க அழகாக முடியப்பட்ட பின் கூந்தலும் முகத்தில் காந்தியாய் பிரகாசிக்கும் புன்முறுவலோடு வைணவத்திற்கு சிறந்ததொரு தத்துவத்தைத் தந்த மகாத்மாவை திருப்தியோடு பார்த்தான் காளிங்கன். தெய்வங்கள் மனிதரை சந்தித்து பழகவேண்டும் என்று நினைக்கும்போதெல்லாம் ராமானுஜர் போல் வடிவெடுத்து வருவார்களோ என்ற நினைப்பு அவன் மனதுள் எழுந்தது. அந்த ஒரு நினைப்பு தான் ஒரு தெய்வீகத் திருஉருவு முன்பு இருப்பதன் உணர்ச்சியையும் அவனுக்கு அளித்தது என்பது என்னவோ உண்மைதான்.



''அந்த சின்னப்பெண் ஆண்டாள் பாடலை எத்தனை அருமையாகப் பாடினாள் கேட்டீர்களோ... இத்தனைக்கும் அவள் தமிழை சமீபத்தில்தான் கற்றாளாம்... கோதையே அடியேன் எதிரே நின்று தமிழ்பாடுவது போல பட்டது. அப்படியே கைகூப்பி வணங்கினேன்...''

உடையவர் இன்னமும் ஆண்டாள் பாடலில் இருந்து மீளவில்லை என்று காளிங்கனுக்குப் புரிந்தது. அப்போது தான் மிளகாழ்வான் வாயைத் திறந்தான்.

''அந்தப் பெண் காளிங்கனின் அத்தை மகள்... இருவரும் உறவு...'' என்று இழுத்தவனைக் காளிங்கன் கையால் தட்டி அடக்கினான்.

''இல்லை சுவாமி! ஒரு விதத்தில் அவள் பரிதாப நிலையில் இருக்கும் இளவரசி. கன்னோசி நாட்டு இளவரசி... ஆனால் தற்சமயம் சாளுக்கிய குருதேவ் பில்வணனின் வளர்ப்பு மகள். அவள் சாளுக்கியரின் கைப்பாவை... ஒரு விதத்தில் மாயமோகினி கூட...''

''அப்போது ஏன் பரிதாப நிலையில் இருப்பதாகச் சொல்கிறாய்? சாளுக்கியர் நம் எதிரிகள்... அவளும் எதிரிதானே... தெரிந்தால் நானே அவளை விரட்டி அடித்திருப்பேனே...''

மிளகாழ்வான்தான் படபடத்தான். உடையவர் அவனைத் திரும்பிப் பார்த்தார். அந்தப் பார்வை என்ன செய்ததோ... அவன் அடங்கித்தான் போனான்.

''அவள் யாராக இருந்தால் என்ன? மாருதியுடன் கடந்த பத்து நாட்களாக நிதமும் வருகிறாள். நான் கண்ணனைப் பற்றி ஏதாவது சொல்கிறேன்... அதையும் காது கொடுத்துக் கவனமாக கேட்கிறாள். இரண்டு நாட்களுக்கு முன்புதான் ஆண்டாளை பற்றி அவளிடம் சொல்லி கோதையின் மொழியையும் பாடலுக்கான பொருளும் விளக்கிச் சொன்னேன். சட்டென பிடித்துக் கொண்டாள். ஆஹா! இன்று அந்தக் கோதையாகவே மாறிவிட்டாள். நீங்களே பார்த்தீர்களே... எத்தனை அருமை... என் ஆசிகள் அவளுக்கு...''

காளிங்கன் எதையோ நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்...

''ஆம் சுவாமி! அவள் ஒரு பெரும் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாள்... அந்த ஆபத்திலிருந்து மீள தங்கள் ஆசிகள் அவளுக்கு அவசியம் தேவை...''

உடையவர் மிளகானைப் பார்த்தார்.

''பார்த்தாயா மிளகான்? அவள் எதிரி நாட்டு பெண்ணாக இருந்தாலும் அவள் நலனை இவர் கோருகிறார். இதுதான் வைணவம்...'' குதூகலித்த உடையவர் காளிங்கனைப் பார்த்தார்.

''தம்பி... அடியேனுக்கு நாராயணன் கதி! உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் என் பூரண ஆசிகள் உண்டு... சரி... ஆசிரியர் என்ன சொல்லி அனுப்பி வைத்தார்? பத்து நாட்கள் முன்பு அவர் வந்த போதே அடியேன் பார்த்திருக்க வேண்டும்... என்ன நினைத்துக் கொள்வாரோ? சரி... விஷயத்தை சொல்!''

உடையவரின் உன்னத குணம் காளிங்கனை மேலும் ஆச்சரியப்படவைத்தது. ஆசிரியரும் அன்று வருத்தப் பட்டார்... இதோ இவரும் வருத்தப்படுகிறார்... நல்லோர் நட்பு என்பதன் பொருள் இதுதானோ...

''சுவாமி! வீரராஜேந்திர சக்கரவர்த்தியார் மறைவுக்குப் பின் சோழதேசம் நிலை தடுமாறி கீழ்நோக்கிச் செல்வதாக ஆசிரியர் தெரிவிக்கச் சொன்னார். நம்மை ஆளும் சோழ அரசர் தற்சமயம் சாளுக்கிய பில்வணனின் கைப்பாவை. அந்த நாத்திகனின் நாசகரமான திட்டங்கள் சைவ – வைணவ சண்டைகளை உருவாக்கத் தொடங்கியுள்ளன. பெருமாள் கோயிலுக்குக் கட்டளைப்படி நிறுத்தப்பட்டுள்ளது. திருவரங்கம், திருமால் சோலை, காஞ்சி போன்ற தலக்கோயில்களின் நில வருவாயையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டுள்ளது. சிவாத் பரதரம் நாஸ்தி போன்ற காபாலிக கோஷங்கள பில்வணனின் ஆணைப்படி நாடெங்கும் பரவத் தொடங்கிவிட்டது.''

வருத்தமாய் காளிங்கன் சொன்னாலும் உடையவர் கண்களை மூடிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''ஆசிரியர், அபயன், சோழமகாதேவியார் பில்வணனின் திட்டங்களை முறியடிக்கும் முயற்சியில் முழுவதும் ஈடுபட்டுள்ளனர். சோழப்படைகள் இன்னமும் எங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதால் நாட்டில் கலவரம் ஏற்படும்



முக்கிய இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சிற்சில இடங்களைத் தவிர சோழ தேசமெங்கும் உள்ள பெருமாள் கோயில்களுக்கு சோழப்படை பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இதுவரை கோபப்படாமல் கேட்டுக் கொண்டிருந்த மிளகாழ்வான் கோபத்துடன் திடீரென வெடித்தான்.

''எங்கே பாதுகாப்பு? எல்லாம் வெறும் பேச்சு... நானே ஏன் இங்கே ஓடிவந்தேன்... ஏன் என்னை அந்தக் காபாலிகர்கள் தாக்க வேண்டும்... அப்போது எங்கே போனார்கள் வீரர்கள்?''

மிளகாழ்வான் குற்றம் சாட்டினாலும் காளிங்கன் நிதானத்துடன் பேசினான். ''உண்மைதான்... சிற்சில இடங்களில் திடீரென சில நிகழ்ச்சிகள் எங்களையும் மீறி நடந்து வருகின்றன. ஆனால் ஒன்று... நேற்று மிளகாழ்வான் அவதிப்பட்டதற்கு அவரும் பொறுப்புதான்...''

கோபம் மேலும் ஏறியது மிளகாழ்வானுக்கு...

''ஏன்... என்னையும் 'சிவாத் பரதரம் நாஸ்தி'' என்று சொல்லிவிட்டு சாம்பல் பூசிக் கொள்ளச் சொல்கிறாயே...''

உடையவர் மறுபடியும் மிளகாழ்வானைப் பார்த்தார். மிளகாழ்வானும் தலையைக் குனிந்து கொண்டான். காளிங்கன் உறுதியாகப் பேசினான்,

''இதுபோன்ற நிகழ்ச்சிகள் பெருகாத வண்ணம் அத்தனை ஏற்பாடுகளும் செய்து வருகிறோம். சோழப்பேரரசர் ஆணை என்ற பெயரில்தான் பில்வணன் கலவரத்தைத் தூண்டுகிறான் என்றாலும் சோழ தேசத்து சிற்றரசர்கள் அனைவருமே சமநோக்கு கொண்டவர்கள்தான். பல அரசர்கள் சைவர்கள். சில அரசர்கள் வைணவர்கள். இவர்கள் அனைவரும் நம் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள். இருந்தாலும் இந்தக் கலவரங்களில் அவதிப்படுபவர்களாக வைணவர்கள் அதிகம் இருப்பது எங்களுக்குக் கவலையைத் தருகிறது. இந்த நிலையில் தங்களின் உதவியை ஆசிரியர் கோருகிறார்!''

''என்ன உதவி?'' உடையவர் நிதானமாகவே கேட்டார்.

''இந்தப் போதாத காலத்தில் ஏற்பட்டுள்ள துயரங்களை வைணவர் சற்று சகித்துக் கொள்ள வேண்டும்... 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்று சொல்பவர்களிடம் வாதம் புரிய

வேண்டாம். அவர்கள் வேண்டுமென்றே வைணவர்களைத் தூண்டும் வேலையில் இறங்கியுள்ளதால் வைணவர்கள் பொறுமை காக்க தங்களை உதவும்படியும் கேட்டுக் கொள்ளச் சொன்னார். கோயில்களில் அதாவது பெருமாள் கோயில்களின் பொறுப்பையும் அதிவிரைவில் பெற்றுத்தர ஆவன செய்வதாகவும் வாக்களித்துள்ளார். அவரையும் மீறி பெருமாள் கோயிலில் அபராதம் ஏற்படும் பட்சத்தில் அவரே முன்னின்று தங்களுடன் போராடவும் உறுதியளித்துள்ளார்!''

காளிங்கனும் நிதானமாகப் பேசினாலும் ஆசிரியர் அளித்த உறுதி அவன் தொனியில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. உடையவர் அவனையும் மாருதியாண்டானையும் ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்தார்.

''ஆசிரியர் ஓர் அதிசய மனிதர். வேதங்களையும் ஆகமங்களையும் முற்றும் கற்று உணர்ந்தவர். அப்படிப்பட்டவரிடமிருந்து உறுதிமொழிகள் வரும்போது அதை ஆண்டவன் கட்டளையாகத்தான் கருத வேண்டும்... அவரிடம் ஒரு விஷயம் சொல்லு தம்பி...'' என்ற உடையவர் தன் புகழ் பெற்ற புன்னகையையும் கூடவே சேர்த்துக் கொண்டார்.

''கறுத்த மனம் ஒன்றும் வேண்டாம் – கண்ணனல்லால் தெய்வமில்லை, இறுப்பதெல்லாம் அவன் மூர்த்தியாய் அவர்க்கே இறுமினோ'' என்ற நம்மாழ்வாரின் கொள்கை உடையவன் நான்'' என்று சொல்லி கண்ணன் சந்நிதியை கைகாட்டினார். ''எனக்கு அந்தக் கண்ணன் துணை – ஆசிரியருக்கு அடியேன் துணை''.

தோளில் சாத்தியிருந்த திரிதண்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்தவர் மிளகாழ்வானைப் பார்த்தார்.

''மிளகான்... நீ திருச்சித்திரகூடத்திலிருந்து ஓடிவந்ததற்குப் பதில் கிடைத்துவிட்டதில்லையா? இன்னமும் உனக்குப் புரியவில்லை என்றால் திருமலை சென்று வா... அடியேன் வரும் மார்கழி நோன்பினை இங்கே கண்ணன் கோயிலில்தான் கொண்டாடப்போகிறேன். ஆண்டாளுக்குக் கண்ணன் என்றால் ஆருயிர். அடியேன் என்ன புண்ணியம் செய்தேனோ... அதனால்தான் சமயம் பார்த்து ஆண்டாள் தாய் என்னை இங்கே தங்க வைக்கிறாள். நாராயணா... அதனால்தானோ என்னவோ அந்தக் கோதை அவள் வடிவத்தில் இன்று என்னிடம் வந்து சேதி சொன்னாளோ...''



நிதானமாக திரும்பி நடக்க ஆரம்பித்தார்.

எந்த ஒரு நிகழ்ச்சியிலும் நல்லதை மட்டுமே எடுத்துக் கொள்ளும் அந்த உத்தமபுருஷரைப் பார்த்து கைகூப்பி நின்றான் காளிங்கன். ஆண்டாளாக வந்தவள் மாயமோகினி என்று சொல்லியும் தான் வணங்கும் ஆண்டாளை மட்டுமே அவளிடம் பார்த்த உடையவரின் காலத்தில் தானும் வாழ்வதும் அந்தப் புண்ணிய ஆத்மாவை தரிசித்ததும் மிகை பாக்கியமாகவே கருதினான் அவன்.

ஆனால், அதே இரவு வாழ்க்கையின் இன்னொரு கோணத்தையும் கண்டான் அவன். அந்தக் கோணத்தைக் காட்டியவள் உடையவருக்கு ஆண்டாளாக மட்டும் காட்சியளித்த அதே மாயமோகினிதான்.

# 14

# “மயிலா? மாய மோகினியா?”

அந்த நாள் தான் எதிர்பார்த்தபடியே பரம திருப்தியாய் கழிந்ததில் ஆனந்தம்தான் காளிங்கனுக்கு. ராமானுஜர் போன்ற மகான்களை தரிசிப்பதால் கரடுமுரடான வாழ்க்கைப் பாதைகூட சீர்படுத்தப்படுகிறது என ஆசிரியர் அடிக்கடி சொல்வதையும் நினைத்துப் பார்த்தான். தான் பழையாறையிலிருந்து பயணம் மேற்கொண்டதிலிருந்து ஏற்பட்ட அனுபவங்கள் தன் வாழ்க்கையையே திசை மாற்றி விட்டதோ என்றுகூட தன்னைக் கேட்டுக் கொண்டான்.

குழந்தையாய் இருந்தபோதே கொப்பத்தில் சாளுக்கியரிடம் நடந்த போரில் தந்தையை பறிகொடுத்தவன். தந்தைக்கும் முன்னாலேயே தாயையும் பறிகொடுத்தவன். தந்தை இறந்த சமயத்தில் அவர் இந்த சோழசாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. ஆனாலும் தந்தைக்குப் பிறகு மகன் என்ற சம்பிரதாயம் தனக்கு உதவவில்லை என்பதில் எள்ளளவும் வருத்தம் இல்லாதவன்தான் காளிங்கன். காரணம் அன்பான அத்தையின் ஆதரவுக் கரங்கள் அவனை எப்போதும் பாதுகாத்தன. ராஜராஜத்தேவரின் மிகப்பெரிய ராஜவம்சத்தில் தன்னை ஒரு நேரடி வாரிசாக பிறப்பித்தமையே போதும் என்று அவ்வப்போது ஆண்டவனுக்கு அவன் நன்றி சொல்வதும் உண்டு.

ஆனால், சிறிய தந்தை வீரராஜேந்திரர் ஆளும்போதுதான் சிக்கல் உருவாவதை உணர்ந்தான் அவன். அத்தையாரின் பாதுகாப்பில் பத்திரமாக கிடக்கும் பெரிய ராஜாவின் ஓலையை அறவே புறக்கணித்து அதிராஜேந்திரன் முடி சூட்டிக் கொண்டதை ஆட்சேபித்தான். பட்டாபிஷேகம் கூட ஒளிவு மறைவாக நடந்ததும், வீரராஜேந்திரர் மயக்கமாக படுத்தபடியே மகுடாபிஷேகம் செய்ததாகவும் செய்திகள் நாடெங்கும் பரவியபோது அவன் நெஞ்சம் கொதித்தது. ஆனாலும் சக்கரவர்த்தியார் தன் கையாலேயே மகுடம் சூட்டினார் என்று காரணம் சொல்லப்பட்டபோது வெளிப்படையாக அவரை எதிர்த்துப் பேசும் தைரியம் யாருக்குமே, அத்தைக்குகூட வரவில்லை என்பதில் காளிங்கனுக்கு வருத்தம்தான். ஆனால், அபயன் ஆட்சி மலர வேண்டும்... மலர வைக்க வேண்டும்... இது அத்தையாரின் கனவு மட்டுமல்ல... பெரிய ராஜாவின் கட்டளை... ஆசிரியரும் அதற்காகவே பாடுபடுகிறார்... தானும் முயன்றவரை இந்த முயற்சியில் மேற்கொண்டு அபயனை சோழசிம்மாசனத்தில் அமர வைக்க வேண்டும்..

அன்று சித்திரசபையின்போது அத்தையாரை அதிராஜேந்திரன் அவமானப்படுத்தியது தெரிந்து மிகவும் கோபித்தான். அண்ணன்தான்... இப்போது சோழ தேசத்துக்கே தற்சமயம் சக்கரவர்த்திதான்...

ஆனாலும், அந்த பில்வணன் பேச்சையும் விக்கிலன் பேச்சையும் கேட்டு சபையோர் முன்னிலையில் மூத்தவர்களை அதுவும் பெரிய ராஜாவின் ஒரே வாரிசான தன் அத்தையை அப்படி அவமானப்படுத்தியது ஒரு நல்ல அரசனுக்கு அழகல்ல. இவன் பலவீனமானவன்... யாருக்கும் மண்டியிடுபவன்... தைரியம் குறைந்தவன்... வீராதி வீரர்கள் ஆண்ட சோழ சாம்ராஜ்யத்தை இப்படிப் பட்ட கோழை, அவன் அண்ணனே ஆனாலும் சரி... ஆள்வதா...

காளிங்கனுக்கு தன் மூதாதையர் மீது மிகவும் பெருமையுண்டு. பாராந்தக சோழர் முதல் வீரராஜேந்திரர் வரை இந்த சோழ தேசத்தை எப்படியெல்லாம் விரிவாக்கம் செய்திருக்கிறார்கள் என்பதை பூரணமாக அறிந்தவன். கடல் கடந்த தேசங்களிலும் சோழர் புகழ் பரவியதற்கு தன் மூதாதையர்களின் வீரம் மட்டுமல்ல அவர்களின் சிறந்த அறிவுத்திறனும் ஒரு காரணம்... அவனுக்குட் தன் தந்தையார்



இறந்த தருணமும் அப்போது நடந்த சிக்கலும் அவன் நினைவுக்கு வந்தன.

கொப்பத்தில் சாளுக்கிய சோமேஸ்வரனுடன் மிகக் கடுமையாக நடந்த போர் அது. இரண்டு பக்கமும் கடுமையான சேதமும் விளைந்தது. சோழசக்கரவர்த்தியான ராஜாதிராஜனும் தம்பி இளைய ராஜேந்திரனும் நேரடியாக கலந்து கொண்ட சண்டை. அது போலவே சோமேஸ்வரனும் நேரடியாக போர்க்களத்தில் போரிட்டான். என்ன காரணத்தினாலோ தந்தையான ராஜாதிராஜன் யானை மீது போர்க்களத்தில் முன்னேறிச் சென்றபோது எங்கிருந்தோ வந்த ஈட்டி ஒன்று அவர் மீது பாய்ந்து வீரமரணம் அடைந்து தான் அமர்ந்த யானை மீதே சாய்ந்து விட்டார். செய்தி போர்க்களத்தில் வெகுவேகமாகப் பாய்ந்தது. சக்கரவர்த்தியாரே வீரமரணம் அடைந்துவிட்டார் என்றவுடன் சோழ வீரர்கள் கலக்கமடைந்து தன் வாட்களையும் ஈட்டிகளையும எறிந்து சக்கரவர்த்திக்காக துயரப்பட்டு அழுதனர். அந்தச் சமயத்தில் தான் சிறிய தந்தை வீறு கொண்டு எழுந்தார். அண்ணன் இறந்த பட்டத்து யானை மீது ஏறினார். வெற்றிவேல்... வீரவேல்... என்று செவிகள் அலற கூவினார். சக்கரவர்த்தியை சுற்றி இருந்த சம்புவரையர் சக்கரவர்த்தியின் மகுடத்தை எடுத்து சிறிய தந்தைக்கு அனைவர் முன்னிலையிலும் சூட்டினார். 'சக்கரவர்த்தி இளையராஜேந்திரர் வாழ்க வெற்றிவேல்... வீரவேல்'' என்று கூவினார். சக்கரவர்த்தியாக இருந்த அண்ணனைக் கொன்றவர்களுக்குத் தக்க பாடம் புகட்டுவோம் என்று இளைய ராஜேந்திரர் சபதம் செய்ய வீரமறவப் புலிக் கொடி மீண்டும் மேலே எழுந்தது. அடுத்த இரண்டு நாழிகைகளில் நடந்த கடும்போரில் பல சாளுக்கிய வீரர்கள் கொல்லப்பட்டனர். எஞ்சிய வீரர்களும் சோமேசுவரனும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வடக்கு நோக்கி ஓடினர்.

எப்படிப்பட்ட வீரகாவியம் அது. எப்படிப்பட்ட சமயம் அது. அந்தச் சமயத்தில் மட்டும் சிறிய தந்தை தலைமை ஏற்காவிட்டால் சோழ தேசம் எப்போதோ சிதைக்கப் பட்டிருக்கும்... ஆனால், அவரால் சோழ தேசத்தை அன்று காப்பாற்ற முடிந்தது.

போரில் வெல்லமுடியாதவர்கள் குறுக்கு வழிகளால் சோழ தேசத்தை சிதைக்க ஆரம்பித்துள்ளனர். அதிராஜேந்திரன் என்ற ஒரே ஒரு கோழையை கைக்குள் வைத்துக்

கொண்டு ஆட்டம் போடுகிறார்கள். அந்தக் கோழை விலக வேண்டும்... அதிராஜேந்திரன் மனம் மாறி தைரியசாலியாக ஆள்வான் என்று இனியும் எதிர்பார்த்தால் நாம் முட்டாளாக்கப் படுவோம்... ஆனால் இந்த நிலை எப்படி மாறும்... எப்போது மாறும்...

அத்தையாருக்கு அதிராஜேந்திரன் மீது எந்தக் கோபமும் இல்லை என்பது காளிங்கனுக்குத் தெரியும். அதே சமயத்தில், அதிராஜேந்திரன் தவறான வழியில் செல்வதைக் கண்டு அத்தையாரும் வருத்தப்படுகிறார் என்பதும் அவனுக்குத் தெரியும்... ஆனால், எத்தனை நாள் பாசவலையில் சிக்கி அத்தையார் அவதிப்படுவார்? ஒரு பக்கம் மகன் அரசாண்டால் சோழ தேசம் காப்பாற்றப்படும் என்று தெரிந்தும் ஏதும் செய்ய முடியாத நிலை அவருக்கு... சொந்த அண்ணன் மகனை 'விலகி இரும் பிள்ளாய்' என்றால் அதுவும் அன்போடு சொன்னால் அதிராஜேந்திரன் கேட்பானா? இதற்கு என்ன முடிவு?

தெரியவில்லை காளிங்கனுக்கு. இருந்தாலும் தற்போதைக்கு சாளுக்கியர் திட்டங்கள் ஒவ்வொன்றாக முறியடிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் நாம் உள்ளோம் என்ற ஆசிரியரின் எண்ணத்தோடு நாம் உடன்படவே வேண்டும்... அதனால்தான் ஆசிரியர் மறுபடியும் திருவேங்கடபுரம் செல்ல ஆணையிட்டார். ஆனால் திருவேங்கடபுரம் தான் செல்ல வேண்டுமென அவர் சொன்னதும் தன் மனது ஏன் தித்திக்க வேண்டும் என்று புரியாமல் தனக்குள்ளே கேட்டுக் கொண்டான். அந்தத் தித்திப்புக்குக் காரணம் அந்த சன்னியாஸினிப் பெண்தானே என்று அவன் உள்மனது காட்டிக் கொடுத்தபோது கூட அவன் உள்ளுக்குள் மறுத்துக் கொண்டான். 'அந்தப் பெண், அவள் பெண்மைக்குணம் கொண்டவளே இல்லை... மயக்க வந்த மாயமோகினி... அவளை மறுபடி பார்த்து தான் மயங்கி விழ தான் ஒன்றும் முட்டாளில்லை...' ஆனால் அவன் உள்மனம் அவனைப் பார்த்து சிரித்தது... 'உன்னை நீயே ஏமாற்றலாம்... ஆனால் உன் உள்மனமான என்னை எப்படி ஏமாற்றலாம்' என்று எதிர்க்கேள்வி கேட்டது. இருந்தாலும் காத்யாயினியை நினைத்த மாத்திரத்தில் அவன் மனம் முழுவதும் இனிமை நிறைந்து நின்றது என்பது என்னவோ உண்மைதான்.



திருவேங்கடகூடத்தில் முதல் நாளிரவே கண்ணன் கோயில் வந்தபோது அவன் மனது இன்னமும் அந்த இனிமையை சுமந்து கொண்டுதான் இருந்தது. ஆனால், அந்த இனிமைக்குக் காரணமானவள் அங்கேயே தங்கி இருப்பாளா அல்லது தப்பி இருப்பாளா என்பதுதான் தெரியவில்லை. காஞ்சியில் பில்வணன் கூடாரத்தில் அவள் காணப்பட வில்லை என்பது மட்டும் அவன் அறிந்ததுதான். ஆகை யினால் மாருதியாண்டான் இல்லத்திலேயே இருந்திருக்க வேண்டும்... 'ஆனால் என்ன கட்டாயத்திற்காக அவள் இங்கே தங்க வேண்டும்... அதுவும் அவளுக்கு விருப்ப மில்லாத இடத்தில்... பில்வணனின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள நாத்திகப் பெண்... பிராம்மண வதையில் அன்று அதிகம் விருப்பம் காட்டிய அந்தக் கள்ள சன்னியாஸினி இந்த பிராம்மணர்கள் கூட்டத்திலே எப்படித் தங்குவாள்... இரண்டு நாள் கூட அவளால் இருக்க முடியாது... எப்போதோ தப்பித்து இருப்பாள்...'

காளிங்கனுக்கு நம்பிக்கை இல்லைதான். அதேசமயம் அந்த மாருதியாண்டானிடம் விட்டுச் சென்றபோது அந்த வயதான வைணவ அந்தணர் அவளை எப்படி பாதுகாப்பது என்று தனக்குத் தெரியும் என்று ஆசிரியரிடம் சொன்னது நினைவுக்கு வந்தது. இவளோ காட்டுமயில்... அதுவும் வன்முறையில் நாட்டமுள்ள வண்ணமயில். மாருதியாண்டானால் இந்தக் காட்டு மயிலைக் கண்காணித்துக் கொண்டே இருக்க முடியுமா... அந்த மயில் தன் சிறகின் மறுமுனையால் அவரைக் கீறி வன்முறை செய்து தப்பித்துவிட்டால் என்ன செய்வார்...

ஆனால், சென்றமுறை காத்யாயினியை பெண்கள் அனைவரும் அதிசயத்துடன் தொட்டுப்பார்த்து ஆனந்தித்து உள்ளே அழைத்துச் செல்லும்போது தன்னைப் பெருமிதமாக ஒரு பார்வை பார்த்துக் கொண்டே உள்ளே சென்றாளே... ஒரு வேளை இந்த மரியாதையெல்லாம் அவளுக்குப் பிடித்து இங்கேயே இருக்கலாம்... சேச்சே... இது மாய மயில். இருப்பது போல இருந்து பறப்பது போல் பறந்து பாவனை செய்து எப்போதோ தப்பிப் போய் இருக்கும்...

மனதில் ஏகப்பட்ட கேள்விகளுடன்தான் மாருதியாண்டான் இல்லத்துக்கு வந்து சேர்ந்தான். நல்ல வேளையாக மாருதி ஆண்டானே நேரில் வந்து வரவேற்று

உள்ளே அழைத்துச் சென்றார். அவரிடம் அவன் கேட்ட முதல் கேள்வியே அந்த அழகு மயில் பற்றிதான். ஆனால் மாருதியாண்டான் அதற்கு முதலில் சிரித்தது மனதில் நம்பிக்கையை ஊட்டியது.

''வீரரே! தங்களுக்கு அடியேனிடம் ஏதேனும் சந்தேகமா? பயம் வேண்டாம்... உங்கள் அழகிய இளவரசியார் நாளொருமேனி பொழுதொரு வண்ணமுமாக கலகலப்புடன் நன்றாகவே இருக்கிறார். சற்று முன்னர்தாம் அடியேனும் தங்கள் இளவரசியாரும் உடையவர் உபதேசம் கேட்டுத் திரும்பி வந்தோம்... அவர்களை உடனடியாக பார்க்க வேண்டுமா? தங்கள் வருகையை இப்போதே தெரிவிக்க வேண்டுமா... இல்லை நாளை காலை வரை பொறுமை இருக்கிறதா?''

கேட்கப்பட்ட விதத்தில் குறும்பு இருந்தாலும் காத்யாயினி இன்னமும் இங்கேயே இக்கணம் வரை இருக்கிறாள் என்பதே ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. அதை விட ஆச்சரியமாக உடையவரிடம் உபதேசம் கேட்கிறாள் என்பதுதான்... இது உண்மைதானா... இல்லை... ஏதாவது காரணம் இருக்கும்... காரணமில்லாமல் காட்டு மயில் சந்தோஷமாக வீட்டில் இருக்காது.

''பெரியவரே! நான் நாளைவரை தங்கித்தான் செல்ல வேண்டும். ஆசிரியர் தங்கள் மூலம் உடையவருக்கு சில செய்திகள் சொல்ல உத்தரவிட்டுள்ளார்... உடையவரின் ஆசிகள் தற்சமயம் சோழ தேசத்திற்கு மிக மிகத் தேவை என்று தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்!''

''ஆஹா! அடியேன் மீது ஆசிரியருக்குத்தான் எத்தனை நம்பிக்கை. அப்படியே ஆகட்டும் தம்பி! நாளையே உடையவரை சந்திப்போம்...''

என்றவர் இல்லத்தின் வெளிஅறை அருகிலிருந்தே விருந்தினர் அறையைக் காட்டி காளிங்கனை அங்கு தங்கும்படி வேண்டினார்.

''தம்பி! நாளைக் காலை கங்கைக் கரை இளவரசியாரைப் பார்க்கலாம்... ஏனெனில் உறங்கச் செல்லும் வேளையில் இளவரசியாரைத் தொந்தரை செய்யக்கூடாது என அவர்களே இல்லத்தார் அனைவருக்கும் கட்டளை போல் தெரிவித்தாராம்!''



''அப்படியே ஆகட்டும்!'' சற்று ஏமாற்றமாக தெரிவித்தவன் பெரியவரின் ராஜபக்தியையும் மெச்சிக் கொண்டான். அதேசமயம் காத்யாயினி ஏன் அப்படி ஒரு கட்டளையை இவர்கள் மீது திணிக்க வேண்டும்... தான் நினைத்தது சரிதான்... ஒருவேளை இந்த பிராம்மணர் வீட்டறையையே தன் கூடாரமாக மாற்றி விட்டாளோ என்னவோ... இரவில் வீரர்கள் யாரையேனும் சந்திக்கிறாளோ...''

இரவு உறக்கம் சற்று தாமதமாக வந்தாலும் நன்றாகவே உறங்கினான். காலைக் கனவில் கூட காத்யாயினி மயிலிறகினால் தன் கன்னத்தில் கீசினாள். அப்படிச் செய்தது சற்று கூச்சத்தை ஏற்படுத்த சற்று அதிர்ந்து எழுந்தான். கண்களை துடைத்துக் கொண்டு பார்த்தபோது காத்யாயினியும் மயிலிறகும் மறைந்து போனது கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டவன் காலைக் குளியலையும் முடித்துக் கொண்டான். ஆனால், காலைக் கனவில் தென்பட்டவள் இன்னமும் நனவில் வரவில்லை. மாலைவரை உடையவரைப் பார்ப்பதற்குக் காத்திருக்க வேண்டும் என்று மாருதியாண்டான் சொன்னபோது அதை உற்சாகமாய் ஏற்றுக் கொண்டான். உற்சாகத்திற்குக் காரணம் அதற்குள் காத்யாயினியை பார்க்கமுடியுமே என்ற ஆவல்தான்.

ஆனால், வெளி அறையிலும் தாழ்வரையிலும் அவன் காத்திருந்ததுதான் மிச்சம். அவளைப் பற்றி எந்த விவரமும் அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. வைணவப் பெண்மணிகள் மட்டும் உள்ளேயும் வெளியேயும் சென்ற வண்ணம் இருந்தனர். முன்வாயில் பக்கமே காளிங்கன் பார்வை இருந்ததைக் கண்டு கொண்ட சில விஷமக்கார இளசுகள் அவனை கள்ளப்பார்வை பார்த்தும், தங்களுக்குள் ஏதோ சொல்லிக்கொண்டு உள்ளங்கைகளை குவித்து வாயை மறைத்து நகைத்துக் கொண்டும் சென்றதைப் பார்த்தான். இந்தப் பெண்கள் உள்ளே போய் என்ன செய்து வருகிறார்கள் என்று கேட்க ஆவல் இருந்தும் மரியாதையும் கூச்சமும் தடுத்ததால் ஏதும் கேட்கமுடியவில்லை.

மாலை வந்தது. முறைப்படி மாருதியாண்டான் உடையவரிடம் அழைத்துச் சென்றார். அதற்குள் அங்கு வரிசையாக பக்தர்கள் அனைவரும் அமர்ந்திருந்ததால்

மாருதியாண்டானை மட்டும் உள்ளே போக விட்டுவிட்டு இவன் பின் வரிசையிலேயே நின்றான்.

அதன்பிறகுதான் அந்த அழகு மயில் பார்வையில் பட்டது. மெல்ல நடைபோட்டு வந்தது. தன்னருகே அசைந்தாடி நின்றது... 'மாமன் மகனே' என்று சிவந்த உதடு திறக்கக் கூவியது... தன் தோகையால் செல்லமாக விசிறி... அவன் ஒரு கையை இறுக்கி... அகன்றது...

ஏதோ மயக்கத்தில் எங்கோ வெட்டவெளியில் நட்ட நடுவானில் பறப்பதாக உணர்ந்தான்.

கோதை நாச்சியைப் போல வேடமிட்டு அந்தத் தெய்வத் தமிழ் நாயகியின் பாடல்களை தேவகானமாய் பாடி பொருள் சொல்லி இதயத்தை அடியோடு சுரண்டி எடுத்துச் சென்றவளின் மயக்கம், உடையவர் பேச ஆரம்பித்ததும் தான் போயிற்று.

உடையவருடன் பேசிவிட்டு மாருதி ஆண்டான் இல்லம் வந்தவனை மறுபடியும் அந்த மயக்கம் பற்ற ஆரம்பித்தது. காரணம் மாருதி ஆண்டான்தான். அவருக்குக் கூட கோதையாக மாறிவிட்டவளை மிகவும் பிடித்து விட்டது.

''ஆஹா! பெண்கள் என்ன செய்தாலும் அது சிறப்பாகவே இருக்கும். நான் ஆண்டாளைக் காணவில்லையே என்ற குறையை அந்த இளவரசி இன்று போக்கிவிட்டார். ஆனாலும் தம்பி! உனக்கு அந்தக் கோதை மிகவும் பழக்கமோ?''

கோதை வேடத்தில் பார்த்ததால் காத்யாயினியை ஆண்டாளாகவே அங்கீகரித்துவிட்ட அந்த வைணவரைப் பார்த்து சிரித்தான்.

''பெரியவரே! அப்படியெல்லாம் மிகவும் பழக்க மெல்லாம் இல்லை. ஆனால், அவளைப் பற்றி நன்றாக அறிந்தவன். நீங்கள் நினைக்குமளவு பெரியவள் அவள் இல்லை... அவள் இங்கு போடுவது நாடகம்... ஏதோ சூது இருக்க வேண்டும்...''

''சேச்சே! ஆண்டாளாக கோலம் போட்டவர் மனதில் சூது வரவே வரமுடியாது தம்பி! அவளை சந்திக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் பேசுகிறீர்களோ அல்லது உங்கள் இருவருக்கும் ஏதாவது ஊடலோ... ஆனால் தம்பி! இளவரசி உங்களை சந்திக்காததற்குக் காரணம் உண்டு...''



பெரியவரை விசித்திரமாகப் பார்த்தான். அவரே பதிலையும் சொன்னார்.

''இளவரசியார் ஆடை அலங்காரம் செய்து கொள்ளவே காலம் தேவைப்பட்டது. நடுவில் உங்களையும் பார்த்திருந் தால் மேலும் தாமதம் ஆகியிருக்குமோ என்னமோ...''

என்று சிரித்தவர் அவனை உணவருந்தி ஓய்வெடுக்குமாறு கூறிவிட்டு சென்று விட்டார்.

இருந்தும் அவன் உள்ளே செல்லவில்லை. காத்யாயினி இரவில் யாரையும் பார்ப்பது இல்லை... தொந்தரையும் செய்யக்கூடாது என்று அவளே கட்டளை போல் சொல்லியிருப்பதாக வைணவர் சொன்னது நினைவுக்கு வந்தது. அவளைப் போய்ப் பார்த்தால்தான் என்ன...

இந்தப் பெரிய இல்லத்தில் எந்த அறையில் அவள் இருக்கமுடியும் என்பதை ஏற்கனவே ஊகித்திருந்தான் காளிங்கன். வெளிச்சத்தின் மூலம் சுற்றுச்சுவர் வழியே நடந்து அவள் அறை அருகே வந்தான். அறைச் சாளரம் சற்று உயரத்தில் இருந்ததால் சுவற்றின் மீது எம்பி சாளரத்தின் பிடியைப் பற்றி மூச்சை இழுத்து மேலே ஏறி சாளரம் வழியே உள்ளே பார்த்தான். தீப ஒளி எங்கும் நிறைந்த அந்த அறையில் அவள் இல்லை என்று தெரிந்து கொண்டவுடன் தரையில் குதித்தான். குதித்தவனை ஒரு கரம் தோளில் படவே திடுக்கிட்டுப் பார்க்க அங்கே மிளகாழ்வான் நின்று கொண்டிருந்தான். இருளில் கூட பரபரப்பு முகத்தில் தெரிய படபடப்பாகப் பேசினான்.

''காளிங்கா! நீ தேடும் அந்த மாயமோகினி பின் பக்கத் தோட்டத்துள் தனியே போகிறாள். உடனே வந்தால் அவளைப் பிடித்து விடலாம்...''

காளிங்கன் மிளகாழ்வானையும் அழைத்துக் கொண்டு பின்பக்கம் தோட்டத்துள் சென்றான். ஆனால், அதற்குள் அவன் மனதில் ஏதோ முடிவு தோன்ற மிளகாழ்வான் செவியில் ஏதோ சொல்லியவன் அவனைத் திரும்பவும் வந்த வழியே வாசல்புறம் அனுப்பி வைத்து தான் மட்டும் அந்தத் தோட்டத்தில் தனியே நுழைந்தான்.

இருட்டு தன் கருமை நிறத்தை எங்கும் அப்பியிருந்தாலும் நிதானமாகவே தடம் பார்த்து நடை போட்டான். தோட்டத்தின் பக்கம் உள்ள ஒற்றையடிப் பாதையின் கடைசியில் அந்த மாயமோகினி நிற்பதை கூர்ந்து பார்த்தான். வேலி அருகே நிற்பவள் யாருக்காகவோ காத்து நிற்பதாக பட்டதால் சற்று மறைந்து கொண்டே அவளருகே சென்றான்.

சற்று நேரம்தான். வேலியின் அந்தப் பக்கத்தில் இரண்டு குதிரைகள் மெல்ல வந்து நின்றன. ஒரு குதிரையில் யாரும் இல்லையென்றாலும் இன்னொரு குதிரையில் வந்தவன் சூழ்நிலைக்கேற்ப சற்று நிதானமாகவே குதித்து சைகை செய்யவே காத்யாயினியும் வேலியின் தள்ளுகதவை நீக்கிக் கொண்டு வெளியே நின்றவள் ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு நிதானமாக அந்த தள்ளு வேலிக் கதவை பழையபடி வைத்துவிட்டு குதிரை அருகில் வந்தாள்.

குதிரையில் இருந்து இறங்கியவன், அந்த நேரம் இரவு நேரம் என்றும் பாராமல் அருகே வந்த பில்வணன் மகளுக்கு தண்டனிட்டு வணக்கம் செய்தான். காத்யாயினி அவன் வணக்கத்தை ஏற்றுக் கொண்டது போல தலையசைத்தாள்.

''சர்வதேவா! உன்னை இங்கு யாரும் பார்க்கவில்லையே?''

மெதுவாகவே கேட்டாலும் வேலிக்கு உட்புறம் இருந்த காளிங்கன் செவியில் ஸ்பஷ்டமாகவே விழுந்தது.

''இல்லை தேவி! அப்படி பார்த்திருந்தால்...'' என்று வாளை உருவிக் காண்பித்தான்.

''சரி... சரி... குருதேவின் உத்தரவு என்ன? ஏன் இந்த இரவில் இந்த இடத்தை விட்டு வெளியேறச் சொல்கிறார்... இப்போது எங்கு செல்கிறோம்?''

''இன்று இரவு இங்கு உள்ள விருந்தினர் மாளிகையில் தாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது தேவி. நாளைக் காலை விடியலில் திருமலை ஏறச் சொல்லி குருதேவ் உத்தரவிட்டிருக்கிறார். மலைமேலும் தங்கள் தங்குமிடத்தை தேர்ந்தெடுத்திருக்கிறாராம்... அங்கிருந்து தங்களை செயல்பட ஆணை வந்துள்ளது!'' என்று சொல்லியவன் அவள் கையில் ஒரு ஓலையும் கொடுத்தான்.



ஓலையை வாங்கிக் கொண்டவள் அதைத் தன் இடுப்பில் முடிந்து கொண்டாள்.

''நல்லது... நாம் செல்வோம்...'' என்று சொன்னவள் சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தாள். பிறகு தேர்ந்த குதிரைவீரன் போல குதிரை மீது ஒரு குதி குதித்து ஏறியவள் திரும்பிப் பாராமல் குதிரையை விரட்டினாள். அவளை சர்வ தேவாவும் பின்பற்றினான்.

அவள் சென்றதுமே வெளியே வந்த காளிங்கன் அவள் செல்லும் திசையையே பார்த்தான். சற்று நேரம் சென்றதும் ஒரு குதிரையை நடத்திக் கொண்டு மிளகான் நடந்து வந்தான்.

''வைணவரே! நீர் எப்போது திருமலை செல்ல இருக்கிறீர்?''

''ஏன்... இன்னும் நான்கைந்து நாட்களில் மலையேற லாம் என்றிருக்கிறேன். உடையவர் திருமலை ஏறும்படி உத்தரவிட்டுள்ளார் அல்லவா?''

''எதற்கு நான்கைந்து நாட்கள். நாளையே செல்லுங்கள்... காட்டுவழி அச்சமில்லையென்றால் இப்போது கூட பயணம் செய்யும்... உம்மை நான் அங்கு சந்திக்கிறேன்...''

வெகு ஆச்சரியமாய் தன்னைக் கவனித்த மிளகாழ்வான் பார்வையை அலட்சியப்படுத்திவிட்டு அவனிடம் ஏதும் மேலும் பேசாமல், வந்த குதிரையில் ஏறி கணநேரத்தில் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

## 15

## அவர் கடவுள்!

கங்கைக்கரை நாட்டு இளவரசியாய் அறிமுகப்படுத்தப் பட்டு மாருதியாண்டான் வீட்டு முன்வாசல் பக்கமாய் நுழைந்தவள் தற்சமயம் அதே இல்லத்து பின் வாசல் வழியே பில்வணகுருதேவின் வளர்ப்பு மகளாய் வெளியேறிய காத்யாயினியின் மனம் பலவித குழப்பங்களால் நிறைந்திருந்தது. இருந்தும் கடமை தன்னை அழைக்கிறது... குருதேவ் என்ற மாபெரும் சக்தி தன்னை இயக்குகிறது...

அந்த சக்திதான் தன் எதிர்காலத்துக்கும் வழி அமைக்கிறது என்பதையும் உணர்ந்து கொண்டுதான் அந்த இரவில் திருவேங்கடகூட வீதியில் சென்று கொண்டிருந்தாள்.

தான் கொண்டுவிடப்பட்ட அன்றே தப்பி வந்திருக்கலாம் என்றாலும் சர்வதேவா மூலம் கிடைத்த பில்வணகுருதேவின் ஆணை அவளை அங்கேயே தங்க வைத்ததும் தன் நல்லதிற்கா அல்லது தன்னை திசை மாற்றுவதற்கா என்று அவ்வப்போது தன்னைக் கேட்டுக் கொண்டாள். நாத்திகக் கூடாரத்திலிருந்து ஒரு பெண் ஆத்திகர்களிடம் அடைக்கலம் புகுந்து அவர்களின் ஆதரவில் தான் இருந்தும் தன்னை ஆத்திகம் சற்றும் மாற்றவில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். ஒருவேளை குருதேவ் தன்னை இங்கேயே வைத்திருந்து தன் மன நிலையை பரிசோதித்தாரோ என்னவோ... நாளை குருதேவின் வாரிசாக வரப்போகிறவள் ஆத்திகர்களையும் நன்றாக அறிந்திருக்க வேண்டும்... பாடம் தெரிந்து கொள்ளட்டும்... என்று இங்கே விட்டு வைத்தாரோ என்னவோ... இருந்தும் குருதேவின் பரிசோதனைகளில் தான் நிச்சயம் தேறி இருக்க வேண்டும்...

அவளுக்கு அன்று மாலை ஆண்டாள் பாடல் முடிந்ததும் வேண்டுமென்றே ஒட்டு கேட்ட உடையவரின் பேச்சுகளும் காளிங்கன் வேண்டுகோளும் நினைவுக்கு வந்தன. நாம் ஒரு திட்டம் வைத்தால் சோழர்களும் பதில் திட்டம் போட்டுக் கொண்டுதான் வருகிறார்கள்... சைவ வைணவ சண்டைகள் இவர்களிடையே வருவது நல்லதென குருதேவ் நினைத்தால் சோழர்களும் பதிலடி கொடுக்கிறார்கள்... சரியான போட்டிதான்... ஆனால் இறுதியில் வெற்றி நமக்குத்தான்...

அவள் தினமும் இரவு அந்த பிராம்மணர்களை தன் அறைப்பக்கம் வராமல் செய்துவிட்டு சாளுக்கிய வீரர்களை சந்திப்பது வழக்கமாகிவிட்டது என்றாலும் தன் உத்தரவுக்கு அவர்கள் உடனடியாக கீழ்ப்படிந்தது அவளுக்கு விந்தையாய் இருந்தது. ஒருவேளை உண்மையிலேயே இவர்கள் வெகு நல்லவர்களாய் இருக்கலாம்... நம்மைப் போன்றவர்களிடம் இவர்களுக்கு என்ன வேலை இருக்கப்போகிறது என்றும் நினைத்திருக்கலாம்... தான் ஆண்டாள் கோலம்போட்டு பாட்டு பாட ஆசை என்று தெரிவித்ததுதான் அவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி. அவர்கள்... அதுவும் அந்தப் பெண்கள் எத்தனை



அக்கறையாக தனக்குப் பார்த்து பார்த்து அலங்காரம் செய்தார்கள்... அப்படியே ஆண்டாளாக மாறிவிட்டதாக அல்லவா அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். தான் அத்தனை அழகா... இல்லையென்றால் அந்தக் காளிங்கன்தான் அப்படியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பானா... எப்படியெல்லாம் பார்த்தான்... வெட்கமே இல்லை அவனுக்கு... ஒரு பெண்ணை வெறித்து வெறித்துப் பார்ப்பார்களா... ஒருவேளை வாழ்க்கையில் முதன் முறையாக அழகான பெண்ணை பார்க்கிறான் போலும்... அப்படித்தான் இருந்தது அவன் பார்வை.

காத்யாயினிக்கு சற்றுப் பெருமிதம் கூடியது. அந்த வைணவர்கள் கூட அப்படியே ஆண்டாளாகவே நினைத்து பரவசப்பட்டுப் போய்விட்டார்கள்... தெய்வீகப் பைத்தியங் கள்... அந்த ஆண்டாளைப் போலவே...

ஆண்டாள் கதையையும் பாடலையும் உடையவர் சொல்ல சொல்ல அதில் சுவை அதிகமாகவே காணப் பட்டது. அதனால் மிகுந்த விருப்பத்துடனே செவி மடுத்து கேட்டவள்தான் அவள். ஆனாலும் அத்தனை சிறிய வயதில் ஆண்டவன் மேல் ஆண்டாளுக்கு காதல் தேவையா... அதுவும் இல்லாத ஒரு கடவுள் இருப்பதாக பாவித்து காதல் கொள்ளும் அவள் பிச்சிதானே... அந்த ஆண்டாளை இவர்களும் ஒரு தெய்வமாக பாவித்து வழிபடுகிறார்கள்... வணங்குகிறார்கள். ஊஹூம்... இவர்களை திருத்த ஆயிரம் குருதேவ்கள் வந்தாலும போதாது போலும்... ஆனால் அந்த உடையவர் மிகவும் உயர்ந்தவர்தான். எத்தனை நிதானம்... அந்தப் பார்வை... அவருக்கும் குருதேவ் போல ஏதாவது தெரியாத சக்தி இருக்குமோ என்னவோ... எத்தனை கூட்டம் அவரைச் சுற்றி... ஒரு மதவாதி இத்தனை மனிதர்களை கவரமுடிவது ஆச்சரியம்தான்.

தன்னை மயக்கும் மாயமோகினி என்று உடையவரிடம் காளிங்கன் சொன்னபோது மறைவிலிருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தாள் அவள். 'நான் என்ன மாய மோகினியா... வா... வா... என்னிடம் சிக்காமலா போய் விடுவாய்' என மனதுள் கருவிக் கொண்டாள். ஆனாலும் அந்தத் தமிழன் தனக்காக உடையவரிடம் ஆசிகள் கோரியபோது சற்று ஆச்சரியப்பட்டாள். எப்படிப்பட்டவன் இவன்... ஒரு பக்கம் மாயமோகினியாம்... இன்னொரு பக்கம் பரிதாப நிலையில் இருக்கிறேனாம்... ஆபத்து

சூழ்ந்திருக்கிறதாம் எனக்கு... ஆசிர்வதியுங்கள் என்கிறானே... ஒருவேளை உடையவரிடம் நல்ல பேர் வாங்க நாடகமாடுகிறானோ... இருக்கலாம்...

ஆனால், காத்யாயினிக்கு ஏனோ அவனை அப்படி நினைத்துப் பார்க்க அவள் மனம் இடம் தரவில்லை. ஏனோ அந்தத் தமிழன் தன் மனதைக் கவர்ந்துதான் இருக்கிறான். ஆனால், அவனுக்கு அதிகம் இடம் கொடுக்கக் கூடாது...

அப்படி நினைத்தவள் 'ஏன் அவனிடம் நீயே சென்று வெட்கமில்லாமல் அவன் கையைப் பிடித்து இழுத்து வம்பு பேசினாய்' என்று அவள் மனம் அவளை இடித்தது. 'சீச்சீ... தான் ஏதோ அவனைப் பார்த்ததும் விளையாடி சீண்ட வேண்டும் போலத் தோன்றியதால் அப்படி செய்தோம்... உடனே அதற்கு தப்பான அர்த்தம் கற்பிப்பதோ...' இருந்தும் இந்தப் பத்து நாட்களில சமீப காலங்களில் தனக்கு ஏற்பட்டது சுவையான நிகழ்ச்சிகள்தான்.. வறண்ட வாழ்க்கையில் சற்று ஈரமான பகுதி போலும்...

குதிரைகள் மெல்ல கனைத்துக் கொண்டே விருந்தினர் மாளிகைக்குள் நுழைந்ததும் அவள் நினைவலைகளும் கலைந்தன. விருந்தினர் மாளிகை வாயிலில் சாளுக்கிய வீரர்கள் காவல் காத்திருந்தனர். உள்ளே நுழைந்ததும் அறைக்குள் வந்தவள் சர்வதேவாவை திருப்பி அனுப்பி தன் அறைக்கதவையும் தாழிட்டுக் கொண்டாள். உள்ளேயிருந்த தீபத்தின் திரியை சற்று பெரிதாக்கி இடைக்கச்சையிலிருந்த பில்வணகுருதேவின் ஓலையைப் படித்தாள். ஏற்கனவே சர்வதேவா சொன்னதுதான்...

காலையில் விரைவில் எழவேண்டுமென படுக்கச் சென்றவள் குளிர் காற்று அதிகம் வந்ததால் சாளரக் கதவை அடைக்க சாளரப்பக்கம் சென்றாள். அப்போதுதான் அந்த உருவம் விருந்தினர் மாளிகையின் பின்பக்க சுவர் ஏறி குதிப்பதைப் பார்த்தவள் வாயிலில் உள்ள வீரர்களைக் கூப்பிடலாமா என்று பார்த்தாள். உள்ளே குதித்த உருவம் தன் அறைநோக்கி ஓசைப்படுத்தாமல் வருவதை பார்த்தவள் சட்டென ஒரு காரியம் செய்தாள். தன் அறைக்கதவின் தாளை நீக்கிவிட்டு கதவையும் சற்றே திறந்து கதவுப்பக்கம் உள்ளே சுவர் அருகே மறைந்து கொண்டு உள்ளே வரும் உருவத்திற்காக காத்திருந்தாள்.



சற்றுநேரம் கடந்தபின்தான் அந்த உருவம் வெளிக்கதவை திறந்தது. பிறகு உள் கதவையும் தள்ளி மெல்ல உள்ளே அடியெடுத்து வைத்தது. தீப ஒளி முழுவதும் பட உள்ளே நுழைந்தவன் காளிங்கன்தான்.

''வருக... வருக... மாமன் மகனே... வழி மறந்து வந்தீரா... அல்லது என்னை மறக்கமுடியவில்லையா... இல்லை... உறக்கம் வரவில்லைய்யா?''

இரவுக் காற்று இன்பமாக வீசி ஊரெங்கும் இளங்காதலர் மனங்களை சிதறியடித்து சிருங்கார ரஸத்தை எங்கும் அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கும் அற்புதமான வேளையில் அந்த அறையின் உள்ளே மந்தமான தீப வெளிச்சத்தில் வெண்ணிற வதனத்தில் மந்தஹாசத்துடன் புன்னகை தவழ, அவள் கைகள் இரண்டையும் அழகிய தன் மார்பகத்தில் கட்டிக்கொண்டே கேட்டவளைப் பார்த்தான் காளிங்கன். ஒரு கால் நிலையாக நிற்க, மறுகாலை சுவர்ப்பக்கம் சாய்த்து நேர்த்தியான சிற்பி கலை நயத்துடன் வடித்த சிற்பம் போல் நின்று கொண்டு வாயைத் திறந்து மறுபடியும் 'மாமன் மகனே' என்று கேட்டதும் மயக்கம் அவனை பூரணமாய் ஆட்கொண்டுவிட்டது.

அவனை மேலும் அலைக்கழிக்கவோ என்னவோ சாய்ந்திருந்த அவள் சற்று முன்னே அவனை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தாள். தன்னை அப்படியே விழுங்கிவிட்டது போல் பார்க்கும் அந்தத் தமிழனின் பார்வை அவளுக்கும் பிடித்திருந்ததால் தன் புன்னகையை சற்று பெரிதாக்கி அவனை மேலும் மயக்கினாள்.

தன்னருகே வருகிறாளோ என்ற அச்சமும் கூச்சமும் ஒரு கணம் காளிங்கனுக்கு ஏற்பட்டாலும் அவள் நின்று விட்டது அவனுக்கு சற்று நிம்மதியையே தந்தது. மாலையில் கண்ணன் கோயிலில் பட்டுப்பாவாடை இடை உடுத்தி கோதை நாச்சியாக மாறியவள் இப்போது பிராம்மணப் பெண்கள் அணியும் பருத்திபஞ்சு சீலை உடுத்தி சிருங்கார தேவதை போல் அவன் கண்களுக்குத் தென்பட்டாள்.

மாலையில் அலங்கரிக்கப்பட்டிருந்த கோலம் மாறி கொண்டை முடி சாய்க்கப்பட்டு கூந்தல் சற்றே விரிய நகைகள் ஏதும் அணியாமல் எளிமையாய்த்தான் அவள் இருந்தாள். ஆனால், இவளுக்கு அணிமணிகள் எல்லாம்

தேவையற்றது. இந்த எளிமையிலும் எத்தனை அழகு... அவள் அகலக் கண்கள், கூர்மையான நாசி... புன்னகையால் விரிந்து அவனை 'இன்னும் ஏன் அங்கே நிற்கிறாய்' என்பது போல் ஏதோ கேட்ட இதழ்கள்... இவள் மானிடப்பிறவி தானா... கடவுளே... என்னை தயவு செய்து இவளிடமிருந்து காப்பாற்று... எத்தனை முறை இவள் மாயமோகினி என்று சொன்னாலும் என் மனம் கேட்க மறுக்கிறது... மனமே... பொறு... சொல்வதைக் கேள்... இவள் அழகைக் கண்டு மயங்காதே.... கண்களே...இவளைப் பார்க்காதே... உன் இமைகளைப் போட்டு மூடிக்கொள்...

கண்களை மூடிவிட்டு உடனே திறந்தான் அவன்... ஏனெனில் அவனைப் பார்த்து, அவன் நிலையைப் பார்த்து கலகலவென சிரித்தாள் அந்த சன்னியாஸினிப் பெண். மறுபடியும் பார்த்தால் இவளுக்குப் பூரண அடிமையாகி விடுவேனோ என்று அச்சப்பட்டவன் அவளைப் பாராமல் தலையை தாழ்த்தி தரையைப் பார்த்தான். முதன்முதலாக ஒரு பெண்ணைக் கண்டு ஆண்மகன் தலைதாழ்கிறான்... அதுவும் இந்த இரவுவேளையில் தன்னந்தனியே இருக்கும் ஒரு இளங்கன்னியைப் பார்த்து வெட்கப்படும் இவன் பண்பு எத்தனை ஆண்களிடம் இருக்கிறது. திடீரென அவன் மேல் ஒரு விதமான மரியாதை அவள் மனதில் தோன்றியது. அவனை மேலும் அலைக்கழிக்க அவள் மனமும் மறுத்தது.

''அமருங்கள் மாமன் மகனே'' என்று சொன்னதும் சற்று உள்ளே வந்து அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அவள் தன் பக்கத்தே இருந்த அறைக்கதவை சாத்தி அதன் மீதே சாய்ந்து கொண்டாள். 'எதுவும் பேசாமல் அமர்ந்திருப்பவன் தன்னைக் கடத்திக் கொண்டு குதிரையில் அன்று காலை வந்தபோது எப்படியெல்லாம் பேசினான்... சைவப்பாடல் பாடி உள்ளத்தைக் கிள்ளியவன் இன்று ஏன் பேசாமல் இருக்கிறான்...' அவனையே கேட்டுவிட்டாள்.

''ஏன் பேசமாட்டீரோ? அன்று என்னை குதிரையில் தூக்கி வரும்போது வளவளவெனப் பேசி என் பிராணனை வாங்கினீரே... ஓஹோ! தாங்கள் சன்னியாஸினிகளிடம்தான் பேசுவீரோ! எம்மைப்போல பிராம்மண மகளிரிடம் பேசுவது சரியல்லவோ... என்ன மாமன் மகனே...''

''நான் மாமன் மகனா?''

''இல்லையா பின்னே?''



''மாமன் மகன் உறவுமுறை உனக்குத் தெரியுமா?''

''தெரியும். தெரிந்ததால்தான் உம்மை அப்படிக் கூப்பிடுகிறேன். ஏன் அப்படிக் கூப்பிட்டால் தங்களுக்குக் கசக்கிறதா?''

''இல்லை... நீ தாராளமாகக் கூப்பிடு... ஆனால், எங்கள் தேசத்தில் 'மாமன் மகன்' என்று யார் யாரை அழைப்பார்கள் என்று தெரியுமா?''

''யார் யாரை அழைப்பார்களாம்?''

தேனாய் கேட்டாள் அவள். அப்படியே விழுங்கினான் அவன்.

''முறைப்படி திருமணம் செய்யப்போகும் முறைப் பெண்ணுக்குத்தான் தன் முறை மகனை ''மாமன் மகனே'' என்று கூப்பிடும் உரிமை உண்டு. அப்படிக் கூப்பிட்டவளை முறைமகன் மறுப்பதும் பண்பாடு கிடையாது.''

அவள் அவன் வார்த்தைகளை ரசிக்கிறாள் என்பது அவள் அகலப் பார்வையிலும் வண்ணமுகத்திலும் தெளிவாகவே தெரிந்ததால் காளிங்கனும் உற்சாகமாகப் பேசத் தொடங்கினான்.

''ஆனால் எனக்கும் உனக்கும் எந்த உறவும் கிடையாது. ஆனாலும் என்னை முறைமகனாக வரித்து 'மாமன் மகனே' என்று முறை வைத்துக் கூப்பிட்டு விட்டாய்... காத்யா! நான் பண்பாடு தவறாத சோழ வம்சத்தைச் சேர்ந்தவன். பெண்களின் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பவன்... ஆகவே...''

என்று சொல்லிவிட்டு நிறுத்திய காளிங்கனை இருந்த இடத்தில் இருந்து அசையாமலே கூர்ந்து பார்த்தாள். அவன் கண்களில் அந்தக் குறும்பு அப்படியே இருக்கின்றது. இந்தக் குறும்புதான் அவளையும் அலைக்கழிக்கிறதோ... அந்தக் குறும்பு அவளுக்குப் பிடித்து இருந்தது.

''ஆகவே... தவறிப்போய் அந்த முறை வைத்து கூப்பிட்ட குற்றத்திற்காக எனக்கு மணமாலை சூட்டி உடனே உமது மனையாட்டியாக ஆக்கி விடுவீரோ?''

''காத்யா...''

என்றவனைப் பார்த்து மறுபடியும் சிரித்தாள். அந்தச் சிரிப்பு மறுபடியும் அவனை மயக்கத்தில் ஆழ்த்தி அவளையே வெறித்துப் பார்க்கச் செய்தது.

''என்ன பார்க்கிறீர். இந்த மாயமோகினி மயக்கப் பார்க்கிறதா? அல்லது மயங்கி நிற்கிறதா என்று பார்க்கிறீர்களோ''

அவள் கேட்ட கேள்வி சற்று தாமதமாக உரைத்தது அவனுக்கு.

''காத்யா! மாலையில் நான் உடையவரிடம் பேசியதை ஒட்டுக் கேட்டாயா?''

''ம். கேட்டேன். ஏன் வீரனே! நேரடியாகவே சொல். என்னைப் பார்த்தால் உன் கண்களுக்கு மாயமோகினி யாகவா படுகிறேன்.''

என்று கேட்டுவிட்டவள் தான் நின்ற இடத்திலிருந்தும் நகர்ந்து அவன் முன் வந்தாள். அழகெல்லாம் அசைய அந்த சிருங்கார தேவதை தந்த அவஸ்தை அவனை நாப்பிறழச் செய்தது.

''நான்...நான்...அப்படி...வேண்டுமென்றே சொல்லவில்லை...''

என்று தடுமாறியவன் தன் கண்களையும் சற்று தாழ்த்திக் கொண்டான்.

''எனக்கு எல்லாம் தெரியும். ஆனால் மாமன் மகனே என்று உம்மை ஏன் கூப்பிட்டேன் தெரியுமோ. உம் மேலே முறை வைத்துப் பேசும் ஆசையால் அல்ல. எங்கள் எதிரி ரஜிகனுக்கு நீர் மாமன் மகன். அதனால் எங்கள் எல்லோருக்குமே நீர் மாமன் மகனாகவே காணப் படுகிறீர்...''

என்று சொன்னவள் அவன் எதிரில் இருந்த மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அந்த அழகியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். காலங்காலமாகப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியவள். ஆண்டவன் இவளிடத்தில் பல அற்புதங்களை செதுக்கி இருக்கிறான். அழகுடன் கூரிய அறிவும் சேர்ந்து ஒருங்கிணைந்த படைப்பாக பூவுலகுக்கு பரிசாகவே இந்தப் பேசும் சித்திரத்தை அளித்திருக்கிறான்.



ஆனால், அப்படிப்பட்டவள் இன்னமும் ஏன் அந்தக் கள்ள பில்வணனை நம்புகிறாள். இப்படிப்பட்டவளை அந்தக் காபாலிக மடிராஜனுக்கு தானமாக தாரைவார்க்கப் போகிறான் அந்த நாசகாரன். இவளுக்கு வர இருக்கும் ஆபத்தைக் கேட்டதும் இவள் எதிரி நாட்டுப் பெண் என்றும் பாராமல் எப்படியெல்லாம் பதைபதைத்தார் அத்தையார். தன்னைக் கொல்லவந்தவள் இவள் என்றாலும் இந்தப் பெண்ணை அந்தப் பழிகாரனிடம் இருந்து எப்படியாவது பாதுகாத்தே ஆகவேண்டும் என்று சொன்னவரே ஆசிரியர். இவளுக்கு இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வாளா? அந்த கள்ளமனம் கொண்ட தந்தையை இனம் தெரிந்து கொள்வாளா?

''காத்யா! போதும் உன் விளையாட்டு. முதலில் நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல். நீ திருவேங்கடமலை எதற்காக ஏறுகிறாய்?''

இத்தனை நேரம் காதலால் மயங்கிப் பேசியவன் கடமைக்கு வந்துள்ளான் என்று புரிந்து கொண்டாள்.

''ஓ! அதற்குத்தான் என்னைத் தேடி வந்தாயா இந்த இரவில்... ஒரு வேளை என்னைப் பார்க்கும் ஆவலில் ஓடி வந்தாயோ என்று நினைத்து விட்டேன்...''

''உன்னைப் பார்க்கும் ஆவல் என்று ஆசைவார்த்தை கூறி பெண்களை மயக்கும் குணம் என்னிடம் இல்லை காத்யா!''

உடனடியாக காத்யாயினியும் பதிலடி கொடுத்தாள்.

''நானும் அப்படி மயங்குபவள் இல்லை!''

தலையாட்டி சம்மதம் தெரிவித்தான் காளிங்கன்.

''நன்றாகவே அதை அறிவேன் காத்யா! ஆனால், நீ திருவேங்கடவன் மலையேறி அங்கு குழப்பம் விளைவிக்க நினைத்தால் என்னால் உன்னைத் தடுக்க முடியும்...''

''என்ன சொல்கிறாய்?'' மரியாதையை அறவே கைவிட்டவள் எழுந்து நின்று அவனை முறைத்தாள். ஆனால், காளிங்கன் குரல் உறுதியாக இருந்தது. சற்று கெஞ்சலும் சேர்ந்து கொண்டது.

''காத்யா! பில்வணன் ஒரு பெரிய சூதாட்டக்காரன். அவன் சூதாட்டத்தில் வைக்கப்படும் பணயக்காய்தான் நீ.

அவன் சூதாட்டம் வெற்றி பெற நீ உதவலாம். ஆனால், அந்த சூதாட்டத்தின் முடிவில் அதற்காக நீ அழிய வேண்டும்... காத்யா! உன்னைத் தேடி இந்த இரவில் நான் வந்த காரணமே இந்த முக்கியமான உண்மையை உனக்கு உணர வைக்கத்தான். தயவு செய்து நான் சொல்வதை கேள். உன் எண்ணத்தை மாற்றிக் கொள். உன் அழகு என்னை மயக்குகிறது. உண்மைதான். ஆனால் உன் அறிவு உன் மேல் நான் மரியாதை கொள்ள வைக்கிறது. ஆனால் உன் அழகும் அறிவும் அழிவுப் பாதைக்கு வழி வகுக்கக்கூடாது. அழிவில் முடியக்கூடாது. காத்யா! தயவு செய்து என்னை நம்பு...''

காத்யாயினி அவனை விந்தையாகப் பார்த்தாள். பிறகு அவன் எதிரே மறுபடி அமர்ந்து கொண்டாள்.

''என்ன தமிழரே! சில நாட்கள் முன்பு உம்மைப் பார்த்தேன். பத்து நாட்கள் கழித்து மறுபடியும் இன்று மாலை உம்மை சந்தித்தேன். அதுவும் நாம் சாமான்யப்பட்டவர்களா... எதிரிகள். இப்படிப்பட்ட நிலையில் என் எதிரியாக வந்த நீர் என் எதிரில் உல்லாசமாக அமர்ந்து கொண்டு 'என்னை நம்பு' என்று கெஞ்சுகிறீர்... விசித்திரமாக இல்லை?''

கண்களை அகல வைத்துக் கொண்டு குழந்தை ஒன்று பார்ப்பது போல அவள் பார்த்தாலும் காளிங்கன் நிதானமாக அவளுக்கு எடுத்துச் சொன்னான்.

''விசித்திரம் இல்லை காத்யா! ஒருவேளை இது விசித்திரம் என்று நீ நினைத்தால் அது கடவுள் அருள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும் காத்யா! அந்தக் கடவுள் அருள் உனக்கும் உண்டு என்பதை உடையவர் ஆசிகள் மூலம் நீ தெரிந்து கொண்டிருக்க வேண்டும். நீ கொல்லப்பட வேண்டும் என்று நினைத்த ஆசிரியர்கூட இன்று நீ காப்பாற்றப்பட்டே ஆகவேண்டும் என்று துடியாய் இருப்பதை நீ அறியமாட்டாய். ஆகையினால் சொல்கிறேன். நன்றாக யோசித்துப் பார். இரண்டே முறை சந்தித்த நான் உன்னை எதற்காக காப்பாற்ற முயலவேண்டும்? உன் கூரிய அறிவை வைத்து சிந்தித்தாயானால் புரியும். அந்தக் கடவுள்தான் தக்க சமயத்தில் என்னை அனுப்பி என் மூலம் நீ காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறார் என்பது புரியும். என்னை நம்பு காத்யா! என்னால் சத்தியமாக உனக்கு தீங்கு நினைக்க முடியாது!''



சிரித்தாள் காத்யாயினி. கலகலவென அந்த அர்த்த ராத்திரி ஆரம்பத்தில் வந்த அந்த சிரிப்பு காளிங்கனுக்கு ஆச்சரியத்தை தந்தது. அவளே சற்று நேரம் கழித்து தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள்.

''நன்றி வீரரே நன்றி! இந்த நன்றி எதற்காகத் தெரியுமா? நான் நீண்ட நாட்கள்...மாதங்கள் கழித்து கலகலப்பாக சிரிக்கிறேன். அப்படி சிரிக்க வைத்தமைக்குத்தான் நன்றி!''

''காத்யா! இது சிரிக்கும் விஷயமா?''

''இல்லையா பின்னே? ஏதோ இரண்டு முறைதான் சந்தித்தேன். உனக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றும் கடவுளின் தூதனாக இந்த இரவில் வந்துள்ளேன். 'என்னை நம்பு' என்றால் யாருக்குத்தான் சிரிப்பு வராது. அதுவும் ஒரு எதிரியான நீங்கள் இப்படிப்பேசுவது சிரிக்கக்கூடிய விஷயம்தான். கடவுளாம் கடவுள்...உங்களைப் போன்றவர் ஏமாற்றவும், எங்களைப் போன்றோர் ஏமாறவும் காலங் காலமாய் சொல்லப்படும் விஷயம்தான் கடவுள். வீரரே! ஒன்று தெரியுமா? நீங்கள் சொல்லியதுபோல கடவுள் உங்களை தற்சமயம் தூதனாக அனுப்பிக் காப்பாற்றுகிறார் என்றால் அவர் கடவுளே இல்லை. ஏன் தெரியுமா?''

வியப்பாய் காளிங்கன் அவளைப் பார்க்க அவளே பேசினாள்.

''ஏனெனில் எனக்குக் கடவுளின் உதவி தற்சமயம் தேவைப்படவில்லை. அப்படி தேவைப்படாத சமயத்தில் உங்களை தூதராக அனுப்பி இருக்கிறார். உண்மையாகவே ஒரு சமயத்தில் கடவுளின் உதவி தேவைப்பட்டபோது உங்கள் கடவுளால் உதவ முடியவில்லை வீரரே! குறைந்தது உங்களைப் போல ஒரு தூதரை அனுப்பிக் காப்பாற்றக் கூட உங்கள் கடவுளால் முடியவில்லை. நான் சொந்தமாக பாவித்த என் அன்புத் தந்தையையும், தாயையும் புழுக்களை நசுக்குவது போல அந்த நாசக்காரர்கள் கொலை செய்தார்களே... எங்கள் நாடும் நாட்டு மக்களும் சூறையாடப்பட்டனர். அப்போதும் உங்கள் கடவுளுக்கு எந்தக் கருணையும் வந்து காப்பாற்றவில்லை. ஆனால் அனைவரும் அழிந்து சவமான பிறகு நான் மட்டும்....நான் மட்டும் காப்பாற்றப்பட்டேன். என்னைக் காப்பாற்றியது உங்களால் சூதாட்டக்காரர் என்று குற்றம்

சாட்டப்பட்டவரான குருதேவ். அவர் மட்டும் அன்று அங்கு இல்லையேல் நானும் இப்போது இல்லை. அப்படியே உயிருடன் இருந்தாலும் எங்கோ பாரசீகத்தில் சந்தைப் பொருளாக – அடிமையாக எத்தனை பேய்களுக்குப் பலியாகி இருப்பேனோ...''

காளிங்கன் கலங்கித்தான் போனான். காத்யாயினியின் கதை மிகமிகக் கொடியது. கண்ணீருடன் பேசியவளிடம் நெஞ்சம் கருணையால் நெகிழப் பேசினான்.

''ஊழ்வினை மிகவும் வலியதுதான் காத்யா! உன் வாழ்வில் நடந்தது மிகப் பயங்கரமான கோரம். மெல்லிய மலரைப் போன்ற உன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை உணர்கிறேன். ஆனாலும், காத்யா நீ காப்பாற்றப் பட்டிருக்கிறாய். அதுவும் கடவுள் செயல்தான். நீ சொல்லும் அந்த பில்வணன் அந்தச் சமயத்திற்கு கடவுளால் அனுப்பப் பட்ட தூதன்தான். ஆனால், அவன் காப்பாற்றினான் என்ற ஒரே காரணத்திற்காக நீ அவனுக்காக நியாயமற்ற தர்மமற்ற செயல்களை செய்யலாமா? அப்படியானால் அன்று உன் தேசத்தை நாசமாக்கினார்களே நயவஞ்சகர்கள்... அவர்களைப் போலவே இன்று எம் நாட்டை நாசமாக்கும் செயல்களில் இறங்கிவிட்டார்களே பில்வணனும் விக்கிலனும். அந்த அதர்மத்திற்கு துணை போகலாமா நீ?

காத்யாயினி அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள். அவன் கண்களின் ஒளியும் உறுதியும் அவளை சற்று கலக்கியது. இருந்தும் தன் தலையை அசைத்துக் கொண்டே பேசினாள்.

''தமிழரே! நீர் வீண்வாதம் செய்கிறீர். எம் நாட்டில் நடந்தது அராஜகம். இங்கு நடப்பது அரசியல். சில சமயம் அராஜகம் கலப்பது சகஜம்தான். நீங்கள் சொன்னீரே... பில்வண குருதேவ் அன்று கடவுளின் தூதராக வந்து காப்பாற்றினார் என்று. ஆம்... அது உண்மைதான். அவர் கடவுளின் தூதர் மாத்திரமல்ல. கடவுளே அவர்தான். எனக்கு அவர் கடவுள். இந்தக் கடவுள் மறைமுகமாய் காற்றாய், நீராய், மண்ணாய், வானாய், நெருப்பாய் இருப்பது இல்லை. என்னுடைய கடவுள் கண்ணுக்குத் தெரிந்த கடவுள். நேர்முகமாய் வந்து ஆதரவு கொடுத்த கடவுள். உங்கள் கடவுளை நம்பினால் மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கும் அதோ கதிதான் கிடைக்கும். ஆனால்



பில்வணக் கடவுளை நம்பினோர் இதுவரை கைவிடப்படவில்லை. இதுதான் இன்றைய சரித்திரம். அந்தப் பிரத்யட்ச கடவுளை ஆராதிக்கும் பக்தை நான். அந்தக் கடவுள் என்னை 'உயிரைக் கொடு' என்று கேட்டாலும் நான் கொடுக்க கடமைப்பட்டவள் நான். அந்தக் கடவுள் என்னை திருவேங்கடமலை ஏறச் சொல்லியுள்ளது. நான் ஏறுகிறேன். என்னைத் தடுக்க கடவுளின் தூதரான நீங்கள் மட்டுமல்ல, இல்லாத அந்தக் கடவுளே ஒருவேளை என்முன் வந்து தோன்றி ''குருதேவ் ஆணையை மீறிவிடு'' என்று தடுத்தாலும் முடியாது. ஆனால் வீரரே! ஒன்றை மட்டும் உங்கள் வாழ்க்கையில் புரிந்து கொள்ளுங்கள். கற்பனைகள் யாவும் நினைத்துப் பார்த்து மகிழவே உதவும். கடவுள் என்பது அப்பட்டமான கற்பனை...''

காளிங்கனுக்கு முதன் முதலாக சோர்வு ஏற்பட்டது. இந்தப் பெண் பில்வண மந்திரத்துக்கு முழுவதும் கட்டுப்பட்டவள். ஒருவேளை அந்த பில்வணன் சொல் கேட்டு மடிராஜனுக்கு பலியாகவும் சம்மதம் என்று புன்னகையோடு தலையை கொடுப்பாளோ...

கடவுளே...

## 16

# வெகுளிப் பெண்

''அருவிகள் பாயும் மிக உயர்ந்த மலையான திருவேங்கடத்தின் உச்சியிலே சூரியனும் சந்திரனும் இருபுறத்தே சிறப்பாக விளங்க நடுவே மின்னலென்ற புத்தாடையும் வானவில்லான அணிகலனும் அணிந்து கொண்டு, கருநிற மேகமே கூரையாக, சக்கரமும் வெண்சங்கும் கையிலேந்தி நின்ற திருக்கோலம் கொண்ட செங்கண்மால்'' என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் விவரிக்கும்போது அந்தப் பழைய காலத்திலே தனக்கென ஒரு கோயில் கூட அமைத்துக் கொள்ளாமல் இயற்கையே ஆலயமாய்க் கொண்டு எத்தனையெத்தனை காலமாய் திருவேங்கடத்தான் காத்திருந்தானோ என்று எண்ணத் தோன்றும். மூவுலகங்களையும் அளந்த பெருமாளுக்கு

முதன்முதலில் கோயில் கட்டும் பாக்கியம் பெற்றவன் பழைய பல்லவகுலத் தோன்றலான தொண்டைமான் என சரித்திரமும் புராணமும் சொன்னாலும் அந்தத் தொண்டைமான் அரசனுக்குப் பின்னே வந்தவர்களும் திருக்கோயிலுக்கு மேலும் பல சேவைகளும் செய்து கோயிலையும் பெரிதாக்கிக் கொண்டேதான் வந்தார்கள். இல்லையென்றால் திருவேங்கடவன் கோயிலை பராமரிக்கும் பொறுப்புக்காகவே 'சாலவை' என்ற தனி அமைப்பையே உருவாக்கியிருப்பார்களா? அல்லது ஆண்டாண்டு காலமும் சாலவை சபையினரும் மார்கழி முதல் நாளில் திருமலையில் கூடி அடுத்து வரப்போகும் திருத்துவாதசி உற்சவத்தை மிகப் பிரம்மாண்ட முறையில் கொண்டாடி வருவார்களா?

அப்படிப்பட்ட மார்கழி முதல் நாளுக்காகவே ஆண்டுதோறும் காத்திருக்கும் சாலவை சபையினராலும் அவர்தம் குடும்பத்தினராலும் அன்று திருமலையே நிரம்பியது என்றாலும் வியப்பு ஒன்றுமில்லைதான்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இறைவனைக் காணும் ஆசை எப்போதுமே சற்று அதிகம் என்று வருண பகவானுக்கும் தெரியும் போலும். தானும் அவர்கள் பக்திக்கு எந்த வகையிலும் சளைத்தவன் அல்ல என்பதை உலகுக்கு அறிவிக்கவோ என்னவோ திருவேங்கடமலையான் கோயிலைச் சுற்றியுள்ள பிராந்தியம் முழுவதையும் தன் கருமேகங்களால் மூடி அந்த சூரியனையும் சந்திரனையும் காண விடாததோடு மட்டுமல்லாமல் இறைவனை தனக்கே உரித்தானவனாகக் கொண்டு தன் மழை நீரினால் அந்தப் பகுதி முழுவதுக்குமே அபிஷேகம் செய்து மகிழ்ந்தான்.

சாதாரண காலத்திலேயே வெண்மேகங்கள் தவழ்ந்து செல்ல விரும்பிய திருவேங்கடத்தான் கோபுரத்தை கரும்மேகங்கள் தங்கள் கைகளால் தொட்டு தொட்டு அந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தன. திருவேங்கடவனை அதிகம் பாடிய நம்மாழ்வாரும் கோதை நாச்சியாரும் கூட இந்த மேகக் கூட்டங்களை அதிகமாகவே கவனித்திருக்க வேண்டும்.

அதனால்தானோ என்னவோ ஆண்டாள் கூட திருவேங்கடத்தானை தழுவிச் செல்லும் அந்த மேகக் கூட்டங்களையே காதல் தூதுவனாக பாவித்து அந்தக் கடவுளுக்கே 'மேக சந்தேசம்' அனுப்பினாளோ...



அப்படிப்பட்ட நல்லதொரு மழை நாளில்தான் மிகுந்த உற்சாகம் கொண்டிருந்த மிளகாழ்வான் அந்த வேங்கட நாதனைத் தடவிச் செல்லும் மேகக்கூட்டங்களை எட்டி கையால் பிடிக்க முயன்று கொண்டிருந்தான். ஆனால், அவன் கைகளைக் கடந்தே சில மேகங்கள் சென்றாலும் சற்று உயரத்தில் பறந்த மேகங்கள் மட்டும் மழையை அவன் மீதும் தாராளமாகவே பொழிந்து அவன் உற்சாகத்தில் தமக்கும் பங்குண்டு என்று சொல்லிவிட்டுப் போனது. ஆனாலும், மிளகாழ்வான் குழந்தை போல ஆடிக் கொண்டுதான் இருந்தான்.

மலைப்பகுதியாக இருந்தாலும் பாறைகள் அதிகம் இல்லாமல் செம்மணல் மேடுகள் நிறைந்திருந்ததால் மழை நீரில் நனைந்து அவனுக்கு சற்று எச்சரிக்கை தரும் விதமாக ஆங்காங்கே சற்று சறுக்கினாலும் அந்த இடங்களில் வளர்ந்திருந்த சிறு மரங்களும் செடிகளும் சறுக்கி விழாமல் பற்றிக் கொள்ள ஏதுவாக பாதுகாப்பையும் கூடவே கொடுத்ததால் ஆண்டவன் நல்லதையும் அல்லாதவையும் சேர்த்து எங்கும் படைத்துள்ளான் என்று மிளகாழ்வான் உணர்ந்தே இருந்ததால் சற்று எச்சரிக்கையாகவே திருவேங்கடமலைப் பகுதியில் திரிந்து கொண்டிருந்தான்.

திடீரெனத் தன் காலில் விழுந்தவனை என்ன... ஏது...வென எதுவும் விசாரிக்காமல் உடையவர் தன்னை திருமலை ஏறப்பணித்ததையும் அதற்கேற்றாற்போல அந்த அரசவம்சத்துக் காளிங்கன் கூட உடனே திருமலை ஏறும்படி அவசரப்படுத்தியதையும் நினைவுக்கு கொண்டு வந்தான். ஆனால் இந்த மலைக்கு வந்து பத்து நாட்களுக்கு மேலாகியும் அந்தக் காளிங்கன் இந்தப் பிராந்தியத்திலேயே காணப்படாதது மிளகாழ்வானுக்கு சற்று ஆச்சரியத்தை அளித்தது. அவனை என்று சந்தித்தானோ அன்று முதலாகவே ஆத்ம நண்பனாகவே பாவிக்க ஆரம்பித்தவன்தான் என்றாலும் தன்னை எப்படியும் திருமலையில் சந்திப்பதாகச் சொல்லியவன் இன்னமும் ஏன் வரவில்லை என தனக்குள் கேட்டுக் கொண்டான். 'ஒருவேளை அன்று இரவு குதிரையோடு தன்னை விட்டுப் பிரிந்தவன் அந்த கங்கைக் கரை இளவரசியைத் தேடிப் போய் அவள் வலையில் பூரணமாக சிக்கிவிட்டானோ... இல்லை – இவன் சைவன் என்பதால் வைணவத்தலமான வேங்கடவன் மலைக்கு ஏன் கஷ்டப்பட்டு மலையேறி

வரவேண்டும் என்று நினைத்தானோ... இருக்காது. திருமலைக் கோயிலுக்கு சைவர்களும் வேதாந்திகளும் அதிகம் பேர் வரும்போது இவன் வராமலா இருப்பான். இருந்தாலும் இங்கு சந்திப்பதாகச் சொன்னவன் எப்படியும் வராமல் இருக்கமாட்டான்.'

மனதில் காளிங்கனைப் பற்றி ஏகப்பட்ட எண்ணங்கள் ஒருபக்கம் ஓடினாலும் மலைப்பகுதியில் பொழுது என்னவோ அதிவிரைவாகக் கழிகின்றது போலத்தான் உணர்ந்தான் அவன். திருவேங்கடவனை நிதமும் மூன்று வேளையும் தரிசித்துவிட்டு மடைப்பள்ளியில் அதே மூன்று வேளையும் நன்றாகவே சாப்பிட்டுக் கொண்டும் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தவன் கண்களுக்கு அந்த மழையில் குறவப் பெண்கள் கூட்டம் ஒன்று விசித்திர ஊர்வலமாக பனை ஓலை குடைபிடித்து திருக்கோயிலை நோக்கி சென்று கொண்டிருந்தது சற்று விசித்திரமாக தென்பட்டது.

மலைப்பகுதியில் குறவரும் மலைமகளிரும் வாழ்வது சகஜமே என்றாலும் வந்திருந்த இந்த பத்து நாட்களில் இவர்கள் யாரையும் சரியாக கவனிக்கவில்லைதான். பேயாழ்வார் அடிக்கடி பாடிய குறவமகளிர் கூட்டத்தை இப்படி வரிசையாக அதே திருமலையில் அவர் பாடியது போலவே பார்த்ததும் மிளகாழ்வான் உற்சாகம் அதிகமாகிப் போனதுதான். பேயாழ்வாரின் பாடல்களை பாடங் கற்றுக் கொள்ளும் சமயத்தில் அவர் காலத்தில் இந்த மலைக் குறமகளிர் மிகவும் அழகானவர் போலும் என்று நினைத்திருந்தான். ஆனால், இப்போதும்கூட அந்த மலைமகளிர் கூட்டத்தினர் அழகாகவே அவன் கண்களுக்குப் பட்டனர். நகரப்பக்கமே தலைவைத்துப் படுக்காத அந்த வெகுளி மனம் படைத்த பெண்கள் பனை ஓலைக் குடை பிடித்து தலையில் சீலையையும் போர்த்தி தேர் போல அசைந்து நடந்து கோயிலுக்குச் செல்லும் அழகே தனிதான்.

தான் ஓர் ஆண்மகன். பிராம்மண குலத்தவன். இப்படியெல்லாம் பெண்களை அதுவும் திருவேங்கடத்தான் கோயிலுக்குச் செல்லும் பெண்களைப் பார்ப்பது பண்பாடற்ற செயல் என்று மனதுள் சொல்லிக் கொண்டாலும் அவன் பார்வையை மட்டும் தவிர்த்தான் இல்லை. அப்படிப் பார்த்துக் கொண்டே இருந்தவன் திடீரென சிலிர்த்துப் போனான். காரணம் அந்தக் கூட்டத்தில்



கங்கைக் கரை காத்யாயினி இருந்ததுதான். அவன் கண்களில் மழைநீர் விழுந்து மறைத்ததால் சரியாகப் பார்க்க வில்லையோ. மேல் துணியால் கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் பார்ப்பதற்குள் அந்த மகளிர் கூட்டம் கோயிலுக்குள் நுழைந்து விட்டது. அவள் அவள் தானா... இல்லை, சற்றுமுன்னர் தான் நினைத்ததால் பிரமையாக தன் கண்ணில் தெரிந்தாளா... இல்லையில்லை... அவளை தெரியாதா...மறக்கமுடியாத முகங் கொண்டவள். அவள்தான்.

'மறுபடியும் மழைச்சேறில் ஏறி அவர்களை கோயில் உட்கட்டில் புகுந்து பார்த்துவிட்டால்' என்று நினைத்தவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டு அவர்கள் திரும்பி வரும் வரையில் காத்திருந்து பிடிப்பது என்றும் முடிவுக்கு வந்தான்.

ஒருவேளை வாக்களித்தபடி காளிங்கன் திருமலை ஏறிவந்தால் அவனுக்கு இவளைப்பற்றி இனிய செய்தி சொல்வோமே... என்ற எண்ணமும் அவனிடத்தே சேர்ந்து கொண்டது. 'காளிங்கன் இந்தப் பெண்ணுடன் ஏதாவது சண்டை போட்டிருப்பான். இவளும் ஊடல் கொண்டு அவனிடம் மறைந்து வாழ விரும்பி இருக்கலாம். முடிந்தால் நாமே அந்த ஊடலை விடுவித்து இருவரையும் சேர்த்து வைக்கும் புண்ணியத்தைச் செய்வோமே' என்ற எண்ணமும் மிளகாழ்வான் மனதில் தோன்றியதால் தான் செய்யப் போகும் புதிய வேலையில் உற்சாகம் கொண்டு அவளுக்காகவே அங்கேயே காத்திருந்தான்.

மழை விட்டு விட்டுப் பெய்து பிறகு பூரணமாக நின்று விட்டதால் பக்தர்களும் நிறையவே வெளியே வந்து கோயில் அருகே காணப்பட ஆரம்பித்தனர். பொதுவாக மழைக் காலங்களில் திருமலையில் பக்தர்கள் கூட்டம் இருக்காது என்று மிளகாழ்வான் கேள்விப்பட்டிருந்தாலும் மார்கழி பிறந்து விட்டதாலும் இவர்கள் அதிகம் வர ஆரம்பித்து விட்டனர் போலும். ஒருவேளை சாலவை அங்கத்தினர் அனைவரும் இங்கேயே தங்கி உற்சவத்தை முடித்துக் கொண்டுதான் மலை இறங்குவார்களாமே... அவர்களின் குடும்ப கூட்டமோ என்னவோ...

மார்கழி மாத திருத்துவாதசி உற்சவம் திருவேங்கட மலையில் மிகச் சிறப்பானதாக நடக்கும் என்று

மிளகாழ்வான் கேள்விப்பட்டிருந்தான். ஆனால், இதுவரை உற்சவ காலத்தில் மலையேறி வந்ததில்லையாகையால் அந்த பாக்கியம்கூட தனக்கு உடையவர் உத்தரவினால் கிடைத்துள்ளது என்பதில் அவனுக்கு சந்தோஷம்தான். முக்கோட்டி ஏகாதசியான வைகுண்ட ஏகாதசியையும் அதற்கு அடுத்த நாளில் வரும் திருத்துவாதசியையும் வெகு அமர்க்களமாக ஏழு நாட்கள் முன்பிருந்தே கொண்டாடுவதாக அவன் கேள்விப்பட்டதுண்டு. 'முதல் நாள் பவித்ரோத்ஸவம் ஆரம்பித்து இரண்டாம் நாளில் கொடியேற்றம் ஐந்தாம் நாளில் உற்சவ மூர்த்தியான வேங்கடத்துறைவரை* கருட வாகனத்தில் சேவித்து, ஆஹா... அடுத்த நாள் ஆறாம் நாள் வைகுண்ட ஏகாதசி... அன்று இரவில் மூன்று கோடி தீர்த்தங்கள் திருமலைக் குளத்தில் விழுமாமே. அந்தப் புனித புஷ்கரணியில் அடுத்த நாளான திருத்துவாதசியின்போது சக்கரத்தாழ்வாரை புனித நீராட்டுவார்கள். அப்போது ஸ்நானம் செய்தால் ஏழேழு ஜென்மத்துக்கும் நல்லதாமே...' ஆஹா...இம்முறை அப்புண்ணியத்தை தானும் பெற்றே தீருவது என்று முடிவுக்கு வந்தவன் அப்படிப்பட்ட புண்ணியத்தை பெற்றுத் தந்தவர் உடையவர்தானே என்றும் மனதுள் சிலாகித்துக் கொண்டான்.

தன் வாழ்வில் ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் உடையவர் புகுந்துள்ளதாக மிளகாழ்வான் நினைத்தான். 'தன் வாழ்வு என்ன... உலகத்திலுள்ள அத்தனை வைணவர் வாழ்விலும் உடையவரின் பங்கு ஏராளம்தான்'' என்றும் நினைத்தான். அப்படிப்பட்ட உடையவரை இந்த உலகுக்கு அனுப்பிய திருவேங்கடத்தானுக்குத் தன் நன்றியை தெரிவித்துக் கொண்டான்.

மிளகாழ்வான் மனது தற்சமயம் உடையவர் மீதே இருந்தாலும் அவன் பார்வை மட்டும் கோயிலுள் வருவோர் போவோர் மீதே இருந்தது. மழை நின்று விட்டதென்று பக்தர்கள் அனைவரும் அரக்க பரக்கக் கோயிலுக்குள் சென்ற வண்ணமும் வந்த வண்ணமும் இருந்தாலும் உள்ளே சென்ற குறவ மகளிர் கூட்டம் இன்னமும் திரும்பி வரவில்லைதான். திடீரென உடையவர் மீதான எண்ணங்களிலிருந்து

*திருவேங்கடவனின் உற்சவ மூர்த்திக்கு முதன் முதலில் வேங்கடத்துறைவர் என்று பெயர் – History of Tirupathi. by T.K.T.V.Chari.



அந்தப் பெண்கள்மீது திரும்பியது மிளகாழ்வானுக்கு. ஏன் இத்தனை தாமதம். ஒரு வேளை இன்று மார்கழி முதல் நாளென்று வேண்டுதல் ஏதாவது இவர்களுக்கு உண்டோ? திருவேங்கடமுடையான்தான் வேண்டுபவருக்கு வேண்டும் வரங்களை தாராளமாக வாரி வழங்கும் வள்ளல் ஆயிற்றே...

மிளகாழ்வான் பொறுமையாக வெகுநேரம் காத்திருந்தான். அது வீண்போகவில்லை. அந்த குறவ மகளிர் கூட்டம் வெளியே வர ஆரம்பித்தது. மழை நின்றதால் அந்தப் பனை ஓலைக் குடைகள் இப்போது பிரசாதம் வைத்துக் கொள்ளும் கூடையாக மாறி அவர்கள் தலையில் ஏறிக்கொண்டது. குடை கூடையாக மாறியதால் அந்தக் குறவ மகளிரின் வசீகர முகங்கள் அழகுறத் தெரிந்தாலும் முதலில் வந்தது போல் சீராக வராமல் கூட்டமாக நெருக்கியடித்து வந்ததால் அவனால் காத்யாயினியை அங்கே கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் இவர்களைப் பின்தொடர்வது என்று முடிவு செய்தவன் அந்த முடிவையும் செயல்படுத்தினான்.

கோயிலுக்குச் செல்லும்போது அமைதியாக வந்த அந்த மகளிர் கூட்டம் கோயிலைவிட்டு செல்லும்போது அந்த அமைதியை அறவே கைவிட்டு சிரித்துக் கொண்டும் கைநீட்டி ஏதோ சண்டையிட்டுக் கொண்டும் குனிந்தும் நிமிர்ந்தும் குதித்தும் ஏதோ நாடகம் செய்வதுபோல விளையாடிக் கொண்டே அந்த மலைப்பகுதியில் நடந்து சென்றது அவனுக்கும் சற்று விளையாட்டுப் புத்தியைக் கொடுத்திருக்க வேண்டும்.

அவர்கள் சேட்டை செய்து கொண்டே உற்சாகமாய் சென்றதில் அவன் பங்கும் இருக்கவேண்டும் என்று மிளகாழ்வான் நினைத்தானோ என்னவோ அவர்களோடு சேர்ந்து செல்ல ஆசைப்பட்டு சற்று அகல நடை போட்டான். ஆனால், அந்த அகல நடை மலைப்பாதைக்கு சரிவரவில்லை. மழை பெய்து ஊறியதால் ஒரு கட்டத்தில் அந்தப் பாதை வழுக்கியது. அதுவும் பாதை கீழிறங்கிச் செல்லும் பாதையாதலால் சர்ரென வழுக்கி தன் முன்னே செல்லும் பெண்களின் கூட்டத்தின் மேல் ஓவென அலறிக் கொண்டும் அவர்களை இடித்துக் கொண்டும் அவர்களில் ஓரிரண்டு பேரை தள்ளிக் கொண்டும் 'பொத்'தென விழுந்தான்.

திடீரென பின்னாலிருந்து தம்மீது கத்திக் கொண்டே விழுந்த அந்தப் பிராம்மணனைப் பார்த்து பதறிய மலைப் பெண்கள் பிறகு அவன் மேல் பரிதாபப்பட்டு கைகொடுத்து எழுப்பி அங்கேயே சற்று மேடான இடத்தில் உட்கார வைத்து சிசுருட்சை செய்யவும் ஆரம்பித்தனர். உடல்வலி அவ்வளவு கடுமையாக இல்லாவிட்டாலும் அந்தக் கூட்டத்தில் காத்யாயினி எங்கு இருக்கிறாள் என்பதை கண்டு கொள்ளவேண்டும் என்பதற்காகவே வேண்டு மென்றே வலி அதிகமாகி விட்டதைப் போல ஆர்ப்பாட்டம் செய்தான்.

குழந்தை ஒன்று அடம்பிடிப்பது போல இருந்த அவன் செய்கை அந்த மலைப்பெண்டிரை சற்று வியக்கவைத்தது. ஆண்மகன் அதுவும் சாதாரண சறுக்கலில் விழுந்ததற்கு ஏன் இத்தனை பெரிதாய் கத்துகிறான் என்று நினைத்தாலும் விழுந்தவன் மரியாதைக்குரிய பிராம்மணன் என்பதால் அத்தனை பெண்களும் தங்கள் தலைச் சுமையை இறக்கி கீழே வைத்துவிட்டு ஆளுக்கு ஆள் அவனை சூழ்ந்து கொண்டு சமாதானம் செய்ய ஆரம்பித்தனர். அப்படி சூழ்ந்து கொண்டதில் அந்தப் பெண்ணும் ஸ்பஷ்டமாக மிளகாழ்வான் கண்ணில் தெரிந்தாள்.

வலி குறைந்தது போல சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் அவர்களைப் பார்த்து ஒரு சிறு புன்னகை செய்தான். பிறகு தன் நண்பனின் காதல் ஊடலை தீர்க்க வேண்டும். முதலில் இவள் ஏன் இந்தக் குறவர் கூட்டத்தில் சேரவேண்டும். மாய மோகினியாக ஏன் காளிங்கனை மயக்கப்படுத்த வேண்டும். அதையும் கண்டுபிடித்து விடுவோமே... அதைவிட வேறு என்ன வேலை நமக்கு...

மனதுள் நினைத்தவன் சற்று பின்னே கூட்டத்தில் மறைந்து நின்ற அந்தப் பெண்ணை கைநீட்டி முன்னே அழைத்தான். அதே அகலக்கண்கள். கோதையின் கண்கள். இவள்தான்...

மிளகான் கூப்பிட்டதும் அச்சமுற்ற அந்தப் பெண் தன் அகலக் கண்களில் அந்த அச்சத்தைத் தேக்கிக்கொண்டே முன்னே வந்தாள். தன் சேலையையும் வேண்டுமளவுக்கு தலையைச் சுற்றி இழுத்துக் கொண்டு சற்று சிணுங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் மிளகாழ்வான் அவளை விடவில்லை.



''கங்கைக் கரை இளவரசியார் இப்படியெல்லாம் வேஷம் போடலாமா? அன்று கோதை வடிவில் வந்தீர்கள். அசந்து போனோம். கோதை பாடிய பாடல்களைப் பாடினீர்கள். செவியாற கேட்டு ஆனந்தப்பட்டோம். அப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்ட இளவரசியார் இப்படி குறவ மகளிர் வேஷத்தில் வரலாமோ?''

நேரடியாகவே அவளை கேட்டுவிட்டான். ஆனாலும் அந்தப் பெண் ஏதும் விளங்காமல் மலங்க மலங்க விழித்ததையும், கண்ட ஆழ்வான் 'அவள் இவள்தானா' என்ற சந்தேகம் ஒரு கணம் ஏற்பட்டாலும், அந்த சந்தேகத்தை ஒரு கணத்தில் உதறிவிட்டு படபடப்பு சற்று குரலில் தெறிக்கவே பேசினான்,

''தேவி! கோபப்படாதீர்கள். என் நண்பர் காளிங்கராஜா மிக மிக நல்லவர். காதலைப் பற்றி நானும் படித்திருக்கிறேன். காதலில் ஊடல் சகஜம்தான். அதற்காக இப்படி ஒரேயடியாக கோபம் கொண்டு அவரை அலைக்கழிப்பது எந்த வகையில் நியாயம். நீங்கள் அவரிடம் ஏதாவது குறை கொண்டிருந்தால் என்னை தங்கள் மூத்த சகோதரனாக பாவித்து என்னிடம் சொல்லுங்கள். அவரிடம் நான் எடுத்துச் சொல்லி திருத்துகிறேன். நானும் அவரும் இணைபிரியா நண்பர்கள் போலத்தான். நான் சொன்னால் அவர் கேட்பார். ஒரு நண்பன் தன் காதலியைப் பிரிந்து வாழ்ந்தால் நான் விட்டு விடுவேனா... இதோ பாருங்கள் தேவி! தயவு செய்து உங்கள் கோபத்தைக் கைவிட்டு என்னுடன் வாருங்கள். உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பது என் பொறுப்பு. இனி நீங்கள் எதற்கும் கலங்க வேண்டாம்.''

தன் வழக்கம்போல படபடவென உள்ளத்தைத் திறந்து பேசினாலும் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண் தன் விழிகளை மேலும் பெரிதாக்கி அச்சத்துடன் தோழிகளைப் பார்த்தாள். கணநேரத்தில் அந்த அழகு விழிகளில் கண்ணீரும் சேர்ந்து கொள்ளவே அவளுக்கு ஆதரவாக இன்னொரு பெண், அவள் சற்று தைரியமுள்ளவள் போலும், முன்னுக்கு வந்தாள்.

''என்ன பிராம்மணரே! யாரைப் பார்த்து என்ன பேசறீக? பாவம் அந்தப் பொண்ணு. எப்படி பாக்குது... எதுவும் விளங்கலைங்க உங்க பேச்சு... ஐயா... இந்தப் பொண்ணு எங்க கூட்டத்துப் பொண்ணு. பயப்படுது பாருங்க!''

இவள் பேசப் பேச அவள் விழிகளில் கண்ணீருடன் குரலில் கேவலும் சேர்ந்து கொண்டது. அவ்வளவுதான் அத்தனை பெண்களும் ஆழ்வானை வெறுப்பாக ஒரு பார்வை பார்த்து விட்டு அந்தப் பெண்ணை சமாதானம் செய்ய ஆரம்பித்து விட்டனர். தமிழும் அந்த மலை மண்ணுக்கே உரித்தான பாஷையும் கலந்து அந்தப் பெண்ணிடம் பேசி ஆறுதல் கூறினர். ஆழ்வானுக்கும் அவர்கள் மொழி சரியாகவே புரிந்தது. ''கவலைப் படாதே... கண்ணீர் விடாதே... இந்தப் பிராம்மணர் ஏதோ தவறாகப் பேசுகிறார். பெரிதாக எடுத்துக் கொள்ளாதே'' என்ற வகையில் அந்தப் பெண்ணின் கண்ணீரை துடைத்து அவள் தலையிலும் அந்த பனை ஓலையை ஏற்றி அவளையும் அன்போடு அணைத்து ஆதரவாய் அழைத்துச் சென்றனர்.

ஆழ்வான் நம்ப மறுத்தான். இல்லை. இவள் கங்கைக் கரை நாட்டு இளவரசிதான். நாம் கோதையாகப் பார்த்திருக்கிறோம். பிராம்மணப் பெண்ணின் உடையிலும் இவளை அன்றிரவு பார்த்தோமே... அதைப் பார்த்துதானே காளிங்கனுக்கே சேதி சொன்னோம். அதன் பிறகுதானே காளிங்கனே இவளைப் பின்தொடர்ந்தான். இவள் காத்யாயினிதான். ஆனால் இந்தப் பெண்களுடன் இத்தனை இயல்பாக இருக்கும் இவள் இப்படி ஏன் நாடகமாட வேண்டும். ஒருவேளை அவள் இவள் அல்லவோ... தாம் தவறாக நினைத்து விட்டோமா? அப்படி அவளும் இவளும் ஒன்றானவள் இல்லையென்றால் அது எப்படி அந்தக் கண்கள் ஒன்றாகவே இருக்கும். கண்கள் பொய் சொல்லுமா... கண்கள் காட்டிக் கொடுத்துவிடும் அல்லவா...

சென்றவர்களையே பார்த்துக் கொண்டு தான் இருந்த இடத்திலேயே அமர்ந்து விட்டான். சற்று தூரம் சென்றவர்களில் அந்தப் பெண் மட்டும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் ஏதோ விவரிக்க இயலாத குறும்பும் அந்த அகலக் கண்களில் விஷமமுமாக கலந்த பார்வை பார்த்துவிட்டு கீழிறங்கும் பாதையில் வெகு வேகமாக இறங்கிவிட்டாள்.

மிளகாழ்வான் மறுபடியும் ஆச்சரியப்பட்டான். காளிங்கன் சொல்வதுபோல இவள் மாயமோகினிதான். இவள் குறவப்பெண்ணோ, கங்கைக்கரை நாட்டு இளவரசியோ கிடையாது. நிச்சயம் மாயமோகினிதான். சரியாகத்தான் சொல்லியிருக்கிறான் காளிங்கன்.



குதூகலமாய் பெண்களைப் பின் தொடர்ந்தவன் இப்போது குழப்பத்துக்கு ஆளாகி நின்றான். எத்தனை நேரம் அப்படியே குழப்பத்தில் அங்கேயே இருந்தானோ அந்தக் குழப்பம் நீங்காமலே கோயிலருகே வந்தான்.

வந்தவனுக்கு குழப்பம் முழுவதும் நீங்கி கோபம் வர ஆரம்பித்தது. கோபத்துக்குக் காரணம் அவன் பழைய நண்பனும் புதிய எதிரியுமான நாலூரான் அட்டகாசமாக கைகளை வீசிக் கொண்டும் தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டும் கோயிலுக்குள் சென்று கொண்டிருந்தது தான்.

அந்த நாலூரானுக்குப் பின்னால் ஒரு பெரிய கூட்டம் கூட கோயிலுக்குள் புக ஆரம்பித்தது. அந்தக் கூட்டத்திலும் ஒரு தெரிந்த முகம் மிளகாழ்வான் கண்ணில் பட்டது. அது வேறு யாருமல்ல. காளிங்கன்தான்.

## 17

# ஆரறிவார் அண்ணல் இருப்பிடம்?

''இந்த ஆண்டு திருவேங்கடநாதனுக்கு நடத்த இருக்கும் திருத்துவாதசி திருவிழா இதுவரை நடந்திராத அளவுக்கு மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும். இதற்கு நாம் சாலவை சபை அங்கத்தினர் அனைவரும் தங்கள் பூரண ஒத்துழைப்பை தந்தருளவேண்டும்.''

பணிவாகவோ அல்லது சம்பிரதாயப்பிரகாரமாகவோ நல்ல வார்த்தை சொல்லித்தான் சாலவை சபையை ஆரம்பித்து வைத்தார் சாலவைத் தலைவர். கடந்த பல ஆண்டுகளாகவே சாலவையின் தலைவராகவே இருப்பதால்தானோ என்னவோ இறைவனுக்கு என்னென்ன திருப்பணிகள் எந்தந்த வகைகளில் செய்ய வேண்டும் என்றும் யார் யார் எந்தந்த சேவைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள் என்றும் நீண்ட பட்டியலிட்டுக் கொண்டே போனார்.

திருமணி மண்டபத்தில் கூடிய சாலவை சபை அன்று அங்கத்தினர்களாலும் அவர்தம் குடும்பத்தினராலும் நிரம்பி

வழிந்தது. இது ஆண்டாண்டு காலமாக வழக்கமாக கூடி வழக்கமாக சொல்லப்பட்டு வழக்கமாகவே நல்ல விதத்தில் உத்சவத்தை ஆரம்பித்து நல்லவிதத்தில் முடித்து வைக்கும் சபையாதலால் தங்கள் உன்னத பொறுப்புகளை சாலவை அங்கத்தினர்களும் நன்றாக உணர்ந்துதான் இருந்தனர். அவர்கள் தங்கள் பொறுப்புகளையும் மிகக்கவனமாக ஏற்றுக் கொண்டு சிறப்பாக செய்து வருவதும் ஆண்டாண்டு காலமாக வழக்கமாக நடைபெற்று வருவதுதான்.

ஒவ்வொரு ஆண்டும் சாலவை மார்கழி முதல் நாளில் திருமலையில் தவறாமல் கூடுவதும் வழக்கம்தான். அப்போதுதான் மார்கழி வளர்பிறையில் வரும் இந்த விழாவுக்கான முடிவுகளும் எடுக்கப்படும். சில சமயம் மார்கழி ஆரம்பமே வளர்பிறையாக ஆரம்பித்தாலும் அதற்கு முன்னதாகவே சபை கூடி தக்க முடிவுகள் எடுக்கும். ஆனால் இந்த ஆண்டு இவர்கள் அனைவரின் சௌகரியத்திற்காகவோ என்னவோ மார்கழி பின்பாதியில் வளர்பிறை துவாதசி வருவதால் நிதானமாகவும் இன்னும் சிறப்பாகவும் விழாவைக் கொண்டாடவேண்டும் என்ற துடிப்பு எல்லோரிடத்திலும் இருந்தது என்னவோ உண்மைதான்.

திருவேங்கடமுடையான் கோயில் கருவறையும் உட்பிரகாரமும் சாலவை சபை நடக்கும் திருமணிமண்டபத்திற்கும் இடைவெளி விட்டு கட்டப்பட்டிருந்ததால் பக்தர்கள் தங்கள் சேவைகளை இடையூறில்லாமல் சேவித்துக் கொண்டிருந்தனர். மண்டபமும் பெரியதாகவே இருந்ததால் சற்று வசதியாக சபையினர் அமரவும் சபைத்தலைவர் பேச்சினை செவியாற கேட்கவும் முடிந்தது. மகிழ்ச்சியாகவும் உணர்ந்தனர்.

ஆனால், உட்கார்ந்திருந்தோர் வரிசையில் கடைசியில் வந்தமர்ந்த மிளகாழ்வான் மட்டும் தன் கோபத்தை சற்றும் குறைத்துக் கொள்ளாமலே இருந்தான். அவன் எத்தனைக் கெத்தனை சந்தோஷமாக திருமலையில் பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தானோ அத்தனை சந்தோஷங்களும் தன்னிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது போல உணர்ந்தான். அவனுக்கு அந்த இடத்தில் உட்காரக் கூட பிடிக்க வில்லைதான். ஆனால், எழுந்து நின்றாலோ அல்லது திடீரென சபையை விட்டு சென்றாலோ 'திருவேங்கடவன் கோயிலில் அபராதம் செய்துவிட்டான்' என்ற கெட்ட பெயரை சம்பாதிக்க நேரிடும்... அதனால் உடையவரும்



மனம் நோக தான் காரணமாகி விடுவோம் என்றபடியால் உட்கார்ந்த படியே சபை நிகழ்ச்சிகளை கவனித்துக் கொண்டிருந்தான்.

நடு நாயகமாய் யாரோ ஒரு பிராம்மணர் நெற்றி நிறைய சாம்பலைப் பூசிக் கொண்டு அமர்ந்திருக்க அவர் இரு பக்கங்களிலும் காளிங்கனும் மாருதியாண்டானும் அமர்ந்திருந்தனர். அவர்கள் அமர்ந்த மேடை சற்று உயரம் குறைவாகவே கட்டப்பட்டிருந்தாலும் அவர்களை சபையோர் நன்றாகவே பார்க்க முடிகின்றது என்பதையும் ஆழ்வான் புரிந்து கொண்டான். அமர்ந்திருந்த மூவருக்கும் திருக்கோயில் மரியாதை செய்யப்பட்டு திருப்பட்டமும் மாலையும் சார்த்தப்பட்டு அமர்த்தப்பட்டிருந்தனர் என்பதை அவர்கள் கோலத்தில் இருந்தே கண்டுகொண்ட மிளகாழ்வான் இருந்தும் இவர்களுக்கும் சாலவைக்கும் திருவிழாவுக்கும் என்ன சம்மந்தமோ என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

ஆனால், நாலூரானுக்கும் இந்த சபைக்கும் என்ன சம்மந்தம் என்று நினைத்துப் பார்த்ததில் அவன் கோபம் தெளிவாக முகத்தில் எட்டிப்பார்த்தது. காளிங்கனாவது அரசவம்சம்... அந்தப் பிராம்மணர் யாரோ பெரிய இடம்... மாருதியாண்டானோ உடையவரின் பிரதிநிதியாக வரலாம்... அவருக்கு அப்படி உரிமை உண்டு... ஆனால், இந்த கேடு கெட்ட நாலூரான் ஏன் இங்கு வந்தான்... அவன் உட்கார்ந்த அழகைப் பார்க்க வேண்டுமே... ஏதோ கல்யாண மாப்பிள்ளையின் முறுக்கோடு திமிராகப் பார்த்துக் கொண்டும்... வந்தவர்களெல்லாம் இவன் அறிவுக்கு சமமானவர் இல்லை என்பது போல ஒரு ஆணவத்தையும் காண்பித்து... இவனை... உள்ளேயே விட்டிருக்கக்கூடாது... பச்சோந்தி போல நிறம் மாறும் இவனுக்கு இங்கே என்ன வேலை... தில்லையிலே வேண்டுமானால் இவன் ராஜாங்கம் பலிக்கலாம். ஆனால், இது எங்கள் திருவேங்கடம்... நின்ற கோலத்தில் சங்கும் சக்கரமும் கைக்கொண்ட எங்கள் பெருமாளின் கொடி பறக்கும் மலை... இவன் இங்கு ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினாலும் சரி. இவனைத் தரதரவென இழுத்து வெளியே கொண்டு போய் இந்த மலையுச்சியில் இருந்து கீழே தள்ளி மோட்சம் கொடுத்து விடுவோம்...

மிளகாழ்வான் நினைப்பை சற்றும் அறியாத சாலவை சபைத்தலைவர் சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு மாருதியாண்டானைப் பேச சொல்லிவிட்டு சாலவை

சபையினரோடு கீழே முன்வரிசையில் அமர்ந்து கொண்டார். அவர் அமர்ந்த இடத்தின் அருகே நாலூரான் இருந்ததும் 'போனால் போகட்டும்' என்பதுபோல தன் பக்கத்தில் தலைவருக்கும் இடம் கொடுத்ததையும் மிளகாழ்வான் நன்றாகவே கவனித்துக் கொண்டான்.

மாருதியாண்டான் சாலவை சபையினரை மனமுவந்து பாராட்டினார். உடையவர் மலையடிவாரத்தில் கண்ணன் கோயிலில் மார்கழி நோன்பு கொண்டாட திருவேங்கடவன் மலையுச்சியில் தன் விழாவைக் கொண்டாடிக் கொள்கிறான்... கீழே தாசன் இருக்க மேலே தலைவன் இருக்க இந்த திருத்துவாதசித் திருவிழா மிகச் சிறப்பாக அமையும் என்றும் பேசினார். தன் பக்கத்தில் அமர்ந்தவரைக் காண்பித்தும் பேசினார்.

''அடியேன் உடையவரை மலையேறி அருளும்படிக் கேட்டேன்... 'அதுதான் ஆசிரியர் வருகிறாரே... அவர் ஏறினால் நான் ஏறியது போல' என்று உடையவர் மங்களாசாசனம் செய்துவிட்டார். ஆசிரியருக்குக் கூட மிகப் பெருமையாக இருக்கிறதாம்... இன்று ஆசிரியர் மலையேறி வந்துள்ளார்... அதைப் போலவே ஒரு நாள் உடையவரும் திருவேங்கடமலை ஏறி அருளுவார்...''

மாருதியாண்டான் பெருமை மிகக் கொண்டு பேசிய போதுதான் சோழ நாட்டின் கல்விக் கண்ணான ஆசிரியரைப் பார்த்தான்... அன்று உடையவரிடம் இவரைப் பற்றித்தான் காளிங்கள் பேசி இருக்கிறானா... ஆஹா... உண்மைதான்... உடையவரின் நண்பரல்லவா... அதுதான் ஆசிரியரும் தேஜஸ் அதிகம் கொண்டு காணப்படுகிறார்... ஒஹோ... நம் காளிங்கனுடைய குரு இவர்தானோ...

மிளகானின் மனம் கோபத்திலிருந்து சற்று நிம்மதியானது போல உணர்ந்தது. இவர்கள் முன்னிலையில் நாமும் சற்று நிதானமாகத்தான் இருக்க வேண்டும்... அப்போதுதான் நம்மையும் நான்குபேர் மதிப்பார்கள்...

மிளகான் நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஆசிரியர் எழுந்து சபையோருக்கு வணக்கம் தெரிவித்தார். திருவேங்கடநாதனைப் போற்றி தோத்திரம் பாடினார். கண்களை மூடி அவர் பாடியது மிளகாழ்வான் மனதில் நன்றாகப் பதிந்தது. அவர் பேச்சும் நிதானமாகவும் சுருக்கமாகவும் இருந்தது.



''திருவேங்கடமுடையான் திருக்கோயிலுக்கு இன்று வந்ததன் மூலம் என் பிறவி பெரும் பயனைப் பெற்று விட்டேன். வேங்கடம் என்றாலே பாவங்கள் எரியும் இடம் என்று செந்தமிழ் சொல்கிறது. அப்படிப்பட்ட திருவேங் கடத்தில், பாவங்கள் தீயிலிட்ட தூசு போல எரிக்கப்படும் புண்ணிய தலத்தில் எந்தவிதக் குறையும் இல்லாது இந்த விழா மிகச்சிறப்பாக நடைபெறும். இந்த விழாவுக்கான மொத்த செலவினங்களை இந்த முறை நம் சோழகுல வம்சத்து காளிங்கர் ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் சார்பில் பொன்னும் பொருளும் காணிக்கையாக ஏற்கனவே திருவேங்கட முடையான் கோயிலில் சமர்ப்பித்தாயிற்று... எங்கும் நிறைந்த பரம்பொருளின் இனிய விழா இது. நாட்டில் தற்சமயம் எழுந்துள்ள மதச்சண்டைகள் ஒழிந்து வளமும் தர்மமும் எங்கும் பெருக வேண்டும். இறைவன் ஒருவனே என்ற உத்தம கருத்தினை அனைவரும் உணர வேண்டும்... சிவோஹம்...''

கையை உயரத்தூக்கி வணங்கிவிட்டு அமர்ந்தார். மறுமுறை சாலவைத் தலைவர் எழுந்ததைக் கவனித்தான் மிளகாழ்வான். திருவிழா உற்சவ அட்டவணைகளை ஒரு ஓலையில் எழுதிப்படித்தார்.

''இன்று மார்கழி ஒன்றாம் நாள்... மார்கழி பதினேழாம் நாள் ஷஷ்டியில் உற்சவம் ஆரம்பமாகின்றது. மார்கழி மாதம் இருபத்தோராம் நாள் வேங்கடத்துறைவருக்கு கருட வாகனச் சேவை... இருபத்திரண்டாம் நாள் வைகுண்ட ஏகாதசி... இருபத்திமூன்றாம் நாள் திருத்துவாதசி திருநாள்... அன்று சுதர்ஸனப் பெருமாளுக்கு சுபநீராடல் விழா... பிறகு விழா இனிதே முடிவடையும்...''

இதுவரையிலும் சாலவையின் நடவடிக்கைகளில் எந்த பங்கமும் இல்லாமல் சபை நன்றாகவே நடந்து கொண்டிருந்தது. ஆனால் ஏழாம் நாள் திருத்துவாதசி அன்று சக்கரத்தாழ்வாரின் புனித நீராடலுக்குப் பிறகு விழா முடிவடைவதாக அறிவித்ததும்தான் அதுவரை அசட்டையாக இருந்த நாலூரான் எழுந்தான்.

''எத்தனை நாள் திருவிழா நடத்த திட்டமிட்டுள்ளீர்?''

திடீரென எழுந்த கேள்வி சபையினர் அனைவரையும் சற்று திகைக்க வைத்தது. பக்கத்திலேயே நின்ற சாலவைத் தலைவர்

ஏதோ ஆட்சேபிக்க முன்வந்தபோது ஆசிரியர் அவரை கையமர்த்தி அவரே பதில் சொன்னார்.

''ஏழு நாட்கள்''

''ஏன் ஏழு நாட்கள்?''

''அதுதான் இங்கு சம்பிரதாயம் நாலூரான். இந்த ஏழு நாட்கள் திருவிழா சாலவை சபை ஆரம்பித்ததில் இருந்து வழக்கமாக நடைபெறும் பழமையான சம்பிரதாயம். ஆனால் நீ கேட்பதுதான் புதிது!''

''இதற்கு ஆதாரம் ஏதாவது இருக்கின்றதா?''

''ஆதாரம் என்று கேட்டால் யாருக்கு யார் ஆதாரம்... உனக்கு ஆதாரம் யார்... அல்லது எனக்குதான் ஆதாரம் எது? நம் ஆதாரம் எல்லாம் அவன்தான்... உனக்கு ஆதாரம் ஏதேனும் வேண்டுமானால் அவனைக் கேள்...'' என்றவர் திருவேங்கடமுடையான் கருவறையை நோக்கி கையைக் காண்பித்தார்.

சபை சற்று நகைத்தது. நாலூரானின் அறியாமையைப் பற்றி சற்று இகழ்ச்சியாகக் கூடப் பேசிக்கொண்டனர். ஆனால் நாலூரான் அவர்களை கோபமாக ஒரு பார்வை பார்த்து மறுபடியும் ஆசிரியரிடம் கேட்டான்.

''ஆசிரியரே... நகைக்கக் கூடிய விஷயமா இது?''

''நான் நகைக்கவில்லையே...''

சபை மறுபடியும் நகைத்தது. அவர்களை அலட்சியப் படுத்திய நாலூரான் சற்று நிதானமாகப் பேச ஆரம்பித்தான்.

''ஆனால் பாருங்கள் ஆசிரியரே! காலம் மாறிக் கொண்டே வருகிறது. பலவித விஷயங்களை நாம் காலம் செல்ல செல்லப் புரிந்து கொள்கிறோம். புரிந்து கொண்டபின் அதற்கேற்ப நாமும் சில மாற்றங்களை செய்து கொள்கிறோம்...''

''சரி நாலூரா! அப்படி எந்த விதத்தில் காலம் மாறிவிட்டதாக நீ புரிந்து கொண்டாயோ... அப்படிக் காலம் மாறியதால் உனக்குப் புரிந்த விஷயங்களை எங்களுக்கும் எடுத்துச் சொன்னால் நாங்களும் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறோம்!''



நாலூரானும் சமத்காரமாகவே பதில் சொன்னான்,

''எல்லாம் தெரிந்தவராக, எதையும் அறிந்தவராக ஊரார் போற்றும் ஆசிரியர் ஏதுமே அறியாதது போல் இங்கு பேசுவது விந்தைதான் ஆசிரியரே! இருக்கட்டும்... இன்று ஊரெங்கும் ஏன் தேசமெங்கும் பரவிக் கிடக்கும் ஒரே பிரச்சனை 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்பதுதான்... அதுவாவது அறிவாரா ஆசிரியர்...''

''நாலூரா! அது ஊர் பிரச்னையோ சோழ தேசத்து பிரச்சினையோ இல்லை. உன் போன்றோர்கள் பயன்பட தூண்டிவிடப்படும் மதவாதப் பிரச்னை. காலம் மாறி விட்டதாக சொல்லும் நீ காலத்துக்கேற்றவாறு பண்பாடு களையும் அதிகம் அறிந்து பழக வேண்டும். இப்படி வேண்டாத பிரச்னைகளை சாலவை சபைக்கு கொண்டு வருவதே பண்பாடற்ற செயல்... அதையும் நீ அறிய வேண்டும்!''

நிதானம் சற்றும் குறையாமல் வந்த ஆசிரியரின் பதிலால் சற்று நிதானமிழந்தான் நாலூரான்.

''ஆசிரியரிடம் எதையோ கேட்டால் என்னை வைது தீர்த்துப் பழி வாங்குகிறார். நான் கேட்ட கேள்விக்கு இன்னமும் சரியாக விளக்கம் அளிக்க வில்லை...''

''சரி... உன் பிரச்னை என்ன... சொல் முதலில்...''

''ஏழு நாட்கள் உற்சவத்தை பத்து நாட்களாக நீட்டிக்க வேண்டும்...''

பத்துநாட்கள் என்றதும் சபையில் சிறு சலசலப்பு எழவே அதை மேலும் தூண்டினான்.

''நான் சாலவை சபையையும் பழமையையும் நன்றாக மதிக்கிறேன். அதனால் முதல் ஏழு நாட்களும் சாலவை சபை வழக்கப்படி திருத்துவாதசி உற்சவம் கொண்டாடப்படும்... மற்ற மூன்று நாட்கள் சிவரூபத்திற்காக கொண்டாடப்பட வேண்டும். எட்டாவது நாள் ரிஷபவாகன சேவை... ஒன்பதாம் நாள் திருத்தேர் ஒன்று செய்து தில்லையில் நடப்பது போல் நான்மாட பவனி... பத்தாம் நாள் சரியாக பௌர்ணமி... ஆருத்ரா தரிசனம்... திருவாதிரைத் திருநாளன்று திருவேங்கட முடையானுக்கு அபிஷேகம்...''

சபையினரை ஒரு முறை சுழன்று பார்த்தான் நாலூரான். ஆச்சரியத்தால் வாயடைத்து நின்ற சபையை பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சியால் மனம் துள்ளியது. ஆனால் ஆசிரியரோ கலங்கவில்லை என்பதை அவர் முகத்தில் தெரிந்த மென்னகையால் புரிந்து கொண்டான்.

''நாலூரா! இதுதான் நீ புரிந்து கொண்ட காலத்தின் மாற்றமா?''

நாலூரானும் வெளியே நகைத்தான்.

''ஆம் ஆசிரியரே! நாம் அறியாமையில் இத்தனை நாள் அறிவற்று ஆலோசனை என்ற சக்தியை இழந்து இருந்தோம். எப்போதோ திருவேங்கடமுடையான் சிவமாகி மழுவும் நாகாபரணமும் தரித்துக் கொண்டான். ஆனால், அப்போது அறியாமல் இருந்தோம். இத்தனை காலமும் நாம் நம்மையும் அறியாமல் அந்த ஆண்டவனையும் அறியாமல் பெரும்பிழை செய்து வந்தோம். ஆனால், அந்த அறியாமை தற்சமயம் நீங்கிவிட்டது. திருவேங்கடமுடையான் சிவம்தான் என்று தெளிவாகி அந்த சிவத்தையும் அறிந்து கொண்டோம். அறிந்தபின் அதற்கேற்றவாறு ஏன் நம்மை மாற்றிக் கொள்ளக்கூடாது என்றுதான் ஏழுநாள் திருவிழாவை பத்துநாள் விழாவாக மாற்றச் சொல்கிறேன்.

சபை திகைத்தது. ஆசிரியர் நாலூரானை உற்றுப்பார்த்தார்.

''ஓஹோ! நாலூரார் சிவத்தை முழுவதும் அறிந்து கொண்டாரோ?''

''ஏன்? சைவரான நீர் இன்னும் சிவத்தை அறியவில்லையோ... ஐயோ... பாவம்...''

''இல்லை... அறியவில்லை...'' என்று உறுதியான குரலில் சொன்னவர் மேடையில் சற்று முன்னே வந்தார். அவர் கண்கள் மூடிக் கொண்டன. அவர் வலது கை மேலே உயர்ந்து வானத்தைப் பார்த்தது.

**''ஆறறிவார் எங்கள் அண்ணலின் பெருமையை**
**ஆறறிவார் அவன் அகலமும் நீளமும்...''**

என்று பாடியவர் கண்களைத் திறந்து நாலூரானைப் பார்த்தார். அந்தப் பார்வையின் தீட்சண்யத்தை அவன் கண்கள் எதிர் கொள்ள மறுத்ததால் நாலூரானின் பார்வை நிலத்தை நோக்கியது. ஆசிரியர் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டு பாடினார்.



**''அண்ணல் இருப்பிடம் யாரும் அறிகிலார்...**
**அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்க்கு**
**அண்ணல் அறிவினுக்குள்ளே அமர்ந்திடும்**
**அண்ணலைக் காணின் அவன் இவனாகுமே...''**

சபை மிக மிக அமைதியாய்ப் பாடலை கேட்டது.

''நாலூரா! சிவத்தை பற்றி எல்லாம் தெரிந்ததாகப் பேசுகிறாயா... உன்னால் மட்டுமல்ல... முனிவர்களாலும் யோகிகளாலுமே அறியப்படாதவன் அவன். நான் பாடிய பாட்டு சைவ சமயத் திருமந்திரப் பாட்டு... திருமூலர் பாட்டு... ஆனால் இந்தப் பாடலின் பொருள் சொன்னாலும் உனக்கு விளங்காது... உன்னைப் போன்றவர்களைப் பயன்படுத்தி அதன் மூலம் நாட்டைக் கெடுக்கும் நாசகாரர்களுக்கும் புரியாது. ஆனால் உன்னை நான் அறிவேன். அப்படி அறிந்ததால் உனக்கு சிறு அவகாசம் அளிக்கிறேன். இந்த உயர்ந்த திருவேங்கடமலையானின் உன்னதத் தலத்திலிருந்து உடனடியாக ஓடிவிடு... நல்ல சபைகளில் உன் போன்றவர்களை அனுப்பி கலகம் செய்தாலும் அது பலிக்காது என்று உன்னை இங்கு அனுப்பியவர்களுக்கும் தெரிவித்து விடு!...''

ஆசிரியரின் பலமான சொற்கள் சபையை உலுக்கியதோ என்னவோ... நாலூரானை அனைவருமே உஷ்ணப் பார்வை பார்த்தார்கள். தன்னை விரோதி போல பார்ப்பவர்களை அலட்சியம் செய்தான் அவன்.

''சாலவை சபையோர்களே! இதுதான் காலங்காலமாய் பழைமையைப்பாதுகாத்து வரும் ஒரு சபை என் போன்ற சிந்தனையாளருக்குத் தரும் கௌரவமா? இது அவமானம்... இந்த அவமானம் எனக்குச் செய்யவில்லை... சிவத்துக்கும் சிவனடியாருக்கும் சேர்த்தே செய்யப்பட்ட அவமானம். ஏற்கனவே தேசத்தில் படும் கஷ்டங்கள் போதாதா? இப்படி அவமானம் செய்தால் இன்னமும் என்னென்ன அநர்த்தங்கள் நிகழப்போகிறதோ... அந்த சிவனுக்கே வெளிச்சம்... சிவாத் பரதரம் நாஸ்தி! சிவாத் பரதரம் நாஸ்தி!''

என்று சொல்லி விட்டு அவையை உஷ்ணப் பார்வையுடன் பார்த்து வேண்டுமென்றே எட்டி எட்டி நடை போட்டான்.

அதேசமயம் மேடையிலிருந்து காளிங்கன் மிளகாழ்வானிடம் வந்து ஏதோ செவியில் ஓத, மிளகாழ்வானும் மெதுவாக சபையை விட்டு வெளியேறினான்.

சாலவை சபையினருக்கோ இந்த நடவடிக்கைகள் எல்லாமே புதிதாக இருந்தன. இதுவரை இந்த மலையில் இப்படிப்பட்ட வாதங்கள் எழுந்ததில்லை. வருடா வருடம் வருவது... திருவிழாவைப் பற்றி பட்டியலிடுவது... திருவிழாவை நடத்தி திருவேங்கடமுடையான் திருவருளைப் பெற்றுக் கொண்டு திருமலையை விட்டு இறங்கிப்போவது என்பதைத்தான் எதிர்பார்த்து இந்த வருடமும் வந்தவர்கள் அவர்கள்.

''சபையோர்களே! நல்ல நிகழ்ச்சிகளில் இப்படிப்பட்ட சில இடையூறுகளை நாம் எதிர்பார்க்கத்தான் வேண்டும்... இப்படி இடையூறுகள் ஏற்படும்போதெல்லாம் ஆசிரியரைப் போன்றவர்களை நம்மிடையே அனுப்பி அவற்றை களைந்து வருவதும் அந்தத் திருவேங்கடமுடையான் செயல்தான். நடந்ததை மறந்து நடப்பதை நல்லவையாய் நினைத்து நாம் செயல்படுவோம்!''

மாருதியாண்டான் என்னவோ இடையூறு களையப்பட்டதாகவே நினைத்தது வாஸ்தவம்தான். ஆனால் ஆசிரியர் மட்டும் கவலைப்பட்டார். எங்கோ நெருப்பேற்றப்பட்டு அது இங்கே புகைவதாக அவர் மனதுக்குப் பட்டது.

அவர் அச்சப்பட்டது உண்மைதான். முதலில் சாதாரணமாக திருவேங்கடமலையில் தோன்றிய புகை ஒரேயடியாக ஊதப்பட்டு பெரும் நெருப்பாகவே மாறியது. அந்தக் கொழுந்து விட்டு எரியும் நெருப்பு திருமலை அடிவாரத்தில் மார்கழி நோன்பில் இன்பம் கண்டு கொண்டிருந்த உடையவரைக் கூட மெல்ல தீண்ட ஆரம்பித்தது.

## 18

## நம்பினோர் கைவிடப்படுவர்!

''அந்த நாலூரான் பின்னால் அவனறியாமல் போய் அவன் யாரோடு தங்குகிறான், எங்கு தங்குகிறான் என்ற தகவல்கள் எனக்கு வேண்டும்... நீர் அவனைப் பார்த்து கோபப்பட்டு காரியத்தைக் கெடுத்துவிடாதீர்... நிதானம் - பிரதானம் என்பதை நினைவில் வையும்... நாளை இரவுக்குள் அந்தச் செய்திகளை என்னிடத்தில் தெரிவிக்க வேண்டும்...'' தன்னிடத்தே குனிந்து கட்டளை போல் சொல்லப்பட்ட



வார்த்தைகளைக் கேட்டு மிளகாழ்வான் ஏதும் எதிர்த்துப் பேசமுடியவில்லைதான். ஆனால் எதிர்ப்பதற்கு இதில் என்ன இருக்கிறது... தனக்குப் பிடித்தமான வேலையை செய்யச் சொல்லித்தானே உத்தரவிடுகிறான்... அதுவும் மதத்துரோகியான நாலூரானை உளவு பார்ப்பது என்றவுடன் மிளகாழ்வானுக்கு கோபம் போய் மறுபடியும் உற்சாகம் தொற்றத் தொடங்கிவிட்டது.

அவன் கோயிலை விட்டு வெளியே வரும்போது பின்மாலை நேரமென்பதாலும் மழைக்காலமானதாலும் இருள் துரிதமாகவே வேங்கடவன் மலையை சூழ்ந்திருந்தது. ஒருவிதத்தில் அந்த இருட்டு மிளகாழ்வானுக்கு கடினமானதாகவும் இன்னொரு விதத்தில் சௌகரியமானதாகவும் இருந்தது. இருட்டு நேரத்தில் பின்தொடர்வது யார் என்பதை நாலூரான் அறிய வாய்ப்பில்லை என்றாலும் திருமலை வாயிலில் பக்தர்கள் அதிகம் காணப்படுவதால் அவன் மீது கண் வைப்பது சற்று கடினமாகவும் இருந்தது மிளகாழ்வானுக்கு.

இருந்தும் மலையைக் கடந்து செல்லும் தனிப்பாதையில் நாலூரான் தனியே செல்வதைக் கண்டு கொண்டு அவனும் தைரியமாகவே நாலூரானைப் பின்தொடர்ந்தான்.

திருமலையின் கடைப்பகுதியில் இருந்த அந்த சிறுகுடிசையின் கதவு தட்டப்படும்போது இரவு பூரணமாகவே அந்தப் பகுதியை ஆக்கிரமித்து இருந்தது. தட்டப்பட்ட கதவு திறந்ததும் முன் வந்த சிறு தீப வெளிச்சத்தில் நாலூரான் முகம் கூட மிளகாழ்வானுக்கு நன்றாகவே தெரிந்தது. ஆனால் வெளியே தீபம் தெரிந்ததே தவிர தீபத்தை முன்னே கொண்டு வந்த உருவம் வெளியே வரவில்லை. அத்தோடு மட்டுமல்லாமல் நாலூரானையும் வெளியேயே நிறுத்தி விட்டு தீபத்துடன் உள்ளே சென்று விட்டது. சற்று நேரம் கழித்து மறுபடியும் தீபம் வெளியே வந்து வழி காண்பிக்க நாலூரான் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டான். நாலூரானோடு வெளிச்சமும் அகன்றதால் இருள் இன்னமும் கடுமையாக ஆழ்வான் கண்களுக்குத் தெரிந்தது. அதே சமயத்தில் உள்ளே கதவும் அடைக்கப்பட்ட ஓசை துல்லியமாக ஆழ்வான் செவிக்குக் கேட்டது. ஆழ்வான் அதை சவாலாக எடுத்துக் கொண்டு செயல்பட்டான். எப்படியாவது உள்ளே நடப்பதைப் பார்த்தே ஆகவேண்டும்.

மிளகானுக்கு இந்தப் புதிய உளவு வேலை மிகவும் பிடித்துப் போய்விட்டது. ஆகையால் குடிசையின் பின்பக்கப் பகுதிக்கு வந்து அங்கு ஏதாவது சாளரப்பகுதி இருக்கின்றதா என்பதற்காக சற்று மேடேறி சிறுசிறு செடிகளையும் விலக்கிப் பார்த்தான். அவன் எதிர்பார்த்த படியே அங்கு மங்கலான தீப வெளிச்சத்தின் பிரதிபலிப்பு தெரியவே மிக மிக எச்சரிக்கையோடு அடிவைத்து அந்த வெளிச்சம் பட்ட பகுதிக்கு வந்தான். அங்கு ஒரு சிறிய சாளரம் இருந்தாலும் அவன் குனிந்த நிலையில் பார்த்தபோது உள்ளே அறைக்குள் தெளிவாகவே அவர்கள் அவன் பார்வைக்குத் தென்பட்டார்கள்.

குடிசையானாலும் பெரிய அறைதான். அறை நடுவில் உள்ள மரக்கம்பத்தில் சாய்ந்து கொண்டு ஒருவன் உட்கார்ந்திருந்தான். மற்றவன் தீபத்துடன் நின்றிருந்தான். அவன்தான் தீபத்துடன் நாலூரானைப் பார்க்க வந்திருக்க வேண்டும் என்று ஊகித்த மிளகாழ்வான் அங்குள்ள நிகழ்ச்சி களை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தான்.

உள்ளே இருந்தவர்கள் நாலூரானுக்கு எந்த மரியாதையும் செய்யவில்லை. நாலூரானே பேசினான்,

''காகடியாரே! குருதேவும் நீங்களும் சொல்லியபடிதான் சாலவையில் பேசினேன். சபை அங்கத்தினர் எல்லோரும் அசந்து விட்டனர். நிறைய பேருக்கு திருவேங்கடமுடையான் பற்றியே ஏதும் தெரியவில்லை. மழுவும் பாம்பையும் கொண்டவன் அவன் என்று சொன்னதும் பார்க்கவேண்டுமே அவர்களை... ஆனாலும் அந்த ஆசிரியர் கொஞ்சம் பெரியதனம் பண்ணிவிட்டான்!''

நாலூரான் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டான். அந்த காகடி என்பவன்தான் உட்கார்ந்தவன் போலும் என்று மிளகான் நினைத்தான். அந்தக் காகடியே பேசினான்.

''உம்மால் முடிந்ததை நீர் செய்துவிட்டீர்... பின் எதற்காக வருத்தப்படுகிறீர்...''

''விதை விதைத்தாகிவிட்டது காகடியாரே... இருந்தாலும் உடனடி பலன் இருந்திருந்தால் செய்த சேவைக்கும் பலன் இருந்திருக்கும்...''

''கவலைப்படாதேயும்... உம்முடைய சேவை என்றுமே உமக்குப் பலனளிக்கும்... அதுவும் உடனடியாக...'' என்ற காகடியான் தன் கச்சையிலிருந்து கையடக்கமான பட்டு மூட்டையை கலகலவென சத்தத்துடன் நாலூரானிடம் தூக்கிப் போட்டான். அதை ஆவலுடன் படித்துக் கொண்ட நாலூரானின் முகம் தீபம் தேவைப்படாமலே ஒளிர்ந்தது. அது ஒரு பொற்காசு மூட்டை என்பதை கண்டுகொண்ட மிளகான் நாலூரானின் நிஜசொரூபத்தையும் கண்டு கொண்டதால் அவன் மனம் சற்று வேதனையால் வாடியது.



''ஆனால் இந்த உற்சவம் முடியும்வரை நீர் இங்கேயே இருக்க வேண்டுமென்பது குருதேவ் உத்தரவு... உம்முடைய வேலையை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தவறாமல் செய்யும். உம்முடைய கையில் இருப்பது போல் பல மூட்டைகள் உம் காலடியில் விழும். நீர் இப்போது போகலாம்...'' என்று சொன்ன காகடியான் தீபத்துடன் இருந்தவனைப் பார்க்க, அவன் நாலூரானை அழைத்துக் கொண்டு வெளியே சென்றான். வேறு தீபம் உள்ளே இல்லையாதலால் இருட்டு அந்த அறையை சூழ்ந்து கொண்டது.

நாலூரானைத் தொடர்ந்து செல்வோமா என்று நினைத்த ஆழ்வான் ஏனோ இந்த இருவர் செயல்கள் விசித்திரமாக தோன்றவே அங்கேயே இருந்து பார்ப்பது என்று முடிவு செய்தான். வெளியே சென்ற தீபம் சற்று நேரம் கழித்தே உள்ளே வந்தது. காகடி வந்தவனை உள்ளே அமரச் சொன்னான். அவனும் தீபத்தை கீழே வைத்து விட்டு தரையில் அமர்ந்தான். காகடிதான் முதலில் பேசினான்.

''சாமுண்டர்ய! இந்த நாலூரானை எவ்வளவு தூரம் நம்பலாம் என்று தெரியவில்லை. மிகத் தீவிரமாக நமக்காக வேலை செய்கிறான் என்பதே அவன் மீது சந்தேகத்தை அதிகமாக்குகிறது. குருதேவ் எல்லோரையுமே எளிதாக நம்பி விடுகிறார்...''

''குருதேவ் பற்றி இரவு எதுவும் பேசாதே காகடி! பகலில் கூட அக்கம் பக்கம் பார்த்துத்தான் பேசவேண்டும்...''

''நீ இப்படி பயந்து பயந்து சாவதைப் பார்த்தால் எனக்குப் பரிதாபம்தான் வருகிறது சாமுண்டர்ய. குருதேவ் உன்னைப் பற்றி சரியாகவே கணித்திருக்கிறார். அச்சம் உன் கண்களைக் குருடாக்குகிறது...''

சாமுண்டர்யன் கோபப்பட்டான்.

''நண்பா! நீ கூட இப்படிப் பேசலாமா? நான் உண்மையைக் கண்டுதான் அஞ்சுகிறேன். இதோ பார்... எனக்கு அந்த

அதிராஜேந்திரன் மீது நம்பிக்கை இல்லை. அந்த சோழ அரசனின் கோழைத்தனத்தை பின்னணியாகக் கொண்டு சோழ தேசத்தையே வென்று விடலாம் என்று கனவு காண்கிறார் குருதேவ். சோழ தேசத்தில் மதச்சண்டைகள் வலுத்து விட்டால் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சாவார்கள் என்று பகல் கனவு காண்கிறார். அவர் நினைக்கும் அளவுக்கு சோழ தேசத்தில் பக்தியோ வீரமோ சற்றும் குறைந்து விடவில்லை.''

காகடி அவனை வெறித்துப் பார்த்ததை மிளகாழ்வானும் பார்த்தான். ஆனால் சாமுண்டர்யன் விடவில்லை.

''இதோ பார் காகடி... நேர்வழியாக போரிட்டு சோழர்களை வெல்வதுதான் இங்குள்ள மக்களுக்கு நம்மீது பயத்தையும் மரியாதையையும் கொடுக்கும்... நாமும் தைரியமாக காலூன்றலாம். ஆனால், மறைமுகமாக நாலூரானைக் கொண்டும் மடிராஜனை முன்னிறுத்தியும் மதக் கலவரங்கள் நடந்தால் நமக்கு ஒன்றும் பயன் இருக்காது...''

வெடித்தான் சாமுண்டர்யன். அவன் மனதில் தோன்றியதை எல்லாம் வெளியே கொட்டிவிடுவது என்ற உறுதியுடன் இருந்தானோ என்னவோ... ஆனால் அந்த காகடியான் ஏதும் பேசாமல் இவன் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தான்.

''இன்னொன்றையும் நினைத்துப் பார் காகடி! விக்கிலராஜா தான் நமது நண்பர். அவருக்காகத்தான் அவர் சார்பில் பல சண்டைகளில் தோளுக்குத் தோள் கொடுத்துள்ளோம்... அவருக்காகத்தான் அவர் அண்ணனைக் கூட விரோதித்து விரட்டி அடித்தோம். அவருக்காகத்தான் பில்வண குருதேவின் வார்த்தைகளையும் கேட்கிறோம். அதேசமயம் விக்கில மஹாராஜாவை குருதேவ் அடிமை போல் நடத்துகிறார். அதனால் நாமும் அடிமைகளாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்...''

''சாமுண்டர்ய! உன்னை பில்வண குருதேவ் சரியாக மதிப்பதில்லை என்பதற்காக அவர் மேல் குற்றம் காண்கிறாய். அவர் உனக்காக கங்கவாடியை* மீட்டுத்தந்து அங்கு உன்னை தலைவனாக்கி அங்கு எற்கனவே காலூன்றி நின்ற விக்கில

*N. Subramaniam's History of Tamilnadu (Jayasimha Later become friend of Chita)



ராஜாவின் சொந்த தம்பி ஜெயசிம்மனைக் கூட வெளியேற்றி கலியாணபுரம் அனுப்பிவிட்டார் என்பதை நினைவில் வைத்துக் கொள். பில்வணகுருதேவின் சிந்தனைகள் விசித்திரமானவை சாமுண்டர்ய! அந்தச் சிறிய மூளை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு அற்புதமாக சிந்தித்து செயல்படும் திறனை நான் அறிவேன். நீ வேண்டுமானால் பார்... இன்னும் சில மாதங்களில் விக்கில ராஜா இந்த பரந்த தென்பூமிக்கே அதிபதி... நான் வடதிசைக் காவலன்... நீ மேல்திசைக் காவலன்... ரேவிநாயகன் கிழக்கே பார்த்துக் கொள்வான். பிறகு என்ன... உலகமே நம் கையில்தான்...''

''இத்தனையும் யார் சாதிப்பார்களாம்?''

இகழ்ச்சியாகவே சாமுண்டர்யன் கேட்டாலும், காகடியின் பதில் உற்சாக மாகவே இருந்தது.

''பில்வண குருதேவ்தான். நீ பில்வண குருதேவை நம்பு... நமக்காக எதையும் செய்வார்...''

''உனக்கு குருதேவ் மீது அதிக நம்பிக்கைதான். ஆனால், குருதேவின் மூளை நீ நினைப்பதுபோல அதிவேகமாக வேலை செய்யும்! உன்னுடைய உதவி பெற்று முடிக்கப் பட்டதும் உன்னை உதறிவிட மாட்டார் என்பது என்ன நிச்சயம்?... அதே கதைதான் நமக்கும்...''

''தவறாக சொல்கிறாய் சாமுண்டர்ய... உதவி செய்பவர் களையும் நம்பிக்கை கொண்டோர்களையும் உதறித் தள்ள யாராலும் முடியாது... பில்வணரால் முடியவே முடியாது...''

''ஒருவேளை அப்படி நடந்து விட்டால்?... காகடி... நீ அதிகம் அவரை நம்புகிறாய்... ஆனால் அவர் உன்னை அப்படி நம்ப மாட்டார். நீ மட்டுமல்ல... அவர் யாரையும் நம்புவ தில்லை... என்னால் உரிய சான்று உனக்கு காண்பிக்க முடியும்... ஆனால், உன்னையும் என்னையும் ஒருவேளை ஒழித்துக் கட்ட நினைத்தாரானால் குருதேவ் சடுதியில் ஒழித்து சமாதியும் கட்டிவிடுவார்... அதை நினைவில் வைத்துக் கொள்...''

காகடி சற்று யோசித்தான். ''நண்பா! நீ சொல்வதில் சிறிது நியாயம் உள்ளது!''

''சிறிது என்ன சிறிது? நிறையவே உள்ளது. இதோ பார்... உங்கள் பார்வையில் நான் அச்சப்படுபவன்தான். ஆனால் ஒரேயடியாக நான் பயப்படுவதில்லை. என் உயிருக்கு

அபாயம் என வரும்போது நான் பயந்து சாவதில்லை... என்னை தற்காத்துக் கொள்ளத் தெரியும் எனக்கு. என்னிடம் கூட குருதேவின் மூளையையும் மிஞ்சிடும் திட்டம் உள்ளது. நீ என் உயிர் நண்பன்... நீ மட்டும் இந்த விஷயத்தில் உதவினால் உனக்கும் எனக்கும் எதிர்காலத்தில் மிகுந்த பயன் உண்டு...''

''என்ன சொல்கிறாய் நீ?''

''கொஞ்சம் இரு'' என்று சொன்னவன், மறுபடியும் தீபத்தை எடுத்துக் கொண்டு எழுந்து வெளியே சென்றான். சிறிது நேரம் கழித்து உள்ளே வந்து, பழையபடி கதவை தாள் போட்டு அவனிடம் வந்தான்.

''வெளியே யாராவது இருக்கிறார்களா என்று நோட்டம் பார்த்துதான் வந்தேன். குருதேவின் சிஷ்யர்களாக ஆங்காங்கே காபாலிகர்கள் அதிகம் உலாவும் நேரம் இது... சற்று நமக்கு எச்சரிக்கைத் தேவை... நல்லவேளை அப்படி யாரும் இல்லை...''

''சரி... போதும் உன் அனுமானம். உன் திட்டத்தைச் சொல்...'' எரிச்சலுடன் இருந்தாலும் அவன் குரலில் ஆவல் தெரிந்தது.

''காகடி! நாம் பில்வண குருதேவ் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு அவர் சொல்படியே கேட்க வேண்டும்... அதே சமயத்தில் நாம் செய்யும் செயல்களின் பலன் நமக்கு பரிபூரணமாக கிடைக்க வேண்டும்...பில்வண குருதேவையே நம் கட்டுக்குள் வைக்க வேண்டும்... அந்த பில்வண குருதேவ் கட்டுக்குள் இருக்க வேண்டுமானால் நாம் சில இக்கட்டுகளை குருதேவுக்கு உருவாக்க வேண்டும்... நாம் சொல்லும் விதத்தில் அவர் மூளை நமக்காகவே செயல்பட வேண்டும்... இது என்னால் முடியும்...''

என்றவன் மெல்ல ஆரம்பித்தான்.

மிளகாழ்வான் தன் கண்களையே நம்பமுடியாமல் தான் கேட்டதையும் கிரகிக்கமுடியாமல் வெளியே வந்தான். திருமலை மேடிறங்கி கோயிலை நோக்கி சென்றவன் சற்று தூரத்தில் தெரிந்த திருக்கோயில் கோபுரத்தை பார்த்து அந்தக் கோவிலுள் குடியிருப்பவனான திருவேங்கடமுடையானை யும் கடிந்து கொண்டான்... இப்படியுமா மனிதர்களை படைப்பாய்?



ஆனால் மறுகணம் ''தப்பு - தப்பு'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டவன் பரிகாரமாக தன்னையே ஒரு முறை சுற்றிக் கொண்டு அந்த கோபுரத்தையும் நோக்கி தன் கைகளை தூக்கி கும்பிட்டான். ''நீ என்ன செய்வாய்... பாவம்... மனிதனைப் படைத்த அவனுக்கு ஒரு மூளையையும் தந்து கூடவே 'நல்லதையே நினை' என்ற அறிவையும் நீ கொடுத்தாலும் பாழாய்ப்போன மனிதர்களின் சிந்தனை எத்தனை கேவலமாய்ப் போய் கொடிய செயல்களையும் செய்ய வைக்கிறது... இறைவா... திருவேங்கடவனே... மனிதர்கள் இத்தனை கோரமாகக் கூட சிந்தனை செய்வார்கள் என்று எனக்கு எதற்காக காண்பித்தாய்?

மிளகாழ்வான் முதன் முதலாக வாழ்க்கையின் மறுபக்கத்தைக் கண்டதால் சற்று அதிர்ச்சிக்கு ஆளானான். பிரதி தினமும் பெருமாள் திருமுகமும் அவன் தரிசனத்தினால் கண்களும் மனமும் நிறைவடைகின்றன. அவன் கோயில் மடைப்பள்ளி பிரசாதங்களினால் வயிறும் நிரம்புகிறது... இதுதான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு வேங்கடவன் எத்தனையோ விஷயங்களைப் புரிய வைப்பதாகவே பட்டது.

சற்று முன்னர் சாமுண்டர்யனின் புதிய வார்த்தைகளால் குழப்பமடைந்த மனதோடு சற்று வெறுப்போடு அவன் சென்று கொண்டிருந்ததால், அந்த சமயத்தில் தன்னைச் சுற்றி நடப்பதைக் கூட அவனால் கண்டுகொள்ள முடியவில்லை தான். அதனால் தன்னை திடீரென பின்னே கட்டிப்பிடித்து கைகளைப் பின்னே கொண்டு சென்று முறுக்கியவர்களை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் முன்னால் வந்த நாலூரான் மட்டும் மிளகாழ்வானிடம் சிரித்துக் கொண்டே பேசினான்.

''என்ன நண்பா! நான் உன்னை இன்றுமாலை சாலவை யிலேயே கண்டு கொண்டேன். ஆனால், நீதான் என்னைக் கண்டு கொள்வதே இல்லை. குறைந்தது உன் பழைய நண்பனிடம் குசலம் விசாரித்து அவன் ஏன் இங்கு வரவேண்டுமென்றாவது கேட்கலாம் இல்லையா?''

நாலூரான் எகத்தாளமாக பேசியது ஆழ்வானுக்கு இயற்கையான கோபத்தைதான் வரவழைத்தது... ஆனால் இவனிடம் கோபப்பட்டு பயன் இல்லை. இவன் விலை போனவன். இவனை விட மோசமானவர்கள் நிறைந்த

உலகத்தில் இவன் ஒருவனை மட்டும் குறை சொல்லி என்ன பயன்... ஆனாலும் நாலூரான் விடவில்லை.

''என்ன மிளகான்... பேசமாட்டாயோ? மௌன விரதமோ? நான் சொல்வதைக் கேள்... உன்னைப் பிடித்துள்ளார்களே இவர்கள் இருவரும் கொடியவர்கள்... உன்னை அப்படியே தூக்கிக் கொண்டு போய் மயானத்துத் தீயில் உயிரோடு போட்டு நீ எரிந்து சாம்பலான பிறகு அந்த சாம்பலை உடல் முழுதும் பூசிக் கொண்டு அர்த்தராத்திரி நடனம் ஆடும் கூத்தர்கள். காபாலிகர்கள்... உன்னை நான் காப்பாற்றுகிறேன்... முதலில் இந்த விபூதியை நெற்றியில் பூசிக்கொள்... பிறகு உன் வாயால் 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்று சொல்லு... அது போதும்!'' என்று தன் கச்சையிலிருந்து விபூதிப்பையை எடுத்து நீட்டினான்.

அவ்வளவுதான். எங்கிருந்துதான் பலம் வந்ததோ... ''ஜெய் ஸ்ரீமன் நாராயணா'' என்று பலமாக கத்தி ஒரு உசுப்பு உசுப்பி கைகளையும் விடுவித்துக் கொண்டவன் நாலூரான் கையில் இருந்த விபூதி பையையும் பிடுங்கி அந்த விபூதியையும் அவர்கள் கண்களில் தூவினான். பிறகு வழக்கமாக செய்யும் வேலையையும் செய்தான். கோயிலை நோக்கி வெகுவேகமாக ஓட்டம் பிடித்ததுதான்...

மூச்சு வாங்க அந்த இரவு நேரத்தில் கோயில் வாசலில் நின்றவனுக்கு, காளிங்கன் தங்கியிருக்கும் இடத்தைப் பற்றி அவனிடம் விசாரிக்காதது நினைவுக்கு வந்தது. ஆனால், தெய்வ சங்கல்பமாக காளிங்கனே உள்ளேயிருந்து வெளியே வந்தான்.

யாரும் காணப்படாத அந்த இரவு நேரத்தில் காளிங்கன் ஏன் அர்ச்சகரோடு வரவேண்டும்... அதுவும் கோயில் உள்ளேயிருந்து... என்று கேட்டுக் கொண்டவனுக்கு அதைவிட ஆச்சரியமாய் தெரிந்தது காளிங்கன் முகம்.

அந்த முகத்தில் என்றுமில்லாத படபடப்பும் அவசரமும் அதிகமாக இருந்ததை தெளிவாக பார்த்த மிளகாழ்வான் பெரிதாக ஆச்சரியம் அடைந்ததில் தவறில்லைதான்...

# 19

# எங்கே அவள்?

ஆசிரியர் சாலவை சபையை திருப்திகரமாக நடத்தினார் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லாத காளிங்கன் ஆசிரியரை மாருதியாண்டானோடு அனுப்பிவிட்டு திருமலையப்பன் கோயிலை சுற்றிப் பார்க்க கிளம்பி விட்டான். தில்லையைப் போல் பெரிய கோயிலாக கட்டப்பட்டிருக்கவில்லை என்றாலும் இத்தனை மலை உச்சியில் இவ்வளவு அழகான கோயில் போல் வேறெங்கு காணமுடியும் என்று தனக்குள் கேட்டுக்கொண்டவன் கோயில் வெளிப்பக்கம் உள்ள புஷ்கரணியின் கரையில் அமர்ந்து கொண்டான்.

இரவு நேரம் ஆரம்பித்து விட்டாலும் அந்தக் குளிர்காற்றும் வேங்கடவன் தரிசனத்தில் கிடைத்த மன நிம்மதியும் அவன் இருந்த சூழ்நிலையை பரவசப்படுத்தியது. அருமையான மலை... அழகான கோயில்... அருள் தரும் வேங்கடவன்... அமைதியை நாடி வரவேண்டிய இடம்... சமயத்தில் இப்படிப்பட்ட இடங்களிலும் அதன் புனிதத் தன்மையை கெடுக்க மனிதர்கள் அரசியலைப் புகுத்தி வேடிக்கை பார்க்கிறார்கள்... வேதனையான விஷயம்தான்.

அவனுக்கு தன் சகோதரனும் சோழ அரசனுமான அதிராஜேந்திரன் மீது கூட அந்த சமயத்தில் கோபம் வந்தது. நாலூரான் போன்றோர் ஊருக்கு ஊர் நான்கு பேர் இருப்பது சகஜமே என்றாலும் அவர்களை அரசாங்கம் அடக்கி வைக்க வேண்டாமோ... அவனைத் தூண்டிவிடும் பில்வணனைப் போன்றவர்களின் மாயவலையில் விழும் இவன் எப்படி தர்மத்தை ரட்சிக்கப் போகிறான்...

அவனுக்கு இன்னொருமுறை வேங்கடவனை தரிசனம் செய்தால் என்ன என்று தோன்றியது. முதல்முறை சென்றபோது ராஜ உபசாரம் செய்தார்களாதலால் அவனால் சரிவர வணங்க முடியவில்லை என்பது என்னவோ வாஸ்தவம்தான். அதற்கேற்றவாறு ஆசிரியர் அவனுக்கு தல வரலாற்று விவரங்களை சொல்லி அவனை ஆச்சரியப் படுத்திக் கொண்டிருந்தார்.

முந்தைய காலங்களில் வெந்து போகும் இடமாகவும் பாலையுமாக இருந்ததால் வேங்கடம் என்று பெயர் வந்ததாகவும் இறைவன் இங்கு வந்து கோயில் கொண்டபின் அவனைத் தேடி வருணபகவானும் வந்து விட்டதால் பாலை மாறி சோலையாகி குளிர் அருவிகளையும் கொடுத்து தன்னைக் காணவரும் பக்தர்களின் பாவங்களையும் போக்குமிடமாக மாறிவிட்டதாகவும் ஆசிரியர் தெரிவித்துக் கொண்டிருந்ததால் அவனுக்கு அந்த விவரங்களெல்லாம் சுவையாக இருந்தன.

காளிங்கன், கோயில் தரிசனம் என்பது தனிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நினைப்பவன். எவ்வித பாதுகாவல் இன்றியும், பரபரப்பு இன்றியும் உபசாரம் இல்லாமலும் அமைதியாக இறைவனை தரிசிப்பதை அதிகம் விரும்புபவன்... தில்லையிலும் தஞ்சையிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும் அவன் அப்படிப்பட்ட நிலையில்தான் செல்வான். அப்படித்தான் திருவேங்கட முடையானையும் ஒரு முறை தரிசிக்க வேண்டும் என்று நினைத்தவன் கோயிலுக்குள் செல்ல எழுந்தான்.

இரவு வேளை வந்துவிட்டதால் அடுக்குத் தீப்பந்தங்களும் பெரிய தீபங்களும் ஏற்றப்பட்டு கோயில் மிக அழகாக காட்சியளித்தது. போதாதற்கு காற்றும் சேர்ந்து கொண்டு தீப நாக்குகளை அசைய வைத்து திருவேங்கடவனுக்குத் திருப்பாட்டு பாடுவதாக நினைத்துக் கொண்டே கோயிலுக்குள் அடியெடுத்து வைத்தான். திருமணி மண்டபம் முழுவதும் ஏற்கனவே சாலவை சபையின் போதே பார்த்துவிட்டதால் அந்த மண்டபத்தைக் கடந்து உட்பிரகாரப் படியில் ஏறி வேங்கடவன் சந்நிதி இருக்கும் அந்தப் புனிதப் பகுதிக்கு வந்தான். நீண்ட தாழ்வறையும் சுற்றுச் சுவரையும் கொண்ட திருவேங்கடவன் சந்நிதிக்குள் சென்றவன் அவன் திருமுகத்தையும் பாதத்தையும் கண்ணாரக் கண்டு வணங்கி வெளியே வந்தான். பக்தர்கள் யாரும் காணப்படவில்லை. உள்ளே கருவறைக்குள் இருக்க வேண்டிய அர்ச்சகர் கூட அங்கே இல்லாமல் கருடன் சன்னிதியில் சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

அந்த கருடாழ்வாரையும் சேவித்தவன் ஒருமுறை பிரகாரத்தை சுற்றி வர ஆசைப்பட்டு உட்பிரகாரத்திற்காக வந்தான். அப்படி உட்பிரகாரத்தைச் சுற்ற ஆரம்பித்தவன் கண்களுக்குச் சடாரென ஒரு மலைவாழ் இளம் பெண் கோயில்



கர்ப்பகிருகத்துள் நுழைவது பட்டது... 'ஓ... இவள் காத்யாயினி... இவள் இங்கே... இந்தக் கோலத்தில்' என்ற அதிர்ச்சி மனதில் பட்டாலும் கர்ப்பகிருகத்தை சுற்றுபவன் நடுவில் ஏன் நிறுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் சற்று அவசரமாகவே சுற்றி விட்டு மறுபடியும் சன்னிதிக்குள் புகுந்தான்.

ஆனால், அந்தப் பெண் அங்கே இல்லை. 'அட... சற்று முன்னர் பார்த்தோம்... சன்னிதியை சுற்றி வருவதற்குள் அவள் தப்ப சந்தர்ப்பமே இல்லையே...' என்று மனதுள் விந்தையாக கர்ப்பக்கிருகத்துள்ளேயே நின்று எங்கும் கண்களை சுழலவிட்டான். விந்தையிலும் விந்தையாக கூடையுடன் நுழைந்தவள் அங்கு இல்லைதான். நீண்ட தாழ்வரை பக்கப் பகுதிகளிலும் சன்னிதிக் கதவுகளின் இடுக்குகளிலும் தேடியவன் சற்று அசந்துதான் போனான். இவள் எங்கே மறைந்தாள்?

கருடாழ்வார் சன்னிதி உள்ளே இருந்த அர்ச்சகரை ஏதாவது கேட்கலாமா என்று நினைத்தவன் அந்த எண்ணத்தை கைவிட்டு மறுபடியும் பிரதட்சிணம் செய்த உட்பிரகாரப் பக்கப் பகுதிகளில் தேடிப் பார்த்தான்.

மேலும் ஒருமுறை பரபரப்பாக சுற்றி வந்தவன் அவள் காணாமல் போகவே அங்கிருந்து திருமணி மண்டபம் வந்தான். திருமணி மண்டபத்தில் பக்கப்பகுதிகளில் அழகாக செதுக்கப்பட்ட சிற்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த தெய்வச் சிலைகளின் பின்னால் தன்னை அலைக்கழிக்கும் மோகினிச் சிலையும் மறைந்து விட்டதா என்பதாக தேடிப் பார்த்ததுதான் மிச்சம். அவள் எங்கும் காணப்படவில்லை.

தான் கண்டது கனவா... இல்லையில்லை அவள்தான்... அவளேதான்... அவள் இடையில் கூடை... அவள் முகத்தில் அதே மலர்ச்சி... அதே கவர்ச்சி.... அந்தக் கண்கள்... அந்த அகலக்கண்கள்... அவளேதான்... காத்யாயினி... எங்கே போனாய்... எங்கே மறைந்தாய்... சொல்...

கத்தலாம் போல் இருந்தது அவனுக்கு. ஆனால் உள்ள நிலை கருதி மறுபடியும் உட்பிரகாரம் வந்தான். கருடாழ்வார் சன்னிதியில் அர்ச்சகர் இவனைப் பார்த்து சற்று சிநேகிதமாய் சிரித்தார். மாலையில் ராஜமரியாதையாய் மேள தாளங்க ளோடு உள்ளே தரிசிக்க வந்தவன் இப்போது என்ன பரபரப்பில் இருக்கிறாய்... என்பது போல் பார்த்தார்.

''உள்ளே சன்னிதிக்குள் வருகிறீர்களா? நடை சாத்தும் சமயம்... மங்களம் பாடி பிரசாதமும் வாங்கிச் செல்லுங்கள்...''

வேங்கடபதியின் கருவறைக்குள் மறுபடியும் வந்தவன் கருணை பொங்கும் கண்களைப் பார்த்துக் கொண்டே மனதுள் அவனைக் கேட்டான். ''எங்கே அவள்? நான் உன்னைப் பார்ப்பது பொய்யானால் அவளை இங்கு பார்த்ததும் பொய்தான். ஆனால், அவளைப் பார்த்தேனே... எங்கே அவள்?'' அவன், இவன் கேள்விக்கு தன் வழக்கமான புன்னகையையே பதிலாகத் தருவதாகப் பட்டது இவன் மனதுக்கு. மணி ஒலிக்க தீபாராதனை காட்டிய அர்ச்சகர் அவனுக்கு அந்த ஆராதனையையும் பெருமாளின் துளசி பிரசாதங்களையும் கொடுத்தார். பிறகு அவரும் தீபாராதனையை தொட்டு வணங்கி மங்களம் பாடியவர் அவனோடு வெளியே வந்து சன்னிதிக் கதவை நன்றாக மூடி தாழ்போட்டு தாளப்பூட்டு போட்டார். பிறகு சாஷ்டாங்கமாக ஒரு நமஸ்காரத்தையும் செய்தவர் கருடாழ்வாரையும் வணங்கிவிட்டு வெளிக்கதவையும் சாத்தி தாள் போட்டு அங்கும் ஒரு பெரிய பூட்டு போட்டு திறவுகோல்களை தன் இடுப்பில் சொருகி அவனையும் பார்த்து ஒரு புன்னகையையும் 'வெளியே போவோமா' என்பது போல் பார்வையும் பார்த்து நடந்தார். காளிங்கனும் திரும்பிப் பார்த்துக் கொண்டேதான் நடந்தான். உட்பிரகாரத்தைக் கடந்தவர்கள் திருமணி மண்டபத்தையும் கடந்தார்கள். அப்போதுதான் ஆழ்வான் அவன் எதிரே வந்தான். அவன் பார்வையில் ஏதோ ஆச்சரியமும் எதையோ கேட்கும் ஆர்வம் தெரிந்தாலும் கண்களால் அவனை எச்சரிக்கை செய்து, அவன் தோளைப் பிடித்தபடியே வெளியே வந்து நடக்கத் தொடங்கினான். அவனால் இன்னமும் நம்பமுடியவில்லை. காத்யாயினி எங்கே மறைந்து போனாள்?...

ஆனால் வெளியே வந்ததும் ஆழ்வான் பொறுமை இழந்து படபடவென பேச ஆரம்பித்தான்.

''காளிங்கா! இனியும் என்னால் பேசாமல் இருக்க முடியாது... இல்லையேல் என் தலை வெடித்துவிடும்!''

ஆரம்பித்த ஆழ்வானை இடைமறித்தான் காளிங்கன்,



''சுவாமி! உம்மிடம் உள்ள விஷயங்கள் எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் நீர் அக்கம் பக்கம் பார்த்துப் பேசுவதும். இந்த இருட்டு வேளையில் என்னுடன் எதுவும் பேசாமல் வாரும்...''

எச்சரித்தவன் ஆழ்வானையும் அழைத்துக் கொண்டு தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மாளிகைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவன் அந்தக் கதவின் உட்பக்கத்தில் தாழ் போட்டுவிட்டு உள்ளே அமர்ந்தான்.

''இப்போது சொல்லும்!''

ஆழ்வான் கடகடவென ஒப்பித்தான். நாலூரானைப் பின் தொடர்ந்தது, நாலூரான் பொற்காசுகளை எதிரிகளிடமிருந்து பெற்றுக் கொண்டது; அவன் சென்ற பிறகு காகடியும் சாமுண்டர்யனும் பில்வணன் பற்றிப் பேசியது எல்லாம் சொல்ல சொல்ல காளிங்கனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

''அதுவும் காளிங்கா... அந்த சாமுண்டர்யன் சாமான்யப் பட்டவன் இல்லை... முகத்தைப் பார்த்தால் பயந்தாங்கொள்ளி போலத் தெரியும்... ஆனால் ஐய்யோ... அந்த ராட்சஸனின் திட்டங்கள் மட்டும் பலித்து விட்டால்... நாராயணா...''

மிளகாழ்வானின் முகம் சோகத்தில் ஆழ்ந்துவிட்டது. சற்றுமுன்னர் அந்த மலையோரக் குடிசையில் நடந்த நிகழ்ச்சிகளை அவன் மறக்கவே விரும்பினான். ஆனால் மறக்கக் கூடியவையா அவை பில்வணனை தம் கட்டுக்குள் வைக்க இக்கட்டுகளை உருவாக்க வேண்டும் என்று சொன்ன அந்தக் கொடியவனை காகடி துர்கா கேட்ட கேள்விகளும் அதற்கு அவன் அளித்த பதில்களும் மறுமுறை ஆழ்வான் மனதில் வலம் வந்தன.

''காகடி! பில்வண குருதேவ் நம்பியவர்களை மோசம் செய்வார் என்று சொன்னேனே... ஏன் தெரியுமா...''

''சொன்னால்தான் தெரியும்...''

''காகடி... நீ காத்யாயினியைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''சாமுண்டர்ய... திடீரென அவளைப் பற்றி ஏன் கேட்கிறாய்... நான் அவளைப் பற்றி எதுவும் நினைப்ப தில்லை. ஆனால், நாம் அனைவரும் ஒரு குடும்பம் போல்

பழகி வருகிறோமே... குரு புத்திரியை நான் இதுவரை மதித்துத்தான் பழகி வருகிறேன். குருவின் நம்பிக்கைக் குகந்தவள். குருதேவ் எதைச் சொன்னாலும் தவறாமல் செய்பவள்!''

சிரித்தான் சாமுண்டர்யன்.

''ஹாங் காகடி... குருவின் நம்பிக்கைக்குகந்தவள்தான். அதனால் தான் அப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டவளை பலிகொடுக்கப் போகிறார் உங்கள் குருதேவ்... தன் மகளையே நரபலி கொடுக்கும் தந்தைதான் அவர்...

நிமிர்ந்து உட்கார்ந்தான் காகடி.

''என்ன சொல்கிறாய் நீ?''

''காகடி! மடிராஜனை உனக்குத் தெரியுமல்லவா... உன் நண்பன்தானே அவன்... வேண்டுமானால் அவனிடமும் கேட்டுக் கொள்... காபாலிக மடிராஜனுக்குக் காவு தர சம்மதம் தெரிவித்துள்ளார்... காத்யாயினிதான் அந்தக் காவு...''

அதிர்ச்சி குரலில் முழுதும் பாயப் பேசினான் காகடி.

''என்னால் நம்பமுடியவில்லை நண்பா! அன்று கோபத்துடன் இருந்த மடிராஜனை கொஞ்ச நேரத்தில் சமாதானம் செய்தது குருதேவின் திறமை என நினைத்தேன். ஆனால், இப்படியா... தன்னை நம்பி வந்திருக்கும் பெண்ணையே இப்படி பலி கொடுப்பாரா... நம்பமுடிய வில்லை...''

''நம்பித்தான் ஆக வேண்டும் காகடி. நான் கருநாடகத்தில் சில காபாலிகர்களிடம் கேட்டு தெரிந்து கொண்ட விஷயம் இது. மடிராஜனுக்குத் தேவை கன்னி கழியாத உயர்ந்த ராஜ குலத்து இளம் பெண். இவள் பலிகொடுக்கப்பட்டால் சில தீய சக்திகள் இவனுக்கு அடங்குமாம்... காபாலிகர் நம்பிக்கை அது.''

''ஐய்யோ பாவம்... நரபலிக்காகவா இந்தப் பெண் இவ்வளவு பிரியமாக வளர்க்கப் படுகிறாள்...''

''நரபலி என்று குருதேவ் இவளை வளர்க்கவில்லைதான். ஆனால், இவளை விடப் பெரிய உதவிகளை அவர் காபாலிகர் மூலம் பெறுகிறார். அப்படிப் பெறுவதற்கு அவர்கள் கேட்பது



இந்தப் பெண்ணை என்றால் குருதேவ் அதற்கும் சம்மதம் தான்!''

''அப்படியானால்'' ஏதோ குறிப்பாகக் கேட்டான் காகடி...

''நீ நினைப்பது சரிதான் காகடி. அவளை விட பெரிய உதவி கிடைக்கும் போது அவள் பலி கொடுக்கப்படுவாள். நாளை நமக்கும் இதே கதிதான். நம்மைவிட பலசாலிகள் நாளை கிடைத்து விட்டால் நாமும் அவர்களுக்கு பலியாவோம்... புரிந்ததா?''

''புரிகின்றது... நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறாய்... சரி... உன் திட்டம் என்ன சொல்... நான் உனக்கு பூரண ஒத்துழைப்பு தருகிறேன்... என் பாதுகாப்பும் உனக்கு எப்போதும் உண்டு... சொல்..''

''பில்வண குருதேவின் நரபலி ஆசை நிறைவேறக் கூடாது... அதாவது... நிறைவேறாமல் நாம் செய்ய வேண்டும்...''

''எப்படி?''

''காகடி! மடிராஜன் காபாலிகன். ஆனால் அவன் ஜன்ம வைரியாகிவிட்டால் அவனிடமிருந்து எதிரிகளை யாரும் காப்பாற்ற முடியாது என்பது உனக்குத் தெரியும்... குருதேவுக்கும் தெரியும்... மடிராஜனை உடனடியாக பில்வண குருதேவுக்கு எதிரியாக மாற்ற வேண்டும்...''

காகடி அவசரப்படுத்தினான்.

''விஷயத்தைக் கடகடவென சொல்...''

''பில்வண குருதேவ் கன்னி கழியாத காத்யாயினியை பலி தருவதாகச் சொன்னதால் மடிராஜனும் தேவைக்கு மேலேயே உதவி செய்கிறான். நான் காத்யாயினியை கன்னி கழித்து விடுகிறேன். அவளுக்கு உயிர்ப்பிச்சை போடுகிறேன். பில்வண குருதேவையும் சற்று தூரத்தில் வைப்பேன்...''

''என்ன விளையாடுகிறாயா சாமுண்டர்ய... காத்யாயினியை தொட்டால் குருதேவ் உன்னை ஒரு கணம் உயிரோடு விடமாட்டார்...''

''அதற்குத்தான் உன் உதவி தேவை. நான் காத்யாயினியை மணம் செய்து கொள்கிறேன். விக்கில ராஜாவின் துணையோடு நீ பில்வண குருதேவிடம் பேசி என்னை

மருமகனாக ஏற்றுக் கொள்ள வைப்பது உன் கையில் உள்ளது. என்ன புரிகின்றதா? நான் காத்யாயினியை திருமணம் செய்து கொண்டால் மடிராஜனின் பார்வை காத்யாயினியின் மீதும் இராது... ஆனால் பில்வண குருதேவ் வாக்கு பொய்த்து விடும். நிரந்தரப் பகைவன் ஒருவரை நாம் மடிராஜனுக்குப் பரிசாக கொடுக்கிறோம்... இந்த நிலையில் பில்வண குருதேவ் இருக்கும்போது நம் நிலையில் நன்றாகவே இருப்போம். நம்மீது வீசப்பட்ட ஒரு கொடிய அம்பினை நாமே வீசியவனுக்கே திருப்பி விடுகிறோம்... என்ன சொல்கிறாய் காகடி...''

மிளகான் அதற்கும் மேலாக அங்கு இருக்கப் பிடிக்காமல் வந்து விட்டான். நடந்தவற்றை அவன் மளமளவெனப் பேசினாலும் அவன் குரல் ஏனோ குழைந்து போய் விட்டது.

''காளிங்கா... கேட்டாயா அந்தக் கொடியவர்கள் திட்டத்தை. அந்த கங்கைக் கரை இளவரசியை எப்போது கோதை வடிவில் கண்ணன் கோயில் வாசலில் பார்த்தேனோ அப்போதிலிருந்தே அவள் ஆண்டாளாகத்தான் என் கண்ணுக்குத் தெரிகிறாள். அந்த ஆண்டாள் உன்னிடம் ஏதோ பேசி உன் கையைப் பிடித்து இழுத்ததுகூட ஆண்டாள் கண்ணனின் கைத்தலம் பற்றுவது போல உணர்ந்தவன் நான்... அப்படிப்பட்ட இனிய மலரினை... சே... நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது...''

காளிங்கள் தலையை ஆட்டினான்.

''வைணவரே! அரசியல் நல்லவரையும் பொல்லாதவ ராக்கும்... அரசியலில் எதுவும் நடக்கும்... ஆனால் காத்யாயினியிடம் இதைச் சொன்னால் அவள் நம்ப மாட்டாள். நாம் ஏதோ நாடகம் நடத்துகிறோம் என்று சொல்வாள்...''

சோகமாய் சொன்னவனைப் பார்த்து ஆதரவாய்ப் பேசினான் மிளகாழ்வான்.

''எனக்கு அதுவும் தெரியும் காளிங்கா! நாம் எதைச் சொன்னாலும் அவள் எதிர்மறையாகவே செய்வாள் என்று. நானே இன்று அவளிடம் உன்னைப் பற்றி எவ்வளவு அழகாகப் புரியும்படி எடுத்துச் சொன்னேன் தெரியுமா... ஒன்றும் அறியாத குழந்தை போல அல்லவா முகத்தை வைத்துக் கொள்கிறாள்!''



''இன்று காத்யாயினியைப் பார்த்தீரா?'' ஆச்சரியம் அதிகமாக கேட்டாள் காளிங்கன்.

''ஆங்! சொல்ல மறந்து விட்டேனே காளிங்கா! அந்த கங்கைக்கரைப் பெண் திருமலையில்தான் இருக்கிறாள்'' என்று சொல்லிதான் காத்யாயினியை மலைவாழ் மகளிரோடு கோயிலருகே சந்தித்தது முதல் அந்த மாயமோகினி தன்னை ஏமாற்றி கடைசியில் திரும்பிப்பார்த்து சிரித்தது வரை கடகட வெனப் பேசினான். அசந்து போனான் காளிங்கன்... அப்படியானால்... அப்படியானால் தான் கோயில் உட்கட்டில் பார்த்தது அவளைத்தான். மலைவாழ்ப் பெண் உடையில் தான் கூடையுடன் பார்த்தேன்... திருவேங்கடவா இது என்ன மாயம்... அவள் எங்கே மறைந்தாள்?

தன் மனதுள் ஆயிரம் கேள்விகள் இருந்தாலும் மிளகானிடம் ஏதும் பேசாமல் அவனை அனுப்பிவைத்தான். காத்யாயினியை தான் கோயிலில் பார்த்ததைக் கூட அவன் யாரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை... அவள் பாதையிலேயே அவளை விட்டு பிடிக்க வேண்டும்... என்ன நினைத்து அவள் வந்தாளோ... யாருக்குத் தெரியும்...

மனதில் பலவிதக் கவலைகள் நிறைந்து காத்யாயினியை நினைத்து அவஸ்தைப் பட்டான். உறக்கம் அவ்வளவு எளிதாக வர மறுத்தது. அரைகுறை உறக்கத்திலும் அந்த சன்னியாஸினிப் பெண் வந்தாள்... அவன் மார்பு மீது புரண்டாள்... 'சீச்சீ.. என்னைத் தொடாதே.. நான் பில்வணனின் வளர்ப்பு மகள்...' என்றாள். சுகமான தென்றலை சுமந்து வந்தாள்... கோதை வடிவில் கொண்டை வைத்து குயில் போல் தமிழ் பாடினாள்... பிராம்மணப் பெண்ணாய் கதவருகில் வந்து 'மாமன் மகனே... மறந்தாயோ...' என்றாள்... மலை மகளாம் சீலை கட்டி 'ஏமாந்து போனாயோ' என்று எகத்தாளி செய்தாள்...

எப்போது அவனை உறக்கம் ஆட்கொண்டதோ தெரியவில்லை. அதிகாலை நேரத்தில் அவன் அறைக் கதவு தடதடவென தட்டப்பட்டது. சற்று எரிச்சலுடன் எழுந்து அரைக்கண் திறக்க அறைக்கதவை திறந்தவன் அங்கு மிளகாழ்வான் இருக்க முழுக்கண்களும் முழுமையாக திறந்தன. காரணம் மிளகாழ்வான் முகம் பேயறைந்தது போல இருந்தது.

''காளிங்கா! அபசாரம் நடந்து விட்டது... பெருமாள்... வேங்கடவன் தோள் சங்கும் சக்கரமும் மாயமாகி விட்டது. உன்னை உடனே அழைக்கிறார் ஆசிரியர்...''

தத்தித் தடுமாறி ஆழ்வான் கண்களில் கண்ணீர் வழிய பேசியது காளிங்கனை இதுவரை இல்லாத அளவு அதிர்ச்சிக்குக் கொண்டு சென்றது என்னவோ உண்மைதான்.

# 20

# 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ'

**அ**வந்திகா தான் அம்மங்காதேவியாரோடு சில நாட்கள் காஞ்சியில் இருந்து விட்டு வருவதாக சொன்னதும் தந்தையார் உடனே ஒப்புக் கொண்டது சற்று வியப்பை அளித்தது. சோழமகாதேவியார் தனிமையில் துயரப்படும்போது துணைக்கு ஆதரவாக இருக்கட்டும் என்று அனுப்பிவைத்தாரா அல்லது தான் எப்படியாவது முயன்று அதிராசேந்திரனை மருமகனாக ஆக்கிக் கொள்ளும் திட்டத்திற்குத் தடைக்கல்லாக இருக்கும் தன் பெண் சில நாட்கள் தன்னை விட்டு அகன்றால் கூட நல்லது என்று நினைத்தாரோ என்னவோ.

அவந்திகா தன்னை அந்த சோழ வீரன் நடுக்காட்டில் நடு இரவில் காப்பாற்றி அழைத்து வந்தது எப்போதும் நினைவை விட்டு அகலாமல் இருப்பது ஏன் என்று தன்னையே கேட்டுக் கொண்டாள். அவர்தான் காளிங்கன் என்று தெரியாமல் தான் தோன்றித்தனமாக அவரைப் பற்றியே உளறிவந்ததையும் கேட்டு அந்த மனிதர் தன்னை எப்படி நினைத்துக் கொள்வாரோ என்ற பயமும் வந்து விட்டதுதான். அவன் அவந்திகாவை அன்று காலை அம்மங்காவின் மாளிகையில் இறக்கி விட்டதும் அவள் செய்த முதல் செயல் அங்கிருந்து விலகி தன் தந்தையார் இருப்பிடத்தைத் தேடி உள்ளே நுழைந்ததுதான். தந்தையாரும் சக்கரவர்த்தியார் சவம் அருகில் இருந்தமையால் தன்னை ஒன்றும் கேட்கவில்லை யென்றாலும் சோழமகாதேவியின் முகத்தில் எப்படி விழிப்பது என்று கூட பயந்தாள்.



'எத்தனை அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு தன்னை ஏமாற்றிவிட்டார் அவர்...' என்று காளிங்கன் மீது அவ்வப்போது கோபப்பட்டாள். ஆனால் தவறு தன்னுடையதுதான். தான் மட்டுமே தன் கவலைகளை எல்லாம் சொல்லிக் கொண்டு வந்தோமே தவிர எங்கே அவரைப் பேசவிட்டோம்... வளவளவென பேசும் தன்னைப் பார்த்து 'வாயாடிப் பெண்' என்று நினைத்திருப்பாரோ என்னவோ... ஆனால் மனுஷன் வாயைத் திறக்கவே இல்லை... குறைந்தபட்சம் சோழ மகாதேவியாரின் பேச்சு வரும்போது தான்தான் அந்த செல்லப்பிள்ளை என்று சொல்லியிருக்க வேண்டாமோ... துருவித் துருவி தன்னைப் பற்றி இவள் என்ன நினைக்கிறாளோ என்று கேட்டாரே தவிர 'ஐய்யோ பாவம்... சின்னப்பெண்... கொஞ்சம் வாய்த்துடுக்கு அதிகம்...' என்று நினைத்து தன்னையும் அப்போதே வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாமோ... இரவெல்லாம் இவள் பேசட்டுமே என்று விட்டு விட்டு திடுதிடுப்பென காஞ்சி மாளிகை வந்ததும் 'இதுதான் சோழ மகாதேவியின் மாளிகை... நான்தான் அத்தையார் ஆட்டுவிக்கும் பொம்மை' என்று சொன்னால் யாருக்குத்தான் நெஞ்சம் கலங்காது.'

அவந்திகா கலங்கி விட்டது என்னவோ உண்மைதான். ஒருவேளை சோழமகாதேவி உண்மை அறிந்தபின் 'தன் தத்துப்பிள்ளையைப் பற்றி தத்துப் பித்து எனப்பேசும் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்... நினைக்கட்டுமே... நான் என்ன ஊரில் இல்லாத உண்மையையா சொல்லி விட்டேன்?... ஊர் என்ன சொல்லுமோ அதைத்தானே சொன்னேன்... நான் எதற்காக பயப்படவேண்டும்... ஆனாலும் சோழமகா தேவியார் அன்பே உருவானவர்... குழந்தை ஏதாவது உளறினால் அன்னை அடிப்பாளோ... மாட்டாள். அம்மங்கா தேவியார் அன்னையைப் போன்றவர்'

ஆனாலும் தந்தையாரின் சில நடவடிக்கைகள் அவள் கண்களுக்குத் தாறுமாறாக பட்டன. அவை வேறு அவள் உள்ளத்தை குடைந்து கொண்டே இருந்தன. அதிலும் முதல் நாள் இரவு தன் அன்னையிடம் தன்னைப் பற்றிப் பேசியதையும் ஒட்டுக் கேட்டபின் அவள் கண்கள் கலங்கிப் போய் கண்ணீரை தாரையாகப் பொழிந்தன.

தந்தை தன்னை எப்படியும் அந்தப் பாழாய்ப்போன சோழனுக்குத் தாரைவார்க்க சித்தமாக இருந்ததைக் கேட்டாள்.

பலமுறை முயன்றும் அதிராசேந்திரனை தனிமையிலே சந்திக்க முடியவில்லையாம்... யாராவது வேண்டாதவர்கள் அதுவும் சாளுக்கியர்கள் கூடவே இருப்பதால் சோழ அரசனை தனியே சந்திப்பதற்குள் தான் பட்ட கஷ்டங்களை விவரித்துக் கொண்டிருந்தார். கடைசியில் யாருமில்லாத வேளையில் அதிராசேந்திரனை சந்தித்ததாகவும் வேளை வரும்போது சாளுக்கியர் தொடர்பை அறுத்துக் கொள்ள முயல்வதாகவும் அதிராசேந்திரன் சொன்னாராம். தந்தையின் நண்பரான அதிகைமான் அரசரையே மாமனாக வரிப்பதாக வாக்கும் கொடுத்தாராம்... சில நாட்கள் பொறுத்திருக்கும் படியும் வேண்டிக் கொண்டாராம்.' இவர் சொல்ல சொல்ல தன் அன்னை வாயைத் திறந்து 'ஆ' வென கேட்டுக் கொள்வதையும் கவனித்த அவந்திகா தன் மனத்துள்ளேயே வெந்து போனாள். இவர்களுக்கு இருக்கும் ஆனந்தத்தில் முறைப்படி திருமணம் செய்விக்காமலே கூட அதிராஜேந்திரன் அரண்மனையில் விட்டு விடுவார்களோ என்ற பயமும் அவளுக்கு வந்துவிட்டது. தந்தையின் மனம் அறிந்தவள். தந்தையின் கூரிய அறிவு எப்படியெல்லாம் சிந்திக்கும் என்பதையும் அனுபவத்தில் பார்த்தவள்தான் அவந்திகா. அதிராசேந்திரன் மனம் மாறி சாளுக்கியர்களை உதறிவிட்டு தங்களோடு முழுவதும் ஐக்கியமாகும் திட்டத்தில்தான் அவர் எதிர்காலமே இருக்கிறது. ஒருவேளை சாளுக்கியர் கை ஓங்கி விட்டால் கொங்கு நாட்டு சிங்கமான இவரை கூண்டில் அடைத்து தள்ளிவிடக்கூடாதல்லவா... அவர் நெருக்கடி அவந்திகாவுக்கு நன்றாகவே புரிந்தது.

ஆனாலும் இந்த விளையாட்டில் அவள் பங்கு கொள்ள விரும்பவில்லைதான். சாதாரணமாக அன்று இரவு காளிங்கனுடன் தனியே நடந்து வரும்போது அவன் சொன்ன அறிவுரை அவளுக்கு நினைவுக்கு வந்தது. ''பெண்கள் எப்போதுமே மென்மையாக இருக்கக்கூடாது... சந்தர்ப்பம் கிடைக்கும்போது உங்களுக்குச் சாதகமாக அதைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்'' சரியான அறிவுரை. அவர் மனது தங்கம் மட்டுமல்ல... அவர் அறிவும் பளிச்சென வேலை செய்கிறது. தன் கதையைக் கேட்டு அவர் என்னமாய் உருகிவிட்டார்... அப்படி உருகியதால்தானே ஓடும் குதிரையை விட்டு இறங்கி தன்னை ஆறுதல் படுத்தினார்...

சோழ ராஜகுடும்பத்தில் அதிராஜேந்திரனைப் போன்ற கோழைகள் ஒருபக்கம் என்றால் இவரைப் போன்ற நல்லமனம் கொண்டவர்களும் இருக்கிறார்கள். அவர் நல்லவர் மட்டுமல்ல... பண்பாளர்... ஒரு பெண்... அதுவும் இளவரசி ஒருத்தி தனியாக இரவில் தன்னுடன் பயணம் செய்கிறாள் என்பதில் அவர் எந்த வித்தியாசமும் படாமல் ஒரு தோழியைப் போல அல்லவா பழகி ஆறுதல் கூறினார். அவர் அல்லவா சிறந்த ஆண்மகன். தான் இரவில் குதிரையில் பயணம் செய்தபோது அவர் மேலேயே சாய்ந்து தூங்கி விட்டோமே... எத்தனை பண்பாளராக இருந்தால் தன்னை காஞ்சி வரை கொண்டு விடுவார்... ஆம்... நாம் அவரிடம் சொன்னபடி அவர் சிவனாரின் பூதங்கணங்களுள் ஒருவர்தான். இல்லையென்றால் இவர் ஏன் அந்தக் காட்டில் நம்மைக் காப்பாற்றவேண்டும்.



அவந்திகா முடிவு செய்து விட்டாள். முதலில் தந்தையையும் தாயையும் விட்டுப் பிரிய வேண்டும்... அதை வெகு விரைவில் செய்ய வேண்டும்... அதற்கு ஒரே வழி சோழ மகா தேவியார்தான். அவர் என்ன நினைத்தாலும் சரி... அந்தத் தாயிடம் சரணடைவோம். சிறிது நாட்கள் அவருடன் கழிப்போம். எப்படியும் காளிங்கன் அங்குதான் இருப்பார். அவர் ஏற்கனவே தன் கதையைத் தெரிந்தவர்தானே... அன்று நாம் அறியாமல் மளமளவென சோழ குடும்பத்தைப் பற்றி அவரிடம் பேசியதும் ஒரு விதத்தில் நல்லதுதானே... தன்னைப் பற்றி முழுதும் தெரிந்தவர் தனக்கு எப்படியாவது உதவி செய்து தன்னை இந்த இக்கட்டிலிருந்து மீட்டு விடுவார்... அதுதான் சரி... அதுதான் சிவன் சித்தமும் கூட...

முடிவு செய்தவள் எப்படி தந்தையிடம் கேட்பது என்று தெரியாமல் தவித்தாள். அன்னை மூலமாக தந்தையை அணுகலாமா என்று நினைத்தவள் அந்தத் திட்டத்தை கைவிட்டாள். நேரடியாகவே தந்தையை கேட்டுவிடுவது என்ற முடிவுடன் தந்தையை சந்தித்தவளுக்கு அங்கே அன்னையும் கூடவே இருந்தது சற்று ஆச்சரியத்தையும் அதே சமயம் இதுகூட நல்லதுதான் என்ற நினைப்பையும் ஒருங்கே தந்தது. தந்தை மறைமுகமாகவே தன்னைத் தாக்கிப் பேசினாலும் சற்றுப் பொறுத்துக் கொண்டாள்.

''உன் பெண் இப்படி வாய் கிழியப் பேசிக் கொண்டிருந்தால் உனக்கு மருமகன் கிடைப்பது அபூர்வமாகப் போய்விடும்... முதலில் தந்தையை எதிர்த்துப் பேசுவதை நிறுத்தச் சொல்... அப்போதுதான் ஒரு பெரிய தேசத்துக்கே மகா ராணியாகும் தகுதியும் வந்து சேரும்...''

அன்னையிடம்தான் சொன்னார் என்றாலும் அவந்திகாவும் விடவில்லை. அதே அன்னையிடம் சொன்னாள்,

"முதலில் அவர் பெண்ணின் மனது என்னவென்று விசாரிக்கச் சொல்லுங்களம்மா... நான் இப்போது அவரை ஏதாவது அவமரியாதைப்படுத்தினேனா... இந்தச் சமயத்தில் என் திருமணம் அவசியமில்லை என்றுதானே சொன்னேன்... அது தவறா?

"தவறா... சரியா என்பது பெண்ணைப் பெற்றவர்கள் தானே சொல்ல வேண்டும்... அப்படி நம்மை சொல்ல விடாமல் உன் பெண்ணே பெரிய மனுஷியாகப் பாவித்து சொல்லிவிட்டால் எப்படி?"

"நான் ஒன்றும் பெரியதனமாகப் பேசவில்லை... சற்று என் மனதையும் புரிந்து கொள்ளுங்கள் என்றுதான் சொல்கிறேன்..."

அன்னை அப்போது முன் வந்தாள்.

"பெற்றவர்க்கு இல்லாத கவலை உனக்கெதற்கடி? உன் மனதில் என்ன என்றுதான் எடுத்துச் சொல்லேன்..."

"என் மனம் என்னிடம் இல்லை அம்மா!"

அதிகைமான் கோபமானான்.

"என்ன சொல்கிறாய்?"

"பார்த்தீர்களா அம்மா... எதைப் பேசினாலும் கோபப்படும் இவரிடம் என்ன சொல்வது... இவர் மகள்தான் நானும்... அதனால் எனக்குக் கோபம் வருகிறது....."

"சரி... சரி... ஒழுங்காக சொல்..." அன்னை சற்றுப் பரிந்து பேசினாள். அவளுக்குத் தெரியும்... எந்த சந்தர்ப்பத்தில் எப்படிப் பழக வேண்டுமென்று...

"ஆமாம் அம்மா... என் சிந்தை முழுவதும் சிவனும் அந்த சிவனின் பூதகணங்களும் குடியிருக்கிறார்கள். அவர்கள் என் மனதில் புகுந்து கொண்டு 'ஏன் கலியாணம் செய்து கொள்கிறாய்... தில்லைக்கு வா... அங்கு ஆனந்த நடனம் ஆடும் கூத்தனைப் பார்க்க வேண்டாமோ' என்று மனம் முழுவதும் நிறைந்து கேட்கிறார்கள்..."



தந்தையார் திடீரென சிரித்தார்... அவர் அப்படி சிரித்ததால் சூழ்நிலையும் சற்று சகஜமானது. தன் மகளைப் பார்த்து நேரடியாகவே பேசினார்.

"அப்படி உன் சிந்தையில் அவர்கள் கேட்டால் நீயும் சரியென்றே பதில் சொல்... ஆனால் கல்யாணம் செய்து கொண்டு ராஜமரியாதைகளுடன் வருவதாகச் சொல்..."

மறுபடியும் சிரித்தார்.

"அப்படியானால் என் திருமணத்திற்கு என்னைக் கேளாமலே முடிவு எடுத்து விட்டீர்களா தந்தையே...'

சோகமாய் வந்த கேள்வியில் சற்று மாறித்தான் போனார் அதிகைமான் அரசர். அவளிடத்தில் சென்று அவள் முகத்தை வாஞ்சையுடன் தூக்கி அவள் நீள் விழிகளைப் பார்த்தார்.

"அவந்திகா! கவலைப்படாதே... நீ சிறு பெண்... உனக்கு இந்த வயதில் ஏதும் புரியாது. சற்று வயதானபின் என்னைப் பற்றியும் நான் இன்று எடுத்துள்ள முடிவுகளையும் நினைத்துப் பார்த்தால் உனக்குப் புரியும். தந்தை எதிர் காலத்தைப் பற்றி எப்படியெல்லாம் நல்லவிதமாக கணித்துள்ளார் என்பது. நாட்டிலே சாளுக்கிய எதிரிகள் ஒழிய வேண்டும்... அவர்களின் அதர்ம செயல்கள் ஒடுக்கப் படவேண்டும். அதே சமயம் நீ இந்த சோழ வள நாட்டின் மகாராணியாக வீற்றிருப்பதும் நான் காணும் கனவுகளில் ஒன்று. அப்போது இன்னும் பெரிய அளவில் உன்னால் சிவ சேவை புரியமுடியும்..."

தந்தைக்கு நாடுதான் முதலில் பிறகுதான் மகளும் அவள் மனதும்... அதற்காக தன்னை பலியாக்க தயங்கவே மாட்டார். அவள் கண்களில் நீர் வர ஆரம்பித்தது. ஆனாலும் துடைத்துக் கொண்டாள்.

"தந்தையே! என் மனம் சற்று குழப்பம் அடைந்துள்ளது. இந்த நிலை மாறவேண்டும்... எனக்கு சற்று அமைதி தேவை. என்னை சிறிது நாட்கள் சோழமகா தேவியார் ஆதரவில் விட வேண்டும்... பிறகு அவன் சித்தம்... அவன்... என் சிவன்... என்ன சொல்கிறானோ அதுதான் நடக்கும்..."

துயரமாக சொன்னவள் அந்தத் துயரத்துடனேயே அதிகை மானைப் பார்த்தாள். அவன் சற்று நேரம் சிந்தித்தான்.

''அவந்திகா! சோழமகாதேவியார் கூட நீ வந்திருப்பதாக அறிந்ததும் உன்னை வரச் சொல்லி ஆணையிட்டார்கள். நான் என் கவலையில் மறந்தது வாஸ்தவம்தான். அவர்களிடம் வளர்ந்த குழந்தை நீ... உனக்கும் சற்று மாற்றம் தேவைதான்... உன விருப்பப்படியே செய்...''

சொன்னவர் மேலும் உறுதியுடன் பேசினார்.

''ஆனாலும் அவந்திகா! நீ இங்கு நடந்தவற்றை சோழமாதேவியிடம் சொல்லி கலவரம் உண்டாக்காதே... அவர்கள் எண்ணம் வேறு... அது பலிக்குமா... என்பது எனக்குத் தெரியாது... ஒரு வேளை பலித்தால் எப்படி முடியும் என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. அவர் நம் மரியாதைக் குகந்தவர். அந்த மரியாதையை உன் சுயநலத்திற்காகப் பயன்படுத்தாதே''

தந்தையைக் கோபமாகப் பார்த்தாள். 'எது சுயநலம்... என்னை சிறு புழுபோல மதித்து அந்த சிறு புழு மடிந்தால் கூட மடியட்டும்... மீன் பிடிபடவேண்டும் என்று முயல்கிறீர்களே... அது சுயநலமில்லையா?'

கேட்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவந்திகா ஏதும் கேட்கவில்லைதான். இவர்களின் சுயநலப் பிடியில் இருந்து விடுபட்டால் போதும் என உணர்ந்தவள் தன் தந்தைக்கு ஏதும் பதில் சொல்லாமலே அகன்றாள்.

அவளுக்கு தன் நிலை புரிந்தது. தன் வாழ்க்கையும் புரிந்தது. உப்பு சப்பில்லாத வாழ்க்கை. சோழமகாதேவியாரிடம் இருக்கும் நான்கைந்து நாட்கள் வேண்டுமானால் சற்று சுவையாகத் தென்படலாம்... அதுவும் காளிங்கன் அங்கு இருப்பதால்... ஆனால் அதிகைமான் அரசரின் ஆதரவு எதிர்பார்க்கும் அவர்கள் கூட தன் விஷயத்தில் தந்தையை எதிர்த்துப் பேசமுடியாதுதான். சே... தன் வாழ்க்கை இவர்கள் கையில் விளையாடும் பொம்மைதான்.

என்ன செய்வது? சிவன் ஆட்டுவிக்கும் வழியில் செல்வதுதான். காளிங்கனை 'அவன் அத்தையார் ஆட்டுவிக்கும் பொம்மை என்று அவனிடமே சொன்னது அவந்திகாவின் நினைவுக்கு வந்தது. 'அவருக்குக் கிடைத்த அன்பான அத்தையார் போல் கிடைத்தால் யார்தான் ஆடமாட்டார்கள். 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே..' என்று அப்பர் சுவாமிகள் கூட பாடினார். தன்



வாழ்க்கையையும் இப்படி அன்பாகவும் ஆனந்தமாகவும் ஆட்டி வைத்தால் எத்தனை நன்றாக இருக்கும். சந்தோஷமாக ஆடுவேனே...'

ஆனால், அடுத்த இரண்டு நாட்கள் கழித்து அவள் மெய்யாகவே ஆனந்த நடனம் ஆடத்தான் செய்தாள். அவள் வாழ்க்கையில் சோகம் அடியோடு மாறி சுவை கூடியது. அருமையான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அவளுக்கு அந்த சந்தர்ப்பம் காளிங்கன் மூலம் வந்தபோது ஆண்டவனே அதைக் காட்டியதாக உணர்ந்து பாடவும் தொடங்கிவிட்டாள்.

'சிவம் காட்டி தாட்டாமரை காட்டி, தன் கருணை தேன் காட்டி நாட்டவர் நகை செய்ய' என்று திருவம்மானை ஆடியவள் தன் நாட்டவர் மட்டுமல்ல மற்றவரும் நகைசெய்யும் அந்தச் செயலையும் மனமாறச் செய்தாள்.

## 21

# பெண்பால் உகந்தாடும் பெரும்பித்தன்

**தா**ன் கேட்டுக் கொண்டதுக்கிணங்க உடனடியாக அவந்திகாவை தன்னுடன் அழைத்துச் செல்லாமல் காஞ்சியில் தன்னிடத்தே அனுப்பி வைத்தமைக்கு அதிகைமானுக்கு மனதுள் நன்றி சொன்னாள் சோழமகாதேவியான அம்மங்கை. சுட்டிப் பெண்ணான அவந்திகாவை அம்மங்கைக்கு சற்று அதிகமாகவே பிடிக்கும். சிறு குழந்தையாய் ஒருமுறை அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டபோது அவள் சுட்டித்தனம் அம்மங்காவை வெகுவாகக் கவர்ந்ததால் தானே அக்குழந்தையை சிறிது காலம் வளர்ப்பதாக சொல்லிவிட்டு தனக்குப் பெண் குழந்தை இல்லையே என்ற குறையை நீக்க வந்த அவந்திகா மீது தாய்ப் பாசத்தை ஏராளமாக பொழிந்து வளர்த்தவள். சிறு வயதிலேயே எதையும் அறியத்துடிக்கும் ஆவல் அதிகைமான் புத்திரிக்கு அதிகமாகவே இருந்தது. அம்மங்கையும் அதை ஆதரித்தவள்தான். பெண்குழந்தைகள் எல்லோருக்குமே அவந்திகாவைப் போல அறிந்து கொள்ள துடிக்கும் ஆவலும் ஞானமும் இருக்க வேண்டும் என்று நினைப்பவள். அந்தச் சின்னஞ்சிறு பருவத்தில் இசகுபிசகாக

சில கேள்விகளை அவந்திகா கேட்டாலும் நிதானமாகவே பதில் சொல்லிப் பழக்கப்பட்டவள்தான் அம்மங்கை. அப்படிப்பட்ட பெண் குழந்தை இப்போது வளர்ந்த பெண்ணாய் அழகுகளை எல்லாம் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு தன் முன்னால் நின்று கொண்டு கேள்வி கேட்டதில் ஏகப்பட்ட மகிழ்ச்சி சோழமகாதேவிக்கு.

''அவந்திகா! என்ன கேட்டாய்? உன்னைப் பார்த்துக் கொண்டே இருந்ததில் நீ கேட்டதை கவனிக்கவில்லை...'' சிரித்துக் கொண்டே அவந்திகாவை இழுத்து அவள் உச்சி முகர்ந்தாள். தான் வளர்த்த குழந்தையல்லவா இவள்?

''அம்மா! இந்தப் பெண்கள் எல்லோரும் ஆண்கள் கையில் விளையாட்டுப் பொம்மைகள்தானோ?''

''எதற்கு உனக்கு திடீரென இப்படி ஒரு சந்தேகம்...?''

''என் கேள்விக்கு பதில் சொல்லுங்களேன்... நீங்களும் ஒரு பெண்தானே... நீங்கள்தான் சரியாக சொல்வீர்கள்...''

அம்மங்கை சிரிப்பதை நிறுத்திவிட்டு அமைதியாகவே பதில் சொன்னாள்,

''அவந்தி! நீ கேட்பது ஒரு வகையில் உண்மைதான். பெண்கள் எல்லோருமே இந்த ஆண்களின் கைப்பொம்மைகள் தான். அவர்கள் ஆடு என்றால் ஆட வேண்டும்... பாடு என்றால் பாட வேண்டும்... ஓடு என்றால் புருஷன் வீட்டுக்கு ஓட வேண்டும்...''

அவந்தி அந்த அம்மாவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''அம்மா... நான் பார்த்த பெண்மணிகளில் நீங்கள் ஒருவர்தான் உண்மையான அன்பு கொண்டவர்...''

சிரித்தாள் அம்மங்கை.

''ஆமாம்... இந்த நூற்றுக்கிழவி வாழ்க்கையில் ஆயிரக்கணக்கில் பெண்களை பார்த்துப் பேசி பழகினவள்... என்னை மட்டும் தேர்ந்தெடுத்து விட்டாள்...''

''ஏன் நான் சொல்வதிலே என்ன தவறு?''

''தவறு சரியெல்லாம் நான் பேசவில்லை. அவந்தி! நானே கேட்கவேண்டுமென்று நினைத்தேன்... ஏன் உன்முகம் வாடி இருக்கிறது? தந்தை ஏதாவது கடிந்து கொண்டாரா... இதோ



பாரம்மா... பெண்ணானாலும் ஆணானாலும் பெரியவர்கள் சொல்படி நடப்பதுதான் அவர்கள் பண்பு...''

ஒரு நல்ல தாய்க்கு உள்ள அறிகுறியுடன் அறிவுரையாய் அம்மங்கையின் வாயிலிருந்து வந்தாலும் கோபம் வந்து விட்டது அவந்திகாவுக்கு. தன் அழகு முகத்தை உம்மென வைத்துக் கொண்டு விடுவிடுவென உள்ளே சென்று விட்டாள்.

சோழமகாதேவிக்கு அவந்திகாவை நன்றாகவே தெரியும். தான் கேட்ட கேள்விக்கு சரியான பதில் கிடைக்காவிட்டால் அவ்வளவுதான்... முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு தன்னை ஒளித்துக் கொள்ளும் பழக்கம் உள்ளவள். வந்ததும் வராததுமாய் அந்தச் சிறு பெண்ணை நோகடிப்பதில் விருப்பமில்லை அவளுக்கு. அவளை சமாதானப்படுத்தவே முயன்றாள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏதோ ஒரு விழாவுக்கென பழையாறை அரண்மனைக்கு வந்தபோதும் இப்படித்தான் நடந்தது அவள் நினைவுக்கு வந்தது. அப்போது இளமை வெளிச்சத்துக்கு வந்த சமயத்தில் அவந்திகா இருந்ததால் பழையாறை அரண்மனைப் பெரிசுகள் சில அவளை காளிங்கனுக்கு முடிச்சுப் போட்டுப் பேசிக் கொண்டிருந்தன. நல்ல காலம்... அந்த சமயத்தில் காளிங்கன் ஈழப் போரில் கலந்து கொள்ள ஆசிரியரால் அனுப்பப்பட்டிருந்ததால் அவந்திகாவின் கண்ணுக்குத் தெரியவில்லைதான்.

ஆனால், இதைக் கேட்ட அவந்திகா அந்த வயதில் அம்மங்கையைக் கேட்ட கேள்வி விசித்திரமாக இருந்தது. பெண்கள் நன்றாக வளருமுன்பே இன்னொரு ஆணுடன் முடிச்சு போடுவது எந்த விதத்தில் சரி என்பதுதான் அவள் கேள்வி. சாதாரணமாக பெண்கள் கூச்சப்படும் திருமண விஷயங்களை சர்வ சாதாரணமாகவும் தைரியமாகவும் பேசும் அந்தச் சிறு பெண்ணை மிகவும் ரசித்தாள் அம்மங்கா. ஆனால் அப்போது அந்தக் கேள்விக்கு அம்மங்கா சரியாக பதில் சொல்லவில்லைதான். காரணம் அம்மங்காவின் வாழ்வே ஓர் உதாரணம்.

அப்படிப்பட்ட அவந்திகா அப்போது வைத்துக் கொண்டதைப் போலவே இப்போதும் முகத்தை தூக்கிக் கொண்டு உள்ளே போனதும் அவளைப் பின் தொடர்ந்து பிடித்து நிறுத்தி தன் மஞ்சத்தில் அருகே உட்கார வைத்துக் கொண்டாள்.

''ஏனடி! அம்மாவிடமே உனக்குக் கோபமா?''

''நான் யார் உங்கள் மீது கோபப்பட?''

''புரிந்துவிட்டது... பூப்போன்ற உன் மனதை யாரோ காயப்படுத்தி இருக்கிறார்கள். என்னிடம் விஷயத்தை விட்டுவிட்டு உன் கவலைகளை எல்லாம் மறந்துவிடு...''

''அம்மா! பெண்கள் வளர்ந்துவிட்டால உடனடியாக திருமணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா?''

மறுபடியும் கேள்வி கேட்டவளை அன்புடன் பார்த்தாள்.

''திருமணம் என்பதை பெண்களுக்குத் தண்டனையாக ஏன் நினைக்கிறாய்? நீ குழந்தையாய் பிறந்தாய்... சற்று வளர்ந்தாய்... கல்வி கற்றாய்... பருவம் வந்தது... திருமணம் செய்து கொள்கிறாய்... திருமணம் என்பது நீ பொறுப்புகளை ஏற்று நடத்த வைக்கும் ஒரு சம்பவம்.... பொறுப்புகளைக் கண்டு அஞ்சுபவர்கள் கோழைகள். இது ஆண் பெண் இருவருக்குமே பொருந்தும்...''

''அம்மா... நீங்கள் சொல்வது சரிதான்... ஆனால், உங்கள் வாதம் சாதாரண குடியில் பிறந்து வளர்ந்த பெண்களுக்குத்தான் பொருந்தும்... ஆனால், அதிருஷ்டக்கட்டையான அரசவம்சத்தில் பிறந்த நம் போன்றவர்களுக்கு எப்படியம்மா பொருந்தும்... நமக்கு இங்கே என்ன பொறுப்புகள் கொடுக்கப்படுகின்றன? நாமெல்லாம் அரசியல் சந்தையிலே விலைபொருள். யாருக்காவது யாருடைய ஆட்சியாவது நிலைக்க வேண்டும் என்றால் அதற்கு முதல் பலி அரசகுலப் பெண்கள்தான். அதிலும் கலியாணத்திற்காக காத்து நிற்கும் என் போன்ற பேதைப் பெண்கள்தானே...''

திகைத்துப் போய்விட்டாள் அம்மங்கா. 'இந்தச் சிறிய வயதில் எத்தனை ஆழமாக சிந்திக்கிறாள் இவள்? இவளைப் போல் அந்த வயதில் ஒருவேளை தானும் சிந்தித்திருந்தால் எப்படியெல்லாம் திசை மாறியிருக்குமோ தன் வாழ்க்கை... சிந்தியாமல் அத்தை மகனுக்குத் தாரை வார்க்கப்பட்டு, சிந்திக்காமல் அந்த அத்தை மகனோடு வேங்கியில் வாழ்ந்து, சிந்திக்காமல் அந்த அரசன் செய்த மாயலீலைகளை தெரிந்து கொள்ளாமல் போனதால்தானே அவளும் இத்தனை நாட்கள் இப்படி வேதனையாய் வாழ்க்கையைக் கழித்திருக்கிறாள். நல்ல வேளை புரிந்து கொள்ள தந்தை இருந்தார்... தன்னையும் தான் பெற்றெடுத்த மகனையும் பார்த்துப் பாசத்தை சிறிது காலமாகவாவது பொழிந்தார்... ஆனால் எனக்கு கிடைத்தது போல அவந்திகாவுக்கு அமையுமா? அவந்திகாவின் சொல் எத்தனை உண்மையானது? அவந்திகா உண்மையிலேயே அறிவில் சிறந்தவள். இப்படி அறிவுள்ள பெண்களை நாம் கலங்கவிடக் கூடாது! அவள் தலையைக் கோதி தன் மேல் சாய்த்துக் கொண்டாள்.

''அவந்தி! நடந்ததைச் சொல்லம்மா... அம்மா... அம்மா வென வாயாறக் கூப்பிடுகிறாயே... அந்த அம்மாவுக்கு உள்ளதைச் சொல்... என்னால் முடிந்த உதவிகளை செய்கிறேனடி!''

சென்ற சில நாட்களாக காஞ்சியில் தன் தந்தை நடத்திவரும் அரசியலையும் அந்த அரசியலில் தன்னை பலிகடாவாக்குவதையும் கண்ணீர் விட்டுக் கொண்டே சொன்னாள்.

''அம்மா! சோழ அரசர் உங்கள் தமையன் மகன்தான். ஆனாலும், எனக்கு அவரைப் பிடிக்கவில்லை. இந்த அரசியலும் பிடிக்கவில்லை. அதைவிட உங்கள் மடியிலேயே உயிர் விடுவது நல்லது...''

கண்ணீர் ஆறாகப் பெருக ஆரம்பித்ததை உணர்ந்த அம்மங்கை அவள் கண்ணீரைத் துடைத்தாள். இப்படிப் புரட்சியாக இருந்தாலும் மனதில் உள்ளதை உள்ளபடியே பேசும் அவந்திகாவின் ஆசைப்படியே விட்டு விட வேண்டும்...

''சரி! அவந்திகா... உனக்குப் பிடிக்காதவனை மறுக்க உனக்குப் பூரண உரிமையுள்ளது... இந்த விஷயத்தில் இந்த அம்மா அவந்திகாவின் பக்கம்... என்ன சரிதானா?''

சடாரென அவந்திகா எழுந்து அம்மங்காதேவியின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். அவள் முகம் ஆனந்தத்தை அதிகமாய் காட்டியது. நடு வகிடு எடுக்கப்பட்டு தழையத் தழைய வாரிய கூந்தலுடன் தன் காலில் விழுந்தவளை தொட்டு தூக்கினாள்.

கொங்கு நாட்டில் பிறந்த இந்தத் தங்கச்சிலைதான் எத்தனை அழகு. சற்று அகலமான உதடுகளும் கூரான நாசியும் நெற்றியில் சிறு திலகத்துடன் அதற்கும் மேல் திருநீறினை சிறுகோடு போல வைத்துக் கொண்டது கூட இவளுக்கு அழகாகத்தான் இருக்கிறது. தன் கழுத்தில் கிடந்த

முத்துமாலை ஒன்றினையும் சட்டென எடுத்து அவள் அழகு கழுத்தில் போட்டு அழகு பார்த்தவள் தன் கண்ணே பட்டு விடுமோ என்ற வகையில் அவள் கன்னத்தை இரு கைகளினாலும் வழித்து கைகளையும் சொடுக்கி உதறினாள்.

அழகான இந்தப் பெண்ணை - வெள்ளை உள்ளம் கொண்ட இந்தக் கன்னியைத் திருமணம் செய்பவன் யாராக இருந்தாலும் அவன் பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்தவனாகவே இருக்க வேண்டும். ஏனோ அவளுக்கு காளிங்கனின் நினைப்பு தட்டியது. காளிங்கனுக்கு ஏற்றவள் இவள்தான். ஆனால், பழையாறையில் இவள் மனம் ஒருமுறை புண்படுத்தப் பட்டது நினைவுக்கு வரவே அவளிடம் அவனைப் பற்றிப் பேசவில்லை. இப்போதுதான் இவள் மலர்ந்த புஷ்பம் போல முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாள். மறுபடியும் திருமணம்... காளிங்கன் என்ற பேச்சை எடுத்தால் வாடிவிடுவாள்...

''அவந்தி! நீ என்னுடனே இருந்துவிடு! என்னுடனே பழையாறை வந்து விடு... உன் தந்தைக்குப் பதில் சொல்வது என் பொறுப்பு... சரி... உன் எண்ணத்தை சொல்லம்மா...''

''அம்மா! எனக்குத் தில்லைக்கு செல்ல வேண்டும்போல் உள்ளது. 'பிறப்பறுத்து ஆண்டு கொண்ட கூத்தனை நாத்தழும்பேற' வாழ்த்திப் பாடவேண்டும் போல் ஒரு ஆவல். தந்தைக்கு அரசியல் பாட வேண்டும்... எனக்கு சிவன் நாமம் பாடவேண்டும்... எங்களுக்குள் வேற்றுமை இதுதான். தில்லைக் கூத்தனைப் பாடுவதில் கிடைப்பது ஒருவகையான ஆனந்தம்... ஆனால், தந்தையின் அரசியலில் நான் பலியாக வேண்டும் என்பது அவர் அரசியல் சித்தாந்தம்...''

அம்மங்கை புன்னகை புரிந்தாள்

''ஓஹோ! இன்னொரு மங்கையர்க்கரசியார் உருவாகு கிறாரோ... அந்த மங்கையர்க்கரசிக்கு மதுரையம்பதி என்றால் உயிர். இந்த மங்கையர்க்கரசிக்கு தில்லைச் சிற்றம் பலமுடையான் போலும்... அவந்தி! இந்த விஷயத்தை நான் காளிங்கனிடம் சொன்னால் என்ன பதில் தருவான் தெரியுமா?''

காளிங்கன் பெயரைக் கேட்டதும் அவந்திகாவுக்கும் உற்சாகம் தொற்றத் தொடங்கியது.. அது அவள் கண்களிலும் அழகாகவே தெரிந்தது. ஆனால், அம்மங்கா மேலும் பேசினாள்.



''அவனும் நீ பாடியது போலவே மாணிக்கவாசகர் பாடலை திருப்பிப் பாடுவான்...''

''என்ன பாடுவாராம்?''

**''தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்**
**பெண்பால் உகந்தாடும் பெரும்பித்தன் காணேடி...**

என்று உன்னைக் கேலி செய்வான்...

அவந்திகா சற்று வெட்கப்பட்டாள். வெட்கப்பட்டதால் அவள் முகம் சிவந்தது. சிவந்த அந்த அழகான முகத்தை மெல்லத் தடவினாள் அம்மங்கை.

''ஆமாம்... அவந்தி! காளிங்கனுக்கு சிவனையும் பிடிக்கும்... உன்னைப் போன்ற சிவப்பித்துக்களையும் பிடிக்கும்...''

அப்படி சொன்னதும் அவந்திகாவின் நீள் விழிகள் யாரையோ தேடின... அம்மங்கா மறுபடி சிரித்தாள்.

''அச்சப்படாதே! அவன் இங்கு இல்லை. நீ தில்லைக்குச் செல்ல ஆசைப்படுகிறாய்... அவன் திருவேங்கடம் சென்றுள்ளான். உனக்கொரு விஷயம் தெரியுமா அவந்தி? எல்லாக் கோயில்களிலும் படுத்துக் கிடக்கும் பெருமாள் திருவேங்கடத்தில் நின்ற நிலையில் அருள் தருகின்றான். அதே போல் எல்லாக் கோயில்களிலும் அருஉருவமாய் இருக்கும் சிவபெருமான் தில்லையிலே அழகே உருவாய் ஒரு கால் ஊன்றி நடனம் ஆடுகின்றான். ஆனால், இந்தப் பொல்லாத பக்தர் கூட்டம் மட்டும் இவர்களிடத்தே வேற்றுமை பார்த்து இல்லாததையும் பொல்லாததையும் கற்பிக்கின்றது...''

''ஆமாம் அம்மா... ஊரெங்கும் இதே பேச்சுத்தான்... இதே சண்டைதான். அவர் அவர்களுக்குப் பிடித்ததை செய்து கொண்டு பிடித்தவர்களை வணங்கினால் ஏன் தடுக்க வேண்டும்?''

''அவந்தி! எனக்குப் பிடித்ததை நான் உன்னிடத்தில் திணிக்க முயல்வது தவறுதான். உன் தந்தைக்குப் பிடித்ததை உன்னிடத்தில் திணிக்கிறார்... அல்லவா...? அதைப் போலத்தான் இந்த சைவர்களும் வைணவர்களும்... ஆனால், இவை சாதாரணமாகத் தொடங்கி வன்முறையில் முடியும்போதுதான் விபரீதமாகப் போகிறது...''

அம்மங்கா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அறை வாயிலில் தாதி ஒருத்தி வந்தாள். யாரோ ஒரு வைணவர் திருவேங்கடவன் மலையிலிருந்து அவசர செய்தி கொண்டு வந்திருப்பதாகவும் சோழமகாதேவியாரை சந்தித்தே ஆக வேண்டுமென பிடிவாதம் செய்வதாகவும் அந்தப் பெண் சொன்னவுடன் அந்த வைணவனை வெளி அறையில் காத்திருக்கச் சொல்லி விரைந்தனர் இருவரும்.

வந்தவன் மிளகாழ்வான்தான். அந்த வைணவன் கண்கள் கலங்கியும் சிவந்த முகம் வாடியும் இருந்ததை கவனித்த அம்மங்கா ஏதோ விபரீதமாக ஊகித்து கவலையில் ஆழ்ந்தாள். அந்தக் கவலையுடன் அவன் கையில் இருந்து வந்த ஓலையைப் படித்ததும் அதிர்ச்சியிலும் ஆழ்ந்து போனதால் அவந்திகா அந்த ஓலையை வாங்கிப் படித்தாள். ஆசிரியரின் ஓலை அது. கவலையைத் தரும் ஓலையில் கவலைகளை ஏராளமாக அள்ளித் தெளித்து விட்டுக் கடைசியில் கவலைப்பட்டு அவஸ்தைப் பட வேண்டாம் என்றும் எழுதப்பட்டிருந்தது. அவந்திகா அந்த வைணவனைப் பார்த்தாள்.

''வைணவரே! சற்று விவரமாகச் சொல்கிறீரா... பெருமாளின் சக்கரமும் சங்கும் எப்படி மாயமானது? மாயமானால் போகட்டும்... ஆனால் ஏன் பழி காளிங்க ராஜாவின் மேல் போடப்பட்டுள்ளது'' சற்று கோபமாக வந்தது அவள் குரல்.

''அதுதான் எங்களுக்கும் தெரியவில்லை தாயே! அநாவசியமாக காளிங்கன் மீது பழியை சுமத்தி விட்டார்கள். முதல்நாள் இரவில் நெடுநேரம் ஆலயத்துள் தனியாக உலாவிக் கொண்டிருந்தாராம்... அதனால் இரவில் நேரம் பார்த்து சுவரேறி கள்ளச் சாவி போட்டு திறந்திருக்கலாம்... அப்படித் திறந்து சன்னிதிக்குள் நுழைந்து சக்கரமும் சங்கையும் மாயம் செய்து விட்டாராம்... இப்படி ஒரு பகுதியினர் குற்றம் சுமத்தினாலும் வேறு சிலர் இது காளிங்கன் வேலையே இல்லை என்றும் திருவேங்கடவனே தான் சிவன்தான் என்பதை உலகுக்கு நிரூபிக்க சங்கினையும் சக்கரத்தையும் தன்னுள்ளே மாயமாக்கி மழுவும் நாகாபரணமும் மட்டும் வெளிக்காண்பித்து சிவமாகி விட்டதாக சொல்கிறார்கள்... இதெல்லாம் நாலூரான் செய்யும் வேலை தாயே! அந்த மதத்துரோகியை கண்டதுண்டமாக வெட்டினாலும் பாவமில்லை.''



மிளகாழ்வான் வெடித்தான். ஆனால், அம்மங்கை சற்று தீனமான குரலில் கேட்டாள்.

''ஆசிரியர் என்ன சொல்கிறார்... என் காளிங்கன் தற்சமயம் எங்கே இருக்கிறான்?

''ஆசிரியர் என்ன தாயே! நானே சொல்கிறேன். காளிங்கன் ஒரு குற்றமும் அறியாதவர். சம்பவம் நடந்த இரவு வெகு நேரம் அவருடன் இருந்து பேசிக் கொண்டிருந்தேன். இவையெல்லாம் நாலூரான் திட்டம் தாயே... அந்த இரவு ராட்சஸர்களான காபாலிகர்கள் நடு இரவில் புகுந்து இந்த அட்டூழியத்தை செய்துவிட்டு இப்படி விஷயத்தை திசை திருப்புகிறார்கள். ஆனால், நாடெங்கும் ஏற்கனவே குழப்பங்கள் உருவாக ஆரம்பித்து விட்டன தாயே... திரு வேங்கட கூட நகரிலே ஏராளமான அளவில் வந்து கரு நாட்டு சைவர்களும் வடநாட்டு வேதியர்களும் குவிந்த வண்ணம் உள்ளார்கள் தாயே... யாரோ திட்டமிட்டு செய்யும் செயல்தான்... இல்லையென்றால் இத்தனை விரைவாகவா இந்தச் செய்தி பரவும்...''

''ஆசிரியர் வேறு எதாவது சொன்னாரா?''

''ஆசிரியரும் சரி... காளிங்கனும் சரி... உங்களை கவலைப்படாமல் இருக்குமாறு வற்புறுத்திச் சொல்லச் சொன்னார்கள்...''

''காளிங்கன் எந்த நிலையில் இருக்கிறானோ... 'அன்பே சிவம்' என்று நாளும் வேதம் ஓதுபவனுக்கு இப்படி ஓர் அவப்பெயரா? வைணவரே! காளிங்கன் ஏன் இன்னமும் அங்கே இருக்க வேண்டும்... அங்கே என்ன செய்கிறான்?''

''அம்மா! எங்கள் பெருமாளின் தோளில் எப்படியும் வரும் திருத்துவாதசி உற்சவம் ஆரம்பிப்பதற்குள் சங்கு சக்கரத்தைப் பொறுத்தி அந்த சங்கு சக்கரதாரியை அழகு பார்ப்பதாக வாக்கு கொடுத்துள்ளார் காளிங்கன். அப்படி அந்த சங்காரும் சக்கரத்தாழ்வாரும் கிடைக்காவிட்டால் அந்தத் திருமலை உச்சியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொள்வதாகவும் சாலவை சபையில் சொல்லியிருக்கிறார். அந்தச் சமயத்தில் ஆசிரியர் மட்டும் அங்கு இல்லை யென்றால் நிலைமை தலை கீழாக மாறி இருக்கும். ஆசிரியரும் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வதாகவும் உற்சவம் ஆரம்பிப்பதற்குள் நிலைமை சீரடையும் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்...''

உள்ள நிலை தெளிவாகப் புரிந்தது இரு பெண்களுக்கும். அபயன் இந்தச் சமயத்தில் காஞ்சியில் இல்லாதது கூட கையொடிந்தது போல உணர்ந்தாள் சோழமகாதேவி. 'என் பலராமன் பாவம்... எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறானோ...' என மனத்துள் கதறியவள் ஒரு முடிவுக்கு வந்தாள். ஒருவர் கஷ்டத்திலும் துயரத்திலும் வாடும்போது அவர்களுக்கு ஆறுதலாவது சொல்ல வேண்டும்... பக்கத்திலே துணையாக இருந்தால்கூட போதும்... ஆம்... காளிங்கனுக்கு ஆதரவாகவும் ஆறுதலாகவும் அவன் பக்கத்திலே இருப்பது என்பதுதான் அவள் முடிவு. அந்த முடிவினை அவந்திகாவுக்கு தெரிவித்தபோது தானும் வந்தே தீருவேன் என்று அடம்பிடித்தாள்.

அவந்திகாவின் உள்ளம் இரண்டு விதமாய் சிந்திக்கத் துவங்கியது. தன் நெஞ்சத்தைக் கவர்ந்தவன் பெருமாளின் சங்கையும் சக்கரத்தையும் கவர்ந்திருப்பான் என்பதை அவளால் நம்பமுடியவில்லைதான். ஆனால், இவை எல்லாவற்றையும் விட இன்னொரு கேள்வி மனதுள் எழுந்ததையும் அவளால் தடுக்க முடியவில்லை.

ஒருவேளை திருவேங்கடமுடையான் உண்மையிலேயே சிவம்தானோ என்ற கேள்விதான் அது.

தில்லையிலே ஒரு பாதம் ஊன்றி நின்ற கூத்தன் திருவேங்கடத்தில் இரு பாதம் வைத்து நிற்கின்றானோ என்னவோ... 'கோனாகி யான் எனது என்று அவரைக் கூத்தாட்டுவான் ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனோ' என்று திருவாசகத்தின் மெய்ப்பொருள்தான் திருவேங்கடமுடையானோ... இருக்கலாம்... ஏன் இருக்கக்கூடாது... போய்ப் பார்த்தால்தானே தெரியும்... அம்மாவுக்குத் துணையாக சென்று காளிங்கனையும் பார்த்தது போல இருக்கும்...

அவந்திகாவும் ஒரு முடிவெடுத்தாள்.

# 22

# திருட வந்தவனிடம் தானே திருடு போவது?

"மேரு மலையால் ஆழ்கடலைக் கடைந்து அமுதம் எடுத்து அதை உண்டு அழிவிலாப் பேறு பெற்ற தேவர்கள் எல்லாம் ஆனந்த மோகத்திலே ஆடிக் கொண்டிருந்தார்கள். திருமாலும் பிரம்மனும் இந்திரனும் வெற்றி தான் ஒருவானல் மட்டும் வந்தது என்று பெருமையாக பேசிக் கொண்டும் தங்கள் பலத்தை பெரிதாக பீற்றிக் கொண்டும் ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் மத்தியிலே திடீரென ஒரு பேரழகன் தோன்றினான். அவர்கள் நடுவே அமர்ந்தான். தன்னருகே சாதாரண ஒரு துரும்பு ஒன்றினை நட்டான். இந்தத் துரும்பை யார் அசைக்க வல்லாரோ அவரே இந்த மாபெரும் வெற்றிக்கு காரணம் என்றும் அவர்களுக்குள்ளே சவால் வைத்தான். தேவர்கள் அக்கினியை ஏவி எரிக்க முயன்றனர். துரும்பு அசையாமல் எரியாமல் அப்படியே கிடந்தது. இந்திரன் வாயுவை கடும் புயலாக அனுப்பி வைத்தான். ஊஹூம்... அவன்தான் அசைந்து ஆடினானே தவிர அந்தத் துரும்பினை அசைக்க முடியவில்லை. இது என்ன மாயம்... இது எப்படி... என்று திருமாலும் பிரம்மனும் திகைத்தனர். திடீரென அந்தப் பேரழகனைக் காணோம்... அவன் நட்டு வைத்த துரும்பும் காணவில்லை... அப்போது உமையம்மை அவர்களிடையே தோன்றினாள். ஒரு துரும்பை அசைக்கமுடியாத நீங்களா அமுதத்தைக் கொடுத்தது என்று சொல்லி சிரித்து விட்டு மறைந்தாள்... தேவர்களெல்லாம் வெட்கமடைந்தார்கள்."

இப்படி சொல்லிக் கொண்டே போனார் அந்தப் பண்டிதர். திருவேங்கடகூடம் நகரத்திலிருந்து காட்டுக்கும் மலைப் பாதைக்கும் செல்லும் சந்திப்பு அந்த இடமாக அமைந்ததால் மக்கள் போக்குவரத்தும் கடைகளும் அதிகம் இருந்தன.

"ஆகையினால் மகாஜனங்களே! இந்தக் கதை ஏதோ நான் இட்டுக் கட்டி மற்ற தெய்வங்களை குறை கூற வேணுமென சொல்லவில்லை. கேனோப நிடதத்தில் சொல்லப்பட்ட

இந்த நிகழ்ச்சியை வேதம் படித்தவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆகையினால் ஜனங்களே! நன்றாக புரிந்து கொள்ளுங்கள். சிவம்தான் நமக்குத் தலை. சிவாத் பரதரம் நாஸ்தி...''

அந்தப் பண்டிதரைச் சுற்றியும் ஜனங்கள் மிக உன்னிப்பாக அவரைக் கேட்டுக் கொண்டிருந்ததாலோ என்னவோ அவர் மேலும் குதூகலித்து பேசிக் கொண்டிருந்தார்.

''நீங்களனைவரும் மிகவும் புண்ணியம் செய்தவர்கள்... ஏன் தெரியுமோ... சிவனின் ஆதி இருப்பிடமான மேருமலையின் ஒரு பகுதிதான் இந்தப் பரந்த திருவேங்கடமலை... புராண காலத்திலே வாயுவுக்கும் ஆதிசேஷனுக்கும் நடந்த போரிலே மேரு மலையின் ஒரு பகுதி பூலோகத்திலே விழுந்து விட்டது. அதுதான் திருவேங்கடமலை. அந்த மலையிலே காட்சி தரும் வேங்கடமுடையான் கூட சாட்சாத் சிவம்தான். அவன் மலை அடிவாரத்திலே இருக்கும் திருவேங்கடகூட வாசிகளே... நீங்கள் புண்ணியம் செய்திருந்தால்தானே இங்கே பிறக்க முடியும்? என்ன நான் சொல்வது சரிதானே...''

சபையோரை கேட்பது போல் சுற்றியுள்ள கூட்டத்தைக் கேட்டதும் ஜனங்கள் கலகலத்தனர். தம்மை புண்ணியவந்தன் என்று சொல்லும் அந்தப் பண்டிதனை வாழ்த்தி ''அஹோ... அஹோ...'' என்று கூச்சலிட்டனர். பண்டிதர் உற்சாகமாகி விட்டார்.

''பொதுஜனங்களே! எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்... 'சிவாத் பரதரம் நாஸ்தி...' மறுபடியும் சொல்லுங்கள்.''

கூட்டம் அவர் சொல்லுக்கு ஆடிக் கொண்டிருந்தது. அப்போதுதான் கடைசியிலிருந்து முண்டியடித்துக் கொண்டு முன்னே வந்த ஒரு வைணவன் கூட்டத்தைப் பார்த்து இரு கைகளையும் உயரத்தூக்கி நிப்பாட்டினான். பிறகு அந்தப் பண்டிதரைப் பார்த்து சற்று உரக்கக் கேட்டான்.

''பண்டிதரே! சிவாத் பரதரம் நாஸ்தி என்று சொல்லிவிட்டு அந்த சிவன் வாழும் மேருமலை இரண்டு சாதாரண தேவர்களின் சண்டையில் உடைந்து கீழே விழுந்து விட்டதாகச் சொல்கிறீர்கள்... வாஸ்தவம் தான்... அது ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம்தான். ஆனால் ஒன்று... இதிலிருந்து சிவன்கூட அந்தத் தேவர்களைப் போல் சாதாரணமானவன்தான். இல்லையென்றால் இவர்கள் இருவர் போரில் சிவன் போன்ற சாதாரணமானவர்கள் வசிக்கும் மேருமலை உடைந்து பூமியில் விழுமோ...''



அந்த வைணவன் கேட்டவிதம் கூட்டத்தினருக்கு சிரிப்பை வரவழைத்தது. பண்டிதரின் முகம் சுண்டிப் போனது. அந்த வைணவனைப் பார்த்தார்.

''இதோ பாரப்பா... உன்னைப் பார்த்தாலே சிவத்து ரோகியாக தெரிகிறது. உன்னைப் போன்ற மூடர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்லவேண்டியதில்லை. இருந்தாலும், இந்த மகாஜனங்கள் முன்பு ஒரு சந்தேகத்தை வைத்து விட்டாய்... அதனால் பதில் சொல்கிறேன் கேள். இந்தத் திருவேங்கடமலை மேருமலையின் ஒரு பகுதி என்று புராணம் சொன்னது. தேவர்களுக்குத் தலைவனான மகாதேவன் பூலோக வாசிகளுக்கு காட்சி கொடுக்க வேண்டுமென்றே இப்படி வாயுவுக்கும் ஆதிசேஷனுக்கு வந்த சண்டைமூலம் அந்தப் புண்ணிய மேருமலையின் ஒரு சிறிய பகுதியை விழச் செய்து திருவேங்கடமுடையான் ரூபத்தில் அந்த மலையிலேயே நின்ற நிலையில் காட்சி தரும் சிவரூபத்தில் எழுந்தருளியுள்ளான்.''

மறுபடியும் ஜனங்கள் மத்தியில் கரகோஷம் பலமாக எழுந்தது. மறுபடியும் வைணவன் கையசைத்து நிறுத்தினான்.

''அப்படியா... இதுநாள் வரை திருவேங்கடமுடையான் இந்த மேருமலையான வேங்கடமலையிலே சங்கு சக்கர தாரியாகத்தானே இருந்தார்... அதை நமது மகாஜனங்களும் இதுநாள்வரை பார்த்துக் கொண்டுதான் வந்தார்களாம். ஆனால் அது என்னப்பா திடீரென சங்கு சக்கரம் எல்லாம் மாயம் செய்து சிவமாகி விட்டார்? சங்கையும் சக்கரத்தையும் திருடி மாயம் செய்தால் பெருமாள் இல்லையென்று ஆகிவிடுமா? என்ன ஜனங்களே... கேளுங்கள் இவரை?''

இந்தச் சமயங்களில் கூடும் ஜனங்களை மட்டும் சரியாக நம்பமுடியாதுதான். எந்தச் சமயத்தில் எப்படி மாறுவார்கள் என்று சொல்லமுடியாது. இதுவரை பண்டிதரை 'அஹோ... ஆஹா' வென பாராட்டி அவருக்கு தலையாட்டிய அதே மகாஜனங்கள் வைணவன் வாதத்திலும் நியாயத்தைக் கண்டதோ என்னவோ அவனையும் ஆரவாரித்து அஹோ போட்டு வைத்தனர். அவர்களுக்கு இருவர் வாதங்களிலும் அதிகச் சுவையும் ஏற்பட்டுவிட்டது. யாரை யார் மிஞ்சுவார்கள் என்று எதிர்ப்பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால், மக்கள் ஆசை அதிக சமயம் நீடிக்கவில்லை. வைணவன் பேச்சைக் கேட்டதும் பண்டிதருக்குக் கோபம் வந்துவிட்டது.

''ஏய் மதத்துரோகி! வாதம் செய்வதானால் சரியாக வாதம் செய்... சங்கு சக்கரம் வைத்து ஆதிகாலத்தில் சிவத்தை மறைக்க வைத்தது நீங்கள்... அதனால்தான் சிவம் இப்போது அதை மறைத்து மாயமாக்கிவிட்டது...''

''கண்ணால் பார்த்தவன் போல் பேசாதே... சைவர்கள்தான் மாயம் செய்து விட்டார்கள். ஒன்று உன்னைப் போல வேஷதாரிகள் திருடியிருக்க வேண்டும்... இல்லை உங்கள் ராஜவம்சத்தான் அந்தக் காளிங்கன் திருடியிருக்க வேண்டும்... ஆக திருட்டு நடந்துள்ளது... திருடியது யார் என்றுதான் சரியாக தெரியவில்லை...''

''யாரையடா வேஷதாரி என்று சொன்னாய்... நீதான் வேஷம் போட்டு இத்தனை நாட்களில் சிவனை திருமால் என ஊரை ஏமாற்றி வந்தீர்கள்...''

என்று சொன்ன பண்டிதன் சடாரென அந்த வைணவனின் முன் குடுமியைப் பிடித்து இழுத்து அவன் முகத்தில் குத்தும் விட்டான். அடிதடிக்கு அந்த வைணவனும் விருப்பம் உள்ளவன் போலும். அடித்த பண்டிதரின் கையைப் பிடித்து முறுக்கி அவர் முகத்திலும் திருப்பிக் குத்துவிட பண்டிதரின் பல் கீழே விழுந்து அவரைப் பார்த்து சிரித்தது. விடவில்லை அவர்... அவரும் திருப்பி தாக்கினார். இதற்குள் கூட்டமும் ஆள் பார்த்து கூட்டணி சேர்ந்தன. ஒரு பக்கம் வைணவன் சொன்னது சரியென்று சண்டைபோட இன்னொரு அணி பண்டிதனுக்குப் பரிந்து சண்டை போட்டது. இதற்குள் பண்டிதரைக் காப்பாற்ற சிலரும் வைணவன் வாங்கும் அடி பொறுக்காத சிலரும் கைகலப்பில் இறங்கி பிறகு கம்பெடுத்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள ஆரம்பித்தனர்.

சற்று நேரத்திற்கு முன் அமைதியாக இருந்த அந்த சந்திப்பில் திடீரென வன்முறை நிகழ ஆரம்பிக்கவே யாரை யார் ஆதரிக்கலாம் என்ற விவஸ்தை இல்லாமலே அடிபட்டவர் அடித்தவனைத் தாக்க ஆரம்பித்து ரணகளமாக்கினர். இதற்கிடையில் சிலர் அங்கிருந்த கடைகளுக்குள் புகுந்து அங்கு கிடந்த கத்திகளை எடுத்துக் கொண்டு சண்டைபோடவே கடைக்காரரும் கடைகளை



சடசடவென மூடி சண்டையிட்டோரை தங்கள் கையில் கிடைத்தவற்றால் தாக்கி கலவரத்தை மிகப் பெரிதாக்கினர். சிலர் கோபத்தால் பக்கத்தில் கிடந்த பாறாங்கற்களால் தாக்க அடிப்பட்டவர்கள் நசுங்கி துடிதுடித்து சாவது கூட கொடூரமாக இருந்தது.

நல்லகாலம் போல் எங்கிருந்தோ வந்த சிறு குதிரைப் படை வீரர்கள் தங்கள் கத்தியை சுழற்றிக் கொண்டே கலவரம் செய்தவர்களை ஒடுக்க ஆரம்பித்ததால் அவர்கள் ஓட ஆரம்பித்தனர். அங்கிருந்த வன்முறையாளர்களை காயப்படுத்தி அப்பாவி ஜனங்களை அப்புறப்படுத்தினர். அப்படி அப்புறப்படுத்தும்போது அந்த பண்டிதரும் வைணவரும் கூட மடிந்து கிடந்தனர். ஆனால், மடிந்த நிலையில் அவர்கள் இருவர் சிந்திய ரத்தமும் ஒன்றாக கலந்து ஒன்றுடன் ஒன்று உறைந்து போனது அவர்களுக்கு இனித் தெரியாதுதான் என்பது என்னவோ உண்மைதானே.

வீரர்கள் கடைக்காரர்களை கூப்பிட்டு இடத்தை சுத்தம் செய்ய ஆணையிட்டார்கள். சற்று நேரத்தில் ராஜ குடும்பம் வரப்போவதாகவும் அவர்கள் வருவதற்குள் உயிரிழந்தோரை அப்புறப்படுத்தவும் சப்தம் போட்டு மளமளவென்று வேலை வாங்கினர்.

அவர்கள் சொன்னபடி சற்று நேரம் கழித்து அந்த முச்சந்திக்கு சோழர்கள் படை சூழ அம்மங்கா தேவியும் அவந்திகாவும் வந்து சேர்ந்தனர். அங்கிருந்து திருவேங்கட மலை செல்லும் காட்டுப் பாதைக்கு திரும்பியவர்கள் முச்சந்தி முழுவதும் கிடந்த கத்திகளையும் இரத்தக் கறைகளையும் கவனித்து விட்டு அங்கே நின்றனர். அதற்குள் அங்கு வந்து கலவரத்தை அடக்கிய குதிரைப்படைத் தலைவன் அம்மங்கா தேவிக்குத் தலை வணங்கினான்.

''சோழ மகாதேவி சிரமத்திற்கு மன்னிக்க வேண்டும். எங்களுக்கே தெரியாமல் நடந்து விட்ட மதச்சண்டை. நாங்கள் சமயத்திற்கு வந்து தடுத்திராவிட்டால் மேலும் பல உயிர்கள் பலியாகி இருக்கும். நாங்கள் சம்புவரைய அரசரால் சமீபத்தில்தான் அனுப்பப்பட்டு இந்தப் பகுதியின் காவல் பொறுப்பை ஏற்றுள்ளோம். இனி எவ்வித பாதகமும் நேராதவாறு பாதுகாப்போம் தாயே... தாங்களும் இனி பாதுகாப்போடு பயணம் செய்யலாம்..''

''என்னைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள். இதோ இந்த மண்ணில் கலந்த ரத்தத்திற்காக கவலைப்படுங்கள். ஐயோ... தெய்வமே... எத்தனை அப்பாவி மக்கள் பலியானரோ...''

அவந்திகா அவதிப்பட்ட அம்மங்காவுக்கு ஆறுதல் சொன்னாள், ''அம்மா! நாம் சற்று ஓய்வெடுத்து விட்டு பிறகு மலை ஏறுவோம். தங்களுக்கு சற்று ஓய்வு தேவை!''

அந்தப் படைத்தலைவன் மறுபடி வணங்கினான்.

''ஆம் தேவி! தங்களை திருவேங்கடகூட விருந்தினர் மாளிகையில் சற்று ஓய்வெடுத்துக் கொண்டு புறப்படுமாறு ஆசிரியர் அவர்கள் கேட்டுக் கொள்ளச் சொன்னார்கள்...''

''ஆசிரியரா? அவரை மலை மேலல்லவா எதிர் பார்த்தோம்...''

அம்மங்கா ஆச்சரியமாகக் கேட்டாலும் பதில் பணிவாகவே வந்தது அந்தப் படைத்தலைவனிடமிருந்து.

''தேவி! முதலில் உங்களை இந்த நகர எல்லையிலேயே எதிர் கொண்டு மாளிகைக்கு அழைத்து வரத்தான் ஆணையிட்டார் ஆசிரியர். ஆனால், நடுவில் இங்கே நடந்த கலவரம் எங்களை சற்று தாமதப்படுத்திவிட்டது. ஆசிரியர் தங்களுக்காக விருந்தினர் மாளிகையில் காத்திருப்பதாக சொல்ல சொன்னார்கள் தேவி!''

அவந்திகா கூட ஆச்சரியப்பட்டாள். அந்த ஆசிரியர் எமகாதகப் பேர்வழி போலும். கவலைப்படவேண்டாம் என்று பலமுறை கூறியே நம்மை கவலைக்குள்ளாக்கிவிட்டு இப்போது நம் வரவையும் எதிர்நோக்குகிறாரோ... ஆசிரியரே இப்படியென்றால் அந்த ஆசிரியரின் சீடர் எப்படியோ... அன்று இரவு தன்னைப் பார்த்துப் பேசி பழகியதை எல்லாம் நினைவு வைத்திருப்பாரோ... நினைவு வைத்து 'இந்த சிவப் பைத்தியம் வருகின்றதே... அவளுக்காக தாமும் கீழே காத்திருப்போமே' என்று அவரும் ஆசிரியருடன் அடிவாரத்தில் காத்திருப்பாரோ... ஒருவேளை இவரே பெருமாள் சங்கையும் சக்கரத்தையும் மாயம் செய்து விட்டு ஒன்றும் தெரியாதவர் போல் வேடம் பூணுகிறாரோ என்னவோ...''

அவந்திகா நினைத்தபடி சீடன் அங்கு காணப்படவில்லை. அவள் நீண்ட கருவிழிகள் தேடிப்பார்த்து அந்த மாயச்சீடன் அங்கு இல்லாததை தெரிந்து கொண்டனதான். அவள் இமைகள் கூட சற்று படபடத்து அந்த ஏமாற்றத்தை வெளியே காண்பித்தது. ஆனால், ஆசிரியர் என்று மரியாதையுடன் அழைக்கப்பட்ட பிராம்மணர் அங்கு வாயிலிலேயே வந்து வரவேற்றார். நீண்ட உருவம்... ஆனால் புன்முறுவலே வாராதோ என்று காணப்பட்டாலும் களையான முகம், கட்டுக்குடுமி முடியப்பட்டு நெற்றி முழுவதும் வெள்ளைத் திருநீறு பளபளக்க நிமிர்ந்து நின்ற மார்பில் முப்புரிநூல். அதைத் தடவிக் கொண்டே பேசிய ஆசிரியர் அவந்திகாவைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.



''நம் வாதவூரான் சொல்லத் திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது'' என்று புகழப்பட்ட திருவாசகத்தில் மனதைப் பறிகொடுத்தவள், திருநீறணிந்த சிவனடியாரான இந்த ஆசிரியரிடம் தானும் ஒரு மாணவியாக சேர்ந்து திருவாசகம் முழுதும் பயிலவேண்டும் என்ற தணியாத ஆசையும் அவள் மனதில் உருவானது.

ஆனால், திருவாசகம் சொல்லும் நிலையில் இல்லாத அந்த ஆசிரியர் சோழமகாதேவியிடம் அரசியல் பேசிக் கொண்டிருந்தார். மலையேறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருப்பதாகவும் சற்று நேர ஓய்வுக்குப் பின் புறப்படலாம் என்று சொன்னாலும் அவர் வாயில் தன் சீடரைப் பற்றி ஒரு தகவலும் வாராதது அவந்திகாவுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. அவள் அம்மங்காவிடம் மட்டும் மெதுவாகவே கேட்டாள்,

''அம்மா! திருமலையில் நாம் ஏறியதுமே திருவேங்கட முடையானை தரிசிப்போமா அல்லது தங்கள் செல்வ மகனைப் பார்த்த பிறகு செல்வோமா?''

அவள் கேள்வியின் உள்ளர்த்தம் அம்மங்காவுக்கு புரிந்ததோ என்னவோ!

''நாம் மலையேறிய பிறகு அந்த ஈசன் அழைத்தால் உடனே பார்த்துவிட்டால் போகிறது...''

அவள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. மெல்ல ஆசிரியரிடமே கேள்வி கேட்டாள்,

''ஆசிரியர் அவர்களே! தங்களைப் பற்றி நான் செவியாறக் கேள்விப் பட்டுள்ளேன். ஆனால் தற்சமயம்தான் தங்களைக் காணும் பாக்கியம் பெற்றவளானேன். தாங்கள் தவறாக நினைக்காத பட்சத்தில் தங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?''

கருமேகத்தைக் கிழித்து மூன்றாம் பிறை சந்திரன் வருவது போல ஆசிரியரின் முகத்தில் புன்முறுவல் ஒன்று பளிச்சென வந்தது.

''கேளம்மா! எனக்குத் தெரியும் பட்சத்தில் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எனக்குத் தெரியாத பதிலுக்கான கேள்வியை நீ கேட்காமல் இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை...''

ஆசிரியரின் பதில் அவளுக்குப் பிடித்திருந்தது.

''ஆசிரியரே! திருவேங்கடமலையில் இரண்டு கால்களுடன் நின்ற திருக்கோலத்தில் இருப்பது சிவம்தானா?''

சென்ற சில நாட்களாக இந்த விஷயத்தில் நாடே அல்லோலக் கல்லோலப்பட்டு இருக்கும்போதும் தன்னிடத்தில் யாரும் இந்த கேள்வியைக் கேட்டதில்லை. ஏன்... தானே கூட இப்படிப்பட்ட சிந்தனையில் மனதினை செல்ல விடவில்லை. மனதுக்குள் ஆச்சரியம் இருந்தாலும் அதை வெளிக்காட்டாமலேயே அந்த இளம்பெண்ணைப் பார்த்தார்.

''பெண்ணே! நீயே தேடித் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு கேள்விக்கு எளிதாக என்னிடம் பதில் தேடுகிறாய். திருவேங்கடமுடையான் அவன் அவன்தான். அந்த அவன் யாரென்று எத்தனையோ மகான்கள் அறிவதற்காக முயன்று கொண்டுதான் இருக்கிறார்கள். நானும் அவர்கள் வழியில் செல்ல முயல்கிறேன். விடை கிடைத்தால் முதலில் உன்னிடமே சொல்கிறேன்...''

ஆசிரியரின் பதிலில் அவளுக்கு சுவை அதிகமானது. ஆனால், அம்மங்கா அவளை அதிகம் பேசவிட வில்லை.

''ஆசிரியரே! அதிகைமான் புத்திரிக்கு உங்கள் பதில் பிடித்துதான் இருக்க வேண்டும். அவளுக்குத் தேவையான பதில் கிடைக்காவிட்டால் அவள் முகம் போகும் போக்கைக் காணவேண்டுமே... இருந்தாலும் இவள் கேள்விகளுக்கு நிறைய சமயம் வேண்டும். ஆண்டவன் அருளால் அனைத்தும் சீரானவுடன் நிதானமாகவே ஆசிரியரும் பதிலளிக்கட்டும். நாங்கள் இப்போதே மலையேறினால்தான் இருள்வதற்குள் கோயிலை அடையலாம்!''



ஆசிரியரிடம் விடைபெற்றவுடன் அவர்கள் குழு திருமலைப் பயணத்தைத் தொடங்க ஆரம்பித்தது. அன்று மாலையே திருவேங்கடமுடையான் மலைக்கும் வந்து சேர்ந்துவிட்டார்கள். அவந்திகா இந்தமுறை எப்படியும் சீடனை அங்கே எதிர்பார்த்திருந்தாள். அவள் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. முகமெல்லாம் ஆனந்தம் பொங்க காளிங்கன் தன் அத்தையம்மாவின் காலில் பணிந்து வரவேற்றான். அவன் பக்கத்தில் காஞ்சியில் பார்த்த அந்த வைணவனும் இருந்தான்.

திருமலையில் அந்த அந்திமாலைப் பொழுதில் சுகமான வாடைக்காற்று எங்கும் பரவ, முகத்தில் ஒளி தெரிய அந்த சங்கு சக்கரத்திருடன் தன் இதயத்தையும் சேர்த்து திருடும் முயற்சியில் இறங்கிவிட்டதாக உணர்ந்ததால் அவந்திகாவின் அழகு முகம் வெட்கத்தால் அந்திச் சூரியனின் முகமாகி அம்மங்காவின் பின்னால் ஒளிந்து கடைக்கண்ணால் அந்தத் திருடனைப் பார்த்துக் கொண்டே இருந்தது. திருட வந்த திருடனுக்குத் தானே திருட்டுப் போகும் விந்தையை அவள் மனமும் செய்து கொண்டுதான் இருந்தது.

''அத்தையம்மா! மிளகாழ்வார்தான் சொன்னார்... உங்கள் கூடவே சிவப்பித்து தொத்திக் கொண்டு வருகிறதென... அந்தப் பெண் இவள்தானா... பெருமாளை அலங்காரப் பிரியர் என்பார்கள்... அதைப் போல் அந்த சிவன் அழகான பெண்களின் பிரியர் போலும்!''

சட்டென தன்னழகை தனக்குப் பிடித்த விதமாக வர்ணித்த அந்தக் கள்ளனை ஒருமுறை நேரடியாகப் பார்த்தவள் சற்று தலையைக் குனிந்து கொண்டும் அம்மங்காவின் பின்னே மறைந்து கொண்டும் பேசினாள்.

''அம்மா... உங்கள் செல்ல தத்துப்பிள்ளை இடத்திற்கேற்ற வாறு நாடகம் போடுவாரோ?''

''ஏனடி அப்படி கேட்கிறாய்? என் பலராமனைப் பார்த்தால் நாடகக்காரனாகவா உன் கண்ணுக்குத் தெரிகிறது...''

அம்மங்கா சற்று கோபமாகக் கேட்டாலும் அவள் உதடுகளில் என்னவோ புன்னகைதான் மலர்ந்திருந்தது. அவளும் இவர்கள் சண்டையை ரசிக்கிறாளோ என்னவோ...

''இல்லையில்லை... இந்த மலை, பெருமாள் மலை என்று எல்லோரும் சொல்கிறார்கள்... இடத்துக்குத்

தகுந்தவாறு பெருமாளை உசத்தியாகச் சொல்லிவிட்டு ஏதோ சிவபெருமானையே அறியாதவர் போல 'அந்த சிவன்' என்று அன்னியமாக சொல்கிறாரே... அது எந்த வகையில் சேர்த்தியாம்... புரிந்து விட்டது..''

''என்ன புரிந்து விட்டதாம்...''

''சங்கு சக்கரத்தைக் களவாடியதாக ஊரெல்லாம் சொல்கிறார்களென்று அவர்களுக்கு ஏற்றவாறும் இருக்கட்டுமே என்று இதோ அந்த வைணவரோடு வைணவத்தில் சேர்ந்து விட்டாரோ என்னவோ...''

சிரித்தாள் அழகாக. உற்சாகம் காளிங்கனுக்கும் தொற்றிக் கொண்டுவிட்டது.

''எனக்கும் புரிந்துவிட்டது. நான் வைணவத்தில் எங்கே சேர்ந்துவிடப்போகிறேனோ என்று பயந்துதான் சிவப்பித்தான அதிகைமான் புத்திரி என் அத்தையோடு இங்கே மலையேறி தடுக்க வந்து விட்டார் என்பதுதான்...''

பேசிக்கொண்டே திருமலையில் அழகாக கட்டப் பட்டிருந்த ராஜகிருஹம் மாளிகையை வந்தடைந்தனர். வீரர்களுக்குக்கூட தக்க வசதிகள் ஏற்கனவே செய்யப் பட்டிருந்ததால் அரச குடும்பத்தாரை தனியாக விட்டுவிட்டு மற்றவர்கள் விடை பெற்றனர். அம்மங்காவுக்கும் அவந்திகாவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறைகள் நன்றாகவே அலங்கரிக்கப்பட்டிருந்தன. மிளகான் மாளிகை வெளியேயே காத்திருக்க அம்மங்காவும் அவந்திகாவும் உள்ளே நுழைந் தனர். அத்தையார் உள்ளறைக்கு காலடி வைத்ததும்தான் தாமதம். சட்டென அவந்திகாவின் கையைப் பிடித்த காளிங்கன் சற்று பின்னேயும் இழுத்தான்.

சற்றே இருள் கவியும் நேரம் என்றாலும் தீபங்களின் ஒளிக் கற்றைகள் பரவிக் காணப்பட்டதால் வெட்கம் ஏராளமாக முகத்தில் தெரிய அவந்திகா அவன் பிடித்த இழுப்புக்கு தாராளமாக இடங்கொடுத்தாள்.

அந்த மாயத்திருடன் அவசரம் அவசரமாக தன்னருகே நெருங்கி வருவதையும் கவனித்தவள் அத்தோடு நிற்காமல் தன் முகத்தினையும் அவள் முகத்தோடு வைத்துக் கொண்டு அவன் உதடுகள் அவள் சிவந்த செவியருகே வந்ததையும் உணர்ந்ததால் ஏதோ இதுவரை உணராத உணர்ச்சி தன்னை தழுவுவதை உணர்ந்தாள்.



''அவந்தி! இன்று இரவு இந்த ராஜகிருகம் பின் வாயிலில் வந்து பார்... அத்தையம்மா உறங்கியதும்...''

சட்டென அதிர்ச்சி பரவ நெஞ்சம் வெகுவேகமாக படபடக்க அந்தத் திருடனின் கைகளில் தன்னை உதறிக் கொண்டு அம்மங்காவின் அறைக்குள் வெகு வேகமாக மறைந்து போனாள் அவந்திகா.

# 23

# அவனையே கேட்போம் - அவன் யார்?

உள்ளிருந்து கடவுபவன், உள்ளத்துள் இருந்து நம்மை செலுத்துபவன் ஆதலால் கடவுள் என்று பொதுமையாக பெயர் தந்த தமிழை ஆராதித்துக் கொண்ட ஆசிரியர் அந்தக் கடவுள் நடத்தும் நாடகம்தான் தற்சமயம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டார். 'ஏகன், அநேகன், இறைவன்' என்ற தமிழ்த் திருவாசகத்தை பலமுறை தனக்குள் சொல்லிப் பார்த்த ஆசிரியர் இந்த ஒரு வார்த்தையை மனிதர் புரிந்து கொண்டலே போதுமே.. மதச்சண்டைகள் அனைத்தும் மாயமாய் மறைந்து விடுமே... ஆனால், மனிதன் மாறமாட்டான்... மதங்களும் அதிகமாகும்... வெறியும் அதிகமாகும்...

மார்கழி முதல் நாளில் கூடிய சாலவையில் இடையூறு நாலூரான் மூலம் வந்தாலும் அது எளிதாக களையப்பட்டு விட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் ஆசிரியர் அப்படி நினைக்கவில்லைதான். அந்த நாலூரான் ஒரு கைப்பாவை... பில்வணன் ஆட்டுவிக்கும் கைப்பாவை.

நாத்திகத்தையோ அல்லது நாத்திகரையோ ஆசிரியர் என்றுமே வெறுத்ததில்லைதான். நேற்று நடந்ததையும் இன்று நடப்பதையும் மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வாதம் புரியும் நாத்திகரில் எத்தனையோ நல்லவர்களை அவர் அறிவார்தாம். இன்று செயல்படும் மனிதனை நம்புங்கள்... எங்குமே இல்லாத கடவுளை நம்பாதீர் என்று அவர்கள் சொல்வதும் ஒரு லோகாயுதமான உண்மை என்ற அளவில் நாத்திகத்தை அவர் ஒரு வாத அளவில் ஒப்புக் கொண்டதுண்டு.

ஆனால், உண்மையை நன்றாக சிந்தித்தால் இந்த நாத்திக வாதத்தையும் பரப்புபவன் அவன்தான். இருந்தும் இல்லாமல் காட்டிக் கொள்வதில் ஆண்டவனுக்குத் திருப்தி போலும்.

ஆனால், பில்வணனைப் போன்ற நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினாலும் நாட்டையே நாசம் செய்பவர்களிடம் யாருமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்தான். இவர்கள் நாத்திகத்தைக் கூட சுயநலத்திற்காக பயன்படுத்தும் தீயசக்திகள். இப்படிப்பட்ட தீயசக்திகளுக்கு நாத்திகமும் சரி... ஆத்திகமும் சரி... நன்றாகவே பயன்படும்... அப்படித் தான் பில்வணன் கூட ஒரு சமயத்தில் நாத்திகத்தையும் மற்றொரு சமயத்தில் தான் இல்லை எனச் சொல்லும் கடவுளையும் தன் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொள்வதில் வல்லவன். இல்லையென்றால் எங்கோ தில்லையில் பொழுதை ஓட்டிக் கொண்டிருந்த நாலூரானை திருமலைக்கு மூட்டை கட்டி அனுப்புவானா... இல்லை நாடெங்கும் மதவாதிகளை முடுக்கி மதவாதத்தை தீவரப்படுத்துவானா...

ஆனால் ஒன்றை நாம் மறக்கக்கூடாது. இப்படிப்பட்ட பில்வணனையும் ஆட்டிவைப்பது அவன்தானே... அவனுக்குத் தெரியும்... எதை... எந்தச் சமயத்தில் அழிப்பதென்பது.

ஆனாலும் ஆசிரியரின் மனம் ஒன்றை ஒப்புக் கொள்ள மறுத்தது. 'பில்வணன் மிகச்சரியாக நேரம் பார்த்துக் காயை நகர்த்துகிறான்... யாருக்காகவோ குறி வைக்கிறான்... குறி மாறி அப்பாவி மக்களை தாக்கி அழிக்கும்போது ஆசிரியரின் மனம் வேதனையால் துடித்தது. ஆண்டவன்தானே அனைத்தும் செய்கிறான் - அவன் இஷ்டப்படி விட்டுவிடுவோமே என்று அவரால் இருக்கமுடியவில்லை. பில்வணனை எப்பாடு பட்டாவது தடுக்க வேண்டும்... அவன் எத்தனை விரைவில் இங்கிருந்து விரட்டப்படுகின்றானோ அத்தனை விரைவில் நாடு உருப்படும்... இல்லையேல் இவன் நினைப்பது போல் மக்களுக்கும் லோகாயுத நினைவு வந்து விடும்... தர்மம் தரைமட்டத்தில் இருக்க அதர்மம் அதிகாரம் செய்யும் நிலை வந்துவிடும்... இந்த நிலை வரவிடக்கூடாது... பில்வணனை வளரவிடக்கூடாது...'

மனதுள் பலவாறு நினைத்துதான் சம்புவரையர் மூலமாக வீரர்களை தருவித்து காவலை பலப்படுத்தினார். சோழ வீரர்களும் மும்முரமாக செயல்பட்டு கலவரங்களை



அடக்கத்தான் செய்தனர். ஆங்காங்கே சாளுக்கிய வீரர்கள் காணப்பட்டாலும் அவர்கள் அதிகாரத்தில் தலையிடாதது சற்று நிம்மதியையும் கொடுத்தது.

ஆனால், அடுத்த சில நாட்களில் ஆசிரியருக்கு வந்த தகவல்கள் அதிர்ச்சியைத் தர ஆரம்பித்தன. தான் வீரர்களைத் தருவித்து காவலை பலப்படுத்தினால் பில்வணன் மேலை நாட்டு சைவர்களைத் தூண்டிவிட்டு அவர்களை கைக்குள் போட்டுக் கொண்டு ஆங்காங்கே வாதங்களையும் பிரதிவாதங்களையும் ஊக்குகிறான் என்பதுதான். அந்தப் பண்டிதர்களும் உண்மையை உணராமல் பில்வணனின் மாயையில் மயங்கி சைவம் வளர்ப்பதாகச் சொல்லி சிவத்தையே அழிக்க முயல்கிறார்களே... அன்பு என்பதன் மறுபொருள்தான் சிவம் என்பதை அறியாமல் அந்த அன்பையே கைகொள்ளாமல் அடிதடியில் இறங்குவதும் அவர் வேதனையை அதிகமாக்கியது.

வைணவர்களும் உணர்ச்சி வசப்படக்கூடாதுதான். அவர்கள் எதற்கெடுத்தாலும் பிரதிவாதம் செய்து என்ன சாதிக்கப் போகிறார்கள். தான் கேட்டுக் கொண்டதாலேயே உடையவர் போன்ற மகாத்மாக்கள் வைணவப் பிரதிவாதங்களை அடக்கியே வைக்கிறார்கள் என்றாலும் தீவிரவாதம் எல்லாப் பக்கங்களிலும் தலைவிரித்தாடுகிறதே... அதிலும் காளிங்கன் அவன் பிறப்பால் சைவன் என்பதால் அவன்தான் சங்கு சக்கரம் மாயம் செய்தவன் என்று சில வைணவர்கள் வேண்டுமென்றே பரப்புவது தவறல்லவா... தான் அறிந்த காளிங்கனை, உடையவரால் வாழ்த்துப்பெற்ற காளிங்கனை அவர்கள் சந்தேகிப்பதா...' ஆசிரியரின் உள் மனம் ஆவேசமானது.

ஆனால், காளிங்கன் தனக்குள்ளேயே ஏதோ உருகி தன்னுள்ளேயே அதை அடக்கிக் கொண்டு தானே அந்தக் கஷ்டத்திலிருந்து வர முயல்கிறான் என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது. அவன் எந்தக் கஷ்டத்தில் உள்ளான் என்பதை தன்னிடம் சொல்லாததில் அவருக்கு எள்ளளவு கூட வருத்தம் இல்லை. அவனுக்கென ஒரு சோதனை வந்துள்ளது. அந்தச் சோதனையில் இருந்து அவன்தான் மீள வேண்டும்... இது ஒரு வகையில் அவனுக்கு ஒரு போராட்டம்... இதுநாள் வரை அத்தையார் அன்புக் கரங்களில் இருந்தவனுக்கு வெளி உலகம் இப்படிப்பட்ட முறையில் அவனை வரவேற்கிறது. அவன் வெற்றி பெற போராடவேண்டும்... இந்தப் போராட்டத்தில் வெல்பவனால் நாளை எந்தப்

போராட்டத்தினையும் எளிதில் வெற்றி கொள்ள முடியும்... தான் வளர்த்த பிள்ளை அவன். தன்னைப் போலவே ஆழமாக சிந்திக்கும் திறன் படைத்தவன்... சங்கையும் சக்கரத்தையும் அவன் வாழ்வில் சீரமைப்புக்காக வந்த ஆயுதங்களாக பயன்படுத்துவான்... பார்ப்போம்...

நாட்டிலே குழப்பம் என்று ஆரம்பித்தால் அது வேகமாக பரவத்தான் செய்யும். சங்கு சக்கர குழப்பமும் அதிவிரைவில் பரவுவதையும் அதைப் புயல்காற்று போல் ஊதி பில்வணன் தனக்குச் சாதகமாக பயன்படுத்துவதையும் பூரணமாக உணர்ந்தவர், இந்தக் குழப்பங்களையெல்லாம் தீர்த்து வைக்க உடையவரின் உதவியைத் தான் பெற்றே ஆக வேண்டும் என்றும் முடிவு செய்தார்.

மார்கழி ஆரம்பித்து ஏழாம் நாள் திருவேங்கடமலை இறங்கியதும் ஆசிரியர் அம்மங்காதேவியை சந்தித்து ஆறுதல் கூறி காளிங்கனுக்குத் துணையாக திருமலைக்கு அனுப்பி வைத்தவர் அடுத்த காரியமாக செய்தது மாருயாண்டான் மூலமாக உடையவரை சந்தித்ததுதான்.

அந்தச்சுட்டிப் பெண் அவந்திகா தன்னைப் பார்த்து கேட்ட கேள்வி அவருக்கு நினைவு வந்தது... 'திருவேங்கட முடையான் சிவனா அல்லது திருமாலா'... தர்மத்தின் விரோதிகள்தான் இந்தக் கேள்வியைத் தூண்டிவிட்டாலும் இது மனித அறிவுக்குத் தெரிய வேண்டிய விஷயம்தானா என்றும் தனக்குள் அவர் கேட்டுக் கொண்டார்.

திருச்சிற்றம்பலமுடையானை உருவாகவும் வெண்காட்டீசனை அருஉருவாகவும் துதித்துப் பழக்கப்பட்ட ஆசிரியர் சிவத்தை விட உயர்ந்தது எது என்ற கொள்கையில் தெளிவாகவே இருந்தார். திருமாலின் பரதத்துவத்தை வைணவப் பெரியார்கள் எடுத்துரைக்கும் போதெல்லாம் அவர்களின் உண்மையான வாதத்தை மதிக்கும் ஆசிரியர் மனம் என்னவோ இவர்கள் பெயரைத்தான் சற்று மாற்றுகிறார்கள்... நாம் சிவம் என்கிறோம்... அவர்கள் திருமாலைச் சொல்கிறார்கள் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொள்வதும் உண்டு.

ஆனாலும், மாற்றார் கருத்துக்கு மதிப்பளிக்கும் பண்பை கனவிலும் மறவாத ஆசிரியர் வைணவத் தத்துவத்தையும் ஆழ்வார்களின் பாசுரங்களையும் போற்றத்தக்கதாக மதித்தார். சைவசமயம் தமிழகத்தில் பிறந்துதான் உலகெங்கும் பரவி மலர்ந்ததாக அடிக்கடி கூறும் ஆசிரியர் வைணவத்துக்கும்



தமிழர்களின் பங்கு மிக அதிகம் என்பதை உணர்ந்தவர்தான் அவர். அவ்வப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் திருவரங்கம் சென்று உடையவர் திருவாயால் வைணவத் தத்துவங்களையும் அறிந்து கொண்டுதான் வந்தார்.

வைணவ பரதத்துவத்தில் உடையவரின் தீர்க்க சிந்தனை ஆசிரியருக்குப் பிடித்திருந்தது. சங்கரரின் அத்துவைத தத்துவத்தை விட மேலும் சிந்தனை விரிந்து காணப்பட்ட விசிஷ்டாத்துவைதம் உடையவருக்கும் பண்டிதர்களிடையே 'ஸ்ரீ பாஷ்யகாரர்' பட்டத்தைப் பெற்றுத் தந்ததில் மகிழ்ச்சி ஆசிரியருக்கு. ஆனால், இன்னமும் சிந்திக்க வேண்டும்... மேலும் மேலும் தெளிவாக்கும் தத்துவத்தை உலகில் பரப்ப வேண்டும் என்ற ஆராத தாகம் கொண்டதால் திருமந்திரத்தையும் திருவாசகத்தையும் ஆழ்ந்து படித்து ஆராய்ந்து கொண்டுதான் இருந்தார்.

ஆனால், தற்சமயம் உள்ள சூழ்நிலை தனக்குச் சாதகமாக இல்லையே என்ற வருத்தம் உண்டு ஆசிரியருக்கு. அரசியல் தன் சிந்தனைகளை மட்டுப்படுத்தியே வைத்திருக்கிறது... தர்மத்தைப் பாதுகாக்க அபயன் சோழ தேசத்தை ஆளத்தொடங்கியதும் தானும் அரசியலில் இருந்து பூரணமாக விலகி தம் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும்... அதுவரை காத்திருந்துதான் ஆக வேண்டும்...

உடையவர் மீது ஆசிரியருக்கு இன்னொரு விதத்திலும் மரியாதை உண்டு. வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்ட அனுபவங்களும் அதனால் கிடைத்த தெய்வ அனுக்கிரஹமும் ராமானுஜரை மிகப் பெரிய ஆத்மாவாக மாற்றியுள்ளதாக மற்றவர்களிடம் ஆசிரியர் சொல்லி சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டதுண்டு. பௌத்தமும் சமணமும் தென்னகத்தில் கால் ஊன்றி சனாதன தர்மத்தை அழித்து வரும் வேளையில் அதே தென்னகத்தே தோன்றிய சங்கரரும், அப்பரும், ஞானக்குழந்தையும் சமணர்களையும் புத்தமத வெறியர்களையும் நாட்டை விட்டே விரட்டி அடித்தனர். ஆனால் சாக்கியத்தையும் சமணத்தையும் விரட்டி விட்டாலும் இவர்களுக்குள்ளேதான் எத்தனையெத்தனை வேறுபாடுகள்... எத்தனை விதமான மதச்சண்டைகள்... யார் யாருக்கு தெய்வமாக இருக்க வேண்டும் என்று சனாதனவாதிகளே நிர்ணயிப்பது எத்தனை வேதனையானது...

ஆசிரியரின் மனம் பலவாறு வேதனைப்பட்டாலும் அன்று உடையவரின் தரிசனத்தில் அந்த வேதனை தீர்ந்தது போலத்தான் உணர்ந்தார். மார்கழி ஏழாம் பாடலான 'கீசுகீசென ஆனைச்சாத்தன்' பாடலுக்கு விரிவுரை சொல்லிவிட்டு எழுந்தவரை மாருதியாண்டானும் ஆசிரியரும் மறுபடியும் இருந்த இடத்திலேயே அமர வைத்து தாங்களும் அவர் அருகேயே அமர்ந்து கொண்டனர்.

உடையவர் ஆசிரியரைப் பார்த்ததும் தன் வழக்கமான புன்முறுவலை சற்றுப் பெரிதாக்கி அவர்களை சந்திக்கும் ஆனந்தத்தை காண்பித்துக் கொண்டார்தாம். ஆனாலும் ஊரெங்கும் நடக்கும் மதவாத சண்டைகளின் பிரதிபலிப்பு அவர் ஆனந்தத்தை சற்று மட்டுப்படுத்தி விட்டதோ என்னவோ... உடையவர் ஆசிரியரிடம் மனம் திறந்து தன் வருத்தத்தையும் தெரியப்படுத்தினார்.

''ஆசிரியரே! அடியேனைப் பொறுத்தவரை ஆன்மீகவாதிகள் ஆட்சியாளருக்கு ஆலோசனை தரலாமே தவிர அரசியலில் தலையிடக்கூடாது... அதைப்போலவே அரசியல் செய்பவர்களும் ஆட்சியாளர்களும் ஆன்மீகத்தில் அளவுக்கு மீறி தலையிடக்கூடாது. ஆனால், யாருமே இதைப் புரிந்து கொள்வதில்லை. காலையில் இருந்து அடியார் கூட்டம் கதறிக் கொண்டே இருக்கிறது... ஒரு அடியார் தன் தலையை தரையில் மோதி தன் ரத்தத்தைக் காண்பித்து 'இனியாவது அடியேன் தலையிடக் கூடாதா' என்று வேதனையாய் கேட்கிறார். ஏன் இந்த வேதனை? எதற்காக இந்த ஆர்ப்பாட்டம்... என்ன வேண்டும் உங்கள் ஆட்சியாளர் களுக்கு... அடியேன் என்ன செய்தால் அப்பாவிகளின் வேதனை தீரும்? அடியேனும் பரந்தாமனிடம் கேட்டு கேட்டு பதில் கிடைக்காமல் விழிக்கிறேன். இந்த அடியேனிடம் ஆதியிலிருந்தே அன்பு பாராட்டும் ஆசிரியராவது தக்க பதிலைச் சொல்லுங்களேன்...''

உடையவரின் உருக்கமான பேச்சு மாருதியாண்டானுக்கு கண்ணீரையும் ஆசிரியருக்குத் துயரத்தையும் கொடுத்தது.

''ஆண்டவா! இது என்ன சோதனை... எல்லாம் அறிந்த உடையவரே என்னிடம் ஆலோசனை கேட்கலாமா... என்ன செய்தால் இத்தனை குழப்பங்கள் தீரும் என்று தங்களிடம் ஆலோசனை கேட்க அல்லவா வந்தேன்... ஆனாலும் என்னிடமும் குறையுள்ளதுதான். ஒருவேளை தங்களிடம்



ஆதியிலேயே வந்திருந்து தங்கள் உதவியை நாடி இருந்தேனானால் இத்தனை குழப்பங்களும் வராமலே இருந்திருக்கும்... உதவியை நாடாமல் தங்களைத் தலையிடவேண்டாம் என்று நான் சொன்னது தவறுதான்...''

ஆசிரியரின் இந்த பதில் உடையவரை உற்றுப் பார்க்க வைத்தது. அந்தப் பார்வையில் சற்று பெருமிதம் இருந்ததைக் கண்டார் ஆசிரியர்.

''ஆசிரியரே! தங்களைப் போன்ற நல்லவர்கள் நாட்டிலே நிறைந்து இருக்கும்வரை சாதாரண மக்களுக்கு எந்தவித அச்சமும் தேவையில்லைதான். தங்கள் மனதில் பட்டதை அப்படியே சொல்கிறீர்கள். நன்றி... இந்தக் குழப்பமெல் லாம் தீர்ந்து விடும்... எப்படி சொல்கிறேன் தெரியுமா... நாராயணன் நம்மையெல்லாம் உய்ய வைப்பான் என்ற நம்பிக்கையில்தான் சொல்கிறேன். அவன் நம்மையும் ஒரு கருவியாக பயன்படுத்த திட்டமிட்டுள்ளபோது நாமும் அப்படியேதான் செயல்படவேண்டும்... ஆசிரியரே! சொல்லுங்கள்... அடியேன் எந்த விதத்தில் உதவி புரிய வேண்டும் என்று சொல்லுங்கள். உங்கள் சிந்தனையை அடியேனுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்...''

ஆசிரியர் கைகூப்பி வணங்கினார்.

''மன்னிக்க வேண்டும்... முதல்முறை என்னுடைய முடிவுக்கு தாங்கள் கட்டுப்பட்டீர்கள். அதுவே நான் செய்த பாக்கியம். இம்முறை தாங்கள் என்ன முடிவு எடுத்தாலும் தங்களுக்கு எல்லா வகையிலும் உதவுவதுதான் என்னுடைய கடமை. தங்கள் முடிவு அடியேன் கருத்துக்கு விரோதமாக இருந்தாலும் சரி... தங்கள் முடிவுதான் என் முடிவு...''

உறுதியாக வந்த ஆசிரியரின் பதிலில் சற்று ஆழ்ந்து போனார் உடையவர். சற்று நேரம் கண்களை மூடினார். எதையோ அவர் மனம் ஆலோசித்திருக்க வேண்டும்... பிறகு கண்களை திறந்ததில் அந்தக் கண்கள் வெகு தெளிவாகத் தெரிந்ததையும் கவனித்தார் ஆசிரியர்.

''ஆசிரியரே! திருவேங்கடமுடையான் திருமாலா அல்லது சிவனா என்பதுதானே தற்போதைய பிரச்சினை. அதற்கு முடிவு கட்டுவோம். ஆனால் இங்கே அல்ல... திருமலை யிலேயே முடிவு காண்போம்.''

சடாரென மாருதியாண்டான் எழுந்து அப்படியே உடையவருக்கு பாத நமஸ்காரம் செய்தார்.

''வேங்கடவா! அப்படியானால் உடையவர் திருமலைக்கு எழுந்தருளப் போகிறாரா... ஆஹா... அடியேன் என்ன பாக்கியம் செய்தேனோ...''

''மாருதி! நீ சொல்வது சரிதான்... திருவேங்கடமுடையானுக்கு அடியேன் மீது தணியாத ஆசை... அதற்காக சங்காழ்வானையும் சக்கரத்தாழ்வானையும் தூதனுப்பி செய்தி சொல்கிறான் போலும்... இறைவன் அழைத்தும் செல்லாத பாவியாகவா போய் விட்டேன்? திருமலைப் பயணத்திற்கு ஏற்பாடு செய்...''

மெதுவாக பேசியவர் ஆசிரியரிடம் திரும்பினார்.

''ஆசிரியரே! தாங்கள் அடியேனுக்காக மறுமுறை சாலவை சபையை கூட்டவேணுமே...''

ஆசிரியர் தயங்கினார்... அவர் தயக்கம் உடையவருக்கும் புரிந்தது போலும்...

''ஆசிரியர் தயக்கம் புரிகின்றது... சாலவை சபையில் யாரேனும் எதிர்த்துப் பேசினால் அடியேன் வருத்தப்படுவேனோ என்பதுதானே தங்கள் தயக்கம்?''

தலையாட்டிய ஆசிரியர் சற்று நிமிர்ந்து பார்த்துக் கூறினார். ''தாங்கள் நினைப்பது சரிதான்.. அத்தோடு மட்டுமல்ல... உயர்ந்தவர்களைப் பற்றிய மாறுபட்ட கருத்துகளை அறியாதவர் சொல்லும்போது சபையில் கோபம் கூட எழ வாய்ப்புண்டு. ஆத்திரம் அனர்த்தங்களை விளைவிக்கும் என்பது உடையவர் அறிந்ததுதான்...''

மெல்லமாகவே ஆசிரியர் சொன்னாலும் உடையவர் முகத்தில் புன்முறுவல் தொடர்ந்தது.

''ஆசிரியரே! நம் அடியார்கள் ஒருவேளை சபையில் ஆத்திரப்பட்டால் என்ன செய்வது என்பதுதானே? கவலை வேண்டாம்... ஏன் தெரியுமோ... அடியேனுக்கு நாராயணன் துணை – அவன் அடியார்களுக்கு அடியேன் துணை... பிறகு எப்படி குழப்பம் ஆரம்பமாகும்? தாங்கள் சாலவை சபையை தாராளமாக கூட்டலாம்... நாராயணன் பார்த்துக் கொள்வான்!''

''எப்போது கூடுவதாக அறிவிக்க வேண்டும்...''



சற்று யோசித்தார் உடையவர்.

''ம்... மார்கழி பதினேழாம் நாள்தானே உற்சவம் ஆரம்பமாகிறது? பதினாறாம் நாள் கூட்டுங்கள்.. இந்தப் பதினாறாம் நாளிலே ஒரு விசேஷம் உள்ளது ஆசிரியரே... என்ன தெரியுமோ... அன்றுதான் ஆண்டாள் முதல்முதலாய் தன் தோழிகளை எல்லாம் அழைத்துக் கொண்டு கண்ணன் அரண்மனை 'மணிக்கதவம் தாள் திறவாய்' என்று கேட்ட நாள். நாமும் அவள் கேட்ட விதத்திலேயே திருவேங்கடமுடையானைக் கேட்போம்... 'கோவிந்தா... நீ யாரென்று சொல்...'' என்று கேட்போம்... அவன் சொல்வான் அவன் யாரென்று... ஏனெனில் திருவேங்கடமுடையான் 'அவன் அவன் தானே'...''

ஆசிரியர் திகைத்துப்போனார். தான் காலையில் அவந்திகாவுக்கு பதிலளித்த அதே பதில் தன் கேள்விக்கும் விடையாய் உடையவரின் திருவாயில் கிடைத்துள்ளது. உடையவரை மனதுள் போற்றினார் அவர்.

அதேசமயம் ஆசிரியரால் தற்செயலாக நினைக்கப்பட்ட அவந்திகாவோ ஆனந்தத்தையும் துயரத்தையும் ஒருங்கே அனுபவித்துக் கொண்டிருந்தாள் திருமலையில்.

## 24

## சங்கே முழங்கு!

**வ**லது கை பிசகி தூக்கமுடியாத நிலையில் கட்டுப் போட்டிருப்பது காத்யாயினிக்கும் சற்று கஷ்டமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இந்தக் காயம் உடலில் ஒரு பாகத்தில் பட்டது... விரைவில் ஆறிவிடும்... ஆனால் மனக்காயங்கள்...

காத்யாயினி சற்று சோகமாகவே இருந்தாலும் கொடுக்கப்பட்ட வேலையை செவ்வனே நடத்தி முடித்த திருப்தியும் கலந்தே காணப்பட்டாள்.

எத்தனை சோதனைகள்... ஆனாலும் இது ஒரு சாதனைதானே... குருதேவ் சொன்னது எத்தனை சரியானது. 'காத்யாயினி... அது கடவுளல்ல... கற்சிலை... வெறும் கல்... மனிதனால் அழகாக செதுக்கப்பட்ட கற்சிலைதானே தவிர தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட தெய்வச்சிலை

அல்லவே அல்ல என்பதை மனதில் நன்றாக நிலை நிறுத்திக் கொள்...' குருதேவ் சொன்னாரே... அது உண்மைதானே... கடவுள்... கடவுள் என்று பயந்து நடுங்கி மரியாதை தருவது எல்லாம் எத்தனை நகைப்புக்குரியது... இந்த மனிதர்கள் இத்தனை அப்பாவிகளா... இல்லையில்லை... இவர்களை இப்படி ஆட்டிப்படைப்பது முட்டாள்தனமான மதத் தலைவர்களும் அரசர்களும்தான்... கடவுள் என்று இல்லாத ஒன்றை முன்வைத்து இவர்கள் காலங்காலமாக மக்களை முட்டாளாக்கி மூளையையும் மழுங்கக் செய்து வருகிறார்கள்...'.

திருமலையின் ஏகாந்தமான மலைச்சரிவில் மலைவாழ் மக்களோடு ஒரு மலைமகளாக தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அந்த குடிசையில் மண்தரையில் ஓலைப் பாய் விரிக்கப்பட்டு வலது கை முடக்கப்பட்ட நிலையில் படுத்துக் கிடந்தாள் காத்யாயினி.

தான் இங்கே எங்கோ மலைமேல் இருக்க ஊரெல்லாம் நாடெல்லாம் அமளியால் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதை அவள் ஊகித்துதான் இருந்தாள். சர்வதேவா அடிக்கடி கொண்டு வரும் செய்திகளும் அவள் ஊகத்தை உறுதிப்படுத்தியதுதான்... ஆனால் அவள் ஊகிக்க முடியாத இன்னொரு செய்தி கிடைத்ததும் தான் அவள் ஆச்சரியம் எல்லை மீறியது.

பெருமாளின் தோளிலிருந்து சங்கினையும் சக்கரத்தையும் காளிங்கன் அபகரித்து எங்கோ மறைத்துவிட்டு திருவேங்கடமலையில் அனைவரிடமும் நாடகம் ஆடுகிறான் என்ற செய்திதான். இந்த விஷயம் வைணவர்களால் உடனடியாக நம்பப்பட்டு ஊரெங்கும் பரவிவருகிறது... ஏனெனில் காளிங்கன் சைவனாம்... பெருமாள் சிவம்தான் என்பதை ஊருக்குக் காண்பிக்க இப்படி மாயம் செய்து நாடகம் ஆடுகிறானாம்.

காளிங்கன் இந்த விஷயத்தில் தலையிட்டு அவமானப் படுவதை காத்யாயினி விரும்பவில்லை. ஏனோ தெரிய வில்லை. அவள் உள்மனம் கட்டாயமாக மறுத்து வெளியே தள்ளியும் அந்தத் தமிழன் எப்படியோ உள்ளே புகுந்து நெஞ்சத்தில் நிரந்தரமாக தங்கி தொல்லை தருவது அவளுக்கு மெல்ல மெல்லப் புரியத் தொடங்கியது. அப்படி தன் நெஞ்சத்தைத் தொட்டு பலாத்காரமாக உள்ளே நுழைந்ததைக் கூட இன்பமாக ஏன் தன் மனம் உணரவேண்டும்... இது எல்லாப் பெண்களுக்கும் இந்த வயதில் ஏற்படும் நிகழ்ச்சியா... அல்லது தான் ஒருத்தி மட்டும் அனுபவிக்கும் உணர்ச்சியா...''



புரியாமல் குழம்பினாள் அவள். சில நாட்கள் முன்பு அந்த வைணவப் பிராம்மணன்., கோயிலருகே தன்னைக் கண்டுகொண்டு காளிங்கனோடு தன்னை இணைத்துப் பேசி தன்னையும் கூடவே அழைத்தது அவள் நினைவுக்கு வந்தது. பாவம் அந்தப் பிராம்மணன்... காதலுக்குத் தூது என்று நினைத்து விட்டான் போலும்... சர்ரென்று வழுக்கிக் கொண்டு தன் முன்னால் வெட்கமில்லாமல் விழுந்து 'காளிங்கனை மறுக்காதே' என்று கெஞ்சியபோது தனக்கு முதலில் சிரிப்பு வந்ததையும் நினைத்துப் பார்த்தாள். ஆனால் செய்யும் கடமை தன்னை சீராக்கியதையும் சிரிப்புக்கு பதில் கண்ணீரை வரவழைத்து கூடவந்த பெண்களால் அரவணைக்கப் பட்டதும், 'நல்லகாலம்... அவன் கெஞ்சலுக்கு நான் மசியவில்லை...'

ஆனால் மறுபடியும் அன்றைய இரவு கோயில் உள்ளறைக் குள் காளிங்கனைப் பார்த்ததும்... 'ஐயோ... நெஞ்சம் நின்று விடும் போல் ஆகிவிட்டதே... நல்ல வேளை ஒரு கண அவகாசத்தில் தப்பினோம்... இல்லையென்றால் அவன் பிடியில் சிக்கியிருப்போம்...'

அப்படித்தானே அடிவாரக் காடுகளில் முதல் முதலில் அவனிடம் சிக்கி அவதிப்பட்டேன்... சமயத்தில் வந்து தடுத்து தன்னையும் அவன் மேல் போட்டு... சீச்சீ... வெட்கமே இல்லாதவன்... பெண்ணை இப்படித்தான் கடினமாக கையாள்வதா...''

தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவள் நினைவு அவளை மறந்து சற்று தப்பிப் போனதும்தான். சுதாரித்துக் கொண்டாள்.

அவளுக்கு இன்னொன்றும் நினைவுக்கு வந்தது. அது அதிசயமாகவும் அவளுக்குப் பட்டது. 'அது எப்படி இந்தக் காளிங்கன் தன் வாழ்வில் முக்கியமான கட்டத்தில் குறுக்கே வருகிறான். அன்று மட்டும் அவன் வரவில்லையென்றால் அந்த ஆசிரியர் கதை அன்றே முடிந்திருக்கும்... அதைப்போல் இந்த மலை ஏறும் சமயம் பார்த்து சரியாக வந்து தடுக்கப் பார்த்தானே... ஏன்... திருமலைக் கோயிலில்கூட அந்தத் தருணத்தில் அவன் கையில் சிக்க இருந்தோமே... தன்னை

எப்படியெல்லாம் தேடினான்... எத்தனை நேரமாக தேடினான்... அன்று இரவெல்லாம் இவள் எப்படி மாயமாய் மறைந்தாள் என்று நினைத்து நினைத்து வாடியிருப்பான்... பாவம்... அவனை நிறையவே வாட்டுகிறோம்... முதல் நாள் சந்தித்தபோது கூட தன்னைப் பற்றி கவிதை பாடியதும் அவனைக் கோபித்தது தவறுதான்... அவன் பாடியதில் என்ன தவறு... ஆண்பிள்ளை... ரசிக்கத் தெரிந்தவன்... முன்னால் அழகான பெண்ணைப் பார்த்தால் யாருமே ரசிக்கத்தான் செய்வார்கள்... அவன் செய்ததில் என்ன தவறு...'

இருந்தாலும், நம்மால் அவனுக்கு எவ்விதப் பயனும் இல்லை... எந்தவித சுகமும் இருக்காதுதான்... நாம் செல்லும் திசை வேறு... அவன் போகும் பாதையோ நேர் எதிராக உள்ளது... நம் கொள்கை வேறு... அவன் கொள்கை வேறு... நம் அரசியலும் அவன் அரசியலும் ஒன்றுக்கொன்று ஒத்து வராதவை... இருவர் இருக்கும் கூட்டமும் வேறு... எத்தனை ஆயிரம் வித்தியாசங்கள். நினைத்தாலே அவனை விட்டு எத்தனையோ தொலைவு பிரிகிறோமே... அது ஏன்?'

'நல்லவன்தான் அவன். ஏன், நம்மை விட வெகு நல்லவன். அந்த ஆண்மகன் பெண்களிடம் மரியாதை காட்டும் பண்புள்ளவன்... அந்த இரவில் என்னதான் தன்னை விழுங்கி விடுவதைப் போல் பார்த்தாலும் எத்தனை கண்ணியமாக நடந்து கொண்டான். எந்த ஆண்மகனால் இப்படிப்பட்ட பண்பினைக் காட்டமுடியும்... நம் கூட்டம் இருக்கிறதே... காமுகப் பேய்கள்... அத்தனை பேரும் காமுகப் பேய்கள்... ஏன்... விக்கிலனே கூட சற்று அசந்தால் போதும் சாப்பிட்டு விடுவான்... ஐயோ... பில்வண குருதேவின் மகள் என்ற பெயர் தனக்கு அண்டமாக இருக்கிறது... இப்படிப்பட்ட காமப்பிசாசுகளை விட இந்தத் தமிழன் ஆயிரம் மடங்கு மேல்தான்...''

காத்யாயினி சற்று உருகித்தான் போனாள். ஆண்டாளாக வேஷம்போட்ட அன்று தன்னைப் பார்த்தும் அவன் அளவுக்கு மீறிப் பழகவில்லை... அன்று இரவு விடுதியில் தன் அறைக்கு வந்து தன்னை சந்தித்தும் தன் மீது அவன் விரல்கூட பட வில்லை... அப்படித் தப்பித் தவறி பட்டிருந்தால் கூட அவள் அதை சந்தோஷமாகவே ஏற்றிருப்பாளோ என்னவோ... ஆனாலும் அவன் மிக கண்ணியமாகவே நடந்து கொண்டான். அந்தக் கண்ணியம் தற்சமயம் அவள் மனதில் முழுதும் படர்ந்து அவள் மனதினை அலைக்கழித்தது என்னவோ உண்மைதான்.



ஆனால், அப்படிப்பட்ட கண்ணியம் மிக்க ஒருவன்... தன்னால் நல்லவன் என நினைக்கப்பட்ட ஒருவன் இப்படிப் பட்ட திருட்டுப் பழியை சுமக்கலாமா? இதைத் தடுக்க வேண்டாமா... அவன் தன் மனதில் நல்லவனாக இடம் பிடித்துள்ளான்... ஆனால், அவன் மனதில் தாம் ஒரு திருடியாகத்தான் இடம் பெற்றுள்ளோம்... அவனுக்குத் தன் மேல் இருந்த மரியாதையும் கொஞ்ச நஞ்சம் இருந்த அன்பும் தற்சமயம் விலகிப்போய்விடுமே... ஏன் இப்படி ஒரு சோதனை எனக்கு... அவன் நல்லவனாகவும் தான் கெட்ட வளாகவும் ஏன் தானே எண்ண வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.. எதற்காக இந்தக் காளிங்கனை நினைத்து நினைத்து வாடவேண்டும்... ''கடவுளே! எனக்கு மட்டும் ஏன் இந்த வேதனை.''

வாய்விட்டே கேட்டவள் சட்டென அப்படி கேட்பது தவறு என்பதாக உணர்ந்தாள். தன்னையும் கடிந்து கொண்டாள்... சேச்சே... தம் மனம் இப்படியெல்லாம் அலைபோல் விளையாடக்கூடாது... கட்டுப்படு மனமே... கட்டுப்படு... கட்டுப்படு...

ஆனால், மனசு கட்டுப்பட மறுத்து பிடிவாதம் செய்தது. கட்டாந்தரையில் விரிக்கப்பட்டிருந்த ஓலைப்பாயில் படுத்திருந்தவள் தன் மனக்கவலையில் தன் கைவலியைக்கூட ஓரளவு மறந்தே இருந்தாள். சட்டென எழுந்து உட்கார்ந்த போதுதான் வலதுகை வலி நன்றாகவே தெரிந்தது. உள்ளங் கையை தூக்க முடியவில்லை.

'கோயிலில் அன்று இரவு படபடத்து உயரத்தில் இருந்து குதித்ததில் வலது உள்ளங்கையை பூமிக்கு பாரமாய் கொடுத்து குதித்ததால் எலும்பு பிசகி வீங்கிவிட்டது. மலைவாழ் குறத்தியர் நல்ல மருத்துவர்தாம். இயற்கையே மருந்து வழங்கி வியாதிகளை தீர்க்கிறதே... அதனால் இவர்கள் கொடுத்த மருந்து நன்றாகவே வேலை செய்வதாக மனதுள் நினைத்து அவர்களைப் போற்றினாள் காத்யாயினி. முன்னைக்கு கைவீக்கம் கூட சற்று குறைந்துதான் இருக்கிறது... பாவம் காளிங்கன் ஒருவேளை தன் கைவீக்கத்தைப் பார்த்தால் எத்தனை வேதனைப்படுவானோ... அவன் மனம் இளகிய மனம்தான். இல்லையென்றால் அன்று

இரவு அடிவார மாளிகையில் தன் கதையைக் கேட்டுக் கலங்கியிருப்பானா? தன் பெற்றோரை இழந்தது ஊழ்வினை பயன் என்று ஆறுதல் தந்தானே...'

ஒருவேளை தான் அன்று கன்னோசியில் காப்பாற்றப் பட்டோமே... அதுவும் ஊழ்வினைப் பயனோ... குருதேவ் சரியான சமயத்தில் காப்பாற்றி இவர்கள் கூட்டத்தில் ஒரு முக்கிய மனுஷியாக்கி விட்டாரே... அதுவும் ஊழ்வினைப் பயனோ... இந்தக் காளிங்கன் அடிக்கடி தன்னைப் பின்தொடர்ந்து நம்மைக் காப்பாற்றுவதாக ஏன் சொல்ல வேண்டும்... அதுவும் ஊழ்வினைப் பயனோ... இல்லை... அவனைப் பற்றியே சதாசர்வகாலமும் சிந்தித்து பைத்தியம் முற்றிய நிலையில் தான் இருப்பதும் ஊழ்வினைப் பயன்தானோ என்னவோ... சேச்சே... நாம் ஏன் இப்படிப் பேசுகிறோம்... என்ன ஆயிற்று... ஏதோ ஒன்று தன்னை மாற்றிவிட்டது போல் ஏன் தோன்றவேண்டும்... ஒரு மாதம் முன்பு வரை கவலையில்லாமல் திரிந்தேனே... இப்போது ஏகப்பட்ட கவலைகள் தன்னை ஏன் வாட்டி வதைக்க வேண்டும்...'

ஒருவேளை இந்த மலைவாழ் தனிமை தன்னை மாற்றி வருகிறதோ... இருக்கலாம்... எப்போதும் அரசியலும் ஆர்ப்பாட்டமும், கடமையும்... யாரை எப்படி யார் கொல்ல வேண்டும் என்ற வேண்டாத திட்டங்களும் இப்போது இல்லையே... சூழ்நிலை தனிமையாய் ஒருமையாய் இருப்பதால் மனது உண்மையை உணர்ந்து கொள்கிறதோ... அல்லது இந்த மலைவாழ் மக்கள் சொல்வது போல் இந்த மலையே அதிசய சக்தியாய் மாறி உண்மையை நமக்கு உணர்த்துகிறதோ...

'இருக்காது... இருக்காது... சக்தியாவது மண்ணாவது... கோயிலிலும் இந்த மலையிலும் உண்மையாகவே சக்தி என்று ஒன்று இருந்தால் சங்கும் சக்கரமும் இத்தனை எளிதாகவா கிடைக்கும்? அன்று பார்த்த சாலவை அங்கத்தினர்கள், அவர்கள் குடும்பங்கள் என்று எத்தனை கூட்டம்... அந்தப் பொல்லாத ஆசிரியர்... எல்லாவற்றையும் விட நம் காளிங்கனும்கூட வந்தபோதுதானே நம் கையில் எளிதாக அந்த சங்கும் சக்கரமும் கிடைத்தன. அது எப்படி நான் சென்றபோது யாருமே என்னைப் பார்க்க முடியவில்லை... இப்படிப்பட்ட அப்பாவிகளா அவர்கள்... அல்லது இவர்கள் சொல்வது போல் இறைவன் அருளா? எனக்கா?'



அப்படி கடவுள் அருள் என்றால் அது அவர்களுக்கல்லவா கிடைக்க வேண்டும்... திருடியான எனக்கு ஏன் அந்தத் தெய்வம் அருள வேண்டும்? புரியவில்லையே... சொல்லி வைத்தாற்போல் அந்த அர்ச்சகப் பிராம்மணன் கண்களில் படாமல் தப்பிக்க வழி காண்பித்தது அந்தக் கடவுளா? காளிங்கன் கண்களில் பட்டும் அவன் கைகளில் சிக்காமல் போனதும் கடவுள் அருளா? அப்படியென்றால் காளிங்கன் போன்ற நல்லவர்களுக்கும் அர்ச்சகர் போன்ற அப்பாவி களுக்கும் கடவுள் உதவமாட்டாரா? தன்னுடைய சங்கையும் சக்கரத்தையும் எளிதாக ஒரு திருடியான எனக்குத் தந்துவிட்டு அந்தத் திருட்டு மூலம் ஊரெங்கும் கலவரமும் குழப்பங்களும் உருவாக்கி ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ள இடங் கொடுத்த அந்தக் கடவுள் கடவுள்தானா? அவர் உண்மை யாகவே கடவுளாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்... திருடியாக வந்த என்னை எரித்திருக்க வேண்டும்... இல்லை சக்கரத்தை திருடியவளை அதே சக்கரத்தால் கழுத்தை நறுக்கி கொன்றிருக்கவேண்டும்...

காத்யாயினிக்கு தான் சிறுவயதில் கன்னோசி அரண்மனை யில் சிசுபாலவதம் நாடகம் கண்டது நினைவுக்கு வந்தது. சிசுபாலன் தவறு மேல் தவறாக கண்ணன் மேல் வசை பாடுவான். சரியாக நூறாவது தப்பு செய்யும்போது 'நூறு' என்று எண்ணிக்கொண்டே கண்ணன் 'சொய்ங்...' என்று தன் சக்கரத்தை விட சிசுபாலன் சிரம் அறுபட்டு போகும்...

ஒருவேளை தான் இன்னும் நூறாவது தப்பு செய்ய வில்லையோ என்னவோ... ஆனாலும், குற்றமொன்றும் அறியாத காளிங்கன் தனக்காக அந்தத் திருட்டுப்பழியை சுமக்கிறானே... என் தவறுகளை - நான் செய்த பாவங்களை அவன் சுமக்கலாமா... எந்த வைணவருக்காக துணை நின்றானோ அந்த வைணவர்களே காளிங்கன்தான் கள்ளன் என்றும் சொல்கிறார்களே... இவன் ஏன் அப்படி ஒப்புக் கொள்ள வேண்டும்... இவனுக்கு நான்தான் எதிரியாயிற்றே... நடந்தவற்றை சபையில் சொல்லி 'அந்த காத்யாயினிதான் கள்ளத்தனம் செய்தாள்' என்று சொல்லியிருக்கக்கூடாதா... பைத்தியக்காரன்... புத்தியில்லாதவன்... போயும் போயும் என்னைப் போல் ஒரு ஈனப்பிறவிக்காக ஒரு மாபெரும் பழியை தன் மேல் போட்டுக் கொள்கிறானே... அவன் மனதில் பெரிய தியாகம் செய்வதாக நினைப்போ...'

காத்யாயினியின் உள் மனதுக் கோபம் வெளியே கண்களில் கண்ணீராய் வெளிவந்தது. காளிங்கனின் செயல் அவளைப் பாதிக்கத்தான் செய்தது. இந்த அவப்பழியில் இருந்து அவனை எப்படி மீட்பது...

'அவன் செய்த தியாகத்தை தன்னாலும் செய்யமுடியாதா... என்ற கேள்வி அவளுள் எழுந்தது. ஆனால், ஏனோ அவளுக்கு வழி தெரியவில்லை. குருதேவுக்கு தாம் கடமைப்பட்டது இந்த சங்கு சக்கரத் திருட்டோடு சரியாகிவிட்டதைப் போல உணர ஆரம்பித்தாள். ஆனால், குருதேவ் தன்னைக் காப்பாற்றினார் என்ற ஒரே செயலுக்காக இப்படிப்பட்ட பாவச்செயலை புரிவது சரியாகிவிடுமா? அதைவிட அன்றே வாள் கொண்டு போராடி மடிந்து வீரமரணம் அடைந்திருக்கலாம்...'

அன்று காளிங்கன் உடையவரிடம் தன்னைப் பற்றி பரிதாபப்பட்டு சொன்னது நினைவுக்கு வந்தது. அந்தக் காபாலிக மடிராஜனுக்குத் தன்னை காவு கொடுப்பதாக குருதேவ் வாக்களித்ததாக காளிங்கன் சொன்னதும் இவன் தன்மேல் பரிதாபப்படுவதாக உடையவரிடம் நாடகம் ஆடுகிறான் என்றுதான் நினைத்தாள். ஆனால், தற்சமயம் அதை நினைத்தபோது அவள் உடம்பு ஒரு முறை சிலிர்த்தது. குருதேவ் பலமுறை தன்னை நம்பி அண்டி வந்தவர்களை மோசம் செய்ததை அவள் அறிவாள்... ஆனால், அத்தனையும் அரசியல் ராஜதந்திரம் என்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டவள்தான் அவள். ஆனால், அதே அரசியல் ராஜதந்திரத்துக்குத் தானும் பலியாடாக ஒருவேளை குருதேவால் கொடுக்கப்பட்டால்...' என்னால் ஆக வேண்டிய ஒரு முக்கிய வேலை முடிந்துவிட்டது... இனியும் என்னை வைத்து அவரால் என்ன நன்மை பெறமுடியும் என்று குருதேவ் நினைத்தால்... ஒருவேளை தன் அழிவு மிகப்பெரிய பயன் ஒன்றினை தருவதாக குருதேவ் நினைத்தால் தன்னை மகள் என்றும் பாராமல் பலி கொடுத்துவிடுவாரே... அவருக்கு என்ன... நான் உண்மையான மகளா... என் வாள் வித்தையை கேள்விப்பட்டு என்னிடம் வந்தார்... வந்த சமயம் நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்தது... நன்றாகவே பயன்படுத்தினார்...'

நினைக்க நினைக்க குருதேவ் மேல் காத்யாயினிக்கு வெறுப்பு படர ஆரம்பித்தது. தான் ஏன் இப்படி முன்னமேயே சிந்திக்காமல் ஏமாந்துவிட்டோம்... அந்தக் காளிங்கன் படித்துப் படித்துச் சொன்னான்... 'அடி காத்யாயினி! அந்த பில்வணன் ஒரு சூதாட்டக்காரன்... நீ ஒரு பகடைக்காய்... முடிவில் பகடைக்காய் பலி கொடுக்கப்படும்...' உண்மை தானே... முடிவில் மடிராஜனுக்குப் பலியாக வேண்டியது தான்...



காத்யாயினி சற்று வாய் விட்டு அழுதாள். ஏன் அழுகின்றோம் என்று அவளுக்குத் தெரியாமல் அழுதாள். சற்று நேரம் சென்றவுடன் கண்களை துடைத்துக் கொண்டவள் மெல்ல எழுந்தாள். 'ச்சே... இந்த வலது கை சரியான சமயத்தில் தொல்லை கொடுக்கிறது... நான் மட்டும் உலகில் ஏன் துயரப்படவேண்டும்... என்னைப் போல் மற்ற பெண்கள் நன்றாகத்தானே இருக்கிறார்கள்... சரி... சரி... இனி எதையும் நினைத்து நினைத்து உருகுவதால் என்ன பயன்?

அவள் மெல்ல எழுந்து நடந்து அந்த அறை ஓரத்தில் கூடையால் கவிழ்க்கப்பட்டிருந்த ஒரு துணிப்பையை எடுத்தாள். பெருமாளின் சங்கும் சக்கரமும் அநாதையாய் மூலையில்... அதுவும் எங்கோ குடிசையில்... அந்தப் பையில் சக்கரத்தைத் தொட்டவளுக்கு ஏனோ சிசுபாலன் ஞாபகம் வர சற்று பயத்தோடு அப்படியே வைத்தவள் அந்த அழகான சங்கினை மட்டும் இடது கையில் எடுத்துக் கொண்டு மறுபடியும் ஓலைப்பாயில் அமர்ந்து கொண்டாள்.

'மிக அழகான சங்கு' மனதுள் நினைத்தவள் மிருதுவாக தடவினாள். தன் மடியிலும் வைத்துக் கொண்டாள். சங்கைப் பற்றிய ஆண்டாள் பாடல்கள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. அந்த வைணவப்பெரியவர் ஒரு முறைதான் சொன்னாலும் அவர் சொன்னவிதம் நன்றாக மனதில் பதிந்தது. அதை அடுத்தநாளே ஆண்டாள் கோலம் கொண்டு அவர் சொன்னதையே ஆண்டாள் சொல்வதைப்போல் சொல்லி சபையோரின் கண்களை நனைய வைத்தவள். அத்தனை பெரியவரை உருக வைத்தப் பாட்டுகள்... அத்தனை பெரிய உள்ளம் கொண்டவர், தான் ஆண்டாள் என்று நினைத்து தன்னை கைகூப்பி வணங்கினாரே...

எத்தனை அழகான பொருளுள்ள பாடல்கள்... அந்த பத்து பாடல்களிலும் கதாநாயகன் இந்த சங்குதானே... ''கண்ணனின் இடது தோளில் வீற்றிருக்கும் சங்கரய்யா! உம்மைத் திருடிக் கொண்டு வந்து விட்டேன் என்று வருத்தமோ...'' என்று அந்த சங்கினை தன் இடது கையால்

அசைத்துக் கேட்டாள். ''கண்ணனுக்கு நீர் உற்ற தோழனோ? உம்மை அவனிடமிருந்து பிரித்தால் உமக்குக் கோபமோ'' மறுபடியும் காத்யாயினியின் செவ்விதழ் கேள்வியை வீசியது.

கண்ணனின் வாயமுதம் கிடைக்கப்பெறாத அவன் செல்வப் பெண்டாட்டிகள் சங்கினை குற்றம் சாட்டும் பாட்டு அவள் நினைவுக்கு வந்தது... அந்தப் பாட்டினை அன்று சபையிலும் படித்தோமே...

''ஆண்டாள் சொல்வது சரிதான். இப்போது உம்மைக் கண்ணனிடமிருந்து பிரித்ததால் கண்ணனின் காதலிகள் எல்லோரும் என்னைப் பாராட்டுவார்கள்தானே'' என்று தன் மடியில் கிடந்த சங்கினை சற்று அதட்டிக் கேட்டாள்.

'திடீரென தான் ஏன் இப்படியெல்லாம் நினைத்துக் கொள்ள வேண்டும்...' என்று நினைத்துக் கொண்டவள் அதற்கும் சமாதானம் சொல்லிக் கொண்டாள். இதிலென்ன தவறு? அனுபவம் அதிக போதனைகளையும் உண்மைகளை யும் வெளிப்படுத்தினால் அதை ஏற்றுக் கொள்வதுதான் அழகு. தாமே ஒரு சமயம் ஆண்டாளை இப்படியும் கடவுள் மேல் காதல் கொள்ளும் பைத்தியம் போல் நினைத்தது உண்டுதான். ஆனால் அவள் அப்படி காதல் கொண்டதனால் கண்ணனின் அருள் கிட்டியது... ஊரெல்லாம் இன்னமும் புகழ்கிறது... இனியும் புகழும்... ஆனால், காதல் என்ற ஓர் உணர்ச்சியையே தூக்கி எறிந்தவள்தானே நான்... அவஸ்தைப் படுகிறேன்...'

''என்மேல் காதலோடு வந்த காளிங்கனை உதறித் தள்ளிய வள் நான்... சங்காரே... போகட்டும்... நான்தான் குற்றம் செய்தவள்... ஆனால், அதற்காக காளிங்கனை ஏன் தண்டிக்கிறாய்... இதற்கு நீரே ஒரு வழி சொல்லும்... நான் என்ன செய்தால் என் காளிங்கன் இந்தப் பழியில் இருந்து தப்பிக்க முடியும்...?'' சங்கினைப் பார்த்து கேட்டாள். உருக்கம் அவள் குரலில் பூரணமாக இருந்தது.

'பேசாமல் கோயிலுக்கே எடுத்துச் சென்று இந்த சங்கினையும் சக்கரத்தையும் எடுத்தது நான்தான்... என உண்மையை ஒப்புக் கொண்டால்? ஊஹூம்! அவர்கள் யாருமே அதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்... காளிங்கன் பயந்து இப்படி பெண் மூலம் ஏற்பாடு செய்ததாக பழி மேலும் அவன் மேல் விழும்... வேண்டாம். வேண்டாம்...



பேசாமல் காளிங்கனையே பார்த்து இந்த சங்கினைக் கொடுத்து விட்டால்? வினையே வேண்டாம்... அவனிடம் கொண்டு கொடுத்தால் அவன் திருடியதைத் தானே ஊர்ஜிதம் செய்தவளாகிப் போவேன்... அவமானத்தால் அவன் அழிய வேண்டிவரும்...'

'ஐய்யோ... நினைக்க நினைக்க குழப்பத்தை அதிகமாக்கி வரும் இந்த சங்கினை இனி பார்ப்பதில்லை' தனக்குள் கூறிக் கொண்டே அவள் மறுபடியும் எழுந்து சங்கினை துணிப்பையால் மூடி அதன் மேல் பனை ஓலைக்கூடையும் கவிழ்த்துப் போட்டாள். அப்படி எழுந்து அசைந்ததால் மறுபடியும் வலது கை வலி சற்று அதிகமாக இருந்தது. வலியை மறக்க காற்றாட வெளியே வந்தவள் மலைச்சரிவில் எதிர்ப்பகுதியில் குதிரைகள் காலடி ஓசை கேட்க அங்கே உற்றுப் பார்த்தாள். ஒரு வேளை சர்வதேவாவோ... அவன் நாளைதானே வர வேண்டும்... ஏதேனும் அவசர செய்தியோ...

குதிரைப்படை சற்று அருகில் வந்ததும்தான் தெரிந்தது வந்தது சர்வதேவா இல்லை... சாமுண்டர்யன். ஆனால், எதிர் மலையில் வந்தவர்கள் அங்கேயே நின்றார்கள். இவள் குடிசையை நோக்கி யாரோ ஒரு வீரன் கையைக் காண்பித்தான். சற்று நேரம் அங்கே நின்று அந்தக் குடிசைப் பகுதியைப் பார்த்த சாமுண்டர்யன் முன்னே வந்து இவள் இருக்கும் மலை ஏறாமல் தான் வந்த வழியே பின்னே படைகளுடன் திரும்பிச் சென்றான்.

காத்யாயினி கைவலி மறைந்து இதயத்தில் அந்த வலி ஏற்படுவதை உணர்ந்தாள்.

# 25

# பதில் உதவி

'மாதங்களில் நான் மார்கழி' என்று சொன்ன கண்ணனின் மெய்ம்மைப் பெருவார்த்தைக் கேற்ப சிறந்து நின்ற அந்த மார்கழி மாதத்தின் குளிர் திருவேங்கடவன் மலையில் சற்று அதிகமாகவே அன்று இருந்தது. இரவு நேர ஆரம்பத்திலேயே பனிக்காற்று போல வீச ஆரம்பித்த அந்த குளிர் காற்று நேரம் செல்ல செல்ல குளிரின் அழுத்தத்தை அதிகரித்து வந்ததால் மலையிலும் மக்கள் நடமாட்டம் அறவே குறைந்து காணப்பட்டது. சற்று முன்னர்தாம் கோயில் கதவும் அடைக்கபட்டதன் அடையாளமாக காண்டாமணியின் 'டண்' எனும் ஓசை மலையெங்கும் எதிரொலித்து ஓய்ந்ததால் பக்தர்கள் கூட ஓய்வுக்குக் சித்தமாகி உள்ளேயே அடைந்து கிடந்தார்கள். ஆனால், ஒருவன் மட்டும் அப்படி அடைபடாமல் வெளியே வந்து ஒரு கல் படிக்கட்டில் அமர்ந்துகொண்டு தன் மேல் சற்று கொடூரமாக படிந்த குளிரையும் தாங்கிக் கொண்டு கையில் கிடைத்த சிறு சிறு கற்களால் அந்த மலைச்சரிவை நோக்கி வீசிக் கொண்டிருந்தான்.

காளிங்கன்தான் அவன். இரவு நேரம் பார்த்து வரச் சொன்னோமே - வருவாளோ என்ற சந்தேகமும் அவன் மனதுள் எழுந்ததுதான். ஆனால், அவன் சந்தேகம் அதிக நேரம் நீடிக்கவில்லை. சுகந்தமான கூந்தல் மலர் வாசனையை காற்று முன்னே கொண்டு வர பின்னேயே அந்த அழகான அவந்திகா மெல்ல நடைபோட்டு வந்தாள்.

இவள் வரும் நேரத்தில் தான் ஏன் வரவேண்டும் என்ற பொறாமையாலோ என்னவோ சந்திரன் வானத்தில் காணப்படவில்லைதான். ஆனாலும், வானத்தில் வெண் மேகங்கள் பரவிக்கிடந்ததால் ஒரு மங்கலான வெளிச்சம் சுற்றுப் புறமெங்கும் காணப்பட்டு சற்று வெளிச்சத்தையும் கொடுத்ததால் அவந்திகாவின் அழகையும் காளிங்கனால் ரசிக்கவே முடிந்தது.

''வா....அவந்தி! இப்படி உட்கார். மலைப்பகுதிகளை இரவு நேரத்தில்கூட திருவேங்கடமலையில் ரசித்துப்



பார்க்கலாம்... பார்... உன் தலைக்கு மேலேயே ஒரு வெண்மேகம் உன்னைத் தடவிப் பார்க்க முயற்சி செய்கிறது. சீக்கிரம் குனிந்து உட்கார்ந்து கொள்..''

அவன் வரவேற்றமுறை கூட அவந்திகாவுக்கு பிடித்துதான் இருந்தது. வெண்மேகம் கூட தன்னை தழுவுவதை விரும்பாதவர்... கண்களில் சற்று பெருமை இருந்தும் வேண்டுமென்றே நின்றாள். வாயையும் திறக்கவில்லை.

''ஏன் அவந்தி... அன்று இரவு நான் யாரென்று அறியாமலேயே படபடவென பேசினாய்... இரவு முழுக்க என்னவெல்லாம் பேசினாய்? ஏன் இன்று மாலைகூட என்னிடம் வாதிட்டாயே... இப்போது ஏன் பேசாமல் நிற்கிறாய்... ஓஹோ.. அத்தையம்மா அருகில் இருந்தால்தான் அதிகைமான் மகள் தன் திருவாயை மெல்லத் திறந்து பேசுவாரோ.. அப்படியானால் சரி... போய் அத்தையையும் அழைத்து வருகிறேன்....மூவரும் அமர்ந்து இரவு முழுவதும் இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருப்போம்...'

என்று சொல்லி எழுந்தவனை அவன் கைபிடித்து தடுத்தாள். சற்று அருகில் வந்து கைபிடித்ததால் வெட்கம் முகம் முழுவதும் பாய கண்கள் நிலம் தாழ நின்றவளைப் பார்த்தான்.

ஆசிரியர் வெங்கடேச புராணத்தைப் பற்றி சொல்லியது நினைவுக்கு வந்தது. ஆதியில் திருவேங்கடவனுக்கு கைங்கர்யம் செய்து வந்து ஓரே பக்தனான ரங்கதாசன் வானத்திலிருந்து வந்த காந்தர்வப் பெண்ணிடம் மயங்கி சுவாமி சேவையையே தவிர்த்தானாம். அதனால் அடுத்த பிறவி எடுத்து தொண்டைமானாகி சுவாமியின் அருளால் வேங்கடவனுக்கே கோயில் கட்டும் பாக்கியத்தையும் பெற்றானாம். கந்தர்வ கன்னிகள் அடிக்கடி வரும் இடமோ திருவேங்கடம். அப்படிப்பட்ட கந்தர்வக்கன்னி மறுபடியும் அவந்திகா உருவில் தன் முன்னால் நின்று கொண்டிருக் கிறாளோ.

அவன் இடது கையை அவள் வலது கை பிடித்துக் கொண்டிருந்ததால் தன் வலது கையால் குனிந்திருந்த அவள் முகத்தினை சற்று நிமிர்த்தினான்.

கண்கள் முகத்துடன் வெட்கத்திற்காக போட்டி போட்டது போலும்... ஆனால், அந்த வெட்கத்தை காண்பிக்காமல்

அவள் இமைகள் அழகிய விழிகளை திரைபோட்டு மூடியது. தன்னால் நிமிர்த்தப்பட்ட அந்த அழகு முகத்தைக் கண்குளிரப் பார்த்தான். குவித்த புருவமும் கொவ்வை செவ்வாயும் நீண்ட நெற்றியும் நீள் விழிகளும் என்று தில்லைக் கூத்தனுக்காக ஏற்பட்டிருந்த வர்ணனைகள் அப்படியே அவளுக்குப் பொருந்தியதைக் கண்டான். அந்த அழகான முகத்தில் கண்கள் மூடிய நிலையில் ஒரு தெய்வீகப் பெண்மணியின் களை தென்படுவதாகவே பட்டது. அவந்திகா அருமையான பெயர்... ''அவந்தி... அவந்தி...'' சற்று வாய் திறந்து சொல்லிப் பார்த்து மகிழ்ந்தான்.

சட்டென கண்மலர்ந்தாள் அவள். தன்னையே பார்த்துக் கொண்டு தன் பெயரையும் இருமுறை சொல்லிப் பார்த்த அந்த ஆண்பிள்ளையின் பார்வையை அவளால் தாங்கமுடிய வில்லை. முகம் சற்று தாழ்ந்தது. ஆனால், தாழ்ந்த நிலையிலும் விழிகள் மேலோடு அவனைப் பார்த்தாள்.

''இப்படித்தான் பெண்களை வெறித்துப் பார்ப்பதா... கையை விடுங்கள்...

''ம்ஹூம்... என்னால் முடியாது.''

''ஏனாம்?...''

''அது அப்படித்தான்...''

''அது அப்படித்தான் என்றால்... சே... வெட்கமாயில்லை?...''

அவனைப் பார்த்து கேட்டவள் மேலும் முகம் சிவக்க தலை குனிந்து நின்றாள்.

''நான் ஆண்பிள்ளை...எனக்கேன் வெட்கம்...சரி... விட்டு விடுகிறேன்... ஆனால்...''

''என்ன ஆனால்?''

''நீ ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும்...''

''என்னவாம்?''

''முதலில் என்னைப் பிடித்த உன் கை விலகினால்....''

வேண்டுமென்றே அவன் இழுத்தான். அவள் சட்டென தன் கையை விடுவித்துக் கொண்டாள். 'ஐயோ... தான் இவர் கையை பிடித்தது அறியாமலே பேசிக்கொண்டிருக்கிறோம்...வெட்கம் கெட்டவள்...' என்று மனதுள் கடிந்து கொண்டாலும் ஆனந்தம் மட்டும் அவள் உடல் முழுவதும் பரவி நின்றது. அந்தப் படிக்கட்டில் அவள் அமர்ந்து கொண்டு தன்னருகே அமர அவனுக்கும் இடம் கொடுத்தாள்.



அவள் மனம் ஆனந்தத்தில் திளைத்தாலும் வாய் மட்டும் ''திருடர்..திருடர்...'' என மெல்ல அழைத்துக் கொண்டிருந்தது.

''யார் திருடன்... நானா?''

''பின் வேறு யாராம்? சாதாரண திருடர் இல்லை... சங்கு சக்கரத் திருடர்... அது சரி! அந்த சங்கையும் சக்கரத்தையும் களவாடினீர்களே... அதை எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்?''

''நீயும் மற்றவரைப் போலத்தான் நினைக்கிறாயாக்கும்! போகட்டும்... அப்படியே நினைத்துக் கொள்ளேன்...''

''நான் கேட்ட கேள்விக்கு பதிலைக் க்காணோம்.''

''நீ என்ன கேட்டாய்?''

''சங்கையும் சக்கரத்தையும் எனக்கும் காண்பியுங்கள் என்று!''

''நான் நினைத்ததை அப்படியே சொல்கிறாய் அவந்தி. அதற்காகத்தான்...''

சட்டென அவன் வார்த்தைகளை வெட்டினாள்.

''ஊர் உறங்கியதும் அழைத்தீர்களோ?''

ஆவல் அதிகமாக கேட்டதை உணர்ந்தான் அவன். குளிர் அதிகமானால் என்ன? அதிகைமான் மகள் சுகமாக கதகதப்பை அருகிலேயே அமர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும் அந்த ஆனந்த நிலையை மிகவும் ரசித்தான். ''பெண் என்பவள் எல்லா வகையிலும் ஆணுக்கு உறுதுணையாக இருக்கவே ஆண்டவனால் படைக்கப்பட்டாளோ'' அந்த அழகுப் பாவையை கண்ணாறப் பார்த்து மகிழ்ந்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்? இன்னும் என்னென்ன திருடினோம். அதையெல்லாம் இந்தப் பெண்ணிடம் காண்பிக்கலாமா வேண்டாமா என்று பார்க்கிறீர்களோ...''

கண்களை உற்றுப் பார்த்துக் கேட்கப்பட்ட கேள்வியை காளிங்கன் வேண்டுமென்றே தவிர்த்தான்; பேச்சையும் திசை மாற்றினான்.

''அவந்தி! பெருமாள் தரிசனம் செய்தாயே... பெருமாளிடம் என்ன வேண்டிக்கொண்டாய்? 'இந்தத் திருடன் திருந்த வேண்டுமே...' என்று வேண்டிக் கொண்டாயோ?''

அவந்திகா அழகாக சிரித்தாள். அந்த இரவிலும் அவள் சிரிப்பு கவர்ச்சியாகவே பட்டது அவனுக்கு.

''நான் பெருமாளை தரிசிக்கவில்லை.''

''அத்தையம்மாவுடன் கோயிலுக்குள் சென்றதை நான் பார்த்தேனே. ஏன் சந்நிதிக்குள் போகவில்லையா? ஓ அத்தனை சிவப்பித்தா...?''

அவனும் சிரித்தான்.

''இருங்கள் வீரரே! இருங்கள்... நான் கோயிலுக்குள் சென்றதும் உண்மை. சுவாமியை ஆனந்தமாக, மனம் குளிர கண்ணாற தரிசித்ததும் உண்மை. ஆனால், அவன் என் கண்களுக்குப் பெருமாளாகத் தெரியவில்லை. சிவனின் ரூபமாகத்தான் தெரிந்தான். ஆகையினால் கண்களை மூடி ''நமச்சிவாய வாழ்க... நாதன் தாள் வாழ்க... இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என மனதுள் திருவாசகம் பாடி அவன் திருப்பாதம் பார்த்து அவனை துதித்தேன. வலது கால் ஊன்றி, எடுத்த இடது பாதத்துடன் நடனமாடி உலகை வாழவைக்கும் எம் தில்லைக் கூத்தபிரான் ஒருவேளை இங்கு இரு காலூன்றி நின்று என்னை ஆசிர்வதிப்பதாக என் மனதில் தெளிவாகப்பட்டது. அவன் எனக்கு சிவரூபமாகத்தான் தெரிந்தான். தென்னாடுடைய சிவனுக்கு மலை மீது ஏறி நின்று பக்தருக்கு அருள் புரிய வேண்டுமென்று தோன்றியதோ என்னவோ...''

தலையை ஒரு பக்கமாய் சாய்த்து கண்களும் மேலே பார்க்க மனத்தினை சிவத்துடன் இணைத்து யதார்த்தமாக தான் நினைத்ததை அப்படியே பேசும் அவந்திகாவை அவன் விந்தையாய் பார்த்தான். அற்புதமான பெண் இவள்...

''அவந்தி! உன் சிவபக்தி தூய்மையானது. கள்ளமறியாத உன்னைப் போன்ற தூய்மையான உண்மையான



பக்தர்களுக்கு இந்தத் திருவேங்கடத்தான் சிவன்தான். ஆனால், பொதுவாக பார்க்கும்போது அவன் திருமால்தான். அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்..''

சொன்னவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம் அவந்தி! திருவேங்கடமுடையான் திருமால் ரூபம்தான். தில்லைக் கூத்தனை திருமால் ரூபமாக வணங்கலாம் என்றால் திருமலை நாதனையும் சிவனாகப் பார்க்கலாமே தவிர திருச்சிற்றம்பலமுடையான் சிவன்தான். அதைப்போல திருவேங்கடமுடையான் திருமால்தான். இந்த விஷயத்தில் நான் மிகத் தெளிவாக இருக்கிறேன்...''

''அப்படியா?''

''ஆமாம்... இது சாமான்ய மனிதர்களின் வெகு சாதாரணமான சித்தாந்தம்... அதுதான் உண்மை... அந்த உண்மையைத்தான் ஆண்டவனும் விரும்புகிறான்... இந்த தத்துவப்படி பார்த்தால் திருவேங்கடமுடையான் திருமால் தான்!''

சற்று நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

''அப்படியானால்... நீங்கள் திருமாலின் சங்கையும் சக்கரத்தையும்...'' அவளை முடிக்க விடவில்லை காளிங்கன்.

''ஏன் களவாட வேண்டும் என்று கேட்கிறாய் இல்லையா? அவந்தி.. உன்னிடம் ஒரு உண்மையைக் கூறுகிறேன்.. நான் அவற்றைக் களவாடவில்லை..''

அவந்திகா சட்டென எழுந்தாள். அவள் கையைப் பிடித்து இழுத்து மறுபடியும் தன்னருகே அமர வைத்தான்.

''உட்கார் அவந்தி! தெய்வம் வழிகாட்டியது போல வந்த உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் போய் இந்த உண்மையை கூறுவேன்? ஆசிரியரிடமும் அத்தையிடமும் கூட சொல்லாத நான் உன்னிடம் சொல்கிறேன் கேள்..''

அவனை ஆதரவாகப் பார்த்தாள். அவன் கைகளைப் பிடித்து தன் உள்ளங்கைக்குள் வைத்து அந்த ஆதரவினை உணர்ச்சி பூர்வமாக காட்டினாள். காளிங்கனுக்கும் அந்த உணர்ச்சி அதிகமாக தேவைப்பட்டது போலும்...

''அவந்தி! கடந்த சில நாட்களாக நான் கடும் வேதனையில் ஆழ்ந்து அவதிப்படுகின்றேன்.. இந்த அவதிகளுக்கெல்லாம் காரணம் ஒரு பெண்...''

''பெண்ணா?''

அதிர்ச்சியினால் அவந்திகா சட்டென கேட்டாள். அந்த அதிர்ச்சி அவன் கைகளுக்கும் அவள் கைகள் மூலம் கிடைத்தது.

''யார் அவள்?'' மறுபடியும் கேட்டாள் அவந்திகா.

சொன்னான் காளிங்கன். காத்யாயினி ஆசிரியரைக் கொல்ல முயன்றதிலிருந்து திருவேங்கடவன் கோயிலில் மலைவாழ் பெண் வேடமணிந்து கூடையுடன் நின்ற கோலம் வரை விரிவாகவே சொன்னான். சங்கும் சக்கரமும் மறைந்த அந்த இரவில் தன் கண் முன்னே சந்நிதிக்குள் மறைந்த விந்தையையும் சொன்னான். அடுத்த நாள் காலை மிளகாழ்வான் ஓடோடி வந்து களவு போன விஷயம் சொன்னதும்தான் சங்கு சக்கரத்தைக் களவாடியவள் காத்யாயினிதான் என்பதையும் தான் புரிந்து கொண்டும் எப்படி அவற்றை திருப்ப வேண்டும் என்பது மட்டும் புரியாமல் இருப்பதும் அவளிடம் சொன்னான்.

''அவந்தி! அவள் பில்வண மந்திரத்துக்கு முழுதும் கட்டுப்பட்டவள். உனக்குத்தான் மடிராஜனைத் தெரியுமே... அவனுக்குத் தேவைப்பட்ட விதத்தில் காத்யாயினியை பலிகொடுப்பதாக மடிராஜனிடம் பில்வணன் வாக்குக் கொடுத்திருக்கிறான். அவளும் தானே முன் வந்து தலையை கொடுக்கும் நிலையில் பில்வணன் வைத்திருக்கிறான். இன்று நாட்டில் நடக்கும் அனைத்துக் கலவரங்களுக்கும் அவன்தான் காரணம்... காத்யாயினியை சரியான முறையில் பயன்படுத்தி சங்கு சக்கரத்தை அவன் களவாடியுள்ளான். ஆனால், நான் வெளியே சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். எங்கோ இருக்கும் பில்வணனுக்கும் திருவேங்கடவன் திருக்கோயிலுக்கும் என்ன சம்பந்தம் என்று எதிர் கேள்வி எழுப்புவார்கள்.''

அவந்திக்கு அனைத்தும் புரிந்தது.

''இப்போது அந்தப் பெண்ணை கண்டுபிடிக்க வேணுமே...''



''ஒருவழியாக அவள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டேன். வரும் மார்கழி உற்சவம் ஆரம்பிப்பதற்குள் சங்கினையும் சக்கரத்தையும் பெருமாளிடம் எப்படியும் சேர்ப்பித்து விடுவது என்று வாக்கு கொடுத்துள்ளேன். இல்லையேல் இந்த மலையிலிருந்து...''

முடிப்பதற்குள் அவன் வாயை மூடினாள். அவள் கண்களில் பொலபொலவென கண்ணீர் வரத்தொடங்கியது. நினைத்துப் பார்க்கவே விரும்பாத அந்தச் செயலை காளிங்கன் செய்ய நேரிட்டால்... ஐயோ... என் அப்பனே... தில்லை வாழ் கூத்தனே... தேடித் தேடி எனக்குக் கிடைத்த இந்த அரும்பொருளை இழக்க நேரிடுமோ.... சிவனாரின் கணமாக என்னைக் காப்பாற்ற அந்த நட்ட நடு நிசியில் ஆளில்லா காட்டில் இவரை அனுப்பிக் காப்பாற்றினாயே... ஒருவேளை அது கனவா..' என்ன தோன்றியதோ கண்ணீருடனே அவனை ஏறிட்டுப் பார்த்த அவந்திகா, அவன் ஏதும் பேசுமுன்பே அவன் தலையை இழுத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

''வேண்டாம்... அந்த வார்த்தையே பேசவேண்டாம்... இதோ பாருங்கள்... என்னைப் பொறுத்தவரை அந்த தில்லையம்பலத்தானே உங்களை என்னிடம் அனுப்பி இருப்பதாகப் படுகிறது. இல்லையென்றால் உங்களை நான் ஏன் காண விரும்பி தந்தையிடம் இருந்து பிரிந்து வரவேண்டும்... அல்லது நீங்கள் சொன்னீர்களே... தெய்வமே என்னை உங்களிடம் அனுப்பியதாக... அப்படி ஏன் நினைக்க வேண்டும்? இனியும் உங்களை இழக்க நான் சம்மதிக்க மாட்டேன். ஒருவேளை சிவன் சித்தம் வேறுவிதமாக இருந்தால் உங்களுக்கு முதன்முதல் பலியாக நான் இருப்பேன். இது தில்லைக் கூத்தன் மீதாணை...''

அவள் கண்ணீருடன் உணர்ச்சிகரமாக பேசியது காளிங்கனையும் ஒரு நிலைக்கு கொண்டு வந்திருக்க வேண்டும். அவன் தலை நிமிர்ந்து அவளை ஆறுதலாக பார்த்தான். அவள் கண்ணீரையும் துடைத்தான்.

''அவந்தி! என்ன இது. ஏன் உணர்ச்சி வசப்படுகிறாய்? ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள். பில்வணன் தெரிந்தோ தெரியாமலோ கடவுளை முன் நிறுத்தி தன் விளையாட்டை துவக்கியுள்ளான். ஆண்டவனை நம்புபவர்கள் நாம்... அவனுக்குத் தெரியும்... இந்த விளையாட்டை எப்படி முடித்து வைப்பதென்பது. ஆனால்

ஒன்று... ஆண்டவன் எதையும் செய்வான் என்று நம் கடமைகளை ஒதுக்கக்கூடாது. நாம் நம் கடமையை செய்வோம்... முதலில் நீ கலங்கக் கூடாது... வீரமகளாக இருக்க வேண்டும். ஏன் தெரியுமா...''

அவனை ஏதும் அவள் கேட்காமல் பார்த்தாள். ஆனால் கண்ணீர் மட்டுமே நின்றிருந்தது.

''நீயும் இந்த விளையாட்டில் பங்கு பெறப் போகிறாய், இது விளையாட்டுதான். ஆனால், வினையாகக் கூட முடியலாம்... உன் உயிருக்கே ஆபத்தாகக் கூட முடியலாம்... ஆனால் ஒன்று. உன்னருகேயே இந்தக் காளிங்கன் இருப்பான். என்னையும் மீறித்தான் உனக்கு அபாயம் வரும். ஆனாலும் நீ எப்போதும் மனதுள் நினைக்கும் தில்லைக்கூத்தன் உன்னைக் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த நம்பிக்கையில் உன் உதவியை நான் நாடுகிறேன்!''

மெல்லச் சொன்னாலும் உறுதியாக வந்த காளிங்கன் குரல் அவளைப் பரவசப்படுத்தவே செய்தது. 'தென்னாடுடைய சிவனே... உனக்கு நன்றி! இவரை மட்டும் அன்றிரவு அனுப்பாவிட்டால் என் வாழ்க்கை எப்படியெல்லாம் தடம் மாறி இருக்குமோ... உன் ஒவ்வொரு செயலிலும் ஒரு அர்த்தம் உள்ளதோ... இல்லையென்றால் எங்கோ கொங்கு நாட்டில் பிறந்து எந்த ராஜாவுக்கோ வாழ்க்கைப் பட்டு ஏதோ போல வாழ்க்கை நடத்த வேண்டியவளை திருவேங்கடம் அனுப்பி இத்தனை நாடகமும் ஆடுகிறாய் சிவசிவா... இவர் சொல்வது போல் எனக்கு அபாயம் வந்தாலும், என் உயிருக்கு ஆபத்து வந்தாலும் அதை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்வேன்... இப்படிப்பட்ட சுகத்தை விட வாழ்க்கையில் வேறென்ன தேவை...'

''வீரரே! என்னைப் பற்றி இனி எந்தக் கவலையும் நீங்கள் கொள்ள வேண்டாம்... அந்தப் பெண்ணின் இருப்பிடம் தெரிந்து கொண்டதாக சொன்னீர்களே... எங்கே என்று சொல்லுங்கள்... நான் அவளிடம் செல்கிறேன்...''

தன் மனதுள் உள்ளதை படித்தவள் போல பேசிய அவந்திகாவை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''நானே சொல்ல வேண்டுமென நினைத்ததை நீயே சொல்லிவிட்டாய் அவந்தி. ஆனால், இந்த உடையில் செல்லவேண்டாம். மலைவாழ் மகளிர் உடையணிந்து



உறவினர் முறையாக செல்லவேண்டும். இரண்டு நாட்கள் ஆனாலும் பொறுமையாக காத்திருக்க வேண்டும். உனக்குப் பாதுகாவலாக நான் இருப்பேன். முதலில் சங்கும் சக்கரமும் எங்கே ஒளித்து வைத்திருக்கப்பட்டுள்ளது என்பதை கண்டுபிடிக்க வேண்டும். பிறகு அவளையும் மீட்க வேண்டும்.''

அந்தப் பெண்ணை மீட்க வேண்டும் என்பதை ஏன் அழுத்தமாக சொல்கிறான் என்பது அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும், அவள் மகிழ்ச்சியாகவே இருந்தாள்.

''வீரரே! நான் எத்தனை சந்தோஷமாக இருக்கிறேன் தெரியுமோ... ஒரு மிகப் பெரிய நாடகத்தில் எனக்கும் ஒரு பங்கா... சிவ சிவா... உனக்குத்தான் என் முதல் நன்றி!'' என்று வானத்தை நோக்கிப் பார்த்து சொன்னாள். பிறகு அவனை சற்று விஷமமாகப் பார்த்து புன்னகை செய்துகொண்டே பேசினாள்....

''வீரரே! தெய்வ சங்கல்பமாக நான் உங்களுக்கு உதவும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனக்கு நீங்களும் ஒரு உதவி செய்ய முடியுமா?''

காளிங்கன் அவளைக் கருணையாய் பார்த்தான்.

''கேள் அவந்தி! எந்த உதவியானாலும் நான் செய்யக் கடமைப்பட்டுள்ளவன். உன் உயிரையே எனக்காக பணயம் வைக்கிறாய். உனக்கு நான் உதவமுடியும் என்றால் அதைவிட மகிழ்ச்சி ஏது சொல்!''

ஆனாலும் விஷமம் அவள் பார்வையில் இருந்து இன்னமும் நீங்கவில்லை.

''அந்த உதவியை நான் கேட்டுத்தான் பெற வேண்டுமா? கேட்காமலேயே எடுத்துக் கொண்டால்?''

''நீ சொல்வதும் சரிதான் அவந்தி! என் மேல் உனக்கு பூரண உரிமை உள்ளது... என்னைக் கேட்காமலேயே என் மூலம் உதவி வந்தால் அதை நீ தாராளமாகவே எடுத்துக் கொள்ளலாம்...''

ஆனந்தமாகவே சொன்னான் காளிங்கன். அதையும் ஆனந்தமாகவே ரசித்தாள் அவந்திகா. அவள் சொன்னபடி அவன் உதவியும் அவள் கேளாமலேயே பெற்றுக்

கொண்டாள்தான். ஆனால், உதவி என்ன என்பது ஊருக்கு புரிந்தபோது அவளைப் பெற்றவனான அதிகைமானும் ஆத்திரப்பட்டான். அன்புடன் அவளை அரவணைத்து அழைத்து வந்த அம்மங்கா தேவியும் வருத்தப்பட்டாள்தான்.

## 26

## பயணம் எங்கே எப்படி முடியும்?

**மி**ளகான் பரமசந்தோஷமாக திருமலையெங்கும் உலாவிக் கொண்டிருந்தான். அவன் சந்தோஷத்திற்கு ஏகப்பட்ட காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணம், உடையவர் மலையேறப் போவதாக வந்த செய்திதான். அவன் மனத்தில் இன்னொரு புதிய சந்தோஷமும் குடி கொண்டது. எல்லாம் அறிந்த உடையவர்தான் அவனை முன்பே அழைத்து திருவேங்கடமலை ஏறப் பணித்திருக்கிறார். இல்லையென்றால் அரக்க பரக்க திருச்சித்திரகூடத்துப் பெருமாளை அப்படியே விட்டு விட்டு திருவேங்கடகூடம் வந்தவனை சித்திரகூடப் பெருமாள் சேவைக்கு திருப்பி அனுப்பாமல் திருமலை ஏறி சேவிக்கும்படி ஏன் ஆணை இட வேண்டும்? உடையவர் மனதில் என்னென்ன எண்ணங்களோ அப்போது அறியோம்... இப்போது நினைத்துப் பார்த்தால்தான் புரிகிறது. இதுவரை திருமலை ஏறாத உடையவர் முதன் முதலாக திருமலை ஏறி வேங்கடவனை மங்களாசாசனம் செய்ய வருகிறார். அந்தக் கண்கொள்ளா காட்சி இந்த சிறியவனுக்கும் கிடைக்கட்டும் என்ற பெரிய மனது பண்ணித்தான் தன்னை இங்கு அனுப்பி வைத்தாரோ... அவர் ஆதிசேஷனின் அவதாரம் என்றல்லவா சொல்கிறார்கள். ஆஹா எத்தனை ஆனந்தம்...

மிளகானுக்கு ஆத்திரம் வந்தாலும் சரி; ஆனந்தம் வந்தாலும் சரி... ஆளைப் பிடிக்கமுடியாது. பூமிக்கும் வானுக்கும் குதியாய் குதிப்பான். அப்படிப்பட்ட சந்தோஷ சமயத்தில்தான் அவந்திகா அவன் முன்னே வந்தாள்.

மற்றவர் நெற்றியில் திருநீற்றைக் கண்டால் முகத்தை சுளிக்கும் மிளகாழ்வான் ஏனோ இந்தப் பெண்ணின் நெற்றியில் அந்த ஒற்றைக்கோடு திருநீறு ஏகமாய் ஜொலிப்பதாக கண்டான்.



''என்ன வைணவரே.. உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்.. உங்களிடம் இப்போது பேசமுடியுமா என்று கூட தெரியவில்லை. சைவர்களும் வைணவர்களும் இப்போ தெல்லாம் பேசக் கூட சமயம் கிடைக்காமல் ஒருவருக் கொருவர் நேரடியாகவே தாக்கிக் கொள்கிறார்களாம்... ஊரெங்கும் இதே அமளிதான். நீரோ பரம வைணவர்... நானோ சிவன் மீது பித்து கொண்டதாக நீங்களே உங்கள் நண்பரிடம் சொன்னீர்களாம். அப்படிப் பட்ட சிவபித்தான நான் உங்களைப் போன்ற பரம வைணவரோடு ஏதாவது பேசி வைக்க... உங்களுக்கு ஏராளமாக கோபம் வர, பிறகு எதற்கடா போயும் போயும் இவரிடம் உதவி நாம் கேட்டோம் என்று தான் தோன்றும்...''

'தன்னைப் போலவே படபடவென பேசுகிறாள். ஆனால் தன்னைவிட புத்திசாலித்தனமாகவும் பேசுகிறாள்! இருந்தாலும் உற்சாகமாகவே பதில் தந்தான் மிளகான்.

''இளவரசியார் அவர்கள் என்மீது ஏதோ கோபத்தோடு சண்டை போட வேண்டும் என்றே வந்தார்கள் போலும்! தேவி! தாங்கள் சிவ பக்தையானாலும் சரி... ஹரி பக்தையானாலும் சரி... தங்களிடம் கோபம் கொள்பவன் படுமூடனாகவே இருக்க வேண்டும். நான் அப்படிப்பட்டவன் இல்லை. இளவரசியார் என்ன உதவி கேட்டாலும் அதை அப்படியே செய்ய கடமைப்பட்டவன் நான்..''

பணிவாக பதில் வந்தாலும் மிளகாழ்வான் குரலில் உற்சாகம் கலந்திருந்ததையும் கண்டாள் அவள்.

''உற்சாகமாகவே பதில் சொல்கிறீர்கள். ஆனால், நன்றாக ஆலோசித்து சொல்கிறீர்களா... இல்லை சிறு பெண்ணாயிற்றே என்ற பரிதாபத்தில் உதவி செய்ய முன் வருகிறீர்களா?''

''அபசாரம் தேவி! கட்டளையிடுங்கள் தேவி! தாங்கள் சொல்ல வேண்டியது... அடியேன் செய்ய வேண்டியது.. அவ்வளவே.''

''மிகவும் நன்றி வைணவரே! எங்கே தாங்களும் மற்றவர்களைப் போல் கைவிட்டு விடுவீர்களோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

''ஏன் தேவி... வேறு யாருமே உதவவில்லையா தங்களுக்கு?'' சந்தேகமான குரலில் சற்று இழுத்தே கேட்டான் ஆழ்வான்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்! எனக்கு இந்த மலையை சுற்றிப் பார்க்க ஆசை... மலைவாழ் மக்களோடு பழக ஆசை.. மலைப் பெண்களைப் போல் ஆடையணிந்து அவர்களோடு பேச ஆசை. இதை சோழமகா தேவியாரிடம் சொன்னால் 'தற்போதைய சூழ்நிலையில் இதெல்லாம் எதற்கு' எனக் கோபப்படுகிறார். உங்கள் நண்பர் காளிங்கருக்கோ பெருமாள் பித்து பிடித்துக்கொண்டு விட்டது. சதா சர்வகாலமும் சங்கு சக்கரம் என்று ஆகாயத்தைப் பார்த்து பிதற்றிக் கொண்டே இருக்கிறார்... அவரும் எங்கும் போவதில்லை... என்னையும் அழைத்துப் போவதில்லை... நீங்களே சொல்லுங்கள்... இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படியே பொழுதை ஓட்டுவது?''

அவந்திகாவின் சொற்கள் சுள்ளென உரைத்தது மிளகாழ்வானுக்கு. இந்தப் பெண் ஏதோ வினைக்கு அடி போடுகிறாள் என்றும் தெரிந்தது. இன்னும் சில தினங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் உடையவர் மலையேறி வரும் சமயத்தில் இப்படி ஓர் அன்புத் தொல்லையா? நான் உடையவரை கவனிப்பேனா... அல்லது இளவரசியை மலை மலையாக சுற்றிக் காண்பித்துக் கொண்டிருப்பேனா? நாராயணா...

அவன் எண்ணங்களை அவளும் ஊகித்திருக்க வேண்டும்.

''பார்த்தீர்களா வைணவரே! நீங்கள் கூட மௌனம் சாதிக்கிறீர்கள். போகட்டும்... நான் தனியாகவே செல்கிறேன்.. எனக்கென்ன அச்சம்? இந்த மலைக் காடுகளில் தனியே நட்ட நடு நிசியில் கட்டப்பட்டு விடப்பட்டவள்... அப்படி ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விட்டால் இருக்கவே இருக்கிறது 'நாதன் நாமம் நமசிவாயம்'. வைணவரே! உமக்கொரு விஷயம் தெரியுமோ? ஒருமுறை இப்படி காட்டில் ஆபத்து வந்த போது நமசிவாயத்தைக் கூப்பிட்டேன்... உடனே எங்கிருந்தோ ஓடோடி வந்தார் உங்கள் நண்பர் காளிங்கராஜா...''

சொல்லிவிட்டு சிரித்தாள் அவள். ஆனால் ஆழ்வானுக்கு ஆச்சரியம்தான். படபடவென பேசினாலும் பழகுவதற்கும் எத்தனை இனிமையானவள். காளிங்கனை இவளும் காதலிக்கிறாள் போலும்! அதனால்தானோ என்னவோ அவனைக் காணவேண்டி துடியாய் துடித்து திருமலை ஏறி வந்தாளோ.



மிளகானுக்கு கங்கைக்கரை நாட்டு இளவரசி ஏனோ அப்போது நினைவுக்கு வந்தாள். 'ஆனால் அவள் மாயமோகினிதான். இந்தப் பெண் அப்படி அல்ல.. இவளுக்கு உதவி செய்ய வேண்டும்... ஆனால் உடையவர் வந்துவிட்டால்?'

''தேவி! தாங்கள் தனியே ஏன் செல்ல வேண்டும்... சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள். நானே உங்களை அழைத்துச் சென்று மலையெங்கும் சுற்றிக் காண்பிக்கிறேன். நீங்கள் முதலில் சொன்னீர்களே... அந்தக் குழப்பங்களையெல்லாம் தீர்ப்பதற்காகவே உடையவர் மலையேறி வரப்போகிறார். அவர் வந்தால் காணாமல் போன சங்கும் சக்கரமும்தானே வந்து விடும். அப்போது நானே உங்களை அழைத்துப் போவதாக சொன்னாலும் கேட்கப் போவதில்லை. ஏனெனில்...'' நிறுத்தினாள் அவனை.

''இருங்கள் வைணவரே... உடையவர் மலையேறி வருவதற்கும் சங்கு சக்கரம் திரும்பி வருவதற்கும் என்ன சம்பந்தம்?''

''அது அப்படித்தான் தேவி! நான் தினமும் கோயிலுக்குள் சென்று பெருமாளை வேண்டிக் கொள்வதெல்லாம் என்ன தெரியுமோ... 'உன் சங்கும் சக்கரமும் இல்லாமல் வெறும் தோளாய் இன்னும் எத்தனை நாள்தான் நிற்பாய்? முதலில் அவர்களை உன் தோளில் புழங்க விடு பெருமாளே...' என்றுதான் வேண்டிக் கொள்கிறேன். காளிங்கராஜாவின் சபதம் எனக்குத் தெரியும் தேவி! உங்கள் காளிங்கரைக் காப்பாற்றப் போவதும் உடையவர்தாம்... நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்...''

சந்தோஷமாகப் பேசினான் மிளகாழ்வான். சந்தேகமாய் பார்த்தாள் அவந்திகா.

''எப்படி வரவழைப்பாராம் உங்கள் உடையவர்? வானத்தை பார்த்து கையை தட்டி 'வா' என்று கூப்பிட்டால் சங்கும் சக்கரமும் வந்து விடுமா வைணவரே...

''ஏன் வராது தேவி! நீங்கள் நடுக்காட்டில் காப்பாற்ற நமசிவாயத்தைக் கூப்பிட்டதும் எங்கிருந்தோ என் நண்பர் வந்ததாக தற்போதுதான் சொன்னீர்கள்... அதைப் போலத் தானே இதுவும்.. எங்கள் உடையவர் ஆதிசேஷனின் அவதாரம்... அவர் அந்த நாகமாகவே மாறியாவது சங்கு சக்கரத்தை கொண்டு வந்து விடுவார்.''

''வைணவரே! உமக்கு வேண்டுமானால் அப்படி ஒரு நம்பிக்கை இருக்கலாம். இருக்கவேண்டும். அப்படி இல்லை என்றால் நீர் வைணவராகவே இருக்கமுடியாது. ஆனால், நான் கண்ணால் காண்பதையும் காதால் கேட்பதையும் விட தீர ஆலோசித்ததால்தான் பேசுகிறேன். சங்கும் சக்கரமும் மாயமானது முடிந்த போன கதை. இனிமேலும் திரும்பியும் வராது. அதனால் உமக்கு ஒன்றும் பெரிதான வேதனை இல்லை. ஆனால், எங்கள் காளிங்கர் பெயர் கெட்டு அவதிப்பட்டும் அவமானப்பட்டும் மடிவதுதான் நடக்கும். இதை என்னால் அனுமதிக்க முடியாது. அதுவும் இங்குள்ள மக்கள் ஒரு வார்த்தை அவர் மீது சொல்லக் கூட விடமாட்டேன். அந்த வார்த்தை அவர் செவியில் ஏறவும் விடமாட்டேன். ஆகையினால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.''

''தேவி! தயை செய்து தாங்கள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம். திருவேங்கடமுடையான் நம் எல்லோரும் நினைத்ததையே செய்து முடிப்பான். நான் சொல்வதைக் கேளுங்கள் தேவி!''

அவந்திகா மிளகாழ்வானை சோகத்தோடு பார்த்தாள்.

''அப்படியானால் நீரும் மற்றவரைப் போல இந்த அனாதைக்கு உதவப்போவதில்லை. அதைச் சொல்லாமல் கடவுள்மேல் பாரத்தைப் போடச்சொல்கிறீர்கள். போகட்டும். நீர் என் கூட வரவும் வேண்டாம். எனக்கு மலையை சுற்றியும் காண்பிக்க வேண்டாம். இன்னொரு சிறிய உதவியைக் கேட்டால் செய்வீர்களா, இல்லை அது கூட முடியாது என்று பட்டென முகத்தில் அடித்தாற்போல் சொல்லி அனுப்பி விடுவீர்களா?''

அவந்திகாவின் பேச்சில் சூடு பறந்தாலும் அவனுக்கு சற்று நிம்மதியை தந்தது. 'உடையவர் வரும் சமயத்தில் இவளாகவே தன்னை அழைத்துப்போக வேண்டாம் என்று சொல்கிறாள். அதுவரைக்கும் நிம்மதிதானே...'

''தேவி! என்னை தாங்கள் எப்படி வேண்டுமானாலும் வைது தீர்க்கலாம்.. அதற்கு முன் உங்கள் உதவி என்ன என்பதை மட்டும் சொல்லிவிடுங்கள். எந்த பதிலும் தராது நிறைவேற்றி வைப்பேன்...''



''நன்றி! வைணவரே! நன்றி... உங்கள் ஆதரவு என் வறண்ட நெஞ்சில் பாலை வார்க்கின்றது. ஆனால் வார்த்தை மீற மாட்டீர்களே?''

''என்னால் செய்யக்கூடிய எந்த உதவியையும் செய்வேன்...''

''உம்மால் செய்யக்கூடியதுதான் ஐயா! நான் ஒன்றும் உம்மை உடம்பெல்லாம் திருநீறு பூசிக் கொண்டு சிவநாமம் சொல்லச் சொல்லி வற்புறுத்துவேன் என்று நினைத்தீரோ.. அவையெல்லாம் தாமாகவே வந்து உளமாற செய்தால்தான் நல்லது!''

ஆழ்வான் தவித்தான் 'இந்தப் பெண்ணிடம் அநாவசியமாக பேச்சுக் கொடுத்து மாட்டிக் கொண்டோம்!'

''தேவி! ஏன் இந்தக் கோபம்? தயவு செய்து நான் செய்ய வேண்டியது என்னவென மட்டும் சொல்லிவிடுங்கள். நாராயணன்மீது பாரத்தைப்போட்டு எப்படியாவது செய்து விடுகிறேன்.. போதுமா?''

அதிகைமான் மகள் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவனை சற்று அருகில் அழைத்து மிக மெதுவாகப் பேசினாள்.

''வைணவரே நான் இப்போது செய்யப்போகும் செயல் காளிங்கர் உயிர் பிழைப்பதற்காக செய்யும் செயல். ஆனால், அதற்கு உம் துணை வேண்டும்.''

''சொல்லுங்கள் தேவி!''

''நான் காளிங்கரை கடத்தப் போகிறேன். என்ன? ஆச்சரியமாகப் பார்க்கிறீர்? உண்மையாகவே அவரைக் கடத்திக் கொண்டு போகப்போகிறேன். இந்த திருவேங்கடவன் உற்சவம் ஆரம்பிக்கும் நாள் வரை அவர் இங்கு இருக்கக்கூடாது. ஒருவேளை நீர் சொல்வதுபோல் உம் உடையவர் சங்கையும் சக்கரத்தையும் தன் மகிமையால் கொண்டு வைத்தால் நல்லதுதான். ஆனால் அப்படி நடக்காவிட்டால் காளிங்கரின் நிலையை நினைத்துப் பாரும்...''

ஆழ்வான் நினைக்கும் நிலையில் இல்லை. ஆனாலும் அவந்திகாவை கேட்டான்,

''தாயே! உங்கள் முடிவு காளிங்கருக்குத் தெரியுமா?''

''தெரிந்தால் அவர் இதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பார் என்று நினைக்கிறீரா வைணவரே... ஏன் சோழமகாதேவிக்குத் தெரிந்தாலும் அவ்வளவுதான்... இன்னொரு ஆபத்தும் அவருக்கு இங்கு உள்ளது. அவருடைய எதிரிகள்... இதுதான் சமயம் என்று அவரைக் கொன்று போட்டுவிட்டு காளிங்கர் தற்கொலை செய்து கொண்டார் என்று ஊரெங்கும் தம்பட்டம் அடித்து விட வாய்ப்பும் இருக்கிறது...''

தன்னை அறியாமல் தலையாட்டினான் மிளகாழ்வான். 'அந்த சாமுண்டர்யனும் காகடியும் சந்தர்ப்பத்துக்காகவே காத்திருக்கிறார்கள். நாலூரானை பயன்படுத்தி எதுவும் செய்வார்கள்..'

''அது என்னவோ வாஸ்தவம்தான் தேவி!''

''அதனால்தான் சொல்கிறேன்... சில நாட்கள் அவர் இங்கு இருக்கக்கூடாது. ஆனால் ஒன்று... நான் கடத்திச் சென்ற பிறகு அவர் என்னால்தான் கடத்தப்பட்டுள்ளார் என்பதை அனைவரும் அறிய வேண்டும். இந்தச் சிறிய உதவியைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்... என்ன செய்வீர்களா?''

அவந்திகாவை பரம ஆச்சரியமாகப் பார்த்தான் அவன். இவள் எதையும் செய்யக் கூடியவள்தான். காளிங்கனை எப்பாடுபட்டாவது காப்பாற்றியே ஆகவேண்டும் என்பதற்காகவே தன் பெயர் கெட்டாலும் கெடட்டும் என்று செயல்படும் இவள் எண்ணம் எத்தனை உத்தமமானது. ஒருவேளை உடையவர் இந்த விஷயத்தைக் கேள்விப் பட்டால் 'இந்தப் பெண்கூட வைணவம்தான்' என்று சந்தோஷப்படுவாரோ.. மற்றவர்கள் துயரப்படக்கூடாது என்பது உன்னதமான எண்ணம் என்றல்லவா சொல்லுவார்..

''தேவி! நான் இதை எப்படி தெரிவிப்பேன்... ஏன் முன்பே சொல்லவில்லை என்று கேட்டால்?''

''நீர் பயமுறுத்தப்பட்டதாகச் சொல்லும்... கண்முன்னே காளிங்கருக்கு மயக்கப் பச்சிலை கொடுத்து அவந்திகாவும் அவள் வீரர்களும் புழக்கடைப் பக்கமாய் அவரைத் தூக்கிச் சென்று விட்டார்கள் என்று சொல்லும். ஏன் வைணவரே! ஒரு அபலைப் பெண் கேட்பதாக நினைத்து இந்த உதவியை செய்யவேண்டும். என் காளிங்கர் உயிர் பிழைக்க இந்த சிறிய உதவியை தாங்கள் மனமாறச் செய்ய வேண்டும்...''



கண்களில் நீர் முட்டிக் கொண்டு வருவதாக ஆழ்வானுக்குத் தோன்றியது. நெகிழ்ச்சியாகப் பேசினான் அவன்.

''கலங்காதீர்கள் தேவி! உங்கள் உன்னத குணம் புரிந்து கொண்டேன். காளிங்கரைக் காப்பாற்றும் பணியில் என் பங்கும் நிச்சயம் உண்டு தேவி! எப்போதும் உங்களையும் என் நண்பரையும் திருவேங்கடத்தான் நிழல் போல் தொடர்ந்து அருள் புரிய வேணும்....''

வாழ்த்தியவன் மேலும் ஒரு கேள்வி கேட்டான்.

''ஆமாம் தேவி! அவரை எங்கு கொண்டு செல்லப் போகிறீர்கள்?''

அவந்திகா மிளகாழ்வானை விசித்திரமாக ஒரு பார்வை பார்த்தாள்.

''எங்கு என்று எப்படி சொல்வது வைணவரே? போகும் பாதை தெரியும். ஆனால் பயணம் எதுவரை என்பதும் தெரியாது; அந்தப் பயணம் எங்கு போய் எப்படி முடியும் என்றும் தெரியவில்லை.''

வேதாந்தமாய் பேசியவளை வேதனையோடு பார்த்தான். இந்தப் பெண் தன் காதலனைக் காப்பாற்ற சற்று அதிகமாகவே துன்பப்படுகிறாள் என்பதாக வருத்தமும் அவன் முகத்தில் தெரிந்தது. கங்கைக் கரை இளவரசி காளிங்கரை ஏமாற்றப் பார்க்கிறாள். இந்தப் பெண்ணோ அவனைக் காப்பாற்றத் துடிக்கிறாள். இறைவன் ஏன்தான் இப்படி சோதனை செய்கிறானோ... சோதனை என்றதும் மிளகாழ்வானுக்கு சாமுண்டர்யன் மூலம் கங்கைக்கரை இளவரசிக்கு ஏற்படவிருக்கும் அபாயம் நினைவுக்கு வந்தது. அவளை ஆண்டாளாக நினைத்துப் பார்த்து அந்த ஆண்டாள் கண்ணனிடம் சேட்டை செய்தது போல் காத்யாயினி காளிங்கனை சீண்டி விளையாடியதும் நினைவுக்கு வந்தது. காளிங்கனோ காத்யாயினியை காப்பாற்ற துடிதுடிக்கிறான். அதிகைமான் புத்திரியோ காளிங்கனைக் காப்பாற்றப் போராடுகிறாள். 'திருவேங்கடமுடையானே! உன் தோளில் சங்கும் சக்கரத்தாழ்வாரும் ஏறுகிறார்களோ இல்லையோ... முதலில் இவர்கள் கலக்கத்தைப் போக்கும் வழியைக் காண்பிக்க மாட்டாயா?

அவந்திகா சொன்னபடியே செய்து காட்டினாள்.

மார்கழி பதினான்காம் நாளில் ஆண்டாளின் பாவைப் பாடலான 'உங்கள் புழக்கடைத் தோட்டத்து' பாட்டினை அனைவரும் பாடிக் கொண்டிருக்கும் வேளையில் காளிங்கனை அவந்திகாவும் அவள் வீரர்களும் ராஜகிருகம் புழக்கடை வழியாக கடத்திச் சென்று விட்டதாகவும் மிளகாழ்வான் தடுத்தும் கேட்காமல் மயக்கமடைந்த காளிங்கனோடு படுவேகமாக ஓடிவிட்டதாகவும் செய்தி மலையெங்கும் தீயாக ஆரம்பித்து நாட்டுக்குள்ளும் பரவ ஆரம்பித்தது.

அடுத்த இரண்டு நாட்களில் நடக்க இருக்கும் சாலவை சபையில் கலந்து கொள்ள வந்திருந்த உடையவரின் குழாமில் இருந்த ஆசிரியருக்கும் இந்த செய்தி தரப்பட்டது. அம்மங்காவே வருத்தத்துடன் அந்தச் செய்தியைத் தெரிவித்தாள். 'என்னதான் தைரியமான பெண்ணாக இருந்தாலும் அதற்காக இப்படி செய்யலாமா... தான் இனி எப்படி அதிகைமான் முகத்தில் விழிப்பது...'' என்று சண்டையும் போட்டாள்.

ஆனால், சாலவை சபையினரில் சிலரோ இதை வேறு விதமாக ஆலோசித்தனர். காளிங்கனே இந்த நாடகம் ஆடுவதாகவும் சங்கையும் சக்கரத்தையும் ஒரேயடியாக மாயம் செய்வதற்காக நடத்தப்படும் நாடகம் என்றும் பேசினர். அவர்களுக்கு நன்றாகவே தூபம் போட்டான் நாலூரான். வாதப்பிரதி வாதங்கள் ஊரையே கலக்கின.

மிளகாழ்வானும் கலங்கினான். சிறு பெண்ணின் சிறு பிள்ளைத்தனமான பேச்சைக் கேட்டு சற்று அதிகமாகவே செயல்பட்டு விட்டோமோ என்றும் வருந்தினான். அந்த வருத்தம் உடையவர் வருகையில் ஏற்படவிருந்த அவன் சந்தோஷத்தையும் அறவே நீக்கிவிட்டது.

# 27

# வலது கை போனால் என்ன?

சர்வதேவா சொன்ன செய்தியைக் கேட்டதும் காத்யாயினி அதிர்ச்சியாகிவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

''உண்மைதான் தேவி! ஊரெங்கும் இதே பேச்சுதான். காளிங்கனை அதிகைமான் குமாரத்தி அவந்திகா கடத்தி விட்டதாகவும், அவனுக்கு மயக்கமருந்து கொடுத்து தூக்கி சென்றதை நிறைய பேர் பார்த்ததாகவும் வதந்தி எங்கும் நிலவுகிறது. அந்தப் பெண்ணை நம் அதிராஜேந்திர ராஜாவுக்காக அதிகைமான் அரசர் நிச்சயம் செய்திருந்தாராம். ஆனால், அந்தப் பெண் நம் சோழராஜாவை திருமணம் செய்ய மறுத்துவிட்டாளாம். இந்தக் காளிங்கனைத் தான் கல்யாணம் செய்வேன் என்று சூளுரைத்து திருமலை ஏறி வந்து காளிங்கன் அயர்ந்த சமயம் பார்த்து மயக்கப் பச்சிலை கொடுத்து வீரர்களோடு தப்பிவிட்டாளாம். எமகாதகிதான் அந்த இளவரசி...''

சர்வதேவாவின் பாராட்டுகள் காத்யாயினிக்கு எரிச்சலை மூட்டின.

''சரி... சரி... இதையெல்லாம் நீ நம்புகிறாயா? ஏன் அந்தக் காளிங்கனோ இல்லை அந்த ஆசிரியரோ செய்திருக்கக் கூடாது? செய்யக்கூடியவர்கள்தானே... என்னையே கடத்தியதை மறந்து விட்டாயோ...''

''தேவி! வாஸ்தவம்தான்... ஆனால் இந்தத் தமிழர்கள் அனைவருமே கடத்தல் விவகாரங்களில் ஒருவரை ஒருவர் விஞ்சி விடும் திறமை பெற்றவர்கள். அந்த அவந்திகா ஒரு சிவப்பைத்தியமாம். எங்கே இந்த வைணவர்கள் தன் காதலனைக் கொன்று விடப் போகிறார்களோ என்ற அச்சம் காரணமாகத்தான் காளிங்கனை கடத்தி விட்டதாக சில வைணவர்களே சொல்கிறார்கள். ஊர் கூட அதை நம்புகிறது தேவி!

காத்யாயினிக்கும் கோபம் அதிகமாகவே வந்தது.

''ஊர் எப்போதுமே காணாததைக் கண்டது போல் பேசும். சர்வதேவா... அதற்காக இந்தப் பெண்ணின் பின்னால் இந்த மனுஷன் ஓடிப்போவான் என்று நினைக்காதே...''

''மன்னிக்க வேண்டும் தேவி! நான் நடந்ததையும் கேள்விப்பட்டதையும்தான் சொன்னேன்..''

சற்று சாந்தமானாலும் காத்யாயினியின் மனது வேதனையால் வாடியது. யார் இந்த அவந்திகா? எதற்காக திடீர் என இந்த விஷயத்தில் தலையிட வேண்டும்? ஏற்கனவே இருவருக்கும் ஏதாவது சம்பந்தம் உள்ளதோ? யாருக்குத் தெரியும்? இந்தத் தமிழர்கள் அனைவருமே திருடர்கள். அந்தத் திருட்டு கும்பலுக்குள் ஆயிரத்தெட்டு உறவுகள் ஒளிந்து கொண்டிருக்கும்..

''அவர்கள் எங்கே போனார்கள் என்ற விவரம் ஏதாவது கிடைத்ததா சர்வதேவா?

நமக்கு தேவையற்ற கேள்வியை ஏன் கேட்கிறாளோ என்று சர்வதேவா நினைத்தானோ என்னவோ... சற்று விட்டேத்தியாக பதில் சொன்னான்,

''தெரியாது தேவி! அவர்கள் எங்கே ஒழிந்தால் என்ன தேவி? ஒரு தொல்லை நம்மை விட்டுப் போனது. நம் எல்லா திட்டங்களுக்கும் குறுக்கே வந்தவன் அந்தக் காளிங்கன். அவன் இந்த மலைப்பகுதியில் இருந்து அகன்றால் நமக்கு நல்லது. அதற்கு அந்தப் பெண்ணுக்குத்தான் நாம் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்!''

''நன்றாக நன்றியை தெரிவித்துக் கொள்ளேன். நீயும் வேண்டுமானால் அவர்களோடு தொத்திக்கொண்டு உன் நன்றியை சொல்லிக் கொள். இங்கு ஏன் வந்தாய்?''

திடீரென எரிச்சல் தலைக்கேற பேசிய குரு புத்திரியைப் பார்த்தவன் சற்று பணிந்து நின்றான். அவள் கோபம் அவனுக்குப் புதியதாய் தெரிந்தது. அவர்கள் எதிரிகள் என்பதையே ஒருவேளை மறந்து பேசுகிறாளோ...

''சரி... போகட்டும்! அவர்கள் எங்கே சென்றால் நமக்கென்ன? சர்வதேவா! இந்தச் செய்தி உனக்கு எங்கே கிடைத்தது? திருமலையிலா? திருவேங்கடகூட நகரிலா?

''எங்கும் இதே பேச்சுதான் தேவி! சாலவை சபையினர் நாளை மதியம் கோயிலில் பெரிய கூட்டமாய் கூடுகிறார்கள். ராமானுஜர் வேறு மலையேறி பெரிய கூட்டமே பின்தொடர கோயிலருகில் காத்துக் கொண்டிருக்கிறாராம். மலையெங்கும் சைவர் கூட்டமும் வலுத்துவருகிறது தேவி! எங்கு பார்த்தாலும்



நம் குருதேவ் சொன்னபடியே சைவர்களும் வைணவர்களும் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டும் கோஷம் போட்டுக் கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். நம் குருதேவுக்குப் பரம சந்தோஷமாம்..''

''குருதேவ் வருகிறாரா?''

''குருதேவ் வருவது பற்றி எந்த தகவலும் இல்லை தேவி! ஆனால் இப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் குருதேவ் வருவதில்லை என்று உங்களுக்கே தெரியுமே! ஆனால் அவர் போட்ட திட்டப்படி எல்லாமே அப்படியே நடக்கிறது.. அவர் எங்கிருந்தோ ஆட்ட எல்லாருமே ஆடுகிறோம். நாம் என்ன தேவி! இந்த கடவுள்கூட குருதேவ் சொல்பிரகாரம் நடக்கிறார் போல தெரிகிறது. இதில் இன்னொரு வேடிக்கை தெரியுமா தேவி?''

''சொல்!''

''கஷ்டப்பட்டு மலையேறி வரும் ராமானுஜர் அந்த பெருமாளின் சங்கு சக்கரத்தை மாயமாய் வரவழைத்து பொருத்தப் போகிறாராம். வைணவர்கள் மத்தியில் இப்படிப் பேசுகிறார்கள்... அவர்கள் சொல்வதைக் கேட்டால் தங்களுக்கு கூட சிரிப்பு வரும் தேவி!''

சிரித்தான் அவன். ஆனால் அவள் கண்டு கொள்ளவில்லை. ''அந்த ஆசிரியர் தற்சமயம் எங்கு இருக்கிறார்?''

''அவரும் அந்த வைணவர்கள் மத்தியில் இருக்கிறார். பலர் அவரை விரும்பவில்லை. வேறு சிலர் அவர்தான் ராமானுஜரை எப்படியாவது இந்த விஷயத்தில் மாட்டி விட சதி செய்வதாகக் கூட சொல்கிறார்கள். ஆசிரியருக்கு அரசியல் இஷ்டமாம். ராமானுஜரை இஷ்டமில்லாமல் அரசியலில் இழுத்து அவருக்கு அவமானம் செய்கிறார் என்று சிலர் பேசுகிறார்கள். ஆனால், ஆசிரியர் என்னதான் முயன்றாலும் குருதேவின் புத்திபலம் முன்பு அவர் பூஜ்யம்தான். ஒருவேளை அந்தக் காளிங்கன் மட்டும் திருமலையில் இருந்தானானால் நாம் சற்று அச்சப்பட வேண்டி வரும். அவன் எதையாவது செய்து தடுக்கமுயல்வான்.. அவந்திகா சமயத்தில் அந்தத் தடையையும் அகற்றி விட்டாள்!''

மறுபடியும் காத்யாயினி சோகத்தில் ஆழ்ந்தாள். அந்தப் பெண்ணுக்கு அவ்வளவு தைரியமா? அழகு அதிகம் உள்ள தமிழ்ப் பெண்ணோ என்னவோ? இந்த மனிதருக்கு அழகான

பெண்கள் என்றால் போதுமே... மயக்க மருந்தே தேவையில்லை... இவரே அவள் பின்னால் ஓடியிருப்பாரோ என்னவோ...

ஒருவேளை நான் அன்று அவர் கேட்டுக் கொண்டபடி திருமலை ஏறி வாராமல் இருந்திருந்தால் அந்தப் புதியவளின் திட்டம்தான் இப்போது எடுபட்டிருக்குமோ... அன்றே அவர் பேச்சைக் கேட்டிருக்க வேண்டும்... ஒரு அருமையான சந்தர்ப்பத்தை தவற விட்டு இப்போது அலறுகிறோமே. என்னுடைய மூடத்தனத்தால் பெருமாளுக்கு சங்கும் சக்கரமும் போயிற்று.. என்னை விட்டு அந்த காளிங்கனும் ஓடிப் போய்விட்டான்.. என்னால் எனக்கே கஷ்டம் வந்து விட்டதே... இப்போது ஊர் கூட கொந்தளித்துக் கொண்டிருக்கிறதே.. அதற்கும் நான்தான் காரணம்.. ஒருவேளை இப்படி எல்லாவற்றையும் செய்விப்பது அந்தக் கடவுள்தானா... திருடியான எனக்குத் தண்டனை அளிக்கின்றானோ.. காளிங்கனை யாரோ ஒருத்தி வலையில் விழச் செய்து நான் இப்படி வேதனைப் படுவது கூட ஒரு தண்டனைதானே. இதோ என் கையும் ஒடிந்து போய் மனமும் நொந்து போய் ஒற்றை ஆளாய் ஏன் இந்த மலையில் தவியாய் தவிக்க வேண்டும்...

''சர்வதேவா! நடப்பது என்ன வேண்டுமானாலும் இனி நடக்கட்டும்... ஆனால் காவலுக்கு நீ இருப்பாயா அல்லது மற்றவர்களைப் போல் நீயும் ஓடிப் போய் விடுவாயா?

''தேவி! என்னை மன்னிக்க வேண்டும்..''

இழுத்தான் அவன். ''தாங்கள் வருத்தப்பட்டு சொன்னாலும் நான் இந்த மலையிலிருந்து அகன்றுதான் ஆக வேண்டும்.. அப்படிப்பட்ட உத்தரவுதான் வந்துள்ளது தேவி!''

முதலில் சர்வதேவாவின் வார்த்தைகள் புரியவில்லை அவளுக்குப் புரிந்தபோது ஏதோ சதி ஒன்று தன் பின்னேயே நடப்பதாக உணர்ந்தாள் காத்யாயினி.

''சர்வதேவா! என்னையும் மீறி இந்த உத்தரவு யார் தந்தது.. என்னைக் கேட்காமல் உன் விஷயத்தில் யாரும் தலையிட்டதில்லையே... இது என்ன புதுமை?''

''புதுமைதான் தேவி! எனக்கு உத்தரவிட்டவர் சாமுண்டர்ய ராஜா. விக்கில மஹாராஜாவின் முத்திரை பதித்த ஓலையை அவரே காண்பித்தார். அதில் தங்களைப் பற்றியும் மஹாராஜா குறிப்பிட்டுள்ளார்...''

முதல்முறையாக அவள் முகத்தில் ஒருவகையான நிதானம் குடிகொண்டது. அந்த நிதானம் அவள் குரலிலும் தாராளமாக காணப்பட்டது.

''சொல் சர்வதேவா! என்னைப் பறறி என்ன தகவல் உள்ளது? ஒருவேளை சாமுண்டர்யன் சொல்படி அவனுடன் அவன் சொல்லும் இடத்துக்கு நான் செல்ல வேண்டும் என்ற கட்டளை உள்ளதா? தயங்காமல் சொல்!''

''தேவி! தாங்கள் ஊகித்தது ஓரளவு சரி. சாமுண்டர்யன் தங்களுக்கு தேவைப்பட்ட பாதுகாப்பை அளிப்பார் என்று மட்டும் ஓலையில் குறிப்படப்பட்டுள்ளது. வேறு ஒன்றும் இல்லை. ஆகையினால் தங்களிடம் விடை பெற்றுப் போகும் அவசியமும் ஏற்பட்டுள்ளது...''

''நல்லது சர்வதேவா! நீ செல்லலாம்.. ஆனால் உன் வாளை இங்கு வைத்து விட்டு போ.. என் பாதுகாப்புக்கு அந்த வாள் ஒன்றே போதும்!

''தேவி! தங்கள் வலது கை இருக்கும் நிலையில்..'' என்று இழுத்தவனை ஏளனமாக பார்த்தாள்.

''வலது கை போனால் என்ன சர்வதேவா? என் இடது கை நன்றாகவே வேலை செய்கிறது. நீ வாளை இங்கேயே வைத்து விட்டுச் செல்...''

சர்வதேவா வாளை அவள் குடிசையின் மேற்பகுதியில் செருகிவிட்டு சென்று விட்டான். காத்யாயினியின் உள்ளம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது. 'ஏதோ சதி நடக்கிறது. அந்தச் சதியில் இவர்கள் அனைவருக்குமே பங்கு உண்டு. இவர்களைப் பொறுத்தவரை என்னால் ஆக வேண்டிய பணிகள் முடிவடைந்து விட்டன. காளிங்கன் சொன்னபடி இவர்கள் சூதாட்டத்தில் நான் ஒரு பணயப்பொருள் போலும். பார்ப்போம்... இனிவரும் எந்த ஆபத்தையும் சந்திப்போம். அதில் என் உயிரே போனாலும் போகட்டும்...'

உள்ளம் குமுறிக் கொண்டே இருந்தது. இரவு மருத்துவப் பெண் ஒருத்தி கைகட்டு எடுத்து கையை பரிசோதித்தாள். சிறிது பத்திய சாப்பாட்டை ஊட்டி விட்டாள். இரண்டு

நாட்கள் பார்த்துவிட்டு மறுபடியும் தேவைப்பட்டால் கைகட்டு கட்டுவோம் என்று சொல்லிவிட்டு அவள் உறங்க செல்ல ஏதுவாக இரவு தீபத்தையும் மந்தமாக்கி விட்டுத்தான் சென்றாள்.

அறையின் மந்தமான நிலையைப் போல் தன் வாழ்க்கையும் மந்தமாகி விட்டதாக உணர்ந்தாள் காத்யாயினி. ஏன் எனக்கு மட்டும் இந்தத் தவிப்பு? ஏன் எனக்கு மட்டும் இந்த இருண்ட வாழ்க்கை. காளிங்கன் சொன்னது போல ஊழ்வினைப் பயன்தானா?

நித்திரை வர மறுத்தது. இருந்தும் கண்களை மூடி கண்ணயர முயற்சி செய்தாள். கண்ணுக்குள் கருமணியாய் காளிங்கன் உட்கார்ந்து கொண்டு தொல்லை தருவதாக பட்டது அவளுக்கு. ஆனால், அவனைத் தன் கண்களிலிருந்தும் மனத்துள்ளிருந்தும் கட்டாயமாக வெளியே தள்ள முயன்று தோற்றுப் போனாள். அயர்ச்சியாக இருந்தது. வலது கையை மேலே போட்டுக் கொண்டு பக்கவாட்டில் திரும்பிப் படுத்தாள்.

''காத்யா! சங்கையும் சக்கரத்தையும் மட்டுமா கள வாடினாய்? என் உள்ளத்தையும் கூட எடுத்து சென்ற திருடி நீ.. ஆண்டாள் போல் வேடமிட்டு அநியாயமாக அந்த பிராம்மணர்களை ஏமாற்றியது போல் என்னையும் ஏமாற்றப் பார்த்தாயோ.. எங்கே அந்த சங்கு? எதற்காக மாயம் செய்தாய்.. கண்ணனின் பெண்டாட்டிகள் உன்னிடம் வந்து நீதி கேட்டார்களோ? அவர்களுக்காகத்தான் அந்த சங்கினை மாயம் செய்தாயோ.. நீ யாரை ஏமாற்றுகிறாய்.. உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டு தவறு மேல் தவறாக சிசுபாலன் செய்ததுபோல் செய்கிறாய்.. அடி சண்டாளி! உன்னால் நானல்லவா இப்போது சிக்கிக் கொண்டு அவதிப்படுகிறேன்.. போகட்டும்.. நீ எப்படியாவது ஒழிந்து போ.. நானே உனக்காக அத்தனை திருட்டுப் பழியையும் சுமக்கிறேன்.. இதுதான் நான் உனக்குக் கொடுக்கும் தண்டனை.. போ.. ஒழிந்து போ.. என் கண்முன் வராமல் போய் விடு..''

அப்போது யாரோ ஒரு கறுத்த பெண் உருவம் ராட்சஸி போல் வந்தாள். காளிங்கன் முகம் வெகுவாக அச்சப்பட்டு மறுபடியும் வந்தான். 'அவந்திகா' என்று பயத்தோடு அலறினான். அந்த அரக்கி தன் வலது கையால் அப்படியே காளிங்கனை தூக்கினாள். ''ஐய்யோ காதயா...காப்பாற்று...



காப்பாற்று'' அலறினான் காளிங்கன். காத்யாயினி உடனே எழுந்திருந்து போய் அவனை காப்பாற்ற துடியாய் துடித்தாலும் அவளால் எழ முடியவில்லை. வலது கை வேறு வலித்தது. கண்களில் கண்ணீர் பொங்கியது. அதைப் பார்த்து அந்த அரக்கி சிரித்தாள். சிரித்துக் கொண்டே காளிங்கனையும் கட்டிப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள். ''ஐயோ காளிங்கன் கடத்தப்படுகிறான்... கங்கைக் கரை இளவரசி! உன் மாமன் மகனை மறுக்காதே அவனைக் காப்பாற்று... எங்கேயோ எப்போதோ கேட்ட குரல் ஒன்று கெஞ்சுகிறது. ஆனாலும் அவளால் எழமுடியவில்லை. குரு தேவ் ஓடிவந்து காத்யாயினியை கண்டிக்கிறார்.. ''காத்யாயினி! என்ன செய்கிறாய்.. உடனே உடனே காளிங்கனை கொன்றுவிடு!'' சத்தமாக கத்துகிறார். சாமுண்டர்யன் குருவிடம் வருகிறான். மண்டியிட்டு வணங்குகிறான்.

''குருதேவ்... கலங்காதீர்கள். காத்யாயினி தடம் மாறி விட்டாள். இனி நான்தான் உங்கள் வாரிசு. கத்தியில்லாமல் ரத்தமில்லாமல் இந்த உலகத்தையே ஆளப்பிறந்த உங்கள் வாரிசு இனி நான்தான். அந்தக் கொடியவனைக் கொல்லும் பொறுப்பும் என்னுடையதே'' என்றவன் கூரையில் செருகியிருந்த சர்வதேவாவின் வாளை எடுத்து வானில் எறிகிறான். அது பறந்து சென்று அரக்கியின் கைகளில் அலறிக் கொண்டிருந்த காளிங்கனின் தலையை ஒரே சீவு...

''வேண்டாம்... வேண்டாம்.. ஐயோ விட்டுவிடுங்கள்.. கடவுளே... கடவுளே... உன் சங்கு... உன் சங்கு... சக்கரம் நானே தருகிறேன்... கடவுளே ... கடவுளே..''

காத்யாயினி திடீரென எழுந்து உட்கார்ந்தாள். 'நடந்தது அனைத்தும் கனவு'. 'கண்டது கனவா... இல்லை நடக்கப்போகும் உண்மைகளின் பிரதிபிம்பமா' என்று அவளுக்குத் தெரியவில்லை. 'ஒருவேளை அவந்திகா உண்மையில் ராட்சஸ வம்சமோ... ஐயோ ஒருவேளை மயக்கநிலையில் கிடக்கும் காளிங்கனை எளிதாக சாமுண்டர்யன் வெட்டி வீழ்த்தி விடுவானோ... அந்த உண்மையைத்தான் கனவாக கண்டாமோ... ஐயோ தெய்வமே... திருவேங்கடத்தானே... உன் சங்கையும் சக்கரத்தையும் இதோ இந்தக் கணமே விடுதலை செய்து விடுகிறேன்... நீயே எப்படியாவது உன்னிடம் அவற்றை திருப்பிக்கொள். என் காளிங்கனுக்கு மட்டும் எப்படியாவது உயிர்ப்பிச்சை கொடு...'

இரு கைகளையும் ஒன்று சேர்த்து கும்பிட முயன்று முடியாமல் வலது கை உயிரற்றது போல் கீழே விழுந்தது போல் உணர்ந்தாள். ஆனால் வலி மட்டும் ஏராளமாக பரவ ஆரம்பித்தது. அவள் அழகிய முகம் கண்ணீர் காய்ச்சி சோகமாக இருந்தது. ஏதும் தோன்றாமல் அப்படியே படுத்தாள். மெல்ல மெல்ல உறங்கிப்போனாள்.

காலையில் சூரியனின் கிரணங்கள் மேற்கூரை ஓட்டைகளின் வழியே மேலேபட எழுந்தவளின் மனதில் இரவில் கண்ட கனவுகள் பசுமையாக வலம் வந்தன. கனவு என்பது நடக்கப்போவதை முன் கூட்டியே காட்டும் காட்சிதான் என்று மனதுள் சொல்லிக் கொண்டாள். கலக்கம் அதிகமாக அதிகமாக மனம் குழம்பியது. அவள் மனக்கலக்கத்தை மாற்ற மருத்துவச்சியும் முயன்று தோற்றுத்தான் போனாள். காலையில் வந்த அந்த மலைப்பெண் அவளை மலை ஓடையில் உடல் அயர்ச்சி தீர குளிப்பாட்டி ஆடை அலங்காரம் செய்து சிறிது உணவினை ஊட்டியும் அவள் கலக்கத்தை போக்கமுடியவில்லை. சிசுருட்சை செய்தும் பலனளிக்காமல் போகவே அந்த அழகுத்தேவதையை மறுபடியும் ஓய்வெடுக்க வற்புறுத்தி ஓலைப்பாயில் படுக்கவைத்துத்தான் சென்றாள்.

ஆனால், காத்யாயினி கண்களை மூடாமல் வாயில் பக்கமே பார்த்திருந்தாள். கண்களை மூடினால் மறுபடியும் அந்தக் கனவு வருமோ என்று அச்சப்பட்டாள். மறுபடியும் அவந்திகாவால் காளிங்கன் துன்புறுத்தப்படுவானோ... மறுபடியும் சாமுண்டர்யனால் காளிங்கன் தலை வெட்டப்படுமோ...

நினைக்கவே பயந்து தன் இடது கையால் கண்களை கசக்கினாள். அப்போது ஏதோ வாயிலில் சப்தம் கேட்க அச்சத்துடன் வாசலைப் பார்த்தவள் அங்கே ஒரு பெண் நிற்பதையும் உணர்ந்தாள்.

மலைவாழ்ப்பெண் உடையில் இருந்தாலும் அழகாகவும் நாகரீகம் சற்று அதிகம் தெரிய நின்றவளை கேள்விக் குறியாய்ப் பார்த்தாள் காத்யாயினி.

நடுவகிடு எடுக்கப்பட்டு தழையத்தழைய வாரிய கூந்தலை அள்ளி முடிந்து பக்கவாட்டில் கோபுரம் நிற்பது போல் நிற்க வைத்து அழகிய நெற்றியில் சாந்துப் பொட்டுடன் வெண்மையான திருநீற்றையும் ஒற்றைப்பட்டையாய் மேலே அணிந்து அழகு அங்கமெல்லாம் மிளிர உள்ளே நுழைந்தவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள் காத்யாயினி.



வந்தவள் படுத்திருந்த காத்யாயினியிடம் குனிந்து மண்டியிட்டு அவள் வலது கையினை மெல்ல எடுத்து தடவி ஆறுதல் கொடுத்தாள். காத்யாயினியின் முகத்தில் விழுந்த ஓரிரு முடிக்கற்றைகளையும் ஒதுக்கி கூந்தலோடு ஒருங்கே சேர்த்தாள். கண்கள் கருணையோடு அவள் முகம் பார்க்க, கைகள் அன்போடு ஆறுதல் தர அந்த மதிய உச்சி வேளையிலே வந்த அந்த தேவதையைப் பார்த்து குரலில் ஆச்சரியம் தொனிக்க கேட்டாள்.

''யார் நீ?''

கருணையாய்ப் பார்த்திருந்த அந்த தேவதை கனிவோடு ஒரு புன்னகையையும் பரிசாக அளித்து பதிலையும் மெதுவாக சொன்னது.

''அவந்திகா!''

## 28

# துளசியும் திருநீறும்

''சிந்தாமணிகள் அல்லைப் பகல்செய் திருவேங்கடத் தானே'' என நம்மாழ்வார் திருவேங்கடமுடையானைப் போற்றுகிறார். இந்திரனின் கழுத்தை மட்டுமே அலங்கரிப்பதாக சொல்லப்படும் சிந்தாமணி நினைத்ததை அருளும் சக்தி படைத்த மணியாம். ஆனால், அப்படிப்பட்ட பல சிந்தாமணிகள் திருமலையெங்கும் ஏராளமாகப் பரவிக் கிடப்பதால் இரவைக் கூட தன் ஒளிவெள்ளத்தால் பகலாக்குகிறது என நம்மாழ்வார் பாடியதிலிருந்து திருமலைக்கு வரும் பக்தர்கள் மனதில் நல்லதை நினைத்து வேண்டினால் உடனே அருள் பெறமுடியும். அப்படிப்பட்ட மலைதான் திருமலையோ என்று எண்ணத் தோன்றும். இந்த ரகசியத்தை எப்படியோ அறிந்து கொண்ட மனிதர்கள் அனைவரும் திருமலை மீதேறி அந்தச் சக்தியை தாமும் அனுபவிக்க வருகிறார்களோ என்ற அளவில் அன்று மனிதர் கூட்டம் மலையெங்கும் வியாபித்திருந்தது.

மார்கழி ஆரம்பித்து பதினாறாம் நாளான அன்று காலை வழக்கமாக திருவேங்கடபூபதியின் தரிசனம் காண வரும் சூரியன்கூட மலையில் இத்தனை மனிதர்கள் எப்படி முளைத்தார்கள் என ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்... அந்த ஆச்சரியத்தை மார்கழிக் குளிரையும் மந்தப்படுத்தும் அளவுக்கு சற்றுக் கூடுதலாகவே கூட்டிய வெப்பத்தின் மூலம் காட்டினானோ என்னவோ... அன்று அதிகாலையிலேயே வெப்பம் சற்று சுள்ளென உரைக்கத்தான் செய்தது. ஆனால், மலைக்கு வந்திருந்த பக்தர்கள் மட்டும் இந்த அதிகாலை சூட்டினை சற்றும் லட்சியம் செய்யாமல் கூட்டம் கூட்டமாக கூடி சைவ வைணவ வாதப் பிரதிவாதங்களைக் கேட்பதும் எந்தப் பக்கம் வலு உள்ளதோ அந்தப் பக்கம் சாய்வதுமாய் தம் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தனர்.

எங்கும் கேட்கும் வாதப்பிரதிவாதங்கள் திருவேங்கட முடையான் திருமாலா? சிவனா? என்ற அடிப்படையில் ஆரம்பித்தாலும் ஏறத்தாழ வாதிகள் அனைவருமே அடிதடியில் முடித்துக் கொண்டது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பக்த ஜனங்களுக்கும் குதூகலத்தை அளித்திருக்க வேண்டும். அதனால், திருமலை எங்கும் 'ஹரஹர மகாதேவ்' என்றும் 'ஜெய் ஸ்ரீமன் நாராயணா' என்றும் மக்கள் கோஷம் போட்டுக் கொண்டே இருந்ததால் சில நாட்கள் முன்புவரை பறவைகளின் குக்கூ ஓசையைத் தவிர வேறெந்த சப்தமும் கேட்டறியாத அந்த மலைப்பகுதி தற்சமயம் ஆரவாரமும் ஆர்ப்பாட்டமுமாக காட்சி அளித்தது.

மலையெங்கும் ஆரவார கோஷங்கள் வியாபித்திருந் தாலும் உடையவர் தங்கியிருந்த திருமலை நம்பி மாளிகைப் பகுதியில் மட்டும் சற்று குறைவாகத்தான் இருந்தன. ஆர்ப்பாட்டம் அதிகம் இல்லாவிட்டாலும் ராமானுஜரின் சீடர்கள் பலரும் அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டும் வைணவர்களின் கூட்டத்தை வரிசைப்படுத்திக் கொண்டும் இருந்ததால் அந்தப் பகுதிகூட சற்று பரபரப்பாகவே காணப்பட்டது.

மார்கழி மாதமாதலால் சிற்றஞ்சிறு காலையிலேயே ஆண்டாளின் பாவைப்பாட்டு பாராயணத்தையும் பாவைப் பாட்டுகளின் மகிமையையும் சொல்லி முடித்த உடையவர் திருமுகத்தில் ஊரெங்கும் நடக்கும் ஆர்ப்பாட்டத்தின் அயர்ச்சியோ அதன் தாக்கமோ சிறிதளவும் காணப்படாததை அங்குள்ளோர் பேசிக் கொண்டு ஆச்சரியப்பட்டனர்.



''என்ன செய்து எப்படி சாதிக்கப்போகிறார் நம் உடையவர்'' என்ற கேள்வி வைணவர்கள் மத்தியில் ஏராளமாகவே மனதுக்குள் எழுந்தாலும் யாரும் மரியாதை காரணமாக வெளியே கேட்கவில்லைதான். ஆனால், 'அரசனும் அரசாங்கமும் சொல்லி வைத்தாற்போல் சைவர்கள் பக்கம் தூண்போல இருந்து தோள் கொடுக்கும் போது யாரால் என்னதான் செய்யமுடியும்? கொடுங்கோல் அரசு அதிக காலம் நீடிக்காது. அந்தப் பெருமாள்தான் ஏதாவது சாபம் கொடுத்து அந்தக் கொடுங்கோலர்களை அழிக்க வேண்டும்' என்றெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தனர்.

'அது எப்படி சங்காரும் சக்கரத்தாழ்வாரும் மாயமாய் மறைய முடியும்? இதில் ஏதோ சூது இருக்கிறது. அந்த சோழ குலத்தான் காளிங்கன் பரமசைவன். அவன்தான் ஏதோ மாயம் செய்து கள்ளத்தனம் செய்திருப்பான். அவன் உடையவரைக் கூட தரிசனம் செய்து கரிசனமாய் பேசிக் கொண்டிருந் தானாமே... 'உடையவர் என்ன செய்வார் பாவம்? நல்லவர்கள் எல்லாரும் நலமாக வாழ உளமாற நினைக்கும் உத்தமர். இந்தக் கள்ள காளிங்கன் நல்லவன் போல் வேடம் போட்டு உடையவரிடம் நல்ல பேர் பெற்று மலை மேல் வந்தான். இரவானதும் சங்கையும் சக்கரத்தாழ்வாரையும் அபகரித்து விட்டான். இதைப் பெருமாளே பார்த்துக் கொண்டிருக்கும் போது உடையவர் என்ன செய்ய முடியும்.'

பல வைணவர்கள் ஒருவருக்கொருவர் மெதுவாகவே இப்படி பேசிக் கொண்டாலும் அவர்கள் உடையவர் மீது நம்பிக்கை வைத்துதான் இருந்தனர். 'உடையவர் உத்தமர்... ஆதிசேஷனின் பிரத்யட்ச அவதாரம். பதினைந்து நாட்களாக திருவேங்கடத்தான் சங்கும் சக்கரமும் இல்லாமல் இருக்கிறான் என்றால் அதற்குக் காரணம்கூட ஏதாவது இருக்கலாம். தன்னைப் பார்க்க வைக்க திருவேங்கடத்தானே உடையவரை மலைமேல் வரவழைக்கும் உபாயம்தானோ என்னவோ... இனி திருவேங்கடத்தான் பாடு; உடையவர் பாடு... சங்கையும் சக்கரத்தாழ்வாரையும் பற்றி அவர்களே முடிவு செய்யட்டும்.'

அதே சமயத்தில் சைவர்களும் ஏராளமாக மலைமேல் குவிந்திருந்ததால் அவர்கள் பார்வையில் இருந்து உடையவரை பாதுகாத்தே தீர வேண்டும் என்ற கடமை உணர்வுடன் பல வைணவர்கள் அந்த மாளிகையை சுற்றி சுற்றி வந்தனர்.

இப்படிப்பட்ட தருணத்தில்தான் மாருதியாண்டான் முன்னே செல்ல அவர் பின்னே வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறிக்கும் அளவில் வெண்ணீரை அணிந்து கொண்டு முகத்தில் எவ்வித சலனமும் காண்பிக்காமல் ஆசிரியர் மாளிகைக்குள் நுழைந்ததை பல வைணவர்கள் சற்று கோபமாகவே கவனித்துக் கொண்டனர்தாம்.

வைணவர்களின் கோபப் பார்வையிலிருந்து மீண்டு உள்ளே சென்ற ஆசிரியரும் ஆண்டானும் உடையவரைப் பணிந்து அருகே அமர்ந்தனர். உடையவர் உற்சாகமாகவே இருந்தார் என்பது அவர் பேச்சிலேயே புலப்பட்டது.

''வாருங்கள் ஆசிரியரே! தங்கள் திருமுகம் பார்த்ததும் அடியேனுக்கு நம்மாழ்வார் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. 'பூவிற் புகையும் விளக்கும் சாந்தமும் நீறும் மலிந்து மேவித்தொழும் அடியரும் பகவரும் மிக்கது இவ்வுலகே' என்று அந்த மகான் பாடினார். இந்த அற்புதமான வரிகளுக்குப் பல வகையான பொருள்களை பெரியவர்கள் சொன்னாலும் தங்கள் திருமுகத்திலுள்ள திருநீற்றையும் நம்மாழ்வார் பெருமையாக சொல்கிறாரோ என்றுதான் எண்ணத் தோன்றும்.''

''தாங்கள் சொல்வது சரிதான். நம்மாழ்வார் போன்றவர்களின் கருத்துகள் இவ்வுலகம் முழுதும் பரப்பப்பட்டால் உலகில் பகை, பசி, பிணி, துன்பம் எதுவும் இராது. ஏன்... நாட்டுக்கு நாடு எல்லைகூட தேவையில்லை என்ற நிலை கூட உருவாகும். தங்களைப் போன்ற தெய்வப்பிறவிகள் அவர்களைப் பற்றி எத்தனைதான் எடுத்துரைத்தாலும் இந்த உலகம் இன்னமும் மீண்டு வரவில்லையே என்பதில் எனக்கும் வருத்தம்தான்!''

''உலகம் இப்படித்தான் இருக்கும் ஆசிரியரே! யுகங்களுக்கு ஏற்றவாறு யுகதர்மங்களும் மாறுவது நியதிதான்... அது இருக்கட்டும். மதியம் சாலவை சபைக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்து விட்டனவா? ஆசிரியரே! இங்கு மலையில் குவிந்திருக்கும் பக்தர்களைப் பற்றி தாங்கள் எவ்விதக் கவலையும் கொள்ள வேண்டாம். ஏனெனில் புண்ணியம் செய்தோர் மட்டுமே ஏறக்கூடிய மலைதான் திருவேங்கடமலை. அந்தப் புண்ணியம் அடியேனுக்கும் கிடைத்துள்ளது...''



உருகிப் பேசிய உடையவரை அன்பாய் பார்த்தார் ஆசிரியர். 'எத்தனைப் பணிவு... எத்தனை உறுதி... இப்படிப்பட்டவர் நம்மிடையே இருக்கும்போது யார் என்ன இடையூறு செய்ய முடியும்? ஆயிரம் பில்வணன்கள் வந்தாலும் இந்த அன்பு மலையின் முன்னே அவர்கள் மணல் துகள்கள்தான்.'

''சாலவை சபைக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தாங்கள் மலைபோல வந்து காத்தருளும்போது எனக்கென்ன கவலை? ஆனாலும், ஒரு வருத்தம் உண்டுதான். என் சீடன் காளிங்கன் மீது அவப்பழி ஏற்பட்டுள்ளது. அது அகற்றப்பட வேண்டுமென அவனும் போராடிக் கொண்டுதான் இருக்கிறான். அவன் முயற்சி வெற்றி பெற உடையவரின் பூரண ஆசிகள் அவனுக்குத் தேவை.''

உடையவர் கண்களை சற்று மூடினார். ஏதோ ஆலாசித்தவர் பிறகு கண் மலர்ந்தார்.

''ஆசிரியரே! நாளை நடப்பவை அனைத்தும் நமக்கு இன்றே தெரிந்துவிட்டால் நாம் இறைவனையே மறந்துவிடுவோம். எது நடக்க வேணுமோ அதுதான் நடக்கும். என் ஆசிகள் உங்கள் சீடருக்கு எப்போதும் உண்டு. கண்ணன் கோயிலில் அவரைக் கண்டபோது ஏற்பட்ட எண்ணங்கள் அடியேனுக்கு மாறவில்லை. மாறவும் மாறாது!''

ஆசிரியர் முகம் திருப்தியால் மலர்ந்தது. உடையவர் பார்வையில் காளிங்கனின் நல்ல பெயர் கெடவில்லை. அது ஒன்றே போதும். அன்று மதியம் முடிந்து திருமணி மண்டபத்தில் சாலவை சபை கூடியபோது கூட அந்த திருப்தி அவர் முகத்தில் தொடர்ந்து காணப்பட்டது. அதனால்தானோ என்னவோ, பின்னாளில் சரித்திரத்தில் இடம் பெறப்போகும் அந்த சாலவை சபையை திறம்படவே நடத்தினார்.

சென்ற முறை சாலவை சபை கூடியபோது கிடைத்த ராஜ மரியாதை இம்முறை தனக்கு அறவே கிடைக்காது என்று உணர்ந்தேதான் இருந்தார் ஆசிரியர். ஆனாலும், அவரின் உறுதியும் நேர்மையும் நிறைந்த அவர் பேச்சுகள் அவையோரை சற்று அடக்கியே வைத்தன. ஆனால், எத்தனைதான் அழகுறச் சொன்னாலும் அத்தனையையும் ஏற்றுக் கொள்வார்களா? இடையூறு வரத்தான் செய்தது. அது வழக்கப்படி நாலூரான் வடிவில் வந்தது. எடுத்த எடுப்பிலேயே எடுத்தெறிந்துதான் அவனும் பேசினான்.

''இந்தச் சபைக்கு சென்ற முறையே சொன்னேன். ஆனால், என்னை நீங்கள் அனைவரும் இழிவுபடுத்தி துரத்தி அனுப்பினீர்கள். இந்த ஆசிரியன் ஒரு இனத்துரோகி... பிராம்மண குலத்திற்கே மாறுபாடாய் செயல்படுபவன்...

இவனுடன் வந்திருக்கும் அந்த காளிங்கனோ ராஜகுலத் துரோகி. இருவரும் கூட்டாக செயல்பட்டு கொள்ளை அடிப்பவர்கள். இந்த இரு துரோகிகளும்தான் இன்றைய குழப்பங்களுக்கெல்லாம் ஆதிகாரணம். அன்று நான் படித்து படித்து சொன்னேன். என்ன பயன் யார் கேட்டீர்கள்? இவன் இன்னமும் மேடையில்தான் இருக்கிறான். நான் கீழேயே இருக்கிறேன். நல்லோர்கள் நலிவடையும் காலம்... கலிகாலம்...''

குடுமி அவிழ்ந்து அவனுடன் ஆட, சற்று சப்தம் போட்டுப் பேசியதை சபையோர் எல்லோரும் பார்த்தனர். அவர்களில் ஒரு சிலர் நாலூரான் கூற்றுக்கு ஒத்து ஊதுவது போல் 'ஆஹா.. ஐயோ' என்று ஆதரவு கூட தந்தனர். ஆசிரியர் முகத்திலோ எந்த சலனமும் இல்லை.

''எதைக் குழப்பம் என்கிறாய் என்பதை சபையோருக்குத் தெளிவாக சொல்லிவிடு நாலூரா! சங்கு சக்கரம் களவு போனதைக் குழப்பம் என்கிறாயா... இல்லை, இதை வைத்து சைவர்களும் வைணவர்களும் சண்டை போடுகிறார்களே அதைக் குழப்பம் என்கிறாயா அல்லது நாங்கள் களவாடியதாக புகார் சொல்கிறாயே... அதை குழப்பம் என்கிறாயா?''

உடனடியாக பதில் சொன்னான் நாலூரான்.'

''கோயிலில் அன்று காளிங்கன் தன்னோடு கடைசிவரை இருந்ததை கோயில் பட்டாச்சாரியாரே சொல்கிறார். குட்டி போட்ட பூனைபோல் அந்த இரவு நேரத்தில் கோயில் பிரகாரத்திலேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் என்ன? நீ திட்டம் போட்டாய்... உன் சீடன் செயல்படுத்தி களவாடி இருக்கிறான். ஒரு ராஜகுடும்பத்தை சேர்ந்தவன் இப்படியெல்லாம் செய்யலாமா?''

சபையும் மற்றவர்களும் சலசலத்தனர். உடையவர் முகத்தில் எவ்வித மாற்றமும் தென்படாவிட்டாலும் சபையில் உள்ளோர் பலம் நாலூரான் பக்கம் சற்று கூடியது போலும். அதை மேலும் மெருகூட்டினான் நாலூரான்.



''இல்லாவிட்டால் அடுத்த நாள் காலையில் அவன் ஏன் மௌனம் சாதிக்க வேண்டும். உற்சவம் ஆரம்பிப்பதற்குள் சங்கு சக்கரம் கொடுப்பதாக வாக்கு கொடுத்தவன் இப்போது ஓடி விட்டானே... எங்கே அவன்? சங்கும் சக்கரமும் இனியும் வருமோ?''

''வராது... வராது... வரவே வராது...'' என்ற குரல்கள் சற்று பலமாக சபையில் எழ ஆரம்பித்தன. சபையை சற்று கையமர்த்தி அடக்கினார், ஆசிரியர்.

''சபையோர்களே! நாலூரான் பேசியதிலிருந்து உங்களைப் போலவே நானும் ஒன்று புரிந்து கொண்டேன். அதாவது இத்தனை குழப்பங்களுக்கும் காரணம் மாயமாகிப்போன சங்கும் சக்கரமும்தானே தவிர திருவேங்கடமுடையான் சிவனா அல்லது திருமாலா என்ற குழப்பமில்லை.. அல்லவா?''

திடீரென வாதம் திசைமாறிப் போவதை அறிந்த நாலூரான் திகைத்தான். இருந்தும் தன்னை சமாளித்துக் கொண்டான்.

''அது... அதை எப்படி சொல்ல முடியம்?''

''இல்லை நாலூரா.. நீ ஏதாவது ஒன்றைத்தான் சொல்ல முடியும். அதாவது சங்கும் சங்கரமும் களவாடப்பட்டதாக உன் புகார்...''

இடைமறித்தான்.

''அது புகார் இல்லை... உண்மையில் நடந்தது.. நானே கண்டது... ஊரும் அறிந்த உண்மைதான்!''

''ஆமாம்... ஆமாம்... நீ மட்டுமல்ல... ஊரும் பார்த்ததுதான். உன்னுடைய வாதப்படி பார்த்தால் மார்கழி மாதம் முதல் தேதியன்று இரவு என்னுடைய திட்டத்தின் பேரில் என் சீடன் காளிங்கன் பெருமாள் கோயிலில் சங்கையும் சக்கரத்தினையும் களவாடிவிட்டு இப்போது மறைந்து மாயமாகிப் போய்விட்டான்... அப்படித்தானே...''

''ஆமாம்... ஆமாம்...''

''நாலூரா! நன்றாக ஆலோசித்து சொல்! ஏனெனில் உன்னுடைய வாதத்தை வைத்துதான் உன்னை ஆதரிப்போரின் சாட்சியும் பலமாக இருக்கும். நீ குற்றம் சாட்டுவதை இந்த சபையோரும் ஒப்புக் கொள்கிறார்களா?''

''ஒப்புக் கொள்கிறோம்.. நாலூரான் சொல்வது சரிதான்... சங்கு சக்கரம் களவாடியவர்கள் நீங்கள்தான்...''

சபையெங்கும் எழுந்த குரல்கள் ஆசிரியரையே சற்று ஆச்சரியப்படுத்தினாலும் கலங்கவில்லை அவர். மாறாக புன்னகை செய்தார்.

''அப்படியானால் பெருமாளுக்கு சொந்தமான சில பொருள்கள் கோயிலிலிருந்து களவாடப்பட்டுள்ளன. சபையோர்களே! அந்தக் களவாடலுக்கு நானும் காளிங்கனும் பொறுப்பேற்றுக் கொள்கிறோம். அதற்குரிய என்ன தண்டனை கொடுத்தாலும் அதை அனுபவிக்க சித்தமாக உள்ளோம்...''

நாலூரான் பரவசத்தோடு சபையோரைப் பார்த்துக் கூவினான், ''குற்றம் செய்தவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள். கள்ளர்களை தண்டிக்க வேண்டும்! அவர்கள் கண்கள் பிடுங்கப்படவேண்டும்! அவர்களின் கைகள் வெட்டப்படவேண்டும்!''

அசரவில்லை ஆசிரியர். புன்னகையும் மாறவில்லை. ''ஆஹா! அப்படியே செய்து விடுங்கள். ஆனால், அதற்கு முன்பு நாலூரானுக்கும் அவர் நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள அனுமதியுங்கள்!''

நாலூரானும் சபையோரும் கேள்விக்குறியாய் பார்த்தனர்.

''எனக்கு எதற்கு நன்றி?''

''ஒரு பெரிய பிரச்சினையை தீர்க்க உதவி புரிந்தமைக்காக!''

''நான் எந்த பிரச்சினையை தீர்க்க உதவி புரிந்தேன்?''

நாலூரானைப் பார்க்காமல் சபையை சுற்றுமுற்றும் பார்த்தார் ஆசிரியர்.

''சபையோரே! கடந்த சில நாட்களாக கொதித்துக் கொண்டிருந்த பிரச்சினை திருவேங்கடமுடையான் சிவனா அல்லது திருமாலா என்பதுதான். அதற்காக ஊரெங்கும் வாதம் புரிந்து வன்முறையில் முடிந்த கதைகள் ஏராளம். ஆனால், திருவேங்கடமுடையான் தோளில் சங்கும் சக்கரமும் தாங்கிய திருமால்தான். அந்த சங்கு சக்கரத்தை யாரோ – இல்லையில்லை – நானும் என் சீடனும் களவாடிவிட்டோம். அதனால் எங்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டு அதன் மூலம் பெருமாளுக்கு சங்கும் சக்கரமும் பொறுத்தப்பட வேண்டும் என்று சொல்லாமல் சொல்லிய நாலூரார் இன்று மாபெரும் மதப்பிரச்சினையை தீர்க்க வழிவகை செய்துள்ளார். அவருக்கு எம் நன்றி! அவரே ஒப்புக் கொண்டபடி திருவேங்கடமுடையான் இன்று முதல் மறுபடி திருமால் ஆகிவிட்டான். ஆக, எங்களுக்குத் திருட்டு செயலுக்கான தண்டனையைக் கொடுத்து மறுபடியும் சாந்தி செய்யப்பட்ட சங்கு சக்கரத்தை திருவேங்கடவன் திருத்தோளில் சார்த்துமாறு நாலூரான் வேண்டுகிறார் என்றே எடுத்துக் கொள்வோம்!''



சபை மட்டுமல்ல.. இவற்றைக் கேட்டுக் கொண்டு வெளியே நின்றிருந்த பக்தஜன கூட்டமும் ஆரவாரித்தது. 'திருவேங்கடவன் திருமால்தான். அந்தத் திருமாலின் தோளில் உள்ள சங்கும் சக்கரமும் களவாடிவிட்டதால்தான் குழப்பம். அப்படிக் களவாடியவர்களே குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.' சபை சலசலவென பேசிக் கொண்டதைக் கேட்ட நாலூரான் ஆச்சரியப்பட்டான். தான் சரியாக மடக்கப்பட்டு விட்டோம் என்பதும் அவனுக்குப் புரிந்தாலும் வேங்கடமுடையான் சிவம்தான் என்ற வாதம் தன்னால் அடிபட்டுப் போயிற்று என்றும் உணர்ந்தான். என்ன செய்வதென்றறியாமல் மூளை குழம்ப நின்றான்.

ஆனால், அவனுக்கும் உதவியாக ஒரு குரல் முன்னே வந்தது. குரல் கொடுத்து முன்னே வந்தவன் பில்வண குருதேவ்.

''நாலூரானை உங்கள் வாதத்தால் ஏமாற்றலாம் ஆசிரியரே! ஆனால், இந்த பில்வணனை ஏமாற்றமுடியாது. உம்மால் மட்டுமல்ல... யாராலுமே சில உண்மைகளை மறைக்கவும் முடியாது!''

ஆசிரியர் பில்வணனைப் பார்த்தார். அவன் நடத்திய திருவேங்கடகூட யாகத்தின் ஆரம்பத்தில் தான் எப்படி நுழைந்தோமோ அதேவிதத்தில் பதிலடி கொடுக்கும் வகையில் தான் நடத்தும் சாலவை சபைக்குள் நுழைகின்றான். பில்வணன் வருவான் என்று ஆசிரியர் சந்தேகித்தாலும் இறைவன் அருகாமையை அவன் விரும்பமாட்டான் என்றே நினைத்தார்.

''ஆசிரியரே! உம்மையும் கேட்கிறேன்... உமக்கு அதரவாக வந்த அந்த ராமானுஜரையும் கேட்கிறேன்... இதோ இந்த ஆலயத்தில் ஆராதிக்கப்படுபவன் திருமாலா அல்லது சிவனா? சங்கையும் சக்கரத்தையும் போக்கிக் கொண்டு உம்முடைய கட்சிக்கு இதுவரை உதவாமல் இருக்கும் வேங்கடத்தான் ஏன் சிவமாக இருக்கக்கூடாது? அட... அந்த சங்கு சக்கரங்களை நீர் களவாடவில்லை என்றே வைத்துக கொள்வோம். ஆனால், அவை மாயம் போனது வாஸ்தவம் தானே? சங்கும் சக்கரமும் களவு போனதும் ஒரு வகையில் நல்லதுதான். அவன் எந்த உருவத்தான் என்ற உண்மை தெரிந்துவிடும் அல்லவா? ஆனால், ஒன்றை உறுதியாக சொல்கிறேன். அந்த திருவேங்கடத்தான் ஒரு சிலை. அந்தச் சிலை பேசாது. ஆனால், நீர் பேசும் உம் உடையவர் பேசட்டும்! அவன் திருமாலா, சிவனா, ஆணா, பெண்ணா, அலியா, என்று நீங்கள் சொல்லுங்கள்! ஆனால் வெறும் பேச்சும் வெட்டி வாதங்களும் தேவையில்லை. ஆதாரத்தோடு சொல்லுங்கள். ஆதாரத்தை காண்பித்தீர்களேயானால் நாங்கள் இந்த விவகாரங்களில் இருந்து முழுமையாக விலகிக் கொள்கிறோம்! என்ன ஆசிரியரே. அவன் திருமால்தான் என்று ஆதாரம் கொடுப்பீரா?''

பலமாக பேசி நகைத்தான் பில்வண குருதேவ். ஆசிரியர் ஏதோ பேச முயல உடையவர் குறுக்கிட்டார்,

''பெரியவரே! ஆதாரம் கேட்கிறீர்கள்... நல்லதுதான்... எப்படிப்பட்ட ஆதாரம் தேவை என்று சொல்வீரோ?''

''எதையும் புரிந்து கொள்ளும் ஆற்றலும் சிந்தனா சக்தியும் உள்ள மனிதன் நான். ஆதாரம் என்பது ஆணித்தரமானது. மறுக்கமுடியாதது என்பதை புரிந்து கொண்டவன். நீங்கள் மாய மந்திரம் செய்து ஆதாரத்தை காட்டினாலும் சரி. அல்லது உங்கள் புத்திபலத்தால் சாமர்த்தியமாக செயல்பட்டு அவன் திருமால்தான் என்ற ஆதாரத்தைக் காட்டினாலும் சரி. ஒப்புக் கொள்வோம்.''

உடையவர் புன்முறுவல் சற்று விரிந்தது.

''மாய மந்திரங்களை அடியேன் செய்வதில்லை. ஏனெனில், அது அடியேனுக்குத் தெரியாது. ஆனால், அவன் செய்வான்... அவனே ஒரு மாயக்காரன் தெரியுமோ...'' என்று சிரித்தவர் பில்வணனை கருணையாய் பார்த்தார்.



''பெரியவரே! சந்தேகம் என்று வந்துவிட்டால் அது நிவர்த்திக்கப்படத்தான் வேண்டும்! உங்கள் மனதிலும் இந்த சபையோர்களின் மனதிலும் திருவேங்கடத்தான் எந்த உருவத்தான் என்ற கேள்வி எழுந்துள்ளது. அந்தக் கேள்விக்கு உரியவனிடமே நாம் கேட்க வேண்டும். அவனையே கேட்போம்.. ஆதாரத்தையும் காண்பிக்க சொல்வோம்...''

உடையவர் சாதாரணமாகவே சொன்னாலும் பில்வணன் சிரித்தான்.

''அந்தச் சிலை பேசுமா? நம் கேள்விகளுக்கு பதில் சொல்லுமா?''

''ஏன் பேசாது? வாய் திறந்து சொன்னால்தான் அது பேசியது போல் ஆகுமா? உங்கள் மனதுக்குள் குடி கொண்டு உங்கள் கேள்விகளுக்கு அழகாக பதில் சொல்லும்!''

''நான் முன்னமேயே சொன்னேன்.. வாய்ப்பந்தல் வேண்டாம். வாதங்கள் வேண்டாம். கண்ணுக்குத் தெரிந்த வெளிப்படையான ஆதாரம் வேண்டும். அந்த ஆதாரத்தை காண்பிக்க சொல்லுங்கள். ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்த ஆதாரத்தையும் உங்கள் வேங்கடத்தானை காண்பிக்க சொல்லுங்கள்!

உடையவர் கண்களை மூடினார். பிறகு மெல்லத் திறந்து பேசினார்,

''கண்ணனுக்கு உகந்தது துளசி...'' என்றவர் தம் பக்கத்தே நின்றிருந்த ஆசிரியரின் முகத்தைப் பார்த்தார். அவர் பார்வை அவர் நெற்றியில் படர்ந்தது.

''சிவனாருக்கு உகந்தது திருநீறு! அந்த துளசி மாலைகளையும் அத்துடன் திருநீறு நிறைந்த சட்டியையும் அவன் காலடியில் வைப்போம். இந்த இரண்டில் எது அவன் திருமேனியில் கலக்கிறதோ அவன் அவனாக எடுத்துக் கொள்வோமே! என்ன சரிதானா?''

''நன்றாகத்தான் இருக்கிறது! ஒருவேளை அந்த சிலை அந்த இரண்டையுமே தொடாவிட்டால்? உங்கள் ஆதாரங்கள் ஒருவேளை புறக்கணிக்கப்பட்டால் எனது கருத்தையும் கடவுள் மறுப்பையும் ஏற்றுக்கொள்வீரா?''

உடையவர் புன்னகைத்தார். திரிதண்டத்தை கையில் எடுத்துக் கொண்டு எழுந்தார்.

''ஐயா! நீங்கள் சொல்வதில் ஒன்று நிச்சயம் நடக்கும்! இன்னொன்று நிச்சயம் நடைபெறமுடியாது. ஆகவே இன்று இரவு நீங்களே முன்னிருந்து சாலவை சபையினரோடு சென்று அடியேன் சொன்னவற்றை அவன் திருவடியில் வையுங்கள்! நாளைக் காலை வரை பொறுத்திருந்து பாருங்கள்!''

மெல்ல நடந்து வெளியே வந்தார் உடையவர். ஆசிரியரும் அவரைப் பின் தொடர்ந்தார். சில விஷயங்களை அவன் முடிவுக்கே விட்டு விட மனிதர்களால் முடியாதுதான். ஆனால், உடையவரைப் போன்றவர்களால்தான் அது சாத்தியம் என ஆசிரியர் நினைத்தார்.

ஆசிரியரின் நினைப்புக்கு மாறாக பில்வணன் கெக்கலித்தான். 'கடவுள் என்று ஒருவன் கிடையாது என்பதை நிரூபிக்க இவர்களே வழி காண்பித்துள்ளார்கள். இவர்கள் தோண்டியுள்ள குழியிலே இவர்களே விழப்போகிறார்கள். அப்படி விழுந்துவிட்டால் அந்தக் குழியை உடனே மூடிவிடுவோம்... இனி எக்காலத்துக்கும் இவர்கள் வெளியே தலைகாட்ட முடியாதபடி செய்து விடுவோம்...'

## 29

# சிவன் அவன் என் சிந்தையுள்

**தா**ன் கண்டது கனவா? அல்லது இனி கண்முன்னே நடக்கப்போகிறவையா? என்பது புரியாமல் குழம்பிப் போயிருந்த காத்யாயினியிடம் தேவதை போல தேடிவந்து கைவலிக்கு ஆறுதலாக மெதுவாக நீவிவிட்டதுடன் மட்டுமல்லாமல் கனிவான புன்னகையையும் செய்து தன் பெயரையும் சொன்ன அவந்திகாவை சற்று விநோதமாகவே பார்த்தாள். அவள் உணர்வுகூட பழைய சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டது.

'இவள்... இவளெப்படி இங்கு வந்தாள்? இவளல்லவா காளிங்கனைக் கடத்திச் சென்றதாக ஊரெங்கும் செய்தி நிலவுகிறது. ஒருவேளை காளிங்கனை ஒளித்து வைத்துவிட்டு இங்கும் ஏதாவது நாடகம் ஆட வந்தாளோ.. சந்தேகம் கண்களில் காணப்பட வந்தவளைப் பார்த்து கேட்டாள்.'



''நீ...தானே காளிங்கனை கடத்தி விட்டதாக ஊரெங்கும்...'' என்று இழுத்தவளை இடைமறித்தாள் அவந்திகா. ஆனால், புன்னகையை மட்டும் சற்று அதிகம் காட்டியே பேசினாள்.

''காத்யா...! உன் பெயர் மிக அழகாக இருக்கிறது. அவர் சொன்னது சரிதான்...''

''என்ன சொன்னார்?

''பெயருக்கேற்றவாறு பெண்ணும் சற்று அழகாகவே இருப்பாள் என்று.''

''சற்று... என்றால்? தமிழில் குறைவு என்றுதானே அர்த்தம். நான் அழகில் குறைந்தவள் என்று சொன்னாரோ?''

கோபத்தோடு சொன்னவளை புன்சிரிப்பு மாறாமல் பார்த்தாள் அவந்திகா. அவள் பதிலும் நிதானமாகவே வந்தது.

''காத்யா! ஓர் ஆண் ஒரு பெண்ணை பற்றி இன்னொரு பெண்ணிடம் அதிகமாக வர்ணனை செய்யமாட்டான். ஏனெனில் அந்த வர்ணனை அசூயைக்கு வழிகாட்டி விடுமோ என்ற பயம் ஆண்களுக்கு எப்போதும் உண்டு.''

அழகாக சொன்னவளை ஆச்சரியத்தோடு பார்த்தாள். இவள் எப்படிப்பட்டவள்? ஆராய்ந்து பேசுகிறாளே... சே! நாம்தான் ஆண்கள் கூட்டத்திலே இருந்து இருந்து பெண்களையே மறந்து விட்டோம்...

''சரி! அழகைப் பற்றி தவிர, வேறு எதைப்பற்றி சொன்னாரோ?''

''நான்தான் சொன்னேனே. ஆண்கள் பெண்களைப் பற்றி அதிகம் சொல்லமாட்டார்கள் என்று. அவர்கள் குறைவாக சொன்னதில் இருந்து நாம்தான் அதிகம் புரிந்து கொள்ள வேண்டும்.''

அவந்திகாவின் குரல் சற்று வேதனையாக வந்ததாக மனதில் பட்டது காத்யாயினிக்கு.

''நீ என்ன புரிந்து கொண்டாயோ?''

''நான் என்னென்ன புரிந்து கொண்டேன் என்பதை விட உனக்கு என்னென்ன அபாயங்கள் வர இருக்கின்றன என்பதை உனக்குப் புரியவைக்கவே நான் இங்கு வந்துள்ளேன்!''

நேரடியாக விஷயத்தை சொல்லாமல் புத்திசாலித்தனமாக பேசும் அந்த தமிழ்ப் பெண்ணைப் பார்க்க சற்று எரிச்சலாய் வந்தது காத்யாயினிக்கு.

''என்னைப்பற்றி உனக்கேன் கவலை? என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும். முதலில் நீ இந்த இடத்தை விட்டு ஓடிவிடு. இல்லையேல் எனக்கு வரும் அபாயம் உனக்கும் வரும்!''

இகழ்ச்சியாய் பேசியவளை நிதானமாகவே பார்த்தாள் அவந்திகா.

''காத்யா! நீ இப்படித்தான் பேசுவாய் என்று அவர் சொன்னார். உனக்கு வரும் அபாயங்களை புரிந்து கொள்ளாமல் ஒவ்வொரு சமயமும் உன்னை அவர் எச்சரித்திருந்தாலும் அந்த எச்சரிக்கை அனைத்தும் வீணாகிப் போனதையும் அவர் சொன்னார்.''

கோபம் அதிகம் வந்தது காத்யாயினிக்கு. அந்தக் கோபத்தை தாராளமாகவே குரலிலும் காட்டினாள் அவள்.

''அவர்... அவர் என்கிறாயே? அந்த அவர் இப்போது எங்கே? ஏன் வரவில்லை, அந்த அவர்? என் மீது அத்தனை கரிசனம் என்றால் அந்த அவர் அல்லவா வந்திருக்க வேண்டும்? உன்னை ஏன் அனுப்பவேண்டும்?''

''நீ கேட்பது நியாயம் காத்யா. நீ கோபப்படுவதும் நியாயம்தான். ஒரு வேளை இது பொதுவாகவே இறைவன் விளையாடும் விளையாட்டோ என்னவோ... மனிதர் வேண்டாம்... வேண்டாம் எனும்போது அருகில் நெருங்கி நின்று அருள்வதும் அவனுக்கு எப்போது தேவைப்படு கின்றதோ சமயம் பார்த்து விலகிப் போவதும் ஆண்டவன் விளையாட்டுதான்!''

''என்ன உளறுகிறாய் பெண்ணே! அவர் வராததற்கும் இல்லாத ஒரு இறைவனையும் ஏன் சம்பந்தப்படுத்துகிறாய்?''

அவந்திகா அவளைக் கனிவோடு பார்த்தாள். இந்தப் பெண் மிகவும் குழம்பிய மனநிலையில் இருக்கிறாள் என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. எங்கோ கங்கை பாயும் கன்னோசி வள நாட்டில் சகல செழிப்போடும் ஆடம்பர மாகவும் அலங்கரமாகவும் ஆடிப் பாடி பொழுதைக் கழிக்க வேண்டிய இந்த இளவரசி ஏன் இப்படி மலைவாழ் பெண்ணாய் மாறுவேடம் போட்டு மலைப் பள்ளத்தாக்கில் மண் தரையில் கிடக்க வேண்டும்... ஏன் கேட்பார் சொல் கேட்டு திருவேங்கடமுடையான் பொருள்களை அபகரித்து ஊரில் உள்ள மக்களையும் குழப்பி தானும் குழம்பி அவதிப்பட வேண்டும்... இதை எல்லாம் இவள் ஆலோசித்துப் பார்த்திருப்பாளா? பாவம் இவள்! பரிதாபத்துக்குரிய ஜென்மம்தான் பெண்ஜென்மம்.



பெருமூச்சு விட்டாள் அவந்திகா.

''காத்யா! நாம் வினைப்பயன்களை அனுபவிக்கிறோம். அதை இறைவனோடு சம்பந்தப்படுத்துக் கூடாது. ஆனால், ஒன்று! அந்த இறைவனின் அருள் என்று ஒன்று இருந்தால் அந்த வினைப்பயன்களும் நம்மை அண்டாது என்றுதான் பெரியவர்கள் பலரும் சொல்லியிருக்கிறார்கள்!''

இகழ்ச்சி ததும்ப கேட்டாள் காத்யாயினி, 'ஓஹோ! எனக்கு இறைவனின் அருள் கிடைக்கவில்லை என்கிறாயோ?''

''சிவன் அவன் என் சிந்தையுள் நின்றதனால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி... என்று மாணிக்கவாசகர் அருளியிருக்கிறார். அதுதான் உண்மை. அவன் உன் சிந்தையில் வந்து நின்றால்தான் உன்னால் அவனை நினைக்கவே முடியும்.''

சர்வசாதாரணமாக விளக்கம் சொன்னவளை வியப்போடு பார்த்தாள் காத்யாயினி. 'கடவுளை நினைக்கக் கூட கடவுள் அருள் வேண்டுமாமே... ஆமாம்... அது கூட உண்மை தானே... எனக்கு அவன் அருள் இல்லையோ... அதனால்தான் இத்தனை நாள் அவனை நினையாமல் இருந்தேனோ... ஒருவேளை அப்படி நினைத்திருந்தால் நான் இந்த நிலைக்கு வந்திருப்பேனா?''

''அப்படியானால் நீ கடவுள் அருள் பெற்றவளா?''

''நிச்சயமாக காத்யா! நான் எப்போதெல்லாம் இடையூறுகளில் சிக்குகிறேனோ அப்போதெல்லாம் அவன் உதவியை நான் மனமாறக் கோருகிறேன். அவனும் ஓடோடி வந்து உதவுகிறான். உனக்குத் தெரியுமா? சில நாட்கள் முன்பு நான் மயக்க நிலையில் குதிரை மீது கட்டப்பட்டு நரபலிக்காக நள்ளிரவில் நடுக்காட்டில் அழைத்துச் செல்லப்பட்டேன். உணர்வு வந்தபோது என் நிலை புரிந்தது. என் சிந்தையில் எப்போதும் குடியிருக்கும் தில்லை வாழ் கூத்தனை

கூப்பிட்டேன். அவன் ஒரு மாயக்கூத்தன் என்னைக் காப்பாற்ற அவனே காளிங்கர் வடிவம் எடுத்து ஓடோடி வந்து காப்பாற்றினான். நள்ளிரவில் நடுக்காட்டில் மனித அரவமே இல்லாத சூழ்நிலையில் நான் ஏன் காப்பாற்றப் படவேண்டும்? அதுதான் அவனருள்!''

காத்யாயினி சற்று அசூயை கொண்டாள். இவளுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டாள் இந்த தமிழ்ப் பெண். காளிங்கனையும் வளைத்துப் போட்டுக் கொண்டாள். தனக்கும் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுதான். ஆனால் என்ன பயன்... தவற விட்டோமே.''

''ஆனால் பெண்ணே! உன்னைப் போல அனைவருக்கும் அந்த இறைவனின் அருள் கிடைக்குமா? சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உனக்கு சாதகமாக அமைந்தது போல் அனைவருக்கும் அமையுமா? அதை நீ சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். உனக்குக் கிடைத்த உதவிகள் உனக்கு எதேச்சையாக கிடைத்ததாக ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதற்கு நீ ஏன் கடவுள் என்று உருவகம் கொடுக்கிறாய்.. உன் வாழ்வில் உனக்குக் கிடைத்த வெற்றிகளுக்கு நீ ஏன் இல்லாத ஒரு கடவுளுக்கு பங்கு கொடுத்து உன்னை ஏமாற்றிக் கொள்கிறாய்?''

''காத்யா! உன்னைப் பார்த்தால் எனக்கு சற்றுப் பொறாமையாக இருக்கிறது!''

காத்யாயினி விந்தையாய் பார்த்தாள் அவளை. அவந்திகாவே காரணத்தையும் சொன்னாள்.

''காத்யா.. நான் கடவுளின் பக்தை என்று அடிக்கடி சொல்லிக் கொள்கிறேனே. ஆனால், என்னை விட அதிக பக்தியுள்ளவள் நீ என்பதினால் உன்மேல் பொறாமை வருகிறது!''

''என்ன சொல்கிறாய்?''

''கடவுள் இல்லை; இறைவன் இல்லை என்று எப்போதுமே சொல்லிக் கொண்டாலும் அந்த வார்த்தைகள் மூலம் எல்லாக் காலமும் உன் சிந்தை அவன் மீதுதான் உள்ளது. ஒரு வகையில் நாத்திகம் கூட இறைவனை சிந்தையுள் நிறுத்தி வைக்கும் வகையோ என்னவோ. என்னை விட நீ இறைவனைப் பற்றி அதிகம் சிந்திக்கிறாய். அவனை



நிந்தித்துக் கொண்டே சிந்திக்கிறாய். நிந்தாஸ்துதியைக் கூட உண்மையான பக்திக்கு அடையாள மாக பல பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்..''

காத்யாயினிக்கு அந்தத் தமிழ்ப் பெண்ணின் சொற்கள் மெல்ல மெல்ல புரியத் தொடங்கியது. உண்மைதான்... கடந்த பதினைந்து நாட்களாக நாம் இறைவனைப் பற்றித்தானே அதிகம் சிந்தித்தோம். நம் மனம் ஒப்புக் கொள்ளா விட்டாலும் அந்தச் சங்கையும் சக்கரத்தையும் என்று களவாடினோமோ அன்றிலிருந்து சதா சர்வ காலமும் அவனைப் பற்றியே சிந்தித்தது வாஸ்தவம்தானே... இந்தப் பெண் எத்தனை அழகாக கண்டுபிடித்து சொல்கிறாள்? தமிழர்கள் அனைவருமே புத்திசாலிகள் தானோ என்னவோ...

அவந்திகா நன்றாக அமர்ந்து கொண்டு அவள் முகத்தை தன் கைகளால் நிமிர்த்தினாள். அந்த அழகான அகல விழிகள் தாம் சொன்னதை அப்படியே ஒப்புக் கொள்வதையும் புரிந்து கொண்டாள்.

''காத்யா! இறைவன் என்பவன் எப்போதும் தன்னைக் காட்டிக் கொள்வதில்லை. அது அவனுக்கு அவசியமு மில்லை. மனிதர்கள் உய்ய வேண்டுமே என்ற உன்னதக் கொள்கை உடையவன் அவன். அதனால் அவ்வப்போது சிற்சில செய்கைகள் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது அவன் வழக்கம். உன் வாழ்க்கையிலும் அந்த இறைவன் உனக்குத் தன்னைத் தெரியப்படுத்தியுள்ளான். ஆனால், அதை உணரும் பக்குவம் அப்போது உனக்கு வரவில்லை...''

''என் வாழ்க்கையிலும் இறைவன் வந்தானா?''

''ஆம் காத்யா! காளிங்கர் வடிவில் இறைவன் உனக்கு தன்னை வெளிப்படுத்தியுள்ளான். இல்லையென்றால் திடீரென உன்னை நள்ளிரவில் தேடிவந்து திருமலை ஏறாதே என்று ஏன் சொல்லவேண்டும். நீ திருமலை ஏறி சங்கையும் சக்கரத்தையும் எடுத்துச் சென்றதால்தானே அத்தனை குழப்பமும் வந்தன.''

அன்று நள்ளிரவு தன்னை காளிங்கன் திருவேங்கடபுரத்து விருந்தினர் மாளிகையில் சந்தித்து 'தான் கடவுளின் தூதன்' என்று சொல்லி தன்னை நகைக்க வைத்தது அவள் நினைவுக்கு வந்தது. 'ஒருவேளை உண்மையிலேயே இறைவன் தான்

அவனை அனுப்பி வைத்தானோ... எச்சரிக்கை செய்தானோ...'

''இறைவன் வடிவில் காளிங்கன் வந்திருந்தால் என்னை தடுத்து நிறுத்தி இந்த திருமலை நிகழ்ச்சியையே நடந்திராமல் அல்லவா செய்திருக்க வேண்டும். அப்படி செய்ய வில்லையே அந்த இறைவன். இதற்கும் ஏதாவது பதில் வைத்திருக்கிறாயா?''

''காத்யா! கடவுள் விசித்திரமானவர். நம் எண்ணங்களுடன் ஒரு சமயம் உடன்படுபவர், பல சமயங்களில் வேறுபடு பவர். மனிதனுக்குப் புத்தி பலத்தை அருளியவர் அந்த புத்தி அவனுக்கு பயன் தர வேண்டும் என்று ஆசைப்படுகிறாரோ என்னவோ, காத்யா! நீ சொல்வதுபோல உன்னை தந்திரமாகவோ இல்லை வன்முறையாகவோ காளிங்கர் உன்னை தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஒருவேளை காளிங்கனுக்கு பதிலாக அவர் நிலையில் உன் மன்னரே இருந்திருந்தால் ஒரே வெட்டாக வெட்டி உன்னை பலியாடாகக்கூட ஆக்கியிருக்கலாம். ஆனால், காளிங்கர் அப்படி செய்யவில்லை. வருத்தத்தோடு அன்று வெளியேறி விட்டார். ஆனால் ஒன்று தெரியுமா.. அந்த இறைவன் உன்னை வைத்து மற்றவர்க்கும் நல்லது செய்து கொண்டிருக்கிறார்..''

''என்ன.. என்னால் கூட நன்மையா?''

''ஆமாம்! என்னையே எடுத்துக் கொள்ளேன். நீ திருமலை ஏறவேண்டாம் என்று காளிங்கர் சொன்னாலும் கேட்காமல் ஏறி சங்கும் சக்கரமும் எடுத்துக் கொண்டதால் அந்த அவப்பழி காளிங்கன் மீதே வந்தது. அப்படி ஒரு வேளை வந்திராவிட்டால் நான் திருமலைக்கே வந்திரமாட்டேன். ஏன். அவசரம் அவசரமாக சோழ தேச மன்னருக்கு என்னை திருமணம் செய்வித்து அவர் அந்தப்புரத்தில் என்னை தள்ளியும் இருப்பார்கள்!''

விந்தையாய் பார்த்தாள் காத்யாயினி.

''என்ன சொல்கிறாய் பெண்ணே!''

அவந்திகா தன் தந்தையின் திட்டத்தைச் சொன்னாள். அந்தத் திட்டத்திற்கு பதில் திட்டமாகத்தான் காளிங்கனை கடத்தி சென்று விட்டதாக மிளகாழ்வான் மூலம் வதந்தி கிளப்பி விட்டதையும் சொன்னாள்.



''நான் படுகுழியில் விழாமல் காப்பாற்றப்பட்டது உன் செயலால்தான் காத்யா. அந்த இறைவன் உன் மூலம் எனக்கு நன்மை செய்துள்ளானா இல்லையா?''

''இருந்தாலும், ஒரு பெண்ணுக்கு அதுவும் ஒரு அரசகுமாரிக்கு சமூகத்திலும் மக்கள் மத்தியிலும் இழிசொல் கிடைக்க வழி வகுத்து விட்டாயே!''

''உண்மைதான்! சோழ மகாதேவியாரிடமிருந்து என் தகப்பன் வரை எல்லாருமே என்னை இழிவாய் பார்ப்பார்கள். என் தந்தை என் குலத்திற்கே கேடு செய்து விட்டதாக குதித்துக் கொண்டிருப்பார். அப்படி கேடு கெட்ட ஒரு பெண்ணை தன் தலையில் கட்ட முயன்றதற்கு அந்த சோழ மன்னரிடமும் கோபத்தை தாராளமாக பெற்றுக் கொண்டிருப்பார். ஆனால், ஒன்றை கவனிக்க வேண்டும். என்னை அவர்களின் சுயநல திட்டங்களுக்காக பலியிட நினைத்தார்கள். நான் அந்த தில்லைக் கூத்தன் அருள் கொண்டு அவர்கள் சுயநலப்பிடியி லிருந்து தப்பித்து ஓடி வந்திருக்கிறேன்... அவ்வளவுதான்.''

திகைத்துப் போய்விட்டாள் காத்யாயினி. வாழ்க்கையின் யதார்த்தங்களை எத்தனை எளிமையாக பார்க்கிறாள்...

''சரி... ஒரு வேளை நாளை காளிங்கனை உன்னால் மணம் செய்யமுடியவில்லை என்ற நிலை வந்தால் என்ன செய்வாய் பெண்ணே! மேலும் மேலும் அவப்பழிகள் உன்னை சேராதா?''

''போகட்டுமே காத்யா! திருமணம் என்பது பலர் அங்கீகரிப்பதற்காக ஏற்பட வேண்டிய நிகழ்ச்சி. மனமும் மனமும் ஒன்று சேர்ந்து விட்டால் அது மணத்தில் முடியாவிட்டாலும் வாழ்க்கையை கழித்து விடுவேன். ஏனெனில், இதுவும் இறைவனின் அருள்தான் என்று எண்ணிக் கொள்வேன்!''

அவள் பேசப் பேச அவள் யதார்த்தங்களை எப்படியெல்லாம் எதிர் கொள்கிறாள் என்று புரிந்தது. 'இந்தத் தமிழ்ப் பெண்ணைப் போல தன்னால் யதார்த்தங்களை சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை. நம் நாட்டில் நடந்த நாசங்களை எடுத்துக் கொள்ள தெரியவில்லை. எண்ணி எண்ணி மனதுள் நொந்து வெந்து போய் கடைசியில் பில்வணன் கூட்டத்தார் சொல்லில் குளிர்ந்து அவர்கள் சொல்லியபடியெல்லாம் ஆடினேனே. இந்தப்பெண் மட்டும்

சில வருடம் முன்பே தன்னிடம் வந்து யதார்த்தங்களை கற்பித்திருக்கக்கூடாதா...'

முதன் முதலாக காத்யாயினியின் குரலிலும் அன்பு தெரிந்தது. அவளை பெயர் சொல்லியே அழைத்தாள்.

''அவந்திகா! இன்று உன்னை கண்டதற்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. இவ்வளவு சொன்னாயே... இனியும் நான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லிவிடு...''

என்ற காத்யாயினி அருகிலிருந்த அவந்திகாவை இடது கையால் அணைத்துக் கொண்டாள். கடந்த பல நாட்களாக தன்னைப் பிரிந்திருந்த நிம்மதி அந்த அணைப்பில் பெற்றதாகவே நினைத்தாள் அவள்.

''காத்யா! நமசிவாய என்றால் பொருள் தெரியுமா? உன்னுடையது எதுவும் இல்லை – எல்லாம் அவனே என்பதுதான். நீ செய்யவேண்டியதும் அதுதான். உன்னை முழுமையாக அவனுக்குக் கொடுத்து விடு... அவனிடம் சரணடைந்து விடு. பிறகு அவனையே கேள். அவன் சொல்வான் நீ என்ன செய்ய வேண்டுமென!''

ஆச்சரியம் அதிசயமாக மாற அவந்திகாவைப் பார்த்தாள். எத்தனை பெரிய விஷயங்களை சாதாரணமாக பேசுகிறாள்.

''என்ன பார்க்கிறாய்? பெரிய கிழவிபோல பெரிய பெரிய வார்த்தை பேசுகிறாள் இவள் என்று நினைக்கிறாயா? என் அனுபவம் அப்படி காத்யா! எனக்கும் உன்னைப் போல பிரச்னைதான். நான் அவனை முழுவதும் சரணடைந்தேன். பிறகு அவனையே கேட்டேன். என்ன கேட்டேன் தெரியுமா?''

குரல் குழைய பாடினாள் அவந்திகா.

**''எங்கள் பெருமான் உனக்கு ஒன்றுரைப்போம் கேள்!**
**எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க!**
**என் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க**
**இங்கு இப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்...''**

''காத்யா! என் தந்தை என்னைப் பெண் பேசி சோழ மன்னனுக்கு மணம் முடிக்க பாசவலையில் வீழ்த்தி தகடூரில் இருந்து அழைத்து வரும்போதுதான் பழைய சிவன் கோயில் ஒன்றில் இந்தப் பாடல் மூலம் அவனை கேட்டேன். அடுத்து நடந்தவை அனைத்தும் அதிசயம். இந்தப்பாடல் முடிந்ததும் நான் மெய்மறந்த நிலையில் இருந்த போதுதான் அந்தக் காபாலிகன் மயக்கப் பொடி தூவி குதிரையில் கட்டி இரவெல்லாம் காட்டில் கிடக்க அந்த ஈசன் அருளினால் காளிங்கர் என்னைக் காப்பாற்றி காஞ்சி அழைத்துவர அனைத்தும் என் நலம் காக்க அவன் செய்ததுதான். நான் செய்தபடி நீயும் செய். அவனை சரணடை. எனக்கு உதவியது போல உனக்கும் உதவுவான்...''



தலையைச் சற்று சாய்த்து கண்களில் கண்ணீர் வழிந்தபடி பேசும் அந்த அதிசயப் பெண்ணைப் பார்த்து சிலையாகி விட்டாள் காத்யாயினி. தான் கேள்விப்பட்ட ஆண்டாளைப் போலல்லவா இவள் கதையும் இருக்கிறது. ஆண்டாளும் அந்த ஆண்டவனையே முழுதும் சரணடைந்து அவனையே அடைந்தாளே... அந்த ஆண்டாளைப் போலவே இவளும் ஒரு தெய்வப் பெண்ணோ என்னவோ... எத்தனை அன்பாக பேசுகிறாள்..

எங்கெங்கோ அலைந்து திரிந்த சித்தார்த்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்று போதி சத்துவர் ஆனாராம். அதைப் போல எங்கோ பிறந்து வளர்ந்த தனக்கு இந்த அன்பே உருவான பெண் இப்படியொரு ஞான தத்துவத்தை இருவருக்குமே சம்மந்தமில்லாத இந்த திருவேங்கட மலையில் தன்னை தேடிவந்து வழங்குகிறாளோ... இதுவும் இவள் சொல்வது போல் அந்த ஆண்டவன் அருளோ... இத்தனை நாளும் நாம் தேடி தேடி காட்டிலும் மேட்டிலும் அலைந்தது இந்த ஞானப் பெண்ணைக் காணத்தானோ...

நினைக்க நினைக்க காத்யாயினிக்கு ஆனந்தம் உடல் முழுவதும் பரவியது. இத்தனை வருடங்களாக இப்படிப் பட்ட பரவச நிலையில் தான் இருந்ததாக அவளுக்கு நினைவில்லை.

ஆனால், ஆனந்தம் எப்போதும் நிலைத்து நிற்பதில்லையோ என்னவோ அதுவும் காத்யாயினிக்கும் ஆனந்தத்துக்கும் எப்போதுமே தொலைதூரமோ என்னவோ. வெளியே ஏதோ சப்தம் விசித்திரமாக கேட்க ஆரம்பிக்க இரண்டு பெண்களும் குடிசைக்கு வெளியே வந்தனர். அந்தக் கோரக் காட்சியையும் கண்டனர்.

மலைவாழ் மக்களின் குடிசைகள் பிடுங்கப்பட்டு கீழே அலங்கோலமாக சிதைக்கப்பட்டிருந்தன. அதைவிட

கோரமாக கையில் ஈட்டியுடன் இருபதுக்கும் மேற்பட்ட குதிரை வீரர்கள். காளிங்கனை நடுவில் வைத்து சிறை செய்வது போல் ஈட்டிகளை அவன் நெஞ்சுக்கு நீட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் நடுவில் நிராயுதபாணியாக சிக்கிக் கொண்ட காளிங்கனைப் பார்க்க சகியாமல் முதலில் அவந்திகாதான் 'ஐயோ' என்று கத்திக் கொண்டே அவர்கள் நின்ற இடம் நோக்கி ஓடினாள். காத்யாயினியும் அப்படித்தான் ஓட முயன்றாள். ஆனால், அதற்குள் அடிபட்ட வலதுகையை யாரோ பிடித்து இழுக்க வலியில் துடிதுடிக்க திரும்பிப் பார்த்தாள்.

அங்கே சாமுண்டர்யன் நின்றிருந்தான்.

# 30

# இலவு காத்த கிளி

அற்புதமான மலை. அற்புதங்கள் செய்யும் மலை. அழகான மலை. மனிதன் ஒருவனால் மட்டுமே கண்கொண்டு பார்த்து மனத்தால் ரசிக்கப்படும் இப்படிப்பட்ட இயற்கை செல்வத்தைப் படைத்த ஆண்டவனை எத்தனை போற்றினாலும் தகும். அழகு... அழகு... பச்சைப்பசேலென்ற அழகு... எங்கு நோக்கினும் அழகு...

திருவேங்கடமலையின் அந்தப் பள்ளத்தாக்கில் நின்று கொண்டு சூரியனால் தரப்பட்ட அந்த இளஞ்சூட்டு வெப்பத்தையும் அனுபவித்துக் கொண்டு தன் எதிரே காணப்பட்ட மலையழகை ரசித்துக் கொண்டிருந்த காளிங்கன் அந்த இயற்கை செல்வம் தன் மனதில் உள்ள படபடப்பினைக் கூட குறைப்பதாக உணர்ந்தான். அப்படி பார்க்கையில்தான் குதிரைக்காலடி ஓசைகள் கேட்கவே சற்று எச்சரிக்கையானான் அவன். அழகு என்றால் அங்கே ஆபத்தும் சேர்ந்தே இருக்கும் என்ற சாதாரண நியதியை அறிந்த காளிங்கன் அந்த ஆபத்தினை சுமந்து வரும் குதிரைகளை சற்று மறைவில் இருந்தே எதிர்நோக்கினான் அவன்.

சிறு படைபோல் குதிரைவீரர்கள் மேல் மலையிலிருந்து கீழே இறங்கி வந்தவர்கள் சடசடவென சடுதியில் அந்த குடிசைகள் அருகே அடைந்ததும் ஏன் எதற்கு என்று யாரையுமே கேட்க விடாமல் தங்கள் கைகளிலிருந்த ஈட்டிகள் மூலம் அந்தக் குடிசை வீடுகளின் மேற்கூரைகளை தோண்டி சிதைக்க ஆரம்பித்துவிட்டனர்.



சடுதியில்தான் நடந்துவிட்டது. மளமளவென சரிக்கப் பட்ட ஓலைக்கூரைகள் பிடுங்கி எறியப்பட்டதும் இல்லத்துள் இருந்த அந்த மலைவாசிகள் குழந்தைகளையும் பெண்களையும் அள்ளிக் கொண்டு வெளியே வந்து அலற ஆரம்பித்தனர். இனியும் தான் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது என்ற நிலையில் வெளியே வந்த காளிங்கன் வீரர்களை எதிர்க்கத் தொடங்கினான் கையிலே ஆயுதம் ஒன்றுமில்லாத நிலையில்.

வந்தவர்கள் அனைவரும் சாளுக்கிய வீரர்கள் என்பதும் தெரிந்தது. வாட்டசாட்டமான அரபுக் குதிரைகளில் ஈட்டியை கையில் ஏந்தி அட்டூழியம் செய்த வீரர்கள் கையிலே ஆயுதம் ஒன்றுமில்லாமல் தம்மை எதிர்க்க வந்த ஒற்றை வீரனைப் பார்த்தார்கள். உயரத்தில் உட்கார்ந்து கீழே பூச்சியைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்த அந்த வீரர்கள் காளிங்கனை சடுதியில் வட்டமிட்டு சூழ்ந்து கொண்டு கையிலிருந்த ஈட்டியையும் அவனைக் குறிபார்த்து சிறை செய்வது போல் குதிரையில் இருந்து கொண்டே அவனை வலமும் வந்தனர்.

காளிங்கன் கண்கள் முழுவதும் சுழல் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கினான். அதற்கேற்றாற்போல் தூரத்தில் இருந்து அவந்திகாவின் ஐயோ என்ற அலறலும் அதைத் தொடர்ந்து அவள் தன்னை நோக்கி வேகமாக ஓடிவருவது தெரிந்தாலும் தன்னை சுற்றியுள்ள வீரர்களின் பார்வையும் அவந்திகாவை நோக்கி சென்றதை மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டான்.

அவந்திகா அலறிக் கொண்டு ஓடிவந்ததால் அவள் மீது பார்வை வைத்து வட்டத்தில் இருந்து பிரிந்து முன் வந்தான் ஒரு குதிரை வீரன். சட்டென குனிந்த காளிங்கன் குனிந்த நிலையில் இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி தன் கால்களை உயரத்தூக்கி முன் வந்து குதிரையின் அடிவயிற்றை உதைக்க அந்தக் குதிரை இடறி அவன் பக்கத்தே சாய்ந்து தன் மீது இருந்த குதிரை வீரனையும் கீழே தள்ளியது. திடீரென விழுந்த வீரனை கட்டிப்பிடித்து அவன் ஈட்டியையும் பிடுங்கியவன் காற்று வேகத்தில் ஈட்டியுடன் சுழலத் தொடங்கினான்.

சில கணங்களுக்கு முன்னே சிறைப்பட்டவன் இப்படி தடாலடியாக செயல்படுவான் என்பதை சற்றும் எதிர்பாராத அந்தக் குதிரை வீரர்கள் அவன் சுழன்று போராடியதில்

ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் ஒருங்கே கண்டார்கள். சற்று நேரம் சுழன்று சுழன்று ஏதோ விளையாட்டு காண்பிப்பது போல் அவர்களை ஆச்சரியப்படுத்திய காளிங்கன் ஒரு கட்டத்தில் அப்படி சுழல்வதை அப்படியே நிறுத்தி தன் கையில் இருந்த ஈட்டியால் பின் பக்கத்து குதிரைகளின் கால்களுக்கிடையே கொடுத்து மேலும் சில குதிரைகளை இடற வைத்தான். அந்த வாயில்லா ஜீவன்களும் என்ன செய்வது என்று புரியாமல் தன் பக்கத்தே உள்ள மற்ற குதிரைகளையும் தாக்க ஆரம்பித்து தள்ளாடியது. இனியும் பயனில்லை என்பதை உணர்ந்த வீரர்கள் நேரடியாகவே அவனுடன் மோத ஆரம்பித்தனர்.

ஆனால், காளிங்கனைப் பற்றி அவர்கள் அதிகம் அறியவில்லை போலும்! ஆசிரியரிடம் தான் பயின்ற பயிற்சிகளுக்கெல்லாம் இப்போதுதான் பலன் கிடைத்ததாக நினைத்த காளிங்கன் முழு வேகமாக சுழன்றான். தன் எதிரிலும் பின்னாலும் தாக்கிய வீரர்களின் ஈட்டிகளை தாக்கி பறக்கச் செய்தான். தாக்கிய அதே வேகத்திலேயே அவன் கையிலிருந்த ஈட்டியின் பின்பகுதியால் அந்த வீரர்களின் தோள்களும் மண்டைப் பாகமும் பலமாக தாக்கப்பட சிலர் சுருண்டு விழுந்து வலியால் அலறத் தொடங்கினர்.

மிகுதியிருந்த வீரர்களுக்கோ அவன் வேகம் வியப்பளித்தது. எந்த சமயத்தில் எந்தக் கணத்தில் எந்தப் பகுதியில் அவன் கால்கள் இருக்கின்றன என்று புரியாமல் கண்ட கண்ட இடங்களில் கோபத்துடன் ஈட்டிகளை அவன் மீது வீச அந்த ஈட்டிகளோ தவறான திசைகளில் விழத் தொடங்கின. அவன் அதீத வேகத்திற்கு ஏற்றவாறு அவன் கால்களும் கை ஈட்டியும் கை கொடுக்கவே பறந்து வந்து தம் மீது பலமாகப் பாய்ந்த ஈட்டியின் அடிகளுக்கு அச்சப்பட்டு அலற ஆரம்பித்தனர். அச்சம் எப்போது ஆரம்பிக்கின்றதோ அப்போதே தோல்வி அரக்கனும் அவர்களை ஆட்கொள்ள ஆரம்பித்தான்.

அதே சமயத்தில் அங்கு ஓடிவந்து நின்றிருந்த அவந்திகா சூழ்நிலை தமக்கு சாதகமாக மாற ஆரம்பித்ததைப் பார்த்ததும் சந்தோஷப்பட்டவள் அங்கு கூடியிருந்த மலைக்குறவர்களை ஒன்றுபடுத்தி ஈட்டியிழந்த சாளுக்கிய வீரர்களை பிடித்து கட்டிப் போடுமாறு ஆணையிட்டாள். அவர்களும் உடனடியாக செயல்பட்டு அவர்களைக் கட்டிப் போட்டும் வேறு சிலர் கீழே கிடந்த ஈட்டிகளை கைக்கொண்டு



தற்காப்பாக அந்த வீரர்களை சுற்றியும் வளையம் கட்டி நின்றனர்.

நிலைமை விபரீதத்தில் முடிந்ததைப்பார்த்த சாளுக்கிய வீரர்கள் வேறுவழியின்றி சரணடையத் தொடங்கியதும் ஆனந்த கூச்சலிட்ட குறவர்கள் காளிங்கனை தங்கள் தோள்களில் தூக்கிக் கொண்டு உற்சாகமாய் ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். இவர்களின் ஆனந்தக் கூச்சலில் சற்றே தூரத்தில் கட்டப்பட்டிருந்த காத்யாயினியின் தனி குடிசைக்குள் கேட்டுக் கொண்டிருந்த கங்கைக்கரை இளவரசியின் கூச்சல் கூட அடங்கிப் போனது என்னவோ உண்மைதான்.

அவந்திகாவுடன் தானும் ஓடிச்சென்று காளிங்கனைக் காப்பாற்றும் எண்ணத்தில் இருந்த காத்யாயினியின் அடிபட்ட வலது கையை வலுவாகப் பிடித்த சாமுண்டர்யன் அவள் வலியால் அலறித் துடிக்க துடிக்க அவளை குடிசைக்குள் இழுத்துச் சென்றான். அவள் இடது கை அந்த ராட்சஸனை அடித்துப் பிறாண்டினாலும் அவன் லட்சியம் செய்யவில்லைதான்.

இந்தச் சமயத்தில்தான் அத்தனை வலியிலும் சர்வதேவா தன் பாதுகாப்புக்காக விட்டுச் சென்ற வாள் அவள் நினைவுக்கு வர தன் பார்வையை அந்த வாள் இருக்கும் மேற்கூரைப் பகுதிக்கு செலுத்தினாள். ஆனால், அவன் பார்வையும் அங்கேயே செல்ல உயரமாக இருந்த அந்த ராட்சஸனின் நீண்ட கை எளிதாக தாவி அந்த வாளையும் பற்றிக் கொண்டான். ஆனாலும் தன் வலது கை அவனிடம் இருந்து விடுபட்டதால் அவனிடமிருந்து ஒதுங்கி குடிசையின் சுவர் ஓரம் சென்றவள் தன் வலது கையை இடது கையால் நீவிக் கொண்டே கோபப் பார்வை பார்த்தாள். ஆனால், அவள் கோபம் அவனிடம் செல்லுபடியாகவில்லைதான். அவன் சிரித்தான்.

"உனக்குத் தெரியுமா காத்யாயினி. இலவம் பழம் ஒன்று தனக்காகவே பழுக்கிறது என்ற ஆவலில் கிளி ஒன்று ஆசையுடன் காத்துக் கிடந்ததாம். ஆனால், திடீரென அந்த இலவம்பழம் கிளியின் கண்முன்னேயே வெடித்து பஞ்சாக வெளிவந்து காற்றாய் பறந்து அந்தக் கிளியின் கண்முன்னேயே மாயமாகிவிட்டதாம். நீ அந்த இலவம்பழம். அந்த இலவு காத்த கிளி நான்தான். ஆனால், அந்தக் கிளி போல் நான்

ஏமாறப்போவதில்லை குருபுத்ரி! உன்னை நான் நிச்சயம் அடைவேன். உன் கழுத்தில் மணமாலை சூட்டி மனையாட்டியாகவும் ஆக்கிக் கொள்வேன். ஒரு மணாளனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை எனக்குக் கொடு பெண்ணே!''

''சாமுண்டர்ய! நீ முட்டாள், மூடன் என்றுதான் இதுநாள் வரை நினைத்தேன். ஆனால், இத்தனை பெரிய மூர்க்கனாய் இருப்பாய் என்று நினைக்கவில்லைதான். என்னுடன் விளையாடாதே. நீ சரியான ஆண்மகனாக இருந்தால் அந்தக் கத்தியை என்னிடம் கொடுத்து வாட்சண்டை போடு. கோழையாக ஒரு நிராயுதபாணிப் பெண்ணிடம் மோதாதே!''

''நன்றாக கத்து காத்யாயினி! கூச்சலிட்டாலும் உன்னைக் காப்பாற்றப்போவது இங்கு யாருமில்லை. ஆண் போல் வளர்க்கப்பட்ட பெண்ணே! என்னோடு சப்தம் போடாமல் வந்து விடு. உனக்கு ஆனந்தத்தை அள்ளி வழங்குகிறேன். நம் குருதேவிடம் இனியும் நீ அடிமையாக பணி செய்யத் தேவையில்லை. உனக்கு என்னால் விடுதலை கிடைக்கிறது. உனக்குத் தெரியுமா. உன்னை உயிரோடு நரபலி கொடுக்க உன் தந்தை காபாலிக மடிராஜனுக்கு வாக்குத் தந்துள்ளார். ஆனால், நான் உன் உயிரைக் காப்பாற்றுகிறேன். உன்னை மணம் புரியவும் சம்மதம். நான் சொல்வதைக் கேட்டு என்னோடு புறப்படு பெண்ணே. நம் திருமணத்திற்கு விக்கில ராஜா கூட சம்மதம் தெரிவித்துள்ளார். இனி என்ன. வந்து விடு என்னுடன். வீணாக மடிராஜனுக்கு பலியாகி சாவாதே.''

ஆர்ப்பாட்டமாக சிரித்தவனை புழுவைப் பார்ப்பது போல் அருவருப்பாய் பார்த்தாள் காத்யாயினி.

''உன்னிடம் வாழ்க்கைப்பட்டு உயிர் போவதை விட மடிராஜனால் பலிவாங்கப்பட்டு உயிர் போவது மேலடா.''

''நீ இப்படித்தான் முரண்டு பிடிப்பாய் எனத் தெரியும் காத்யாயினி. அதனால்தான் முன்னேற்பாட்டோடு வந்திருக்கிறேன். உன்னை அடையாமல் என்னால் போகமுடியாது. நீ ஒரு பெண் புலி என்று எனக்குத் தெரியும். எந்தப் பெண்புலியும் ஒரு ஆண்புலிக்கு அடங்கத்தான் வேண்டும். இந்த ஆண் புலியிடம் ஒடுங்கத்தான் வேண்டும்!''



முதன் முறையாக அந்த வலியிலும் சிரித்தாள் காத்யாயினி. ''சாமுண்டர்ய! நீ சொல்வது உண்மைதான். எந்தப் பெண் புலியும் ஆண்புலியிடம் அடங்கத்தான் வேண்டும். அப்படி அடங்கிப் போன பெண்புலியை மற்ற மிருகங்களிடமிருந்தும் அந்த ஆண்புலி காக்கும். அந்த ஆண்புலியை பார்க்க வேண்டுமா?''

''என்ன சொல்கிறாய்? என்னையும் மீறிய அந்த ஆண் புலி யார் என்று சொல். முதலில் அந்தப் புலியையும் கொன்று பிறகு உன்னிடம் வருகிறேன்.''

''உன் பின்னால் பாரடா மூர்க்கனே!''

சட்டென பின்னால் பார்க்க அங்கே ஈட்டியுடன் காளிங்கன் நின்று கொண்டிருந்தான். இவன். இவன். மாமன் மகன். பெருமாள் சங்கைத் தான் திருடியதாக பழியைத் தன் மேல் போட்டுக் கொண்ட அப்பாவி.. ஓஹோ.. அதனால்தான் இந்த குருபுத்ரி இந்தச் சிறுவன் மேல் இரக்கம் காட்டினாயோ, அடிப்பாவி, இவன் எதிரியின் மகன். இவனிடம் போய் காதல் கொண்டாளோ. அப்படித்தான் இருக்கும். இவள் வயதுக்கு ஏற்ற சிறு பையன்தானே. இவள் மயங்கியதும் இயற்கைதான்.

''இந்தச் சிறுவன் யாரென்று எனக்குத் தெரியும் குருபுத்ரி! ஆனால், இவன் உனக்கேற்ற வயதுதானே தவிர உனக்கேற்ற ஆண்புலி இல்லை. இவன் புலியே இல்லை. புள்ளிமான்; பெண் புலி புள்ளிமானை அடித்து உண்ணலாம்.. அணைத்து உறவாடமுடியாது. ஆசைப்பட்டு அடையமுடியாது. அப்படி அடையவும் நான் விடமாட்டேன். உனக்கு ஏற்ற ஆண்புலி நான்தான்.''

என்றவன் ஒரு கையால் வாளை சுழற்றி மறுகையால் அவள் வலது கையை மறுபடி பற்றினான். மறுபடியும் அவள் வலியால் துடித்தாள். காளிங்கனின் முகம் இறுகியதையும் பார்த்தான் சாமுண்டர்யன். இடிஇடியென்று சிரித்தான்.

''சாமுண்டர்ய! உடனடியாக இளவரசியின் கையை விடு!''

''ஹ.. விடமாட்டேன்... என்ன செய்வாய்?''

''இளவரசியாரைத் தொட்ட உன் கையை வெட்டி விடுவேன்.''

குரலில் நிதானமும் முகத்தில் உணர்ச்சியுமற்று ஈட்டியுடன் ஏதோ கடமை வீரன் போல் வந்த அந்தப் புள்ளிமானைப் பார்த்து சிரித்தான் சாமுண்டர்யன். பிறகு அவள் கையை விட்டவன் அவனருகே வந்தான்.

''ஏய் சிறு பயலே! சோழ ராஜ வம்சத்தில் பிறந்ததால் மனதில் சக்கரவர்த்தி என்று நினைப்போ. இவள் கையைப் பிடித்து தரதரவென இழுத்துப் போகிறேன். எங்கே தடுத்துப்பார் பார்ப்போம்.''

சொல்லிவிட்டு காத்யாயினியின் கையைத் தொடப் போனான். ஆனால், விந்தை போல் நிகழ்ந்தது அடுத்த நிகழ்ச்சி. மின்னல்வேகத்தில் அவர்கள் இருவர் நடுவில் தடையாய் நின்ற காளிங்கன், சாமுண்டர்யன் ஏதும் ஊகிக்கு முன்பே வாள் பிடித்த அவன் மணிக்கட்டை பற்றி சற்று அழுத்தினான். விந்தையிலும் விந்தையாக சர்வதேவா விட்டுச் சென்ற வாள் சாமுண்டர்யனின் கையில் இருந்து அவன் விருப்பமின்றியே கீழே விழ, வாளையும் ஈட்டியையும் ஒரு சேர பற்றிக் கொண்டே, தன் எதிரே ஆச்சரியத்துடன் நின்ற சாமுண்டர்யனை குடிசைக்கு வெளியே தள்ளினான். அதற்குள் அவந்திகாவும் மற்ற குறவ ஆண்களும்கூட குடிசைக்கு வெளியே வந்தனர்.

'எப்படி இந்த மாயம்? இது என்ன மர்மம். தன் கையில் இருந்த வாள் எப்படி தன்னைக் கேளாமலேயே கீழே விழ முடியும்' சாமுண்டர்யன் திகைத்துப் போனான். போர்முனையில் தன்னைக் கண்டாலே அஞ்சி ஓடும் படைகளைப் பார்த்துப் பழகியவனுக்குத் தான் விரும்பிய பெண் முன்பு இப்படி ஒரு அவமானம் ஏற்பட்டு விட்டதை அவனால் சகிக்க முடியவில்லைதான். எரிமலையானான் அவன். அவன் கண்களுக்கு எதிரே தெரிந்த காளிங்கனை அந்த எரியும் கண்களோடு பார்த்தான். அவனுடன் அவன் பின்னாலே ஒடுங்கி பெண் மானைப் போல் பதுங்கிய குருபுத்ரியையும் பார்த்தான். தான் இனியும் பார்த்துக் கொண்டிருக்க கோழையில்லை என்று நினைத்தவன் ஒரே பாய்ச்சலாக காளிங்கன் மீது பாய்ந்தான். யானை ஒன்று தன் எதிரே நின்ற குதிரையை பிடித்து தள்ளுவது போல அவனைத் தள்ளியவன் வெறி பிடித்தவன் போல் காத்யாயினியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் குதிரையை நோக்கி ஓடினான். ஆனால், அவன் போதாத காலம். காளிங்கனால்



வீசப்பட்ட வாள் பறந்து வந்து காத்யாயினியின் கையைப் பற்றிய அவன் வலது தோள் பட்டையில் பாய்ந்தது.

சரியாக வீசப்பட்ட சர்வதேவாவின் வாளினால் சாமுண்டர்யனின் வலது கையை தோளிலிருந்து பிரித்து, ஏதோ மெலிதான செடி ஒன்று ஈரப்பதமான மண்ணிலிருந்து பறித்து பிடுங்கப்பட்டது போல வெளியே ரத்தத்துடன் விழுந்தது.

எதையும் உணரமுடியாமல் போய்விட்டான் சாமுண்டர்யன். எத்தனை வேகம். எப்படித்தான் சரியாக வலது கையை அந்த வாள் தன் தோளிலிருந்து பிரித்து எறிந்தது என்பதை அறியமுடியாமல் அவனை மயக்கம் சூழ்ந்து கொள்ள கிளை வீழ்த்தப்பட்டு சாய்க்கப்பட்ட அடிமரம் போல தடாலன கீழே விழுந்தான். அவன் தோளிலிருந்து ரத்தம் பீறிட்டு பீய்ச்சி வெளியே வரத் தொடங்கியது.

காத்யாயினி அதிசயப்பட்டாள். தான் கண்ட கனவுக்கு நேர்மாறாக நடந்த நிகழ்ச்சி அவளுக்கு விந்தையாக காணப்பட்டது. தன்னைத் தொட்டால் தொட்ட கை தோளில் தங்காது என்று சொன்ன சொல்லை செய்து காட்டிய அந்த தமிழ் வீரனை அந்த ஆச்சரியம் சற்றும் விலகாமல் தன் அகலக் கண்களை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு வேளை அந்த மாயக் கண்ணன் காளிங்கனாக அவதாரம் செய்து சிசுபாலனான சாமுண்டர்யனை நோக்கி சக்கரத்தை வீசினானோ.' ஆனால் அவள் ஆச்சரியம் அடுத்து நடந்த நிகழ்ச்சியால் மேலும் விரிந்தது.

சாமுண்டர்யன் கை தோளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்த காளிங்கன் அவர்களை சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த குறவர் கூட்டத்தில் மருத்துவச்சி யாராவது இருக்கிறார்களா என்று கேட்கவே காத்யாயினிக்கு மருத்துவம் பார்த்த பெண் வெளியே வந்தாள். வெட்டப்பட்ட கைய்யை எப்படியாவது ஒட்ட வைத்து மருத்துவம் செய்ய வேண்டும் என்று மருத்துவச்சியின் கையைப் பிடித்து வேண்டினான். அந்த மருத்துவச்சி உடனே சாமுண்டர்யன் அருகே சென்று குனிந்து அவன் தோளை சோதித்தாள். பிறகு தனியாக கீழே கிடந்த அவன் கையை எடுத்து அறுபட்ட தோளில் அப்படியே பொறுத்தினாள். அது சரியாக பொறுந்தாமல் போகவே தன் தோழிகளை அழைத்து அவர்களை ஏதோ கொண்டுவரச் சொன்னாள். அவர்களும் மிக வேகமாக செயல்பட்டனர்.

எங்கிருந்தோ வந்த ஆட்டு ரத்தமும் சாம்பலும் சாமுண்டர்யனுக்கு மருந்தாக மாறின. மருத்துவச்சி மறுபடியும் விடுபட்ட கையை எடுத்தாள். அந்த ரத்த நாளங்களில் ஆட்டு ரத்தத்தை ஏராளமாக ஊற்றினாள். அதே விதத்தை அறுபட்ட தோளிலும் செய்தாள். பிறகு சாம்பலை இரு பக்கமும் பூசி ரத்த ஓட்டம் வெளியே வராமல் மட்டுப் படுத்தினாள். விடுபட்ட கையினை ரத்த நாளங்களோடு சரியாக பொறுத்தி தோளுடன் ஒன்று சேர்த்தாள். பிறகு மூலிகை இலைகளை ஒட்ட வைத்த இடத்தில் பிழிந்தாள். சாறு சாம்பலுடன் சேர்ந்து கெட்டிப்பட்டது. அந்த மூலிகைகளையே தோளும் கையும் சேர்ந்த இடத்தில் சுற்றிலும் கட்டினாள். ஏறத்தாழ கை பழைய நிலைக்கே வந்தது போல் காணப்பட்டவுடன்தான் திருப்தியுடன் எழுந்தாள். பிறகு காளிங்கனைப் பார்த்து அழகான புன்னகையை வீசிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்து போனாள்.

காத்யாயினியும் அவந்திகாவும் சற்று விந்தையாய் இந்நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தனர். காளிங்கனோ நிம்மதி பெருமூச்சு விட்டான். காத்யாயினியோ அவனை மனிதனா அல்லது மனித வடிவில் வந்த தெய்வமா என்று புரியாமல் பார்த்தாள். காளிங்கனின் செய்கை அவளை மிகவும் பாதித்துவிட்டது. காத்யாயினியின் உள்ளம் காளிங்கனுக்குப் புரிந்ததோ என்னவோ அவளைப் பார்த்து புன்னகை செய்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய் காத்யா! அவனை ஏற்கனவே எச்சரித்தேன். அவனுக்குத் திருந்த ஒரு சந்தர்ப்பமும் கொடுத்தேன். ஆனால், அவன் என் எச்சரிக்கையை ஏற்காமல் உன் கையைப் பிடித்து உன்னைத் துன்பத்தில் ஆழ்த்தினான். என் எச்சரிக்கையை மீறியதற்காகவே அவன் கை துண்டிக்கப்பட்டது!''

''வெட்டியதுதான் வெட்டினீர்கள். அந்தச் சண்டாளனின் இன்னொரு கையையும் வெட்டாமல் ஏன் அறுபட்ட கையை ஒன்று சேர்த்தீர்கள்?''

காளிங்கன் சற்று ஆலோசித்தான். பிறகு அவளைப் பார்த்துக் கொண்டே மெல்லப் பேசினான்.

''அந்தக் கூட்டத்திலேயே சற்று நல்லவன் இவன்தான் காத்யா... இவன் எண்ணங்கள் மோசமானவை.



காமுகன்தான். அதற்குத்தான் அவன் கை அறுப்பட்டது. ஆனாலும், இவன் காம வெறியிலும் உன்னை, உன் உயிரைக் காப்பாற்றும் எண்ணம் சிறிது இருந்தது; அந்த பில்வணனையே எதிர்க்கும் மனப்பான்மையும் இருந்தது. இப்படிப்பட்டவர்களை நாம் கொல்லக் கூடாது. அதனால்தான் அவன் கையை ஒட்டவைக்கச் சொல்லி வேண்டினேன். இனி அவன் வலது கை செயல் இழந்ததைப் போலத்தான். இனியும் இவனால் வீரவிளையாட்டுகள் விளையாட முடியாதுதான். கீழ்த்தரமான காமவெறியுடன் பெண்களை அண்டமுடியாது. இது இவனுக்கு ஒரு பெரிய பாடம்...''

சொன்னவன் மலைக்குறவர்களைக் கூப்பிட்டு சாமுண்டர்யனை மயக்கத்துடனே அவன் குதிரையில் படுக்க வைக்க சொன்னான். அந்தப் பள்ளத்திலிருந்து மேல் மலையை நோக்கி அந்தக் குதிரையில் கட்டி அனுப்பிவைத்தான்.

காத்யாயினிக்கு மிக மிகப் பெருமையாக இருந்தது. அந்தப் பெருமையால் அவனைப் பார்க்க பார்க்க அவன் மேல் காதல் பொங்கி ஊற்றெடுப்பதை நன்றாகவே உணர்ந்தாள். இவனே தன்னிடம் முன்னம் சொன்னபடி முன் வினையில் செய்த தீவினைகளால் பில்வணன் கூட்டத்தை தான் நாடினோமோ... அந்த முற்பிறவிகளில் பல நல்ல தவத்தையும் செய்திருக்கிறோம்... இல்லையென்றால் இப்படிப்பட்டவனோடு பழகும் சந்தர்ப்பம் தனக்கு இப்பிறவியில் கிட்டியிருக்குமா? தனக்காக, தன் நன்மை கோருபவனாக, தனக்காகவே செயல்படும் இந்த வீரனை தெய்வம்தான் தனக்குப் பரிசளித்ததோ...

காணாமல் தவித்து, பிறகு திடீரென கிடைத்த அத்தனை செல்வத்தையும் கண்ணால் கண்டுவிட்டதைப் போல் அவனைப் பார்த்தாள் காத்யாயினி. அவள் வலது கைவலி மறந்து போனாள். தன்னையும் மறந்தே போனாள்தான் அவள்.

ஆனால், காளிங்கன் தன் கடமைகளை செய்து கொண்டிருந்தான். சூரியன் உச்சியைத் தாண்டி பல நாழிகைகள் ஆனாலும் பிரியா விடை பெறுபவன் போல மேலே சென்று கொண்டிருந்த அந்த நேரத்தில் சாளுக்கிய வீரர்களைக் கொண்டு அவர்களால் பிரிக்கப்பட்ட அந்த ஓலைக் குடிசைகளை மறுபடியும் சீர்படுத்திக் கொண்டிருந்தான். எதையும் பிரித்துப்போடுவது எளிது. ஆனால், சேர்த்து

வைப்பது எத்தனை கடினம் என்பதை உணர்ந்தவர்கள் போல் அந்த சாளுக்கிய வீரர்கள் மலைக் குடிசைகளை மறுபடியும் வேய்ந்து கொண்டிருந்தனர். காளிங்கள் அவந்திகாவிடம் ஏதோ சொல்ல வாயெடுத்து அவளைத் தேடினான். அப்போது மறுபடியும் அலறல் கேட்டது. அந்த அலறலும் காத்யாயினியின் குடிசையிலிருந்தே மறுபடி வந்தது. ஆனால், இம்முறை அலறியது அந்த மருத்துவச்சி. அத்தனை பேரும் ஓடினார்கள் அங்கே. குடிசைக்குள் மருத்துவச்சி கை கால் கட்டப்பட்ட நிலையில் கிடந்தாள் கீழே. அவள் வாயிலும் கட்டப்பட்டிருந்த கட்டு சற்று விடுபட்ட நிலையில் அவள் சப்தமிட முடிந்தது என்பது அவள் வாயருகே இருந்த துணியே சொல்லியது.

கட்டுக்கள் விடுவிக்கப்பட்ட நிலையில கடகடவென சொன்னாள். அவந்திகாவை மயக்கப்பொடி தூவி யாரோ மண்டை ஓட்டுக்காரன் தன் கண் முன்னேயே குதிரையில் கட்டி ஓடிவிட்டான் என்பதையும், தடுக்க முயன்ற தன் மேலேயும் மயக்கப்பொடி தூவி கையையும் காலையும் கட்டி வாய் மூடி தான் கீழே கிடத்தப்பட்டதையும் தெரிவித்தாள் மருத்துவச்சி. அவன் தன் மீது மயக்கப்பொடி தூவும்போது மூச்சை இழுக்காததால் அவளை மயக்கம் ஆழ்த்தவில்லை என்பதையும் அவள் சொன்னபோது அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டாள் காத்யாயினி. தேவதை போல வந்து தன் கையை ஆறுதலாக தடவி ஞான உபதேசம் தந்த அவந்திகாவுக்கு இப்படியொரு தண்டனையா என்று புரியாமல் கண்ணீரோடு பார்த்தாள் காளிங்கனை. ஏதோ நினைத்தவள் தன் குடிசையின் மூலையில் இருந்த கூடையை நகர்த்திப் பார்த்தாள்.

அங்கு சங்கு சக்கரம் காணப்படவில்லை.

அதைவிட கவலைதரும் செய்தியை அப்போது அங்கு வந்த மிளகாழ்வான் சொன்னபோது தலை சுழலும் நிலைக்கே வந்துவிட்டாள் காத்யாயினி.

# 31

# அன்பு அம்மங்காவும் அர்ச்சனைப் பூக்களும்

''அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் – இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்''

இந்தக் கதை நடந்த பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் மகாகவி இந்தப்பாடலைப் பாடினாலும் அந்தக் கவிஞன் சொல்லிய அந்த அன்பை தன் நெஞ்சமெல்லாம் அமுத சுரபியாக அப்பிக் கொண்டு அதை அனைவருக்கும் பேதமில் லாமல் வாரி வழங்கிய அம்மங்காதேவி ஏனோ அன்று திருமலையில் அந்த அன்பே தனக்கு பலவீனமாகி விட்டதைப் போல் உணர்ந்தாள்.

அன்பினை பேதமில்லாமல் காட்டியதால்தான் இவர்களெல்லாம் தன்னை மதிக்கவில்லையா என்று தனக்குள் அடிக்கடி கேட்டுக் கொள்ளவும் செய்தாள். அபயனும் காளிங்கனும் அவள் இரு கண்களாக இருந்து அன்பைப் பெற்றவர்கள்தான். அவர்களுக்குக் காட்டிய அதே அன்பைத்தான் அதிராசேந்திரனிடம் காட்டுகிறாள். ஆனால், சோழ சிம்மாசனம் ஏறிவிட்டபின் தன் அன்பை அவன் உதாசீனப் படுத்திய விதம் அவளை வருத்தியது. அதை விட மோசமாக அவந்திகா தன் அன்பை பலவீனமாக நினைத்து இப்படி செய்தது இன்னமும் வருத்தியது. அதிராசேந்திரனை மணக்க இஷ்டமில்லை என்று கண்ணில் நீர் மல்க அன்று அவள் சொன்னபோது தாமும் அவந்திகாவை ஆதரித்தோமே... ஆறுதலாய் கூறி அவந்திகாவை அன்பாய் அரவணைத்தோமே... ஆனால் தன் அன்பை உதாசீனப்படுத்தி விட்டு காளிங்கனையும் தன்னோடு அழைத்துக் கொண்டு ஓடியது என்ன வகை நியாயம்.

அதிகைமான் புத்ரியின் செயலை அவளால் மன்னிக்க முடியவில்லை. அதிகைமான் அரசர் மேற்கு எல்லைக்கான சோழத் தளபதி. தம்மை முழுவதுமாக ஆதரித்து மரியாதை

செய்பவர். அப்படிப்பட்டவரின் மகள் இப்படி செய்து எல்லோரையும் தலைகுனிய வைப்பதா?

ஒருவேளை அவந்திகா காளிங்கனைத்தான் மணம் செய்வேன் என்று அன்றே கூறியிருந்தாலும் தான் மகிழ்ச்சியாகவே ஏற்றுக் கொண்டு சமயம் வரும்போது அதிகைமானிடம் பேசி ஆனந்தமாக முடித்திருப்போமே... ஆனால், அவள் திருட்டு வழியை அல்லவா தேர்ந்தெடுத்திருக்கிறாள். இனி எந்த முகம் கொண்டு யாரிடம் பேசுவது.. அனைவரும் தன்னை பார்த்து நகைக்க மாட்டார்களா... ஒரு மரியாதைக்குரிய சோழ தேசத்து ராணியின் மேற்பார்வையிலேயே இப்படிப்பட்ட இழிவு நடந்ததாக அல்லவா சொல்வார்கள்.

ஏற்கனவே பெரிய ராஜா எழுதிக் கொடுத்த அந்த ஓலை அதிராசேந்திரன் கண்களுக்கு அக்னியாக தெரிகின்றது. இல்லாவிட்டால் அன்று காஞ்சியில் அந்த ஓலையை சுட்டிக் காட்டி அத்தனை உதாசீனம் செய்திருப்பானா... அம்மங்காவின் அன்பை விட அவளை அவமானப்படுத்துவதுதான் அவனுக்கு அன்று பெரிதாக தோன்றியதோ... இப்படிப் பட்டவனுக்கு அவந்திகாவின் செயல் சாதாரணமாகவா தோன்றும்? 'காளிங்கன் உன் தத்துப்பிள்ளை.. அந்த அவந்திகாவோ உன் அன்பை முழுதும் கவர்ந்த செல்லப் பெண்.. நீயே ஏன் அவளுக்காக திட்டம் போட்டிருக்கக்கூடாது?' என்றல்லவா அதிராசேந்திரன் கேட்பான். அந்த பில்வணன் கூட்டத்தினர் அவனை மேலும் ஊக்குவிப்பார்களே.. 'சோழ அரசனுக்காக பேசப்பட்டிருந்த பெண்ணை தன் தத்துப்பிள்ளைக்குக் கடடிவைக்கப் போடப்பட்ட நாடகம்' என்று ஊரெல்லாம் பறை அடிப்பார்களே...

அம்மங்கையின் இன்னொரு பக்கம் அவளையே குற்றம் சாட்டியது. எந்தவித பிரச்னையும் சுயநலத்தோடு பார்ப்பதாக அம்மங்காவை சாடியது. 'ஒரு வேளை அவந்திகாவின் பக்கம் இருந்து சிந்தித்துப் பார்த்தால் விவரம் புரியுமே' என்று யோசனையும் கூறியது.

உண்மைதான். அவந்திகா 'வேண்டாம் வேண்டாம்' என்று எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் கேளாமல் அவள் தந்தை அவளைக் காஞ்சிக்கு இழுத்து வந்தாரே. புரட்சிகரமான எண்ணங்கள் அவளுடையது. அத்தகைய எண்ணங்கள் தனக்கும் இருந்திருந்தால் எத்தனை நல்லது.



அம்மங்காதேவியின் அன்பு உள்ளம் மறுபடியும் விழித்துக் கொண்டது. அவந்திகாவை கடிந்து கொள்வது தவறு. தனக்குத்தான் தீயவற்றை எதிர்க்கும் தைரியம் வரவில்லை.. ஆனால், அவந்திகாவுக்கு வந்தபோது நாம் ஆதரிக்க வேண்டாமோ... தேவைப்பட்ட நேரத்தில் தனக்கு வராத தைரியத்தை தேவைப்பட்ட சமயத்தில் அவந்திகா வெளிப்படுத்திவிட்டாள். நாம்தான் அனாவசியமாக தவறாகக் கருதி நம்மையும் குழப்பி மற்றவர்களையும் குழப்புகிறோம். நாம்தான் மற்றவர்களை சரியாக புரிந்து கொள்வதில்லை.

ஒருவேளை தன்னுடைய குழப்பங்களுக்கெல்லாம் காரணம் தன்னுடைய மனநிலையோ...' அன்று பெரியராஜா சாதாரணமாக நினைத்து எழுதிக் கொடுத்த ஓலையை வெகு தீவிரமாக எடுத்துக் கொண்டேனோ...

அதையே நினைத்து நினைத்து மாய்ந்து போகிறேனோ.. பின் எதற்காக யார் அந்த ஓலையைப் பற்றிப் பேசினாலும் தான் தவறாகவே நினைக்க வேண்டும்.

அம்மங்காதேவிக்கு ஏனோ அந்த ஓலையைப் பற்றிய நினைவுகள் பலமாகவே எழுந்தன. தன்னோடு எப்போதும் இருக்கும் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் அந்த ஓலையை கையில் எடுத்தாள்.

''குட்டி ராஜேந்திரன் பெரியவன் ஆனதும் சோழ சாம்ராஜ்ய மகுடாபிஷேகம் அவனுக்கு சூட்டப்படவேண்டும். இது சோழ தேசத்து சக்கரவர்த்தி ராஜேந்திரனின் ஆணை!''

ஓலைவரிகளைப் படித்ததும் சிரிப்பு வந்தது அம்மங்காவுக்கு. கள்ளங்கபடமறியாத குழந்தை ஒன்று 'வானத்தில் அழகாகத் தெரிந்த அரைவட்ட சந்திரனை உடனே பிடித்துத்தா' என அடம்பிடித்ததாம். ''நாளை இன்னமும் பெரிதாகும் - அப்போது பிடித்துத் தருகிறேன், இப்போது சாப்பிடு கண்ணா!'' என்று அந்தக் குழந்தையின் அன்னை சமாதானப் படுத்தி சாப்பிட வைத்தாளாம்.

அம்மங்காவுக்கு ஏனோ அந்த ஓலை திடீரென குழந்தைத் தனமாக பட்டது. 'அந்தக் குழந்தை போலவே அபயன் அன்று கேட்டிருக்க வேண்டும் - அந்த அன்னையைப் போலவே பெரிய ராஜாவும் ஏதோ சமாதானப்படுத்துவதற்காக அப்படி ஓர் ஓலை எழுதிக் கொடுத்திருக்கலாம்... அந்த அன்னைக்குத் தெரியும், அந்தச் சந்திரனை சடக்கென பிடித்து டபக்கென

அள்ளி குழந்தையின் குட்டிக் கைகளில் பரிசாக அளிக்க முடியாதென.. அதைப் போலத்தான் இந்த மாபெரும் சோழநாட்டின் மகுடமும்...'

இந்த விஷயம் அனைவருக்குமே தெரிந்திருக்கிறது – தன்னைத் தவிர. தான் மட்டுமே அந்த ஓலையைப் பற்றியே நிதமும் நினைத்து ஏங்கி கவலையில் வாடுகிறோம்... 'ச்சே! நான் ஒரு சரியான பைத்தியம்... மூளை இருந்தும் அதை பயன் படுத்தத் தெரியாத பைத்தியக்காரி... அப்படி பயன்படுத்தத் தெரிந்தால் நானும் மற்றவர்களைப் போலவே அந்த ஓலையை அன்றே மறந்து போயிருப்பேன்... இப்படி ஆசை ஆசையாய் பெட்டகத்தில் பூட்டி நெஞ்சமெல்லாம் ஏங்க எப்போதடா தன் மகன் அரியணை ஏறுவான்... எனக் காத்துக் கொண்டிருக்கவும் மாட்டேன்... ஆசை... ஆசைதான் அது... ஆசை இருக்குமிடத்தில் அன்பு எப்படி வரும்?

அந்த ஆசைக்குக் காரணம் இந்த ஓலைதான். ஒருவர் பின் ஒருவராக தன் அண்ணன்மார் மூவரும் அரியணை ஏறியதைப் பார்த்தவளுக்கு எப்போதடா தன் மகனும் இப்படி அரியணை ஏறுவான் என்றுதான் எண்ணமுடியுமே தவிர அவள் மனதில் சுயநலமில்லாத அன்பு எப்படி உருவாகும்? இந்த ஓர் ஓலை அந்த சுயநலம் என்ற விஷத்தை தன் பால்வண்ண மனதில் கலக்க வைத்து விட்டது. இந்த ஓர் ஓலை குட்டி ராஜேந்திரனை அவனுக்கு உரியதான வேங்கி மகுடத்தையும் சூடவிடாமல் அவனை பழையாறிலேயே அமர்த்தி விட்டது... இந்த ஓர் ஓலைதான் உண்மையாகவே அதிராசேந்திரனிடம் காட்டும் அன்பையே சந்தேகிக்க வைத்து விட்டது... இந்த ஓர் ஓலை சம்புவரையரையும் அதிகை மானையும் இரண்டும் கெட்டான் நிலையாக எந்தப் பக்கமும் சாயவிடாத நிலையை உருவாக்கி விட்டது... இந்த ஓர் ஓலை கல்வியிற் சிறந்த ஆசிரியரை அல்லும் பகலும் அபயன் ஆட்சி அரங்கேற வைப்பதற்காக அலைய வைக்கிறது... இந்த ஓர் ஓலைதான் தான்படும் அத்தனை கவலைகளுக்கும் ஆதி காரணமாய் இருப்பது...

இப்படிக் களங்கப்படுத்தும் ஓலையை இனியும் தன்னோடு ஏன் வைத்திருக்க வேண்டும்? இந்த ஓலையின் வாசகங்கள் எளிதாக எழுதப்பட்டிருந்தாலும் மிகப்பெரிய பளுவாக நாளுக்கு நாள் பெரிதாகி தன்னை வருத்துகின்றதே... அப்படிப் பட்ட சுமையை இன்னமும் தான் ஏன் சுமக்க வேண்டும்? வேடிக்கையாக பெரிய ராஜா எழுதிக் கொடுத்து எப்போதோ



இறைவனடி சேர்ந்துவிட்டார். அந்த இறைவனடிக்கே இந்த ஓலையும் போவதுதானே முறை...

'இனியும் இந்த ஓலைக்கு தன்னிடம் வேலை இல்லை. இனியும் இப்படிப்பட்ட சுமையை நாம் சுமக்கக்கூடாது. இந்த ஓலையே தேவையில்லை!'

உறுதியோடு மனதில் நினைத்த சோழமகாதேவி மனதில் நினைத்ததை உடனடியாக செயல்படுத்த முடிவு செய்தாள். பெரியராஜாவின் புகழ்பெற்ற அந்த ஓலையை சேலைத் தலைப்பில் சுழித்து முடிந்தவள் திருவேங்கடவன் கோயில் நோக்கி நடந்தாள்.

காலை வேளையில் மகாராணியார் உத்தரவு ஏதும் இடாமல் தனியே கோயில் நோக்கி செல்வதைப் பார்த்த வீரர்கள் மெதுவே பின் தொடர்ந்தார்கள்.

திருமலையெங்கும் பரபரப்பு அதிகம் காணப்பட்டாலும் அதைவிட பரபரப்பு சோழமகாதேவியின் நெஞ்சத்தில் இருந்ததை அந்த வீரர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. வீரர்கள் பின் தொடர திருமலை பாதையில் வந்தவளை பார்த்த பக்தர்கள்கூட மரியாதையாக தலைவணங்கி பாதையின் இருபுறமும் ஒதுங்கி வழிவிட்டனர்தான்.

கோயில் உள்ளேயும் அம்மங்காவுக்கு மரியாதை மிகப் பலமாகவே அளிக்கப்பட்டது. என்னதான் சோழ மகாதேவியாரின் தரப்பினர் கோயிலுக்கும் திருவேங்கட முடையானுக்கும் எதிராக சதி செய்கிறார்கள் என்கிற ரகசியப் பேச்சுக்கள் ஆங்காங்கே பேசப்பட்டாலும் மகாராணிக்குரிய மரியாதையை அவர்கள் தாராளமாகவே தந்தனர். வீரர்களை வெளியே நிற்கப் பணித்தவள் கோயிலுக்குள் அடக்கமாகவே நுழைந்தாள்.

அர்ச்சகரிடம் ஏகாந்த சேவைக்கு ஏற்பாடு செய்யுமாறும் பக்தர்கள் நிதானமாக வெளியேறும் வரை தான் காத்திருப்பதாகவும் அவள் சொன்னபோதும் அந்த அடக்கம் நன்றாகவே அவள் குரலில் தெரிந்தது. கர்ப்பக்கிருகத்தில் இருந்த திருவேங்கடவன் பக்தர்கள் அகலும் வரை கருடுத்துவாரம் அருகே பொறுமையாகவே காத்திருந்தாள் சோழமகாதேவி.

சிறிது நேரம் கழித்து கர்ப்பக்கிருகம் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள். அர்ச்சகரையும் திருவேங்கடமுடை யானையும் தவிர யாருமில்லாத ஏகாந்த சூழ்நிலைதான் அது.

நெட்ட நெடுக நின்ற நெடியோனைக் கண்குளிரப் பார்த்தாள் அம்மங்கா. 'கவலைகளையெல்லாம் தீர்க்கும் மலையில் குடிகொண்டவனே – ஏன் என் கவலைகளை மட்டும் நாளுக்கு நாள் பெருக்குகிறாய்' என மனதுள் அந்த மாயோனைக் கேட்டாள். 'என் பெயரில்தான் தவறு... திருமலை வந்தவுடனேயே உன்னைப் பார்த்த முதல் முறையிலேயே என் சுமையை உன்னிடம் இறக்கவில்லை. இதோ இக்கணமே அந்தச் சுமையை இறக்கி விடுகிறேன்... இனி அந்தச் சுமை உன்னிடமே இருக்கட்டும்... என்ன நினைத்து என் தந்தை எழுதினாரோ, அது அவருக்கும் உனக்கும்தான் தெரியும்... தெரிந்த உன்னிடம் இந்த ஓலை இருப்பதுதானே முறை!'

திருவேங்கடமுடையானைப் பார்த்துச் சொல்லிக் கொண்டவள் சமயத்துக்காக காத்திருந்தாள். அதற்கேற்றாற்போல் அந்த அர்ச்சகரும் அர்ச்சனைப் பூக்களுக்காக தன்னைத் தாண்டி சென்ற போது தன் முந்தானையில் முடித்திருந்த ஓலையை எடுத்து அவன் பாதம் பதிந்த தாமரைப் பீடத்தில் வீசினாள்.

'இனி உன்னுடையதுதான்'

அர்ச்சகர் மறுபடியும் முன்வந்து அம்மங்காவின் பெயரில் பூக்களால் பூசை செய்தார். பூக்கள் முழுவதுமாக அந்த ஓலையை முழுவதும் மறைத்துவிட்டன. 'இனி கவலை இல்லை. இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மலர்கள் எல்லாம் கோயில் புஷ்கரணியில் மூழ்கடிக்கப்படும். இந்த ஓலையும் தண்ணீரில் மிதந்தோ அல்லது மூழ்கடிக்கப்பட்டோ மீன்களால் கொத்தப்பட்டு சிதறடிக்கப்பட்டோ... என்ன வேணுமானாலும் ஆகட்டுமே... இனி கவலையில்லை. அவனிடத்தில் சுமையை இறக்கிவிட்டபின் அந்தச் சுமை என்ன ஆனால் என்ன? நாம் ஏன் கவலைப்படவேண்டும்...

நிம்மதி பெருமூச்சு விட்டாள் அம்மங்கா. மனத்தில் பெரும் சுமை குறைக்கப்பட்டதுபோல் உணர்ந்தாள். இன்னொரு முறை திருவேங்கடத்தானை கண்குளிரப் பார்த்தவள் என்ன நினைத்தாளோ வெளியே நடக்கத் தலைபட்டாள். நீண்ட தாழ்வரையில் மெல்ல திரும்பி நடந்தவளை அந்த அர்ச்சகர் பணிவோடு அழைத்து நிற்க வைத்தார். பிரசாதத்தை வாங்கிச் செல்லும்படி வற்புறுத்தவே புன்னகை செய்தாள்.



பிரசாதங்களை எடுத்து திருவேங்கடமுடையானின் தோளில் சிறப்பாக சார்த்தப்பட்டிருந்த பட்டு வாஸ்திரத்தில் கட்டி தாம்பாளத்தில் வைத்து ஆசிர்வாத மந்திரம் சொல்லி துளசி தீர்த்தம் கொடுத்து சமர்ப்பித்தார். திருவேங்கடமுடையானைப் பார்த்துக் கொண்டே அவன் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டவள் பணிவாக வெளியே நடந்தாள்.

மனம் காற்றைப் போல் இருந்ததை உணர்ந்தாள் அவள். இது அவன் மகிமை. அவன் என்ன நினைக்கிறானோ அதுதான் நடக்கும்... அபயனுக்குச் சோழ மணி மகுடம் கிடைப்பது அரிது என்பதை நாம் உணர நமக்கு ஒரு பெரிய சந்தர்ப்பம் அளித்துள்ளான். அவந்திகா தன் முடிவுப்படி செய்யும் உரிமை பெற்றவள் என்பதையும் அவன் உணர வைத்துள்ளான்.

அம்மங்காவுக்கு மனச் சோர்வு போயே போய்விட்டது போல உணர்ந்தாள். சதா தன்னோடு போராடும் உள்மனம் ஊமையாய் உள்ளுக்குள் உறங்கி விட்டதாய் உணர்ந்தாள். இனி தன்னுடைய அன்பு விஷத்தை பிரித்து வெளியேற்றப் பட்டு தன்னலமற்ற அன்பு... இனி அந்த அன்பு எங்கும் பெருகி இன்பத்தை அள்ளி வழங்கும். இனி அதிராசேந்திரனும் அபயனும் காளிங்கனும் அனைவருமே தன் கண்களுக்கு ஒன்றாகவே தெரிவார்கள். மற்றவர் களிடத்தேயும் அந்த அன்பு முழுமையாக காண்பிக்கப் படும்தான்...

கோயிலுக்குள் சென்றபோது இறுக்கமாக சென்ற மகாராணியார் திரும்பி வரும்போது மகிழ்ச்சியால் வதனம் பூரிக்க வருவதைப் பார்த்த வீரர்களும் மகிழ்ந்தனர். மகிழ்ச்சி அனைவரிடத்தும் இருக்கும் நிலையில் சற்று வேகத்துட னேயே ராஜகிருத்தையும் அடைந்தனர். வாயிலிலேயே ஆசிரியர் காத்திருந்ததைப் பார்த்தாள் சோழ மகாதேவி.

''ஆசிரியரை வெகுநேரம் காக்கவைத்து விட்டேனோ?''

''இல்லை... இல்லை சோழமகாதேவி! கவலையால் வாடும் தங்களுக்கு சற்று ஆறுதல் சொல்லலாம் என்றுதான் வந்தேன்.. நேற்று உடையவர் குழுமத்துடன் இருந்ததினால் உங்களிடம் என்னால் பேசமுடியவில்லை. தேவி! காளிங் கனிடமிருந்து ஏதேனும் தகவல் கிடைத்ததா? அவந்திகாவைப் பற்றியாவது ஏதேனும் செய்தி கிடைத்ததா?''

''இதுவரை அவர்களிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லைதான் ஆசிரியரே! ஆனால் கணத்துக்குக் கணம் மாறும் நிலைமைகளைப் பார்த்தால், நாம் எதையும் யாரிடமும் இருந்தும் எதிர்பார்க்கக் கூடாதுதான்...''

திடீரென அம்மங்காவின் இந்த வேதாந்தமான பேச்சு ஆசிரியருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஆசிரியர் அம்மங்காவை நன்கு அறிந்தவர். இந்தத் தவசீலி அன்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றவள். அப்படிப்பட்டவள் அவந்திகாவின் செயலால் வெறுப் படைந்து விட்டது நியாயம்தான்.

''தாயே! உங்கள் மனது புண்படும் நிகழ்ச்சித்தான் இந்த செயல் என்பதை நானும் அறிவேன். ஆனால், ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அவந்திகாவைப் பற்றியும் காளிங்கனைப் பற்றியும் கவலைப்படுவதை விட்டு விடுங்கள். காளிங்கன் உங்கள் அண்ணன் மகன் மட்டுமல்ல... அவன் என் சீடனும்கூட. எத்தகைய நிலைமைகளையும் கையாளும் விதத்தில் பழக்கப்பட்டவன் அவன். உங்கள் வேதனைகளை அதோ அந்த வேங்கடவனிடமே விட்டுவிடுங்கள்!''

வேதனையாய் சிரித்தாள் அவள்.

''விட்டு விட்டேன் ஆசிரியரே... விட்டுவிட்டேன்... என் வேதனையை மட்டுமல்ல... என்னிடம் இருந்த சுமைகளையும் கூட அவனிடமே இறக்கிவிட்டேன்...''

''என்ன சொல்கிறீர்கள் தேவி!''

அம்மங்கா ஒளிக்காமல் சொன்னாள். 'ஓலையைக் கொடுத்தவரே தெய்வத்திடம் சேர்ந்துவிட்ட பிறகு அந்த ஓலையை மட்டும் ஏன் பிரித்து வைக்க வேண்டும்' என்ற கேள்வியையும் கேட்டாள்.

ஆசிரியர் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். அவர் முகம் சற்று மங்கிப் போனதையும் கவனித்தாள் அம்மங்கா.

''ஆசிரியரே! தவறு ஏதேனும் செய்து விட்டேனா?''

தலையை அசைத்தார்.

''எனக்கென்னவோ சற்று அவசரப்பட்டு உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து விட்டீர்கள் என்றுதான் தோன்றுகிறது தேவி! அபயனை உங்கள் மகனாக மட்டும் பார்க்கிறீர்கள். ஆனால், நான் அப்படி பார்க்கவில்லை. தர்மத்தை ரட்சிக்க வந்த கண்ணனாக பார்க்கிறேன். இப்போது இங்கே நடப்பது அதர்மத்தின் ஆட்சி. அந்த அதர்மத்தின் பக்கம் உங்கள் அண்ணன் மகன் அதிராசேந்திரன் இருக்கிறான். அவனையும் உங்கள் அன்பு மனம் ஒரு கோழையாக, அண்ணன் மகனாக மட்டுமே பார்க்கிறது. ஆனால், அவனை தர்மத்தை ரட்சிக்கத் தெரியாதவனாகத்தான் நான் பார்க்கிறேன். அவன் உங்களுக்கு சொந்தமாக இருந்தாலும் அவன் அகற்றப்பட்டே ஆக வேண்டும்... கம்சனை மாமன் என்றும் பாராமல் அழித்தவன் கண்ணன். கௌரவர்களுக்கும் கண்ணனுக்கும் கூட ரத்த உறவு உண்டு என்றாலும் அவர்கள் அழிய உதவி புரிந்தவன் கண்ணன்...''



அம்மங்காவை ஏறெடுத்துப் பார்த்தார் ஆசிரியர்.

''சகோதரி! உங்கள் அன்பு அப்பழுக்கற்ற அன்பு. அப்படிப்பட்ட அன்பினை உங்கள் சகோதரன் மகனுக்கும் அபயனுக்கும் சரிசமமாகவே வழங்கவேண்டுமென்பது உங்கள் விருப்பமாகக் கூட இருக்கலாம். அப்படிப்பட்ட உங்கள் அன்பு உங்களை இமயமலை அளவுக்கு உயர்த்தும்... ஆனால், அதே அன்பு அதர்மத்துக்குத் துணை செல்லக்கூடாது. அதர்மம் அழியும் போது அன்பு என்ற உணர்ச்சி தடைக்கல்லாக இருக்கக்கூடாது. உங்களால் ஒதுக்கப்பட்ட ஓலை பெரிய சக்கரவர்த்தியார் உளமாற நினைத்து எழுதி வழங்கப்பட்ட ஓலை. அவர் தெய்வமாகி விட்டாலும் அந்த தெய்வத்தின் குரலாக எங்கும் ஒலிக்க வேண்டிய ஓலை அது. சந்தர்ப்பங்கள் நமக்கு சாதகமாக அமையும்போது சபைக்கு கொண்டு வரப்பட வேண்டிய ஓலை அது. உங்கள் அண்ணன் மகன் அதர்மத்தின் துணையாக நின்றான் என்றபோது பதிலடியாக மக்கள் நடுவே செல்ல வேண்டிய ஓலை அது!''

ஆசிரியர் நிதானமாகவே பேசினாலும் அவர் பேச்சு அம்மங்காவை கலக்க ஆரம்பித்து விட்டதை உணர்ந்தார்.

''நான் உங்களை மறுபடியும் கவலை கொள்ள அப்படி சொல்லவில்லை தாயே... உங்கள் கவலைகளுக்குக் காரணம் அந்த ஓலை இல்லை என்பதைத்தான் சொல்ல வந்தேன். போகட்டும் தேவி! தாங்கள் ஆண்டவனிடம் உங்கள் சுமை என்று நினைத்து இறக்கி வைத்தது ஒரு விதத்தில் நல்லதுதான். அந்த திருவேங்கடமுடையான் தற்சமயம் எத்தனையோ

வழக்குகளுக்குத் தீர்ப்பு சொல்ல வேண்டிய நிலையில் உள்ளான். உங்கள் வழக்குகூட நீண்ட காலமாய் தேக்கத்தில் உள்ள வழக்குதானே...''

விரக்தியாய் சொல்லிவிட்டு ஆசிரியர் அகன்று விட்டார். ஆனால், இதுவரை அடங்கியிருந்த அம்மங்காவின் உள் மனது அவளை விட்டு வெளியே வந்து வாட்ட ஆரம்பித்து விட்டது.

ஆசிரியர் சொன்னதில் என்ன தவறாம் எனக் கேட்டது. 'எதற்காக அத்தனை பெரிதாய் உணர்ச்சி வசப்பட்டு அத்தனை வேகமாய் சென்று உனக்குக் கிடைத்த வரத்தைக் கொடுத்தவனிடமே திருப்பிக் கொடுக்க வேண்டும்... இத்தனை நாள்... இத்தனை வருடங்கள் பொறுத்தவளுக்கு இன்னும் சில காலம் பொறுக்க முடியவில்லையோ...' என எகத்தாளம் செய்தது. 'இப்படி எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப்பட்டு உன்னை மட்டுமல்லாமல் உன்னோடு சேர்ந்தவர்களையும் துன்பம் செய்கிறாயே' என்று நியாயம் கேட்டது.

ஆயாசப்பட்டாள் அம்மங்கா. ஆயாசத்தில் அவளுக்குப் பசித்தது. இறைவன் பிரசாதங்களாக கொடுத்த பழங்களை உண்ணலாம் என்று பிரசாத மூட்டையைப் பிரித்தவள் விந்தையால் மெய்ம்மறந்து போனாள்தான். அந்தப் பிரசாத மூட்டையில் பழங்களும் பூவும் அவள் வீசியெறிந்த ஓலையும் கலந்து இருந்ததுதான் காரணம்.

கண்களில் கண்ணீர் வழிய பயபக்தியோடு அந்த ஓலையை வெளியே எடுத்தாள். அந்த ஓலையின் ஓரத்தில் திருவேங்கட வனுக்குப் பிடித்தமான சம்பங்கி பூவின் இதழொன்று ஒட்டிக் கிடந்தது.

## 32

# எங்கே என் தலையை வைப்பது?

'நினைப்பவர்க்கு நினைத்ததையெல்லாம் அருளும் மலை இந்தத் திருமலை என்பது சரியாகத்தான் உள்ளது போலும். தீயவர்கள் தீங்கு நினைத்தால்கூட திருவேங்கடத்தான் அருளுகின்றானோ என்னவோ... இல்லாவிட்டால் சங்கையும் சக்கரத்தையும் களவாட விட்டிருப்பானா?



அதனால் அவனே அல்லவா அவன் யார் என்பதை மாற்றோர்க்கு தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளான்... திருவேங்கடத்தானே... எம்பெருமானே... உன் சோதனையை உன்னோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா? உடையவரையும் உன் துணைக்கு இழுத்துக் கொள்ள வேணுமோ? உடையவர் யார்? உன்னுடைய ஆதிசேஷன்... அவரையும் ஏன் சோதனை செய்ய வேணும்? வேண்டாம்... இன்று எப்படியும் ஒரு நல்ல முடிவெடுத்து விடு! என் கண்களால் உடையவர் படும் வேதனையை காண சகிக்கவில்லை... இறைவா... உன்னையே நம்பும் பக்தருக்காக ஓடோடி வருவாயாமே... நீ இன்னமும் கோயிலிலேயே நின்ற நிலையில் இருந்தால் எப்படி?'

மிளகாழ்வான் மிகுந்த மன வருத்தத்துடன்தான் அந்த முன் மாலை நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தான். காலையில் உடையவர் தரிசனத்தைக் கூட சற்று தூரம் நின்றே முடித்துக் கொண்டான். கோயிலுக்குள் செல்ல அவன் மனம் ஏனோ மறுத்தது. நேற்று வரை கூட பெருமாளை மூன்று வேளையும் தரிசித்துக் கொண்டிருந்தவன் இன்று அந்தக் கோயில் வாசல் போகவும் ஏனோ அச்சப்பட்டான். அன்று மதியமே சாலவை கூடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் உடையவர் கலந்து கொள்ள போகிறார் என்றே தெரிந்திருந்தாலும் அந்தச் சாலவை சபைக்கும் அவன் மனம் போக மறுத்தது.

அவன் மனம் முழுவதும் உடையவரும் காளிங்கனும் அவந்திகாவும் நிறைந்து கொண்டு ஒரு நிலையில் இல்லாத ஆற்று வெள்ளத்து படகு போல மனத்தை அலைக்கழித்தனர். முன் மாலையிலேயே அந்தச் செய்தியும் காதில் விழுந்தது தான். உடையவர் நேரடியாக திருவேங்கடத்தானையே கேட்கப் போகிறார் - அவன் யாரென...

மனம் வேதனையால் தவித்தது. ஆறுதலாக மலையைச் சுற்றி வந்தாலென்ன என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். அவந்திகா முதல் நாளே கேட்டாள் - மலையை சற்றிக் காண்பிக்கும்படி... ஒப்புக் கொண்டிருக்கலாம்... மலையைச் சுற்றினால் மனப்பாரம் குறையுமென்று அவள் நினைத் தாளோ என்னவோ... அந்தப் பலன் நமக்கு கிடைக்கிறதா என்று பார்க்கலாமே...

மார்கழி மாதமாதலால் மாலை வெய்யில் சடுதியில் மறையலாம் என்பதையும் லட்சியம் செய்யாமல் சென்ற

முறை மலைவாழ்ப் பெண்கள் கூட்டமாக இறங்கிய பாதையை பிடித்தான் மிளகாழ்வான். மழைநீர் தங்கமுடியாத பள்ளப் பகுதியாதலாலும் சில நாட்களாகவே வெய்யில் நன்றாகவே காய்ச்சுகிறது என்பதாலும் முன்பிருந்ததைப் போல பாதை சறுக்கவில்லை. மாறாக கெட்டிப்பட்டு வேகமாக நடைபோட கூட வகை செய்வது போல் இருந்தது. சென்றமுறை சர்ரென சறுக்கி அந்த மாயமோகினியான கங்கைக் கரை நாயகியைப் பார்த்து கெஞ்சியது அவன் நினைவுக்கு வந்தது. 'ஆனால் நம் காளிங்கன் பாவம்... எவ்வளவு உத்தமன் அவன்... அவன் பெயரில் இப்படி அடாது பழி வந்து விட்டதே... எல்லாம் நாலூரான் செய்யும் வேலை... அந்த காபாலிகருடன் சேர்ந்து நன்றாகவே கூத்தாடுகிறான்...'

சில சமயங்களில் நாம் என்ன நினைக்கிறோமோ அப்போது வானத்து தேவதைகள் 'ததாஸ்து' என சொல்வார்களாம். மிளகாழ்வான் காபாலிகரைப் பற்றி நினைத்ததுமே அவன் முன்னே சற்று தூரத்தில் நான்கு காபாலிகர்கள் ஈட்டியுடன் பாதையை குறுக்காக கடந்து வேறு மலைப்பாதையில் பிரிந்து செல்வதைப் பார்த்தான். அவன் மனதுக்கு ஏதோ விசித்திரமாகப் பட அவர்கள் அறியாமல் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

குறுக்கே வந்த கரடுமுரடான மலைப்பாதையில் இறங்கிய அந்த நான்கு காபாலிகரும் சற்று தூரம் சென்றதும் வந்த சிறிய சமவெளியில் நின்றனர். ஈட்டிகளின் பின்பகுதியால் தரையில் கிடந்த சருகுகளை விலக்கி சுத்தம் செய்ய ஆரம்பித்தனர். அங்கே தேய்ந்து போன சில எலும்புத் துண்டுகள் கிடந்ததைப் பார்த்த மிளகாழ்வான் அந்த இடம் மலைவாழ் மக்களின் சுடுகாடு என்பதை புரிந்து கொண்டான்.

காபாலிகர் சுத்தம் செய்த இடத்தில் ஒரு பெரிய பாறாங்கல்லை நகர்த்தி வைத்தனர். ஒருவன் பாறாங்கல்லின் முன்னே தன் ஈட்டியை பலமாக குத்தி நட்டு வைத்தான். இன்னொரு காபாலிகன் பக்கத்தில் இருந்த சுனையிலிருந்து பனை ஓலைக் குடுவைகள் மூலம் நீரைக்கொண்டு வந்து அந்தப் பாறையின் மேல் ஊற்றினான். சூலம் போல் நட்டுவைக்கப்பட்டிருந்த ஈட்டியும் கழுவப்பட்டது. பிறகு பாறாங்கல்லையும் ஈட்டியையும் தங்கள் பையில் வைத்திருந்த சாம்பல் பொடிகளால் பூசினார்கள். திடீரென



ஒரு காபாலிகன் அந்த பாறாங்கல்லின் முனையில் தானே நச்சென இடித்துக் கொண்டதால் அவன் நெற்றியிலிருந்து ரத்தம் பீறிட்டு எழ அந்த ரத்தத்தை அப்படியே உள்ளங்கையில் அப்பிக் கொண்டு பாறாங்கல்லுக்கும் ஈட்டிக்கும் பொட்டு வைப்பது போல் அப்பினான். பிறகு நால்வரும் காபாலிக கோஷம் போட்டுக் கொண்டு அந்தப் பாறாங்கல்லையும் ஈட்டியையும் சுற்றி சுற்றி வந்தார்கள்.

மிளகாழ்வான் வாழ்க்கையில் முதன்முதலாக அச்சப் பட்டான். இவர்கள் மனிதர்கள்தானா... அல்லது நர மாமிசம் விரும்பி உண்ணும் அரக்கர்களா என்பது புரியாமல் உறைந்து போனான். சற்று நேரம் நின்று தன்னையும் பார்த்துவிட்டால் அந்த காபாலிகர்கள் நரபலிக்காக அந்தப் பாறையில் தன் தலையை வைத்து வெட்டி விடுவார்களோ என்ற அச்சமும் வந்தது மிளகாழ்வானுக்கு. தான் வந்த வழியே கவலையுடன் திரும்பினான்.

நரபலி என நினைத்ததும் மிளகாழ்வானுக்கு இன்னொன்றும் ஞாபகம் வந்தது. அன்று இரவு திருமலை ஓரக் குடிசையில் சாமுண்டர்யன் சொன்னது போல் கங்கைக் கரை இளவரசியை காவு கொடுக்கத்தான் இவர்கள் வந்தார்களோ... ஒருவேளை - இந்த மலை சுடுகாட்டில் அந்த நரபலிக்காகத்தான் இத்தனை ஏற்பாடுகளும் செய்கிறார்கள் போலிருக்கிறது... அந்த இளவரசி இங்கே எங்கேயோதான் இருக்கிறாள். அவளைக் கண்டுபிடித்து இன்னொரு முறை நல்லது சொல்லிப் பார்த்தால் என்ன?

மிளகாழ்வானுக்கு ஒரு நல்ல பழக்கம் என்னவென்றால் தான் நினைத்ததையெல்லாம் செய்து முடிக்கிறானோ இல்லையோ குறைந்தபட்சம் நடைமுறைப்படுத்துவான். 'அந்த மலைப் பெண்கள் அன்று இந்தப் பக்கம்தான் இறங்கினர்... பார்ப்போம்... இன்னும் இருட்டு வரவில்லையே... முயற்சி செய்வோமே...

அந்த மலைப் பாதையில் சற்று தூரம் இறங்கியதும் அங்கே சில குடிசைகள் அவன் கண்களுக்குத் தென்பட்டன. அந்த மாலை நேரத்தில் கூட யாரோ சில பேர் வீரர் உடையில் குடிசை மேற்கூரைகள் வேய்ந்து கொண்டிருப்பதையும் பார்த்து அந்தப் பக்கமாக மளமளவென இறங்கினான். சாளுக்கிய வீரர்கள் கடமை செய்வதைப் போல் மேற்கூரைகளை ஒழுங்காக கட்டிக் கொண்டிருக்க மலைக்

குறவர்கள் சிலபேர் ஈட்டியைக் கையில் வைத்துக் கொண்டு அவர்களை வேலை வாங்கிக் கொண்டிருந்த அதிசயத்தை பார்த்தவன் கண்களுக்கு இன்னொரு அதிர்ச்சி தென்பட்டது. தான் வந்த பாதைக்கு சற்று தூரத்தே குதிரையில் ஒரு காபாலிகள் செல்ல அந்தக் குதிரையின் பின்பக்கத்தில் ஒரு பெண் கிடத்தப்பட்டிருந்ததும் ஸ்பஷ்டமாக பட்டது ஆழ்வான் கண்களுக்கு.

ஐயோ... கங்கைக் கரை இளவரசியை மெய்யாகவே அந்த சண்டாளன் நரபலிக்காக கொண்டு செல்கிறான் என்று மனத்துள் அலறிக் கொண்டவன், ஓட்டமாக அந்த குடிசைப்பகுதிக்கு ஓடினான். சற்று தூரத்தில் ஒரு பெரிய கூட்டம் இருப்பதைப் பார்த்தவன் கூட்டத்தின் நடுவே காளிங்கனும் காத்யாயினியும் சேர்ந்து நிற்பதைப் பார்த்ததால் ஆச்சரியப்பட்டுத்தான் போனான். அப்படியானால்... ஐய்யோ... காளிங்கனுடன் கூட வந்த அவந்திகாவையா அந்த சண்டாளக் காபாலிகன் கடத்தி விட்டான்! ஐயோ... எத்தனை அழகான சிறுபெண்... சிவத்தின் பக்தை யென்றாலும் மற்றவரின் துயரத்தைப் பொறுக்காதவள் ஆயிற்றே... காளிங்கனைக் காப்பாற்ற அல்லவா அவனையே கடத்திச் சென்றவள்...

''காளிங்கா .... காளிங்கா...'' என்று அலறிக் கொண்டே அவர்கள் அருகே சென்றவன் தான் கண்டதை அப்படியே ஒப்பித்தான்.

காளிங்கனுக்கு மிளகாழ்வானைக் கண்டதும் முதலில் திகைப்புதான் வந்தது. அவன் சொன்ன விஷயமும் அதிர்ச்சியாகத்தான் பட்டது. ஆனாலும், காபாலிகர் வேலையே அதுதானே... மனதில் ஏற்பட்ட கவலைகளை வெளிக்காட்டாமல் மிளகாழ்வானை தனியே அழைத்துச் சென்றான்.

''வைணவரே! அந்தத் திருவேங்கடத்தான் உங்கள் ரூபத்தில் வந்து உதவுகிறான் போலிருக்கிறது... அந்த திருவேங்கடத் தான் எண்ணப்படி என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும்... இன்றிரவுக்குள் சங்கும் சக்கரமும் கிடைத்தால் சரி... இல்லையென்றாலும் கவலை இல்லை.. ஆனால் நீர் எம்மைக் கண்டது பற்றி யாருக்கும் எதுவுமே சொல்ல வேண்டாம்... ஆசிரியரும் அத்தையாரும் கேட்டாலும்கூட.... இது என்மேல் ஆணை!...''



''காளிங்கா! அப்படியெல்லாம் பேசாதே! அந்த சங்கும் சக்கரமும் எப்படி வேணுமானாலும் போகட்டும்... நீ கவலைப் படாதே... உன் விஷயத்தில் இப்போது உடையவரும் சம்பந்தப்பட்டுவிட்டார்... இனி திருவேங் கடத்தான் பாடு... உடையவர் பாடு... அவர்கள் என்ன செய்யவேண்டுமோ அதை செய்து கொள்வார்கள்... நீ வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதே... முதலில் அவந்திகாவைக் காப்பாற்று! சங்கு சக்கரத்தை தயவு செய்து மறந்து விடு!''

''வைணவரே... தயவு செய்து ஏதும் பேசாதேயும்! நான் கேட்டதை செய்யும்...''

''காளிங்கா... அவந்திகா...'' என்ற வைணவனின் தோளை ஆறுதலாக தட்டினான்.

''வைணவரே! ஆண்டவனின் அற்புதமான பக்தை அவந்திகா. நீர் முதலில் இருள்வதற்குள் மலை ஏறும்...''

என்றவன் ஒரு குதிரையில் வைணவனை ஏற்றி மலையேற வைத்தான். பிறகு என்ன நினைத்தானோ காத்யாயினியின் இடது கையைப் பிடித்துக் கொண்டவன் அந்த மலைவாழ் மக்களை வலது கையால் தொட்டு நன்றி சொல்லியவாறு மலையேற ஆரம்பித்தான்.

இருவரும் கையைப் பற்றிக் கொண்டே மலையேறினாலும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லைதான். அவர்கள் மனம் முழுவதும் அவந்திகா நிறைந்திருந்ததும் ஒரு காரணம்.

அவர்கள் மலையேறிக் கொண்டிருக்கும்போதே பகலவனும் மெல்ல மெல்ல அந்தப் பகுதியை விட்டு அகன்று கொண்டிருந்தான். மிளகாழ்வான் குறிப்பிட்ட அந்த சுடுகாட்டுப் பகுதிக்கு அவர்கள் சென்றபோது இருளும் நன்றாகவே சூழ ஆரம்பித்தது. ஒருவகையில் இருள் சூழ்வது கூட நல்லதுதான். அவர்கள் வருகையை காபாலி அறிய முடியாது தானே. அதே சமயத்தில் அந்தச் சுடுகாட்டின் அருகே செல்ல செல்ல தன்னையறியாமல் ஒருவிதமான அச்சம் தழுவுவதை உணர்ந்த காத்யாயினி இன்னமும் சற்று நெருங்கி தன் இடது கையை விடுவித்துக் கொண்டு அவன் தோளைப் பற்றிக் கொண்டே சென்றாள்.

சுடுகாட்டின் ஒரு பகுதியில் சில கட்டைகள் ஏற்கனவே எரி யூட்டப்பட்டிருந்ததால் அங்கு வெளிச்சம் நன்றாகவே

தெரிந்தது. காளிங்கன் எதிர்பார்த்தப்படி காபாலிக மடிராஜனின் குதிரை அங்கே மரக்கொம்பு ஒன்றில் கட்டப்பட்டிருந்தது. குதிரையின் பின்னால் மயக்க நிலையிலேயே அவந்திகா கிடத்தப்பட்டிருந்தாள். காத்யாயினியின் மனம் பரபரத்தது. உடனே ஓடிப்போய் அவந்திகாவை காப்பாற்றவும் துடிதுடித்தது. ஆனால், அவள் படபடப்பை உணர்ந்தவன் போல் காளிங்கன் அவளை தோளைப் பிடித்து நிறுத்தினான். அவள் செவியருகே மெதுவாகவே பேசினான்.

''காத்யா! அவசரப்படாதே! முதலில் அந்த சங்கும் சக்கரமும் எங்கே என்பதைக் கண்டுபிடி. நாம் திடீரென்று இவர்கள் மீது பாய்ந்தால் இவர்கள் எதிர்ப்பில்லாமல் ஓடிவிடுவார்கள். ஆனால் சங்கும் சக்கரமும் எங்கு இருக்கிறது என்ற விஷயம் நமக்கு மிகமிக தேவை. இவர்களைதப்பவிட்டோம் என்றால் இந்த இரவு முழுவதும் இவர்களைத் தேடினாலும் நமக்குக் கிடைக்கமாட்டார்கள். நான் ஏற்கனவே ஒருமுறை அனுபவப்பட்டவன். இவர்கள் சங்கு சக்கரத்தை எடுத்து எங்காவது காட்டில் வீசிவிட்டால் நம்மால் என்ன செய்யமுடியும் காத்யா! நாம் மிக மிக எச்சரிக்கையாக கையாள வேண்டும்...''

புரிந்தது காத்யாயினிக்கு. நாளை திருத்துவாதசி உற்சவம் ஆரம்பம். நாளைக் காலைக்குள் சங்கும் சக்கரமும் கண்ணனை சேர வேண்டும். சங்காரே! என்னை ஆண்டாளாக நினைத்துக் கொண்டு என்னிடம் வந்து விடுங்கள். நான் எப்படி எடுத்தேனோ அப்படியே வைத்து விடுகிறேன்... அந்த திருவேங்கடமுடையான் மீது சத்தியம்... என்னை தயவு செய்து நம்புங்கள்...

வெளியே வாய்விட்டுக் கூவவேண்டும் போல் இருந்தது. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. திடீரென ஏதோ முடிவெடுத்தவள் தன் கண்ணீரையும் துடைத்துக் கொண்டு காளிங்கனிடம் பேசினாள்,

''வீரரே! என்னை மன்னித்து தயவு செய்து ஆசிர்வதியுங்கள்!''

நிதானமாக சொன்னாலும் வேகமாக குனிந்து காளிங்கனின் பாதம் தொட்டாள். ஆச்சரியத்துடன் அவளைத் தூக்கி நிறுத்தினான் காளிங்கன்.



''காத்யா... என்ன இது...''

''வீரரே! தயை செய்து என்னை அவனிடம் செல்ல அனுமதிக்க வேண்டும்... எங்கள் குருதேவிடம் அவன் கேட்டது அதுதானே... நான் முழுவதுமாக விருப்பப்பட்டு அவனிடம் செல்கிறேன்...''

என்று மெதுவாக சொன்னவள், அவன் முகத்தை இடது கையால் பிடித்து தன்னிடம் இழுத்தாள். அவள் கண்கள் பளிச்சிட்டதை அந்த இருளிலும் பார்த்தான் அவன். அவன் கன்னத்தில் மிக மிருதுவாக முத்தமிட்டாள். அவள் குரலில் ஏதோ புதுவிதமான உறுதி இருந்தது.

''என் வாழ்க்கை இப்போது நிறைவடைந்தது போல் உணர்கின்றேன் வீரரே! நான் அவனிடம் நின்று பேசும்போது நீங்கள் சங்கையும் சக்கரத்தையும் தேடுங்கள். கிடைத்துவிட்டால் அந்தக் குதிரையில் கட்டப்பட்டிருக்கும் என் அன்புத் தேவதையான அவந்திகாவையும் அழைத்துக் கொண்டு சென்று விடுங்கள்! சங்கையும் சக்கரத்தையும் களவாடி உங்களுக்குப் பெரும் பாவத்தைத் தேடித்தந்த எனக்குப் தகுந்த தண்டனை அதோ அந்தப் பாறாங்கல்லில்தான்...''

அவள் வாயை மூடினான் அவன். அவளை இறுக அணைத்துக் கொண்டவன் பிறகு அணைப்பிலிருந்து நீக்கி அவளைக் கூர்ந்து பார்த்தான்.

''சரி காத்யா! உன் இஷ்டப்படியே அவனருகே செல்... ஆனால், நான் சொல்லிக் கொடுத்தபடி மட்டும் செய்...'' என்றவன், அவள் செவியில் ஏதோ சொன்னான். அவள் கண்கள் அவனை உற்றுப் பார்த்தன. பிறகு தலையை அசைத்தவள் மேலும் ஏதும் பேசாமல் பள்ளத்தாக்குப் பகுதியில் இருந்த அந்தச் சுடுகாட்டில் தடதடவென இறங்கி மேல்மூச்சு வாங்க காபாலிக மடிராஜன் முன்னே நின்றாள்.

மேகங்கள் ஆங்காங்கே மறைத்தாலும் சந்திரன் அவற்றை கிறிக் கொண்டு அவ்வப்போது தென்பட்டான். ஆறாம்பிறை என்பதால் அர்த்த சந்திர வடிவம் கூட அடையாத நிலையில் குறைந்த வெளிச்சம் காணப்பட திடீரென பலிபீடம் முன்னே வந்த அந்த மோகினியைப் பார்த்து முதலில் ஆச்சரியப் பட்டான் மடிராஜன். ஆச்சரியம் படிப்படியாக சந்தேகமாக மாற அந்த அழகியை சுற்றி வந்தவன் அவளுக்குப் பின்னால்

யாராவது வந்தார்களா என்றும் எட்டிப் பார்த்தான். யாருமே காணப்படவில்லைதான்.

இது என்ன கனவா? பில்வணன் நியாயமானவன்தான்... அவன் சொன்ன சொல்லைக் காப்பாற்ற இந்தப் பெண்ணை அனுப்பி வைத்தானா... அல்லது இவள் அந்த அரசகுமாரிதானா... இல்லையேல் மாயமோகினியா? யோகினியா?

வந்தவளோ தன் இரு கைகளையும் மார்பில் கட்டிக் கொண்டு நிதானமாக பார்த்தாள். அவள் வார்த்தைகளும் சாதாரணமாகவே வந்தன.

''மடிராஜா! எங்கள் குருதேவ் உனக்குக் கொடுத்த வாக்குப்படி இங்கு வந்துள்ளேன். எங்கே என் தலையை வைப்பது... இந்தப் பாறையில்தானா...''

கதறக்கதற எத்தனையோ பெண்களையும் குழந்தைகளையும் பலிவாங்கிய மடிராஜனுக்கு அந்தக் குளிரிலும் சற்று வேர்த்துப் போனதுதான்... அவன் கண்களில் சற்று கலக்கம் கூட தெரிய ஆரம்பித்துவிட்டது.

''யார் நீ? உண்மையிலேயே கன்னோசி இளவரசியா... இல்லை யோகினியா...'' என்று கேட்டவன் தன் கழுத்திலிருந்த மண்டையோட்டை எடுத்துப் பாறை மீது வைத்தான். வெட்டு வாளை கையில் எடுத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். நண்பர்கள் நால்வரும் அவனையே பார்த்திருந்தனர்.

''நான் யோகினிப்பெண் இல்லை மடிராஜா! எங்கள் குருதேவ் ஆணைப்படி வந்திருக்கும் காத்யாயினி தேவிதான். ஆனால் ஒன்று...''

சற்று பயம் தெளிந்தவன் அவளை உற்றுப் பார்த்தான்.

''என்ன அது?''

''உடற்குறை ஒன்றுமில்லாவிட்டாலும் மனக்குறை ஒன்று உண்டு. என் மனக்குறை தீர்ப்பாயானால் என் பலி உனக்கு முழுமையாக பயன்படும்... என் குறையை தீர்ப்பாயானால் நான் திருப்தியாக உயிர் விடுவேன்...''

கெஞ்சலாக வந்த குரல் மடிராஜனை சற்று ஆலோசிக்க வைத்தது. இவள் சொல்வது உண்மைதான். குறையில்லாதவள் பலி ஒன்று கிடைத்தால் போதும்... உலகத்தையே ஆள்வோமே...



''என்ன... சொல் பெண்ணே... உன் குறை என்ன சொல்?''

''நான் மனமுவந்து பலி வாங்கப்படும்போது நீ சங்கெடுத்து ஊத வேண்டும். சங்கு ஊதலால் மனக்குறைகள் ஏதும் இருந்தால் உடனடியாக அறுபடுமாம். குருதேவ் என்னிடம் ஒருமுறை சங்கு ஊதலைப் பற்றி சொல்லி இருந்தார். இந்த திராவிட நாட்டில் கூட சாவு நடந்தவுடன் சங்கு ஊதி சவத்தை எடுத்துச் செல்வது வழக்கமென்பது உனக்கு தெரியுமல்லவா மடிராஜன்?''

''இந்த இரவு நேரத்தில் இந்தக் காட்டில் சங்கு ஊத வேண்டுமா...'' ஏதோ நினைத்து கேட்டவன் சட்டென உற்சாகமானான்.

''பெண்ணே! உன் கவலை தீர்க்கப்படும்'' என்றவன் வெட்டு வாளை கையிலெடுத்துக் கொண்டே குதிரையின் அருகே ஓடினான். குதிரையின் மடிப் பகுதியில் ஒரு பை கட்டப்பட்டிருந்தது. அவன் வாளுடன் தன்னருகே வருவதைப் பார்த்து அச்சப்பட்டதோ என்னவோ அந்த வாயில்லா ஜீவன் முரண்டு பிடித்து நகர்ந்தது. அவன் வெட்டு வாளை கீழே வைத்து குதிரையின் முதுகை தடவியவன் அதன் அடிப்பாகத்தில் மெல்லப் பிடித்தான். அப்போதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது.

குதிரையின் அடிவயிற்றுப் பக்கம் குனிந்த மடிராஜனை திடீரென பலமான கால் ஒன்று உதைக்க சற்று எட்டி விழுந்தான் மடிராஜன். ஆனால் சடுதியில் எழுந்து உதைக்கப்பட்ட உருவத்தைப் பார்த்தவன் அது குதிரையின் பின்பக்கத்தில் கட்டப்பட்டிருந்த அவந்திகாதான் எனத் தெரிந்ததும் கீழே கிடந்த அந்த வெட்டு வாளை தூக்கிக் கொண்டு அவந்திகா மீது பாய்ந்தான். ஆனால், அதற்குள் சரியாக வீசப்பட்ட ஈட்டி ஒன்று மடிராஜனின் நெஞ்சில் நேராகப் பாய பட்டென மண்ணில் விழுந்து மடிந்து போனான் மடிராஜன். சுடுகாடுகளில் எத்தனையோ உயிர்களை கொள்ளை கொண்ட அந்த காபாலிகனின் உயிரும் அந்தச் சுடுகாட்டிலேயே பிரிந்தது.

ஈட்டியை வீசிவிட்டு விடுவிடுவென அந்தப் பகுதிக்கு வந்த காளிங்கன் மீதமுள்ள நான்கு பேர்களையும் எதிர்

கொண்டான். தலைவன் இறந்து விட்டதால் மிரண்டு போய் நின்ற நால்வரும் சுதாரித்து முன் வருவதற்குள் காத்யாயினியும் கீழே கிடந்த வெட்டு வாளை இடது கையால் பிடித்து அவர்களின் ஈட்டிகளை எதிர் கொள்ள தொடங்கினாள். தாரகனை வதைத்து ஊர்த்துவ தாண்டவம் ஆடிய மகா காளி போல் தன் முன்னே வாளோடு நின்ற காத்யாயினியைப் பார்த்தவர்கள் சற்று பயந்துதான் போனார்கள். ஆனால், காளிங்கன் அவர்களை அப்படியே விடவில்லை. வாயில்லா ஜீவன்கள் தன்மீது பாயும்போது துரத்தி அடிப்பார்களே... அதைப் போல் அவர்களை துரத்தி துரத்தி அடித்தான். காளிங்கன் காபாலிகர்களை துரத்தும் அதே வேளையில் காத்யாயினி அவந்திகாவின் கட்டுகளை விடுவித்து அவளையும் கைகொடுத்து இறக்கிவிட்டாள்.

காபாலிகர்கள் ஒவ்வொருவராக காட்டுக்குள் ஓடி மறையும் வரை துரத்தி விட்டு வந்த காளிங்கன் திரும்பி அந்தச் சுடுகாடு வரும்போது அவந்திகா மேலே கையை கூப்பியபடி அகிலத்தையும் படைத்து காத்து அழிக்கும் அந்த ஆதி சிவனுக்கு தன் நன்றியை தெரிவித்துக் கொண்டிருந்தாள். காத்யாயினிதான் அவளை உலுக்கி எழுப்பினாள்.

''அவந்தி! எனக்காக நீ ஏன் தியாகம் செய்ய முன் வந்தாய்... நல்ல காலம் அந்த வைணவர் வந்து சொன்னார். இல்லை யென்றால் என் அவந்திகாவுக்கு என்ன ஆகியிருக்குமோ?''

அவந்திகா குதிரையின் அடிப்பகுதியில் கட்டப்பட்டிருந்த துணிப்பையை எடுத்தாள். அதை காத்யாயினியிடமே கொடுத்தாள்.

''ஒன்றுமே ஆகியிருக்காது காத்யா! என் சிந்தையில் அவன் என் சிவன் இருக்கும்போது என் உயிர் எப்படி போகும்? உன் குடிசையில் இந்த துணிப்பைக்குள் இருக்கும் சங்கும் சக்கரமும் எடுக்கத்தான் நுழைந்தேன். ஆனால் உள்ளே இந்த காபாலிகன் ஒளிந்து கொண்டிருந்தான். நான் இந்தப் பையை எடுக்கும்போது என் முகத்தில் பொடி வீசப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. நான் மயக்கம் தெளிந்து விழிக்கும் போதுதான் பார்த்தேன். நீயும் அந்த காபாலிகனும் என்னை நெருங்கி வந்ததும் வழக்கப்படி நெஞ்சில் நிற்கும் சிவனை நினைத்து காலால் அவனை உதைத்தேன். ஆனால், அவன் சிவனை சரியாக புரிந்த கொள்ளாதவன். என் மீது திரும்ப பாய்ந்தபோது



தான் சிவன் வீசியது போல காளிங்கர் வீசிய ஈட்டி அவனை அழித்து விட்டது!''

சிரித்தாள் அவள். ஆனால் காளிங்கன் சிரிக்கவில்லை. ''அவந்தி! முதலில் இந்தச் சங்கு சக்கரத்தை திருவேங்கடத் தானிடம் சேர்ப்பிக்க வேண்டும்... மழை வேறு வரும் போல இருக்கிறது. மழை வருவதற்கு முன் மலையேறிவிட வேண்டும்.''

காத்யா குறுக்கிட்டாள்.

''வீரரே! இனியும் நீங்கள் துன்பத்தில் உழல தேவை யில்லை. இந்தச் சங்கும் சக்கரமும் என் தோழர்களைப் போல. அவர்கள் எப்படி வெளியே வந்தார்களோ அப்படியே சென்று விடுவார்கள்... இப்போது அந்த நம்பிக்கை எனக்கு வந்து விட்டது...''

''எதையும் சொல்வது எளிதுதான். ஆனால் செயல்படுத்துவது என்பது வேறு காத்யா! இப்போது திருமலை உள்ள நிலைமையில் நாம் எதைச் செய்தாலும் நீர ஆலோசித்தே செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்!''

''ஆலோசனையே வேண்டாம்! இத்தனை நாள் கஷ்டப் பட்டு உங்கள் இருவரையும் கஷ்டப்படுத்தியதற்கு நான் எப்பாடு பட்டாவது, எடுத்த சங்கைத் திரும்ப வைத்தே ஆக வேண்டும்... இவர்களை என் கண்ணனிடம் சேர்ப்பிக்கும் வரை கஷ்டப்பட்டுதான் ஆக வேண்டும்!''

காத்யாயினி ஆவேசமாகப் பேசினாலும் அது அர்த்தமுள்ளதாகவே பட்டது காளிங்கனுக்கு. ஆனால், அது எப்படி முடியும் என்று தெரியவில்லை. கஷ்டம்தான். அவர்களை மேலும் கஷ்டப்படுத்துவதற்காகவோ என்னவோ மழை வேறு சடசடவென பெய்ய ஆரம்பித்து விட்டது.

# 33

# அதீத ஞானம்

''ஏழுபத்தினான்கு சிம்ஹாசனாதிபதிகள் – எழுநூறு யதிகள் – ஒன்பதினாயிரம் முதலிகள் – பன்னீராயிரம் பூணூல் சாத்தாத முதலிகள், இவர்கள் அத்தனை பேருக்கும் தலைவராய் ஒரு சமய உலகத்தையே ஆள்கிறாராமே... இந்தச் சமய உலகத்துக்கு எல்லைக் கோடுகள் கிடையாது; மொழிகள் கிடையாது; பேதங்கள் இல்லை – இவரல்லவா உண்மையான சக்கரவர்த்தி – இவர் சொல்லுக்கு அத்தனை சக்தியா? இல்லாத கடவுள்கூட இவர் சொல்லுக்கு அடங்குவாராமே... எப்படி?'

ராமானுஜரைப் பற்றி வியந்து கொண்டிருந்தான் பில்வணன். சாளுக்கிய குலத்துக்கே குருவாக மாறி சாளுக்கிய மன்னராக அன்று இருந்த சோமேஸ்வரனையும் அவன் மூத்த மகனான சோமதேவாவையும் வீழ்த்தி அந்த இடத்தில் இளைய மகனான விக்கில தேவாவை அமர்த்தி அவன் மூலம் வீராதி வீர சாகஸங்கள் செய்து தற்சமயம் சோழ மண்டலத்தையும் தன் வசமாக்க மதச்சண்டைகளை உருவாக்கி உலுக்கி வரும் தனக்கு நேர் மாறாக இப்படி ஒரு மனிதரா? அதுவும் கடவுளின் தூதர் என்று ஊர் போற்றும் உத்தமராக உருவாக இவரால் எப்படி முடிந்தது?

சிரித்துக் கொண்டான் பில்வணன். ஆண்டாண்டு காலமாக ஏன்... உலகம் தோன்றிய முதலாக, இல்லாத ஒன்றை இருப்பதாக மனிதரிடத்தே சொல்லி அவனுக்குக் கடவுள் என்று பெயர் கொடுத்து அவனுக்கு உருவமில்லை, ஊரில்லை, பேரில்லை என்றெல்லாம் ஏமாற்றி வந்தார்கள். காலம் மாறியது. ஏமாற்றுபவர்களும் காலத்துக்கேற்ப மாறினார்கள். கடவுளுக்கு மனிதனைப் போலவே உருவம் கொடுத்தார்கள்... சிலையாக வடித்தார்கள். அந்தச் சிலைகளுக்கும் வேற்றுமை காட்டி படுக்க வைத்தால் திருமால், நிற்கவைத்தால் சிவன் என்றார்கள்... பீடத்திலே உருளையை நிற்க வைத்து லிங்கம் என்றார்கள்... பக்கத்திலேயே அழகான பெண் சிலையை செய்து சக்தி என்று சொல்லி ஒவ்வாத சிவசக்தி தத்துவத்தை கண்டுபிடித்து சொல்வது போல சொன்னார்கள்... மனிதன் உண்ணும் பாலையும் தேனையும்



அந்தச் சிலைகளுக்கு அபிஷேகம் என்ற பெயரில் ஊற்றி மனிதனின் உணவையும் பறித்தார்கள்... இல்லாத கடவுளை வைத்து இப்படி இவர்கள் செய்வது ஆர்ப்பாட்டமா? அல்லது என் சொந்த மூளையை வைத்து இவர்கள் மதங்களை அழிக்கும் என் செயல் ஆர்ப்பாட்டமா?

தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் பில்வணன். ஆனாலும், ராமானுஜரின் இன்றைய செய்கை அவனை மெய்யாகவே கலவரப்படுத்திவிட்டதுதான்.

திராவிட தேச சரித்திரத்தை தலைகீழாக அறிந்தவன் பில்வண குருதேவ். சில நூறு ஆண்டுகள் முன்பு வரை சமண ஆதிக்கத்தில் செழித்து ஓங்கிய திராவிட தேசத்தை சைவர்கள் பக்திப்பாடல்கள் பாடிப்பாடியே மக்களையும் மக்களை ஆண்டு வந்த மன்னர்களையும் தம் வசப்படுத்தி, தெய்வம் திராவிடதேசத்தை காப்பாற்றி விட்டதாக சொல்லியதை பில்வணன் தன் நண்பர்களிடத்தே அவ்வப்போது சொல்லி வருவான். குறிப்பாகத் தமிழ் தேசத்தில் பல நூறு ஆலயங்களை அரசர்கள் கட்டியதையும் அந்தக் கோயில்களுக்கு தகுந்தவாறு புராணக்கதை ஏதாவது ஒன்றை மக்கள் மனதில் புகுத்தி அச்சுறுத்தி அடக்கியதையும் அவன் அழகாகவே சொல்வான். அப்படிப்பட்ட திராவிட நாடு திருந்த வேண்டும்... மாயத்தை கைவிட்டு கண்முன் நடப்பதையே நம்ப வேண்டும்... மூளை பலமும் செல்வமும் ஆள்பலமும் நிலபலமும் யாரிடம் அதிகம் இருக்கின்றதோ அவர்களிடம் மனிதர் அடங்கி வாழ்வது சாதாரண நியதி... அந்த நியதியின் படியே விக்கிலனை கூட எதிர்காலத்தில் பெரியதொரு சக்கரவர்த்தியாக்க தான் பாடுபடுவதாக எல்லோரிடத்தும் சொல்லி வருகிறான்.

அந்த நியதிக்காகவே எதிரி நாடுகளை எளிதில் கவரும் திட்டங்களை தன் மூளை தீட்டி வருகிறது. அந்தத் திட்டத்தின் முதல் கட்டம்தான் இந்த மதக்கலவரங்கள். மதம் ஒன்றே தேவையில்லாத பட்சத்தில் இவர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு சாகட்டுமே...

பில்வணன் மூளைக்கு இது கூட போர் சாத்திரத்தின் ஒரு பகுதியாகவே பட்டது. ஆனால், ஆசிரியர் போன்றவர்கள் இதனை அதர்மம் என்று பெயர் கொடுத்து அநியாயமாக கொதித்துப்போவதுதான் அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஆசிரியரை சமீப காலமாகத்தான் பில்வணன் அறிந்திருந்தான். தனக்கு இணையாக சிந்திக்கக் கூடிய திறமைசாலி அந்த ஆசிரியன்... தான் விக்கிலனைத் தூக்கிவிட நினைப்பது போல அந்த ஆசிரியன் அபயனுக்குத் துணை போவதில் தவறு இல்லைதான். சமயம் பார்த்து திருவேங்கடகூடத்தில் யாகத்தை கலைத்த ஆசிரியரின் செயல்கூட முதலில் கோபத்தைத் தூண்டினாலும் அவர் மூளையின் செயலுக்கு மரியாதை செலுத்தினான். ஆனால் அப்படிப்பட்ட ஆசிரியர், அப்படிப்பட்ட திறமைசாலி, ராமானுஜரோடு கூட்டு சேர்ந்தது கோழைத்தனமாக பட்டது பில்வணனுக்கு. இந்த ஆசிரியருக்கு தன்னம்பிக்கை போதாது. எவனொருவன் இன்னொருவர் மூளை மீது ஆதாரப் படுகின்றானோ அவனால் உலகத்தை வெல்ல முடியாது. ஆசிரியருக்கு தன் மூளை மீது சந்தேகம்... அதனால் ராமானுஜரின் நிழலில் ஒதுங்கிவிட்டார்... இது ஆசிரியர் செய்த மிகப்பெரிய தவறு. ஆசிரியரால் ஓர் அளவுக்கு மேல் சிந்திக்க தைரியம் இல்லை... ஆனால் தன்னால் மேலும் மேலும் சிந்திக்க முடியும்... அந்த சிந்தனையில் விளைந்ததுதான் திருவேங்கடத்தானின் சங்கு சக்கரமாயம்... சைவ - வைணவ மதச்சண்டைகள்... ஆசிரியரால் இனி அதிகம் செயல்படமுடியாது. அவர் சீடர்கள் மூலைக்கு ஒருவராக ஓடிவிட்டார்கள்... இவருக்கோ வேறு வழி தெரியவில்லை. அதனால் ராமானுஜரை சரணடைந்து விட்டார். தனக்கென ஒரு ராஜாங்கம், தனக்கென ஒரு படை, தனக்கென ஒரு கொள்கை என்று தனியே ஒதுங்கி இருந்த ராமானுஜரை அரசியலில் சிக்க வைத்ததுதான் ஆசிரியரின் இறுதி அஸ்திரம். ஆனால், அந்த அஸ்திரமும் வலுவிழக்கப் போகிறது... பாவம்...''

ஆனாலும் அந்த ராமானுஜருக்கு இத்தனை நிதானம் கூடாதுதான்... ஒன்றுமே நடவாதது போலல்லவா இருக்கிறார்... எத்தனை பெரிய ஆர்ப்பாட்டங்கள் ஊரெங்கும் நடக்கின்றன... எத்தனையோ சைவர்களும் வைணவர்களும் அடித்துக் கொண்டு பிராணனை விடுகிறார்களே... இந்த ராமானுஜர் முகத்தில் எள் அளவு கூட கலக்கம் இல்லையே... ஒரு வேளை இந்த மதாசாரியார்கள் அனைவரும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நியதியோ என்னவோ... எது நடந்தாலும் தாங்கள் கலவரப்படுவதில்லை என்பதாக மக்களுக்கு இவர்கள் காட்டவேண்டுமோ என்னவோ...



அப்போதுதான் இவர்களை மதத்தலைவராக மக்கள் நம்புவார்களோ...

நம்பட்டும்... நம்பட்டும்... இன்னும் எத்தனை நாட்கள் இவர்கள் ஆட்டம் போடுவார்கள்? இன்றிரவிலிருந்து இவர்கள் முகமூடி கொஞ்சம் கொஞ்சமாக கிழிக்கப்படும். இந்த திராவிட தேசத்தில் கடவுள் என்று பேசக்கூட மக்கள் அஞ்சும் போக்கை இவர்களே ஏற்படுத்தப் போகிறார்கள்... அந்த அச்சத்தை பலப்படுத்துவது மட்டுமே நம் வேலை...

பில்வண குருதேவ் மூளை வேகமாக சிந்திக்க ஆரம்பித்தது. இந்த சமயத்தில் காத்யாயினி இல்லாதது அவனை சற்று வருத்தமடையச் செய்ததுதான். ஆனால், இனி அவள் கதை முடியப் போகும் இனிய கதை. அவள் இருக்கும் வரை தன் வேலையை திறம்படச் செய்தாள். அவள் போவது கூட எதிர்காலத்தில் நல்ல பெயரையே அவளுக்குத் தரும்.

காத்யாயினி தன்னால் காப்பாற்றப்பட்டு சகல கலைகளையும் கற்றுக் கொண்டது பில்வணனுக்கு மிகப் பெரிய பெருமை. தனக்குப் பிறகு வாரிசாக வர அவளுக்கு முழு தகுதியுண்டு என்பதாக அவன் நினைத்ததுண்டு. ஆனால் அவள் பெண்ணாக பிறந்து விட்டாளே... அவள் மட்டும் ஆணாக இருந்திருந்தால் விக்கிலன் இடத்தில் நிச்சயம் அவள்தான் இடம் பெற்றிருப்பாள். பெண்ணுக்கே உரிய பல இடர்ப்பாடுகள் அவளுக்கும் உண்டு என்பதில் அவனுக்கு மகா வருத்தம்.

அவள் ஆசிரியரிடம் சிக்கியது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், அவள் வைணவர்கள் மத்தியில் வைக்கப் பட்டதால் தானே சங்கு சக்கர மாயம் செய்யும் உபாயம் கிடைத்தது. அவளால் கிடைத்த அந்த உபாயத்தினை அவளை வைத்தே நிறைவேற்றி விட்டோம்... அவள் பணி முடிந்து விட்டது. இது மாபெரும் பணி. மடிராஜனால் பலியிடப்படுவது கூட நல்லதுதான்.

நாளை சரித்திர ஏடுகளில் காத்யாயினியின் பெயர் ஏறும். இறைவன் எனும் மாயையை தகர்த்தெறிய உபாயம் செய்தவள் காத்யாயினி என்று சரித்திரம் சொல்லும். அப்படி ஒரு மகத்தான உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டிய போது கோபம் கொண்ட மதவாதிகள் அவளை வெட்டி காவு கொடுத்து விட்டார்கள்.

'காத்யாயினி! என் பெண்ணே! உன் தந்தை உனக்குக் கொடுக்கும் மகத்தான பரிசு இதுதான். உன் சரித்திரத்தை இனி எழுதப் போவதும் நான்தான். இன்றைய இரவில் ஒளிதீபம் ஏற்றப் போவதும் நான்தான்!'

பில்வணன் தனக்குள் சிரித்துக் கொண்டான். தான் மட்டும் அப்போது துணிந்து காப்பாற்றாவிட்டால் காத்யாயினி என்ற பெண்ணே உலகுக்கு அதிகம் தெரிந்திருக்க மாட்டாள். அப்படி அவளைக் காப்பாற்றியவளை இன்று இரவு அழிக்கப்போவதும் தான் தான்.

'பலே! இறைவன் ஒருவன்தான் படைத்து காத்து அழிக்கும் செயலை செய்வதாக சொல்கிறார்கள். அவர்கள் கூற்றுப் படி நானும் ஏறத்தாழ இறைவன்தான். என்ன நடக்கப்போகிறது என்று தெரியும் எனக்கு. ஏனெனில் அதை நடத்தப்போவதே நான்தான். எல்லாம் தெரிந்தவன் மனிதன். அவன் புத்திபலம் ஆழமாக சிந்தித்தால் எதனையும் அவனால் செய்யமுடியும்.. அதற்கு நானே ஓர் அத்தாட்சி. இன்று காத்து அழிக்கும் செயலை நான் செய்கிறேன். நாளை இன்னொரு மனிதன் வருவான். மேலும் சிந்திப்பான்... படைக்கும் தொழிலையும் செய்வான்...'

பில்வணன் மனம் கள் குடித்தது போல் ஆடியது. அவனுடைய எண்ணங்களை கலைக்க உள்ளே வந்தான் நாலூரான்.

நாலூரான் திருமலைக் கோயில் ஏற்பாட்டு விவரங்களை எடுத்துக் கூறினான். இரவு இரண்டு ஊர்வலங்கள் புறப்படும்... ஒன்று வைணவர்களின் கூட்டம்... மற்றொன்று சைவர்களின் ஊர்வலம்... இரண்டு பக்கங்களிலும் ஈர்இரண்டு பேர் கோயில் ஆசாரியார் மற்றும் சாலவைத் தலைவர் முன்னிலையில் துளசி மாலைகளையும் விபூதி நிறைந்த பானையையும் திருவேங்கடத்தான் பாதத்தில் வைப்பார்கள். பிறகு உள்ளறையை முற்றிலும் சோதித்து விட்டு கர்ப்பக்கிருகத்தை விட்டு வெளியே வருவார்கள். கர்ப்பக்கிருக அறைக் கதவு சாத்தப்பட்டு பெரிய பூட்டு ஒன்று போடப்படும். பூட்டின் சாவித்துவாரம் கூட சந்தனக் காப்பு போட்டு சாலவைத் தலைவரின் முத்திரை மோதிரப் பொறிப்பு இடப்படும். வெளியே உள்ள கருடத் துவாரக் கதவு சாளரம் போட்ட கதவு. அந்தக் கதவும் நன்றாக அடைக்கப்பட்டு பூட்டு போடப்படும். சாளரக் கதவாக அமைவதால் கர்ப்பக்கிருக அறைக் கதவு அருகே கண் வைக்கவும் ஏதுவாக இருக்கும். பிறகு திருமணி மண்டப கதவும் சாத்தப்படும். இரவு முடிந்து மூன்றாம் ஜாமம் முடியும் நேரத்தில் எல்லா பூட்டுகளும் சரிபார்த்து திறக்கப்பட்டு உள்ளே செல்ல வேண்டும்!''



நாலூரான் சொல்லி முடித்ததும் கபகபவென நகைத்தான் பில்வண குருதேவ்.

''ஏன் சிரிக்கிறீர்கள் குருதேவ்?''

''என் மனக்கண்ணால் நாளை நடக்கப் போவதை நினைத்துப் பார்த்தேன்... சிரித்தேன் நாலூரா! நாளைக்காலை நானும் சன்னிதிக்குள் வருகிறேன்!''

''இதையேதான் உடையவரும் சொன்னாராம்!''

''என்ன? ராமானுஜரும் சொன்னாரா?''

''ஆமாம்! உடையவர் இன்று வரை திருவேங்கடத்தான் சன்னிதிக்கு சென்றதே இல்லையாம். நாளைதான் முதன் முறையாக கோயிலுக்குள் செல்ல இருக்கிறார்!''

அவனையும் அறியாமல் பக்திபூர்வமாகப் பேசிய நாலூரானை சற்று எரிச்சலாகப் பார்த்தான் பில்வணன்.

''நாலூரா! உன் பக்திப் பரவசத்தை நாளை வரை ஒத்திப்போடு. அது சரி... ராமானுசர் ஏன் இதுவரை திருவேங்கடவனை தரிசிக்க வில்லையாம்?''

''திருவேங்கடமலையில் கால் கொண்டு ஏறுவதையே பாவமாக கருதுபவர் அவர். அத்தனை புனித மலையாம்!''

''ஏன் தற்சமயம் பறந்து வந்தாரோ?''

நகைத்தான் பில்வணன். ஆனால் எச்சரிக்கையாகவே பதிலளித்தான் நாலூரான்.

''சந்தர்ப்பங்கள் அவரை மலையேற வைத்துவிட்டன குருதேவ்! ஆனால் அவரைப் பற்றி தவறாக கணக்கு போடவேண்டாம். அவர் புத்தியில் சிறந்த பல வடமொழி பண்டிதர்களை வாதத்தில் வென்று புகழ் பெற்றவர். அவர் அதீத ஞானம் பல சமயங்களில் கைகொடுத்திருக்கிறது குருதேவ்!''

''நீ சொன்னது சரிதான் நாலூரா! அவர் அதீத ஞானம் பல சமயங்களில் கைகொடுக்கலாம். ஆனால், அவர் இன்று

அவசரப்பட்டுவிட்டார். அந்த அவசரப்படுதல்தான் எனக்கு இன்று கை கொடுக்கிறது!''

''எதைச் சொல்கிறீர்கள்?''

''அவர் திருவேங்கடத்தானையே சம்பந்தப்படுத்தாமல் வேறு ஏதாவது முறை கொண்டு பிரச்சினையை தீர்க்க உதவியிருக்க வேண்டும். ஆனால், அவர் இன்று என்னிடம் வசமாக மாட்டிக் கொண்டார். அவர் இன்று கோயில் உள்ளே வடிக்கப்பட்டு இருக்கும் சிலையின் உதவியை நாடி இருக்கிறார். வழக்கப்படி சிலை எதுவும் பேசாது. பேசாத சிலை வேடிக்கை பார்ப்பதுதான் வழக்கம். அந்த வேடிக்கையைக் கூட மாயங்கள் என்று சொல்லி இவர்கள் ஏமாற்றி வருவதும் வழக்கம். அப்படிப்பட்ட சிலையை செயல்படுத்தப்போவதாக சொல்கிறார். சிலை தன் கைக்கு உயிர் கொடுத்து தன் கீழே உள்ள விபூதியையோ துளசியையோ தன் மேனிக்குள் சூட்டிக் கொள்ளப் போகிறதாம். எத்தனையானாலும் சிலை சிலைதானே என்று எண்ணாமல் தன் வாயால் ஏதோ சொல்லி வசமாகவே மாட்டிக் கொண்டார் ராமானுஜர். அவர் அவசரப்பட்டுவிட்டார். அவர் அவசரம் எனக்கு வெற்றியைத் தரும்போது அந்தச் சிலை அருகே நான் நிற்பது விசேடம்தானே நாலூரா!''

''குருதேவ்! ஒருவேளை ராமானுசர் சொல்படி ஏதேனும் மாயம் நடந்து விட்டால்?''

''நாலூரா! நீ கேட்பதே விசித்திரமாக இருக்கிறது. உன் உள்ளத்தில் உறுதி இல்லை! பலவீனம் தெரிகிறது! இந்த பலவீனம்தான் மதவாதிகளின் பலம். இந்த ஒரு பலவீனத்தைப் பயன்படுத்தியே இவர்கள் ஆண்டு வந்தார்கள். அந்தப் பலத்தை நான் உடைக்கப் போகிறேன். உங்கள் பலவீனம் அப்பாவித்தனத்தையும் நாளை வெளிக்காட்டப் போகிறேன்!''

மாலையிலேயே மழை வரும். சூசகமாய் தூறல் ஆரம்பித்துவிட்டது. திருமலையில் வெண் மேகங்கள் திடீரென கரும் மேகமாய் மாறியதாலோ அல்லது சூழ்நிலையின் தாக்கமோ அன்றைய இரவு கூட சற்று சீக்கிரமாகவே திருமலையை சூழ்ந்து கொண்டது.

ஆனால் திருமலையெங்கும் இரவு தீபங்கள் அன்று அதிகமாகவே ஏற்றப்பட்டிருந்தன. காற்றுக்கு அசைந்தாடும்



தீப வெளிச்சத்தில் திருமலை எங்கும் ஊர்வலக் கூட்டம் குவியத் தொடங்கியது. நாலூரான் சொன்னதுபோல சைவர்களும் வைணவர்களும் இரு பிரிவுகளாக கூடிக் கொண்டிருந்தனர்.

இரவு நேரம் ஆக ஆக மலையெங்கும் பரபரப்பு அதிகம் ஆனதோடு தூறல் கூட பலப்பட்டு மழை பெய்ய ஆரம்பித்தது. அந்த மழையிலும் இரண்டு பக்கங்களிலும் பக்தர்கள் தாரை தப்பட்டை சகிதம் கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்த பிரகாரம் சைவர்கள் இருவரும் வைணவர்கள் இருவரும் சாலவைத் தலைவரோடு கோயில் ஆச்சாரியார் முன் செல்ல கர்ப்பக்கிருகத்துள் நுழைந்தார்கள். நீண்ட பிரகாரத்தில் கடைசியில் நின்ற வண்ணம் அருளும் திருவேங்கடப்பெருமாள் அருகே சென்றார்கள். ஆச்சாரியர் வைகானச பூசை செய்தபின் திருவேங்கடமுடையான் திருப்பாதத்தில் துளசி மாலைகளும் விபூதி நிறைக்கப்பட்ட சட்டமும் வைக்கப்பட்டன. பின் மங்களம் பாடிய ஆச்சாரியர் தீப ஆராதனை கொடுத்து சுவாமியின் திருப்பாதத்துக்கு தண்டனிட்டார். உள்ளே நுழைந்தவர்கள் கர்ப்பக்கிருகத்தின் அறையை சோதனை செய்து திருப்தி யடைந்தவராய் வெளியே வர சாலவைத் தலைவர் பெரிய பூட்டொன்று எடுத்து, கர்ப்பக்கிருகக் கதவுகளை இழுத்து தாழிட்டார். பிறகு போடப்பட்ட பூட்டு பலமுறை இழுத்துப்பார்த்து பரிசோதிக்கப்பட அந்தப் பூட்டின் சாவித்துவாரமும் சந்தன காப்பிடப்பட்டு தன் விரல் மோதிரத்தின் முத்திரையை பதித்தார். அதே விதமாய் கருட வாசல் வந்தனர். அதே விதத்தை பின்பற்றி அநதக் கதவையும் அடைத்தனர். வெளியே மழை கொட்டி அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தாலும் அதையும் மீறி திருமணி மண்டபம் வந்தவர்கள் மண்டபத்துக்குப் உட்பிரகாரம் அமைந்த இடத்துக்கும் மத்தியில் உள்ள பெருங்கதவையும் இழுத்து சாத்தி மூடினார்கள்.

பிறகு திருப்தியுடன் திறவு கோல்களை ஒரு பையில் கட்டி சாலவைத் தலைவர் தன் இடுப்பில் செருகி மற்றவர்கள் அமர்ந்த இடத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டார். பிரகாரத்தில் மழைச் சத்தம் நன்றாகவே உள்ளே கேட்டாலும் நடக்கப் போகும் நிகழ்ச்சியில் உள்ள விசித்திரத்தால் திருமணி மண்டபத்தில் அமைதி காக்கப்பட்டதுதான்.

விவரங்களை விரிவாகவே பில்வணனிடம் எடுத்துரைத்தான்.

"அது சரிதான் நாலூரான்! இந்த சாலவைத் தலைவரை எந்த அளவு நம்பலாம்? திறவு கோலுக்கு ஏதேனும் மாற்று ஏற்பாடுகள் வைத்திருந்தால்?

"அவர் எந்த ஏற்பாடு செய்தாலும் நம் கண் முன்னேதான் செய்தாக வேண்டும் குருதேவ்! நம் கண் நம்மை ஏமாற்றுமோ?"

அவன் சொன்னது உண்மைதான் என்றாலும் தாமும் மிக எச்சரிக்கையாகவே செயல்படவேண்டும் என்று மனதில் நினைத்த பில்வணன் பனை ஓலைக்குடை ஒன்றை கையில் பிடித்தபடி நாலூரான் பின்தொடர கோயிலருகே வந்தான்.

மழை அம்பு பாய்வது போல் புஷ்கரணி குளத்தில் பாய்வதைக் கண்டவன் அங்கிருந்தபடியே அந்த புராதனக் கோயிலை ஒரு முறை பார்த்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் அந்தக் கோயிலை சுற்றி வந்தான். கோயிலின் பின்பக்கங்கள் புதர் மண்டிக் கிடந்ததால் சொத சொதவென இருந்தன. ஓர் அளவுக்கு மேல் கால் வைக்க முடியாது என்ற நிலையில் அங்கு இருந்த பெரிய புளிய மரத்தடியை சோதித்தான். அந்த மரத்தை சுற்றி வந்தவன் மழை நீர் மரத்தையும் மீறி தன் குடை மேல் விழுவதைப் பார்த்து திருப்தியுடன் தலை அசைத்தான். பிறகு கோயிலின் முன்வாசல் பக்கம் வந்தான். மழையில் தீவட்டிகள் ஆங்காங்கே அணைந்து கிடந்ததால் இருள் எங்கும் அப்பியிருந்ததை அலட்சியம் செய்தவன் திருமணி மண்டபம் உள்ளே நுழைந்தான். கைகளால் உடலைக் குறுக்கிக் கொண்டு மக்கள் அந்த பெரிய மண்டபத்தில் கும்பல் கும்பல்களாக உட்கார்ந்திருந்ததைத் தீவட்டி வெளிச்சங்கள் காண்பித்தன.

பின்னர் தன் பின்னே வந்த நாலூரானை விளித்து திறவுகோல் வைத்திருந்த சாலவைத் தலைவரை அருகில் அழைக்கச் சொன்னான். பிறகு மூவரும் திருமணி மண்டப உள்வாயில் அருகே வந்ததும் அடைக்கப்பட்டிருந்த அந்தக் கதவை மறுபடி திறக்கச் சொல்லி ஆணையிட்டான். ஏனென்று கேள்வி கேட்க தைரியமில்லாத அந்த சாலவை தலைவரும் தலையசைக்க அந்தப் பெருங்கதவு மறுபடி திறக்கப்பட்டது.



கதவு திறந்ததும் உட்பிரகாரத்தில் கோரமாக பெய்த மழையின் சாரல் மணிமண்டபத்துள்ளும் அடித்ததால் மற்றவர்கள் உள்ளேயே ஒதுங்கினார்கள். ஆனால் பில்வணன் அந்த மழையிலும் பிரகாரத்துள் நுழைத்து கருடத்துவாரம் அருகே சென்றான். கருடத்துவார இரும்பு சட்டங்களின் வழியே உள்ளறை தூங்கா விளக்கின் ஒளியில் சலனமற்று காணப்பட்டது. சன்னிதிக் கதவுகள் மூடப்பட்டு பூட்டு தொங்கியது கூட அவன் கண்களுக்கு நன்றாகவே தெரிந்தது. அந்த உட்பிரகார சுற்றிலேயே ஒரு முறை சுற்றி வந்தான். நீண்ட தாழ்வறை கொண்டது போலும்... சிலை உள்ள அறைக்கும் கருடத்துவாரத்துக்கும் தூரம் சற்று அதிகமாகத்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டவன் மழைநீர் சொட்ட சொட்ட மறுபடியும் திருமணி மண்டப வாயில் அருகே வந்தான்.

"நாலூரா! இந்த திருமணி மண்டபக் கதவை அடைக்க வேண்டாம். மழை வேகமாக பெய்தாலும் நீயும் சில வீரர்களும் இந்த வாயில் அருகே நின்று கொண்டே உங்கள் கண்களை கருடத்துவாரம் மீதே வைத்திருங்கள். யாரேனும் அங்கு சென்றால் அவனை இழுத்துப் பிடித்து அங்கேயே வெட்டிக் கொன்று விடுங்கள்!"

வார்த்தைகளில் நாராசத்தையும் உறுதியையும கலந்து உத்தரவு போட்டவன் மனதில் ஒரு நிம்மதியுடன் திரும்பி நடந்தான் பில்வணன்.

## 34

# மழையோ மழை

**கூ**டலுள் புகுந்து சுழன்று ஊர்த்து ஊழி முதல்வனான கண்ணன் உடல் போல கறுத்து அவன் சங்கு போல நின்று அதிர்ந்து சக்கராயுதம் போல மின்னி அவன் சார்ங்க வில்லிருந்து பாயும் சரங்களைப் போல் பலத்த மழையாக பொழிந்து உலகை வாழ்விக்கிறது - என்று கோதை நாச்சி மழையை ஆன்மீகமாகவும் அறிவியலாகவும் ஒப்பிட்டு பாடினாள். பின்னாளில் ராமாயணத்தைதமிழில் பாடிய கம்பர் சரயு நதியின் மேல் படர்ந்த மேகங்கள் சிவபெருமானின் வெண்மை நிறமாக திரிந்து கடலுள் புகுந்து திருமாலின்

கருவண்ணத்தைப் பெற்று மழையாக பூமியில் பொழிகின்றன என்று மழையைப் பற்றி வர்ணித்தார்... அப்படிப்பட்ட மழை மேகங்கள் எப்படித்தான் இத்தனை நீரையும் மடியில் சுமந்து அருவி போல கீழே சாய்க்கிறதோ... திருமலையெங்கும் அந்த அருவி மழை பொழிந்து கொண்டு இருந்தது.

மழையால் கோயிலுக்கு வெளியே வரமுடியாமல் வேறு வழியின்றி திருமணி மண்டபத்திலேயே அமர்ந்து கொண்டு விட்ட பக்தர்களுக்கு அடுத்த நாள் காலை என்னதான் நடக்கப்போகிறதோ என்ற கலக்கம் இருந்தாலும் தம்மை எங்கும் நடமாட முடியாமல் செய்துவிட்ட பெருமழையையும் சற்று அச்சத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

'சமயம் பார்த்து இந்த மழை பொழிகிறதே' என்று வியப்பாய் பேசிக் கொண்டிருந்தனர். சிலர் 'இறைவனாகப் பார்த்துதான் வருணபகவானை அனுப்பி இருக்கிறார். ஏனென்றால் மலையில் மனிதர்களின் செய்கை பிடிக்கவில்லை. அவருக்கு...' என்றும் சற்று பயத்துடன் சொன்னார்கள். இன்னும் சிலர் இப்படிப்பட்ட பெரும் மழை வரவேற்கப்பட வேண்டியதே, கண்ணன் பிறந்தபோது மதுராபுரியில் கூட இப்படித்தான் மழை பொழிந்தது – பூமியில் எந்தவொரு முக்கிய நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்பு இப்படியொரு பெருமழை கொட்டுவது நல்லதுதான் என தற்சமயம் பெய்து கொண்டிருந்த மழையை போற்றவும் செய்தார்கள். வேறு சில அனுபவசாலி பக்தர்களோ தாம் ஒவ்வொரு முறை திருவிழா வரும்போதும் இப்படிப்பட்ட மழையை திருமலையில் காண்பதுதான் என்றும் இந்த வருடம் சற்று அதிகம் பொழிகிறது, அவ்வளவுதான் என்று சர்வசாதாரணமாக கூறி மழையைப் பார்த்து வியந்தவர்களின் வாயை அடைத்தார்கள்.

இரவு முதல் ஜாமம் முடியும் தருவாயில் இருந்தது என்றாலும் நேரம் மிகமிக மெல்ல ஊர்வதைப் போலத்தான் உணர்ந்தார்கள் அனைவரும். மூன்றாம் ஜாமம் முடிவில்தான் சன்னிதிக் கதவுகள் திறக்கப்படும் என்பதால் தாம் பொறுமை காத்தே ஆகவேண்டும் என்ற உண்மை யையும் உணர்ந்தே இருந்தார்கள்.

அதே எண்ணத்தில்தான் பிரகார வாசலில் தம்மீது விழுந்த மழைச்சாரலையும் அதனால் உடலில் ஏற்படும் நடுக்கங்களையும் அலட்சியம் செய்தவாறு பொறுமையாக



கண்காணித்து காத்திருந்தனர் நாலூரானும் அவன் வீரர்களும். ஊதக் காற்றோடு வேகமாகவும் பெரும் சப்தம் போட்டுக் கொண்டு வரும் இந்த மழையில் யாருக்குத்தான் கருடாழ்வார் சன்னிதியருகே செல்லும் தைரியம் வரும் என்று கூட நினைத்தான் நாலூரான்.

அதே சமயத்தில் சன்னிதியின் பின் பக்கத்தில் புளிய மரத்தின் கிளையை வளைத்து அந்த பெருமழையோடு மழையாக மூன்று உருவங்கள் கோயில் கோபுரத்தின் அருகே உள்ளே மேல்தளத்தில் விழுந்தன.

கோபுரத்தின் பின்புறத்தில் இருந்த மேல்தளத்தில் முதலில் குதித்த காளிங்கன் தன் பின்னால் வந்து குதித்தவர்களை அந்த மேல்தளத்தின் தரையோடு தவழ்ந்தபடி முன்னேறுமாறு சொன்னான். மழையில் தொப்பலாக நனைந்தபடி காத்யாயினியும் அவந்திகாவும் அவன் சொன்னபடியே மேல்தளத்தின் மையப் பகுதியில் தவழ்ந்தபடி ஊர்ந்தனர்.

திடீரென காத்யாயினி மற்ற இருவரையும் தட்டி நிறுத்தினாள்.

''இங்குதான்...''

தவழ்ந்தவன் மற்றவர்களை அப்படியே படுத்துக் கொள்ளுமாறு ஆணையிட்டான். மழை நீர் படபடவென அவர்கள் உடலெங்கும் பாகுபாடின்றி அடித்துக் கொண்டிருந் தாலும் அவர்களுக்கு அது உறைக்கவில்லைதான்.

''அவந்தி! நான் மெல்ல மெல்ல இந்த தளத்துக் கல்லை தூக்கும்போது மழைநீர் உளளே செல்லாதபடி சற்று சாய்வாக படு!'' என்றவன் காத்யாயினியைப் பார்த்தான். ''காத்யா! நீ செல்லும் அளவுக்கு இந்தக் கல்லைத் தூக்குகிறோம். உள்ளே மெதுவாக குதி! குதிக்கும்போது உன் வலதுகையை பூமிக்கு பாரம் வைக்காதே... விரைவில் வேலையை முடித்து விட்டு இந்த தளத்துக் கல்லை அசைத்துக் காட்டு! உடனே உன்னை வெளியே இழுத்து விடுவோம்... என்ன புரிந்ததா?''

அவள் புரிந்ததாக தலையசைத்தாள்.

அவர்கள் மூவரும் முன்னமே திட்டமிட்ட படிதான் வந்துள்ளார்கள் என்றாலும் தங்கள் திட்டம் சிறிது பிறழ்ந்தாலும் விபரீதம் உருவாகும் என்பதையும் உணர்ந் திருந்தார்கள்.

காத்யாயினி தான் முதன் முதலில் திருவேங்கடவன் தோளில் இருந்த சங்கையும் சக்கரத்தையும் எப்படி திட்டம் போட்டு எடுத்த விதத்தைப் பற்றி சொல்லியிருந்தாள். அன்று இரவு கோயிலுள் திருவேங்கடத்தான் பின்பக்கம் ஒடுங்கி ஒளிந்து கொண்டதையும் காளிங்கனும் அர்ச்சகரும் அங்கு சன்னிதிக்குள் இருந்தபோது அந்த குளிரான நேரத்திலும் வேர்த்து இருந்ததையும் அவர்கள் கதவை அடைத்து சென்ற பிறகுதான் தனக்கு மூச்சே வந்ததாகவும் சொல்லி இருந்தாள். அப்போது காளிங்கன் திருப்பி கேட்ட கேள்விகளும் தான் சொன்ன பதிலும் மறுபடியும் அவள் நினைவில் வலம் வந்தன.

''காத்யா! யாருமே சுவாமியை தரிசிக்கும்போது அந்த திருவேங்கடவனையே தான் பார்க்கமுடியும் என்பதால் நீ அவன் பின்னே ஒளிந்தது எனக்குத் தெரிய வாய்ப்பில்லைதான். ஆனால் பூட்டப்பட்ட அறையில் இருந்து எப்படி வெளியே சென்றாய்? ஏதாவது பாதாள வழி உள்ளதா? அப்படி இருக்கவும் வாய்ப்பில்லையே... இறைவன் பாதமலர் பகுதியில் எப்போதும் நீர் வரத்து இருக்குமே...''

''நீங்கள் சொல்வது சரிதான்... ஆனால் நான் திருமலைக்கு வந்து அப்போதே பத்து நாட்களாகி விட்டன... அந்த பத்து நாட்களும் நிதமும் கோயிலுக்குள் சென்று அங்கே எத்தனை வழிகள்... அந்த உள்ளறை எப்படியெல்லாம் கட்டப் பட்டிருக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்தேன். அப்போதுதான் கோயில் மேல்தளம் மீது மலைக்குறவன் ஒருவன் வேலை செய்வதைப் பார்த்தேன். அவன் எங்கள் குடிசைப் பகுதியை சேர்ந்தவன்... ஒவ்வொரு திருவிழா முன்பும் மராமத்து வேலைகள் செய்யப்படவேண்டும். அந்த வகையில் மேல்தளக் கல் ஒன்று பழுதுபட்டிருப்பதாகவும் அந்தக் கல்லை அகற்றி அதே வகையில் புதிய கல் ஒன்றினை செய்து புதுக்குழம்பு பூசி மெழுகிட்டு மேல்தளத்தில் வைப்பதாக அவன் சொன்னான். யாருமே இல்லாத வேளையில் நானே அந்த இடம் பார்த்து வைத்துக்கொண்டு அன்றிரவு அனைவரும் சென்றதும் முதல் வேலையாக அந்தக் கல்லை சுற்றியுள்ள குழம்புகளை கீறி எடுத்து கல்லை மட்டும் அப்படியே வைத்துவிட்டேன். அப்போதே என்னால் அந்த சங்கு சக்கரத்தையும் எளிதாக அகற்றி இருக்க முடியும்.



ஆனால் குருதேவ் ஏனோ சாலவை சபை கூடும் நாளன்றுதான் அகற்ற வேண்டும் என்றும் அப்படி நடந்தால்தான் சங்கு சக்கரத்தால் அரசியல் கலகம் ஏறபடுத்தமுடியும் என்று கண்டிப்புடன் ஆணையிட்டிருந்தார். அதனால்தான் மேலும் இரண்டு நாட்கள் பொறுமையுடன் காத்திருந்து இந்த மாபெரும் பாதகத்தை செய்து முடித்தேன்!''

''காத்யா! உள்ளே இந்தச் சக்கரமும் சங்கும் பொருத்தப்பட்டது போல் இருந்ததா? எப்படி எடுத்தாய்?

''பொருத்தப்பட்டது போலத்தான் இருந்தது வீரரே! குழாய்ப் பொருத்தி ஒன்று வேங்கடவன் தோளில் செய்து வைத்து அந்தப் பொருத்தியில் இந்த சங்கும் சக்கரமும் ஒட்டப்பட்டது போல வடிக்கப்பட்டிருந்தது. இவர்களை பச்சிளம் குழந்தை ஒன்றின் கையை ஒடிப்பது போல் படக்கென ஒடித்து உள்ளத்தில் கருணையே இல்லாமல் எடுத்து வந்து விட்டேன்... பாதகி நான்! அப்போது எனக்கு எந்த உணர்ச்சியும் இல்லை... ஆனால் இப்போது நினைத்தாலும் எனக்கு என்னைப் பார்த்தாலே அருவருப்பாய் தெரிகிறது!''

காத்யா வருத்தத்துடன் கண்கள் கலங்க பேசினாள். அவந்திகா அவளை ஆறுதல் படுத்தினாள்.

''காத்யா! ஏன் கலங்குகிறாய்? உன் முன் வினைப்பயன் விளைவு அப்படி உன்னை எடுக்கச் செய்துவிட்டது... இனி எதற்கும் நீ கலங்கக் கூடாது!''

காத்யாவின் கண்ணீரை துடைத்தாள் அவள். அவள் ஆறுதல் வார்த்தை சற்று இதமாகத்தான் இருந்தது.

''பிறகு நான் கூடையில் போட்டுக் கொண்டு கர்ப்பக்கிருகத்துள் இருந்த பலகை மீதேறி இடம் தெரிந்து வைத்திருந்த மேல் தளக்கல்லை அகற்றி மேலே வந்தேன். வந்த சுவடு தெரியாதது போல் அந்த கல்லையும் சரியாகப் பொருத்தி விட்டு கோபுரத்தில் உயரே ஏறி புளிய மரக்கொம்பை பிடித்து பக்கச்சுவற்றுக்குத் தாவி அங்கிருந்து வெளியே குதித்தபோதுதான் கவனம் பிசகியது. இடது கையில் கூடையிருந்ததால் வலது கையை கீழே பலமாக ஊன்றினேன்... கை பிசகி வீங்கிவிட்டது... அதன் பிறகு நான் அனுபவித்த அவஸ்தைகள்...''

மறுபடியும் காத்யாவின் கண்களில் கண்ணீர் பெருகி மேலேயிருந்து விழுந்த மழைத்தண்ணீருடன் கலந்தது.

''வீரரே! நான் மலைக்குடிசையில் பலமுறை இவற்றை திருப்பி விட நினைத்ததுண்டு. ஆனால், நிலைமையின் தீவிரம் கடுமையாக இருந்ததால் எனக்கு வழி தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகக் கழிந்தது. உங்களிடமே கொடுத்துவிட்டால் என்ன என்றுகூட தோன்றியது... ஆனால் உங்கள் கையில் இவற்றைப் பார்த்தால் நீங்கள்தான் கள்ளர் என்பதை உலகுக்கு சான்றாக வகை செய்யும். என்னால் நீங்கள் பட்ட துன்பங்கள் போதாதா...''

''காத்யா! கவலைப்படாதே! நீ எப்படி எடுத்து வந்தாயோ அதே வழியில் நானே சென்று இவற்றை வைத்து விடுகிறேன்..''

''முடியவே முடியாது! எடுத்தவள் நான்.. முறைப்படி திருப்பி வைப்பது என் கடமை... ஒருவேளை இந்த முயற்சியில் நான் இம்முறை சிக்கிக் கொண்டாலும் நல்லதுதான். அத்தனை பேர் மத்தியிலும் உண்மையை சொல்லி குருதேவ் என்னை முன்னிலைப் படுத்தி செய்த கள்ளத்தனத்தை சொல்லிவிடலாம்... பிறகு என்ன தண்டனையை அவர்கள் கொடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன்... ஆனால் நீங்கள் அவப்பெயர் கொண்டு அகப்படக்கூடாது... அப்படி அகப்படவும் விடமாட்டேன்... இது என்மேல் ஆணை!''

''நீ சொல்வது உன்னைப் பொறுத்தவரை சரியாக இருக்கலாம் காத்யா... ஆனால் இனியும் உன்னைக் கைவிட முடியாது. உனக்குக் கடைசி வரை துணையக இருப்போம்... நம் அனைவருக்கும் அந்த திருவேங்கடத்தான் துணை. உன் விருப்பப்படி உன் கையால் திருப்பி வைக்க எங்களால் ஆன உதவி செய்கிறோம்... வா...''

உறுதியாக சொல்லிவிட்டு மூவரும் மழையில் தொப்ப லாக நனைந்து கொண்டே கோயில் அருகே வந்தனர். மழை வலுப்பட்டுக் கொண்டே வந்ததால் மனித நடமாட்டமே இல்லை. இருந்தாலும் எச்சரிக்கையாகவே அடியெடுத்து கோயில் பின்னே இருக்கும் புளிய மரத்தடிக்கு வந்தனர்.

**கா**த்யாயினியின் நினைவலைகள் கலைந்தபோது இன்னமும் அந்த மேல்தளத்தில் அதிக சப்தம் வராமல் கல்லைச் சுற்றி சுரண்டிக் கொண்டுதான் இருந்தான். ஏற்கனவே ஒருமுறை நீக்கப்பட்டிருந்ததாலும் சில நாட்களாக காய்ந்த வெய்யிலினால் எஞ்சியிருந்த பசையும் காய்ந்து கிடந்தது. அதனால் மட்டுமல்லாமல் படுத்துகிடந்தவர் மீது மழை கல் கொண்டு அடிப்பது போல் கோரமாக வலிக்க பெய்ததால் சுரண்டல் வேலையில் தாமதம் ஏற்பட்டதுதான். ஆனாலும்கல் வெளியே வர ஆரம்பித்தவுடன் படுத்துக்கிடந்த அவந்திகா சற்று நிமிர்ந்து மழை நீரை அவள் மீது தாங்கிக் கொண்டாள். மெல்ல மெல்ல கிடைத்த வழியில் காத்யாயினியை படுத்து தொங்கிய வகையிலேயே கர்ப்பக்கிருகத்துள் இறக்கினான் அவன். காத்யாயினி இறங்கியதும் சங்கு சக்கரப் பையையும் அவள் பிடிக்கும் வகையில் மெல்லப் போட்டான். அவளும் சரியாகவே பிடித்துக் கொண்டதும் மேல் தளக்கல்லை சரியாக மூடினான் காளிங்கன். பிறகு அந்த மேல் தளத்திலேயே படுத்துக் கிடந்தனர்.

மழையும் மழையின் கோரமான சப்தமும் அவர்களுக்கு மிக நன்றாக உதவி செய்து கொண்டிருந்ததால் தம் மீது அம்புகளால் தாக்கியது போல பாய்ந்த நீர் அவர்களுக்கு வலிக்கவில்லைதான். அவர்கள் மனம் செவி முழுவதும் கல்லை அசைத்து சைகை செய்ய இருக்கும் காத்யாயினிக்காக காத்திருந்தது.

நேரம் சென்றதே தவிர உள்ளே குதித்தவள் தன் வேலையை முடித்துக் கொண்டு கல்லை கீழேயிருந்து அசைக்கக் காணோம். காளிங்கனும் அவந்திகாவும் கவலையில் வாடினர். கனமான மழை வேறு அவளை துன்புறுத்துவது சகியாமல் பேசினான் காளிங்கன்.

''அவந்தி! உன் முகம் மழை அடித்து வெகுவாக வீங்கி விட்டது. நீ ஏன் என்னோடு அவதிப்படுகிறாய்? நீ திரும்பிப் போய் புளிய மரத்தடியில் சென்று நின்று கொள்! எப்படியும் காத்யா சற்று நேரத்தில் கல்லை அசைக்கத்தான் வேண்டும்! பிறகு அவளையும் அழைத்துக் கொண்டு நாங்கள் அங்கு வந்து விடுகிறோம்!''

அவந்திகா மறுத்துவிட்டாள்.

''இந்த மழை என்னை வருத்துவதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்! நாம் காத்யாவைப் பற்றி கவலைப்படுவோம்.

ஏற்கனவே பல அவஸ்தைகள் அனுபவித்த அவளுக்காக காத்திருப்போம்.''

காளிங்கனுக்கு வேறு வழி தோன்றவில்லை. காத்யாயினி கல்லை அசைக்கும் வரை காத்திருக்க வேண்டியதுதான்... இந்தப் பெண்களே இப்படித்தான்... பிடிவாதம் பிடித்தால் பிடித்ததுதான்.''

காத்திருந்தனர் இருவரும். கடகடவென முடித்துக் கொண்டு வரவேண்டிய காத்யாயினி இன்னும் மேல்தள கல்லை அசைக்கவில்லை. இப்படியே இருந்துவிட்டால் நேரம் தாண்டிவிடும்... அனைவரும் உள்ளே வந்து விடுவார்கள்... ஐயோ காத்யாயினி! ஏன் இத்தனை நாழிகைகள் எடுத்துக் கொள்கிறாய்... கடவுளே! வெங்கடேசா! அவளை சீக்கிரம் அனுப்பி வை...

காளிங்கன் பதட்டப்பட்டது உண்மைதானே... இன்னும் சில நாழிகைகள்... விடியல் வரும் நேரம்... உள்ளே சென்ற காத்யாயினி ஏன் இன்னும் வரவில்லை... காளிங்கன் பொறுமை இழந்தான்.

''அவந்தி! நான் உள்ளே குனிந்து பார்க்கிறேன்! நான் எப்படி கல்லை எடுத்தேனோ அதே அளவு பக்கவாட்டாக வெளியே எடு!''

அவந்திகா அப்படியே செய்தாள். கிடைத்த வழியில் உள்ளே குனிந்து பார்த்தவன் அதிர்ந்து போனான்.

உள்ளறையில் தூங்காவிளக்கின் வெளிச்சத்தில் திருவேங்கடத்தான் பொற்பாதம் இருந்த தாமரைப் பீடத்தில் காத்யாயினி விழுந்து கிடந்தாள். அவள் கைகளில் ரத்தம் பீறிட்டு கொண்டிருந்தது.

கடவுளே! அவசரப்பட்டுவிட்டாளே இவள்... இந்த.... இப்படிப்பட்ட முடிவுக்காகவா உன்னைத் தேடி வந்தாள்... திருமலேசா... திருவேங்கடத்தானே... இது என்ன விபரீதம்?

முதன் முறையாக அந்த ஆண்மகன் கண்ணில் கண்ணீர் வந்தது.

# 35

# திருடன் சிரிக்கிறான்

ஒரு கை ஒடிந்து கிடக்க கீழே குதித்த கங்கைக்கரை இளவரசி முதலில் திருவேங்கடத்தானை பார்க்கவில்லை தான். அவள் மிக எச்சரிக்கையாக தொங்கியபடியே கீழே குதித்தவள் தன் மீது மிக மெதுவாக விழுந்த சங்கு சக்கர துணிப்பையையும் எச்சரிக்கையாகவே பிடித்துக் கொண்டாள். பிறகுதான் சட்டென அவனைப் பார்த்தாள்.

ஒரே ஒரு துங்கா விளக்கு அங்கே எரிய அழகாக சிரித்த முகத்துடன் காத்யாயினியை வரவேற்றானோ என்னவோ... அவன் முகத்தில் புன்னகை சற்று விரிந்து காணப்பட்டதைப் போல் உணர்ந்தாள் காத்யாயினி. அவன் கண்கள்... அந்த கண்கள் ஏதோ ஆகர்ஷண சக்தி கொண்டு தன்னை ஈர்ப்பதாக உணர்ந்தவள் மெல்ல மெல்ல அடியெடுத்து அவனை நோக்கி நடந்தாள். சற்று அருகே செல்ல செல்ல சொதசொதவென தரையில் தேங்கி நின்ற தண்ணீர் அவள் காலை புனிதப்படுத்த நடந்தவள் தன் கண்களை அந்த கரிய வண்ணனின் முகத்தில் இருந்து எடுக்காமலே நடந்தாள்.

இப்படித்தான் சென்ற முறையும் அவனை சந்தித்தாள். அவன் அப்போது வெறும் சிலையாக அவள் கண்களுக்கு காட்சி அளித்தானோ அல்லது அந்தக் கல் சிலையின் அழகை ரசிக்க முடியாமல் கடமை உணர்ச்சி தடுத்ததோ என்னவோ... எந்த அனுபவமும் இல்லாமல்தான் அப்போது அவனிடம் சென்று அவனுடைய பொருள்களை அபகரித்தாள். ஆனால், தற்போது ஏதோ விசித்திரம் நடப்பதாக அவள் உள்ளுணர்ச்சிக்குப் பட்டது. அவன் திருமுகம் மீது வைத்த விழியை வாங்கவில்லை அவள்.

''ஏன்... என்னையே பார்க்கிறாய்? திருடியான நான் மெய்யாகவே திருந்திவிட்டேனா என்று பார்க்கிறாயோ? நான் கொடுத்த வாக்கை காப்பாற்றி விட்டேன்... இதோ உன் சங்கையும் சக்கரத்தையும் கொண்டு வந்திருக்கிறேன்... வாங்கிக் கொள்... அப்பப்பா.... இத்தனை நாட்களாக எத்தனை விதமான தொல்லைகளை கொடுத்தாய்... இனியும்

என்னைத் தொல்லைப்படுத்தாதே... இதோ... நானே அன்று எடுத்தேன்... இன்று அந்த நானே திருப்பிக் கொடுக்கிறேன்... என்ன... சரிப்போயிற்றா?''

வாய் விட்டுப் பேசி அவனைக் கேள்வி கேட்டாள். அவள் கண்கள் அவன் உதடுகள் மீது பட்டது.

''என்ன சிரிக்கிறாய்?''

அந்தப் புன்னகை சற்று விரிந்தாற்போல் தோன்றியது அவளுக்கு.

'ஓஹோ! புரிந்துவிட்டது. நீதான் நேரடியாக பேச மாட்டாயே. இத்தனை நாட்களாக என் உள்ளத்துக்குள் புகுந்து கேள்வி மேல் கேள்வி கேட்டு தொல்லைப் படுத்தினாயே... இப்போது வாய் திறந்து பேசேன்... நீயும் நானும் தனிமையில் தானே இருக்கிறோம்! நாம் பேசிக் கொண்டதை யாரிடமும் சொல்ல மாட்டேன்...''

அழகாக சிரித்து கேட்டவளுக்கு அவனும் சிரித்துக் கொண்டே பேசாமல் இருப்பதாகத்தான் பட்டது. திருவேங் கடத்தான் அருகில் சென்று அவனைக் கண்ணாற பார்த்தாள். அவள் குரல் சற்று இளகியிருந்தது.

''கண்ணா! முன்னைப் போல் நீ இல்லை... சற்று இளைத்துப் போய் விட்டாய்... நான் அன்று பார்த்தபோது பருத்து இருந்தாய்... பாவம் நீ... உன் நண்பர்கள் இல்லாமல் வாடி விட்டாயோ? உண்மைதான். பிடித்தவர்களை விட்டு பிரிந்தால் வாடுவது இயற்கைதானே... நான் ஒரு பிச்சி... எனக்கு எங்கே இதெல்லாம் அப்போது தெரிந்தது...''

ஆதுரமாக கேட்டவள் அவன் இடையைச் சற்று மிருதுவாகத் தடவினாள். இடது உள்ளங்கையை இடையில் வைத்து வலது கையை கீழே காட்டி நின்ற திருவேங்கடமுடையானை தடவ தடவ ஏதோ ஒரு விதமான நிம்மதி தனக்குள் பிறப்பதையும் உணர்ந்தாள் அவள்.

''கண்ணா! ஆமாம்... நீ இளைத்துத்தான் போய் விட்டாய்! கவலைப் படாதே... இனி என்னால் எந்தத் தொல்லையும் உனக்கு இல்லை... உன் நண்பர்களை உன்னோடு பொருத்தி விட்டு ஓடி விடுகிறேன்...''

என்றவள் துணிப்பையை அவிழ்த்து முதலில் சங்கினை இடது கையால் எடுத்து அவனிடம் வந்தாள்.



''வேங்கடவா... இதோ பார்... என் வலது கை சரியில்லை... என் இடது கையால்தான் உனக்குப் பொருத்தப் போகிறேன்... தயவு செய்து தப்பாக எடுத்துக் கொள்ளாதே...'' என்றவள் முதலில் திருவேங்கடவன் இடது தோளில் சற்று துடைத்து விட்டு அங்கே சங்கினை செருக முயன்றாள். வலது கை பூரணமாக ஒத்துழைக்க மறுத்ததால் ஒரு கையால் சரியாக பொருத்த முடியவில்லைதான்.

சுற்றுமுற்றும் பார்த்தாள். அங்கே மரமுக்காலி ஒன்று கிடப்பதை கண்டவள் அந்த முக்காலியை அவன் முன் வைத்து அதில் ஏறி அவன் தோளில் சங்கினைப் பொறுத்த முயன்றாள். ஆனால் அப்படி பொருத்தமுடியவில்லை. தோளில் பொருத்த சிறிய குழாய் போல் ஒன்று செதுக்கப்பட்டு திருவேங்கடத்தான் தோளில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. முதன் முதலில் இவைகளைக் களவாட வந்த போது சாதாரணமாக சட்டென பிடுங்கி வெளியே எடுத்ததும் அவள் நினைவுக்கு வந்தது. ''ச்சே! மாபெரும் பாதகி... பாவி நான்... ஈவு இரக்கம் இல்லாமால் செயல்பட்டுவிட்டேனே...'' வாய்விட்டு சொல்லி தன்னைக் கடிந்து கொண்டாள்... இப்போது எப்படி பொருத்துவது...

என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. சங்கையும் சக்கரத்தையும் அப்படியே போட்டுவிட்டு போய் விடுவோமா என்று ஒரு கணம் யோசித்தாள். மறுகணம் தன்னையே கடிந்து கொள்ளவும் செய்தாள்...

''ஏன்தான் என் புத்தி இப்படிப் போகிறதோ... கண்ணா! இதை உன் மீது பொருத்தி விட்டுத்தான் போவேன்... நீ கவலைப் படாதே... என்னால் மிகப் பெரிய தவறு நேர்ந்து விட்டது... அதை நான்தானே திருத்தவேண்டும்...''

வாய் விட்டுப் பேசி ஆறுதல் சொன்னாள். மறுபடியும் இடது கையால் சங்கினை அவன் தோள் பொருத்தியில் வைத்தாள். வலியால் அவதிப்பட்டாலும் கஷ்டப்பட்டு வலது கையை தூக்கி சங்கின் அடிப்பகுதியையும் அவன் தோள் பொருத்தியும் ஒரு சேர பிடித்தவள் இடது கையால் சங்கின் மேல் பகுதியை கையை வைத்து அழுத்தினாள்.

அவள் வலது கைதான் கோரமாக வலித்ததே தவிர சங்கு அங்கு நிற்காமல் ஆடி கீழே விழப் பார்த்தது. தன் கையை மட்டும் எடுத்துவிட்டால் சங்கு கீழே விழுந்தே விடும்

என்பதும் புரிந்தது. தன் அருகேயே நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்த வேங்கடவனைக் கேட்டாள்.

''இப்படியே எத்தனை நேரம்தான் நிற்கமுடியும்? மேலே பாவம் என் காளிங்கனும் அவந்திகாவும் காத்திருக்கிறார்கள்... ஐயோ... கண்ணா! ஏதாவது வழி சொல்லேன்... என்னையே உற்றுப் பார்த்தால் எப்படி? உன் தோளில் சங்காரைப் பொறுத்த வேண்டாமா? நேரம் கடந்து போகிறதே...''

கெஞ்சினாள் அவள். அவன் அதற்கும் சிரிப்பதாகத்தான் பட்டது. அவளுக்கோ கோபம் வந்தது.

''புரிந்துவிட்டது! நீதானே பிடுங்கினாய்... நீயே வைத்து விடு...' என்கிறாயோ...''

என்று கேட்டவள் மறுபடியும் தன் வலது கை வலிக்க சங்கின் அடிப்பகுதி பிடித்து இடது கையால் சங்கை பொருத்திப் பார்த்தாள். இப்படித்தான் மதியம் அந்த மருத்துவச்சி கூட சாமுண்டர்யனின் உடைந்த கையை பொருத்தி பொருத்தி சோதனை செய்தாள்... கண்ணனிடம் மறுபடி பேசினாள்.

''ஆமாம்! அந்த சாமுண்டர்யன் ஒடிந்த கையை ஒட்டவைக்க அந்த மருத்துவச்சி ஆட்டு ரத்தமும் சாம்பலையும் பூசி மெழுகி மூலிகைகளால் கட்டினாள். ஆனால் அதெற்கெல்லாம் எங்கே போவது? இதோ பார் கண்ணா! அவையெல்லாம் செய்ய வழியும் இல்லை... முக்கியமாக நேரமும் இல்லை... திருந்தி வந்த என்னை இப்படி துன்புறுத்தலாமா கண்ணா? இது என்ன நியாயம்... தயவு செய்து பொருத்திக் கொள்ளேன்...''

கெஞ்சலாக வந்த அந்த வார்த்தைகள் திருவேங்கடமுடையானை கொஞ்சமும் அசைக்கவில்லை. காத்யாயினிக்கோ கோபம் ஏராளமாக வந்தது.

''ஆமாம்... நான் ஒரு முட்டாள்... உணர்ச்சிகளுக்கு அடிமையாகி விட்ட முட்டாள்... நீ வெறும் கல்... நீ வெறும் சிலைதான். நீ என் உள்ளத்தில் வந்ததெல்லாம் வெறும் பொய்... மாயை.. உனக்கு நல்லது செய்வோம் என்று வந்தேனே... வேண்டும்... நன்றாக வேண்டும் எனக்கு...''

என்று சொல்லிவிட்டு கோபத்துடன் முக்காலியை விட்டு சங்கோடு இறங்கியவள் அந்த முக்காலியிலேயே அமர்ந்தாள்.



''ஐயோ... நேரம் போகின்றதே... மூன்றாம் ஜாமம் முடிந்தால் கதவு திறந்து உள்ளே வருவார்களே... அங்கே மேலே காளிங்கர் வேறு பொறுமையோடு காத்திருக்கிறார். இதோ பார் கண்ணா! பிடிவாதம் வேண்டாம்... எனக்காக என்று வேண்டாம்... நான் பாவி... பாதகி.... கள்ளம் படைத்தவள்... உன்னை நம்பாதவள்... ஆனால், உன்னையே நம்பி மேலே காத்திருக்கிறாரே காளிங்கன்... அவருக்காகவாவது நீ கருணை காட்டவேண்டாமா? கண்ணா... கடவுளே... உன்னையே ஆண்டாள் போல் சரணடைந்து காலில் விழுந்து கேட்கின்றேன்... தயவு செய்து ஏற்றுக் கொள்... இந்தச் சங்கு சக்கரங்கள் உன் தோளில் பொருந்துவது எப்படி... வழி சொல் கண்ணா... வழி சொல்...!''

காத்யாயினியின் கண்களில் கண்ணீர் மழை பொழிய அவள் மடி மீது சங்கு கிடக்க இடது கையால் அவன் வலது கையைப் பிடித்து உலுக்கினாள். அவள் நெஞ்சம் ஏறி இறங்கியது. அபயஹஸ்தமான அவன் வலது கையோ கீழே காட்டியது... அந்த கைக்கு கீழே விபூதி சம்படமும் அதனுள் பக்தர் வைத்திருந்த விபூதியும்தான் இருந்தது.

''ஆஹா! சாம்பல்... சாம்பல்... கண்ணா... காப்பாற்றி விட்டாய்... காப்பாற்றி விட்டாய்...

உணர்ச்சிவசப்பட்டு திடீரென கூவினாள். அவளையறியாமல் அவள் வலது கை அந்த விபூதியை கை நிறைய அள்ளி எடுத்தது. சங்கின் அடிப்பகுதிக்கும் அவன் தோளில் உள்ள பொருத்திக்கும் பூசி அங்கே சங்கினை நிற்க வைத்தாள். அப்படியும் நிற்கவில்லையென்றாலும் கலங்கவில்லை இம்முறை. வேறு வேலை செய்தாள். சங்கின் அடிப்பகுதிக்குப் பூசிய விபூதியை அவன் தோளில் கிடந்த பொருத்தியில் புகுத்தினாள். விபூதி அவன் மேனிக்குள் சென்று விட்டதைப். போல் உள்ளே போய்விட்டது. விபூதி சட்டத்தையே கையிலெடுத்து அந்த பொருத்தியின் மூலம் உள்ளே புகுத்தினாள். பொருத்தி வழியும் வரை விபூதியைக் கொட்டியவள் கண்களில் ஏதோ புதிய ஒளி கொண்டு ''ஆட்டு ரத்தம்... ஆட்டு ரத்தம்... எதற்காக ஆடு... ஆட்டைவிட பெரிய பிறவிமனிதன்... மனிதனை விட மிகப் பெரியவன் என் கண்ணன்... மனிதனுக்கு ஆட்டு ரத்தம் என்றால்... என் கண்ணனுக்கு... ரத்தம்... நான் தருகிறேன்...''

உணர்ச்சிகரமாக சொன்னவள் தன் இடது கையை ஓங்கி கரடுமுரடான பக்கச் சுவற்றில் குத்திக் கொண்டாள். புசு புசுவென ரத்தம் பீறிட்டு வெளியே வர தன் இடது கை ரத்தத்தால் சங்கின் அடிப்பகுதிக்கும் தோள் பொருத்திக்கும் பூசினாள். விபூதியுடன் ரத்தம் ஒருசேர சங்கினை தோளோடு கீழே அழுத்தினாள். பிறகு கையை எடுத்தாள்.

என்ன ஆச்சரியம்... சங்கார் திருவேங்கடத்தான் தோளோடு திடமாக நின்றார்... ஆடவில்லை... அசையவில்லை... அசைத்துப் பார்த்தாலும் ஆடவில்லை.

''பச்சிலை... பச்சிலை..'' என்று கேட்டுக் கொண்டவள் கீழே கிடந்த துளசி மாலைகளுள் ஒன்றை எடுத்தாள். இரு கை கொண்டு சக்கையாகப் பிழிந்தாள். சங்கையும் தோளையும் சுற்றி காப்பிட்டாள். மேலும் திடமாக நின்று போனது சங்கு. அவள் கண்களிலோ கண்ணீர் அருவியாக கொட்டியது.

''கண்ணா! கரிய வண்ணா! இப்போது பார்... எத்தனை அழகாக உன் தோளில் ஏறிக் கொண்டு விட்டார் சங்கார். ஆண்டாள் பாடியது எத்தனை பொருத்தம்... 'செங்கட்கருமேனி வாசுதேவனுடைய அங்கத்தலம் ஏறி அன்ன வாசம் செய்யும் சங்கரையா!' இரு...இரு... சக்கரத்தாரையும் அப்படியே பொறுத்துகிறேன்!''

வலது தோளில் அமரத்துடிக்கும் வலந்தாங்கு சக்கரத்தார்க்கும் விபூதியை முழுக்கவும் கொட்டி செய்தாள். தன் ரத்தத்தையும் துளசி சாற்றையும் கலந்து பூசி மெழுகி திருவேங்கடவனின் வலத்தோளில் பொருத்தினாள். சக்கரத்தாரும் திருப்தியுடன் ஆடாமல் அசையாமல் அமர்ந்து விட்டார்.

அவளால் தாங்க முடியவில்லை.

''கண்ணா! எங்களை காப்பாற்றிவிட்டாய்! தெய்வமே... போதும்... போதும்... இது போதும்!...''

என்றவள் மயக்கம் மெல்லவர அவன் அடிகளில் விழுந்தாள். ''தாமரை மலர் பீடத்தில் எத்தனை வருடங்களாக கால் கடுக்க நின்றாயோ... உன் பாதங்கள் வலிக்காதோ...'' என்று சொல்லி அவன் பாதங்களைப் பற்றி பிடித்துவிட்டாள். மயக்கம் முழுவதும் அவளைத் தழுவ அவன் பாதங்களை பற்றியபடியே அவள் தலையும் அவன் பாதங்களில் விழுந்தது.



இந்த சமயத்தில்தான் காளிங்கனும் உள்ளே இறங்கினான். அவனாலும் முதலில் திருவேங்கடத்தானை பார்க்கமுடியவில்லைதான். அவனை அறியாமல் அவன் பார்வை கீழே தண்ணீர் முட்ட திருவேங்கடத்தான் திருப்பாதங்களில் தலைவைத்து விழுந்து கிடந்தவளிடம் சென்றது. உடனடியாக அங்கு சென்று அவளை தொட்டுப் பார்த்தான். மூச்சு சீராக வந்தது. மயக்கமடைந்த அவள் முகம் மீது தண்ணீர் தெளித்து விட்டு திருவேங்கடத்தான் திருப்பாதத்தை தொட்டு வணங்கி பாதாதி கேசமாக ஆண்டவனை தரிசித்தான். சங்கும் சக்கரமும் அவன் இருதோள்களிலும் நிலையாக நிற்க திருவேங்கடமுடையானை ஆனந்தமாக தரிசித்தான்.

காத்யாயினி முகத்தில் தெளிவு வர தன்னைத் தாங்கிக் கொண்டிருந்த காளிங்கன் முகத்தில் கண் விழித்தாள். அவள் முகம் பூரிப்பானது.

''வீரரே! என் கண்ணனைப் பாருங்கள்! சங்காரை அவன் ஏற்றுக் கொண்டுவிட்டான். சாமுண்டர்யன் கை போனதும் இவனால்தான்... அவன் கை ஒட்டப்பட்டதும் இவனால்தான்... இதோ இன்று அதே முறையில் சங்கு சக்கரங்களை வாங்கிக் கொண்டான். என் கண்ணன்... பிரத்யட்ச தெய்வம் என் கண்ணன்... எப்படி சிரிக்கிறான் பாருங்களேன்... எதுவுமே தெரியாதவன் போல... திருடன்... திருடன்... அவன்தான் எனக்கு சங்கு சக்கரத்தையும் கொடுத்தான். இன்று அவனே எடுத்துக் கொண்டான்...''

காத்யாயினியை ஆச்சரியமாகப் பார்த்தான் காளிங்கன்.

''என்ன சொல்கிறாய் காத்யா? சாமுண்டர்யன் கைக்கும் சங்குக்கும் என்ன சம்பந்தம்?''

காத்யாயினி சற்று திக்கி திக்கித்தான் நடந்ததையெல்லாம் சொன்னாள். காளிங்கன் கண்களிலும் ஏராளமாக கண்ணீர் மழை.

''ஆஹா! உடையவர் கேட்ட தீர்ப்பு கிடைத்து விட்டது... அவன் மேனியில் வாங்கிக் கொண்டது விபூதியும் துளசியுமா? வெங்கடேசா! எத்தனை பேருக்கு விடை கொடுத்து விட்டாய்... காத்யா...திருவேங்கடமுடையான் உன்னையும் என்னையும் ஒரு பொருட்டாய் மதித்து இந்த உலகத்தோர் அனைவருக்கும் விடை கொடுத்து விட்டான்...''

உணர்ச்சிகரமாய் சொன்னவன் கீழே கிடந்த ஒரே ஒரு துளசி மாலையையும் அவன் மேனிக்கு சூட்டி வணங்கினான். காத்யாயினியோ பரவசப்பட்டு பேசினாள்.

''அப்படியே என் உள்ளத்தில் தோன்றிய என் கண்ணன் எதிரே நிற்கின்றான் வீரரே... அவன் கண்ணைப் பாருங்கள்... அவன் சிரிப்பைப் பாருங்கள்... ஐயோ... என் கண்ணே அவன் மீது பட்டுவிடும் போல இருக்கிறதே...''

அவன் முகத்தை இரண்டு கைகளாலும் தடவி கைவிரல்களை சொடுக்கி தன் கண் திருஷ்டியை அவளே கழித்தாள்.

''ஆமாம் காத்யா! உனக்கு இவன் கண்ணன்... நம் அவந்திக்கு இவன் சிவன்... எனக்கும் உலகத்தோர்க்கும் இவன் திருவேங்கடமுடையான். சர்வமும் இவனே... சகலமும் இவனே...''

அவன் பாதங்களில் இருவரும் விழுந்தார்கள். சங்கு சக்கரம் வைத்திருந்த பழைய துணி மழையில் நனைந்து ஈரமாக இருந்ததால் அந்த துணியாலேயே சங்கு சக்கரத்தையும் அவன் தோள்கள் இரண்டையும் நன்றாக துடைத்தான். கீழே தண்ணீரில் மிதந்த துளசி சக்கைகளையும் இலைகளையும் எடுத்து துணிப்பையில் கட்டினான். பிறகு அவளையும் பின் நடத்தி மேல் தளத்துக் கல்லை அசைக்க மேலிருந்து அவந்திகா தூக்கினாள். திருவேங்கடமுடையானையே பார்த்துக் கொண்டிருந்த காத்யாயினியை தூக்கி மேலே ஏற்றினான். பிறகு மரமுக்காலியை எடுத்து ஓரத்தில் வைத்தபடி அவனும் மேலே ஏறப் போனான். ஏறுவதற்கு முன்பு ஒரு முறை திருவேங்கடத்தானைப் பார்த்தான். அவன் புன்சிரிப்பு மாறவே இல்லை. அவன் கண் பார்வையும் அவன் மீது இருந்தது. அவனைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்... ஆனால் நேரம் தாண்டுகிறது.

அவன் மேல் தளம் ஏறி கல்லை சரியாக பழையபடி வைப்பதற்கும் மூன்றாவது ஜாமம் முடிவடைவதை தெரியப்படுத்தும் திருமணி மண்டபத்தின் காண்டாமணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

# 36

# அவன் - அவன்தான்

பில்வணனும் மற்றவரைப் போல இரவெல்லாம் தூங்கவில்லை. மழை பெய்வது அவன் திட்டத்துக்கு நல்லதா கெடுதலா என்று அவன் யோசித்திருந்தாலும் மழையும் வெய்யிலும் இயற்கையின் நியதி என்பதை ஒப்புக்கொண்டவன். அதனால் அந்த அடாத மழையிலும் மனிதன் சரியாக சிந்தித்து போடப்பட்ட திட்டங்கள் சீராக செயல்பட்டே தீரவேண்டும் என நினைத்துதான் தன் ஆட்களையும் செயல் நிலையிலேயே வைத்திருந்தான். ஆனால் அவர்களையும் அதிகம் நம்பக்கூடாது என்றுதான் தானே முன்னின்று சென்று தன் திட்டங்களில் தேவைக்கேற்ப சிற்சில மாற்றங்கள் செய்துவிட்டு தன் இருப்பிடம் வந்தான். தான் செய்திருந்த செயல்கள் இதுவரை திருப்திகரமாக நடக்கிறது... இனியும் நடக்கும்... நடக்க வேண்டும்...

ஆனாலும் பில்வணனுக்கு ராத்தூக்கம் இல்லைதான்... மூன்றாம் ஜாம முடிவில் அதிகாலைப் பொழுது ஆரம்பமாகும்போது வேங்கடத்தான் சன்னிதிக் கதவுகள் காப்பு நீக்கி திறக்கப்படும்போது அங்கு அந்த சிலையருகே துளசி மாலைகளும் விபூதி சம்படங்களும் அப்படியே இருக்கப் போகின்றன. அப்படிப்பட்ட நிலையை கண்குளிரக் காண வேண்டும்... சிலை சிலைதான். மனிதனால் வடிக்கப் பட்டது... மனிதனால் அழகூட்டப்பட்டது... மனிதனால் தெய்வம் என வர்ணிக்கப்பட்டது. அப்படிப்பட்ட மனிதனுக்குத்தான் சக்தி உண்டே தவிர சிலைக்கு சக்தி இல்லை. சக்தி உள்ள மனிதன் தான் வணங்கப்படவேண்டிய தெய்வம். சக்தியில்லாத சிலைகள் ஒதுக்கப்பட வேண்டியவை. மிஞ்சிப் போனால் கலையாக ரசிக்கப்பட வேண்டியவை.

மனதில் எண்ண மூட்டைகளை சுமந்து கொண்டுதான் அந்த இரவுப் பொழுதைக் கழித்தான். மூன்றாம் ஜாமம் வந்து விட்டது என்பதை திருமணி மண்டப மணியோசை அனைவருக்கும் தெரிவித்தபோது பில்வணன் அவர்கள் முன்னிலையில் இருந்தான்.

மழை சற்று ஓய ஆரம்பித்தது. இரவில் அடித்த அளவு தற்சமயம் இல்லை என்பதை அறிந்து கொண்டவன் கருடன் வாயில் கதவருகே நின்று உள்ளே இன்னமும் எரிந்து கொண்டிருந்த தூங்கா விளக்கு மூலம் உள்ளே பார்த்தான் கர்ப்பக்கிருகக் தகவுகள் இரவு பார்த்த வகையிலேயே இருப்பதையும் உணர்ந்தவன் பூட்டிலுள்ள காப்புகளை அகற்றுமாறு சாலவைத் தலைவருக்கு உத்தரவிட்டு விட்டு தான் மட்டும் பக்கவாட்டில் நின்று கொண்டான்.

சாலவைத் தலைவரும் அர்ச்சகர்களும் முந்தையதினம் இரவில் வந்த சைவர்களும் வைணவர்களும் புடைசூழ பூட்டுக் காப்பினை உடைத்து கருடத்துவாரம் உள்ளே நுழைந்தனர். பிறகு கர்ப்பக்கிருகக் கதவுகளின் பூட்டும் அவ்வாறே அகற்றப்பட்டது. ஆவலுடன் கதவைத் திறந்த சாலவைத் தலைவர் உள்ளே பார்த்து திடீரென 'பெருமாளே... கோவிந்தா... கோவிந்தா...' எனறு கூவிவிட்டு அந்தத் தாழ்வரையிலேயே நெடுஞ்சாணிடையாக விழுந்தார். அவர் அலறலைக் கேட்டதும் பில்வணனும் அவன் தோழர்களும் அங்கே ஓடினார்கள். ஆச்சாரியார்களும் பக்தர்களும்கூட பதட்டத்தைக்காண்பித்து உள்ளே விரைந்தார்கள்.

பில்வணன் பிரமிப்பால் அங்கேயே நின்றான். ஆனால், உள்ளே பார்த்த ஆச்சார்யர்களும் பக்தர்களும் வேகமாக ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டும் வழியில் உள்ள பில்வணனை உள்ளே தள்ளிக் கொண்டும் நுழைந்தவர்கள் 'கோவிந்தா... பெருமாளே... சங்கு சக்கர ரூபனே... திருவேங்கடத்தானே' என்று பெருங்குரலால் கூவினர்.

பில்வணனின் பிரமிப்பு அதிகமாகியது. சிலையின் வலது தோளில் சக்கரமும் இடது தோளில் சங்கும் மார்பில் துளசி மாலையும் துங்கா விளக்கு ஜோதியின் வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிய 'இது எப்படி சாத்தியம்?' என தனக்குள் கேட்டுக் கொண்டான்.

உள்ளே முதலில் சென்ற ஆச்சாரியார்களோ உள்ளே வந்த அனைவரையும் கைகாட்டி அமைதிப்படுத்திவிட்டு பிறகு உரக்கப் பேசினார்கள்.

''பெருமாள் நமக்கெல்லாம் பாடம் கற்பித்துவிட்டான். சங்கும் சக்கரமும் யதார்த்த நிலைக்குத் தருவித்துக் கொண்டான். இதோ அவன் மார்பில் துளசி மாலை. விபூதி



சம்படத்தில் விபூதி துளிக் கூட இல்லை. துளசிமாலைகளில் கூட ஒன்றைத்தான் தன் மேனியில் சூடிக் கொண்டுள்ளான். பக்த சிகாமணிகளே! நீங்கள் அனைவரும் தரிசித்து விட்டு மற்றவர்களுக்கும் திருவேங்கடத்தானை தரிசிக்க வழிவிடுங்கள்! வெளியே ஏராளமான பக்தர் கூட்டம் காத்திருக்கிறது. இந்த அலங்காரத்தில் அப்படியே இருப்பான். பக்தர்கள் எல்லோரும் திருவேங்கடமுடையானை தரிசிக்க வழிவிடுங்கள்... நகருங்கள்... நகருங்கள்...''

நாராசமாய் பில்வணன் காதில் ஒலித்த அவர்கள் வார்த்தைகள் அவன் வயிற்றில் தீச்சட்டியை உருவாக்கின. தான் கொடுத்த திட்டப்படி களவாடிய காத்யாயினி தன்னை ஏமாற்றிவிட்டாளா... தன்னை மோசம் செய்து விட்டாளா? 'ஆஹா! அவளை பரிபூரணமாக நம்பித்தானே அந்த இரவில் அவள் எப்படி களவு செய்தாள் என்று அவளையே கேட்கவில்லை. திருவேங்கடத்தான் சிலைதான்... அவன் தெய்வமில்லை. தான் ஏமாந்தது திருவேங்கடத்தானிடம் இல்லை... காத்யாயினிடம்தான்... பெண்ணே! அன்று எப்படி இங்கே நுழைந்தாய்? இன்று பூட்டிய அறைக்குள் எப்படி வந்தாய்?'

அப்போதுதான் அவன் முன் மண்டை மீது தண்ணீர்த் திவலை ஒன்று 'தம்' மென்று விழுந்தது. சில்லென்று விழுந்த அந்தத் தண்ணீரை தன்னையறியாமல் தடவியவன் திடீரென மேலே பார்த்தான். தலைக்கு மேல் இருந்த கூரைச் சுவர் பகுதியில் ஆங்காங்கே ஒழுகுவது போல் தண்ணீர்த் திவலைகள்... கொஞ்சம் கொஞ்சமாக ஒழுகி ஒவ்வொரு துளியாக அவன் தலையில்...

'அப்படியானால்... அந்தக் கல்லை தூக்கமுடியுமா? தூக்கினால் மேல்தளத்துக்குப் போகமுடியும்... மேல் தளத்தில் இருந்து கோபுரம்... கோபுரம் மீது சாய்ந்த புளிய மரத்துக் கிளையில் குரங்கு போலத் தாவி வெளியேற முடியும்!... ஆஹா! அப்படித்தான் முதன் முதலில் காத்யாயினி களவாடிவிட்டு வெளி வந்துள்ளாள். அதே வழியில் உள்ளே நுழைந்து திருப்பிக் கொடுத்ததோடு துளசி மாலையையும் சூட்டி விட்டு ஓடிவிட்டாள்.

இதை வெளியே இந்த மூடர்களிடம் சொன்னால் கேட்பார்களா? நம்புவார்களா? காத்யாயினி யார் என்று கேட்பார்கள். களவாடியது ஏன் என்ற கேள்வி வரும்...

முடிவில் பதில் கிடைக்கும்போது அது நமக்கு மிகப்பெரிய பாதகத்தைத் தரும்... வெளியே விஷயம் தெரிந்தால் மக்களுக்கு முதல் பலி இந்த பில்வண குருதேவ்... பிறகு விக்கிலன்... அதன் பின் அந்த அதிராசேந்திரன் பயத்தாலேயே இறந்து விடுவான்... ரஜிகன் எளிதாக ராஜ்ஜியத்தை கைகொள்வான்... தேவையா...

பில்வணன் முதன்முதலாக கத்தியின்றி ரத்தமின்றி மிகப் பெரிய தோல்வியை சந்தித்துவிட்டதாகக் கூறிக் கொண்டான். 'ஆம் அதுதான் உண்மை... இந்த உண்மையை நாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்... மிகக் கசப்பான உண்மை...'

முன்னே செல்லாமல் பின்னால் வந்து கோயிலைவிட்டு வெளியேறி வந்தவன் முகம் வெளிற காத்திருந்தான். குதிரைகள் வந்தவுடன் வீரர்களுடன் ஏறியவன் ஏதும் பேசாமல் கீழே இறங்கத் தொடங்கினான்.

பில்வணன் மலையை விட்டு எப்போது அகல்வான் என்று மழையும் எதிர்பார்த்திருந்ததோ என்னவோ அவன் போனவுடன் முன்னிரவிலிருந்து பெய்த மழையும் நின்று போனது.

அடுத்த சில நாழிகைகளில் திருமலையே மிகப் பரபரப்பானது. உடையவர் ஒரே இரவில் மாபெரும் சக்தியாக உணரப்பட்டார். 'உடையவர் வாழ்க... உடையவர் திருப்பாதங்களே சரணம்' என்ற கோஷங்கள் எங்கும் வலுப்பட்டன. திருவேங்கடத்தான் உடையவரின் கேள்விக்கு பதில் சொல்லிவிட்டான். திருமால்தான் அவன். சங்கு சக்கரத்தையும் மாயமாக தருவித்துக் கொண்டான்... உடையவர் மகாபுருஷர்... ஆதிசேஷன் அவதாரம்! ஆதிசேஷன் சொல்லுக்கு வேங்கடவன் கட்டுப்பட்டுள்ளான்!

திருமலையெங்கும் இதே பேச்சுத்தான்.

இந்தப் பேச்சுக்களுக்கும் புகழாரங்களுக்கும் நாயகரான ராமானுஜர் தன் பரிவாரங்களுடன் முதன்முதலாக திருவேங் கடமுடையான் சன்னிதிக்குள் நுழைந்தார். ஆசிரியரும் மாருதியாண்டானும் திருமலை நம்பிகள் மட்டும் பின் தொடர உடையவர் திருவேங்கடத்தான் திருஉருவம் முன் வந்தார். மற்றவர்கள் சற்று பின்னாலேயே நின்றனர். மிளகாழ்வானோ வழக்கப்படி முண்டியடித்து கூட்டத்தின் முதல் வரிசையில் நின்றுகொண்டான்.



ஆசிரியர் அபரிமித ஆச்சரியத்தில் திருவேங்கடத்தானை முக தரிசனம் செய்தார். அவருக்கும் புரிந்தது சில. புரியாதது பல. இருந்தாலும் அனைவரின் கேள்விகளுக்கும் விடை கொடுத்த அந்த நெடுமாலைக் காண காண அவர் கண்கள் பனித்தன. மாருதியாண்டானோ இந்த உலகத்திலேயே இல்லை. தன் இரண்டு கண்களும் ஒன்றையொன்று பார்த்துக் கொள்ளும் விசித்திரத்தை உணர்ந்தார்.

உடையவர் திருவேங்கடமுடையானை பாதாதி கேசமாக தரிசித்து நீரில் நடந்து அவன் அருகே சென்றார். அவர் சிரம் திருவேங்கடத்தானின் பாதம் மீது பணிந்தது. பிறகு கீழே கிடந்த நீரை தன் தலையில் தெளித்துக் கொண்டதோடு மற்றவர் தலையிலும் தெளித்தார். அவர் கைகள் அன்போடு அவனைத் தடவின. அவர் திருக்கைகள் சங்கின் அருகே சென்றபோது அங்கே திருவேங்கடத்தான் தோள் பகுதியில் வெள்ளைத் துகள்கள் சில இருந்ததை தன் கையாலேயே துடைத்தார். பிறகு சங்காரைத் தொட்டு தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். ஒற்றிக் கொள்ளும்போது தன் கையைப்பார்த்தார். என்ன புரிந்ததோ திடீரென நம்மாழ்வாரின் தமிழ் வேதப் பாடல் அவர் வாயில் மிக மெல்லமாக வந்தது.

**''ஒளி மணிவண்ணன் என்கோ... ஒருவன் என்று**
**ஏத்தநின்ற**
**நளிர்மதிச் சடையன் என்கோ... நான்முகன்**
**என்கோ...''**

உடையவரின் கண்கள் மூடி பரவசநிலையில் இருந்தன.

மிகமெல்லியதாக வந்தாலும் துல்லியமாக கேட்ட ஆசிரியர் இப்படிப்பட்ட சமயத்தில் ஏன் இந்தப் பாடலை உடையவர் பாடவேண்டும் என்று தனக்குள் கேட்டுக் கொண்டாலும் ஒன்றே ஒன்று மட்டும் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. திருவேங்கடமுடையான் அவன் அவன்தான்.

## பின்னால் நடந்த விளைவுகள் சில

திருமலையில் பிரசாதமாக அம்மங்காதேவிக்குத் திரும்பக் கிடைத்த பெரியராஜாவின் ஓலை வாசகங்கள் இந்தச்சம்பவம் நடந்த ஆறுமாதங்களில் உண்மையாகவே வடிவம் ஆக்கப் பட்டது. சாளுக்கியர் தயவில் அரசாண்ட அதிராசேந்திரன் அதிருஷ்டவசமாகவோ துரதிருஷ்டவசமாகவோ

தொண்டையில் புற்று நோய் ஏற்பட்டு இயற்கை மரணம் அடைய பெரிய ராஜேந்திரரின் அந்த ஒனையையே தெய்வத்தின் ஆணையாகக் கொண்டு அம்மங்காதேவியின் மகனான அபயன் ராஜேந்திரன் குலோத்துங்கன் என்ற பட்டப் பெயரோடு சோழ ராஜ மகுடம் சூட்டிக் கொண்டான். ஆசிரியரின் எண்ணப்படி அதர்ம ராஜ்ஜியம் அகற்றப்பட்டு தர்மத்தின் செங்கோல் சோழ தேசமெங்கும் பரந்து விரித்து செழித்தது.

ஆசிரியர் அகோரநாதர் நாளடைவில் அகோர சிவாச் சாரியார் என்று புகழ் பெற்று சைவ மடங்களையும் பாடசாலைகளையும் நிறுவினார். அடுத்த ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு புதுப் பொலிவு பெற்று எழப்போகும் மெய்கண்டாரின் சைவசிந்தாந்தக் கொள்கைக்கு அகோரசிவாச்சாரியாரின் 'சைவ பத்ததி' ஒரு காரணமாகவும் இருந்தது. ஆசிரியர் பதினைந்து சைவ மடங்களை நிறுவியதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன (சைவ ஆதீனங்கள் – ஆசிரியர் ஊரன் அடிகள் – பக்கம் 7 & 8).

பில்வண குருதேவ் திருமலையில் பரம தோல்வியை சந்தித்தது உண்மை என்றாலும் அவன் சோர்ந்து விடவில்லை. அவனுக்குக் கிடைத்த தோல்வி அவனை அண்டி இருந்தவர்களால் கிடைத்ததே தவிர மற்றவர்களால் குறிப்பாக தெய்வம் என்கிற ஒன்றினால் தான் தோற்கடிக்கப்படவில்லை என்று கூறிக் கொண்டான். ஆனால், திருமலையில் அவன் பெற்ற தோல்வியினால் வைணவர்களை வெகுவாக வதைத்தான். குறிப்பாக உடையவரை சற்று அதிகமாகவே துன்புறுத்தினான். காஞ்சியில் அதிராசேந்திரன் முன்னிலையில் ராமானுஜரை முன்னிறுத்தி அவமானம் செய்ய திட்டமிட்டபோது ராமானுஜரால் சோழநாட்டை விட்டே வெளியேற வேண்டிய சூழ்நிலையை தவிர்க்க முடியவில்லை. ஆனாலும், தெய்வ சங்கல்பத்தினால் அதிராஜேந்திரன் மரணமடைய, குலோத்துங்கன் சோழ ஆட்சி பீடம் ஏறியதும் ராமானுஜரை திருவரங்கம் வரவழைத்து திருவரங்கத்தையும் வைணவக் கோயில்களின் பொறுப்பினையும் உடையவருக்கே குலோத்துங்கன் சாசனம் செய்து ஒப்புவித்ததையும் வைணவ குரு பரம்பரையும் திருவரங்கம் 'கோயில் ஒழுகு'ம் ஒப்புக் கொள்கின்றன.



மிளகானுக்குப் பரம ஆனந்தம் திருமலையில் கிடைத்து விட்டபடியால் திருமலையை விட்டு விலக மனம் வரவில்லை. திருவேங்கடமுடையானை அடிக்கடி சேவித்துக் கொண்டிருந்தாலே போதும் என்ற முடிவுக்கும் வந்ததால் திருமலையிலேயே நிரந்தரமாக தங்கிவிட்டான். ஆனால், ஒவ்வொரு முறை சேவிக்கும்போதும் மறக்காமல் சங்காரும் சக்கரத்தாழ்வாரும் வேங்கடவன் மேனியில் இருக்கிறார்களா என்று பார்த்துக்கொள்வதும் உண்டு.

அவந்திகா எத்தனைதான் வேண்டா மென்றாலும் அவளைத் தன் ஞான குருவாக ஏற்றுப் போற்றுகிறாள் காத்யாயினி. தான் புத்திகெட்டு பில்வணனின் மகளாக மற்றவர்களை துன்புறுத்தும் வேளையில் அன்பின் பெருமையையும் ஆண்டவனின் தத்துவத்தையும் திடீரென எங்கிருந்தோ வந்து போதித்து ஆட்கொண்டதாக சொல்லி அவந்திகாவின் மீது நன்றி மழை பொழிந்து கொண்டிருக் கிறாள். ஆனாலும், தன் கண்ணனை கண்ணெதிரே ஒரு முறை கண்ட இடமான திருவேங்கடமலைக்கு மட்டும் அடிக்கடி சென்று சங்கும் சக்கரமும் தரித்த அந்த கரிய வண்ணனிடம் பேசி மகிழ்ந்து வருவது வழக்கமாகிவிட்டது. ஆனால், இப்போது செல்லும்போதெல்லாம் திருட்டு வழியாக மேல்தள சுவற்றின் மீது குதித்து உள்ளே நுழைவதில்லை. அப்போது பேசியதுபோல் வாய் விட்டும் பேசுவதில்லை. நேர்வழியில் மாலை மரியாதையோடு உள்ளே அழைத்து வரப்படுகிறாள். மனதுக்குள்தான் அந்த மாயக்கண்ணனை கேள்வி மேல் கேள்வி கேட்டு அந்தப் பொல்லாத மாயோனை தொல்லை செய்கிறாள். அந்தப் பொல்லாதவனும் அவள் மனக் கேள்விக்கு ஒரு சிறு புன்னகையோடு அபயஹஸ்தமாக தனது வலது கையை அவன் திருப்பாதங்களுக்குக் காட்டி பரிபூரண சரணாகதி தத்துவத்தை பதிலாக தருகிறான்.

அவந்திகாவுக்கோ எதைப் பற்றியும் கவலை இல்லை. அப்படியும் கஷ்டங்கள் ஏதாவது ஏற்படும் போதெல்லாம் தன் சிந்தையில் என்றும் குடியிருக்கும் சிவபெருமானை தன் முன் வரச்சொல்லி கேட்பதும் உடனே எங்கிருந்தாலும் காளிங்கன் பிரசன்னமாகி அவள் குறைகள் களையப்படுவதும் வழக்கமான சம்பவங்களாகிவிட்டன.

காளிங்கன் வாழ்க்கையில் திருவேங்கட கூடமும் திருவேங்கட மலையும் மிகப்பெரிய திருப்பத்தை தந்திருப்பதாக நினைத்துக் கொள்கிறான். அத்தை மகனான

அபயன் குலோத்துங்கன் சோழ மகுடம் சூட்டிக் கொண்டதும் காளிங்கன் சோழ சேனாதிபதியாகி காளிங்கராயன் மற்றும் நரலோகவீரன் என்ற பட்டப்பெயர்கள் பெற்று சரித்திரத்தில் இன்றளவும் புகழ் பெறுகிறான். மலைமேல் கோயில் கொண்ட திருவேங்கடவன் போல் நிலம் மேல் ஒப்பிலா அப்பனாக கோயில் கொண்ட உப்பிலியப்பன் கோயிலுக்கு ஏராளமாக தொண்டு செய்து அதை கல்வெட்டுகளில் பொறிக்கிறான். திருவேங்கடநாதன் அருள் பெற்ற காத்யாயினியும் திருச்சிற்றம்பலமுடையான் அன்பில் வாழும் அவந்திகாவும் அவன் இரு கண்களாக இருப்பதில் அவனுக்கு மிகப்பெருமை.

காளிங்கனுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை கிடைத்தாலும் ஏகாந்தமாக இவர்களை நெருங்கும் போதெல்லம் ஒருத்தி கண்ணனைப் பற்றியும் கண்ணனின் சங்கைப் பற்றியும் பேசுவதும்; இன்னொருத்தி 'சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப் பணியான்' என்று பேசிக்கேட்பதும் வழக்கமாகிவிட்டது. ஆனால், சிற்றின்பமும் பேரின்பமும் ஆண்டவனிடமிருந்து மனிதனுக்கு வழங்கப்பட்ட அற்புதமான உணர்ச்சி யின்பங்கள் என்பதை உணர்ந்ததால் அந்த இனியவர்கள் காதலின்பத்தில் பேரின்பத்தைக் கலக்கும் போதெல்லாம் அவன் நெஞ்சம் அவனையறியாமல் ஆனந்தத்தில் நிறைந்து வழிந்தது.

திருமலையில் திருவேங்கடத்தான் மட்டும் தன் நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே நின்று கொண்டு தன்னை அண்டி வந்தோர்க்கு மட்டுமல்லாமல் தன்னை மனதால் நினைக்கும் அன்பர்களுக்கும் அவர்கள் கேட்கும் நல்ல கோரிக்கைகளை உடனடியாக ஏற்று அவர்கள் வேண்டும் வரங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறான். அவன் கோயில் வாசலில் அவன் அருளுக்காக காத்து நிற்கும் அன்பர் கூட்டமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அப்படிக் காத்து நின்று அவனை தரிசனம் செய்தபோது அவன் வசீகரப் பார்வையில் மனதைப் பறிகொடுத்த அன்பர் ஒருவர் ஆனந்தமாக பாடிக் கொண்டிருக்கிறார்.

**''ஒழிவிலாக் காலமெல்லாம் உடனாய் மன்னி**
**வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்**
**தெழிகுரல் அருவி திருவேங்கடத்து**
**எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே''**

▪▪▪